

# ஆசா

நா. ஸி. பட்கே





# ஆசா

நா. ஸீ. பட்கே

மராட்டியிலிருந்து

கோ. ரா. புணதாம்பேகர்

மொழிபெயர்த்தது

MADRAS

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் : : சென்னை-4

உரிமை பதிவு]

[விலை ரூ. 5-0-0

முதற் பதிப்பு - 1946
இரண்டாம் பதிப்பு - 1956

PRINTED AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS,
TIRUVIDAIMARUDUR.

MADRAS

# மொழிபெயர்த்தோனின் முகவுரை

"—போரிற்
காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்"

என்று தமிழ்நாட்டின் புரட்சிக் கவி எழுதியதிலிருந்து மட்டும் மராத்தியர் போரில் வல்லவர்கள் என்ற உண்மையை அறியவேண்டும் என்பது இல்லை யல்லவா? இந்தியனுகப் பிறந்த எவனுக்கும் வீர சிவாஜியைப் பற்றியும், அவனுடைய மஹாராஷ்டிரத்தைப் பற்றியும் நன்கு தெரியும். மராத்தியர் என்றதுமே - 'விளக்கு' என்றதும் வெளிச்சத்தின் நினைவும் அடுத்தே வருவது போல் - போர் செய்யும் அவர்கள் ஆற்றலும் வீரமும் தாமாகவே ஞாபகத்தில் வராமலிரா. வாள் ஏந்தும் வீரக் கையால் எழுதுகோல் பிடித்தும் அழகிய காவியங்களை எழுத முடியும் என்பதை மெய்ப்படுத்து வதே போல் அம் மராத்தியர் கவிதை புனைவதிலும் சிறந்து விளங்குகின்றனர். இவ் வுண்மையை ஒரு மராத்தியனுகிய நான் எடுத்துச் சொல்லுவதைக் காட்டிலும், ஒரு வீரத் தமிழர் - இன்று தமிழர் அனை வராலும் ஒருங்கே பூஜிக்கப்படுபவர் - கவி பாரதியார் வாயிலாகவே சொல்ல வைத்தல் சாலச் சிறந்ததல்லவா?

"சிங்க மராட்டியர்தங் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்"

என்று அகில பாரதத்தையும் பிணைத்துக் கூறும் தத்து வத்தை அடிப்படையாகக் கொண்டு பாரதியார் பாடினுர். மராத்தியர் கவிதை உண்மையிலேயே மிகவும் உயர்வானதே!

தமிழைப் போல் மராத்தி மிகப் பழைய காலத்திய 'தனி மொழி' அன்று. மகம்மதியப் படையெடுப்பிற்குப் பின் ஸம்ஸ்கிருதமும் அரபி - பெர்ஷிய பாஷைகளும் கலந்து அதனின்றும் வெளிவந்த ஒரு 'வழிமொழி'

(dialect)யே ஆகும் மராத்தி. எனவே 'ஞானேசுவரர்' - (இது திரைப் படமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது)-என்ற பக்த கவிதாம் மராத்தியின் முதலாசிரியர். அன்னார் எழுதிய 'ஞானேசுவரி' தான் மராத்தியின் முதல் இலக்கியம். இத்தனை நவீனமான மொழியாயினுங்கூட மராத்தி இலக்கியத்திலும் கவிதையிலும் மிகவும் முன்னேறி நிற்கிறது. ஒரு மொழியின் பெருமையும் அழகும் அது மிகப் பழமையானது என்பதனுல் மட்டும் ஏற்படுவதில்லை அல்லவா? ருஷிய தேசத்தில் எழுத்துருவே அற்ற பிற்போக்கான பாஷைகளுக்கெல்லாம் உருவளித்து, இலக்கணம் வகுத்து இன்று அம்மொழிகளில் புலவர்களும் தோன்றி உள்ளார்கள் என்பது மட்டும் அன்று, அவர் கவிதைகள் மிகவும் உயர்தரமாகவும் உள்ளன எனில், மேற்படி உண்மை விளங்கும்.

கவிதையில் மராத்தி பிரசித்தி அடைந்திருப்பதைப் போலவே, வசன நடையிலும் கீர்த்தி வாய்ந்தது. பெரிய, சிறிய கற்பனைக் கதைகளும் நாடகங்களும் ஏராளமாக எழுதப்பட்டுள்ளன. அக் கதைகள் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கவும் பட்டுள்ளன.

மஹாராஷ்டிர தேசத்தில் இன்று பிரக்கியாதியடைந்து பொது மக்களின் மனத்தைக் கவர்ந்த பேராசிரியர்களுள் நா. ஸீ. பட்கே முக்கியமானவர். அவருடைய வாழ்க்கையே ஒரு 'நாவல்' போன்றது. அவருடைய வாழ்க்கையின் முக்கியமான சில கட்டங்களை நான் எடுத்துக் கூருமல் விடின் கடமையைச் செய்யத் தவறியவனுவேன்.

நா. ஸீ. பட்கே பம்பாய்ச் சர்வ கலாசாலையில் படித்து எம். ஏ. பரீட்சையில் நிறைந்த 'மார்க்கு'களுடன் தேர்ச்சி பெற்றவர். கல்லூரியில் படிக்கும்போதே துடுக்கும், வாய்ப் பேச்சில் 'அரட்டை'ப் பட்டமும் பெற்றவர். புனுவில் உள்ள பெர்கூஸன் காலேஜில் இவர் இன்டர் மீடியட் படிக்கையிலேயே 'எழுதும் பைத்தியம்' இவருக்குப் பிடித்துக்கொண்டது. பொருளாதார சாஸ்திரத்தில் இவர் கரை கண்டவர்; மனஸ் தத்துவ ஆராய்ச்சியாளர். இவருடைய கட்டுரைகள் அக்காலத்திலேயே மிகவும் போற்றப்பட்டன.

இவருடைய புத்தி விரிவையும் எழுத்துத் திறமையையும் கண்டு புனு பெர்கூஸன் காலேஜிலேயே இவருக்

குப் பேராசிரியர் வேலை கிடைத்தது. 1917-ஆம் ஆண்டி லிருந்து அங்கே பணியாற்றிக் கியாதியைச் சம்பாதித் தார்.

ஆனால் 1921-ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியடிக ளால் ஆரம்பிக்கப்பட்ட 'ஒத்துழையாமை' இயக்கத்தில் இந்த வீர இளைஞரும் சேர்ந்தார். வீட்டு அடுப்பங் கரையில் சோற்றை வடித்துக்கொண்டிருந்த பெண்கள் கூட அப்படி அப்படியே வீட்டு வேலைகளைப் போட்டுவிட் டுத் தேச சேவைக்கு வெளிக் கிளம்பின காலம் அது. கச்சேரியில் வேலை பார்க்கும் கிளார்க்குகள் வீட்டிற்குப் புறப்பட்டும் வீடு சேராது வழியில் தேச சேவைக்குக் கிளம்பின காலம் அது. உணர்ச்சியுள்ள எந்த மனித னும் அதில் ஈடுபட்டான். எனவே வீரர் பட்கேயைப் பற்றிக் கேட்கவேண்டுமா? சிறைசென்று வெளிவந்ததும் லோகமான்ய திலகரைச் சந்தித்தார் பட்கே. உடனடி யாகத் திலகர் நடத்திவந்த "கேசரி" பத்திரிகையில் உதவி ஆசிரியர் பதவி கிடைத்தது.

காலக் கிரமத்தில் நா. ஸீ. பட்கே அங்கிருந்து விலகிக்கொண்டார். பிறகு டில்லி, ஸிந்து ஹைதராபாத், நாகபுரி முதலிய இடங்களில் கல்லூரிப் பேராசிரியர் வேலை பார்த்ததும், கடைசியாக 1925-ஆம் ஆண்டில் கோல்ஹாபூர் சமஸ்தானத்தில் வேலைக்கு அமர்ந்து சென்ற இருபது ஆண்டுகளாக மனஸ் தத்துவப் பேரா சிரியர் பணியை ஆற்றி வருகிறார்.

சிறு வயது முதற்கொண்டு எழுதுவதில் இவருக்கு ஆர்வம். தம்முடைய பதினெட்டாவது வயதில் இவர் புஸ்தகம் எழுத ஆரம்பித்துவிட்டார். மராத்தி, ஆங்கிலம் இரண்டிலும் ஏராளமான புத்தகங்களை எழுதிக் குவித் திருக்கிறார். இவருடைய புத்தகங்கள் வெளிவந்த சில நாட்களிலேயே செலவாகிவிடுமாம். அவ்வளவேன்? இந்த 'ஆசா' என்ற புத்தகத்தின் பிரதி கிடைப்பதே துர்லபமாகிவிட்டது. பேராசிரியர் தம் சொந்தப் பிரதியை எனக்கு மனமுவந்து கொடுத்துதவினார். அத்தனை ஆர்வம் ஜனங்களுக்கு, இவருடைய புத்தகங் களைப் படிப்பதில். ஜனங்களின் வரவேற்பு இவருக்கு ஊக்கமளித்தது. இன்று அறுபத்துமூன்று மராத்திப் புத்தகங்கள், ஆறு ஆங்கிலப் புத்தகங்கள் இவைகளுக்குக்

கர்த்தாவாகிருர். இவருடைய புத்தகங்களில் பிறநாடு சென்று கியாதி பெற்றவைகளில் முக்கியமானது (The Sex Problem in India) ''இந்தியாவின் ஆண் பெண் உறவுப் பிரச்னே'' என்ற புத்தகமே. ஜப்பானிலும் அமெரிக்க நாடுகளிலும் இவை பறிமுதலாக்கப்பட்டுள்ளன.

''தேவதூதனைப் போல எழுதுவான்; ஆனுல் ஒரு எளிய கிளியைப்போலப் பேசுவான்!'' என்று பிரபல ஆசிரியர் ஜான்ஸன், 'கோல்ட்ஸ்மித்' என்ற கவியைப் பற்றிச் சொன்னது இங்கே நினைவிற்கு வருகிறது. பொதுவாகவே நன்ருக எழுதுபவர்கள் பேச்சில் அத்தனை தேர்ச்சி பெறுவதில்லை. இதற்கு ஒரு விலக்கு நம் ஆசிரியர் பட்டே. இவருடைய பேச்சில் மாதுரியத்தைப் போலவே உணர்ச்சியும் பொதுஜனக் கவர்ச்சியும் உண்டு. அகில இந்திய மனஸ் தத்துவ காங்கிரஸ் திருவனந்தபுரத்தில் கூடியபோது பட்டே அவர்கள் பேசுவதற்காக அழைக்கப்பட்டார். சென்ற ஆண்டு அகில இந்திய நூற்கழக மகாநாடு பரோடாவில் நடந்தபோதும் இவர் பேசுவதற்காக அழைக்கப்பட்டார். எனக்குத் தெரிந்த சில உதாரணங்களை மட்டும் கொடுத்தேன்.

'கிரிக்கெட்', 'டென்னிஸ்' என்ற விளையாட்டுக்களில் இந்த வயோதிக, இளைஞர் இன்னும் ஆர்வம் காட்டுகிருர். இவர் ஜயித்த போட்டிகள் கணக்கில்லை; ஏராளமான கோப்பைகளும் மெடல்களும் இவரை நாடி வந்துள்ளன, இந்தக் கதையில் டென்னிஸ் பந்தய வர்ணனையிலிருந்தே இவருடைய விளையாட்டுப் பிரியம் வெளியாக வில்லையா?

சங்கீதத்திலும் இவர் சமர்த்தராம்: ஆனுல் இவர் பாடி நான் கேட்டதில்லை. 'ஒரு சிறந்த சங்கீத விமர்சகர்' என்று பலர் சொல்லக்கேட் டிருக்கிறேன். இவருடைய சங்கீத நூல்களைக் கண்டுதானே என்னவோ திரைப்பட நிபுணர் வி. சாந்தாராம் தம்முடைய படங்களுக்குச் சங்கீத அமைச்சராக (Director) இவரை அழைத்தார். இவருடைய கதைகளில் பல திரைப் படமாக வந்துள்ளன. பேசாப் படம் நிலவிய காலம் முதற்கொண்டு இவர் சினிமாக் கதை எழுதுகிருர். இன்று வி. சாந்தாராமின்

'ராஜ்கமல் - கலாமந்திர்' குழுவினரால் நடிக்கப்பட்டு எடுக்கப்படும் திரைப்படக் கதை இவருடையதே.

''ஐங்கார்'' என்ற மராத்தி வாரப் பத்திரிகைக்கு இவர் ஆசிரியர். மராத்தி பேசப்படும் பாகங்களில் எல்லாம் இப்பத்திரிகை செல்லுகிறது.

ஆசிரியர் எழுதிய 'சகுந்தலா' என்ற நாவலை நம்முடைய காருண்ய அரசாங்கத்தார் பறிமுதல் செய்திருக்கின்றனர். காரணம், அக்கதையில் 'ஆகஸ்ட் புரட்சி'யைப் பற்றிய விரிவான வர்ணனைகள் இருக்கின்றனவாம். ''காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டால் அந்தப் புத்தகத்தின் மீதுள்ள தடையை ரத்துச் செய்வார்கள்'' என்று ஆசிரியர் சொல்லுகிறார். அவ்வமயம் தமிழர்களுக்கு அதன் மொழிபெயர்ப்பு அவசியம் கிடைக்கும்.

நா. ஸீ. பட்கேயின் எழுத்துக்களில் வேகத்தைப் போலவே தெளிவும் உணர்ச்சியும் காணப்படுவது கண்கூடு. பெரும்பாலும் சம்பவங்களையும் பொருள்களையும் வர்ணிக்காமல் மனித ஹிருதயத்தில் தோன்றும் மனஸ்தத்துவத்தின் அலை அசைவுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது இவருடைய போக்கு.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முக்கிய நகரமான நியூ யார்க்கில் உலக எழுத்தாளர்களின் ஆராய்ச்சிக் கூடம் (Institute of Biographical Research) என்று ஒரு மாபெரும் சங்கம் உள்ளது. அவர்கள் இவ்வருஷ முடிவில் ''உலக எழுத்தாளர்களின் விவரம்'' என்ற மிகப் பெரிய 'என்ஸைக்ளோபீடியா' (விவர அட்டவணை) ஒன்று தயாரித்து வெளியிடப் போகின்றனர். அதில் ஆசிரியர் நா. ஸீ. பட்கேயின் வாழ்க்கையும் சேர்க்கப்பட்டுள்ளது எனில், சிறந்த உலக எழுத்தாளர்களில் இவரும் ஒருவர் என்பது தெளிவாகிறதல்லவா?

மராத்தியில் இவருடைய புத்தகங்களைப் படித்த போது எனக்கு உண்டான இன்பத்தைக் கட்டாயம் தமிழ்ப் பெருமக்களுடன் பகிர்ந்து அனுபவிக்க என் இதயம் ஆவலுற்றது. அந்த ஆவலின் வெளியீடே இப்புத்தகம்.

மனமுவந்து - உடல் உழைத்துக் - கொடுக்கும் இந்தக் காணிக்கையைத் தமிழ்ப் பெருமக்கள் நன்கு வரவேற்பார்கள் என்றே நம்புகிறேன்.

வழக்கப்படி வரிசைக் கிரமமாக வந்தனங்களைச் செலுத்த எனக்கு மனமில்லை - உரிமையும் இல்லை. எனினும் பேராசிரியர் தம் புத்தகங்களைத் தமிழில் மொழி பெயர்க்க அனுமதித்ததற்காக என் இருதய பூர்வமான வந்தனங்களைத் தமிழ்ப் பெருமக்களின் சார்பில் அவருக்குச் செலுத்துவது என் கடமை. அடுத்துத் தமிழ்ப் பிரசுரகர்த்தர்களுள் மகுடமாக விளங்கும் 'கலைமகள் காரியாலயத்தார்' வாயிலாக இது வெளிவந்தது எனக்குப் பெருமையை அளிக்கிறது. அதன் ஆசிரியர்களுக்கும் - தனியாக உயர்திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கும் - என் நன்றி.

இங்ஙனம்,

**கோ. ரா. புணதாம்பேகர்.**

MADRAS

# ஆசா

## அத்தியாயம் 1

தினசரி வாழ்க்கையில் நாம் செய்யவேண்டிய எந்த வேலையையும் அதற்கென்று ஏற்பட்ட நேரத்தில்தான் செய்யவேண்டும் என்பது மட்டும் அன்று. எந்த வேலையானாலும் சரி அதற்குண்டான நேரம் வந்தால் அது தானாகவே நடந்து தீரும் என்று நம்புகிறவர்கள் நம்மில் பலர் இருக்கத்தான் இருக்கின்றனர். அவர்களுடைய நம்பிக்கைக்குக் காரணம் அவர்கள் எண்ணப்படி எந்த வேலையும் எளிதில் முடிந்து விடுவதனால்தான் என்று நிச்சயமாகச் சொல்லிவிட முடியாது. எனினும் மேற் சொன்ன விதம் எண்ணும் மனிதர்கள் பலர் உளர் என்பது உண்மையே.

எது எவ்விதம் ஆயினும் தாதாஸாகிப் மட்டுமாவது அவ்விதம் எண்ணியிருந்தார் என்பது நிச்சயம்.

தினம் ஒரு நாளைப்போல் மணி பத்தடிக்கையில் சாப்பாட்டிற்கு உட்காரவேண்டும். பத்தடித்து இருபது நிமிஷம் ஆகையில் உடுப்புகள் அணிந்துகொள்ள ஆரம்பிக்க வேண்டும். பத்தடித்து இருபத்தேழு நிமிஷங்களுக்கெல்லாம் அவர் தம் கழுத்தில், 'நெக்டை' யின் முடிச்சைப் போட்டுக்கொண் டிருக்கையிலேயே வெளியே அவருடைய மோட்டார் வந்து நின்றதன் அறிகுறியாக அதன் டிரைவர் மோட்டாரின் குழலை ஒலிக்க வேண்டும். இவ்விதமாக அவர் தம் தினசரி வேலைகளை முறைப்படி செய்து வந்தார். இவ்வித நித்திய கர்மங்களின் முறையில் ஓர் இடையூறுவது ஏற்படும் என்று அவர் முக்காலும் எண்ணியதே இல்லை.

ஆனால் அவ்வித இடையூறு ஒன்று அவர் சொந்த வீட்டிலேயே இருந்தது. அது எது தெரியுமா? அவர் பிள்ளை, ஏக புத்திரன் விலாசன்தான்.

எந்த விஷயமும் அதற்கு உரிய நேரத்தில் தானுகவே நடைபெறும் என்று எண்ணிக்கொண் டிருந்த தாதாஸாகிபுக்குத் தம் வேலைகளில் ஏதாவது தடங்கல் ஏற்பட்டால், அது தம்முடைய புத்திரன் விலாசன் மூலமாகத்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது நன்கு தெரிந்ததே. சமீபத்தில்தான் அவருக்கு இது முற்றும் சரி என்பது ஊர்ஜிதம் ஆயிற்று.

எனவே இன்று வழக்கமாய்க் குறிப்பிட்ட நேரத்தில் அவர் 'நெக்டை' யின் முடிச்சைப் போட்டுக்கொண் டிருக்கையில் கீழே வழக்கமாய் வரும் மோட்டாரின் ஊதுகுழல் சப்தம் கேட்காமற் போகவே எதிரில் இருந்த கண்ணுடிக்குப் பக்கத்தில் தொங்கிக்கொண் டிருந்த விலாசனின் புகைப் படத்தைத் திரும்பிப் பார்த்தார்.

பார்த்ததும் அவர் அதைப் பார்த்து, "ஏன் மோட்டார் சரியான நேரத்தில் வரவில்லை?" என்று கேட்டார். "அதற்குக் காரணம் நீதான் என்பது எனக்குத் தெரியும். எனக்குத் தெரியாமல் என் வண்டியை எடுத்துச் செல்வதில் உனக்கு என்ன இத்தனை சுதந்தரம்?"

இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் அந்த விலசன் என்ன உத்தரவு கொடுப்பான் என்பது தாதாஸாகிபுக்கு நன்கு தெரியும். ஆகையால் டென்னிஸ் விளையாடும் இரண்டு மூன்று மட்டைகளை இடது கையில் பிடித்த வண்ணம் நின்றுகொண் டிருந்த மெலிந்து உயரமான விலாசனுடைய புன்னகை பூத்த முகத்தை அதிக நேரம் பார்த்துக்கொண்டே நில்லாமல், சற்று விலகி, 'போர்ச்'சுக்கு நேரேயுள்ள ஜன்னல் அருகில் நின்று சற்று உரத்த குரலில், "அடே பாபூ! வண்டி எங்கேயடா?" என்று கேட்டார்.

கீழே இருந்து பதில் கிடைப்பதற்குள்ளாகவே அவருடைய பின்னுலிருந்து ஒரு குரல் விடை பகர்ந்தது.

"பாபூ 'டாக்ஸி' கொண்டுவரப் போய் இருக்கிருன். நீங்கள் இன்று 'டாக்ஸி'யில்தான் போகவேண்டும்போல் இருக்கிறது."

தாதாஸாகிப் திரும்பிப் பார்த்தபோது அவருடைய மனைவி சுதேஷ்ணுபாய் நின்றுகொண் டிருப்பதைக் கண்டார்.

உடனே, தம் மனைவியின் வார்த்தை காதில் விழுந்ததையும் அதன் கருத்தைத் தாம் அறிந்ததையும் முகபாவனையில் காட்டிய படியே அவர், "ஏன்?" என்று கேட்டார்.

அவருடைய கேள்விக்குப் பதில் அளிப்பதாக எண்ணிச் சுதேஷ்ணுபாய், "நீங்கள் உடுப்புகளை அணிந்து கொள்வதற்குள்ளாகவே பாபூ 'டாக்ஸி'யுடன் வந்து விடுவான்" என்று சொன்னுள்.

கோட்டு அணிந்ததும் 'பாக்கட்' கடிகாரத்தின் சங்கிலியைத் தடவியபடியே தாதாஸாகிப் மறுபடியும் கேள்வி கேட்கலானுர்.

"ஏன்? ஏதுக்காக 'டாக்ஸி'? என் பெரிய வண்டி எங்கே போயிருக்கிறதாம்?"

இனிமேல் விஷயத்தை ஒளிக்க முடியாது என்று கண்ட சுதேஷ்ணுபாய், "விலாசன் எடுத்துக்கொண்டு போயிருக்கிருன் என்று தோன்றுகிறது" என்று சொன்னுள்.

"ஏன், அவன் மோட்டார் ஸைகிளுக்கு என்ன கேடு வந்து விட்டதாம்?"

இந்தக் கேள்வியின் விடையைச் சுதேஷ்ணுபாய் முன் கூட்டியே அறிந்திருந்தும் விடையளிக்காமல் தட்டிக் கழித்தாள்.

முந்தின நாள் இரவு விலாசன் இரண்டு ஆங்கிலோ இந்தியப் பெண்களுடன் உல்லாசமாக ஊர் சுற்றுகையில் வண்டிக்கு விபத்து ஏற்பட்டது என்னும் விஷயத்தை அவள் தோட்டக்காரன் மூலம் கேட்டு அறிந்திருந்தாள்.

ஆனுல், இவ்வித விஷயங்களை ஒரு யுவனின் தாய் அவன் தகப்பனிடம் சொல்லிவிடுவாளா? எனவே சுதேஷ்ணுபாய் 'கம்' என்று இருந்தாள்.

தாதா ஸாகிப் மறுபடி, "விலாசனின் மோட்டார் ஸைகிளுக்கு என்ன கேடு?" என்று கேட்டார்.

"யாருக்குத் தெரியும்?"

"என் வண்டியை எடுத்துக்கொண்டு எங்கே போய் இருக்கிருனும்?"

"யாருக்குத் தெரியும்?"

"எப்போது திரும்புவான் என்பதாவது தெரியுமா?"

"யாருக்குத் தெரியும்?"

தாதாஸாகிப் தம் கோட்டின் நுனியை ஒரு தரம் கீழே இழுத்துவிட்டு, பிறகு கையை உயர்த்தி வழுக்கை விழுந்த தம் தலையை ஒரு தரம் தடவி விட்டுக் கொண்டார்.

அவர் தம் மனத்திற்குள்ளாகவே, 'விலாசன் எங்கே தொலைந்து போய்விட்டான்? எப்போது திரும்பி வருவான் என்பது உனக்குத் தெரியாதாக்கும்! நீ இப்படி இருப்பதனுல்தான் நான்

விலாசனிடம் கடுமையாக இருக்க முடியவில்லை. உன் பிள்ளை யாண்டானுக்குச் சமானமாக இந்தப் பிரபஞ்சத்திலேயே யாரும் இருக்கமாட்டார்கள் என்பது உன் எண்ணம். அவன் இஷ்டப் படியே விட்டுவிடும்படியான நற்குணங்கள் அவனிடம் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் ஒரேயடியாய் ஒழுங் கான கட்டுப்பாடே இல்லாமல் அவனை விட்டு விட்டால் என்ன செய்வது? அம்மணி, மனிதனுக்கு முதலில் வேண்டியது ஒழுங்கும் கட்டுப்பாடுந்தானே? நாங்கள் நல்ல முறையில் வளர்ந்தோம்; சிறந்த கல்வி அறிவு பெற்றோம்; உயரிய முறையில் பழக்கப் பட்டோம். இவைகளெல்லாம் ஆரம்பம் முதல் ஒழுங்கான கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்ததால்தானே! ஆனால் உனக்கு நான் எதைச் சொல்லமுடியும்? தற்காலத்திய உலகத்திற்கே ஒழுங்கும் கட்டுப்பாடும் வேப்பங்காயாக இருக்கையில்?' என்று எண்ணலானார்.

இதற்குள் கீழே வந்து அப்போதுதான் நுழைந்த டாக்ஸியின் ஊதுகுழல் சப்தம் கேட்கவே சுதேஷ்ணாபாய் அவருடைய தொப்பி யையும் கைத்தடியையும் கொண்டு வந்து முன்னால் நீட்டினாள். தாதாஸாகிபின் மனத்திற்குள்ளாகவே நடந்துகொண்டிருந்த தர்க்கமும் மேலே வளராமல் அப்படியே நின்றுவிட்டது. அவர் கீழே இறங்கி டாக்ஸியில் ஏறினதும் காரியாலயத்துக்குக் கிளம்பி விட்டார்.

மோட்டார், பங்களாவை விட்டுக் கிளம்பிக் கண் பார்வைக் குத் தெரியாதபடி மறைந்துபோய்விடினும், தன் புருஷனுடன் கீழே இறங்கிவந்த சுதேஷ்ணாபாய் வாசலிலேயே வெகு நேரம் வரையில் நின்றுகொண்டிருந்தாள்.

போர்ச்சுக்கு எதிரில் இருந்த தண்ணீர் ஊற்று மேல் நோக்கித் தண்ணீரை இறைத்துக்கொண்டிருக்காவிடினும் அதன் கீழே கட்டப்பட்டிருந்த சிறு தொட்டியில் நிறைய ஜலம் ததும்பிக்கொண்டிருந்தது. இடது வலது பக்கங்களில் பலவித வர்ணங்களுடைய மேல்நாட்டுக் 'குரோட்டன்ஸ்' செடிகள் வைக்கப்பட்டிருந்தன. எதிரில் உள்ள அசலமான தெருவின் ஓரங்களில் உயரமான விருக்ஷங்கள் இருந்தன. அவைகளில் நீண்ட வெண்ணிற மலர்கள் நிறைந்திருந்தன.

இன்றைக்குப் பல வருஷங்களுக்கு முன்பிருந்தே சுதேஷ்ணா பாய் இந்தக் காட்சியைப் பார்த்திருக்கிறாள். விவாகம் ஆனதும் தாதாஸாகிபின் கையைப் பிடித்துக்கொண்டு புதல் முதலாக

இந்தப் பங்களாவில் நுழைந்த மறுநாள் மருண்ட நெஞ்சுடன் அவள் அதே வாசற்படிக்கு அருகில்தான் நின்றுகொண்டிருந்தாள். அப்போர்து அவள் முதல் முதலாகக் கண்ட காட்சியும் இதேதான். பிறகு நாளடைவில் இந்த மருட்சி மறைந்தது; தாதாஸாகிபின் வீட்டு அதிகாரத்தில் கொஞ்சங் கொஞ்சமாகத் தனக்கு உண்டான உரிமையைப் பெற ஆரம்பித்தாள். அந்த இடைக்காலத்தில்கூட எத்தனை தரம் அவள் இந்த இடத்தில் வந்து தனியாக நின்றுகொண் டிருக்கையில், இதே காட்சியைக் கண்டு மகிழ்ந்திருக்கிருள்!

பிறகு விலாசன் பிறந்ததும் அவனைத் தள்ளு வண்டியில் வைத்து ஆயாவுடன் தோட்டத்தைச் சுற்றிவரச் செய்து வேடிக்கை பார்த்ததும் இவ்விடத்தில் நின்றுகொண்டேதான். சிறிது காலஞ் சென்றதும் அவனை மோட்டாரிடம் கொண்டுபோன போதெல்லாம், அவன் தன் அழகிய சின்னஞ்சிறு கைகளால் மோட்டாரின் ஊதுகுழலை அமுக்க முயன்றதும், இன்னும் கொஞ்சகாலம் ஆன பிறகு அவன் சற்று வளர்ந்ததும் தோட்டக்காரனின் முதுகில் ஏறி விளையாடினதும், பின்பு காலுக்குப் பூர்ண பலம் வந்ததும் எத்தனை நாள் அதட்டிப் பயமுறுத்திலும் கேட்காமல் தோட்டத்தில் அங்கேயும் இங்கேயும் ஓடினதும் ஆகிய எல்லாக் காட்சிகளையும் சுதேஷ்ணுபாய் இதே இடத்தில் நின்று கண்டு களித்திருக்கிருள்.

எனவே பங்களாவின் முன்னுள்ள அந்தத் தோட்டத்தின் மீது அவள் ஒருவிதமான அத்தியந்த விருப்பமும் அன்பும் வைத்திருந்தாள். வாசல் பக்கமாய் நின்று அந்த அழகிய தோட்டத்தைக் காணுந்தோறும் தன் வாழ்க்கைச் சரித்திரத்தின் ஒவ்வொரு கட்டமும் சினிமாக் காட்சி போல் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றிக் கொண்டே இருந்தன. இதில் அவளுக்கு வர்ணிக்க முடியாத ஓர் ஆனந்தம் உண்டாவது வழக்கம்.

ஆனுல் கொஞ்ச நாளாகச் சுதேஷ்ணுபாய் அதே வாயிற்படியில் நின்றுகொண்டு தோட்டத்தைக் கவனிக்கும் போதெல்லாம் தன் நெஞ்சில் ஆழமான ஒரு துக்கத்தின் சாயை படர்வதை உணரலாளுள்.

மனிதர்களுடைய மனக்கிலேசந்தான் எத்தனை விசித்திரமானதாகவும் கண்ணுக்குப் புலப்படாததாகவும் இருக்கிறது! மனிதன் பகல் முழுவதும் வேறு வேலைகளில் மூழ்கிக் கிடக்கையில் துக்கத்தின் அலைகள் மனத்தின்மேல் மோதுவதில்லை. ஆனுல்

சற்று அவகாசத்தோடு தனித்திருக்கும்போதுதான் துக்க அலைகள் கொந்தளிக்க ஆரம்பிக்கின்றன. எலும்பிலாவது நரம்பிலாவது ஏதாவது அடிபட்டுக் கோளாறு உண்டாகி இருந்தால் அதன் வலி மனிதனுக்கு எப்போதும் தெரிவதில்லை. ஆனால் அவன் சிறிது கைகாலை ஆட்டி நகர ஆரம்பிக்கும்போதுதான் அதன் வலி, பளீரென்று தோன்றும். மனத்தின்மேல் உண்டான புண்ணோவெனில், வேலை செய்யும்போது தெரியாமல், சும்மா இருக்கும்போது மட்டும் வேதனை செய்கிறது.

சுதேஷ்ணுபாயுக்குச் சில நாட்களாக ஏற்பட்டிருக்கும் மனோவியாதி மேற்சொன்ன விதமாகத்தான் இருந்தது. பங்களாவின் வாசலில் தனிமையாக நிற்கும்போதுதான் அந்த மனவேதனை சுறுசுறுப்பாக வேலை செய்வது அவளுக்குத் தெரிந்தது. அந்த அழகிய தோட்டம் அவளுடைய நெருங்கிய தோழிபோல் தோன்றியதால் அதைக் கண்டதும் நெஞ்சில் குமுறிக்கொண்டிருந்த அவள் ரகசியங்கள் எல்லாம் பொங்கி வெளிவருவது வழக்கம்.

இப்போதும் அப்படியேதான் ஆயிற்று.

பெரிய பங்களாவின் முன்னுள்ள அழகிய தோட்டத்தைக் கண்ணுற்றதும் தன் கணவரின் பாக்கிய சம்பத்துக்களையும் சுகபோகங்களையும் நினைத்துக்கொண்டு அவள் மனமகிழ்ச்சி அடைந்தாள். ஆனால் மறுகணமே விலாசனைப் பற்றிய கவலை தோன்றி அவள் மனத்தைக் கலக்கியது. சில நாட்களாகவே விலாசனது நடத்தையில் அவளுக்கு மிக்க கவலை ஏற்பட்டிருந்தது. அவனை எவ்விதம் திருத்த முடியும் என்பதே அவளுக்குப் புரியவில்லை. தாதாஸாகிப் எப்போதாவது விலாசனின் விஷயமாகச் சற்றுக் கோபித்துக்கொண்டாலும் சுதேஷ்ணு அவன் சார்பாகப் பரிந்து பேசி அவரை மேலே பேசவிடாமல் செய்து விடுவாள். ஆனால் தனியாக இருக்கும்போதும் பங்களா வாசலில் நின்று தோட்டத்துடன் பேசும்போதும் மட்டும் அவள், 'விலாசனின் நடத்தை என்றைக்குத் திருந்தும்? அவனுக்கு ஒரு கல்யாணம் என்று ஆகி அவனும் குடும்பத்தில் பற்றுக்கொண்டு வாழ்வதை என்றைக்கு நான் காணப் போகிறேன்!' என்று யோசிப்பது வழக்கம் ஆகிவிட்டது.

சுதேஷ்ணுபாய் உயரிய குடும்பத்தில் பிறந்தது மட்டுமன்றி நன்றாகப் படித்தும் இருந்தாள். ஆனால் பெண்கள் எவ்வளவு தான் கல்வி பயின்றவர்களானாலும், தம் சொந்த விஷயத்தில்

ஏதாவது தகராறு ஏற்பட்டால் அந்தச் சமயத்தில் அவர்களுடைய அன்பும் இரக்கமுமே மேலோங்கி நிற்கும் என்பது சுதேஷ்ணாவின் கொள்கை. தப்போ சரியோ விலாசன் நல்வழிக்குத் திரும்பி ஒரு விவாகமும் செய்து கொள்ளவேண்டும் என்று அவள் எண்ணியதில் ஆச்சரியம் இல்லை.

விலாசன் என்ஜினீரிங் பரீக்ஷையில் தேர்ச்சிபெற்றதும் மேல் படிப்புக்காகச் சீமைக்குச் சென்றது முதல், எத்தனை பெரிய மனிதர்களின் படித்த நாகரிகப் பெண்களுக்கு அவனை வரனாகக் கேட்க வந்தார்கள்! சில பெண்களுக்கு விலாசனிடம் அளவற்ற காதல் ஏற்பட்டிருந்ததையும் சுதேஷ்ணா அறிவாள். ஆனால் விலாசனின் மனமோ நிலையற்றதாக இருந்தது. மோட்டார், மோட்டார் சைகிள் இவைகளை ஓட்டுவது, பந்தாட்டம், விளையாட்டுப் பந்தயம் முதலியவற்றில் ஜயிப்பது, இவை போன்ற பல ஆண்மைக்குரிய விஷயங்களில் அவன் பூரணமாகக் கவனம் செலுத்துகையில் உலகத்தின் மற்றைய விஷயங்களில் அவன் மனம் எப்படிச் செல்லும்? விலாசனைப் போன்ற தைரியசாலியான, சிறந்த விளையாட்டு நிபுணன் வேறு ஒருவரும் இல்லை என்று பலர் பேசிக்கொண்டார்கள். ஆனால் சிலரோ, ''விலாசன் மனம் துக்கத்தால் நிரம்பி இருப்பதால் அதை மறக்க இப்படி விளையாட்டுக்களிலேயே உழலுகிறான்'' என்றார்கள். வேறு சிலர், ''அவனால் அவன் பெற்றோர்களுக்குச் சுகம் கிடைப்பது அரிது'' என்றனர். இம்மாதிரியான பலவகையான அபிப்பிராயங்கள் சுதேஷ்ணாபாயின் காதுகளுக்கு எட்டிக்கொண்டிருந்தன. எனவே, அவள் மனக்கவலை பெருகிக்கொண்டிருந்தது. விலாசனால் தனக்கு ஒரு சுகமும் உண்டாகாது என்று முடிவு கட்டிவிட அவளுடைய இளகிய மனம் இடங்கொடுக்கவில்லை. ஆனால் ஆழ்ந்து யோசித்தால், 'விலாசன் எவ்விதமான சுகத்தைக் கொடுக்க முடியும்?' என்ற கேள்வி மனத்தில் எழுந்து நிற்கும். அப்போது அவள், 'வேண்டாம் இந்த யோசனை' என்று தன் மனத்திற்குத் தானே ஆறுதல் சொல்லிக்கொள்வாள்.

சில சமயங்களில் அவள் விலாசனிடம் அவன் விவாக விஷயமாய்ப் பேசியும் இருக்கிறாள். வெறும் பேச்சு மட்டும் அல்ல. அவன் மேல் எல்லையற்ற காதல் கொண்டுள்ள கல்பனாபாய், சுநேத்ரா இவர்களுடைய பெயர்களையும் சுட்டிக் காட்டியே அவள் சில வார்த்தைகளைப் போட்டு வைத்தாள். ஆனால் விலாசன் கொடுத்த விடையோ அவளைப் பிரமிக்கச் செய்தது.

அவன், ''அம்மா, காதல் இல்லாமல் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று நான் சொல்லுவதில் தப்பு என்ன இருக்கிறது?'' என்று கேட்டான்.

சுதேஷ்ணுபாய், ''நான் தப்பு என்று எப்பொழுது சொன்னேன்? அடே, உனக்கு ஒரு பெண்ணின்மீதும் காதல் உண்டாவதில்லையே! நீ எத்தனையோ இளம் பெண்களுடன் விளையாடுகிறுயே, பேசுகிறுயே, பழகுகிறுயே! ஆனுல் ஒருத்தி மேலேகூட உனக்குக் காதல் —'' என்றுள்.

''அம்மா, வெறுமனே பேசி விளையாடினதால் என்ன வந்துவிடப் போகிறது? எனக்கு அந்தப் பெண்களை எல்லாம் நிரம்பப் பிடிக்கிறது. ஆனுல் எனக்குக் காதல் என்னவோ ஒருவர் பேரிலும் இல்லையே!''

''சுநேத்ராவின்மேல் கூடவா?''

''ஊஹூம்.''

''கல்பனுபாயின் மேல்?''

''சே! அவளும் பிற பெண்களைப் போலவே அழகான பொம்மையாகத் தோன்றுகிறுள்! நன்றுய்ப் படித்த நாகரிக மங்கையர்கள் தைரியமாகப் புருஷர்கள் நடுவில் வருகிறுர்கள்; அவர்களுடன் தாராளமாகப் பழகுகிறுர்கள்; விளையாடுகிறுர்கள்; இனிமையாகப் பேசுகிறுர்கள்; சிரிக்கிறுர்கள்; குதிக்கிறுர்கள். அவர்களுடைய சகவாசத்திஞல் மனசிற்குக் குஷி உண்டாகிறது. இவைகளைத் தவிர அவர்கள் என் மனத்தை வேறு விதமாக இழுப்பதில்லை. என்னதான் செய்தாலும் அவர்கள் வெறும் அலங்காரப் பொம்மைகளே! என் மனசைக் கவரக் கூடிய பெண் எவ்விதம் இருக்கவேண்டும் என்பது யாருக்குத்தான் தெரியும்? ஆனுல், 'அவளை' நான் இன்னும் சந்திக்கவே இல்லை என்பது மட்டும் நிச்சயம். அவளை நான் ஒருமுறை சந்தித்துவிட்டேனுகில் உடனே அவளைக் கூட்டிக்கொண்டு வந்து உன் முன்னுல் நிற்கவைத்து, 'அம்மா, இதோ உன் நாட்டுப் பெண்; ஏற்றுக்கொள்' என்று சொல்லத் தவறமாட்டேன். அம்மா, அப்பாவும் நீயும் என்மேல் தப்பு அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள். நீயே யோசித்துப் பார். காரணம் இன்றி உன்னை நான் கஷ்டப்படுத்துவேனு?''

இதற்கு மேல், எல்லாத் தாயாரும் என்ன செய்வார்களோ அதையே சுதேஷ்ணு பாயும் செய்தாள். இப்பொழுது தோட்டத் தருகில் பார்வையைச் செலுத்தியதும் இந்த ஞாபகங்கள்

அவளுக்கு உண்டாயின. முன்பு அடக்கி வைத்திருந்த கண்ணீரின் தாரை தனிமையில் தாராளமாக வெளியே வந்து வழிந்தது.

கண்ணீரைத் துடைப்பதற்காக அவள் தன் சேலைத் தலைப்பைக் கையில் பிடிக்கப் போனதும், கூடத்தில் இருந்த டெலிபோன் மணி 'கண கண' என்று ஒலித்தது.

அவள் அதைக் கேட்டதும் உள்ளே போனாள். போகும் போது அவள் மனத்திற்குள்ளாகவே, "நான் மிகவும் மனக்கவலை அடைந்தேன் என்று தோட்டத்தை விட்டு உள்ளே போகவில்லை. டெலிபோனில் யாரோ கூப்பிடுவதனால்தான் போகிறேன்" என்று தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டாள்.

டெலிபோன் அருகில் சென்று ரிஸீவரைக் காதில் வைத்துக் கொண்டு, "ஹலோ, யார் அது?" என்றாள்.

"நான் சுநேத்ரா பேசுகிறேன்; யார்? பெரியம்மாவா பேசுவது?"

"ஆம், ஏண்டி பெண்ணே?"

"விலாசனுக்கு இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?"

சுதேஷ்ணா பாய்க்கு அந்தக் கேள்வியின் பொருள் விளங்க வில்லை. விலாசனுக்கு உடம்பு எப்படி இருக்கும்? அவனுக்கு உடம்புக்கு என்ன கோளாறு வந்தது? எனவே அவள் பதில் ஒன்றும் பேசவில்லை.

"நேற்று இருந்தாற் போல் இருந்து அவருக்குத் தாங்க முடியாத வயிற்றுவலி வந்ததே! நேற்று மாலையில் நான் அவரை 'ஐஸ் கிரீம் பார்ட்டி'க்கு அழைத்திருந்தேன். கல்கத்தாவின் ஹைகோர்ட் ஜட்ஜ் எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருக்கிறார். அவரை விலாசனுக்கு அறிமுகப்படுத்தவேண்டும் என்றிருந்தார் என் தகப்பனார். ஆனால் சரியான நேரத்தில் விலாசன், 'எனக்கு அதிக வயிற்றுவலி உண்டாகி நான் படுக்கையில் கிடக்கிறேன்' என்று டெலிபோன் செய்துவிட்டான். அதைக் கேட்ட நிமிஷம் முதல் நேரிலேயே வந்து பார்க்க முயன்றுகொண்டே இருக்கிறேன். ஆனால் விருந்தாளிக்கு உபசாரம் செய்யும் வேலைகள் முடிந்த பாடில்லை. கடைசியில் டெலிபோனாவது செய்து பார்க்கலாம் என்ற எண்ணத்துடன்தான் பேசுகிறேன்."

"ஓஹோ, அப்படியா?"

"இப்போது வயிற்றுவலி தேவலையா? இன்னும் படுக்கை யிலேயேதான் இருக்கிறாரா?"

''சே, சே, படுக்கையில் இல்லை; இப்போது சரியாகி விட்டது.''

''நல்லது; நான் கேட்டதாகச் சொல்லுங்கள்.''

''சரி; உனக்கு எப்படி இருக்கிறது உடம்பு இப்போது?''

''தேவலை, இப்போது 'பர்ஸ்ட் கிளாஸ்! ஆனால் விருந்தாளி சுசுருஷையினால் தலை சற்றுப் பாரமாக இருக்கிறது.''

''இதென்னடி இப்படிச் சொல்லுகிறாய்?''

''உண்மையாகவே பெரியம்மா. எனக்கு இன்று தலைக்குத் தண்ணீர் விடப்போகிறார்கள். அது கிடக்கட்டும். விலாசனை நான் கேட்டதாகச் சொல்ல மறந்துவிடமாட்டீர்களே?''

''சே, மறப்பேனா?''

பேச்சு முடிந்தது.

அடுத்தாற்போல் இருந்த நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் சுதேஷ்ணா பாய் யோசிக்கலானாள்: 'என்ன இந்த விலாசன் இப்படியெல்லாம் பொய்யும் புளுகுமாக—'

இதற்குள்ளாக டெலிபோன் மறுபடியும் மணி அடித்ததால் ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தாள்.

''ஹலோ, விலாசனா?''

''இல்லை, நான் சுதேஷ்ணாபாய்; யார் கல்பனாபாயா?''

''ஆமாம் பெரியம்மா; விலாசன் இருக்கிறாரா?''

'இருக்கிறான் அல்லது இல்லை' என்று பதில் சொல்லத் தெரியாதவளாகவே சுதேஷ்ணாபாய் பேசினாள். சமயத்துக்கு ஏதாவது பேசி வைக்கலாம் என்ற எண்ணத்துடன், ''ஏன்?'' என்றாள்.

''இல்லை. அவர் வீட்டில் இல்லாவிட்டால் உங்களிடம் ஒரு வேலை சொல்லப் போகிறேன். அவர் வந்ததும் அதை அவருக்குச் சொல்வீர்களா?''

''ஆகட்டும்.''

''நேற்று மாலையில் அவர் என்னுடன் சினிமாவுக்குக் கட்டாயம் வருவதாகச் சொல்லியிருந்தார். ஆனால் நான் புறப் படத் தயாராக இருந்த சமயத்தில் அவர் டெலிபோன் மூலம், 'சுநேத்ராவின் தகப்பனார் என்னை அழைத்துப்போக வந்திருக் கிறார்; நான் அவருடன் செல்லவேண்டி யிருப்பதால் இன்று உன்னுடன் வரமுடியாது; தயவு செய்து மன்னிக்கவேணும்' என்று சொல்லிவிட்டார். நான் நேற்று மிகவும் ஏமாற்ற மடைந்தேன், பெரியம்மா!''

''அது சரி, விலாசனிடம் என்னவோ, சொல்லவேண்டும் என்ருயே; அது என்ன விஷயம்?''

''அதுதான் சொல்லவந்தேன்; இன்று மாலையிலாவது தவருமல் சினிமாவுக்குப் போகவேண்டும் என்று அவரிடம் சொல்லுங்கள்.''

''ஆகா, கட்டாயம் சொல்லுகிறேன்.''

சம்பாஷணை முடிந்தது.

உட்கார்ந்த இடத்திலிருந்து சுதேஷ்ணு பாயினுல் எழுந் திருக்கவே முடியவில்லை. அவளுக்குத் தலை ஒரேயடியாகச் சுழல்வதுபோல் இருந்தது.

'விலாசன் மிகவும் நெருங்கிப் பழகி வந்த இந்த யுவதிகளிடமும் உண்மைக் காதலுடன் இல்லை; வெறும் பொய் வேஷம் போடுகிருன்' என்ற உண்மையை சுதேஷ்ணு கற்பனை செய்ததுகூடக் கிடையாது.

விலாசனுடன் பழகி வந்த பல யுவதிகளில் இந்தச் சுநேத் ராவும், கல்பனுவுந்தான் சுதேஷ்ணுபாயின் நன்மதிப்புக்குப் பாத்திரம் ஆனவர்கள் என்று சொல்லலாம். இந்த இருவரில் யாரேனும் தனக்கு மருமகளாக வருவாள் என்று அவள் எதிர் பார்த்திருந்தாள். விலாசன் சில சமயங்களில் மேற்சொன்ன பெண்களைப்பற்றித் தாறுமாருகப் பேசுவான். அப்போதுகூடச் சுதேஷ்ணு தன் நம்பிக்கையை விட்டுவிடவில்லை. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் விலாசனுக்கு விவாகத்தில் ஆசை பிறக்கும்; ஒருத்தியை அவன் கல்யாணம் செய்துகொள்ளுவான் என்ற திட நம்பிக்கை அவளுக்கு இத்தனை நாளும் இருந்துதான் வந்தது. ஆனுல் அந்த நம்பிக்கை இன்று அழிந்துவிட்டது. விலாசன் அந்தப் பெண்மணிகளின் தொடர்பையே விரும்ப வில்லை! அவர்களைத் தட்டிக்கழிக்க அவன் பொய்ச் சாக்குக் கூடச் சொல்லுகிருன் என்பது விளங்கிவிட்டது. சுதேஷ்ணு தீவிர யோசனையில் ஆழ்ந்தாள்.

''விலாசன் இந்தப் பெண்களுடன் தாராளமாகப் பழகு கிருனே. ஏன் காதல் உண்டாவதே இல்லை? முன்பு ஒரு தரம் அவன் அந்தப் பெண்களை 'வெறும் பதுமைகள்' என்று சொன் ஞனே. பதுமைகள்—அப்படி என்ருல் என்ன அர்த்தம்?''

# அத்தியாயம் 2

அன்று 'டென்னிஸ் டோர்னமெண்'டில் ஒரு சிறந்த பந்தயம் விளையாடவேண்டி இருந்தது. விளையாட்டு மைதானத்தில் எள் போட்டால் எள் விழாதபடி அத்தனை கூட்டம்! வேடிக்கை பார்க்க வந்தவர்களின் சௌகரியத்துக்காகப் போடப்பட்டிருந்த 'காலரி' களில் கூட்டம் அபாரமாக இருந்ததால் எதிரில் உள்ள மைதானத்திலும் வெயிலைக்கூடப் பாராமல் ஜனங்கள் நெருக்கி அடித்துக்கொண்டு நின்றிருந்தார்கள். வேடிக்கை பார்க்கவந்த ஜன சமுத்திரத்தில் மாதர்களின் எண்ணிக்கைதான் சற்று அதிகமாய் இருந்தது. அவர்கள் உடுத்திருந்த விதவிதமான சேலைகளின் வர்ணங்களும் பளபளப்பான ஜிகினு, ஜரிகை இவைகளின் பளபளப்பும் அந்த இடத்திற்கு ஒரு தனிச் சோபையை அளித்தன. இயற்கையிலேயே கடுமையான காற்று எத்தனைதான் வேகமாய் அடித்தாலும் தூசியைக் கிளப்ப முடியாதபடி டென்னிஸ் கோர்ட்டின் தரையை நன்கு கெட்டிப்படுத்தி இருந்தார்கள். அதன் எல்லையைச் சுற்றிலும் தூய வெண்மையான சுண்ணும்புப் பட்டைகள் போடப்பட்டிருந்தன. பந்தை எடுத்து எறிவதற்காக நியமிக்கப்பட்டிருந்த சிறுவர்கள், காக்கி உடையுடன் சிவப்புக் குல்லா அணிந்துகொண்டு, தங்கள் மார்பின்மேல் செருகி இருக்கும் பித்தளை வில்லைக்கு மெருகு கொடுப்பதற்காக அதன்மேல் ஒருவருக்கொருவர் எச்சிலைத்தடவிப் பலமாகத் தேய்த்துக்கொண்டிருந்தனர். ஒழுங்கைக் கண்காணிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்த சாரணர்கள் தங்கள் 'பூட்ஸ்' அணிந்த கால்களைத் தவறிக்கூட டென்னிஸ் கோர்ட்டுக்குள் வைத்து விடாதபடி மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டு, இங்கேயும் அங்கேயும் ஓடி ஜனங்களை ஒழுங்கு படுத்திக்கொண்டிருந்தனர். ஆனால் சமயம் வரும்போது அவர்கள் ஒருவருக்கொருவர் காதில் 'கசுமுசு' என்று ஏதோ ரகசியம் பேசுவதற்கு மட்டும் தவறவில்லை. அவர்களுள் மிகவும் பருத்த ஆசாமி ஒருவன் தன் சட்டைப்

பையில் வைத்திருந்த கடியாரத்தை நிமிஷத்துக்கு ஒருதரம் எடுத்து மணி பார்த்துக்கொண்டே இருந்தான். அடிக்கடி இவ்விதம் எடுத்துக்கொண் டிருப்பதைக் காட்டிலும், அந்தக் கடியாரத்தைக் கையிலேயே வைத்துக்கொண்டு சுலபமாக மணி பார்ப்பதில் அவனுக்கு இருந்த தடை என்னவோ அது அவனுக்கேதான் தெரியும்!

ஆனால் அடிக்கடி மணி பார்த்துக்கொண் டிருந்த நபர் அவன் ஒருவன் மட்டும் அன்று. வேடிக்கை பார்க்க வந்தவர்களில் அநேகம் பேர் அப்படியேதான் கடியாரத்தை நோக்கிய வண்ணம் இருந்தனர். ஒவ்வொருவனும் தன் மணிக்கட்டில் கட்டிய கடியாரத்தைக் கூர்ந்து கவனித்ததும் உடனே அடுத்தவனின் கடியாரத்தையும் பார்க்கப் பின்வாங்கவில்லை. இன்றைய டென்னிஸ் பந்தயத்தில் விலாசன்தான் ஜயிப்பானு, அவனுக்கு எதிராக நின்று விளையாடப்போகும் ஜப்பானியனை "டோமோ நாகா" என்ற பெயருடைய யுவனுக்குத்தான் கீர்த்தி சேருமா என்ற ஆராய்ச்சியில் அங்குள்ளோர் அனைவரும் ஈடுபட்டிருந்தனர்.

குறைந்த பட்சம் இருநூறு அல்லது இருநூற்றைம்பது ஜப்பானிய ஸ்திரீ புருஷர்கள் பந்தய விளையாட்டு வேடிக்கையைப் பார்க்க வந்திருந்தனர். அந்தக் காலரிகள் பூராவுக்கும் அவர்களே உரிமை பெற்றிருந்ததைப் போல் காணப்பட்டார்கள். ஜப்பானியக் கூட்டம் உட்கார்ந்திருந்த பக்கமாகக் கண்களைத் திருப்பினுல் அங்கே ஸ்திரீகளின் உருவங்களே அதிகம் காணப்பட்டன. தரையில் புரளும்படியான அவர்களுடைய நீண்ட அங்கிகளில்தான் எத்தனைவிதமான சித்திர விசித்திரங்கள்! பறந்துபோகும் பட்சிகளைப் போலவும் மலர்ந்தும் மலராமலுமுள்ள புஷ்பங்களின் கொத்துகளைப் போலவும் வர்ண விசித்திரமான படங்கள் அவர்கள் சட்டைகளில் அச்சடித்திருந்தன. ஜப்பானிய முறைப்படி கட்டிய அவர்களுடைய தலை மயிர்க் கொண்டைகளில்தான் எத்தனை விதமான சீப்புகள் செருகியிருந்தன! அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் அசைந்துகொண்டிருந்த அழகான சித்திர வேலைப்பாடுள்ள விசிறிகளின் அழகுதான் எவ்வளவு!

இந்தக் காட்சிகள் எல்லோருடைய பார்வையையும் கவர்ந்தன. அந்த ஸ்திரீ புருஷர்கள் பேசிக்கொண் டிருந்த பாஷையின் பொருள் இதுதான்: "டோமோ நாகாதான் கட்டாயம்

ஜயிப்பான்.'' அவர்கள் தங்கள் பேச்சின் இடையில் 'கிளு கிளு' என்று சிரிக்கும்போதெல்லாம் அவர்களுடைய தடித்து அகன்ற உதடுகள் காதுவரையில் நீளும். உள்ளே இருந்த தங்கக் கட்டுப் போட்ட பற்கள் வெளியே தெரியும். தக்ஷிணிகளும் குஜராத்தியர்களும் கூடியிருந்த இடங்களில் விலாசன்தான் ஜயிப்பான் என்ற பேச்சுக் கிளம்பும்போதெல்லாம் அந்த அழகிய தக்ஷிணிப் பெண்களின் முகத்தில் புன்னகை தாண்டவம் ஆடியது. வாயால் விலாசனின் லாகவமான விளையாட்டைப் புகழ்ந்து கொண்டே இருந்தாலும், மனத்தினுல் அவன் லாவண்யமான உருவத்தையே அவர்கள் புகழ்ந்துகொண் டிருந்தனர்.

ஆனுல் விலாசனுக்கோ, அவன் விஷயமாய் நடக்கும் இந்த வாத விவாதங்களில் ஒன்றுமே தெரியாது.

உடுப்பு அணிவதற்கென்று தனியாகக் கட்டியுள்ள அறையில் விளையாடப் போகையில் போட்டுக்கொள்ள வேண்டிய உடுப்புகளை அவன் அணிந்துகொண் டிருந்தான். நிலைக் கண்ணுடியின் முன் நின்று அவன் தன் மயிரை வாரிக்கொண் டிருந்தான். அவன் அவ்விதம் வாரிக் கொள்ளும்போது வெண்மையாய் வெளுக்கப்பட்ட அவன் சட்டையின் இடை வெளியிலிருந்து, சிவந்த அவன் கைகள் வெளியே தெரிந்ததை அவன் கவனித்தான். தன் அழகிய கைகளைக் கண்டதில் அவனுக்கு மனத்தில் ஒருவித இன்பம் உண்டாயிற்று. தன்னுடைய சரீரத்தின் அழகில் எந்த யுவனுக்குத்தான் கர்வமும் பெருமையும் ஏற்படா?

சீப்பு, பிரஷ் இவைகளைக் கீழே வைத்ததும் தன்னுடைய இரண்டு மூன்று டென்னிஸ் மட்டைகளை எடுப்பதற்காகக் கண்ணுடிப் பக்கத்திலிருந்து திரும்பிச் சீட்டியடித்துக்கொண்டே போய்விட்டான்.

இதற்குள்ளாக விளையாட்டு ஏற்பாட்டுச் செய்திச் சங்கத்தின் சேவகன் ஒருவன் உள்ளே கதவைத் திறந்துகொண்டு வந்து விலாசனுக்குச் சலாம் செய்து நின்ருன்.

''ஸார்.''

மாட்ச் விளையாடும் நேரம் சமீபித்துவிட்டதை அறிவிப்பதற்காகக் காரியதரிசி அவனை அனுப்பி இருப்பான் என்ற எண்ணத்துடன் விலாசன், ''நேரம் ஆனது எனக்குத் தெரியும். நான் வருகிறேன், நீ போ'' என்ருன்.

''நேரமானதைச் சொல்ல வரவில்லை நான். ஆனுல்

தங்களைத் தேடிக்கொண்டு ஒரு ஸ்திரீ வெளியே காத்திருக்கிறார்கள். உங்களைக் காண வேண்டுமாம்.''

''ஸ்திரீயா?'' என்று விலாசன் கேட்டபோது அவன் நெற்றிப் புருவங்களில்தான் எத்தனை முடிச்சுகள்! ''எந்த ஸ்திரீ? என்றால் இப்போது யாரையும் பார்க்க முடியாது என்று அவளிடம் நீ சொல்ல வில்லையா?''

''எத்தனையோ சொல்லிப் பார்த்தேன்; ஆனால் என்ன சொன்னாலும் அவர் அசைவதாகக் காணோம்.''

''பேர் என்ன என்று கேட்டாயா?''

''இல்லை ஸார்; அவர் யாரோ பெரிய மனுஷி.''

இதைக் கேட்டு விலாசனுக்குச் சிரிப்பு வந்தது. அவனால் அதை அடக்க முடியவில்லை.

''சுத்த முட்டாள் நீ!''

ஆனால் விலாசன் அங்கேயே நின்றுகொண்டிராமல் பட்டினாலான 'மப்ளர்' துணியைக் கழுத்தில் சுற்றிக்கொண்டு கோட்டை எடுத்து மாட்டினான். வாயில் சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டதும் அவன் டென்னிஸ் மட்டைகளைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டான்.

வெளியே வந்ததும் அங்கே சுநேத்ரா நின்றுகொண்டிருந்ததைக் கண்டான். அவள் உடனே சற்று முன்னால் அடி எடுத்து வைத்துப் புன்முறுவலுடன் தன் வலது கையை விலாசனுக்கு முன் நீட்டினாள்.

விலாசன் அவள் கையைப் பிடித்துக் குலுக்கினான். ஆனால் அவள் முகம் புன்சிரிப்பால் மலரவில்லை. வாயில் இருந்த சிகரெட்டை எடுக்காமலே அவன் குழறிப் பேசினான்:

''இங்கேதான் என்னை வந்து பார்க்க வேண்டுமா? உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?''

''இன்னும் பிடிக்கவில்லை. ஆனால் உன் அலக்ஷ்ய மனப்பான்மையால் இன்னும் சிறிது காலத்தில் பிடித்தாலும் பிடிக்கும்!''

''அலக்ஷ்யமா? நான் என்ன தாயே, அலக்ஷ்யம் செய்து விட்டேன்?''

இவ்விதம் அவன் பேசியபோது வாயில் இருந்த சிகரெட்டு மேலும் கீழுமாக அசைந்துகொண்டு புகையைக் கக்கியது.

''சீ, சீ, நீங்கள் எங்கே அலக்ஷ்ய மனப் பான்மையைக் காட்டினீர்கள்? ரொம்ப ரொம்ப இரக்கமுள்ள ஆத்மா இல்லையா?

தாங்கள்! நீங்கள் என்னைச் சந்தித்து எத்தனை நாட்கள் ஆயின என்பது ஞாபகம் இருக்கிறதா, தங்களுக்கு?''

''நான் எண்ணிப் பார்க்கவில்லை அம்மா! எனக்குக் கணக்கில் ஞானமே கிடையாது.''

''உம்; நடக்கட்டுமே கேலி; பிறத்தியார் உயிர் போகும் போதுகூடக் கேலியும் விளையாட்டுந்தானா?''

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவள் பொங்கிப் பொங்கி அழலானாள். கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

அந்தக் கைக்குட்டையில் ஊற்றியிருந்த 'ஸெண்டி'ன் நறுமணம் காற்றில் கலந்து பரிணமித்தது. விலாசனின் கவனம் அவளுடைய கண்ணீரைக் காட்டிலும் அங்கு வீசிய வாசனையின் மீது அதிகமாய்ச் சென்றதோ என்னவோ யார் கண்டார்கள்? அவன் தன்னையே மறந்து அசைவற்று நின்றுகொண்டிருந்தான்.

அவன் ஏதாவது பதில் சொல்வான் என்று எதிர்பார்த்து வாளா இருந்த சுநேத்ரா கோபக் குறிப்புடன் விலாசனை ஏறிட்டுப் பார்த்தாள். அப்போதுதான் விலாசனுக்குச் சுய அறிவு பிறந்தது:

'''பிறத்தியார் உயிர் போனால்....' என்ன இது? வாய்க்கு வந்ததை எல்லாம் ஏன் உளறுகிறாய்?''

''ஆம்; வாஸ்தவம்—நான் செத்துப் போனாலாவது நீங்கள் மகா———வாக....''

''உஷ்! சுநேத்ரா! உனக்கு ஆறுதல் மொழிகள் கூறுவதற்கு இப்போது சாவகாசம் இல்லையே! நான் 'மாட்சி'ல் ஜயிக்க வேண்டும் என்று உனக்கு ஆசையாக இல்லையா? அப்படியானால் என் மனசு இப்போது கவலையற்றுக் குஷியாக இருக்கவேண்டும்.''

சுநேத்ரா மனத்திற்குள், 'இதுதான் என்னை வசீகரிக்கும் காந்தம். எதிரியைப் பேசவிடாமல் அடக்கும் இவன் தந்திரம் என்னை அவனிடம் இன்னும் மோகம் கொள்ளச் செய்கிறது' என்று எண்ணினாள்;

ஆனால் வாயால் அவள் கூறியது, ''நீங்கள் ஜயிக்க வேண்டும் என்பது ஆசைதான். ஆனால் எனக்கு ஒரே ஒரு வாக்குக் கொடுத்தால் நான் உங்களை உபத்திரவப் படுத்தாமல் மகிழ்ச்சியுடன் போய்விடுகிறேன்.''

''சரி, சரி, அப்படியே வாக்குக் கொடுத்துவிட்டேன். போ, உன் இடத்தில் போய் உட்காரு. போ, இப்போதாவது.''

''சரியாகப் போச்சு; நான் என்ன விஷயமாக வாக்குக் கேட்கிறேன் என்று தெரியாமலே ஒப்புக்கொண்டுவிட்டீர்களே!''

''ஓஹோ, ஆமாம், கேட்க மறந்தே போய்விட்டேன். என்ன வாக்கு, சொல்?''

''மாட்ச் முடிந்ததும் எங்கள் வீட்டு மோட்டாரிலேயே எங்கள் பங்களாவுக்குக் கட்டாயம் வரவேண்டும்.''

''சரி சரி, ஆகட்டும். ஓடு உன் இடத்திற்கு.''

சுநேத்ரா மிகவும் சந்தோஷத்துடன் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

இவ்வளவு நேரம் உள்ளேயே நின்றுகொண் டிருந்த சேவகன், கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். அந்த ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும் நின்று பேசிக்கொண் டிருந்ததைத் தான் ஒட்டுக் கேட்டதாக விலாசனுக்குத் தெரிவிக்கக் கூடாது என்ற எண்ணத்தினாலேயோ என்னவோ, அவன் ஒன்றும் அறியாதவனைப்போல் முகத்தை வைத்துக்கொண்டு, வேலைகளில் கவனம் செலுத்துபவனைப்போல் நடித்து அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

இதற்குள் வாயில் பிடித்த சிகரெட் முடிந்துவிட்டதால் அதைக் கீழே எறிந்துவிட்டு, பக்கத்திலுள்ள உடுப்பறையிலிருந்து அப்போதுதான் வெளிக் கிளம்பிக்கொண் டிருந்த எதிர்க் கட்சி ஆட்டக்காரனான டோமோ நாகாவைப் பார்த்து, சற்று உரத்த குரலில் விலாசன், ''தயாரா?'' என்று கேட்டான்.

டோமோ நாகா விலாசனின் பக்கத்தில் வந்ததும் அவன் கையைப் பிடித்து அன்புடன் குலுக்கினான். பிறகு இருவரும் ஒருவர் கழுத்தில் ஒருவர் கையைப் போட்டுக்கொண்டு விளையாடும் இடத்திற்குப் போயினர். அப்போது ஜனங்கள் ஏகமாகக் கைதட்டி ஆரவாரித்தனர்.

ஐந்தே நிமிஷங்களில் விளையாட்டு ஆரம்பமாயிற்று.

இரண்டு ஆட்டக்காரர்களின் மட்டைகளும் 'ஜம் ஜம்' என்று ஒலித்தன. தூய வெண்மையான பந்து அம்பைப்போல் அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்கும் வேகமாய்ப் பறந்தது. நாற்காலியில் உட்கார்ந்து விளையாட்டைக் கண்காணித்த 'அம்பயரி'ன் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது.

விலாசனுக்கு எப்படி இருந்ததோ யார் கண்டார்கள்? ஆனால் அவனுடைய அன்றைய விளையாட்டுச் சோபிக்கவில்லை என்பது மட்டும் உண்மை. எதிர்ப் பக்கத்திலுள்ள ஆட்டக்

காரனைத் திக்கு முக்காடச் செய்யும் அவனுடைய வழக்கமான குறுக்கடிகளும் பலமான அடிகளும் இன்று ஏனோ திரும்பத் திரும்பத் தவறிவிட்டன. அவன் அடித்த பந்து வலைக்குப் புறம்பேகூடப் போகாமல் வலையிலேயே சிக்கிக்கொண்டது. இல்லையேல் எல்லையைத் தாண்டி வெளியே போய் விழுந்தது. அவன் பக்கம் அனுதாபம் காட்டும் ஜனங்களின் முகத்தில் கவலை குடிகொண்டது. விலாசன் முதல் 'ஸெட்டி'லேயே ஜயித்துவிட முயற்சி செய்தும் அவனால் முடியாது போயிற்று.

கூட்டத்திலிருந்து ஜப்பானிய ஸ்திரீ புருஷர்கள் டோமோ நாகாவிற்கு உத்ஸாகம் கொடுக்கும் எண்ணத்துடன் ஒரேயடியாகச் சத்தம் போட்டுக்கொண்டிருந்தனர். கைகளைத் தட்டிக்கொண்டே 'சளபளா' என்று பேசியது இங்கிலீஷ் பாஷையோ, அவர்களுடைய ஜப்பான் மொழியோ, அந்த விஷயம் பகவான் புத்த பிரானுக்குத்தான் வெளிச்சம்!

விலாசனின் அனுதாபிகளுக்கு ஜப்பானியர் செய்யும் இந்த அட்டகாசங்களில் வெறுப்பு ஏற்பட்டது.

ஓர் ஆசாமி அடுத்தவனிடம் மிகவும் உரத்த குரலில், "குரங்குகள் இப்போது பல்லைக் காட்டுகின்றன. ஆனால் அடுத்தாற்போல் இஞ்சியையும் தின்னப்போகின்றன. அப்போது பார்க்கவேண்டுமே வேடிக்கையை!" என்றான்.

அடுத்தவன், "ஆனால் விலாசன் சிரத்தையோடு விளையாட வேண்டுமேடா" என்றான்.

"அவன் நன்றாக விளையாடுவாண்டா; இதோ பார், அவன் முகத்தில் இப்போதே சந்தோஷக் குறி பிறந்து விட்டது."

உண்மையாகவே விலாசன் அப்போது சிரித்துக்கொண்டிருந்தான்.

நடுவில் உள்ள இடை நேரத்தில் அவன் சற்றுக் களைப் பாறுவதற்காக ஒரு டம்ளர் சர்பத் சாப்பிட்டான். பிறகு ஒரு முரட்டுத் துண்டினால் தன் நெற்றியில் வழிந்த வேர்வையைத் துடைத்துக்கொண்டான். மனத்திற்குள்ளாகவே மெள்ளச் சிரித்துக் கொண்டான்.

இதற்குள் பந்தை எடுத்து எறியும் பையன்களுள் ஒருவன் அவனுக்கு ஒரு சிறு குறிப்பைக் கொண்டுவந்து கொடுத்தான். ஆச்சரியமான முகபாவத்துடன் விலாசன் அதைப் பிரித்துப் பார்த்தான். சீட்டில், "தைரியமாக இரு; பயப்படாதே.

உன் பிரிய எல்ஸீ'' என்று இருந்தது.

இதைப் படித்ததும் புன்முறுவலாக இருந்த அவன் வாய் சிரிக்கவே ஆரம்பித்துவிட்டது. சீட்டைக் கொண்டு வந்த சிறுவனிடம் அவன், ''யாரடா கொடுத்தது இந்தக் கடிதம்?'' என்றான்.

பையன் விரலால் ஆசாமியைக் காட்டினான்.

விலாசன் திரும்பிப் பார்த்தபோது உண்மையாகவே முதல் வரிசையின் கடைசி நாற்காலியில் எல்ஸீ உட்கார்ந்திருந் தாள்.

அவள் தன் கையிலிருந்த கைக்குட்டையை ஆட்டினாள். வர்ணம் தடவிச் சிவந்த அவள் உதடுகள் அசைந்ததை விலாசன் பார்த்து அவள் ஏதோ சொல்லுகிறாள் என்பதை ஊகித்துக் கொண்டான்.

விலாசன் அவளை நோக்கிப் புன்முறுவல் செய்து விட்டுக் கண்களைச் சிமிட்டியது, ''பார், இப்போது எப்படி விளையாடு கிறேன் என்று'' என்பதைப்போல் தோன்றியது.

இரண்டாவது 'ஸெட்' ஆரம்பம் ஆயிற்று. அடிகள் 'பட் பட்' என்று ஒலித்தன. கை தட்டலின் ஒலி வானைப் பிளந்தது.

'அம்பயரி'ன் கனத்த கம்பீரமான குரல் மறுபடியும் கணக்காகச் சொல்லிற்று. விலாசனுக்கு ஜயம்!

கை தட்டலை வர்ணிக்கச் சாத்தியமில்லை. இந்த மஹா ஜன சமுத்திரத்தில் கை தட்டாமல் இருந்த ஒரே ஒரு ஜீவன் இருந்தது. அது சுநேத்ராதான்.

அந்தச் சட்டைக்காரியைப் பார்த்து விலாசன் சிரித்து விட்டுக் கண்களைச் சிமிட்டியதை அவள் பின்னாலிருந்து பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளையே சுநேத்ரா உற்று நோக்கிய வண்ணம் இருந்தாள்.

அந்தச் சட்டைக்காரி சிவப்பும் ஊதாவுமான புள்ளிகள் வைத்த வெள்ளை ஸில்க் கவுன் போட்டிருந்தாள். அதே வர்ண முள்ள துணியால் ஆன ஒரு தொப்பியைத் தலையில் அணிந் திருந்தாள். அவள் அணிந்திருந்த தொப்பியினால் அவளுடைய வலது காதின் பக்கமாக இருந்த தலைமயிர் முற்றும் மறைந் திருந்தது. இடது பக்கமாக உள்ள தலைமயிர் மஞ்சளாகத் தங்கக் கம்பிபோல் சுருண்டு சுருண்டு அவளுடைய சிவந்த பிடரி வரையில் தொங்கிக்கொண்டிருந்தது. அவள் தன் மயிரை மெல்ல விலக்கி விடுவதற்காகத் தன் கையிலுள்ள சீப்பை மேலே

எடுத்த போது வர்ணம் தடவிச் சிவந்த அவளுடைய நகங்கள் வெயிலில் பளபளவென்று மின்னின.

இவள் யாராக இருக்கலாம்? இவளுக்கும் விலாசனுக்கும் எந்த விதத்தில் அறிமுகம் ஆயிற்று? ஆயிரக் கணக்கான ஸ்திரீ புருஷர்கள் கூடியிருந்த அந்தக் கூட்டத்தின் நடுவில் அவள் தன் கைக்குட்டையை எடுத்து மேலே பிடித்து ஆட்டுவதாவது! விலாசன் அதைக் கண்டு சிரித்துக் கண் சிமிட்டுவதாவது! சுநேத்ராவுக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை.

விலாசனின் அந்தச் சிரிப்பைக் கண்டு சுநேத்ராவுக்கு மனத்திற்குள் சந்தேகமும் பொறாமையும் ஏற்பட்டன. ''இத்தனை ஜனங்களுக்கு நடுவில் விலாசன் என்னைப் பார்த்து ஒரு தரமாவது சிரிப்பானா?'' இந்தக் கேள்வியை அவள் மனத்திலேயே பல தரம் சொல்லிக்கொண்டாள். அப்படி அவன் தன்னைப் பார்த்துச் சிரித்திருந்தானானாலும் அது அவளுக்கு வெட்கத்தை விளைவித்திருக்காதா? இந்தக் கேள்வியும் அவள் மனத்தில் உதிக்காமல் இல்லை.

விலாசன் முன்பு ஒரு தரம் அவளிடம், ''நீங்கள் - ஹிந்து ஸ்திரீகள் - எவ்வளவுதான் கல்வி கற்ற நாகரிக மங்கையர்களானாலும் உங்களைச் சூழ்ந்துள்ள நாணம், மடம், பயிர்ப்பு, அச்சம் முதலிய கெட்ட குணங்களை நீங்கள் விலக்க முடிவதில்லை. அந்த அந்தகாரத்திலிருந்து நீங்கள் மீண்டு தைரியத்துடன் ஒரு போதும் வெளியே வரப்போவதே இல்லை. நீங்கள் எந்த யுவனைக் காதலிக்கிறீர்களோ அவனுடன் நீங்கள் பேசிப் பழக ஆசைப்பட்டால் அதற்குத் திருட்டுக் காதலின் கள்ள முறைகளைத்தான் உபயோகிக்க வேண்டும். ஆனால் எனக்கு வேண்டாம் அம்மா, இந்தத் திருட்டுக்காதல். உண்மையான காதலுக்கு அறிகுறி காதலனுக்குக் காதல் விஷயமாக என்ன செய்தபோதிலும் அது நல்லதாகப் படவேண்டும். பிறருக்குத் தெரியாமல் அந்தக் காதலை ஒளித்து வைக்கவேண்டிய தேவையே இல்லை'' என்று பலவாறாகப் பேசியதுண்டு.

விலாசனின் இந்தப் பழைய பேச்சுக்களை ஞாபகப்படுத்திக் கொண்டே சுநேத்ரா அந்தச் சிவப்புத் தோல்படைத்த சட்டைக்காரியைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தாள்.

''விலாசனுக்கு விருப்பமான அந்தக் காதல் முறையில் இந்தச் சட்டைக்காரி அவனோடு பழகுகிறாளோ என்னவோ? யாராகத்தான் இருக்க முடியும் இந்தப் பெண்?''

இரண்டாவது 'ஸெட்' முடிந்ததும் உண்டான கை தட்டு ஒலியில் சுநேத்ரா பகற் கனவிலிருந்து விழித்துக்கொண்டாள்.

என்ன! விலாசன் இந்த ஸெட்டில் ஜயித்துவிட்டானு?

மறுபடியும் 'அம்பயர்' உட்கார்ந்திருந்த நாற்காலியின் கீழ் வைக்கப்பட்டுள்ள கண்ணுடி டம்ளரில் இருந்த சர்பத்தில் இரண்டு மூன்று வாய் விலாசன் குடித்தான். வழிந்துகொண்டிருந்த வேர்வையைத் துண்டினுல் துடைத்துக் கொண்டான். அவன் மேலே சுற்றிப் பார்க்கையில் தற்செயலாகச் சுநேத்ரா தன்னையே நோக்குவதைக் கண்டு சற்றுச் சிரித்த முகத்துடன் அவளை நோக்கினுன்.

தன் கையிலிருந்த கைக் குட்டையை எடுத்து ஆட்ட வேண்டும் என்று சுநேத்ராவுக்கு அதிக ஆசை உண்டாயிற்று. ஆனுல் அவளால் அவ்விதம் செய்ய முடியவே இல்லை. அவள் கை வைத்தது வைத்தபடியே அவள் துடையின் மேலேயே கிடந்தது.

''வெட்கம், அடக்கம் இவைகளைக் கைவிடுவதா?'' என்று சுநேத்ரா நினைக்கவே, வெறுப்புத் தோன்றியது.

மறுகணம் அவள் விலாசனைப் பார்த்தபோது அவன் அந்தச் சட்டைக்காரியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தான். அவளோ பல்லைக் காட்டிக்கொண்டே தன் கையைத் தூக்கிக்கொண்டு கைக்குட்டையை ஆட்டிக்கொண்டிருந்தாள்.

சுநேத்ராவின் கண்களினின்றும் பொருமை கலந்த கோபத்தின் பொறிகள் பறந்தன.

விளையாட்டு மறுபடியும் ஆரம்பமாயிற்று.

மூன்றுவது ஆட்டத்திலும் விலாசனுக்கே வெற்றி!

விலாசனின் உடலில்தான் எவ்விதமான புத்துணர்ச்சி ஏற்பட்டது! விலாசன் அடித்த ஒவ்வோர் அடியிலும் பந்து, துப்பாக்கியிலிருந்து வெளிவந்த குண்டைப்போல் ''ஸு ஸு'' என்ற சத்தத்துடன் டோமோ நாகாவின் கைக்கு எட்டாதபடி அவன் இரண்டு பக்கங்களிலும் பறந்தது. அந்தக் குள்ள ஜப்பானியன் பந்தைத் துரத்திக்கொண்டு ஓடியதில் கீழே விழுந்துவிட்டான். விலாசன் கொடுத்த ஓர் அடியைக்கூட அவன் திருப்பி அடிக்க முடியாதவன் ஆனுன். மிகவும் உயரமாய் வளர்ந்திருந்த விலாசனுக்கு முன், ஜப்பானியக் குள்ளர்களுள்ளும் சற்றுக் குட்டையாய் இருந்த டோமோ நாகா, பொம்மலாட்டத்தில் கயிறுகளால் ஆட்டப்படும் சிறு

பொம்மையைப் போலவே தோன்றினன். சப்பை மூக்கின் வழியாக இழுத்த காற்று அவன் மூச்சுக்குப் போதுமானதாக இல்லாததாலோ என்னவோ, அவன் மூச்சுத் திணறிக்கொண்டே, மேலெல்லாம் ஊற்றிக்கொண் டிருந்த வேர்வையைத் துடைத்துக்கொள்ள அவனுடைய குட்டையான சட்டை போதவே இல்லை ஆகையால் திண்டாடி மண்டை கலங்கினன். அவன் விளையாடிக்கொண் டிருந்தானே ஒழிய, உணர்ச்சியுடன் இல்லை.

'ஸெட்' முடிவானதும் ஜனங்கள் விலாசனைப் பாராட்டப் போட்ட சத்தமும் கை கொட்டின ஒலியும் அந்த ஏழை ஜப்பானியனுக்குக் கேட்டனவோ என்னவோ யார் கண்டார்கள்?

வெளியே போய்க்கொண் டிருந்த கூட்டம் நெருக்கி அடித்துக்கொண் டிருந்த போது, 'புயற் காற்றுச் சூறை தன்னில்' அகப்பட்ட ஒரு மாந்தளிரைப் போல் சுநேத்ரா அதன் நடுவில் அகப்பட்டுக்கொண்டு விழித்தாள்.

விலாசனை எப்படியாவது போய்க் காண வேண்டும் என்ற அவளுடைய மட்டற்ற ஆசையால் ஆயிரக் கணக்கான ஜனங்களை விலக்கிக்கொண்டு அவள் போக வேண்டியதாயிற்று. தன் வழியை மறித்துக்கொண் டிருந்த அந்த ஜனத் திரளின் மேல் அவளுக்குக் கோபம் உண்டாயிற்று. அந்த பத்துப் பதினைந்து விநாடிகளில் அவள் மனத்தில்தான் எத்தனை தரம் அந்த யோசனை வந்து வந்து போயிற்று: "அந்தச் சட்டைக்காரி நான் போகும் முன்பே விலாசனைச் சந்தித்து அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிடுவாளோ என்னவோ? எனவே இன்றைக்கும் விலாசனைச் சாவகாசமாய்ச் சந்தித்துப் பேச முடியாது போல் தோன்றுகிறது."

அவள் ரோசத்துடன் தைரியமாகக் கூட்டத்தில் நுழைந்து விலாசனை நோக்கி நடந்தாள். என்றைக்கும் இல்லாத வழக்கமாய் அவள் தன் புறங்கையினல் ஜனங்களை இடித்துத் தள்ளவும் பின் வாங்கவில்லை. போகும் வேகத்தில் அவள் ஒரு பார்ஸிப் பெண்ணின் காலை மிதித்துவிட்டதால், அந்தப் பாவை தன் மூக்குக் கண்ணாடி வழியாகச் சுநேத்ராவைப் பார்த்துக் கோபத்துடன் குஜராத்தி பாஷையில் உள்ள வசை மொழிகள் அத்தனையையும் உபயோகித்து அவளைத் திட்டினள். ஆனல் சுநேத்ராவுக்கு வேறு விஷயத்தில் இருந்த கவனம் அவள் வசை

மொழிகளையும் அலக்ஷ்யம் செய்தது. அவள் அப்படியும் இப்படியுமாக முண்டியடித்துக் கொண்டு டென்னிஸ் கோர்ட்டின் எல்லையைத் தாண்டி, ஆட்டக்காரர் தங்கும் கட்டிடத்திற்குள் நுழைந்து விட்டாள்.

தன் உடுப்புகளை மாற்றிக்கொண்டு விலாசன் அறைக்கு வெளியே நின்றுகொண்டிருந்தான்; அவனைச் சுற்றிலும் நாலைந்து பேர்கள் நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.

'விலாசன் நம் பக்கம் லக்ஷ்யம் செய்து திரும்பியாவது பார்க்கிறானோ இல்லையோ யார் கண்டார்கள்?' என்று அவள் யோசனை செய்தாள்.

ஆனால் விலாசன் அவளைப் பார்த்ததும் ஆனந்த மேலீட்டினால் அவள், "எங்கள் பங்களாவிற்கு வருவீர்களோ இல்லையோ?" என்றாள்.

"ஊம்; வருகிறேன் வா."

இப்படிச் சொல்லிய விலாசன் சுற்றிலும் இருந்தவர்களிடம் விடை பெற்றுக்கொண்டான்.

வெளியே தெருவில் வந்ததும் சுநேத்ராவின் மோட்டாரில் ஏறி விலாசனும் சுநேத்ராவும் உட்கார்ந்தார்கள். இதற்குள் விலாசனின் முதுகின்மேல் யாரோ ஒருவன் ஒரு தரம் தட்டிக் கொடுத்தான். விலாசன் திரும்பினான். உடனே ஒரு குரல், "ஸபாஷ்!" என்றது.

தட்டிக் கொடுத்த அந்த யுவன் விலாசனைப் பார்த்து, "அடையாளம் தெரிந்ததா இல்லையா?" என்றான்.

கொஞ்ச நேரம் வரையில் விலாசன் அந்த யுவனின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்து விட்டுப் பிறகு உடனே மிகவும் சந்தோஷத்துடன் அவன் கையைப் பிடித்துப் பலமாகக் குலுக்கிக் கொண்டே, "அடே, சரத்சந்திரனா?" என்றான்.

"அடையாளம் தெரிந்துகொண்டு விட்டாயே!"

"அப்படி என்றால் என் ஞாபக சக்தி மிகவும் மோசம் என்று நீ எண்ணிக்கொண்டிருந்தாயா என்ன? உன்னைக் கண்டு பேசி ஐந்து வருஷங்களுக்குமேல் ஆகிவிட்டதானாலும் நான் முன்பு என்னுடன் டென்னிஸ் விளையாடிய ஒரு நிபுணனை மறந்து விடுவேனா?"

"மறக்கக் கூடாது என்பது என்ன கட்டாயம்? நீயோ பெரிய அமல்தாரின் மகன். சீமைக்குச் சென்று என்ஜினீரிங்

பரீக்ஷையில் பெரிய பதவிகளைப் பெற்று வந்தவன்; ஆகையால்—''

''அப்படியானால் நீ மட்டும் என்ன குறைந்தவனா?''

இப்படி விடை பகர்ந்த விலாசன் அவனை மேலே பேச விடவில்லை. சுநேத்ராவையும் தன் பழைய நண்பனையும் அறிமுகம் செய்துவைக்கவில்லை என்பது நினைவிற்கு வந்ததும் அவள் பக்கம் தலையைக் காட்டி அவன், ''என் சிநேகிதி சுநேத்ரா. இவன் என் பழைய நண்பன் சரத்சந்திரன். ஏண்டா, உன்னை எந்த விதத்தில் அறிமுகப்படுத்துவதடா சரத்? என்னை மன்னித்துக்கொள். உன்னைப் பற்றி எனக்கே இப்போது ஒன்றும் தெரியாது. எங்கே இருக்கிறாய்? என்ன செய்கிறாய்? சொல்லேன்?'' என்றான்.

சரத்சந்திரன் சிரித்துவிட்டுச் சும்மா இருந்தான்.

விலாசன் மறுபடியும், ''சும்மா சிரித்தால் என்ன அர்த்தம்? சொல்லேண்டா? உன் உத்தியோகம் என்ன?'' என்றான்.

சரத்சந்திரன் மறுபடியும் சிரித்துவிட்டு, ''சிறைக்குச் செல்லும் உத்தியோகந்தான்!'' என்றான்.

''அப்படி யென்றால் என்ன? மறியலில் ஈடுபட் டிருக்கிறாயா என்ன? உன் உடுப்புகளில்கூட என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறதடா! இதெல்லாம் என்ன?''

''அப்படியானால் என்னைப்பார்த்து நீ பயப்படுகிறாய் போலத் தோன்றுகிறதே!''

''ஏதுக்காகடாப்பா?''

''நான் யாருடன் பேசிப் பழகி வருகிறேனோ அவர்களையும் போக்கிரிகள் கூட்டத்தில் சேர்த்துவிடுவார்கள். எங்கள் சிறு சங்கத் தோழர்கள்மீது சர்க்காரின் பூர்ண கடாக்ஷம் விழுந்திருக்கிறது.''

''அப்படியானால் உங்களுக்குள் ஒரு தோழர் சங்கம் உண்டா?''

''ஆம்; அந்தச் சங்கத்திற்குத் தலைமை வகிக்கும் தேவதை ஒருத்தி இருக்கிறாள்.''

''ஓஹோ, அவள் பெயர் என்னவோ?''

''ஆசா!''

விலாசன் தன் மனத்திற்குள்ளாகவே, 'ஆசா', 'ஆசா', 'ஆசா' என்று இரண்டு மூன்று தரம் சொல்லிக்கொண்டான். எனவே அவனுக்கு அந்தப் பெயரில் ஒரு மதிப்பு ஏற்பட்டது.

உடனே அவன் சரத்சந்திரனிடம் பட்டவர்த்தனமாக,

''உங்கள் தோழர் சங்கம் ஒரு கீர்த்தி பெற்ற சங்கம் என்று சொல்லு'' என்றான்.

''ஆம், நாங்கள் பிறர் மதிப்பைப் பெறுகிறோம். புதிய புதிய புஸ்தகங்களைப் படிக்கிறோம், படித்துக் காட்டுகிறோம். கட்டுரைகள் எழுதுகிறோம். ஒருவருக்கு ஒருவர் தர்க்கம் செய்து கொள்ளுகிறோம். கூட்டம் கூட்டுகிறோம்; ஊர்வலம் நடத்துகிறோம்; சிறைக்குச் செல்லுகிறோம். — குஷியாக இருக்கிறோம் நாங்கள்.''

சரத்சந்திரன் இவ்விதம் பேசியபோது விலாசனின் முகத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படுகிறதா என்று சுநேத்ரா பார்க்க விரும்பினாள். விலாசன் அந்தக் குஷியைப் பற்றி எவ்வித அபிப்பிராயம் கொண்டான் என்பது ஒருவாறு அவளுக்கு விளங்கியது. அநேக நாட்களுக்குப் பிறகு சந்தித்த விலாசனுடைய அந்தப் பழைய நண்பன் எந்தக் 'குஷி'யைப் பற்றிப் பேசினானோ அவைகள் எல்லாம் விலாசனுடைய கற்பனைக்குக்கூட விரோதமானவை என்பது உண்மையே. அவள் விலாசனின் முகத்தையே உற்று நோக்கிக்கொண் டிருந்தாள்.

ஆனால் எவ்வித முகபாவனையை அவள் விலாசன் முகத்தில் கண்டாளோ அந்த உணர்ச்சி விலாசனுக்கு உண்டாகவில்லை. அதற்கு நேர்மாறாக விலாசன் சரத்சந்திரனைப் பார்த்து, ''உன்னுடைய இந்த வர்ணனைகளைக் கேட்டு நான் உங்கள் தோழர் சங்கத்தின் அங்கத்தினர்களை எல்லாம் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பெரிதும் விருப்பமாய் இருக்கிறதடா சரத்'' என்றான்.

''கட்டாயம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். எப்போது வருகிறாய்? இப்போதே போகலாமா?''

சுநேத்ராவின் அடிவயிற்றில் 'பகீர்' என்றது. அவளுக்கு, விலாசன் தன்னை விட்டுவிட்டுச் சரத்சந்திரனுடன் கிளம்பிவிடுவானோ என்னவோ என்ற பயம் ஏற்பட்டது. 'விலாசன் ஏன் இப்படி அடங்காப் பிடாரியாகப் போய் விட்டான்; யார் சொல்லுகிறது அவனுக்கு?'

அவளால் சும்மா இருக்க முடியவில்லை. கைக் கடியாரத்தை ஒரு தரம் பார்த்துவிட்டு அவள் விலாசனிடம், ''மணி ஏழேகால் ஆகிவிட்டதே!'' என்றாள்.

விலாசன் அவள் பக்கம் திரும்பித் தலையை ஒரு தரம் அசைத்துவிட்டுப் பிறகு சரத்சந்திரனிடம் திரும்பினான்.

''இப்போது வரமுடியாது; இவருடன் நான் போகவேண்டியிருக்கிறது.''

''நல்லது; ஆனால் என்றைக்காவது ஒரு நாள் கட்டாயம் வரத்தான் வேண்டும். சரியா?''

''சரி, சரி.''

இப்படிப் பேசிய பிறகு விலாசன் மறுபடியும் சரத்சந்திரனின் கையைப் பிடித்து வேகமாய்க் குலுக்கினான். பிறகு திரும்பிச் சுநேத்ராவிடம், ''வா, போகலாம்; ஊம்......'' என்றான்.

அவர்கள் இருவரும் மோட்டாரில் ஏறினதும் மோட்டார் புறப்பட்டது.

வண்டியின் வேகம் அதிகரித்ததும் மாலை நேரத்தின் குளிர்ந்த காற்று விலாசன் சுநேத்ரா இவர்கள்மீது சற்றுப் பலமாக வீச ஆரம்பித்தது. அவர்களுக்கு முன்னும் பின்னும் வரிசை வரிசையாக எத்தனையோ மோட்டார்கள் போய்க்கொண்டிருந்தன. அவைகளில் உட்கார்ந்து போகும் ஸ்திரீ புருஷர்களின் அலங்கரிக்கப்பெற்ற உருவங்கள் சினிமாப் படங்களைப் போல் தோன்றி மறைந்தன. இடது பக்கம் ஓடிக்கொண்டிருந்த புகை வண்டியின் கடகட என்ற சத்தம் ஒரு புறம். அதில் உட்கார்ந்திருந்த பிரயாணிகளின் முகங்களில்தான் எத்தனை விதமான பாவங்கள்! அவர்கள் கண்ணில் படுமுன்பே மறைந்தும் விடுகிறார்கள். வலது பக்கத்தில் இருந்த கட்டிடங்களுக்கு மேல் விதவிதமான பட்டுப் பூச்சிகள் பறந்துகொண்டிருந்தன.

இந்தக் காட்சிகளை எல்லாம் கண்ணுற்ற சுநேத்ராவிற்கு ஆனந்தம் உண்டாயிற்று. கடைசியில் ஒரு நாள் விலாசனைக் கண்டுபிடித்தோம், அவனைத் தன்னுடன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுகிறோம் என்ற எண்ணம் அவளுக்கு வந்தபோது அவள் ஆனந்தம் பன்மடங்கு பெருக ஆரம்பித்தது.

ஆனால் அவள் அவ்விதம் ஆனந்தப்படுவதை விலாசன் அறிந்தானோ இல்லையோ, யார் கண்டார்கள்?

## அத்தியாயம் 3

'பல நாட்களுக்குப் பிறகு விலாசன் இன்று நம் வீட்டிற்கு வந்திருக்கிறான். ஆகையால் இவனுடன் கொஞ்ச நேரம் சாவகாசமாய்ப் பேசி ஆனந்தப்படவேண்டும்' என்று சுநேத்ரா விரும்பினாள். எனவே பங்களாவை அடைந்ததுமே அவள் டிரைவரிடம், "நீ வேண்டுமானால் வெளியே போய்விட்டுத் திரும்பி வா. சுமார் எட்டரை மணிக்கு இவரை வீட்டிற்கு அழைத்துச் சென்றால் போதுமானது" என்றாள்.

விலாசன் உடனே குறுக்கிட்டு, "சபாஷ்! அப்படி என்றால் ஒரு முழு மணி நேரம் என்னை இங்கே மூச்சுத் திணறத் தங்கும் படி வைக்க உனக்கு விருப்பமா?" என்றான்.

இந்தப் பேச்சு சுநேத்ராவின் மனத்தில் 'சுரீர்' என்று தைத்தது. விளையாட்டாகத்தானோ என்னவோ, தன்னுடன் கூட இருக்கும் நேரத்தைத் 'திணற வைக்கும் நேரம்' என்று விலாசன் குறிப்பிட்டது அவளுக்கு மன வேதனையை அளித்தது. அவள் மனத்திற்குள்ளாகவே, 'பின் ஏன் இங்கே வரவேண்டும்? தாராளமாகத் திரும்பிப் போய்விடலாமே!' என்று எண்ணினாள். 'இதை வெளியே சொல்லி நம் கோபத்தைக் காட்டிவிடுவோமா?' என்று கூட நினைத்தாள். ஆனால் உண்மையாகவே விலாசன் திரும்பிப் போய்விட்டாலும் விடலாம். இந்த விஷயம் அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. என்ன காரணம் என்றால், விலாசன் முன்பு சில சமயங்களில் அப்படிச் செய்தே இருக்கிறான் என்பது அவள் நினைவிற்கு வந்தது. எனவே விஷயத்தை வேடிக்கைப் பேச்சாகவே பாவித்துக்கொண்டு அவள், "ஆம்; நான் நன்றாகத் திணற அடிக்கத்தான் போகிறேன். நீங்கள் எங்கே தப்ப முடியும், பார்க்கலாம்! ஒரு கப் 'டீ' யாவது சாப்பிடுவீர்களோ இல்லையோ?" என்றாள்.

"ஏன், டீ எனக்குக் கிளப்புகளில் கிடைக்காது என்ற எண்ணத்துடன்தான் இங்கே கூட்டிக்கொண்டு வந்தாயோ?"

"உங்களுக்கு 'டீ' கிடைக்காது என்று இங்கே அழைத்து

வந்தேன்? நீங்கள் ஒரு வாய் டீ இங்கே எங்கள் வீட்டில் சாப்பிட்டால்தான் எனக்கு மனச் சமாதானம் உண்டாகும்.''

''ஓஹோ, அப்போது சுயநலம் கருதித்தான் என்னை இங்கே கூட்டி வந்திருக்கிறாய் என்று சொல்லு?''

''ஓஹோ, அதற்கு அப்படி அர்த்தமாகுமா என்ன? சரி, உள்ளே வாருங்கள் இப்போது; மோட்டார் இங்கேயே நின்று கொண்டிருக்கும். கவலை வேண்டாம்.''

இப்படிப் பேசிக்கொண்டே சுநேத்ரா அவள் வீட்டு நடுக் கூடத்திற்குள் சென்றாள். விலாசனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

தான் சண்டைபோட்டுச் சாமர்த்தியமாகப் பேசி விலாசனை மடக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று சுநேத்ரா எண்ணினாள். உள்ளே 'டீ' கொண்டுவருவதற்காக அவள் சென்றபோது மிகவும் மலர்ந்த முகத்துடனே சென்றாள்.

ஆனால் அவளுடைய சந்தோஷம் அதிக நேரம் நிலைக்கவில்லை. விலாசன் அவளுடன் பங்களாவின் கூடத்தில் தனியே உட்கார்ந்திருந்தபோது உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கையிலேயே சுநேத்ராவின் தாயும் தகப்பனரும் உள்ளே பிரவேசித்து அங்கேயே நாற்காலிகளில் உட்கார்ந்ததைப் பார்த்ததும் விலாசனின் மலர்ந்த முகம் வெறுப்பினால் மாறுதல் அடைந்ததைச் சுநேத்ரா கவனித்தாள். விலாசன் இனி அதிக நேரம் தங்கமாட்டான் என்பதும், அவன் போகாமல் தடுப்பதற்கு வழி ஒன்றும் இல்லை என்பதும் சுநேத்ராவிற்குப் பட்டது.

விலாசன் அவளிடம் இதற்குமுன் எத்தனையோ தடவை, ''இந்தக் கிழங்களைக் கண்டாலே எனக்குக் கட்டோடு பிடிக்கிறதில்லை. ஒரு யுவனும் யுவதியும் தனிமையில் பேசிக்கொண்டிருக்கும் போதெல்லாம் அவ்விடத்தில் இவை பிரவேசிக்காமல் இருப்பது கிடையவே கிடையாது! ஒருவேளை தங்கள் பெண்களை இந்த யுவர்கள் கடித்துத் தின்றுவிட்டால் என்ன செய்வது என்ற பயமோ என்னவோ இவர்களுக்கு, யார் கண்டார்கள்?'' என்று சொல்லியிருக்கிறான்.

விலாசனின் இவ்விதப் பேச்சுக்களுக்கு எந்த விதத்தில் பதில் சொல்வது என்றே சுநேத்ராவுக்குப் புரியாது. விலாசன் பல தடவை, ''ஹிந்து யுவதிகளாகிய உங்கள் மேலும் எனக்குக் கோபம் வரத்தான் வருகிறது. எப்போதும்

உங்களுக்குக் காவலாக உங்கள் நெருங்கிய பந்துக்களில் யாரேனும் ஒருவர் - தாய், தகப்பன், மாமன், மாமி, இப்படி யாரேனும் - உங்கள் கூடவே இருக்கவேண்டும். யுவர்களுடன் நீங்கள் தனிமையில் விளையாடவேண்டும் என்று ஆசைப் பட்டாலும் அதை வெளியே சொல்லுவதற்குக்கூட உங்களுக்குத் தைரியம் ஏது? உங்களுடைய கோபம், வெறுப்பு, காதல், ஆனந்தம் இவைகளை எல்லாம் மனத்திற்குள்ளாகவே அடைத்து வைத்துக்கொண்டேதான் நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள்! தைரிய மாக முன்வந்து இச்சைப்படி நடந்த ஒரு ஹிந்து ஸ்திரீயை யாவது நான் இந்தச் சமூகத்தில் பார்த்ததே இல்லை....''

விலாசன் முன்பு பல தடவை சொல்லியிருந்த இந்த விஷயங்களெல்லாம் சுநேத்ராவுக்கு இப்போது நினைவுக்கு வந்தன; ஆகையால் அவள் மனம் கலக்கம் அடைந்தது.

விலாசனுக்குப் பிடிக்காத விஷயங்களில், சுநேத்ராவின் தகப்பனார், அவனை மேலும் மேலும் கேள்விகள் கேட்டுத் தொந்தரவு செய்ததைப் பார்த்தபோது அவள் மனக் கலக்கம் அதிகமாயிற்று.

சில மனிதர்களுக்கு, தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரும் அப்போதைய அரசியல் விஷயங்களைப் பற்றியாவது வேறு ஏதாவது கட்சிப் பிரதிகட்சி அபிப்பிராயங்களைப் பற்றியாவது விவாதம் செய்வதில் அதிகப் பற்று உண்டு. இப்படி விவாதம் செய்வதனால், அவர்கள் கஷ்டப்பட்டு நிலைநாட்டப் பார்க்கும் உண்மைகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நோக்கம் அவர்களுக்கு உண்டா என்பது சந்தேகந்தான். ஆனால் கேவலம் நாக்கை அடக்க இயலாததாலும் எந்த எந்தக் கட்சியின் சார்பாக அவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட் டிருக்கிறார்களோ அந்த அந்தக் கட்சியின் தலைவர்களுக்குத் தெரியாத சில உண்மைகளையும் தந்திரங்களையும் அவர்கள் கண்டுபிடித்திருப்பதாகவும் நினைத்துக்கொண்டு, பலவிதமாகப் பேசிக்கொண்டே இருப்பார்கள். சுநேத்ராவின் தகப்பனார் இவ்வித மனிதர்களுள் ஒருவர். எனவே அவர் விலாசனை விட்டுவிடுவாரா?

''சென்ற நாகப்பூர் காங்கிரஸில் மேல்நாட்டுத் துணி களையும் மற்றப் பண்டங்களையும் பகிஷ்காரம் செய்தது காந்தியின் தப்பு அல்லவா? உங்களுக்கு என்ன தோன்று கிறது?'' என்றார் அவர்.

விலாசன் தன் சட்டைப் பையில் இருந்த சிகரெட் ஒன்றை எடுத்துக்கொண்டே, ''சென்ற காங்கிரஸ் நாகப்பூரில் கூடியது என்பதே நீங்கள் சொன்ன பிறகுதான் எனக்குத் தெரிகிறது!'' என்றான்.

விலாசனின் விடையில் இருந்த உட்பொருளை அறிந்து கொள்ள முடியாமல் சுநேத்ராவின் தகப்பனார் மேலே பேசிக் கொண்டே போனார்.

''நான் உங்களுக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன்: காந்தியின் புதிய 'மறியல்' முறை தேசத்திற்கு ஒரு விதத்திலும் நன்மை பயக்கப் போவதில்லை. காங்கிரஸில் உள்ள ஜனங்கள் மட்டும் அல்ல, காந்தியின் உண்மைப் பக்தர்கள்கூட இந்த மறியலில் சேரப் போவதில்லை என்பதே இத்தச் சத்தியாக்கிரகத்தின் முடிவாகும். எனவே தேசத்தில் நூற்றுக்கணக்கான பிளவுகள் ஏற்படத்தான் போகின்றன. இதன் முடிவு என்னவாகும் என்பது அரசாங்கத்தாருக்கும் தெரியவில்லைபோல் இருக்கிறது. ஏற்கனவே வைஸ்ராய் பிரபு மருண்டு போயிருக்கிறார். அடக்கு முறைகளும் தண்டனைகளும் பலமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நான் மட்டும் வைஸ்ராயாக இருந்தால் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பேன்; அவ்வளவுதான். காந்தியால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தடபுடல்களையும் அவர் செய்யட்டுமே! ஐயா, கதர் கட்டிக் கொண்டால் மட்டும் சுயராஜ்யம் கிடைத்துவிடுமா என்ன? என்னிடத்தில் இந்திய விவசாயிகள் சம்பந்தமாகவும் இன்றைப் பொருளாதாரப் பிரச்னைகள் சம்பந்தமாகவும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கணக்கற்ற உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. நான் ஒருவேளை அவைகளை எழுத்து மூலம் வெளியிட்டு, அதைக் காந்தியின் முன் நீட்டினேனானால் அவர் வாய் அடைத்து வெறுமனே 'கம்' என்று உட்காரவேண்டியதுதான்; இதோ காட்டுகிறேன் பாருங்கள், விலாஸ்!''

அவருடைய வாக்கியம் முழுவதும் முடிவதற்குள்ளாகவே விலாசன் குறுக்கிட்டு, ''இப்போது வேண்டாம், இப்போது வேண்டாம். வேறு எப்போதாவது அவகாசம் கிடைத்தால் நான் வருகிறேன்; அப்போது பார்த்துக்கொள்ளலாம். நான் இப்போதுதான் டென்னிஸ் 'மாட்ச்' விளையாடிவிட்டுத் திரும்பியிருக்கிறேன்; களைப்பாக இருக்கிறது; இந்தக் கசப்பான கடினப் பிரச்னைகளை என் மூளை ஏற்காது'' என்றான்.

''ஐயாவே! அதில் கசப்பான விஷயம் ஒன்றுமே இல்லை: நான் உங்களிடம் நாலே நாலு உண்மைகளை மட்டும் சொல்லு கிறேன், கேளுங்கள்.''

''அது சரி ஐயா, ஆனால் எனக்கு டென்னிஸ் சம்பந்தமான உண்மைகளைத் தவிர வேறு எந்த உண்மையும் தெரியாது. தேவையும் இல்லையே?''

''அப்படியானால், நானே உங்களுக்கு இவற்றை விவரித்து ஆதிமுதல் சொல்லித்தான் கொடுக்கிறேனே. இப்போது தேசத்தில் நடக்கும் இந்த மறியல் போராட்டத்தில் நேரான சம்பந்தம் வைத்துக்கொள்ளவே கூடாது. ஆனால் மறைமுக மாகச் சம்பந்தம் வைத்துக்கொள்ளலாம்; வைத்துக்கொள்ளவே வேண்டும்.''

''மன்னியுங்கள்; உங்களுக்கு நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ள விருப்பம் இல்லையேல் மறைமுகமான தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது! போகாத ஊருக்குப் போகும் பாதையைப் பற்றி நாம் ஏன் விவாதம் செய்ய வேண்டும்?''

''அடேடே! நீங்கள் சொல்வது சுத்தத் தப்பு. நான் என்ன சொல்லவந்தேன் என்றால் இந்த மறியல் போராட்டத்தின் தடபுடல்கள் எங்கள் வீடுகளுக்குக்கூட எட்டிவிட்டாலும் அதில் ஆச்சரியம் இல்லை. சுநேத்ராவின் இரண்டு மூன்று சிநேகிதிகள் நேற்றுக் காலேஜை விட்டு மறியலில் ஈடுபடவேண்டி வெளியேறி விட்டார்களாம்! இல்லையா, சுநேத்ரா?''

சுநேத்ரா தன் வெறுப்படைந்த முகத்தைத் திருப்பிக் கொண்டே, ''ஆம்'' என்றாள்.

அவள் தகப்பனார் அவள் கொடுத்த இந்தச் சிறு சொல்லையே தேவைக்கும் அதிகமான விடை என்று எண்ணினாரோ என்னவோ, உடனே மறுபடியும் தம் கதையை ஆரம்பித்துவிட்டார்:

''இதோடு நின்றது என்று இருக்கிறீர்களா என்ன? யாரோ பெண் ஒருத்தி கிளம்பி இருக்கிறாளாம். அவள் ஒவ்வொரு காலேஜின் முன்பும் நின்றுகொண்டு பிரசங்கங்கள் செய்கிறாளாம்! அவள் பேர்கூட........ஏதோ நூதனமான பேர் ஐயா...... கொஞ்சம் இருங்கள்......இதோ 'கிரானிகிளை' எடுத்து வந்து காட்டுகிறேன் அவள் பேரை.''

''வேண்டாம், இப்போது தேவையில்லை!''

விலாசன் இப்படிச் சொன்னாலும் சுநேத்ராவின் தகப்பனார்

இதை லக்ஷ்யம் செய்யவில்லை: அவர் 'கிரானிகிளை' எடுத்துவர எழுந்து போகத்தான் போனார்.

இது ஒரு விதத்தில் நல்லதாயிற்று என்று விலாசனுக்குப் பட்டது.

அவன் எழுந்து 'ஹாட்டை'க் கையில் எடுத்துக்கொண்டு, ''நான் வருகிறேன் அம்மா'' என்றான்.

சுநேத்ரா ஒன்றுமே பேசவில்லை; ஆனால் அவளுடைய முகத்தில் அழுகை ததும்பிற்று.

வெளி வராந்தாவுக்குப் போனவுடன் அவள் விலாசனிடம், ''மறுபடி எப்போது வருவீர்கள்?'' என்றாள்.

விலாசன் அவளைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே, ''எதுக்காக இங்கே அடிக்கடி வரவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. 'பீபிள்ஸ் பார்க்' போன்ற மிருகக்காட்சி சாலைகளில் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் சிங்கம் புலி போன்ற மிருகங்களைத் தூரத்திலிருந்து பார்த்து இன்புறுவதைப் போல் புருஷர்கள் பெண்களை வேடிக்கை பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் உன் கொள்கையா? நாங்கள் சும்மா எங்கள் கால் சளைக்க நின்றுகொண்டிருக்கத் தயாராக இல்லை அம்மா!''

இதைக் கேட்டுச் சுநேத்ரா மனக்கலக்கம் அடைந்தாள்:

''ஏன் இப்படி எல்லாம் பேசுகிறீர்கள்? உங்களை நான் எதிர் பாராத நாளே இல்லை'' என்றாள் மெல்ல.

இதற்குமேல் விலாசன் என்ன விடை பகர்ந்திருப்பான் என்பது யாருக்குத் தெரியும்?

இதற்குள் சுநேத்ராவின் தகப்பனார் அவ்விடம் வந்தார். அவர் விலாசனிடம் பத்திரிகையைக் காட்டிக்கொண்டே, ''அகப்பட்டுவிட்டதையா, அந்த யுவதியின் பேர்! 'ஆசா' — இந்தாருங்கள் 'கிரானிகிள்.' இந்தப் பக்கத்தில்தான் அந்த விஷயம் இருக்கிறது.''

''ஆசா?'' என்று விலாசன் மனத்திற்குள்ளாகவே கேட்டுக் கொண்டான்.

'யாரோ அந்தப் பேரை முன்பு நம்மிடம் சொல்லியிருந்தார்களோ?' அவனுக்கு ஞாபகம் வரவே இல்லை. திருப்பி நினைவிற்குக் கொண்டுவரும் முயற்சியுடன் அவன் மோட்டாரில் ஏறினான்.

மோட்டார் புறப்படுவதற்குத் தயாரானதும் சுநேத்ராவின் தகப்பனார் உரத்த குரலில், ''ஐயா! இதென்ன? நீங்கள்

பத்திரிகையை விட்டுவிட்டீர்களே! இந்தாருங்கள், அந்த விஷயத்தைப் படியுங்கள்!'' என்று கூவிக்கொண்டே அவர், 'கிரானிகிள்' பத்திரிகையை மோட்டாருக்குள் விட்டெறிந்தார்.

வண்டி வேகமாய்ப் போய்க்கொண் டிருக்கையில் விலாசன் தனக்குள்ளேயே, ''ஆசா, ஆசா'' என்று சொல்லிக் கொண்டான்.

இதற்குள் ஒரு பெரிய காற்று வீசியது. 'கிரானிகிள்' பத்திரிகை காற்றினால் சற்று விரிந்தது. அதன் இதழ்கள் பட்சியின் சிறகுகளைப் போல் அடித்துக்கொண்டன. சற்று நேரத்தில் அது விலாசனிடம் பறந்து வந்து அவன்மேல் ஒட்டிக்கொண்டது - ஆலிங்கனம் செய்து கொள்வதைப்போல்!

விலாசன் அதை எடுத்துத் தூர எறிந்தான்.

எந்தக் காரணத்தை முன்னிட்டு விலாசன் தன் வாழ் நாட்களில் ஒரு கணமேனும் அரசியல் விஷயங்களில் செலவிட முடியாமல் இருந்தானோ, அதே விளையாட்டுப் புத்தியினால்தான் அவன் இவ்விதம் செய்தான்!

இன்று வரையில் அவன் வாழ்க்கை என்னும் போராட்டத்தில் அடி எடுத்துக்கூட வைக்காமல் அதை ஓர் இன்ப மயமான கேளிக்கைக் காலம் என்றே நினைத்து வந்தவன். மிகவும் பெரிய பணக்காரக் குடும்பத்தில் உதித்தவன் ஆகையால் வழக்கமாய் உள்ளபடி கல்வி அறிவு அதிகம் கிடையாது என்ற விதி விலாசன் விஷயத்தில் விலக்காக இருந்தது. அவன் படிப்பில் முதன்மையாகத் தேறியது மட்டுமின்றி மேல்நாட்டுக்குச் சென்று உயரிய இஞ்ஜினீயரிங் பரீக்ஷைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தான் என்பது உண்மையே. ஆனால் இந்தச் சுக வாழ்க்கையின் உயரிய உருவத்தை அவன் ஒருநாளும் திரும்பிப் பார்த்ததே இல்லை. ஆண்மைக்கு அறிகுறியான விளையாட்டுப் பந்தயங்களிலும் மோட்டார் ஓட்டுதல் போன்ற துணிவுள்ள காரியங்களிலும் நேரத்தைப் போக்குவது, அறுசுவை உண்டி, விலையுயர்ந்த ஆடைகள், பலவிதமான அழகுச் சாதனங்கள் இவைபோன்ற சுக போகங்களை அழகிய இளம் யுவதிகளுடன் எப்போதும் அநுபவிப்பது, சரசம் ஆடுவது முதலிய மைனர் வாழ்க்கையிலேயே அவன் உழன்று வந்தான். ஆனால் விஷயம் முற்றிப் போய்த் தனக்கு உண்டான பணத்தைத் துஷ்பிரயோகம் செய்வதோ, பெண்களுடன் காதல் அல்லது காமச் செயல்கள் புரிவதோ அவனுக்குத் தெரியாது.

விளையாட்டு நிபுணர்களின் மனத்தில் இயற்கையாகவே அவர்கள் பந்தயங்களின் ஜயாபஜயத்தைப் பற்றியே ஒருவிதக் கவலை இருந்துகொண்டே இருக்கும் என்பது உண்மை. விளையாட்டுக் களினுல் ஏற்படும் ஆனந்தமே, ஆட்டக்காரனின் பசிக்கு உகந்த ஆகாரம். வேறு எந்த விஷயத்திலும் அவன் கவனம் செல்லவே செல்லாது. 'தன் முன்னுல் உள்ள இந்த ஆனந்தத்தை விட்டுவிட்டு, வேறு ஆனந்தங்களைத் தேடி அவற்றைத் துரத்திக் கொண்டே போயும் அவை கிடைக்காமல் கஷ்டப்படுவது மூடத்தனமாகும்' என்பதுதான் இந்த விளையாட்டு நிபுணர் களின் கொள்கையோ என்னவோ தெரியாது. ஆனுல் விலாசனைப் பார்த்த வரையில் மேற்படி கொள்கை அவனிடம் ஊன்றியிருந்தது என்பது மட்டும் நிச்சயம்.

எனவே சுநேத்ரா, கல்பனுபாய் போன்ற அழகான யுவதி களின் காதல் அவன் காலடியில் வலிய வந்து கிடந்தாலும் அவன் கல்யாணப் பேச்சையே எடுக்கவில்லை. அரும்பெரும் உத்தியோகங்களில் பல அவனுக்கு எளிதில் கிடைக்கக் கூடியன வாக இருந்தும் அவன் மனம் வேலையில் நாட்டம் கொள்ளவில்லை. இவ்விஷயமாக அவன் பெற்றேர்களுக்கு உண்டான வியப்பைக் காட்டிலும் விலாசனுக்கே தற்சமயம் தன் மனப்பான்மையின் மேல் ஆச்சரியம் உண்டாயிற்று. கடந்த வாழ்க்கையையும் எதிர் கால வாழ்க்கையையும் அவன் விளையாட்டுப் புத்தியுடன்தான் நோக்கி வந்தான். பிறர் தன்னுடைய சிறுபிள்ளைத்தனத்தைப் பற்றி எப்படி எண்ணிக்கொள்வார்களோ என்னும் எண்ணங்கூட அவனுக்கு உதிக்கவில்லை. எவ்விதமான களியாட்டங்களிலும் சுகபோகங்களிலும் அவன் மனம் நாட்டம் கொண்டிருந்ததோ அவைகளை விட்டுவிட அவன் மனம் இடமே கொடுக்கவில்லை. பிறர் எவ்விதமான தந்திரங்களையும் முறைகளையும் மேற்கொண் டாலும், தன்னுடைய இந்த வாழ்க்கையை மாற்றும்படி செய்ய முடியாது என்பது அவன் எண்ணம். ராஜீய விஷயங்களில் தலை யிடும் கொள்கையை அவன் என்றைக்கும் வெறுத்தே வந்தான்; இன்றும் வெறுக்கத்தான் வெறுத்தான்.

காற்றில் பறந்து வந்து தன்மேல் ஒட்டிக்கொண்ட 'கிரானிகிள்' பத்திரிகையை அவன் தூர எடுத்து எறிந்ததும் மேற் சொன்ன அவன் மனப்பான்மை காரணமாகவே ஆகும்.

சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டதும் அவன் தனக் குள்ளேயே, 'நாளைக்கு என்ன என்ன காரியம் செய்யவேண்டும்?

ஆம்; நாளைக்குச் சற்றுச் சீக்கிரமாகவே எழுந்திருக்க வேண்டும். நாளை, இருபத்து மூன்றும் தேதி. மோட்டார் சைகிள் ரிபேர் செய்யப்பட்டுப் புதிதாகி வரும் அல்லவா? நாளைக்குப் புதிதான மோட்டார் சைகிளைக் காலால் அழுத்தி வேகமாய் விட்டுச் சவாரி செய்யவேண்டும். நாளைக்கு ஏழு மணிக்கு வண்டி கிடைத்ததும் ஒன்பது மணி வரையில் இதுதான்; அதற்குப் பிறகு என்ன செய்வோம்? ஆம். சொன்னுற் போல் நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை வேறு. நாளைக்குக் குலாபா நீச்சுத் தொட்டியில் நீச்சடிக்கும் பொருட்டு எல்ஸி என்னைக் கூப்பிட்டிருக்கிருளே! நீச்சு விளையாட்டு முடிந்ததும் நல்ல தூக்கம் போடவேண்டும், நாளைக்கு. ஆனுல் நாலு மணிக்கே டென்னிஸுக்குப் போகவேண்டாமா? அப்போது......' என்று யோசித்தான்.

இதற்குள் வண்டி பங்களாவை அடைந்ததால் விலாசனின் மனக்கோட்டை அத்துடன் நின்றது.

பங்களாவில் நுழைந்ததும் சுதேஷ்ணுபாய் அவனிடம், "கல்பனுபாய் இத்தனை நேரம் இங்கேயே உனக்காகக் காத்திருந்தாள். திரும்பிவர ஏன் இத்தனை நேரம்?" என்று கேட்டாள்.

"அம்மா, எனக்கு அபாரமாய்ப் பசிக்கிறதே. இன்றைக்குச் சமையற்காரன் என்ன என்ன சமையல் பண்ணி இருக்கிருன்? வெங்காயமும் தக்காளிப் பழமும் போட்டு அவன் சாம்பார் செய்திருந்தால் அது முழுவதையும் நான்தான் சம்ஹாரம் செய்யப்போகிறேன். முதலில் குளிர்ந்த ஜலத்தில் நன்ருய்க் குளிக்க வேண்டும். அம்மா, உனக்குத் தெரியுமோ? — நான் டென்னிஸ் 'மாட்சில்' ஜயித்துவிட்டேன்!"

"எல்லாவற்றையும் கல்பனுபாய் என்னிடம் சொல்லித்தான் இருக்கிருள்...."

"அம்மா, எனக்குக் குளிக்க முதலில் ஜலம் வேண்டுமே."

இப்படிச் சொல்லிக்கொண்டே விலாசன் மாடிப்படிகளில் ஏறி மேலே சென்றுவிட்டான்.

தான் டென்னிஸ் பந்தயத்தில் ஜயித்ததைப்பற்றித் தன் தாய்க்கு மகிழ்ச்சி ஏற்படாததைக் கண்டு விலாசன் ஆச்சரியப்பட்டான். தன் கையிலுள்ள மட்டைகளைக் கீழே வைத்துவிட்டு உடுப்புகளைக் கழற்ற ஆரம்பித்தான்.

சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது தாதா ஸாஹிப் விலாசனிடம், "உன்னிடத்தில் ஒரு பெரிய விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது" என்ருர்.

''என்னவோ?''

''சோராப்ஜீ தீன்ஷா கம்பெனியின் மானேஜிங் டைரெக்டர் என்னைக் காணும்பொருட்டு இங்கே இன்று மாலை வந்திருந்தார். அப்போது உன் வேலை விஷயமாக என்னிடம் பேசிவிட்டுப் போனார்.''

''ஓஹோ அப்படியா!....சரி, அம்மா! எனக்கு இன்னும் சாம்பார் கொஞ்சம் வேண்டும். நான் உனக்கு முன்னாலேயே சொல்லியிருந்தேனே இல்லையோ? முழுவதையும் நானே....''

இதற்குள் தாதா ஸாஹிப், ''நான் சொல்வது ஏதாவது காதில் விழுந்ததா?'' என்று சற்று உரக்கக் கேட்டார்.

''ஓ, நன்றாய் விழுந்ததே....மேலே சொல்லுங்கள், கேட்கிறேன்!''

''சோராப்ஜீ தீன்ஷா கம்பெனியார் முன்பு பம்பாயில் வைத்திருந்த மில்களை எல்லாம் இப்போது மின்சாரத்தினால் இயக்கப் போகிறார்கள். அதனால் லோனாவலாவிற்குத் தெற்கேயுள்ள தளவலா கிராமத்துக்கு அருகே அவர்கள் பெரிய அணைக்கட்டு ஒன்றைக் கட்டித் தண்ணீரைத் தேக்கிப் பிரம்மாண்டமான யந்திரங்களால் மின்சார சக்தியை உண்டாக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். எனவே....''

''லோனாவலாவில் தக்காளிப் பழம் ஒன்று இத்தனை பெரிதாக இருந்ததோ இல்லையோ அம்மா! உனக்கு ஞாபகமில்லை?....அதிருக்கட்டும், செவ்வாழைதான் எத்தனை! டவுனில் அத்தனை மலிவாகக் கிடைக்கிறதும் இல்லை; ருசியும் அதைப்போல அவ்வளவாக....''

இந்த அலட்சியம் தாதா ஸாஹிபால் பொறுக்க முடியவில்லை.

''அந்த அணைக்கட்டைக் கட்டுவதற்காகவும் யந்திரங்கள் வைப்பதற்காகவும் அநேகம் என்ஜினீயர்கள் தேவையாம். நீ அணைகட்டும் வேலையில் தனி நிபுணத்துவம் பெற்றிருக்கிறாய் என்பது மானேஜிங் டைரெக்டருக்கு ஏற்கனவே தெரியும். ஆகையால் அவர் உனக்கு ஒரு வேலை தருவதாகச் சொல்லியுள்ளார்.''

விலாசன் ஒரு மறுமொழியும் கூறவில்லை.

ஆனால் அவன் மனத்திற்குள்ளாகவே, 'நான் வேலை பார்ப்பதைப் பற்றி இவருக்கு என்ன இத்தனை அக்கறை? எதற்காக இத்தனை பாடு?' என்று கேட்டுக்கொண்டான்.

தாதாஸாஹிப் அவனிடம் வேலை விஷயமாகப் பேச்சை எடுத்தது இதுதான் முதல் தடவை அன்று.

எத்தனையோ வேலை விஷயமாக எவ்வளவோ தடவை அவர் விலாசனிடம் பேசியிருக்கிறார். ஆனால் விலாசன் ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு தடங்கல் சொல்லித் தட்டிக் கழித்தான். தகப்பனருக்குள்ள உத்தியோகப் பற்றை நினைந்து அவனுக்கு அபாரக்கோபம் வந்தும் அவன் அதை வெளியே காட்டவில்லை. தாதா ஸாஹிப் போன்ற அறிவாளிகளுக்குத் தங்கள் பிள்ளையாண்டான்களின் கேளிக்கை, சிறுபிள்ளைத்தனம் இவைகளின் மேல் உள்ள துவேஷம் எவ்வளவோ, அவ்வளவிற்கு மேலாகவே அவர்களுடைய அன்பும் இருக்கிறது. இதனால்தானோ என்னவோ அந்தப் பெரியோர்கள் தங்களுடைய கோபத்தையும் வெளிக்காட்டாமல் வைத்துக்கொள்ளுகிறார்கள் என்பதும் விளங்கவில்லை. விலாசன் அவருடைய கேள்விக்குத் தக்க மறுமொழி கொடுக்காததனால் அவருக்குக் கோபம் அபாரமாக வந்தும், அவன்மேலுள்ள அன்பினால் அவர் அதைப் பொறுத்துக்கொண்டும் மேலும் மேலும் கேள்விகள் கேட்டு விவரங்களைச் சொல்லிக்கொண் டிருந்தார். விலாசன் ஒரு வேலையில் புகுந்துவிட்டானாகில் அவனுக்கு இந்த விளையாட்டுப் புத்தி நீங்கிச் சிரத்தை உண்டாகிவிடும் என்று அவர் எண்ணினார். பிறகு கல்யாணம் தானாகவே நடந்துவிடும்.

தம்முடைய எண்ணங்களைத் தாதா ஸாஹிப் தம் மனைவியிடம் சில சமயங்களில் வெளியிட் டிருந்தார். எனினும் விலாசன் காதுக்கு அவை எட்டக் காரணமே இல்லை. விலாசன், தான் செய்யும் அளவற்ற செலவினால் தகப்பனருக்குக் கோபம் ஏற்பட்டிருக்கலாம் என்று ஊகித்துக்கொண்டான். அப்படியானால் வேலை பார்க்காமல் இனிமேல் இருக்கமுடியுமா?

தகப்பனும் பிள்ளையும் ஏதேதோ அவர்கள் மனம் இடங்கொடுத்ததுபோல் எண்ணமிட்ட வண்ணம் சற்றுநேரம் மௌனமாக இருந்தனர்.

சிறிது நேரம் கழிந்ததும் தாதா ஸாஹிப் மறுபடியும். "அப்புறம் என்ன சமாசாரம் சொல்லு; வேலைக்குப் போகச் சம்மதந்தானே?" என்று தொடங்கினார்.

விலாசனின் மனத்தில் என்ன என்ன எண்ணங்கள் ஏற்பட்டனவோ யாருக்குத் தெரியும்? என்றைக்கும் அவன் வாயிலிருந்து வெளிவராத ஒரு வார்த்தையை இன்று அவன் உதடுகள் உச்சரித்தன: "சரி, ஆகட்டும்; ஒப்புக்கொள்ளத் தயார்."

சுதேஷ்ணுபாய், "சம்பளம் நல்ல சம்பளந்தானே?" என்ருள்.

"ஓஹோ, சரிதான்; சோராப்ஜீ தீன்ஷா கம்பெனி என்ருல் கிள்ளுக் கீரை என்று எண்ணமோ?"

"ஆனுல் வேலேக்காக விலாசன் பம்பாயை விட்டு விட்டுப் போக வேண்டியிருக்குமே!"

"பின்னே என்ன? அணைக்கட்டுத் தேக்கம் தளவலாவில் கட்டப்பட இருக்கும்போது விலாசன் எப்படி இங்கே தங்க முடியும்?"

"ஆனுல் சமையல்காரனேயும் கூட அனுப்பிவைக்கவேண்டும்! அங்கே சாப்பாட்டுக்கு அவன் திண்டாடவேண்டி வருமோ என்னவோ?"

ஆனுல் விலாசனுக்கு அவனுடைய பெற்ருேர்களின் இந்தச் சம்பாஷணே காதுக்கு எட்டவே இல்லே. ஏதோ ஒரு விதமான, தெளிவற்ற ஆனுல் மிகவும் வேகமான ஒருவித உணர்ச்சி அவன் மனத்தில் உண்டாயிற்று. எதிர்கால வாழ்க்கையின் கம்பீரமான உருவத்தை அவன் இன்றுவரையில் தலே எடுத்தும் பார்க்கவே இல்லே. ஆனுல் இன்ருே, யாரோ ஒருவர் தன் தலே யைப் பலாத்காரமாகத் தூக்கி மேலே நோக்கிய வண்ணம் வற்புறுத்துவதாக ஒரு பிரமை உண்டாயிற்று.

ஒரு வாய் ஜலம் குடித்ததும் அவன் இலேயை விட்டு எழுந் தான். கை அலம்பியதும் உடனே தன் அறைக்குள் போய்விட வேண்டும் என்று அவன் விரும்பினுன்.

ஆனுல் தாதாஸாஹிப் அவனேப் பார்த்து, "நாளேக் காலேயில் நீ சீக்கிரம் எழுந்துவிடுவாயா?" என்று கேட்டார்.

"ஏன்?"

"உனக்கு வேலே பார்க்கச் சம்மதமானுல், மானேஜிங் டைரெக்டர் காலேயில் டீ சாப்பிட அங்கே அவர் பங்களாவிற்கே வந்துவிடும்படியாகவும் அப்போது உன்னிடம் அவர் பேசுவ தாகவும் சொல்லியிருக்கிருர். ஆகையால்—"

"காலேயில் எனக்கு நேரம் கிடைக்காதே!"

"அப்போது மாலேயிலாவது முடியுமா? நான் அவருக்கு டெலிபோன் மூலம் சொல்லிவிடுகிறேன்."

"ஓ, சரி, செய்யுங்கள் அப்படியே!"

இப்படிச் சொல்லிக்கொண்டே விலாசன் மாடிக்கு ஏறிச் சென்ருன்.

# அத்தியாயம் 4

அன்றிரவு விலாசனுக்குத் தூக்கமே வரவில்லை.

இன்று வரையில் அவன் வாழ்க்கை என்னும் கொந்தளிக்கும் கடலிலே, சீறி வரும் விதவிதமான அலைகளின்மீது ஏறி ஆனந்தமாகத் திரிந்துவந்தான். எந்த அலை அவன் காலடியில் அசைந்து கொண்டிருந்ததோ அதே விதமான மற்றோர் அலை அவன் தலைக்கு மேல் கிளம்பிச் செல்லக்கூடும் என்ற எண்ணமே அவனுக்கு உண்டாகவில்லை. வெறும் விளையாட்டுக்காகவே அவன் தண்ணீர் மட்டத்தின் பரப்பின்மேல் மிதந்துகொண்டிருந்தான். ஆனால் அந்த எல்லையற்ற கடல் எத்தனை ஆழமானது என்பதைப் பற்றி அவன் சற்றும் யோசிக்கவே இல்லை. இன்றோ அவன் எதிர்பாராத விதமாக வாழ்க்கைக் கடல் கொந்தளிக்க ஆரம்பித்துவிட்டது. அவன் அந்த அலைகளைச் சமாளித்துக்கொண்டு நீந்துவது மிகவும் கடினமாக இருந்தது. எனவே அவன் மனம் கலக்கம் அடைந்தது.

அதிகாலையில் எழுந்ததும் அவன் முந்திய நாள் இரவு, திட்டம் போட்டபடியே கம்பெனியிலிருந்து 'ரிபேர்' செய்துவந்த மோட்டார் சைகிளை எடுத்துக்கொண்டு அதன்மேல் ஏறிச் சவாரி செய்தபோது அவனுடைய மனக்கலக்கம் எல்லாம் பறந்து போய்விட்டது. சுமார் ஐம்பது அறுபது மைல் வேகத்தில் அதைப் பறக்கவிட்டுக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட 'பட் பட் பட் பட்' என்ற சத்தத்தைக் கேட்பதும், அதிகாலையின் குளிர்ந்த காற்று அவன் முகத்தில் வீசியதும் அவனுக்கு ஆனந்தத்தை அளித்தன.

சில மணி நேரம் இப்படிச் சவாரி செய்ததும் அவன் உடம்பு முழுவதும் முத்து முத்தாக வேர்வை உண்டாயிற்று. அதைத் துடைக்கும் நோக்கத்துடன் அவன் சைகிளை ஒரு மரத்தின் நிழலில் நிறுத்திவிட்டுத் தன்னுடைய துண்டை எடுத்து வேர்வையைத் துடைக்க ஆரம்பித்தான். அவன் தன் மணிக்

கட்டிலுள்ள கடிகாரத்தைப் பார்த்ததும், ''எல்ஸீ எனக்காக வழிபார்த்துக்கொண் டிருப்பாள்'' என்று மனத்திற்குள்ளாகவே சொல்லிக்கொண்டான். அவனுடைய இந்தக் கற்பனையும் பொய்யாகவில்லை.

அவன் குலாபா நீச்சுத் தொட்டிக்குள் நுழைந்தபோது அதன் வாசலிலேயே நின்று எல்ஸீ அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்ததை அவன் கண்டான்.

மோட்டார் ஸைகிளை அவளுடைய கால்களுக்கு அருகில் கொண்டு போனதும் அவன், ''குட்மார்னிங் எல்ஸீ'' என்றான்.

குதிரையின் லகானைப் பிடித்து இழுக்கும் பாவனையுடன் எல்ஸி அந்த ஸைகிளின் கைப்பிடியைப் பிடித்து இழுத்துக்கொண்டே, ''குட்மார்னிங். நான் உனக்கு முதலில் சொல்ல வேண்டியது என்ன என்றால், நீ உன் கைக் கடிகாரத்தை விற்றுவிட்டு வேறு புதிதாக ஒன்று வாங்கவேண்டும் என்பதுதான். அது ஒருவேளை அப்பிரதக்ஷிணமாகச் சுற்றி மணி காட்டுகிறதோ?'' என்றாள்.

''என்னை மன்னிக்கமாட்டாயா எல்ஸி? நான் வரச் சற்று நேரம் ஆகிவிட்டது என்னவோ உண்மைதான். நீ மிகவும் கருணை யுள்ளவள் என்பது எனக்குத் தெரியாதா?''

''போதும்; நீ பேச்சில் வல்லவன் என்பது எனக்கும் தெரியும்.''

''பின் ஏன் வாத விவாதங்களை ஆரம்பிக்கிறாய்? வா, தண்ணீரில் குதித்து நீந்த ஆரம்பிக்கலாம்; ஊம்!'' என்று சொல்லிக்கொண்டே விலாசன் அவள் இடுப்பைச் சுற்றித் தன் நீண்ட கையை வளைத்து அணைத்துக் கொண்டான். உடனே இருவரும் உள்ளே சென்றனர்.

வெளியே இருந்ததைக் காட்டிலும் உள்ளேதான் எத்தனை குளிர்ச்சியாக இருந்தது! கரைகளில் இங்கேயும் அங்கேயும் தண்ணீர் தெறித்திருப்பது தெளித்தது போல் இருந்தது. யுவ யுவதிகள், தண்ணீரின் மேற்பரப்பில் குதித்தபோதும் கையாலும் காலாலும் தண்ணீரை உதைத்துத் தள்ளிக்கொண்டே நீந்திய போதும், 'சல சல' என்ற சத்தம் கிளம்பிய வண்ணம் இருந்தது. நீந்திக்கொண் டிருந்த கோஷ்டிகள் ஒருவரை ஒருவர் கேலியாகப் பேசிக்கொள்ளுவதும் விகடமாகப் பேசிச் சிரிப்பதும் சத்தத்தை உண்டுபண்ணின. சமுத்திரத்தின் கரைகளில் அலைகளால் தண்ணீர் காற்றில் சிறு திவலைகளாய்ப் பரிணமிப்பதுபோல்,

நீந்தியவர்களின் அட்டகாசத்தினுல் தண்ணீர் அலை அலையாக எழும்பிக் காற்றில் திவலைகள் ஏற்பட்டன. உடம்பில் தேய்த்துக்கொண்ட வித விதமான சோப்புகளின் வாசனை மெத்தென்று காற்றில் மிதந்து வந்துகொண் டிருந்தது. சிலர் ஆடைகளைக் களைந்துவிடவும் மற்றும் சிலர் களைந்த ஆடைகளைக் கட்டிக் கொள்ளவும், அருகில் கட்டியிருந்த சிறு சிறு அறைகளுக்குள் போவதும் வருவதுமாக இருந்தனர். சிலர் ஈரமான ஆடைகளுடனேயே கரையில் வெறுமனே உட்கார்ந்திருந்தனர். சிலர் துண்டினுல் உடம்பைத் துவட்டிக்கொண் டிருந்தார்கள். ஒருவன் ஈர ஆடைகளைக் களையாமலே சிகரெட்டை இழுத்துக் கொண்டிருந்தான். ஒரு ஸ்திரீ உலர்ந்த ஆடைகளை அணிந்துகொண்டு கரையில் நின்று, இன்னும் தண்ணீரில் விளையாடிக் கொண்டிருந்த தன் நண்பனை மேலே ஏறும்படி அதட்டிக்கொண் டிருந்தாள். ஆனுல் நண்பனே தண்ணீரை வாரி அவள்மேல் வீசுவதாகப் பயமுறுத்திக்கொண் டிருந்தான்.

இவ்விதக் காட்சிகள் அவ்விடத்தில் சர்வசாதாரணமாக நடக்கக்கூடியன. ஆகையால் விலாசன் எல்ஸி இவர்களுடைய கவனம் அந்தக் காட்சிகளின் மேல் அதிகம் செல்லவில்லை. அவர்கள் முறையே அடுத்தடுத்திருந்த அறைக்குள் பிரவேசித்துத் தங்களுடைய ஆடைகளைக் களைந்துவிட்டு, நீந்துகையில் போட்டுக் கொள்ளும் உடைகளை அணிந்து கொண்டனர்.

விலாசன் எல்ஸியின் கையைப் பலமாகப் பிடித்துக் கொண்டான்; பிறகு இருவரும் தண்ணீரில் குதிப்பதற்காக வைத்திருந்த நீண்ட சிமிட்டிப் பலகைக்குப் போனுர்கள். தண்ணீர் மட்டத்திற்கு நேராக மேலே வைத்திருந்த அந்த இடத்திலிருந்து சேர்ந்தாற்போல் மேலே எழும்பிக் குதித்து இருவரும் தண்ணீரில் விழுந்தனர்.

இருவரும் எத்தனை நேரம் நீந்திக்கொண் டிருந்தாலும் திருப்தி அடைவதாகத் தெரியவில்லை. இவர்களுக்குப் பின்னுல் வந்தவர்கள்கூட நீச்சு விளையாட்டை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி விட்டனர். ஆனுல் இவர்கள் இருவர் மட்டும் அவ்விடத்தை விட்டு அகலுவதாகத் தெரியவில்லை. கொஞ்ச நேரம் இருவரும் விலகி வெவ்வேறு இடங்களில் நீந்துவர்; பிறகு அருகில் நீந்திக்கொண்டே வந்து ஒருவர் இடுப்பில் மற்றொருவர் கையைப் போட்டுக்கொண்டு தண்ணீரில் மிதந்துகொண்டே இருப்பார்கள். இப்படி வெகு நேரம் விளையாடினுர்கள்.

இந்தச் சமயத்தில் எல்ஸியின் சிரித்த முகத்தையும், சிவந்து அழகிய அவளுடைய துடை, கை கால் இவைகளின் வசீகரத்தையும் கண்ட விலாசன் மனத்திற்குள்ளாகவே, ''எத்தனை அழகாய் இருக்கிறாள் இந்தப் பெண்!'' என்று வியந்துகொண்டான்.

டென்னிஸ் விளையாட்டின் காரணமாக, விலாசன் ஒய். எம். ஸீ. ஏ. (கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின்) 'கிளப்'பிற்குச் சென்றிருந்தபோதுதான் முதல் முதலாக அவனுக்கு எல்ஸியின் பழக்கம் உண்டாகி, அவள் நேசமும் ஆரம்பமாயிற்று. நாளடைவில் அந்த நேசம் வளர ஆரம்பித்தது. எகிப்து தேசத்தானான ஓர் ஏழை இங்கிலீஷ்காரனுக்குப் புத்திரியாகப் பிறந்தவள் அவள். சிறு குழந்தையாய் இருக்கையிலேயே அவளுடைய பெற்றோர்கள் உயிர் நீத்தனர். தன் சொந்த முயற்சியாலும் தைரியமுள்ள மனப்பான்மையினாலும் அவள் நன்கு கல்வி கற்றிருந்தாள். இவ்வளவுடன் நிற்காமல் அவள் இந்தியாவுக்கு வந்து நல்ல உத்தியோகத்தையும் சம்பாதித்துக் கொண்டாள். துப்பறியும் போலீஸ் இலாகாவில் (C. I. D.) அவள் சுருக்கெழுத்துக்காரியாகவும் டைப் அடிப்பவளாகவும் அமர்ந்து மாதம் இருநூறு ரூபாய் சம்பாதித்துவந்தாள். பம்பாயில் தன் செலவைக் கூடிய மட்டும் குறைத்துக்கொண்டு, மீதிப் பணத்தை எகிப்து தேசத்தில் உள்ள தன்னுடைய வயோதிகச் சிறு தாய்க்கு அவள் அனுப்பிவந்தாள். எனவே ஓர் அழகிய யுவதி என்பதனால் மட்டும் அன்றி, வாழ்க்கையில் அனுபவ சித்தி அடைந்த ஸ்திரீ என்ற முறையினாலும் விலாசனுக்கு அவளிடம் மதிப்பு ஏற்பட்டது. அதிகம் சொல்லுவானேன். அவளுடைய அழகிய உருவமோ, அவளுடைய அகலமான செவ்விழிகளில் தோன்றும் பயமின்மையோ, கூச்சமின்றி விளையாடும் அவள் தன்மையோ எதுதான் தன்னை அவள் மேல் அத்தனை மோகம் கொள்ளச் செய்தது என்பது விலாசனுக்கே தெரியாது.

இப்போது அவன் அவளுடைய சரீரத்துடன் தன் சரீரத்தையும் ஒட்டிக்கொண்டு ஜலக்கிரீடை செய்யும்போதும் அவனுக்கு அவ்விஷயம் தெரியவில்லை.

எனவே அவன் அவளுடைய அழகிய இடுப்பைச் சுற்றிக் கைகளை வளைத்துக் கட்டியபோதுங்கூட அவன் தன் மனத்திற்குள்ளாகவே, ''எத்தனை அழகாய் இருக்கிறாள் இந்தப் பெண்!'' என்று வியந்துகொண்டான்.

எல்ஸியும் அவனுடைய கட்டுமஸ்தான இடுப்பில் லேசாகக்

கையைச் சுற்றிப் பிடித்திருக்கையில் அவன் அழகில் ஈடுபட்டிருந்தாளோ என்னவோ, யார் கண்டார்கள்? ஆனால் சற்று நேரம் கழித்து அவள் விலாசனை நோக்கி, ''விலாஸ்! ரொம்ப நாட்களாக உன்னிடம் ஒரு சந்தேகம் கேட்கவேண்டும் என்று இருக்கிறேன்'' என்றாள்.

விலாசன் சிரித்த முகத்துடன் அவளை நோக்கிக்கொண்டே, ''ஓஹோ, அப்படியா? இருவருக்கும் மிகவும் சந்தோஷகரமான சந்தேகந்தான் உனக்கு உண்டாகியிருக்கும்?'' என்றான்.

''கேலி செய்துகொண்டிருந்தால் கேட்கவே மாட்டேன்.''

''உன் நெஞ்சின்மேல் கைவைத்துச் சொல்லுகிறேன், உண்மை! கேலி அல்ல இது.''

இப்படிப் பேசிக்கொண்டே விலாசன் எல்ஸியின் நெஞ்சின் மேல் கையை வைத்தான்.

எல்ஸி உடனே தண்ணீரைக் கையால் அடித்து அவன் முகத்தில் வீசினாள். விலாசன் மூச்சுத் திணறியதைக் கண்டு சிரித்துக்கொண்டே, ''இப்போதாவது உன் கேலி விளையாட்டை எல்லாம் நிறுத்துவாயா?'' என்றாள்.

''சரி, சரி; உன் சந்தேகம் என்ன சொல்?''

''நீ ஏன் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை?''

''ஏன்? நான் உன்னை கேட்கவேண்டும் என்று உன் மனத்தில் எண்ணி இருக்கிறாயா என்ன?''

''ஊம்; மறுபடியும் ஆரம்பித்துவிட்டாயா உன் வேடிக்கையை? நிஜமாகச் சொல், உனக்கு இப்பொழுது விவாகம் செய்துகொள்ள இஷ்டமா இல்லையா?''

''கல்யாணம் மட்டும் என்ன, நாலு ஐந்து குஞ்சுகளும் வேண்டும் என்றுகூட ஆசையாக இருக்கிறது.''

''இதோ பார்! மனத்தில் இருப்பதை ஒளிக்காமல் சொல்லி விடவேண்டும்! தெரியுமா? உன்னிடத்தில் அதுதான் கிடையாது — போ!'' என்று சொல்லிக்கொண்டே எல்ஸி தன் கையை அவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டு நீச்சமடித்துக் கொண்டே அவ்விடம் விட்டு அகன்றாள்.

இப்படி அவர்கள் வெகு நேரம் ஜலக்கிரீடை செய்தனர்.

கரை ஏறினதும் உடம்பைத் துவட்டிக்கொண்டு அவர்கள் ஆடைகளை அணிந்தனர். பிறகு மோட்டார் ஸைகிளில் உட்கார்ந்து இருவரும் எல்ஸியின் வீட்டை நோக்கிப் போனார்கள்.

விளையாடிக்கொண்டும் விகடமாய்ப் பேசிக்கொண்டும் அவ்விருவரும் சாப்பிட்டனர். சாப்பாடானதும் விலாசன் எல்ஸியிடம், ''நான் போய் வருகிறேன்'' என்று சொன்ன போது, எல்ஸி அவனைப் பார்த்து, ''இது என்ன? இதற்குள் ளாகவா புறப்பட்டுவிட்டாய்? இன்று ஞாயிற்றுக்கிழமை, எனக்கும் விடுமுறை நாள். நீ ஏன் என்னுடன் குஷியாகக் காலம் கழிக்கக்கூடாது? என்ன மறந்துவிட்டாயோ?'' என்றாள்.

''எனக்கு இன்றுதான் கடைசி விடுமுறை நாள். நான் அவசியம் போதல் வேண்டும்.''

''அப்படி என்றால் அர்த்தம் என்ன? எனக்குப் புரியவே இல்லை! 'இன்றுதான் கடைசி விடுமுறை நாள்' என்றால் என்ன?''

''எல்ஸி, நான் இன்று ஒரு வேலையை ஒப்புக்கொள்ள வேண்டி இருக்கிறது. எனவே இன்று முதல் என் சாவகாசமான விடுமுறை நாட்கள் முடிந்துவிட்டன. எவரிடம் நான் வேலை பார்க்கப் போகிறேனோ அவரை நான் இன்று மாலையில் போய்ச் சந்திக்கவேண்டும். அவரிடம் போவதற்கு முன் இரண்டு மூன்று மணி நேரமாவது நல்ல தூக்கம் போடவேண்டும்.''

''ஏன்! இங்கேயே தூங்கினால்?''

இவ்விதம் சொல்லிக்கொண்டே எல்ஸி அவன் கையைப் பிடித்தாள். அவர்கள் கண்கள் சந்தித்தன.

ஆனாலும் விலாசன் முகத்தைத் திருப்பிக்கொள்ளாமல் அவளிடம், ''நன்றி, ஆனால் வீட்டிற்குப் போய்த் தூங்குவது தான் எனக்குப் பிடித்தமாய் இருக்கும்'' என்றான்.

''நீ சென்றால் என் மனம் நோகும். இங்கேயே இரு.''

''நான் கட்டாயம் போகவேண்டி யிருக்கிறதே என்று வருந்துகிறேன்.''

''சும்மா விளையாடாதே!''

என்ன சொல்லியும் விலாசன் கேட்பவனாக இல்லை. கடைசியில் அவன் வீட்டிற்குப் புறப்பட்டே விட்டான்.

எல்ஸி அவனைப் பார்த்து, ''மறுபடி எப்போது சந்திப் பாய்?'' என்றாள்.

''யார் கண்டார்கள்? வேலை பார்ப்பதற்காக நான் இந்தப் பம்பாயையே விட்டுவிட்டுப் போகவேண்டி இருக்கிறது.''

''ஐயையோ! அப்படியா?''

''சரி! போய் வருகிறேன் எல்ஸி.''

இப்படிச் சொல்லியபோது விலாசன் முகத்தில் களையற்ற

ஒரு புன்சிரிப்புத் தோன்றி மறைந்தது.

அவன் மோட்டார் ஸைகிளின் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்து பிறகு மறைந்துவிட்டது. ஆனாலும் எல்ஸி வாசலில் நின்றுகொண்டே இருந்தாள்.

கொஞ்சநேரம் ஆனதும் அவள் உள்ளே சென்று ஒரு பெரிய நிலைக் கண்ணாடியின் எதிரில் நின்றுகொண்டே தன்னுடைய அழகான சிவந்த முகத்தை வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில் அவள் தனக்குள்ளாகவே, 'எத்தனை அழகாக இருக்கிறான் இந்த விலாசன்!' என்று எண்ணினாள்.

விலாசன் அவ்விடத்தை விட்டு அகன்றதும் வேகமாய் வண்டியைச் செலுத்திக்கொண்டே குலாபாவின் எல்லையைத் தாண்டிக் கோட்டையின் பக்கமாகச் சென்றுகொண் டிருந்தான்.

அன்று விடுமுறை நாள் ஆகையாலும் கடையடைப்பு நாள் ஆகையாலும் அவ்விடங்களில் எப்போதும்போல் ஜன நடமாட்டம் நெருக்கமாக இல்லை. கடைகள் எல்லாம் மூடிக் கிடந்தன. மற்ற நாட்களில் ஒன்றன்பின் ஒன்றாக வரும் மோட்டார், டிராம் வண்டிகளை அன்று ஏனோ காணோம். ரஸ்தாவின் இரு புறங்களிலும் உள்ள பிளாட்பாரங்களில் ஜன நடமாட்டமே அற்றுப்போய்ச் சூன்யமாகக் காணப்பட்டது. ஆனால் நடுவில் வேகமாய் ஒரே ஒரு போலீஸ் கார் மட்டும் ஊதுகுழலை ஒலித்துக்கொண்டே பறந்து சென்றது. பின்னாலேயே ஒரு டிராம் வண்டி வழக்கமாய்ப் போகும் வேகத்தைக் காட்டிலும் சற்று அதிகமான வேகத்துடன், "டண், டண், டண், டண்" என்று மணி அடித்துக்கொண்டே தண்டவாளத்தின் மீது ஓடியது.

அந்த மணிச் சத்தம் அப்போது தேவையே இல்லை. எனினும் ஏனோ அந்த டிராம் டிரைவர் அதை ஆட்டிக் கொண்டே இருந்தான். வேகமாய்ச் செல்வதில் அதிகப் பிரியங்கொண்ட விலாசனுக்கு, அப்போது நிலவிய சூனியத் தன்மை நல்லதாயிற்று. அவன் பெட்ரோல் அடைப்பானைத் திறந்துவிட்டு வேகமாக மோட்டார் ஸைகிளை ஓட்டியவுடன் அது, 'பர்ர்ர்ர்ர்....' என்ற தொனியுடன் காற்றாகப் பறந்தது. உயிரற்ற அந்த யந்திரம் தன் மன இச்சைக்கு ஏற்பச் சொன்னபடி எல்லாம் கேட்பதை நினைக்கையில் விலாசனுக்கு ஆனந்தம் உண்டாயிற்று. அதிகப்படியான வெறி ஏற்பட்டு அவன்

தன் வண்டியின் வேகத்தை இன்னும் அதிகமாக்க எண்ணினான்.

ஆனால் அவன் வண்டியை நிறுத்தவேண்டியதாயிற்று!

காரணம் இந்த இரண்டு மூன்று நிமிஷங்களுக்குள்ளாகவே அவன் போர்பந்தர் பஜார்வரையில் வந்திருந்தான். அங்குள்ள மைதானத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் நெருக்கி அடித்துக் கொண்டு பாதையை மறித்து நின்றிருப்பதைக் கண்டான். விலாசன் வண்டியை நிறுத்தியவுடன் இடைவிடாமல் ஊதுகுழலை ஊதினான்.

ஆனால் அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு ஜீவனாவது ஓர் அங்குலமாவது நகர்ந்தால்தானே! கடவுளின்மேல் ஆணையாக அவர்கள் நகரவே இல்லை. அவர்களுக்கு உயிர்தான் இருந்ததா, இல்லையா?

அந்த எண்ணற்ற ஜனக் கூட்டத்தில் கதர் கட்டாத மனிதனைத் தேடித்தான் கண்டுபிடிக்கவேண்டும். எங்கே நோக்கினாலும் வித விதமான கதர்ச் சட்டைகள், ஜிப்பாக்கள், அங்கவஸ்திரங்கள் இவைகளே தெரிந்தன. தூய வெண்ணிற மான கதர்த் தொப்பிகள்! ஒருவேளை பாற்கடலே திரண்டு வந்து அவ்விடத்தில் இறங்கி, தன்னுடைய அலைகளை எல்லாம் அடக்கி வைத்துக்கொண் டிருக்கிறதோ என்று பார்ப்பவர்கள் பிரமிக்கவேண்டும். விலாசன் ஏறிட்டுப் பார்த்தும் ஜன சமுத்திரத்தின் அக்கரை அவனுக்குப் புலப்படவே இல்லை. வண்ணான் குளம் வரையில் அந்தக் கூட்டம் எட்டியிருக்க வேண்டும்.

அக்கம் பக்கத்தில் உள்ளோரை, விலாசன், அந்தக் கூட்டம் எதற்காகக் கூடியிருக்கிறது என்பதை விசாரித்தான். ஆனால் யாருக்குமே அவனுடன் பேசுவதற்கு அவகாசம் இல்லை போல் தோன்றியது. அங்கிருந்த ஒரு போலீஸ் சார்ஜெண்டைக் கிண்டிக் கிண்டிக் கேட்டு விசாரித்ததில், அன்று நான்கு மணிக்கு எஸ்பிளனேட் மைதானத்தில் மகாத்மா காந்தியின் பிரசங்கம் நடக்கப்போவதாகத் தகவல் கிடைத்தது.

அதற்காகவே இப்போதிலிருந்தே ஜனங்களின் அபாரக் கூட்டம் அங்கே கூடிய வண்ணம் இருக்கிறது. மைதா னத்தில் எத்தனை கொள்ளுமோ அதற்கும் அதிகமான ஜனங்கள் அங்கே நெருக்கி அடித்துக்கொண்டு நின்றிருந்ததால், ஜனங்கள் வரவர முன்னேறி ரோட்டின் நடுவிலும் வந்து கூடிவிட்டனர். சுமார் ஒரு மைல் நீளத்திற்கு ஜனங்கள் நெருக்கமாகக் கூடிச்

சாலையை மறித்திருந்தார்கள். டிராம், மோட்டார், ரிக்ஷா முதலியன அந்த ரோட்டில் பேருக்குக்கூட இல்லை. எல்லோரும் மைதானத்திற்குள்ளே எப்படியாவது பிரவேசித்துவிட ஆசை கொண்டும், முடியாமல் நின்ற இடத்திலேயே நின்றுகொண் டிருந்தனர். ஒரே இடத்தில் நின்றுகொண் டிருப்பது அலுப்பாகத் தோன்றும். ஆகையால் அந்தக் கூட்டத்தில் பலர் இங்கும் அங்கும் நடந்துகொண்டு, "மகாத்மா காந்திக்கு ஜே! பண்டித ஜவாஹர்லாலுக்கு ஜே! சுதந்தரம் நமது பிறப்புரிமை!" என்று கோஷம் இட்ட வண்ணம் இருந்தனர்.

இப்போது ஜனங்கள் ரோட்டிலும் இடங் கிடைக்காததனுல், வீட்டுக் கூரைகளிலும் மாடிச் சுவர்களிலும், அக்கம் பக்கத்தில் உள்ள மரங்களின் மேலும் ஏறி உட்கார்ந் திருந்தனர். உட்கார்ந்த இடத்திலிருந்தே அவர்களும், "ஜே, ஜே" என்று வானம் பிளக்கும்படி கோஷம் இட்டனர். கூட்டத்தின் நடுவில் இங்கும் அங்கும் போலீஸ் அதிகாரிகள் நின்றுகொண் டிருந்தனர். அவர்கள் அங்கே கூடி இருந்த ஜனங்களைக் கட்டுப்படுத்தி அடக்குவதற்காக அங்கே வரவில்லை. ஆனுல் அங்கே நடப்பதற்குச் சாட்சியாக நிற்பதைப்போல் அவர்களுடைய முகபாவனையிலிருந்து தெரிந்தது. அந்த அதிகாரிகளின் கையாலாகாத தன்மையை அந்த ஜனங்கள் அறிந்துதான் இருந்தார்கள். சாதாரண காலங்களிலேயே அந்த அதிகாரிகள் அசக்தர்களாக இருக்க, இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய சக்தியின்மை இரட்டிப்பு மடங்கு ஆனதைக் கண்டதும் ஜனங்களுக்கு ஓர் உத்ஸாகம் ஏற்பட்டு அவர்கள் விஷயமாகப் பகிரங்கக் கேலிக்கூத்து ஆரம்பித்து விடுவதும் இயற்கையாக எதிர்பார்க்க வேண்டியதுதானே! எனவே ரஸ்தாவில் கூடியிருந்த அந்த ஜனங்களில் பலர் சிவப்புக் குல்லாய்க்காரர்களைக் கேலி செய்யவும் ஆரம்பித்துவிட்டனர். அவர்களைப் பார்த்துக் கொண்டே ஜனங்கள் கோஷம் இட்டனர்:

"சிவப்புக் குல்லாய் ஒழிக! அபாயக் குல்லாய் அழிக! சிவப்புக் குல்லாயைக் கழற்றி எறி! காந்திக் குல்லாயை அணி!"

அவ்வளவுடன் நிற்காமல் அந்த ஜனங்களில் சிலர் அக்கம் பக்கத்தில் யாரேனும் தப்பித் தவறி அன்னிய நாட்டு ஆடைகளேயோ தொப்பியையோ அணிந்திருந்தால் அவற்றை அவர்களிடமிருந்து கேட்டு வாங்கியும், சில சந்தர்ப்பங்களில் பலாத்காரமாகப் பிடுங்கியும் எடுத்துக்கொண் டிருந்தார்கள்.

அன்னியத் துணியைக் கொளுத்தி ஒரு 'சொக்கப்பனை' மூட்ட எண்ணிப் பல துணிகளைச் சேகரித்தனர். அந்தச் சொக்கப் பனையை எவ்வளவு பெரிதாக்க முடியுமோ அவ்வளவு பெரியதாகச் செய்து எரிக்க முயன்றுகொண் டிருந்தனர். சுருங்கச் சொன்னால் 1920-21-இல் நடந்த சத்தியாக்கிரகத்தைப் போல் இருந்தது அது. பிரஸ்தாபக் கூட்டம்போல் அந்த நாட்களில் ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும் நடந்துகொண் டிருந்தது.

ஆனால் விலாசனைப் பொறுத்தமட்டில் இதுதான் அவனுக்கு இவ்விஷயத்தில் முதல் அனுபவம். மகாத்மா காந்தி இந்த ஏழை நாட்டின் ஜனங்களை எவ்வளவு தூரம் தட்டி எழுப்பிவிட்டிருக் கிறார் என்பது அவனுக்கு இது வரையில் கொஞ்சமும் தெரியக் காரணமே இல்லை. ஆனால் இந்த எல்லையில்லாத கூட்டத்தைக் கண்ணுற்றதும் அவனுக்கும் இவ்விஷயமாக யோசனை பிறந்தது. "நீங்கள் சொல்லும் மார்க்கத்தில் போக நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம். உங்களைப் பின்பற்ற நாங்கள் தயார்" என்னும் இந்த விஷயத்தை வெளியிடத்தான் லட்சக் கணக்கான ஜனங்கள் வெயிலையும் பாராமல் தெருவில் கூடி, தங்கள் பேச்சி னாலும் செய்கைகளினாலும் புயற்காற்றை உண்டாக்கிக்கொண் டிருந்தனர். அகில தேச மக்களும் விழித்துக்கொண்டு எழுந்தனர் என்பதில் என்ன சந்தேகம்?

வாழ்நாட்களிலேயே கனவில்கூடக் கண்டறியாத ஒரு விஷயத்தை, கற்பனைகூடச் செய்தறியாத ஒரு சம்பவத்தை, மனிதன் எந்தப் பார்வையுடன் நோக்குவானோ அதே பார்வை யுடனும் அதே முகபாவத்துடனும், விலாசன் அந்தக் கூட்டத்தை நோக்கிக்கொண் டிருந்தான்.

இதற்குள் நாலைந்துபேர் அங்கே வந்து அவனிடம், "தயவு செய்து உங்கள் தொப்பியைத் தாருங்கள்; கொடுக்கிறீர்களா?" என்று கேட்டனர்.

விலாசன் இடைமறித்து, "தொப்பியா? எதற்கு?" என்றான்.

"அது அன்னிய நாட்டில் செய்யப்பட்டது."

"ஆனால்?"

"நீங்கள் அதைச் சொக்கப்பனையில் போடவேண்டும்."

"சொக்கப்பனையா? எங்கே?"

"அதோ பாருங்கள் அங்கே; ஊம், கொடுங்கள் தொப்பியை!"

இப்படிக் கேட்டுக்கொண் டிருந்த பொழுதே ஒரு போக்கிரி விலாசனின் தொப்பியின் மேல் கையை வைத்தேவிட்டான்!

இதைக் கண்டதும் பல பேர் அவனைச் சுற்றிலும் கூடிக் கொண்டு, ''தொப்பியைத் தொலே; கோட்டைக் களை; ஊம், எடு கோட்டை, கழற்று தொப்பியை!'' என்று கோஷம் இட்டனர்.

விலாசன் அறியாமையினுல் அவர்களுள் சிலரை அடிக்க முனைந்து செம்மையாக வாங்கிக் கட்டிக்கொண் டிருப்பான். ஆனுல் அதற்குள்ளாக அவன் பின்னுல் நின்றுகொண் டிருந்த ஒரு சார்ஜெண்ட் அவ்விடம் வந்தார்.

அவனைச் சுற்றிலும் உள்ள ஜனங்களைச் சற்று விலக்கிவிட்டுக் கொண்டே அவர் விலாசனை நோக்கிக் கெஞ்சும் குரலில், ''தயவு செய்து நீங்கள் இவ்விடம் விட்டுப் போய்விடுங்கள்; நீங்கள் எங்கே போகவேண்டும்?'' என்று கேட்டார்.

''நேபியர் கடற்கரைச் சாலைக்குப் போகவேண்டும். நான் போவேன் அல்லது போகாமல் இவ்விடமே நிற்பேன். இந்த ஜனங்கள் எதற்காக என் தொப்பியை—''

மறுபடியும் கெஞ்சும் பாவனையில் சார்ஜெண்ட், ''நான் அதற்குக் காரணம் சொல்லவும் முடியாது; நீங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் முடியாது; தயவு செய்து நீங்கள், எனக்காக, இவ்விடம் விட்டுக் குவீன்ஸ் ரோட் வழியாகப் போய்விடுங்கள்!'' என்றுன்.

விலாசன் மோட்டார் சைகிளைத் திருப்பி அதன்மேல் ஏறிச் சவாரி செய்யலாஞன்.

''காந்தி மகாராஜூக்கு ஜே!'' என்ற சத்தம் வானைப் பிளந்தது. விலாசன் காதிற்கு அது கொஞ்சம் கொஞ்ச மாகக் குறைந்துகொண்டே வந்து பிறகு மறைந்து விட்டது.

அகலமான தெருவிற்குள் பிரவேசித்ததும் அவன் வேகமாய் வண்டியை விடலாஞன். அந்தப் பாதையில் ஜன நடமாட்டம் அதிகம் இல்லை. ஆனுல் சிறிது நேரத்திற்கு முன்பு அவன் கண் ணுற்ற அந்த அதிசயமான கூட்டம் அவனுடைய மனக்கண் முன்பே நின்றுகொண் டிருந்தது. ரோட்டின் இடது புறத்தில் கடற்கரை தெரிந்துகொண் டிருந்தது. 'ஆ! இந்தக் கடல்தான் எத்தனை பெரிய பெரிய கப்பல்களை எல்லாம் தன்னுடைய ஆழமான வயிற்றிற்கு இரையாக்கிக்கொண் டிருக்கிறது. நாற்பது கோடி பாரதவாசிகளும் ஒன்று திரண்டு சமுத்திரம்

போல் கொந்தளித்தால் அன்னிய நாட்டு ஆடைகளை மட்டுமா, அந்த நாட்டையே 'அபேஸ்' செய்து ஆழத்தில் அமுக்கிவிடலாமே! ஆனால் அவ்வித ஒற்றுமை —?'

ஆனால் பாரத சமுதாயம் என்னும் இந்தப் பிரசண்ட சமுத்திரம் எதைத் தனக்குள் அமுக்கிக்கொள்ள இப்படிக் கொந்தளிக்கிறது என்னும் விஷயம் அவன் கற்பனைக்கு எட்டவே இல்லை.

இன்று வரையில் அவன் கனவில்கூட நினைக்காத ஒரு பிரச்னை அவன் மனத்தில் உதித்தது; யோசனை செய்யவேண்டிய அவசியம் எட்டிப் பார்த்துக்கொண் டிருந்தது.

தலையை ஒரு தரம் அசைத்துவிட்டு மோட்டார் ஸைகிளை முடுக்கி வேகமாய்ப் பறக்கலானான்.

அன்று மகாத்மா காந்தியடிகளின் பிரசங்கம் முடிந்ததும் அந்த ஜன சமுத்திரத்தின் கொந்தளிப்பு அதிகம் ஆயிற்றே ஒழியக் குறைந்தபாடில்லை. தெருவில் போகும் மனிதர்கள் தம் துணிகளை அவிழ்த்துப் போட்டுவிட்டு ஓடும் நிலைமை ஏற்பட்டு விட்டது. அன்னியச் சாமான்கள் விற்கும் கடைகளின் மேல் கற்கள் மழைபோல் பொழிந்தன. எங்கே கண்டாலும் சிறு சிறு ஹோம குண்டங்கள் எரிய ஆரம்பித்தன. துணிகளைப்போலவே எல்லா அன்னிய நாட்டுப் பொருள்களையும் நெருப்பில் போட்டனர். இந்தக் கலாட்டாக்களின் காரணமாகச் சைனு பஜார் முதல் கிர்காம் கடைத்தெரு வரையில் கடைகள் மூடியே கிடந்தன. மோட்டார்களின் மீதும் டிராம் வண்டிகளின் மீதும் கல்மழை பெய்ய ஆரம்பித்தது. எவன் கொஞ்சம் எதிர்க்க முயன்றானோ அவன் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு ஓடத் தவறவில்லை. சிலர் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் நோக்கத்துடன் ஓடிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் ஓடும் திசையிலிருந்து எதிர்ப் பக்கமாக வேறு சிலர் தைரியத்துடன் கூட்டத்தில் கலந்துகொள்ளும் நோக்கத்துடன் வந்தனர். ஏதோ ஒரு விதமானதும் அசாதாரணமானதும் ஆன ஓர் உணர்ச்சி மக்களிடையே பிறந்திருந்தது.

பலாத்காரத்தின் கெடுதிகளை எடுத்து விளக்கி விட்டு மகாத்மா இப்போதுதான் திரும்பி இருந்தார். இதற்குள்ளாகவே பெரிய பெரிய தலைவர்கள்கூடப் பலாத்காரத்தை உபயோகித்துக் கொள்ளத் தயங்கவில்லை. அவர்களின் கீழ் வெறிகொண்டு அலையும் தொண்டர்கள் தங்களுடைய பலாத்காரத்தையும்

அசட்டுத்தனமான உத்ஸாகத்தின் ஜ்வாலையையும் எங்கும் பரப்பிக்கொண் டிருந்தார்கள்!

விலாசனுக்கு ஆரம்பம் முதற்கொண்டே இந்த மாதிரி விஷயங்களில் பற்றுதல் ஏற்பட்டதில்லை.

மறுநாள் காலையில் விலாசன் படுக்கையை விட்டு எழுந்ததும் அன்று மத்தியான்ன எக்ஸ்பிரஸ் வண்டியில் லோனுவலாவிற்குப் புறப்பட்டுப் போகவேண்டும் என்ற எண்ணம் ஒன்றேதான் உதித்தது.

முந்திய நாள் மாலையில்தான் அவன் மானேஜிங் டைரெக்டரைக் கண்டு வேலையையும் ஒப்புக்கொண் டிருந்தான். இத்துடன் நிற்காமல், லோனுவலாவில் கூடி இருக்கும் கம்பெனியின் 'காம்பி'ல் வேலை பார்ப்பதற்காக உடனடியாக அங்கே புறப்பட்டுச் செல்லவேண்டும் என்றும் அவன் ஆக்ஞாபிக்கப்பட் டிருந்தான்.

ஆகையால் உத்தரவில் கையெழுத்துப் போட்டதிலிருந்து அவன் லோனுவலாவிற்குப் புறப்படும் முயற்சியிலேயே ஈடுபட் டிருந்தான்.

காலையில் எழுந்ததும் செய்ய வேண்டிய பாக்கி வேலைகளைப் பற்றி யோசிக்கலானுன்.

மத்தியான்னம் ஸ்டேஷனுக்குப் போகும் வரையில் அவன் மூட்டை முடிச்சுகள் கட்டிய வண்ணமாகவே இருந்தான். ரெயில்வே ஸ்டேஷனை அடைந்த பிறகுங்கூட விலாசன் தாதா ஸாஹிபிடமும் சுதேஷ்ணு பாயிடமும் அதைக் கொண்டுவர மறந்து போய்விட்டேன், இதைக் கொண்டுவர மறந்து போய் விட்டேன் என்று சொல்லத் தவறவில்லை.

அவனை அனுப்புவதற்காக ஸ்டேஷனுக்குச் சுநேத்ராவும் கல்பனுபாயியும் வந்திருந்தார்கள். ஏற்கனவே ஊரில் தங்கி இருக்கையிலேயே எட்டாப் பழமாக இருந்த விலாசன் இப்போது வேறு இடத்துக்கும் போய்விட்டானுகில் அவனைச் சந்திக்கக்கூட முடியாது என்ற விகாரத்தினுல் அந்தப் பெண்களின் முகங்கள் வாடியிருந்தன. ஒருவருக்கு ஒருவர் இயற்கையிலேயே பொறுமை கொண்டிருந்த அந்த இரண்டு பெண்களும் வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் இடையிடையே ஏதாவது பேசிக்கொள்ளாமலும் இருக்கவில்லை.

சுநேத்ராவின் தகப்பனுரும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். அவர் பிளாட்பாரத்தின் மேல் இங்கும் அங்கும் உலாவிக்

கொண்டே சமயம் வரும்போதெல்லாம் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகத்தின் அர்த்தமின்மையை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லித் தம் கொள்கையை ஸ்தாபித்துக்கொண்டார்.

நடுவில் அவர் விலாசனை நோக்கி, ''இதோ பாருங்கள் கிரானிகிள்; இதோ டைம்ஸ்; இதோ வாரப்பதிப்புகள்; இன்று வந்த 'கேசரி' ஒன்று வேண்டுமானால் வாங்குங்களேன். இந்த வாரம் வந்த 'கேசரி'யைப் பார்த்தீர்களா? அதென்ன கையில் வைத்திருக்கிறீர்களே? இங்கிலீஷ் நாவலா? இதென்ன கூத்தாக இருக்கிறது! தேசத்தில் எங்கும் நெருப்புப் பற்றி எரிந்துகொண்டிருக்கிறபோது நீங்கள் சாவகாசமாக நாவல் படிக்க ஆரம்பிக்கிறீர்கள்! போதும் போதும், நீங்கள் நாவல் படித்தது. இன்றைக்கு வந்த 'ஹிந்து' அகப்பட்டால் கொண்டு வருகிறேன். 'ஹிந்து'வைப்போன்ற சிறந்த பத்திரிகை வேறு கிடையாதையா. 'கேசரி' பத்திரிகை வர வர மோசமாகிவிட்டது. நான் பணம் கொடுக்கிறேன்; நீங்கள் கொடுக்க வேண்டாம். இந்த விஷயத்தைக் கட்டாயம் படிக்கவேண்டும் ஸார். இதை வாசிக்காமல் இருந்து விடாதீர்கள். நீங்கள் இனிமேல் தொடர்ச்சியாகப் 'பேபர்' படிக்கவேண்டும்'' என்று பேசிக்கொண்டே போனார்.

ஆனால் விலாசன் அவர் பேசினதைக் காதில்கூட வாங்கவில்லை. அவனுடைய 'சிகரெட் கேஸ்' அவனுக்கு அகப்படவில்லை. ஆகையால் அவன் கோட்டுப் பைகளில் தேடிக்கொண்டிருந்தான். தேடிக்கொண்டே அவன் மரியாதைக்காகச் சுநேத்ராவின் தகப்பனார் சொல்லுவதற்கெல்லாம் ''ஆமாம்'' என்று சொல்லிக்கொண்டே இருந்தான்.

கடைசியில் 'கேஸ்' வீட்டிலேயே தங்கிவிட்டதை ஞாபகப் படுத்திக் கொண்டதும் அவன் வண்டியிலிருந்து கீழே இறங்கிச் சுநேத்ராவை நோக்கி, ''நான் போய்ச் சிகரெட் வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறேன்'' என்றான்.

அவன் வேகமாய் நடந்து பிளாட்பாரத்தின் மூலையில் இருந்த சிகரெட் கடைக்குப் போனான்.

ஒரு 'பாக்கெட்' சிகரெட் வாங்கினதும் அதில் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொள்ளுவதற்காக நெருப்புக் குச்சியைக் கிழித்தான். அதற்குள்ளாக அவன் பின்னாலிருந்து ஒரு குரல், ''ஓஹோ! விலாசனா?'' என்று கேட்டது.

விலாசன் உடனே திரும்பிப் பார்த்து, ''ஹலோ, சரத் சந்திரனா?'' என்றான்.

''எங்கே புறப்பட்டாய்? இதே வண்டியில்தான் போகிருயா?''

''ஆமாம்; நான் லோனுவலாவிற்குப் போகப்போகிறேன்; நீயும் இந்த வண்டியில்தான் வருகிருயா?''

''இல்லை இல்லை; நான் இப்போதுதான் இங்கே வந்து இறங்குகிறேன். ஒருவரைக் கொண்டுபோய் ஊரில் விடவேண்டி இருந்தது; ஆசாவை.''

''ஆசாவையா?''

''ஆம். லோனுவலாவிற்குப் பக்கத்தில் தளவலா என்ற இடத்தில்தான் அவளை விடப்போனேன்.''

''அப்படியா; சரி. போய்விட்டு வருகிருயா?''

இப்படிச் சொல்லிக்கொண்டே விலாசன் சரத்சந்திரன் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டுத் தன்னுடைய வண்டி இருக்கும் இடத்திற்குத் திரும்பினுன். பிறகு சுநேத்ரா, கல்பனு பாய், தன்னுடைய பெற்ருேர்கள், சுநேத்ராவின் தகப்பனுர், இவர்கள் எல்லோருடனும் சிரித்த முகத்துடன் பேசிக்கொண்டே இருந்தாலும் மனத்திற்குள்ளாகவே யோசிக்கலானுன்: 'என்ன, இந்த இரண்டு மூன்று நாட்களாக இந்தப் பேரில் இத்தனை கவர்ச்சி எனக்கு ஏற்பட்டிருக்கிறது? ஆசா? யாராகத்தான் இருக்க முடியும் அந்தப் பெண்?'

வண்டி புறப்பட்டுப் போன பிறகுங்கூட வியப்பையும் மனக் கலக்கத்தையும் விளைக்கக் கூடிய இந்த விஷயம் மட்டும் அவனுடைய மனத்தை விட்டு அகலவே இல்லை.

சுநேத்ராவின் தகப்பனுர் அவனுக்கு வாங்கிக் கொடுத்த பத்திரிகைகளின் தாள்கள் காற்றில் பறந்து ஒன்றன் பின் ஒன்ருக வெளியே விழுந்துங்கூட விலாசனுக்கு அவற்றின்மீது கவனம் செல்லவே இல்லை.

அவன் மனத்திற்குள்ளாகவே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தான்: 'ஆசா? அவள் யார்?' என்று.

# அத்தியாயம் 5

1921-ஆம் வருஷம் பமன்ஜி இரானி என்னும் பெயருடைய ஒரு பார்ஸி கனவான் லோனுவலாவில் ஸ்டேஷன் மாஸ்டர் வேலை பார்த்து வந்தார். அவர் ஐம்பது வயதானவர். ஆயினும், குஷியான பேச்சிலும் சரீரத்தின் லாகவத்திலும் ஒரு சிறு யுவனைப் போலவே இருந்தார். விளையாட்டுக்களில் இச்சை கொண்டவராகவும் பேச்சில் மிக வல்லவராகவும் இருந்ததனால் அவருக்குக் கீழ் வேலை பார்க்கும் ரெயில்வே சிப்பந்திகள் மட்டும் அல்ல, அவ்வூரில் உள்ளோர் அனைவருமே அவரை மிகவும் நேசித்தனர். அவர், பார்வைக்கு உயரமாகவும் கம்பீரமாகவும் இருந்தார். குறிப்பிட்ட நேரத்தில் வரும் ரெயில் வண்டியை எதிர்நோக்கி அவர் ஆபீஸ் அறையின் வாசலில் நின்றுகொண்டிருக்கும் போதெல்லாம் வண்டியிலிருந்து ஏறி இறங்கும் ஜனங்களுக்கு அவருடைய கம்பீரமான தோற்றமும் கண்டிப்பான பேச்சும் நன்கு மனத்தில் பதிந்துவிடுவது வழக்கம்.

ஆனால் வேலை பார்க்கும் நேரம் தவிர பிற நேரங்களில் அவரைக் காண்போரெல்லாம், தாங்கள் அவரிடம் முன்பு கொண்ட எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டியதுதான். ஊரில் பமன்ஜி மாஸ்டரை அறியாதார் கிடையாது. தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்களும் கிட்டி அடிக்கும் பையன்களும் பட்டம் பறக்கவிட்டு வேடிக்கை பார்க்கும் தோழர்களுங்கூட அவரைக் கண்டதும், "ஸார், ஸலாம்!" என்று சொல்லி அவருடைய புன்முறுவலைப் பெறுமல் இருக்க மாட்டார்கள். அவர் தம் வேலை நேரம் போக மற்ற நேரத்தில் எங்கேதான் இருப்பார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. எல்லாவித மனிதர்களுடனும் அவர் தாராளமாகப் பழகி வந்தார். லோனுவலாவிலேயே வசித்துக்கொண்டிருந்தவர்களும் தாற்காலிகமாக அங்கே தங்குவதற்காக வந்தவர்களும் ஆன பெரிய மனிதர்களுடைய பரிசயமும் பமன்ஜி மாஸ்டருக்கு எளிதில் கிடைத்தது. அதைப் போலவே ஏழைக் குடியானவர்

களின் பழக்கமும் அவருக்கு உண்டு. குடியானவர்கள் கூடி ஏதாவது திருவிழாவோ திரௌபதி அம்மன் பூஜையோ செய்தார்களானால் இரானிஜியை அங்கே பார்க்கலாம். எல்லா விதமான கட்சியார்களும் பமன்ஜி இரானி தங்களுடைய சொந்த ஆள் என்றே எண்ணியிருந்தனர். அவர் பங்களா வாசலில் நின்றுகொண் டிருக்கும் போதெல்லாம் தெருவில் போகும் ஒவ்வொரு மனிதனும் அவருக்கு ஒரு சலாம் வைக்காமல் போக மாட்டான். அவர் வீட்டுக்கு முன் காணப்படாவிட்டால், அங்கே தோட்டத்தில் வேலை செய்துகொண் டிருக்கும் தோட்டக் காரனைக் கூப்பிட்டு, ''என்ன மாலி! மாஸ்டர் எங்கே? ஸ்டேஷனுக்குப் போய்விட்டாரா?'' என்றாவது ஜனங்கள் கேட்டுத்தான் போவது வழக்கம்.

கட்டுமஸ்தாகத் திரியும் இளைஞர்கள், அந்த ரோட்டின் வழியாகப் போகும்போது தங்கள் நடையைச் சற்று மெதுவாக்கிக்கொண்டு, தோட்டக்காரன் மூலம் மாஸ்டர் வீட்டில் இல்லை என்று அறிந்துங்கூட, மறுபடியும் அவர் பங்களாவின் முன்னாலேயே சற்று நின்றுவிட்டுப் போவது சர்வ சாதாரணமான காட்சி. இதற்குக் காரணம், மாஸ்டரைக் காணவேண்டும் என்ற எண்ணந்தான் என்று சொல்லிவிட முடியாது.

பமன்ஜி இரானிக்கு அழகிய நாகரிக மகள் ஒருத்தி இருந்தாள். அவளுடைய உண்மைப் பெயர் என்னவோ யார் கண்டார்கள். அவளுடைய தகப்பனார் அவளை, ''ஜானி'' என்று கூப்பிடுவதை மட்டும் எல்லோரும் நன்கு அறிவர். அந்தப் பெயராலேயே மற்றையோரும் அவளைக் கூப்பிடுவது சகஜம் ஆகி விட்டது. அவள் அவருடைய மகள் என்ற முறையில் மாஸ்டரின் விளையாட்டுத் தன்மையையும் தாராளமாகப் பழகும் சுபாவத்தையும் எவ்வளவிற்குப் பெற்றிருந்தாளோ அவ்வளவிற்கு ஆகிருதியிலும் அவரை ஒத்திருந்தாள். மாஸ்டரைப் போலவே அவளும் அந்த ஊர் முழுவதற்கும் பிரியமானவளாகவே இருந்தாள். அவள் வெளியே புறப்பட்டால் சிறு பையன்கள் அவளிடம் ஓடி வந்து, 'சாக்லெட்' வாங்கித் தின்னாமல் இருப்பதில்லை. அவள் கடைத் தெருவின் வழியாக நடந்துபோனால் கடைக்காரர்களுக்கு அவள் தங்களுடைய கடையில் எதையாவது வாங்குவதற்காக வாவது வரமாட்டாளா, கேவலம் விலைவாசிகள் கேட்கவாவது வந்து நுழையக் கூடாதா என்று தோன்றாமல் இருக்காது. அவளைக் கண்டால் இளைஞர்களுக்கு ஏக்கம் உண்டாகாமல்

இராது. 'எங்கேயாவது ஒரு நல்ல இடம் பார்த்து ஜானியைத் தள்ளாமல் இருப்பது இனிமேல் நல்லதல்ல' என்று அவ்வூர்க் கிழவிகள் பேசத் தவறுவதில்லை.

கல்யாணத்தைப் பற்றிய நினைவு அவளுக்கு அடிக்கடி உண்டாயிற்ரே, அதைப்பற்றியே அவள் சற்றும் எண்ணவே இல்லையோ, யார் கண்டார்கள்? ஆனால் வெளிக்கு மட்டும் பார்க்கும் ஆசாமிகளுக்கு இரண்டே விஷயங்கள்தாம் ஜானியின் வாழ்க்கையில் பிரதானமாக இருந்தன என்று தோன்றும். ஒன்று டென்னிஸ் விளையாடுவது, மற்ரொன்று கடிதங்கள் எழுதுவது. டென்னிஸ் விளையாடும் பொருட்டு அவள் வெளியே சென்ரு ளானுல் வீட்டிற்குத் திரும்பி வரும் நேரம் எப்போது என்று சொல்ல முடியாது. அதைப் போலவே ஒரு தரம் அவள், தன் அறைக்குள் சென்று கடிதம் எழுத உட்கார்ந்தாளானுல் எப்போது எழுந்து வெளியே வருவாள் என்றும் யாருமே சொல்ல முடியாது. இந்த நேரங்களில் எந்த மகாராஜன்தான் வந்து அவளைக் கூப்பிட்டாலும் அவள் அசைந்து கொடுக்கவே மாட்டாள். பமன்ஜி மாஸ்டருக்கு அவளுடைய இந்த அடம் நன்கு தெரியும். ஆகையால் அவர் அவளை ஒரு குரல் கூப்பிட்டுவிட்டு, வராமல் போனுல் பேசாமல் தன் வேலையைக் கவனித்துவிட்டுப் போய் விடுவார்.

இன்றும் அவ்விதந்தான் நடந்தது.

ஸ்டேஷனுக்குப் போவதற்கு முன்பு, சாயங்காலச் சிற்றுண்டி நேரத்தில், அவர், தம் மகளை வழக்கம்போல் உரத்த குரலில் கூப்பிட்டார்.

"ஜானீ! 'டிபன்' சாப்பிட வருகிருயா?"

ஜானி உள்ளுக்குள் இருந்தபடியே மறுமொழி கூறினுள்:

"அப்பா! நான் கடிதம் எழுதிக்கொண் டிருக்கிறேன்."

அதற்குப் பிறகு மாஸ்டர் அவளைக் கூப்பிடவே இல்லை.

அவர் தனியாக உட்கார்ந்து டிபனைச் சாப்பிட்டுவிட்டு ஸ்டேஷனை நோக்கி நடக்கலானுர்.

அவர் போனதுகூட ஜானிக்குத் தெரியாது.

அவள் தன்னுடைய அறையில் உட்கார்ந்து கடிதம் எழுதுவதில் புதைந்தே கிடந்தாள்.

கடிதத்தை ஆரம்பித்த தாள் கீழே கிடந்தது. அவள் முதல் பக்கத்தை முடித்துவிட்டு இரண்டாம் பக்கத்திற்கு வந்திருந்தாள். குப்புறக் கவிழ்ந்துகிடந்த முதல் பக்கத்தில்

அவள் யாருக்கு அந்தக் கடிதம் எழுதுகிருளோ அது குறிக்கப் பட்டிருந்தது. ஆனல் அது நமக்குத் தெரியாமல் கவிழ்க்கப்பட்டிருந்ததாகையால் அதை விட்டுவிட வேண்டியதே! அவள் முதல் பக்கத்தை முடித்துவிட்டு இரண்டாம் பக்கத்தைத் தொடங்கியபோதே அவள் இதையும் முடித்துவிட்டு மூன்றும் பக்கத்தையும் நிரப்பத் தயங்க மாட்டாள் என்பது நன்கு வெளியாயிற்று. கடிதத்தைச் சீக்கிரம் முடிக்கும் எண்ணத்திற்கு மாருக எப்படியேனும் அதை வளர்த்திக்கொண்டே போக அவள் ஆசைப்பட்டாள் என்பதை அவளுடைய முகபாவனையே சொல்லிற்று!

முதல் பக்கத்தின் முடிவில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு நீண்ட வாக்கியத்தின் சில சொற்களை இரண்டாம் பக்கத்தின் ஆரம்பத்தில் எழுதும் முன்பு ஜானி சற்றுத் தயங்கினுள். வலது கையில் பௌண்டன் பேனவைப் பிடித்துக்கொண்டு இடது கையின் இரண்டு விரல்களைக் கன்னத்தில் வைத்த வண்ணம் குறிச்சியின்மேல் சற்றுச் சாய்ந்துகொண்டு, எதிரில் உள்ள ஜன்னலின் வழியாகத் தெரியும் நீல வானத்தையும் மற்றும் மர உச்சிகளையும் நோக்கிக்கொண்டே இருந்தாள். இனிமேல் எந்த விதத்தில் விஷயங்களை வளர்த்திக்கொண்டே போகலாம் என்று அவள் எண்ணியிருக்கவேண்டும். அவள் அப்படி யோசனை செய்து கொண்டே உட்கார்ந்திருந்தபோது அவள் தலையைச் சுற்றிலும் ஒரு வண்டு பறந்து சுற்றிச் சுற்றி வந்து பிறகு யாரிடமோ தூது சொல்லப் புறப்பட்டுப் போவதுபோல் ஜன்னல் வழியாகப் பறந்து சென்றதுகூட அவளுடைய லக்ஷ்யத்திற்கு வரவில்லை. ஆனல் 'சட்' டென்று அவளுக்கு ஏதோ ஒரு வழி தோன்றியது போல், பேனவைப் பிடித்து மறுபடியும் கடிதத்தை எழுதத் தொடங்கினுள். அது ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருப்பினும் வாசகர் களின் சௌகரியத்தை முன்னிட்டுத் தமிழில் தருகிறேன்:

''பத்துப் பன்னிரண்டு நாட்களுக்கு முன்பு இங்கே லோனவலாவிற்கு ஒரு விருந்தாளி வந்திருந்தார். அவர் பெயர் விலாசனும். அவர் யார் என்று உனக்குத் தெரியுமா? பம்பாயின் முதல் தர டென்னிஸ் நிபுணர் விலாசனைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிருயா? அதே விலாசன்தாம் இவர். இங்கே வேலை பார்க்கும் உத்தேசமாகத்தான் வந்திருக்கிருர் என்று கேள்வி. ஆனல் உண்மையாகப் பார்க்கப் போனல் அவர் வேலை பார்க்கும் உத்தேசமாக வரவில்லை என்றே தோன்றுகிறது. நாங்கள் எல்லோரும் அவரை

உத்தியோகத்தில் கவனம் செலுத்தும்படி விடுவதும் கிடையாது. தினமும் காலையிலும் மாலையிலும் அவரை நாங்கள் டென்னிஸ் கோர்ட்டிற்கு இழுத்துக்கொண்டு வந்து இரண்டு மூன்று மணி நேரம் விளையாடச் செய்கிறோம். அவர் இன்னும் கொஞ்ச நாட்கள் இங்கேயே தங்க நேருமானால் நானும் என் விளையாட்டின் சாமர்த்தியத்தை இன்னும் கொஞ்சம் அதிகம் ஆக்கிக்கொள்வேன் என்பது நிச்சயம். டென்னிஸ் விளையாடுவதைப் போலவே மோட்டார் ஓட்டுவதிலும் இந்த விலாசன் அதிமேதாவியாக விளங்குகிறார். எத்தனைதான் வேகமாய் மோட்டார் போனாலுங் கூட நான் பயப்படவே மாட்டேன் என்று எண்ணி இருந்தேன். ஆனால் நேற்று என் எண்ணம் பொய் என்பது தெரிந்துவிட்டது. நானும் அவரும் மட்டுமே இருந்தோம் அவருடைய வண்டியில். லோனாவலாவிலிருந்து கண்டாலாவிற்குப் போகும் ரோட்டில் ஒரு மிஷன் பள்ளிக்கூடம் இருக்கிறதே. உனக்குத் தெரியுமா? அதன் அருகில் பெரிய மேடு ஒன்று இருக்கிறது, அல்லவா? அந்த மேட்டின்மேல் ஏறுகையில் அவர் வண்டியை அறுபது மைல் வேகத்தில் ஓட்டினார். அப்போது நான் மிகவும் பயந்துவிட்டேன். ஆனால் நான் என் பயத்தை வெளியே காட்டிக்கொள்ளவில்லை. மேட்டிலிருந்து கீழே இறங்கும்பொழுது, வண்டி வர்ணிக்க முடியாத வேகத்தில் நழுவிக்கொண்டிருந்தது. எதிரில் ஒரு வாடகை மோட்டார் வந்துகொண்டிருந்ததை நான் கண்டபோது எனக்கு உயிரே போய்விட்டது. அபாயம் தவிர்க்க முடியாது என்றே எனக்குப் பட்டது. நீ நம்பினால் நம்பு, நம்பாவிட்டால் போ. உனக்கு நான் சொல்வது பொய் என்று பட்டாலும் படட்டும். ஏதோ படீர் என்ற சத்தம் ஒன்று என் காதுகளில் விழுந்தது. ஜனங்கள் "ஓஹோ" என்று கத்தினதைப் போலவும் நான் கேட்டேன். என் தலையே வெடித்து ஆயிரம் சுக்கல்களாகப் போய்விட்டது போன்ற உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. நான் கண்களை இறுக மூடிக் கொண்டு விட்டேன். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியவே தெரியாது. எனக்குப் பிரக்ஞை வந்து மறுபடியும் பார்த்தபோது எங்கள் மோட்டார் ஒரு பழுதும் அடையாமல் நிற்பதைக் கண்டேன். என் தலை விலாசனின் விரிந்த மார்பின் மேல் சாய்ந்திருந்தது. அவர் சிரித்துக்கொண்டே, "ரொம்பப் பயப்பட்டு விட்டாய்போல இருக்கிறது?" என்றார். நான், "இல்லை, ஆனால் இனிமேல் செத்தாலும் உங்களுடன்

மோட்டாரில் வருவது முடியாத காரியம்'' என்றேன்.

உண்மையில் நான் அப்புறம் அவருடன் காரில் போகவே இல்லை. காரணம், மோட்டாரில் போகும் பயத்தினால் அன்று. ஆனால் அவருடன் பழகிக்கொண்டிருந்தால் என் மனம் என்னைக் கேவல வழிக்கு இழுத்துச் சென்றாலும் செல்லுமோ என்ற பயத்தினால்தான். நான் அவருடன் இப்போது அதிகமாகப் பழகுவதும் இல்லை. உன்னிடத்தில் நான் ஏன் ஒளிவு மறைவு செய்யவேண்டும்? நான் சொல்லும் இந்த விஷயத்தின் அனுபவ ஞானம் உனக்குக் கிடையாது. உனக்கும் அவ்விதம் உண்டாக வேண்டும் என்றால் நீ விலாசனைப் போன்ற ஓர் அழகிய வாலிபனைச் சிநேகம் பிடித்திருக்க வேண்டும். ஆனால் விலாசனைப் போன்ற அழகிய வாலிபன் உனக்கு இந்த ஜகத்திலேயே வேறு எங்கும் அகப்பட மாட்டான். விலாசனை நீ ஒரு தரமாவது சந்தித்துத் தான் ஆகவேண்டும்.

அவர் எனக்குமட்டுந்தான் நிரம்பப் பிடிக்கிறார் என்பதல்ல. இங்கே உள்ள எல்லோருக்குமே அவர் சர்க்கரைக் கட்டிதான். என் தகப்பனாருக்கு அவரிடம் அபார மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் என் தகப்பனாரைப் போலவே அவருக்கும் வேட்டையாடுவதில் அதிகப் பிரியம் இருக்கிறது. சென்ற சனிக்கிழமை இரவில் இந்த இரண்டுபேருமாக இங்குள்ள காட்டிற்குச் சென்று ஒரு பெரிய சிறுத்தையைச் சுட்டுக் கொண்டு வந்திருக்கின்றனர். மறுநாள் இந்த ஊர் முழுவதும் இதைப்பற்றியே பேச்சாக இருந்தது. விலாசனும், அப்பாவுமாகச் சேர்ந்து வேட்டையைப்பற்றிப் பேச உட்கார்ந்தார்களானால் வாயில் ஈ நுழைவதுகூடத் தெரியாது. முந்தின நாள் ஒன்றில் அவர்கள் இருவரும் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் புனாவிலிருந்து இங்கே வரும் பாஸன்ஜர் வண்டியின் நேரத்திற்கு ஸ்டேஷனுக்குப் போகக்கூட அப்பா மறந்துவிட்டார். ஆனால் தற்செயலாக ஞாபகம் வந்தபோது அவர், 'சடார்' என்று எழுந்து அங்க வஸ்திரத்தைச் சட்டையாகப் போட்டும் சட்டையை முண்டாசாகக் கட்டியும் அவசரத்தில் தலை கால் துணி விலகியது கூடத்தெரியாமல் துடித்ததை நினைத்துக்கொண்டால் இன்னும் என் சிரிப்பு அடங்கவில்லை.

எனவே விலாசன் இங்கு வந்ததிலிருந்து நல்ல குஷியாகப் போது போகிறது.

நீ ஒரு வாரம் லீவு எடுத்துக்கொண்டாவது இங்கே வரப்

படாதா ஒரு தரம்?

இங்கே சீதோஷ்ண நிலைமை மிகவும் ரம்மியமாக இருக்கிறது. கோடைக்காலம் ஆரம்பிக்க இன்னும் ரொம்ப நாட்கள் இருக்கின்றன; ஆனால் இவ் வருஷம் இங்கே கோடைக்கு வந்து தங்குபவர்களின் கூட்டம் இப்போது பிடித்தே ஆரம்பமாகி இருக்கிறது. முக்கால்வாசி பங்களாக்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டுவிட்டன.

எங்கள் 'ஜாக்' இப்போது மிகவும் துஷ்ட நாயாகப் போய் விட்டது. இது செய்யும் அட்டூழியம் கொஞ்சம் அன்று. விலாசன் தெருவில் வெகுதூரத்தில் வரும்போதே இது வாலை ஆட்டிக்கொண்டே குரைக்க ஆரம்பிக்கிறது. 'அடி அம்மாடியோ!' — இதோ இப்போதும் அது குரைக்கிறது. விலாசன் வந்தாலும் வரலாம். என் கடிதத்தை இத்துடன் முடித்துக் கொள்வதற்காகக் கட்டாயம் நீ மன்னிப்பாய் என்று நம்புகிறேன். வந்தனம் பல.

உன் பிரியமுள்ள தோழி,
ஜானி.''

இப்படி எழுதி ஜானி தன் கடிதத்தை ஒரு விதமாக முடித்தாள்.

மேஜையின் பக்கத்தில் இருந்த சுழல் நாற்காலியைச் சுழற்றி விட்டுக்கொண்டே அவ்விடம் விட்டு எழுந்து சென்று ஜன்னலின் வழியாக எட்டிப் பார்த்தாள் ஜானி.

உண்மையாகவே விலாசனுடைய மோட்டார் வந்து வாசலில் நின்றுகொண்டிருந்தது. விலாசன் வண்டியிலிருந்து இறங்கிக் கீழே நின்றுகொண்டிருந்தான்.

தான் ஜன்னலின் வழியாக எட்டிப் பார்த்ததையும் விலாசன் அவ்விடம் வந்ததையும் அவள் வெளிக்காட்டிக் கொள்ள விரும்பவில்லை. சடுதியில் எழுந்து மேஜைமேல் வைத்திருந்த கடிதத்தை ஒளித்து வைத்துவிட்டுத் திரும்பினாள். அந்த அவசரத்தில்கூட நிலைக் கண்ணாடியின் முன்பு நின்று கொண்டு தலை மயிரைக் கொஞ்சம் கலைத்து விட்டுக்கொண்டு முகத்திற்கு லேசாகப் 'பௌடர்' போட்டுக்கொள்ள அவள் மறந்துவிடவில்லை. பிறகு அவள் தன் பக்கத்தில் இருந்த பியானோவின் உயர்ந்த 'ஸ்டூலி'ன் மேல் உட்கார்ந்து, மிகவும் அவசரமாய் ஸ்வரஸ்தானங்களை அமுக்கி வாத்தியத்தை வாசிக்க ஆரம்பித்தாள். அவள் ஒரு பாட்டின் கடைசி அடியைப் பாடத்

தொடங்கினுள். வெகு நேரமாகவே அவள் பியானே வாசித்துக்கொண்டிருப்பதாக விலாசனுக்குக் காட்டிக்கொள்ளத்தான் அப்படிச் செய்தாள்.

அறையின் வாசலில் விலாசனுடைய 'பூட்ஸ்' சத்தம் கேட்டது. கேட்டுங்கூட அவள் அதைக் கவனிக்காதது போல் பியானேவை வாசித்துக்கொண்டிருந்தாள். பிறகு விலாசன் வாசல் அருகில் வந்ததும் ஒன்றும் அறியாதவள் போல் ஆச்சரியமான முக பாவத்துடன் விலாசனை நோக்கினுள்.

விலாசன் சற்று எட்டி நின்றபடியே, ''உள்ளே வரலாமோ?'' என்றுன்.

ஸ்டூலிலிருந்து எழுந்தபடியே ஜானி அவன் கேள்விக்கு மறுதளித்துப் பதில் சொல்வதுபோல், ''வேண்டாம்'' என்ற முக பாவனையுடன் தலையை அசைத்தாள்.

''நல்லது; நான் போய்விட்டு வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே விலாசன் அவ்விடம் விட்டு அகல முயன்றுன்.

''இது என்ன கேலிக் கூத்து? வாருங்களேன்!'' என்றுள் அவள் உடனே.

விலாசன் சிரித்தபோது தானும் உரக்கச் சிரித்துவிட்டு ஜானி, ''என்னவோ அபாரமாய்த்தான் பீத்திக்கொண்டு திரும்பினீர்களே? உண்மையிலேயே போயிருப்பீர்களோ?'' என்றுள்.

''நீதானே உள்ளே வரவேண்டாம் என்று கூறினுய்? அதுதான் நான் திரும்பினேன்.''

''ஓஹோ, 'வேண்டாம்' என்றுல் உண்மையாகவே உள்ளே வரவேண்டாம் என்று அர்த்தம் ஆகுமா?''

''பின்னே 'வேண்டாம்' என்றுல் 'வரலாம்' என்று அர்த்தம் ஆக்கும்?''

''இதுகூடத் தெரியாதா? 'வேண்டாம்' என்றுல் வரலாம் என்றுதான் அர்த்தம்.''

விலாசன் சிரித்துக்கொண்டே, ''ஓஹோ, அப்படியா அர்த்தம்? ஸ்திரீகளுக்கு என்று ஏற்பட்ட அகராதியின் பிரதி ஒன்று எனக்கு அவசியம் வேண்டும்'' என்றுன்.

ஜானி விலாசனைக் கூர்ந்து கவனித்தாள். அவள் மனத்திற்குள்ளாகவே, 'இந்த யுவன் ஏன் தன் சரியான பருவத்தைத் தனிமையில் கழிக்கிறுன்? ஸ்திரீகளைக் கண்டால் ஏற்படும் ஆகர்ஷணம் இவனுக்கு ஏன் உண்டாவதே இல்லை?' என்று எண்ணலாளுள்.

அதற்குள்ளாகவே விலாசன் மறுபடியும் பேச்சை எடுத்தான்.

''பியானோ வாசித்துப் பழகிக்கொண்டிருந்தாயாக்கும்? அது இருக்கட்டும்; உனக்கு பியானோ வாசிக்கத் தெரியும் என்பதை ஏன் இத்தனை நாளும் ஒளித்துவைத்திருந்தாய்?''

''ரொம்பத் தெரியாது; ஆனால் ஏதோ கொஞ்சம் பழக்கம் உண்டு; வாசித்துக்கொண்டே பாடுவேன்.''

''எங்கே, பார்க்கலாமே உன் திறமையை?''

''ஊஹூம்; நீங்கள் பக்கத்தில் இருந்தால் எனக்கு வாசிக்கவே பயமாக இருக்கிறது.''

''சரி, ஆனால் நான் வெளியில் வராந்தாவில் நின்று கொண்டே கேட்கிறேன், பாடு.''

''அப்படி இல்லை. உங்களுக்கு முன்பு பாடுவது என்றால் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. இதோ பாருங்கள், என் கை எத்தனை வேர்த்து இருக்கிறது என்று.''

இப்படிச் சொல்லிக்கொண்டே ஜானி தன் வலது உள்ளங் கையை விலாசனின் கன்னத்தில் வைத்தாள்.

அவளுடைய கையின் மீது தன் இடது கையை வைத்துக் கொண்டே விலாசன், ''ஆமாம், வாஸ்தவத்தில் உன் கைதான் எத்தனை குளிர்ச்சியாக இருக்கிறது? ஏன் இப்படி நடுங்குகிறது?'' என்றான்.

''அதனால்தானே, 'இப்போது வேண்டாம்; அப்புறம் ஒரு நாள் வாசித்துக் காட்டுகிறேன்' என்கிறேன்?''

'' 'அப்படிச் சொல்லுடா அப்பளக் குப்பான்' என்றபடி எதையோ ஆரம்பித்து எதிலேயோ முடிக்கிறாயே! 'அப்புறம் ஒரு நாள் என்று விஷயத்தை ஒத்திப் போடுவது போன்ற மூர்க்கத் தனம் வேறு கிடையாது' என்று நான் ஒரு புஸ்தகத்தில் வாசித் திருக்கிறேன். அதிருக்கட்டும்; ஊம், ஆரம்பி, வாத்தியத்தை வாசிக்க—''

''நீங்கள் அப்புறம் கேலி செய்யப்படாது? ஊம்?''

இப்படிச் சொல்லியபோதே ஜானி தன் நீண்ட விரல்களைப் பியானோவின் கட்டைகள் மேல் வைத்து அழுத்தினாள். பிறகு தன் மெல்லிய குரலை அந்தப் பியானோவின் தொனியோடு கலந்து ஒரு பாட்டுப் பாடினாள்.

அந்தப் பாட்டு ஒரு காதல் பாட்டாக இருந்தது. அதைப் பாடும்போது ஜானியின் முகத்தில் காதலின் அலைகள் எழும்

பியதை யாவரும் எளிதில் உணர்ந்திருக்கலாம். அவள் காதல் நிறைந்த பார்வையுடன் விலாசனைப் பார்த்தபோது, பாட்டின் பொருளுக்கேற்ற அபிநயமும் செய்தாள். விலாசனை அவள் முகம் எதையோ கெஞ்சிக் கேட்பது போல் இருந்தது.

உணர்ச்சியின் வேகத்தால் உண்டாகும் அவளுடைய முக பாவனைகளை மாற்ற முடியாதபடி அவள் பாட்டை முடிக்கையில் மறுபடியும் பல்லவிக்கு வந்தாள். பல்லவியின் கடைசியில் உள்ள நிலா என்ற வார்த்தையை உச்சஸ்தாயியில் உள்ள காந்தாரத்தில் விட்டுவிட்டுச் சற்று நேரம் நடுங்கிய குரலில் ராகம் இழுத்துக்கொண்டிருந்தாள். பாட்டு முடிந்ததும் அவளுடைய ஆவேசமும் சற்று மறைந்தது. அவள் நடுங்கும் தன் இரு கரங்களாலும் விலாசனை அணைத்து, அவன் முகத்தில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டே ஓர் ஆழ்ந்த முத்தம் கொடுத்தாள்.

தன் சரீரத்தின் ஒவ்வோர் அங்கமும் அணு அணுவாகப் பிரிந்து கொட்டுவது போன்ற ஓர் உணர்ச்சி அவளுக்கு அச்சமயத்தில் ஏற்பட்டது. விலாசன் தன் இடது கையினுல் அவளை அழுத்திப் பிடித்துக்கொண்டதை அவள் அந்த உணர்ச்சி வெள்ளத்தில் அனுபவித்திருப்பாளா? அவன் அவள் முத்தத்திற்குப் பதிலாக அவள் கன்னத்தில் கொடுத்த முத்தத்தின் இன்பத்தைத் தான் பருகி இருப்பாளா? அவளுடைய சரீரம் கடைசி வரையில் இப்படி நடுங்கிக்கொண்டேதான் இருக்குமா?

இதன் பிறகு அவள் விலாசனுடன் டென்னிஸ் விளையாடப் போனதும் சுய உணர்ச்சி இல்லாமலேயே சென்றுள்! அவனுடன் விளையாடும்போதும் அவளுக்குச் சுய அறிவு முற்றும் ஏற்படவில்லை! பந்து வருவதே அவள் கண்ணுக்குத் தெரியவில்லை. 'கோர்ட்' டைச் சுற்றிலும் போடப்பட்ட வெண்மையான கோடும் தெரியவில்லை. அவள் கையிலிருந்த மட்டை அடிக்கடி நழுவி விழுந்துகொண்டே இருந்தது.

விலாசனை ஏறிட்டுப் பார்க்க அவளுக்குத் தைரியம் உண்டாகவில்லை. என்றுலுங்கூட அவள் திருட்டுப் பார்வையால் அவனைப் பார்த்தபோது அவன் வழக்கம் போலவே சாவதானமாக டென்னிஸ் விளையாடிக்கொண்டிருந்ததை அறியலாஞள்.

இதனுல் அவளுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு ஓர் அளவில்லை.

எந்தக் காதல் அக்கினி அவள் தேகம் முழுவதையும் எரித்துச் சாம்பலாக்கிக்கொண்டிருந்ததோ, அதே காதல் தீ

விலாசனை மட்டும் ஒன்றும் செய்யவில்லையே: 'இவ்விதந்தான் எல்லாப் புருஷர்களும் இருப்பார்களா? அல்லது விலாசன் மட்டுந்தான் இப்படி இருக்கிறுனு? மிகவும் விசித்திரமாய் இருக்கிறுன் இந்த விலாசன்!......'

விளையாட்டு முடிந்ததும் விலாசன் அவளிடம், "நான் உன்னை என் வண்டியிலேயே உன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுகிறேனே?" என்று மெல்லக் கேட்டான்.

"வேண்டாம்; நான் நடந்தே போகிறேன்."

"இல்லை, இல்லை, உனக்கு உடம்பு சரியாக இல்லை."

"எனக்கு என்ன கேடு வந்து விட்டது?"

"எனக்கு என்ன தெரியும் அதைப்பற்றி? சரி, சரி, போய் வண்டியில் ஏறி உட்காரு."

இவ்விதம் கட்டாயப்படுத்தி ஜானியை வண்டியில் ஏற்றினுன் விலாசன்; வண்டியும் கிளம்பியது.

வண்டி தன்னுடைய பங்களாவுக்குச் செல்லும் பாதையை விட்டு, கடைத் தெருவின் பக்கமாகத் திரும்பியபோது ஜானி ஆச்சரியத்துடன், "இது என்ன, வண்டி எங்கேயோ போகிறதே?" என்று கேட்டாள்.

"ஹோட்டலுக்குப் போய்க் கொஞ்சம் ஐஸ்கிரீம் சாப்பிடலாம்; உனக்குக் கொஞ்சம் குளிர்ச்சியாக இருக்கும் அல்லவா?"

இப்படிச் சொல்லிக்கொண்டே வண்டியை அதிவேகமாய் விடலானுன் விலாசன்.

ஆனுல் எந்த ஹோட்டலுக்கு அவன் வழக்கமாய்ப் போவானே அதை அடையுமுன்பே வண்டியை நிறுத்த வேண்டியதாயிற்று.

நானூறு ஐந்நூறு பேர்கள் கொண்ட ஒரு கூட்டம் அந்தத் தெருவின் எதிர்ப்புறமாக வந்துகொண் டிருந்தது. கூட்டத்தின் ஜனங்கள் "வந்தே மாதரம்", "மகாத்மா காந்திக்கு ஜே", "சத்தியாக்கிரகத்துக்கு ஜே" என்று கோஷம் செய்துகொண் டிருந்தனர். கூட்டத்தின் முன்னுல் நின்று தலைமை வகித்தவர்கள் நீண்ட மூங்கில்களில் கட்டப்பட்ட ஒரு பெரிய கொடி போன்ற துணியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு வந்தனர். அதில், "ஏழைக் குடியானவர்களைக் காப்பாற்றுங்கள். தளவலா சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளுங்கள்" என்று கொட்டை எழுத்தில் எழுதப்பட் டிருந்தது. இதைப்போன்ற பல சிறியவையும் பெரியவையுமான கொடிகளை அவர்களில் பலர் பிடித்

திருந்தனர். அவர்கள் இடையிடையே அந்தக் கொடிகளை உயர்த்திக்கொண்டே அவைகளின்மேல் எழுதப்பட்ட வாக்கியங்களை உரக்கக் கோஷித்தனர்.

அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களில் முழங்காலுக்கு மேல் கட்டிய கச்சை வேஷ்டி, தோளில் ஒரு கம்பளித் துண்டு, தலை நிறையச் சுற்றப்பட்ட பெரிய முண்டாசு இவைகளுடன் காணப்படும் குடியானவர்களே அதிகம். இவர்களுடன் நூறு நூற்றைம்பது குடியான ஸ்திரீகளும், இருபது முப்பது சிறுவர்களுங்கூட 'ஜே, ஜே' என்று சத்தம் போட்டுக்கொண் டிருந்தனர்.

அந்தக் கூட்டம் அவர்களுடைய பக்கத்திலிருந்து போய்க் கொண்டிருந்தபோது ஜானி விலாசனைப் பார்த்து, ''என்ன இது? எதற்காக இந்தக் கூட்டம் எல்லாம்?'' என்றாள்.

''யாருக்குத் தெரியும்? எனக்கும் ஒன்றும் புரியவில்லை.''

அதற்குள் அந்தக் கூட்டத்திலுள்ள மனிதர்களுள் ஒருவன் தெரு ஓரங்களில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்த ஜனங்களைப் பார்த்து, ''சகோதரர்களே! பம்பாயிலிருந்து ஒரு பணம் பெருத்த பார்ஸீ கம்பெனி வந்து எங்கள் நிலம், புலம், வீடு, வாசல் முதலியவைகளை எல்லாம் பிடுங்கிக்கொண்டு, எங்களை அநாதைகள் ஆக்கிவிட முனைந்திருக்கின்றனர். எங்களைக் காப்பாற்றுங்கள். எங்கள் சத்தியாக்கிரகத்துக்குக் கை கொடுங்கள்'' என்று பேசினான்.

இவ்விதம் அவன் அடிக்கொரு தரம் சொல்லிக்கொண்டே கூட்டத்தை முன்னால் நடத்திச் சென்றான்.

ஜானி விலாசனிடம், ''உங்கள் கம்பெனியின் பெயரைத் தானே அவன் குறிப்பிட்டான்?'' என்று கேட்டாள்.

''ஆமாம்; அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது.''

விலாசன் இப்படி ஏதோ உளறினானே ஒழிய அவன் முகம் என்றும் அடையாத விதமாய் யோசனை கலந்த கம்பீரத்துடன் மாறுதல் அடைந்தது.

சோரப்ஜீ தீன்ஷா கம்பெனியார்கள் கட்ட யோசித்திருக்கும் அணைக்கட்டுத் தேக்கத்திற்கு இடையூறாகத் தளவலாவில் ஏழைக் குடியானவர்கள் சத்தியாக்கிரகம் செய்வார்கள் என்று விலாசன் கனவில்கூட எண்ணவில்லை. அக்குடியானவர்கள் எதற்காகச் சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்பதும் அவனுக்குப் புரியவே இல்லை. எந்த இடத்தில் உத்தியோகம் பார்ப்பதற்காகச் சென்றானோ அதே தளவலாவில் கிராமத்தாரிடையே சத்தியாக்

கிரக மறியல், புயல் காற்றைப் போலக் கிளம்பும் என்று விலாசன் கற்பனைகூடச் செய்ததில்லை. எந்த விஷயத்தில் அவன் இன்று வரையில் அலட்சிய மனப்பான்மை காட்டி வந்தானே, எந்த விஷயம் பெரிய சூறாவளியைப் போல் கிளம்பி நாட்டையே ஒரு கலக்குக் கலக்கி விட இருந்ததோ அந்த விஷய மாகவே வேலைக்கு வந்திருக்கிறேம் என்பதை உணர்ந்தபோது விலாசனுக்கு மனத்திற்குள்ளாகவே ஆச்சரியம் உண்டாயிற்று. அரசியல் புயல்காற்றைக் கண்டு அஞ்சிய அதே விலாசன் சத்தியாக்கிரக மறியல் என்னும் சூறாவளியில் அகப்பட்டுக்கொண் டதை எண்ணும்போது அவனுக்குத் தன் மீதே ஒரு விதமான கோபம் ஏற்பட்டது.

அவன், இரவில் தன் 'காம்பி'ற்குப் போய் நுழைந்தபோது, சோரப்ஜீ தீன்ஷா கம்பெனியாரின் முக்கிய டைரெக்டர்கள் ஒன்று கூடி, சில அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் உடன் வைத்துக் கொண்டு, எதைப் பற்றியோ வெகு நேரம் சர்ச்சை செய்து கொண்டும் அபிப்பிராயங்கள் கொடுத்துக்கொண்டும் இருந்ததைக் கண்டான். இதனால் அவன் மனம் முற்றும் மருட்சி கொள்ள ஆரம்பித்தது.

கூடாரத்தினுள்ளே இருந்த ஒரு சாய்மான நாற்காலியில் படுத்துக்கொண்டே விலாசன் தன் சேவகனைக் கூப்பிட்டுச் சர்பத் கொண்டுவரச் செய்தான். அதைக் குடித்துவிட்டுப் பின் சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

இதற்குள் யாரோ ஒருவன் அவ்விடம் வந்து, ''என்ன, விலாஸ்! தனியாகவா சாப்பிடுகிருய் சர்பத்?'' என்று கேட்டான்.

விலாசன் தலையைத் திருப்பி, 'யார்' என்று பார்த்தபோது, தன் முன்னல் நின்றுகொண் டிருப்பது பம்பாய் ரகசியப் போலீஸ் இலாகாவிலுள்ள இன்ஸ்பெக்டர் பார்க்கவராம் என்று தெரிந்து கொண்டான்.

விலாசனுக்கும் பார்க்கவராமுக்கும் இடையே சிநேகம் நிலவி வந்தது என்பது கிடையாது. ஆனல் என்றைக்காவது அவன் விலாசனைக் கிளப்புகளிலாவது சினிமாவிலாவது சந்திப்பது வழக்கம். விலாசன் அங்கிருந்த சேவகனிடம் பார்க்கவராமுக்காக மற்றொரு கிளாஸ் சர்பத் வரவழைத்தான். விலாசன் அவனிடம், ''நீ இங்கே எங்கே வந்து சேர்ந்தாய்?'' என்று கேட்டான்.

கிளாஸிலுள்ள 'சர்பத்'தைக் குடித்துவிட்டு, உதட்டை நாக்கினல் தடவிக்கொண்டே பார்க்கவராம், ''தளவலாவில்

ஒரு பெரிய சத்தியாக்கிரகம் நடக்கப் போகிறதாம். எனக்கு இவ்விடம் ஆஜர் ஆகவேண்டும் என்று அரசாங்க உத்தரவு. அதற்காக வந்து சேர்ந்தேன்'' என்றான்.

''சத்தியாக்கிரகம் என்றால் என்ன செய்வார்கள் இந்தக் குடியானவர்கள்?''

''எந்த இடத்தில் நீங்கள் அணைக்கட்டுக் கட்டப்போகிறீர்களோ அந்த இடத்தில் அவர்கள் படுத்துக்கொண்டு மறியல் செய்வார்கள். நீங்கள் குண்டுகளை வீசினால்கூட அவர்கள் எழுந்து போக மாட்டார்கள்.''

''ஓஹோ, அப்படியா? இத்தனை புத்தி சாதுரியங்கூட நம் குடியானவர்களுக்கு வந்துவிட்டதா?''

''அப்படி இல்லையே! அவர்களுக்குத் தானாகவே இவ்விதப் புத்தி சாதுரியம் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால் இவ்விதமெல்லாம் சொல்லிக் கொடுக்க ஓர் ஆசாமி இருக்கிறது. அந்த ஆசாமியும் ஒரு ஸ்திரீ என்றால் பார்த்துக்கொள்ளேன்!''

''என்ன?''

''ஆம்; அவள் ஒரு ஸ்திரீ; அவள் பெயர்தான் ஆசா.''

''ஆசா?''

விலாசனுடைய குரலில்தான் ஏன் இத்தனை மாறுதல் ஏற்பட்டது என்பதைப் பார்க்கவராம் தெரிந்துகொள்ள முடியவில்லை. எனவே அவன் விலாசனிடம் அது விஷயமாகச் சற்றுப் பேச்சை எடுக்க எண்ணினான்.

ஆனால் விலாசன் உடனே எழுந்து வெளியே சென்று வராந்தாவின் கைப்பிடிச் சட்டத்தின் மேல் சாய்ந்துகொண்டே, வெளியே பார்த்த வண்ணம் நின்றான்.

மலைகளுக்குக் கீழ் இருந்த பள்ளத்தாக்கு இருட்டாக இருந்தது. எதிரில் இருந்த மரங்கள்கூடக் கண்ணுக்குப் புலப்படாதவாறு இருட்டு மிகவும் அடர்த்தியாக இருந்தது. அந்த மரங்களின் இலைகள் காற்றில் அசைவதிலிருந்தே அவ்விடத்தில் மரங்கள் இருப்பதாக ஊகிக்கவேண்டும். தூரத்தில் எங்கேயோ ஒரு கோட்டான், ''ஹூ ஹூ'' என்று உறுமுவது கேட்டுக் கொண்டிருந்தது. இதற்குள், அடிவானத்தில் இது வரையில் காணப்படாத ஓர் அதிசயமான சந்திர மண்டலம் தோன்றியது - விலாசனுடைய மனக் கண்களுக்குத்தான்! அவன் மெதுவாக வாய்விட்டுச் சொன்னான் :

''ஆசா!''

# அத்தியாயம் 6

அந்திப் பொழுதின் மங்கிய வெளிச்சத்தில் கார்லாவுக்கும் லோனுவலாவுக்கும் நடுவில் உள்ள ரஸ்தாவில் வழக்கம் போல் போக்குவரத்தும் ஜன நடமாட்டமும் அதிகமாக இருப் பினும் விலாசன் தன் மோட்டார் வண்டியை மிகவும் வேகமாய் ஓட்டிக்கொண் டிருந்தான். வண்டி அன்று மிகவும் சுலபமான முறையில் கையாளக்கூடியதாயும் அதன் விளக்குகளின் வெளிச்சம் அதிகப் பிரகாசமாயும் இருந்ததனுல் விலாசனுக்கு ஒரு விதக் குஷி உண்டானதில் வியப்பு ஒன்றும் இல்லை. வண்டியை மெள்ள ஓட்டுவது விலாசனுடைய சுபாவத்திற்குப் புறம்பானது. அன்று பகல் முழுவதும் விலாசன் அங்கும் இங்கும் அலைந்து மிகவும் சிரமப்பட் டிருந்தான். எத்தனை சீக்கிரம் முடியுமோ, அத்தனை சீக்கிரம் தன் 'காம்பி'ற்குப் போய்க் களைப்பாற வேண்டும் என்று அவன் எண்ணினுன்.

அவனுடைய தலைமை உத்தியோகஸ்தரான ஓர் 'என்ஜி னீயர்' கார்லாவில் உள்ள ஒரு பெரிய அரசாங்க உத்தியோகஸ்த ரிடம், 'சில அலுவல்களை முன்னிட்டுச் சென்று, இரண்டு மூன்று நாட்களாக அவருடன் கூட அங்கேயே தங்கியிருந்தார். எனவே விலாசன் ஒவ்வொரு விஷயத்திற்கும் லோனுவலாவிலிருந்து கார்லாவுக்கு அநேகந் தடவை போய் வரவேண்டி யிருந்தது. இந்த விஷயங்களால் விலாசனுக்கு வேலையில் வெறுப்புத் தட்டி விட்டது. அடிக்கடி இவ்விதம் லோனுவலாவிற்கும் கார்லா விற்கும் பிரயாணம் போய்க்கொண் டிருந்ததால் அவனுக்கு மிகவும் இஷ்டமான 'டென்னிஸ்' விளையாட்டு, தடைப்பட் டிருந்தது. இதற்கு இடையில் தளவலா சத்தியாக்கிரகத்தைப் பற்றிய கவலை வேறு மின்னல் மின்னுவதைப்போல் அவன் மனத்தில் தோன்றித் தோன்றி மறைந்தது; கட்டிடத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதைப் பற்றியும் அந்த இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்களிடையேயும் சர்ச்சை நடந்த வண்ணம் இருந்தது.

அதிக வேலைத் தொந்தரவினாலும் இடைவிடாது நடக்கும் வாத விவாதங்களைக் கேட்டதாலும் விலாசனுடைய மனது அலுத்துப் போயிருந்தது. அவன் நெற்றியில் சுருக்கங்கள் காணப்பட்டன. தலை சிவப்படாமல் கலைந்திருந்தது. கண் பார்வை கலங்கியிருந்தது. அந்த இரண்டு பெரிய உத்தி யோகஸ்தர்கள்மீதும் விலாசனுக்கு எல்லையற்ற வெறுப்பு ஏற்பட்டது. தேசப்படத்தின் பெரிய பெரிய சுருள்களும் கட்டிடத்தின் 'பிளான்'கள் வரைந்த கரும் பலகைகளும், வட்டம் வரையும் கருவி, சுத்தி, 'டிவைடர்' முதலிய ஆயுதங் களும் அவன் கண்களின் முன்பு தோன்றிய வண்ணம் இருந்த தால் விலாசன் அவைகளைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் இச்சை கொள்ளவில்லை. அணைக்கட்டின் கண்களில் அமைக்கப்பட இருந்த 'கமான்'களைப் பற்றிக் கணக்குகள் போட்ட வண்ணம் இருந்தது, ஏற்கனவே அலுத்துப் போயிருந்த விலாசன் மனம்.

அப்போது மேல் உத்தியோகஸ்தர் அவனைப் பார்த்து, ''என்ன ஐயா! இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார். அவன் ஒன்றும் பதில் பேசவில்லை.

ஒவ்வொரு தடவையும் அவன் தன் மேல் உத்தி யோகஸ்தருக்குச் சொல்ல நினைத்தது, ''அது எப்படி ஆயினும் உங்களைப் பற்றிய அபிப்பிராயம் எனக்குச் சரியாக இல்லை என்பது மட்டும் நிச்சயம்'' என்பதுதான்.

ஆனால் தன் அபிப்பிராயத்தை அவன் அவ்விதம் வெளியிட முடியுமா? எனவே அவன் ஒன்றும் பதில் கூறாமல் தலைமை ஆபீசர் எது சொன்னாலும், 'உம், உம்' என்று கேட்டுக்கொண்டே இருந் தான். பெரிய உத்தியோகஸ்தரின் அபிப்பிராயத்திற்கு மாறாக ஒன்றும் பேச முடியாவிட்டாலும், தளவலா சத்தியாக்கிரகத்தை எளிதில் அடக்குவதுபற்றி விலாசனுக்கு நம்பிக்கையே உண்டாக வில்லை. சத்தியாக்கிரக விஷயமாய் முதலில் எது நினைத்திருந் தார்களோ அது முற்றும் தவறானது என்பதையும் கம்பெனியின் டைரெக்டர்கள் உணர்ந்துகொண்டார்கள். சத்தியாக்கிரகத்தை எளிதில் அடக்கிவிடுவது சிரமசாத்தியமான காரியமாகவே அவர்களுக்குத் தோன்றியது. தவிரவும் சத்தியாக்கிரக சம்பந்த மான மறியலை மேற்பார்த்து நடத்திவைக்கப்போகும் பெண் மிகவும் பிடிவாதக்காரி என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தது. மேல் உத்தியோகஸ்தர்களின் சம்பாஷணைகளைக் கேட்கும்

போதெல்லாம் விலாசனுக்கு, ''அந்த 'ஆசா' என்பவள்தான் யாராக இருக்கக் கூடும்? அவளை ஒரு தரம் பார்க்க வேண்டும்'' என்று தோன்றிக் கொண்டே இருந்தது.

இப்போது அவன் மோட்டார் லோனுவலாவின் எல்லையை அடைந்துங்கூடக் கார்லாவில் அந்த உத்தியோகஸ்தர்களிடையே நடந்த சம்பாஷணை அவன் மனத்தைவிட்டு அகலவே இல்லை. என்னதான் மறக்க முயன்றாலும் அவன் மனது திரும்பத் திரும்ப, ''அந்த ஆசா என்பவள் யாராகத்தான் இருக்கக்கூடும்? அவளை ஒரு தரம் கட்டாயமாகப் பார்க்க வேண்டும்'' என்று தூண்டிய வண்ணம் இருந்தது.

இதற்குள் வெளிச்சம் முழுவதும் மறைந்து இருட்டு எங்கும் பரவிவிட்டது. ரஸ்தாவில் சென்ற மற்றொரு மோட்டாரினால் உண்டான தூசி காற்றில் பறந்தது. விலாசனுடைய மோட்டாரின் பிரகாசமான வெளிச்சத்தில் அது 'பள பள' வென்று வெகு நேரம் வரையில் மின்னிக்கொண் டிருந்தது. பாதை தவறிவிட்ட ஒரு சில ஆடு மாடுகள் ரோட்டில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்துகொண் டிருந்தன. அடர்த்தியாகவும், உயரமாகவும், சிற்சில இடங்களில் குட்டையாகவும், பல விதமாகத் தோன்றிய விருக்ஷங்களை எல்லாம் தாண்டிக்கொண்டே விலாசன் பறந்தான். இப்போது அவன் இடது பக்கத்தில் உள்ள ஆற்றில் ஜலம் ஓடிக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் அவன்மீது வீசிய காற்றில் குளிர்ச்சியான நீர்த் திவலைகள் இருந்ததை அவன் உணர்ந்தான். அவன் தன் சட்டையின் 'காலரை'த் தூக்கி விட்டுக்கொண்டு அதை இடது கையினால் பிடித்துக்கொண்டே இருந்தான். இதற்குள்ளாக அவன் ஓர் இருப்புப் பாதையைக் கடந்து செல்ல வேண்டி இருந்ததால் வண்டியின் வேகம் சற்றுக் குறைந்தது. ஆனால் இவ்விதம் வேகம் தானாகவே குறைந்தது விலாசனுக்கு மிகவும் அகௌரவமாகப் பட்டது. படவே அவன் வண்டியை முன்னிலும் பன் மடங்கு அதிகமான வேகத்துடன் ஓட்டத் தொடங்கினான்.

''விர் ர்ர்ர்......'' என்ற சத்தத்துடன் வண்டி வேகமாய்ப் பறந்ததைக் கண்டு அவனுக்கு மனத்தில் சந்தோஷம் ஏற்பட்டது. அவனுக்குச் சிகரெட்டின் நினைவு வந்தது. ஒரு கையால் சிகரெட்டை வாயில் வைத்துக்கொண்டு முழங்கையைச் சக்கரத்தின் மேல் வைத்துக்கொண்டு குச்சியைக் கிழித்து அதன் அருகில் அவன் தன் முகத்தைக் கொண்டு போனபோதுகூட

அவனுடைய கவனம் முழுவதும் ரஸ்தாவிலேயேதான் இருந்தது. இதற்குள் அவன் வண்டி ஏதோ ஒரு கல்லின் மேல் ஏறி இறங்கியது போலத் 'தடார்' என்று குலுங்கியது. வண்டி, அந்தக் குறுகிய ரோட்டின் ஓரங்களுக்குச் செல்லாத வண்ணம் விலாசன் அதைத் திருப்பிய வண்ணம் இருந்தான்.

''ஐயோ! இதென்ன? வண்டியின் விளக்குகள் அணைந்து விட்டனவே!'' வெளிச்சத்தையே பார்த்துக்கொண்டிருந்த விலாசனுடைய கண்களுக்கு அந்தக் காரிருளில் ஒன்றுமே தெரியவில்லை. 'பிரேக்' கைப்போட அவன் கைகள் எத்தனைதான் வேகமாய்ச் சென்ற போதிலும் அந்தக் கண் சிமிட்டும் நேரத்திற்குள்ளாக வண்டி ரஸ்தாவை விட்டுக் கீழே இறங்கிச் சரிவில் நழுவிக்கொண்டிருந்ததை விலாசன் உடனே உணர்ந்தான். அவன் காலடியில் ஆயிரம் தேள் ஒருமிக்கக் கொட்டியது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. கண்ணுக்கு முன் ரத்தமயமான ஒரு சமுத்திரம் பொங்கி மேல் வருவது போலத் தோன்றியது. காதுகளில் 'கிரீச்' என்ற ஒருவிதச் சத்தம். அவ்வளவுதான். விலாசனுக்கு அதன் பின் நடந்த விஷயங்கள் எப்படித் தெரியும்?

* * * *

''ஆசா! எழுந்திரு; ஆசா! எழுந்திரு!''

இவ்விதமான குரலினால் அவன் விழித்துக்கொண்டான். இதைக் கேட்ட அவனுக்கு என்றும் இல்லாத ஒருவித ஆச்சரிய உணர்ச்சி ஏற்பட்டது.

''ஆசா, எழுந்திரு!'' 'ஆசாவின் வீட்டிற்கு நான் எப்படி வந்தேன்? அல்லது ஆசாதான் என் 'காம்பி'ற்கு வந்திருக்கிறளா? அவனைக் காலையில் சாப்பிடவேண்டிய 'டீ' க்காக வேலைக்காரன் ஒருவன் கூப்பிடுவதைப் போல் ஓர் அமானுஷிகமான குரல் ஏன் கூப்பிட வேண்டும்? இல்லை, எப்போதும் சதாசர்வகாலமாக எண்ணிக்கொண்டே இருந்த ஆசாவின் நினைவினால் ஏற்பட்ட பிரமைதானோ இது? இது என்னவோ எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! எல்லாம் என் மனோராஜ்யந்தான்!'

இவ்விதமாக எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்போதே மறுபடியும் அதே குரல், ''ஆசா! எழுந்திரு; ஆசா! எழுந்திரு'' என்றது.

ஆனால் இந்தத் தடவை பேசியபோது அந்தக் குரல் மனிதக்

குரல் அன்று. ஆனால் ஒரு கிளியின் பேச்சுக் குரல் என்பது நன்கு புலனாயிற்று. எனவே தான் தன்னுடைய 'காம்பி'ல் இல்லை—வேறு ஏதோ ஓர் இடத்தில் இருக்கிறோம் என்று விலாசன் ஊகித்தான்.

இதற்குள் சென்ற இரவில் ஏற்பட்ட மோட்டார் விபத்து அவனுக்குக் கனவு போல் நினைவுக்கு வந்தது. அவன் தன்மேல் போர்த்தப்பட்ட போர்வையைத் தடவிப் பார்த்தான். அது அவனுடையதன்று. தான் வேறு யாரோ ஒருவர் படுக்கையில் படுத்திருப்பதை உணர்ந்தான்.

இப்படிப்பட்ட முரட்டுக் கதர்ப் போர்வை அவன் படுக்கையில் எப்போதும் இருந்ததே இல்லை அல்லவா?

எங்கேதான் படுத்துக் கிடக்கிறோம் என்பதைக் கண்டறியும் நோக்கத்துடன் விலாசன் தலையைச் சற்றுத் தூக்கி நாலா பக்கமும் பார்த்தான். ஆனால் ஒன்றும் அவனுக்குச் சரியாகப் புலனாகவில்லை. வலது பக்கத்தில் ஒரு சிறிய ஜன்னல் இருந்தது. அதன் வழியாகப் புகை போன்ற மங்கிய வெளிச்சம் செந்நிற வானிலிருந்து வந்துகொண்டே இருந்தது. வெளியே இருந்து பக்ஷிகள் போடும் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. பக்கத்தில் மாடுகள் தங்கள் கொம்புகளை மரத்தில் தேய்ப்பது போன்ற சத்தமும் கேட்டது. நடுவில் ஒரு மாடு, 'ஹம்' என்று ஒரு தடவை உறுமியதும் கேட்டது. மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த மணிச் சத்தமும் இடையிடையே கேட்டது. யாரோ ஒருவர் வாசலில் சாணி கரைத்துத் தெளித்துக்கொண்டிருக்கவேண்டும். ஆ! இதென்ன? இனிமையான மெல்லிய குரல்! எங்கிருந்து வருகிறது இத்தச் சத்தம்?

"பொழுது புலர்ந்தது; யாம்செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்"

* * * *

"குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
கோமக ளேபெரும் பாரதற் கரசே!"

* * * *

"புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்
பொங்கிய தெங்கும் சுதந்திர நாதம்."

அந்தக் குரலில்தான் எத்தனை இனிமை? அந்தப் பூபாள ராகத்தில் அமைந்த சொற்களின் பொருள்தான் எத்தனை

புதிதாக இருந்தது? சுதந்தரத்தின் அருணோதயமானதால் பாரதத் தாயை எழுப்புவதுதான் அதன் பொருள்: யாராவது தேவதைதான் வந்து அத்தனை இனிய குரலில் பாடுகிறதா?

''விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்!
இதமுற வந்தெமை ஆண்டருள் செய்வாய்
ஈன்றவ ளே! பள்ளி எழுந்தரு ளாயே!''

இத்தனை இன்பகரமான அருணோதயத்தை விலாசன் தன் வாழ்நாட்களில் ஒரு தடவையேனும் அனுபவித்ததே இல்லை. காலுக்கு ஒரு பட்டுத் தலையணை வீதம் கிடக்கத் தலையை வெல்வெட்டுத் தலையணை தாங்கச் சொகுசாகத்தான் அவன் எப்போதும் கண் விழிப்பது வழக்கம். தூக்கம் முடிந்து கண்களைத் திறக்கும்போது சூரிய கிரணங்கள் தன் அறையில் பிரகாசிப்பதும் வெயில் அடிப்பதுந்தான் அவன் முதலில் காணும் காட்சியாக இருக்கும். ஆனால் இன்று அதிகாலையில் விழித்துக் கொண்டதும், அதற்கு முற்றும் நேர்விரோதமான அனுபவங்களைப் பெற்றான். சென்ற இரவில் நடந்த மோட்டார் விபத்து மறுபடியும் ஞாபகத்துக்கு வந்தது. அதன் காரணமாக ஏற்பட்ட உடம்பின் வலியை அப்போதுதான் அவன் உணர்ந்தான்.

அன்று காலையில் அவனுக்கு ஏற்பட்டது போன்ற இன்பத்தை அவன் இதுவரையில் என்றும் அனுபவித்ததே இல்லை.

வெளியில் சாணி தெளிக்கும் சத்தம் நின்று விட்டது.

பூபாள ராகத்தின் அந்த மிருதுவான தொனியும் முடிவடைந்து விட்டது.

வெளியே சென்று சற்று உலாவவேண்டும்; அந்த ஆனந்தகரமான காலையைச் சற்றுக் கண்குளிரக் காணவேண்டும்; அந்த இன்பக் கனவை நிரந்தரமான உண்மை ஆக்கிவிடவேண்டும் என்று விலாசன் ஆசைப்பட்டான்.

ஒருவேளை இந்த ஆசையால்தானோ என்னவோ அவன் கால்கள் அசைந்தன. உடனே 'பளீர்' என்று நரம்பு தெரித்தது போன்ற ஒரு வலி உண்டாயிற்று. முந்தின இரவில் ஏற்பட்ட விபத்தில் தன் காலில்தான் அடிபட்டிருக்கவேண்டும் என்று விலாசன் ஊகித்துக் கொண்டான். அப்போது எதிரில் இருந்த

ஜன்னலின் வழியாகக் காற்றின் அலை ஒன்று மெள்ள வீசியது. சற்று நேரத்திற்கெல்லாம் விலாசன் மறுபடியும் சற்றுக் கண் அயர்ந்தான்.

இரண்டு மூன்று நாழிகைக்குப் பிறகு விலாசன் விழித்துக் கொண்டான். அவன் படுத்திருந்த அறையிலிருந்து மிகவும் இனிமையான புஷ்ப வாசனை வந்ததாலேயே அவன் விழித்துக் கொள்ள நேர்ந்தது.

முதலில் கண்களைத் திறவாமலேயே அவன் அந்தப் புஷ்ப வாசனையின் இன்பத்தை அனுபவித்தான். சிறிது நேரத்தில் மனித நடமாட்டத்தின் சத்தம் காதில் பட்டதும் வாசனை நுகர்வதைவிட்டுக் கவனத்தை வேறு விஷயத்தில் திருப்பியவனாகக் கண்களைத் திறந்தான். எதிரில் ஒரு யுவதி, சுவரில் மாட்டியிருந்த படங்களுக்கு மாலைகள் போட்டுக்கொண்டிருந்ததை அவன் கண்டான்.

அவளுடைய பின் பக்கத் தோற்றம் மட்டுமே அவனுக்குத் தெரிந்தது. ஆனால் அவளுடைய உருவம் மெலிந்து உயரமானதாக இருந்ததைத் தெரிந்துகொள்ள அந்தத் தோற்றமே போதுமானதாக இருந்தது. அவள் கட்டியிருந்த சேலை முரட்டு நூலினால் நெய்யப்பட்ட கதர்ச்சேலை. ஆனால் அதன் தூய வெண்ணிறத்தில் கொஞ்சங்கூடக் களங்கம் என்பதே இருக்கவில்லை. மாலைகளைப் படங்களில் மாட்டுவதற்காக அவள் தன் இரு கைகளையும் மேலே தூக்கியபோது அவள் மேலாடை அவளுடைய இடது புஜத்திலிருந்து நழுவிக் கீழே முழங்கால் வரைக்கும் சரிந்து வந்துவிட்டது. புடைவையின் கரையில் தீட்டியிருந்த மூன்று வர்ணப் பட்டைகள் மாலையைப் போல் காற்றில் அங்கும் இங்கும் அசைந்துகொண்டிருந்தன. பின்புறத் தோற்றம் அளித்துக் கொண்டிருந்த அவளுடைய உயரமான மெலிந்த உருவம், மாலையை ஏந்திய அவளுடைய நீண்டு சிவந்த கைகளால் இன்னும் மெலிந்து தோன்றிற்று. கைகளின் நிறத்தைக் கொண்டு அவளுடைய தேக காந்தியையும் ஒருவாறு ஊகிக்க முடிந்தது. படங்களைப் பார்க்கும் பொருட்டு அவள் கழுத்தை வளைத்து மேலே நோக்கிக்கொண்டிருந்ததால் அவளுடைய கூந்தலின் பெரிய முடிச்சு, பந்தைப்போல் அவளுடைய பிடரியில் உருண்டது. இவ்வளவு கருத்து நீண்ட கூந்தலை விலாசன் அது வரையில் எந்தப் பெண்ணிடமும் கண்டதே இல்லை. எனவே அவன் கவனம் முழுவதும் அந்தக் கூந்தலின் மேலேயே இருந்தது.

ஆனால் அவள் முன்பக்கமாகத் திரும்புவாள் என்று விலாசன் கற்பனை செய்வதற்குள்ளாகவே அந்த யுவதி சடுதியில் முன் பக்கமாகத் திரும்பினாள். அவன் அவளையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்ததை அவள் பார்த்து விடுவாளோ என்னவோ? இது எதிர்பாராத விதமாக வெகு சீக்கிரத்தில் நடந்துவிட்டது. விலாசன் தன்னையே கூர்ந்து கவனிப்பதை அவள் தெரிந்துகொண்டதும் அவன் மனத்தில் சற்று வெட்கம் பிறந்தது. அவள் ஏதாவது தப்பர்த்தம் செய்துகொள்ளுவாளோ?

ஆனால் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதும் விலாசனுக்கு அவள் ஏதாவது தப்பாக எண்ணியிருப்பாள் என்று தோன்றவில்லை. ஏனெனில் அவள் முகபாவனையே அவ்விதந்தான் இருந்தது. புருஷர்களுடைய பார்வையினால் கெட்ட எண்ணங்களைச் சமைத்துக்கொண்டு கஷ்டப்படும் பெண்களின் முகபாவனை அவளுக்குக் கிஞ்சித்தேனும் இல்லை. பெண்களைக் கண்டதுமே அவர்களுடைய முக அழகைப் பார்த்துக்கொண்டிருந்தே பழக்கமான விலாசனின் கண்களுக்கு அவளுடைய முகத்தில் மட்டும் அவ்விதமான அழகோடு மற்றும் உயர்ந்த எதையோ காண்பதாகத் தோன்றியது.

அந்தப் பெண் மிகவும் அழகானவளா குரூபியா என்று யாரேனும் அவனிடம் அந்த நேரத்தில் கேட்டிருந்தால், அந்தக் கேள்விக்கு விடை பகருவதற்கு அவனால் முடிந்திராது என்பது உண்மையே. அந்த யுவதியை நோக்கும் யாருக்கும் அவளுடைய வெளி அழகைக் காட்டிலும் அவளுடைய துணிவான பார்வையும் கம்பீரமான முகபாவமுமே முதலில் மனத்தில் பதியக் கூடியனவாக இருந்தன. கறுத்து விசாலமான அவளுடைய பெரிய பெரிய கண்களில் குளிர்ச்சி அதிகம் காணப்பட்டாலும் ஒரு விதமான திடத்தையும் அவை வெளிக்காட்டின. அவளுடைய கூரிய மூக்கு, அதிகமாய் வளர்ந்திருந்த கேசத்தினால் சற்றுச் சிறிதாகத் தெரியும் அவளுடைய பிறை நுதல், கோவைப் பழம் போல் சிவத்த சற்றுத் தடித்த அவளுடைய கீழ் உதடு, அவளுடைய கூர்மையான மோவாய் எலும்பு - இவைகள் அனைத்திலுங்கூட விலாசனின் மனம் செல்லவில்லை. ஆனால் இவைகளுக்கெல்லாம் புறம்பான அவளுடைய அந்தக் கம்பீரமான முகபாவமே அவன் கவனத்தை அதிகம் கவர்ந்தது.

அவள் விலாசனைப் பார்த்துச் சற்றுப் புன்முறுவல் செய்

தானோ என்னவோ? விலாசனுக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனால், "நீங்கள் விழித்துக்கொண்டீர்களா?" என்று ஆச்சரியமும் சந்தோஷமும் கலந்த பாவனையில் கேள்வி கேட்பது போல் இருந்தது அவளுடைய பார்வை.

என்ன பேசலாம் என்று விலாசனுக்குப் பிடிபடாமல் அவன் சற்று யோசிப்பதற்குள்ளாகவே அவள் அங்கிருந்து போய் விட்டாள்.

விலாசன் நாலா பக்கமும் தன் பார்வையைச் செலுத்தினான். அவன் வாழ்க்கையில் இது வரையில் விசேஷமாகக் கண்டிராத நூதன வஸ்துக்களே அங்கே காணப்பட்டன. எதிரிலும் பக்கங்களிலும் உள்ள சுவர்களில் ஏழெட்டுப் படங்கள் மாட்டியிருந்தன. அவைகளில் மகாத்மா காந்தியின் படத்தையும் பாலகங்காதர திலகருடைய படத்தையும் அவன் ஏற்கனவே பார்த்திருந்ததனால் சீக்கிரம் கண்டுகொண்டான். ஆனால் மற்றவர்களுடைய படங்களைப் பற்றி அவன் ஒன்றும் கண்டுகொள்ள முடியவில்லை. சுவரில் உள்ள அலமாரியில் பழைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் இவைகளின் கட்டுகள் காணப்பட்டன. ஒரு பத்திரிகையின் அட்டையில் 'யுவ இந்தியா' என்ற பெயர் கொட்டை எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. ஒரு மூலையில் மர ஸ்டூல் ஒன்றின் மேல் ஒரு ராட்டை இருந்தது. அதன் அருகில் கையால் நூற்கப்பட்டு, கையாலேயே சுற்றப்பட்ட சில நூல் பந்துகளும் இருந்தன.

இவ்விதமான பழக்கம் இல்லாத சாமான்களைப் பார்த்ததும் அவன் தனக்குள்ளாகவே பலவிதமாக எண்ணலானான்: 'இந்த வீடு யாருடையதாகத்தான் இருக்கலாம்? அரை நொடியில் காட்சியளித்து மறைந்துவிட்ட அந்த யுவதி யாரோ? அவள்தான் ஒருவேளை 'ஆசா'வோ?'

இதற்குள்ளாகவே அந்த யுவதி மறுபடியும் அவ்வறைக்குள் நுழைந்தாள். அவள் கையில் ஒரு கோப்பையும் செம்பும் காணப்பட்டன.

அவள் அருகில் வந்ததும் சற்றுக் குனிந்தபடியே, "வாய் கொப்பளித்துவிட்டு, இந்த டீயைச் சாப்பிடுகிறீர்களா?" என்றாள்.

விலாசன் எழுந்து உட்காருவதற்கு முயன்றபோது அவன் காலில் மறுபடியும் வலி தோன்றியதால், "ஹா, உஸ், ஐயோ" என்று வாய்விட்டுச் சொல்லி விட்டான்.

அவள் உடனே திடுக்கிட்டவளாகத் தன் கையில் உள்ளவை களைக் கீழே வைத்துவிட்டு, ''வேண்டாம், வேண்டாம்; நீங்கள் எழுந்து உட்கார முயல வேண்டாம். பாவூஜி உங்கள் கால்களில் கட்டுகள் போட்டிருக்கிறுர். நீங்கள் கூடிய மட்டும் அசையாமல் இருக்கவேண்டும்'' என்றுள்.

எனவே படுத்தபடியே விலாசன் வாய் கொப்பளித்ததும் டீயின் கோப்பையைக் கையில் வாங்கிச் சாப்பிடத் தொடங் கிஞன்.

அவன் அருகில் உட்கார்ந்தபடியே அவள் கொஞ்சும் மொழியில், ''நீங்கள் விழித்துக்கொள்ளுவீர்கள் என்று பாவூஜி இத்தனை நேரம் காத்திருந்தார். பிறகு இப்போதுதான் எழுந்து வயல் பக்கமாகப் போயிருக்கிறுர். நான் யாரைப் பாவூஜி என்று கூப்பிடுகிறேன் என்பதும், அவர் எனக்கு என்ன உறவு என்பதும் உங்களுக்குத் தெரியாதிருக்கையிலேயே என்னவோ பேசுகிறேன். இதில் உங்களுக்குச் சற்று ஆச்சரியங்கூட ஏற்பட்டிருக்கும்; அல்லவா? என் பெயர் 'ஆசா'. நான் பாவூஜி என்று குறிப் பிடுவது என் தகப்பஞர். இங்கே தளவலாவில் எங்களுக்குக் கொஞ்சம் நிலம் இருக்கிறது'' என்றுள்.

இதற்குள் விலாசன் டீ முழுவதையும் குடித்து விட்டான்.

வழக்கம்போல் அவன் கைகள் தலையணையின் கீழ்ச் சென்று எதையோ தேடின. ஆனுல் தேடின வஸ்து அகப்படாததனுல் அவன் முகத்தில் கொஞ்சம் ஏமாற்றம் ஏற்பட்டது.

அவள், ''என்ன வேண்டும்?'' என்று கேட்டாள்.

''ஒன்றும் இல்லை; சிகரெட். என் கோட்டின் பையில் இருக்கும். உங்களுக்குக் கஷ்டம் இல்லையாஞல் குடிக்கிறேன்.''

''கஷ்டம் என்ன?''

இப்படிப் பேசிக்கொண்டே அவள் அந்தக் கட்டிலின் மூலையில் இருந்த அவன் கோட்டின் பையில் கையை விட்டு முறையே சிகரெட்டையும் நெருப்புப்பெட்டியையும் கொண்டு வந்து அவனிடம் நீட்டிஞள்.

சிகரெட்டை உறிஞ்சிக்கொண்டே விலாசன், ''நான் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்றுன்.

''ஊஹூம், நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. ஆஞல் உங்களுக்கு விபத்து ஏற்பட்டதையும் தற்சமயம் நீங்கள் இவ்விடம் சுகமாய் இருப்பதையும் யாருக்கேனும் தெரியப் படுத்த வேண்டுமோ என்னவோ என்பதை அறியவே பாவூஜி

இத்தனை நேரம் காத்திருந்தார். யாருக்கேனும் விஷயத்தைத் தெரியப்படுத்த வேண்டுமா?''

''அப்படியானால் நான் சீக்கிரத்தில் இங்கிருந்து போக முடியாது என்று அர்த்தமா?''

''உங்களுடைய கால் சொஸ்தமாகும் வரையில் நீங்கள் இங்கேயே தங்கி இருப்பதுதான் நல்லது. நாங்கள் உங்களைப் பற்றிய முழுக் கவலையையும் எடுத்துக்கொண்டு பராமரிக்கிறோம். ஆனால் நீங்கள் வராததைக் குறித்துக் கவலைப்படும்படியாக யாரேனும் இருப்பின் அவர்களுக்கு உங்கள் விஷயமாகத் தகவல் தெரிவிப்பது நல்லது என்று எண்ணுகிறேன். யாருக்கேனும் தகவல் உண்டா? ரயில்வே ஸ்டேஷனில் உள்ள டெலிபோன் மூலமாகவாவது பேசலாம், இல்லையேல் தந்தி அடிக்கலாம்.''

''அப்போது லோனுவலாவிற்கு ஒரு தந்தி அடியுங்கள்.''

''அப்படிஎன்றால் நீங்கள் லோனுவலாவில் வசிப்பவர்களா?''

''இல்லை; எங்கள் வீடு பம்பாய் டவுனில் இருக்கிறது; ஆனால் நான் தற்சமயம் லோனுவலாவில் தங்கியிருக்கிறேன். நீங்களும் எப்போதும் பம்பாய் டவுனிலேயே வசிப்பவர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது; வாஸ்தவந்தானா?''

விலாசனுடைய இந்தக் கேள்வி சற்றும் எதிர்பாராததாக இருப்பினும், ஆசா தன் முகத்தில் ஆச்சரியக் குறிகள் ஒன்றும் காட்டவில்லை.

''ஆம்; என் காலேஜ் படிப்பு முழுவதும் முடிந்த பிறகு பிழைப்புக்கு ஏதாவது தொழில் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் பராலா ரோட்டில் பால் கிடங்கு ஒன்றை ஏற்படுத்தியுள்ளேன். ஏழை மக்களுக்குக் கூடுமான வரையில் மலிவாகச் சுத்தமான பால் கிடைக்கும்படி செய்வதே எனது நோக்கம். இந்தக் காரணத்தினால் எனக்கு ஏழைத் தொழிலாளிகளின் பரிசயமும் ஏற்படுகிறது; அரசியல் சம்பந்தமான சில விஷயங்களை அவர்களுக்கு விளக்கவும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.''

இப்படிப் பேசுகையில், தனக்கு மிகவும் நல்லது என்று தோன்றும் விஷயத்தைப் பற்றிப் பேசும்போது ஒருவருக்கு எவ்விதமான முகத் தோற்றம் இருக்குமோ அதே விதமான முகத் தோற்றம் ஆசாவிற்கும் ஏற்பட்டதை விலாசன் கண்டான்.

எதற்காகவோ, யார் கண்டார்கள்? அவன் உடனே, ''உங்கள் பெயர் எனக்குச் சரத்சந்திரன் மூலந்தான் முதலில் தெரியவந்தது'' என்றான்.

இவ்விதம் பேசியபோது ஆசாவின் முகம் சற்று ஆச்சரியத்தால் மாறியது போல் தோன்றிற்று. "அப்படியானல் சரத்சந்திரனை உங்களுக்கு அறிமுகம் உண்டா?" என்றாள்.

"ஆம்; முன்பெல்லாம் நானும் அவனுமாகப் பல தடவை டென்னிஸ் பந்தயம் விளையாடியிருக்கிறோம்."

"ரொம்ப நல்லதாகப் போச்சு; சரத்சந்திரன் இன்று இங்கே வரப் போகிறார்."

இனி ஆச்சரியப்படவேண்டிய முறை விலாசனுக்குத் திரும்பியது.

"சரத் எதற்காக இங்கே வருகிறான்?"

ஒரே வாக்கியத்தில் விடை கூறினால், புதிதாக வந்த விருந்தாளிக்கு விஷயம் புரியுமோ புரியாதோ என்று எண்ணியபடி ஆசா சற்று நேரம் வெறுமனே இருந்து விட்டுப் பிறகு, "அதன் காரணத்தை நீங்களே அறிந்துகொள்ள நேரிடும். நீங்கள் தயவு செய்து சற்று இளைப்பாறுங்கள். நான் உங்களை இத்தனை தூரம் பேசவைத்ததே என்மேல் தப்போ என்னவோ, நான் அறியேன்" என்றாள்.

இப்படிச் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே ஆசா கோப்பையையும் செம்பையும் எடுத்துக்கொண்டு வெளியே சென்றுவிட்டாள்.

விலாசன் மறுபடியும் அவளுடைய பின் தோற்றத்தைக் கூர்ந்து கவனித்தான். அவளுடைய கருத்து நீண்ட பளபளப்பான கேசத்தின் முடிப்புத்தான் எத்தனை நேரம் அவன் கண்முன் நிற்கும்! மனக் கண்முன் அந்த அழகியின் சிவந்த பிடரியில் கிடந்த கூந்தல் பந்தையே கண்டுகொண்டிருந்தாலும் அவள் பழக்கத்திலும் காலடிச் சத்தத்திலுமே அவன் கவனம் சென்று கொண்டிருந்தது.

## அத்தியாயம் 7

முற்றும் எதிரிடையான குணங்களையுடைய இரண்டு வஸ்துக்களோ இரண்டு மனிதர்களோ சேர நேரிட்டு, அவர்களுக்குள் நெருக்கமான பழக்கமும் ஏற்பட்டால், ஒருவரின் மேல் மற்றொருவருக்குக் கவனமும் கவர்ச்சியும் உண்டாகும் என்பர். ஏன், பொதுவாகவே வெவ்வேறு குணங்களுடைய ஸ்திரீ புருஷர்களிடையேதான் கவர்ச்சி தோன்றும் என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். இந்தக் கவர்ச்சியே காதல் என்று பொருள் படுமானால் அப்படிச் சொல்லுவது பொருத்தமாகுமோ என்னவோ, யார் கண்டார்கள்? ஆனால் கவர்ச்சியைக் காதல் என்று கொள்ளுவது தவறே ஆகும்.

உலகத்திற்கே பொதுவான உண்மைதானே விலாசன் விஷயத்திலும் ஏற்படும்? அவன் விஷயத்தை மட்டும் நாம் எடுத்துக் கொள்வோமானால், அவன் ஆசாவைக் கண்டது முதல் அவளுடைய புதிதான பழக்க வழக்கங்களிலும் முறைகளிலும் அவன் மனம் நாட்டம் கொண்டது. அதைத் தவிர வேறு எண்ணம் ஒன்றும் அவனுக்கு உண்டாகவில்லை. ஆசாவின் மனத்திலும் விலாசனைப் பற்றிய எண்ணமே நிலவியது என்பதை விலாசன் அறிய இடமில்லை. சிறந்த கல்வி பயின்ற ஒரு ஹிந்துக் குடும்ப ஸ்திரீ, வீட்டிற்கு வந்த விருந்தாளியை எப்படி உபசரித்துப் பராமரிக்க வேண்டுமோ அப்படியே குறைவில்லாமல் அவனை உபசரித்துக் கவனித்துக்கொள்ள ஆசா தயங்கவில்லை. இது விலாசனுக்கும் நன்கு புலனாயிற்று.

எந்தச் சமயத்தில் அவள் விலாசனுடன் நெருங்கிப் பழகி ஏதாவது பேசிக்கொண் டிருக்க நேரிட்டதோ அந்த சமயத்தி லெல்லாம் ஆசா அரசியல் விஷயங்களையும் சமூக சீர்திருத்த விஷயங்களையுமே அதிக ஆத்திரத்துடனும் உத்ஸாகத்துடனும் பேசிக்கொண் டிருந்ததை விலாசன் கவனித்தான். சிற்சில சமயங்களில் விலாசன் அவள் பேசியபோது, "இந்த விஷயங் களைப் பற்றி நான் இதுவரையில் ஒன்றுமே சிந்தித்தது கூடக்

கிடையாது. இவைகள் எனக்குப் பிடிக்காத விஷயங்கள்'' என்றும் சொல்லுவான். அதற்கு மறுமொழியாக ஆசா, ''நீங்கள் என்னை இதற்கு முன்பு சந்தித்திருந்தால் அப்போது முதலே நீங்கள் இந்த விஷயங்களைப் பற்றிச் சற்றுச் சிந்தனை செய்திருப்பீர்கள்'' என்று சிரித்துக்கொண்டே சொல்லுவாள். ஆனால் கேவலம் இவைகளினால் எல்லாம் ஆசா தன்னைப் பற்றியே நினைத்துக்கொண்டிருப்பாள் என்று புரிந்துகொள்ள விலாசனால் முடியவில்லை. அவள் தன்னைப் பற்றிச் சிறிதும் எண்ணியே இருக்க மாட்டாள் என்றும் விலாசன் முடிவு கட்டி விடவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்: விலாசனுக்கு ஆசாவைப் பற்றிய நினைப்பே இன்பத்தைக் கொடுத்தது. எனவே அவன் அவளைப்பற்றிய சிந்தனையிலேயே ஆனந்தமாகக் காலங் கழித்தான்.

இப்போதும் ஜன்னலின் வழியாக, எதிரிலுள்ள மனோகரமான இயற்கைக் காட்சிகளைக் கண்ணுற்ற வண்ணம் படுத்துக் கொண்டிருந்தாலும் அவன் மனக் கண் முன் ஆசாவின் உருவமேதான் நின்றுகொண்டிருந்தது.

நேற்றுத்தான் சரத்சந்திரன் பம்பாயிலிருந்து தளவலாவிற்கு வந்திருந்தான். இன்று காலையில் அவனும் ஆசாவும் சேர்ந்து புனாவிற்குப் போயிருந்தார்கள். புனாவில் இருந்த சில தேசீயத் தலைவர்களைச் சந்தித்துப் பேசித் தளவலாவின் சத்தியாக்கிரகத்திற்குத் தொண்டர்களை அனுப்புவதன் விஷயமாகப் பேசி வரவே ஆசா புனாவிற்குச் சென்றிருந்தாள். அவ்விருவரும் முடிந்தால் இன்று மாலையிலேயே தளவலாவிற்குத் திரும்பி விடுவார்கள். ஆசாவின் தகப்பனார் - பாலூ ஸாஹிப் - மட்டும் அவர்களுடன் புனாவிற்குப் போகாமல் அங்கேயே தங்கி இருந்தார். ஆசா அவரிடம், ''பாலூஜி, நீங்கள் எதற்காக அனாவசியமாகப் புனாவிற்கு எங்களுடன் வரவேண்டும்? நீங்கள் நடத்தப் போகும் சத்தியாக்கிரகமும் மறியலும் முற்றும் பொருத்தமானவை என்பது உங்கள் எண்ணம். தர்மத்திற்காக நடத்தப் படும் இந்த மறியலில் எல்லா ஸ்திரீ புருஷர்களும் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு வந்து சேருவார்கள் என்றும் நீங்கள் நம்புகிறீர்கள். உலகம் உங்களைப் போன்ற சாதுக்களால் நிரம்பி இருக்கவில்லை என்பதை அறிய உங்களால் இயலாது. புனாத் தலைவர்கள் கேவலம் மேடைப் பிரசங்கம் செய்வதற்கும், தம்மைப் பிரதானர் ஆக்கிக்கொள்ளுவதற்கும் வேண்டியே

தேச சேவையில் பெயர் அளவில் ஈடுபட் டிருக்கிறார்கள். அவர்களை நீங்கள் சந்திக்க நேரிட்டால் உங்களுக்கும் அவர்களுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுக் கடைசியில் தொண்டர் படை நமக்குக் கிடைக்காமல் போனாலும் போகலாம்'' என்று சொல்லிச் சென்றாள்.

''ஆனால் சும்மா வாயைப் பொத்திக்கொண்டு இருக்க முடியுமா? தலைவர்கள் என்று பெயர் மட்டும் வாங்கிக் கொண்டு சமயம் வரும்போது தட்டிக் கழிப்பவர்கள்தாம் தேச சேவை செய்பவர்களா? இவர்களுக்கு வேண்டியதெல்லாம் ஏதாவது நல்ல உத்தியோகமும் பெயருந்தாம். இன்று திலகர் மட்டும் உயிரோடிருந்தாரானால் அப்போது தெரியும் இந்த வெறும் சக்கைகளின் பாடு'' என்று சரமாரியாகப் பேச ஆரம்பித்துவிட்டார் அவர்.

ஆனால் ஆசா அவருடைய பேச்சில் குறுக்கிட்டு, ''ஆகையால் தான் நான் உங்களை இப்போது புனாவிற்கு வரவேண்டாம் என்கிறேன்; புனாத் தலைவர்களை மசியவைத்து எப்படியாவது தொண்டர் படையை அனுப்பும்படி செய்வதுதான் எங்கள் முயற்சி. நீங்கள் வந்தால் சண்டைதான் வரும். சத்தியாக்கிரகம் துராக்கிரகந்தான் ஆகும். ஆகையால் நீங்கள் வரவேண்டாம் புனாவிற்கு'' என்றாள்.

ஆனால், ஆசா தன் தகப்பனாரைப் புனாவிற்கு வரவேண்டாம் என்று தடுத்ததை விலாசன் வேறு விதத்தில் அர்த்தம் செய்து கொண்டான். வீட்டில் ஒரு புதிய ஆசாமி நடக்க முடியாமல் படுத்திருக்கும்போது எல்லோருமாகப் புனாவுக்குப் போய்விடுதல் நல்ல காரியமாக அவளுக்குப் பட்டிருக்காது என்பதனாலேயே, அவள் தன் தகப்பனாரைப் புனாவுக்கு வராமல் தடுத்திருக்க வேண்டும் என்று விலாசன் எண்ணினான். ஆனால் தன் எண்ணத்தைச் சரிவர வெளிக்காட்டிக் கொள்ளாமல் அதை வேறு விதமாகச் சொல்லிச் சமாளித்துக் கொண்ட ஆசாவின் சாமர்த்தியத்தை அவன் உள்ளூற மெச்சிக்கொண்டான்.

இந்த எண்ணங்களெல்லாம் இப்பொழுதும் அவன் மனக்கண் முன் தோன்றின.

ஆசாவின் ஆசிரமத்தின் நடுவில் பெரிய முற்றம் ஒன்று இருந்தது. அந்த முற்றத்தின் ஓரத்தில் ஓர் அழகான திண்ணை; முற்றும் சாணி தெளித்துச் சுத்தமாகக் கூட்டப்பட்டிருந்தது, திண்ணையையும் சாணியால் மெழுகி, வழ வழ என்று பளிங்கு

போல் தேய்த்திருந்தார்கள். அந்தத் திண்ணையின் மீது ஒரு பாயை விரித்து, இரண்டு தலையணைகளை முட்டுக்கொடுத்து விலாசனைச் சாய்மானமாக உட்கார வைத்திருந்தார் பாலூ ஸாஹிப். அவர்களிடையே பேச்சு அதிகம் நடக்கவில்லை. ஏனெனில் இருவர் மனப்போக்கும் கொள்கைகளும் முற்றும் வேறுபட்டவை! இயற்கைக் காட்சியைக் கண்டு அதையே ரசித்துக்கொண் டிருப்பதாக இருவரும் பாவனை செய்தார்களே ஒழிய மனத்தில் வேறு விஷயங்கள்தாம் வேலை செய்துகொண் டிருந்தன. ஆனால் அவர்களுக்கு எதிரே இருந்த இயற்கைக் காட்சி மட்டும் உண்மையிலேயே காணத் தகுந்த காட்சியே.

அந்த ஆசிரமத்திலிருந்து சற்றுத் தூரத்தில் சிறிய அழகிய சிவாலயம் ஒன்று இருந்தது. தளவலாவின் குடி படைகள் அந்தச் சிவமூர்த்தியைக் கண் கண்ட தெய்வமாகவே மதித்துவந்தனர். கோவில் வாசற்படியைச் சுற்றி விளக்குகள் வரிசையாக இருந்தன. இருபுறங்களிலும் வேம்பும் வில்வமும் நட்டுப் பயிராக்கப்பட் டிருந்தன. பங்குனி மாதக் கடைசி ஆகையால் வேப்ப மரங்கள் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தன. இயற்கையிலேயே காலை வேளையில் பூக்கும் பூக்களுள் வேம்பும் ஒன்று. ஆதலால், அந்த மனோகரமான மாலையில் வேப்ப மரத்தின் அன்றலர்ந்த மலர்களின் நறுமணம் எங்கும் பரிணமித்தது. தூரத்தில் ஓர் உயரமான மரத்தின் உச்சியில் இரண்டு ஆந்தைகள் உட்கார்ந்திருந்தன. பகல் முழுவதும் மரப் பொந்திலேயே மூச்சுத் திணற அடங்கிக் கிடந்த அந்தப் பறவைகள் இப்போது சூரியாஸ்தமனம் ஆன பிறகாவது திறந்த வெளியில் சற்றுப் பறக்கலாம் என்று எண்ணி னவோ என்னவோ யாருக்குத் தெரியும்? ஆனால் அவைகளின் பார்வை அவ்விதம் நினைப்பது போலத்தான் இருந்தது. அவைகள் இலைகளின் இடுக்குகளின் வழியாகப் பயந்து கொண்டே எட்டிப்பார்த்தன. அவைகளுக்கு அப்பால் தரை, சற்று மேல் நோக்கி ஏற்றமாகக் காணப்பட்டது. மேட்டின் ஓரத்தில் ஒரு சிறு வாய்க்கால் ஓடிக்கொண் டிருந்தது. வாய்க்காலின் அக்கரை வர வர உயர்ந்து சென்றபடியே இருந்ததால் அங்கே கரையோரங் களிலும் படுகையிலும் செழித்து வளர்ந்திருந்த பச்சை, மஞ்சள் முதலிய வர்ணங்களுடைய புல்லை மாடுகள் மேய்ந்துகொண் டிருப்பது நன்றாகத் தெரிந்தது.

இவைகளின் முதுகில் உட்காருவதை ஒரு சிறந்த விளையாட் டாகக் கருதும் குயில்களும் மைனாக்களும் ஒரே இடத்தில் உட்

கார மனம் இல்லாமல் இடையிடையே காற்றில் சுற்றிப் பறந்து விட்டு மறுபடியும் அந்த மாடுகளின் முதுகிலேயே வந்து உட்கார்ந்தன. இடம் விட்டு இடம் பெயர்வதில் அவைகளுக்கு ஆனந்தந்தான் என்னவோ? குயில்களின் கூட்டம் ஒன்று பறந்து வந்து மாட்டின் மேலேயே உள்ள பறவைகளுக்கு மாலை முடிந்து இரவு சமீபித்துவிட்டதை அறிவிப்பது போல் கீழ் நோக்கித் தரைவரையில் இறங்கிச் சடுதியில் மேலே சென்றுவிடும். சற்றுத் தூரத்தில் சிறு சிறு கூரைகளை எல்லாம் மறைத்துக்கொண்டு நின்றிருந்த மரங்கள்தாம் எத்தனை வகைகள்! ஆனால் முள்ளு முருங்கை மரங்கள் மட்டும் சிவப்பான அவைகளுடைய புஷ்பங்களின் மூலம் வேருகத் தெரிந்துகொண்டிருந்தன. எட்டி நின்று பார்ப்பவர்களுக்கு முள்ளு முருங்கை மரத்தின் புஷ்பங்கள் அந்த மரத்திலேயே இயற்கையாகப் பூத்தன என்று தோன்ருது. ஆனால் ரத்த வர்ணமுடைய பந்துகளை நிறைய அம்மரக் கிளைகளில் யாரேனும் கட்டி இருப்பதுபோலவே தோன்றும். இந்தச் செந்நிறத்திற்கு இரட்டிப்பு அழகைக் கொடுக்கக்கூடிய மற்ருெரு காட்சி அதற்குப் பின்னல் வெகு தூரத்திலிருந்த மலைகளின் நீல நிறமான தோற்றமே ஆகும். வெகு தூரம் வரையில் தெரிந்துகொண்டிருந்த அந்தக் காட்சியில் மாலை வேளையின் மங்கிய வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்தது. அந்த வெளிச்சத்தில் தெரிந்த காட்சிகள் ஒரு மெல்லிய திரை வழியாகக் காணும் காட்சிபோல் தெளிவற்றனவாகவே காணப்பட்டன.

ஆனல் இவ்வித மனோகரக் காட்சியில் மட்டும் விலாசனின் கவனம் சென்றுகொண்டிருக்கவில்லை. இடையிடையே அவன் கவனம் வேறு விஷயங்களிலும் சென்றது. அவன் சிந்தனை செய்ததெல்லாம் இரண்டே விஷயங்களைப் பற்றித்தான். ஒன்று, ஆசாவின் லாவண்யமும் கம்பீரமும்; இரண்டாவது, சரத்சந்திரன் அன்று அவனிடம் சொல்லியிருந்த ஒரு மகத்தான விஷயம். அவன் அதிகமாய்க் கவலைப்பட்டுக்கொண்டிருந்தது பின் விஷயத்தைப் பற்றியே ஆகும்.

ஆசாவை முதல் முதலில் சந்தித்த போதுங்கூட அவளுடைய அழகைக் காட்டிலும் அவள் முகத்திலுள்ள ஒரு விதமான கம்பீரத்தையே விலாசன் அதிகமாய்க் கவனித்தான். பிறகு ஆசா அவனுடன் தாராளமாகப் பழகிய போதும் அப்படியேதான் விலாசன் அவளைப் பார்த்தான். அவ்விதமான கம்பீரத்

தோற்றத்தை நீக்கிவிட்டுப் பார்த்தாலும் ஆசா ஓர் அசாமானிய அழகிதான் என்று விலாசன் இப்போதுதான் எண்ணலானன். இவ்வளவு அழகு பொருந்திய ஒருத்தியின் மனமும் உயர்ந்த கொள்கைகளை உடையதாகவே இருக்கும் என்று எண்ணியவனாய் விலாசன் அவளுடைய அரசியல் கொள்கைகளைப் பற்றிய நன்மை தீமைகளையும் மனத்தால் ஆராய்ந்தான்.

ஆசாவைப் போன்ற ரூபவதியைக் காண்பது விலாசனுக்கு இதுதான் முதல் தடவை அன்று. சுதேசத்திலும் அன்னிய தேசத்திலும் அவன் எவ்வளவோ அழகிகளுடன் பழகியிருக்கிறான் என்பது உண்மையே. ஆனால் அவர்களைக் கண்ணுற்றபோது அவர்களுடைய அழகிய ஆடைகள், கொஞ்சம் அலட்டிக் கொண்டதும் ரத்தம்போல் மாறும் அவர்களுடைய மெல்லிய சரீரம், அவர்களுடைய சொகுசான வாழ்க்கை இவைகளையே அவன் கண்டிருந்தான். ஆனால் முரட்டு நூலினால் ஆன கதர்ச் சேலையைக் கட்டிக்கொண்டு மகாத்மா காந்தியின் கொள்கைகளில் நம்பிக்கையோடு, தேசசேவை செய்பவளும், சமூக சீர் திருத்தம் செய்வதனால் வரும் அபசாரங்களையும் அவதூறுகளையும் பொருள்படுத்தாது நிற்கும் வீரப் பெண்ணும் ஆன ஆசாவை அவன் சந்தித்ததும் எப்போதும் ஏற்படாத ஒருவித மனக் கலக்கம் விலாசனுக்கு ஏற்பட்டது. ஓர் அழகிய வஸ்து பொருத்த மில்லாத சுற்றுப் புறத்தின் நடுவில் இருப்பதாகவே அவனுக்குப் பட்டது. முன் ஒரு தடவை அவனுக்குத் தெரிந்த சித்திரகாரன் ஒருவன் ஓர் அழகிய படத்தைப் பற்றிப் பேசியது அவன் ஞாபகத் திற்கு அச்சமயம் வந்தது. "சித்திரம் மிக அழகாய்த்தான் இருக்கிறது; ஆனால் அதன்மேல் போடப்பட்ட சட்டமும் கண்ணாடியும் பொருத்தமே இல்லை" என்றான் அவன்.

சுருங்கச் சொன்னால், ஆசாவைப் பற்றி நினைக்கும்போது அவளுடைய அழகைப் பற்றியும் கல்வியறிவு படைத்த புத்தி கூர்மையைப் பற்றியும் ஆனந்தப்பட்டானோ, அவளுடைய அரசியல் கொள்கையைப் பற்றியும் அவள் காதல் அந்நியன் மேல் இருப்பதாகவும் நினைத்து மனக் கலக்கம் அடைந்தானோ - அதை அவனுக்கே சொல்லத் தெரியாது என்பது நிச்சயம்.

இவ்விதமாக அவன் தீவிரமான யோசனையில் ஆழ்ந்திருந்த போது அவன் நெஞ்சு உணர்ச்சியின் வேகத்தினால் கொந் தளித்தது. அக உணர்ச்சிகளின் குறிகள் முகத்தில் தெரிந்தன. அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். தான் இவ்விதம்

மூச்சு விட்டதை ஆசாவின் தகப்பனார் கூர்ந்து கவனித்தாரோ என்னவோ என்று அவன் சந்தேகப்பட்டான்.

தன் மனத்தில் உண்டான உணர்ச்சிகளை அவர் எங்கே கண்டு கொள்ளுவாரோ என்ற ஐயத்தினால் அவன் உடனே, ''இந்த மாலைக் காட்சிதான் எத்தனை ரம்மியமாக இருக்கிறது பார்த்தீர்களா?'' என்றான்.

பாலூஸாஹிப் சற்றுப் புன்முறுவல் செய்துவிட்டு விலாசனைப் பார்த்து, ''உண்மையாகவே இந்தக் காட்சி உங்களுக்கு ஆனந்தம் தருகிறதா?'' என்றார்.

''இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள்? இவ்வளவு அழகிய காட்சியைக் கண்டு ஆனந்திக்க முடியாதவனுடைய கண்களுக்கு ஏதாவது கோளாறு என்றுதான் சொல்ல முடியும்.''

''விலாஸ்! நன்றாகக் கவனித்துப் பேசுங்கள்; உங்கள் பேச்சினாலேயே உங்கள் கொள்கை பொய் என்று ஸ்தாபிக்கப் படலாம்!''

''நீங்கள் சொல்லுவது எப்படிப் பொருந்தும்?''

பாலூ ஸாஹிப் ஒரு பெருமூச்சு விட்டுப் பதில் கூறினார்: ''இவ்வளவு அழகும் செழிப்பும் உள்ள ஒரு கிராமத்தைப் பணத்திமிர் பிடித்த முதலாளிகள் அழித்து நாசமாக்க முன்வந்து வேலையையும் ஆரம்பிக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர். அந்த ராக்ஷசர்கள் கூட்டத்தில் உத்தியோகம் பார்க்கும் எண்ணத்துடன் நீங்களும் சேர்ந்திருக்கிறீர்கள்! விலாஸ்! தாறுமாறாகப் பேசி உங்கள் மனத்தைப் புண்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை. ஆனால் வெளியே வந்து இந்த அழகான காட்சியைக் காணுந்தோறும் இது இனி அழிந்துவிடக் கூடியது தானே என்ற கவலை மனத்தை வாட்டுகிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.''

''இது மிகச் செழிப்பான இடம். இங்கே அணைக்கட்டுக் கட்டப்படுவதால் இந்தச் செழிப்பான வயல்கள் அழிந்துவிடும் என்ற விஷயத்தை நான் அறிவேன். ஆனால் இந்த விஷயத்திற்காக ஏன் துக்கப்பட வேண்டும் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. இந்தச் செழிப்பின் இயற்கை அழகு அழிந்து விட்டால் அந்த இடத்தில் வேறு விதமான செயற்கை அழகு ஏற்படப் போகிறது அல்லவா? நீல நிறமான தண்ணீர்ப் பரப்பைக் கொண்ட ஒரு பெரிய அணைக்கட்டுத் தேக்கம், பார்க்க அழகாய் இருக்காது என்று நீங்கள் சொல்லுவீர்களா? அணைக்

கட்டின் தேக்கத்தைச் சுற்றிலும் போடப்படும் விஸ்தாரமான ரஸ்தாவின் இருபுறங்களிலும் வித விதமான அன்னிய நாட்டு விருக்ஷங்கள் நடப்படும். நாளாவட்டத்தில் அவை பெரியன வாகிக் குளிர்ந்த நிழலேத் தரும். தேக்கத்தின் அதிகப்படியான தண்ணீரை வெளியே விடுவதற்காகக் கீழே கமான் வளேவுகள் கட்டப்பட்டு அவைகளில் பலகைகள் செருகப்படும். கண்களின் வழியாக ஜலம் ''ஜோ'' என்ற சத்தத்துடன் வெளியே பாய்ந்து, பிறகு 'சல சல' என்ற ஒலியுடன் வாய்க்காலில் ஓடுவது என்ன குறைச்சலான அழகு என்று நான் கேட்கிறேன்? கேவலம் ஒரு வஸ்து அழகாய் இருப்பதனுல் அதன்மேல் கைவைக்கக் கூடாது என்ற கொள்கை உண்மையானது என்றுல் உலகத்தில் இன்று இவ்வளவு மாறுதல்களும் ஜனப் பெருக்கமும் ஏற்பட்டிராது என்பது திண்ணம். ஏன், காட்டில் வளர்ந்த பெரிய பெரிய மரங்கள் மட்டும் அழகாகக் காணப்படவில்லேயா? ஆனுல் காகிதம் செய்வதற்காக அந்த மரங்களின்மேல் நம் கோடாலி விழுவது மட்டும் தேவையில்லேயா? நான் இவ்விதம் படபடப் பாகப் பேசியதனுல் உங்களுக்கு ஒருவேளே கோபங்கூட....''

''இல்லே; கோபம் வரவில்லே. ஆனுல் வெறுப்பு மட்டும் உண்டாகாமல் இல்லே. நீங்கள் சொல்லும்படியான மறுப்புக் களும் தர்க்கங்களும் நான் இன்றுதான் புதிதாகக் கேட்பன அல்ல. ஆனுல் குதர்க்கம் பேசியே காரியத்தைச் சாதிக்கும் உங்களேப் போன்ற வாலிபர்கள் வரிந்து கட்டிக்கொண்டு இந்த அணேக்கட்டுத் தேக்கத்தைப் பற்றிய விளம்பரம் கூறுகிறீர்களே, அதைக் கேட்டுக் கேட்டுத்தான் எனக்கு வெறுப்புத் தட்டு கிறது. எந்த மாத்ரு பூமி எங்களேச் சம்ரக்ஷித்ததோ, எந்தப் பூமியை நாங்கள் உழுது விதைத்து அறுத்துக் களஞ்சியங்களில் பலனேக் கொட்டி, எங்கள் சரீரத்தைப் புஷ்டியாக்கிக் கொண் டோமோ அந்தப் புண்ணிய பாரத பூமியை, எந்த இடத்தில் நாம் நம் குல தெய்வங்களுக்குக் கோயில் கட்டி ஆராதனே செய் தோமோ அந்த இடத்தை நாங்கள் விட்டுப் பிரிந்து செல்லுவது என்றுல் எங்கள் மனத்திற்கு எத்தனே சஞ்சலம் ஏற்படும் என் பதை நீங்கள் சற்றேனும் யோசனே செய்து பார்த்தீர்களா?''

விலாசன் ஒரு கணம் பதில் ஒன்றும் பேசவில்லே. இந்த விதமான கடினப் பிரச்னேக்கு எந்த விதத்தில் பதில் சொல்லுவது என்பது அவனுக்கு விளங்கவில்லே. மேலும் அரசியல் விஷயங் களில் அவன் வாத விவாதம் செய்தும் பழக்கம் இல்லே. ஒரு

நாளும் விளையாடாத ஒரு புது விளையாட்டு விளையாட வேண்டும்; அந்தப் புதிய விளையாட்டிலும் நான் ஜயித்துவிட வேண்டும் என்ற ஒருவித மனோபாவனை அவனுக்கு உண்டாயிற்று. பாலூ ஸாஹிப்புக்குக் கொடுக்க வேண்டிய பதில் எவ்விதம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அவன் எண்ணலானான்.

''நீங்கள் நன்றாக யோசனை செய்து பாருங்கள். இந்த உலகத்தில் கேவலம் சில இச்சைகளையும் பந்தங்களையும் விட்டுக் கொடுக்காவிடில் எந்தக் காரியமும் நடைபெறாது. இந்த அணைக் கட்டுக் கட்டிடம் முடிந்து தேக்கத்திலிருந்து பீரிட்டுக்கொண்டு செல்லும் பிரவாகத்தின் வேகத்தின் மூலம் மின்சாரச் சாலைகளை உற்பத்தி செய்து, அதன் மூலம் நூல், துணி இவைகளும் செய்யப் படுமாகில் அதனால் எத்தனை ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு உத்தியோகம் கிடைக்கும் என்பது உங்களுக்குத் தெரியும்....''

பாலூ ஸாஹிப் உரத்த குரலில், ''இந்த ராமாயணமெல்லாம் நான் ஆயிரம் தடவை கேட்டாகிவிட்டது. இவைகளைக் கேட்டுக் கேட்டு என் காதுகளும் புளித்துவிட்டன! அடேயப்பா! என்ன கருணை! ஆயிரக்கணக்கான ஏழைகளுக்காக ஏன் பரிந்து பேசுகிறீர்? இந்த ஊரில் உள்ள சில ஏழைகள் விஷயத்தில் தயை எங்கே போய்விட்டது? ஒருவர் மீது தயை காட்டாத உங்களுக்கு ஆயிரம் பேர்கள் மேல்தான் தயை பிறந்துவிட்டதோ! சோரப்ஜீ தீன்ஷா கம்பெனியார் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு வேலை கொடுக்கும் நோக்கத்துடன் மட்டும் இந்த வேலையை ஆரம்பித்துள்ளனர் என்பது நிச்சயமாய் உங்களுக்குத் தெரியுமா? லட்சக் கணக்கான ரூபாய்கள் இதன் மூலம் லாபம் கிடைக்காவிடில் உங்கள் முதலாளிகள் ஆரம்பித்திருப்பார்களா இந்தத் திட்டத்தை? ஏன்! பேசுங்களேன். ஏழை மக்களின் நிலத்தைப் பிடுங்கிக்கொண்டு அதற்குப் பதில் பணமாகக் கொடுத்தால் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஏழைகள் என்ன......'' என்று பேசிக் கொட்டினார்.

''பிடுங்கிக்கொண்டு என்று சொல்வது எப்படி உண்மையாகும்? நிலத்தின் பெறுமான விலையைக் கொடுத்துவிட்டுத் தானே முதலாளிகள் அதை வாங்கிக்கொள்கின்றனர்? இது எப்படிப் பிடுங்குவதாகும்?''

''விலாஸ்! நீங்கள் எப்போதாவது, உங்கள் உயிரைவிட அதிகமான பிரியம் ஒரு பண்டத்தின்மேல் வைத்தது உண்டா?''

இந்த எதிர்பாராத கேள்வியினால் விலாசனின் மனத் திடம்

சற்றுக் குறைந்தது. அவன் தன் மனத்தையே சந்தேகிக்கத் தொடங்கிவிட்டான். ஆம், இன்றுவரையில் அவன் ஒரு பொருளையும் உயிரினும் அதிகமாய் நேசித்ததில்லை. ஒரு பெண் மீதுகூட அவன் பிரேமை விழுந்ததில்லை. மனச் சாட்சி ஆக்ஞா பித்தபடியே அவன் சரியான பாதையில்தான் இன்றுவரையில் நடந்துவந்தான்.

அவன் மௌனமாய் இருந்தான். எனவே பாஹூஸாஹிப் மேலே பேசத் தொடங்கினர்.

''உங்கள் தாயாரின் மீதாவது உங்கள் அன்பு இருக்கத்தான் செய்யும். சற்றுக் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் தாயின் படத்தை ஒரு பெரிய முதலாளி விலைக்குக் கேட்டும், நீங்கள் கொடுக்கமுடியாது என்று சொன்னவுடன் இன்னும் ஆயிரம் ரூபாய் சேர்த்துத் தருகிறேன் என்று......; நான் சொல்லுவதன் உட்பொருள் உங்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். எனவே எங்கள் நிலத்தின் ஒவ்வோர் சதுர அடியின் மேலும் தங்க நாணயங்களைக் குவித்தாலுங்கூட, எங்கள் தாய்ப் பூமியை விலைக்கு விற்க மாட்டோம். அதன்மேல் எங்களுக்கு உயிர். நீங்கள் 'நிலத்தின் பெறுமான விலை' என்கிறீர்கள்! பெறுமான விலையை யார் நிர்ணயிப்பது? நாங்களா? இல்லை, இல்லை! ஆனால் கம்பெனியின் அத்தியந்த நண்பர்களான அரசாங்க உத்தியோகஸ்தர்கள்! பெரிய பெரிய ஜமீன்தார்களுக்குத் தேவைக்கு அதிகமான பணம் கொடுத்தும், ஏழைகளுக்கு ஏறக்குறைய ஒன்றுமே இல்லாமலும் இந்த நிலங்களைச் சுருட்டிக்கொள்ள உங்கள் கம்பெனி முயற்சி செய்கிறது. ஆனால் போகிறது கழுதை! உங்களுடன் ஏன் நான் வாத விவாதம் செய்ய வேண்டும்? நீங்கள் எங்கள் வீட்டில் தங்கும் தாற்காலிக விருந்தாளி. எங்கள் சுக துக்கத்தில் உங்களுக்கு என்ன கவலை? நாங்களாச்சு, எங்கள் சங்கடமாச்சு! நியாயத்திற்காகச் சண்டையும் போடுவோம், சண்டையில் உயிரையும் விடுவோம்!''

இவ்விதம் பேசிய பிறகு பாஹூ ஸாஹிப் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். தலையைத் திருப்பி வேறு பக்கம் பார்வையைச் செலுத்தினர். அவருடைய இந்த உணர்ச்சி பொருந்திய பேச்சு விலாசனின் நெஞ்சில் நன்ருகப் பதிந்துவிட்டது. இவ்வளவு வேகமான பேச்சை அவன் இன்றளவும் கேட்டதே இல்லை. உயிரை விடுவதாகவும், எல்லா விதமான கஷ்டங்களையும் ஏற்றுக் கொள்ளுவதாகவும் அவர் சொன்னது விலாசனுக்குப் பொறுக்க-

முடியவில்லை. ஏனோ, யார் கண்டார்கள்? அவனுக்கு உடனே ஆசாவின் ஞாபகம் மனத்தில் உதித்தது. அந்த அர்த்தமற்ற, பிரயோஜனமில்லாத மறியலில், கோமள தேகமும் மென்மையும் அழகும் பொருந்திய அந்தப் பெண் (ஆசா) சேர்ந்து சத்தியாக்கிரகப் போர் நடத்துவதா? அவளுடைய இந்தத் தகப்பனார் தம் உயிரை...., சீ, சீ, இவ்விதக் கற்பனைகூட அவனுக்குப் பயங்கரமாக இருந்தது. அவன் உடனே, "நீங்கள் உயிரை விடுவதைப் பற்றி வெகு சுலபமாகப் பேசிவிடுகிறீர்களே; சாவது சுலபமான காரியம் என்று எனக்குப் படவில்லை. உங்களுடைய இந்த மறியலின் தன்மை எவ்விதமாய் முடியும் என்பது தெளிவாக இருக்கிறது. நீங்கள் வானத்தை வில்லாக வளைத்தாலுங்கூடக் கம்பெனியார்கள் அணைக்கட்டுக் கட்டாமல் நிறுத்தப் போவதில்லை. கம்பெனியார்களிடம் பணத்தின் பலம் நிறைய இருக்கிறது. அரசாங்கத்தார் முதலாளிகளுடன் ஒத்து உழைக்க அவர்கள் பக்கத்திலேயே தயாராக நின்றுகொண்டிருக்கின்றனர். உங்களுடைய மறியலைப் பூண்டோடு ஒடுக்கிவிடக் கம்பெனியார் அதிகச் சிரமங்கூடப் படவேண்டியதில்லை. இவ்விதமான சந்தர்ப்பங்களில் வெறும் பிடிவாத குணம் மட்டும் வைத்துக்கொண்டு காரியங்களை நடத்துவது எனக்குக் கட்டோடு பிடிக்கவே இல்லை" என்றான்.

விலாசனை மேலே பேசாதபடி நிறுத்த பாலூ ஸாஹிப் உடனடியாகவே, "எந்த விஷயம் எங்களுக்குப் பலனளிக்கக் கூடியதாகப் படுகிறதோ அது பிரயோஜனமில்லாத குப்பை என்று தள்ளும் உங்களைப் போன்ற மனிதர்கள் எவ்வளவோ பேரை நான் பார்த்திருக்கிறேன். எங்களுக்கு நல்லது என்று படும் இந்தக் கொள்கை எங்கள் ரத்தத்திலேயே ஊறிவிட்டது; இதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை. மனிதனின் நாசியிலிருந்து வெளிவரும் விஷமயமான கரியமில வாயுவினால்தான் மரம் செடி கொடிகள் பிழைக்கின்றன. இது அந்தப் பூண்டுகளின் இயற்கைத் தன்மையாதலால் இது என்றைக்கும் நடந்தே தீரும். அதைப் போலவே விஷயங்களை ஆராய்ச்சி செய்து எந்த வழியில் போகவேண்டும் என்று எங்களுக்குத் தோன்றுகிறதோ, அந்த வழியில்தான் நாங்கள் செல்லுவோம். தலைமுறை தத்துவமாக நாங்கள் அவ்விதமே நடந்துள்ளோம். வாசுதேவ பலவந்த பட்கேயின் காலந்தொட்டு இன்றளவும் அரசாங்கத்தாரின் ஆதரவான கருணை எங்கள் குடும்பத்திற்கு வந்துகொண்டுதான் இருக்கிறது. பால

கங்காதர திலகரின் ஒத்துழையாமை இயக்கங்களில் நான் கொஞ்சமான கஷ்டங்களையா அனுபவித்தேன்? மூன்று தரம் அரசாங்க விருந்தினனுகச் சென்றுள்ளேன்! தவிர இந்தத் தடவை, நான் கடைசியாக மூச்சு விடும்போதும், சிறையிலேயே ஜன்மக் கைதியாகக் கழிக்கிறேனே என்னவோ, யார் கண்டார் கள்? எனக்குப் பிறகு என் ஒரே மகளான ஆசாவும் என் அடிச் சுவடுகளையே பின்பற்றுவாள் என்று நம்புகிறேன். அவ்விஷய மாக எனக்குக் கவலையும் துக்கமும் சற்றும் இல்லை. ஆனல் அதற்கு முற்றும் எதிரிடையாக, என் வயிற்றில் இப்படிப்பட்ட ஒரு தேச சேவிகை உதித்திருப்பதை எண்ணி ஆனந்தப் படுகிறேன்'' என்ருர்.

பாலூ ஸாஹிப் இவ்விதம் பேசியபோது விலாசன் அவரையே கூர்ந்து நோக்கிக்கொண் டிருந்தான். அந்த மனிதருக்கு வயது சுமார் ஐம்பதாவது இருக்க வேண்டும். எனினும் அவருடைய தேகத்தின் மினு மினுப்பு இன்னும் மங்காமல் இருந்தது. அவருடைய நீண்டு கூர்மையான மூக்கும், அதிக உழைப்பினலோ என்னவோ, சற்று உள்ளடங்கிய கண்களும், அவருடைய திடமான மனத்தையும் வைராக்கிய மனேபாவத்தையும் நன்கு எடுத்துக் காட்டின. எப்போதுமே சற்றுப் பளபளப்பாக இருந்த அவருடைய முகம், பிரஸ்தாபப் பேச்சின் போது இன்னும் அதிகமாய்ப் பிரகாசமடைந்தது. தன்மதிப்புப் பற்று அதிக மாகக் கொண்ட அந்த மனிதரின் உணர்ச்சியுள்ள முகமண்ட லத்தை வெகுநேரம் வரையில் பார்த்துக்கொண்டே இருக்க விலாசன் விரும்பினன்.

சென்ற இரண்டு நாட்களாகவே விலாசன் மனிதர்களின் முகபாவனைகளைக் கூர்ந்து கவனிக்கும் தன்மையை அடைந்திருந் தான். ஆசாவின் அசாதாரணமான அழகில் ஈடுபட்டு அவளையே நோக்கியபடி இருந்தது முற்றும் இயற்கையே; ஆனல் அத்துடன் நிற்காமல் விலாசன் பாலூ ஸாஹிபின் முகத்தையும் சரத்சந்திர னின் முகத்தையுங்கூட உற்றுக் கவனிக்கலானன்.

முற்றும் வேறுபாடான நோக்கங்களைக் கொண்டவர்கள் ஆகையாலும், இது வரையில் இம்மாதிரியான மனிதர்களுடன் விலாசன் பழகியதில்லை ஆகையாலுமே அவன் அவர்களையே கவனிக்கலானன் என்று சொல்லுவதற்கில்லை.

எந்தக் காரணங்களினல் விலாசன் அவர்களைப் பற்றியே ஆராயத் தொடங்கினனே அது நமக்குத் தெரியாது; ஆனல்

அந்த மூவர் விஷயத்திலும் விலாசனுக்கு அதிசயமான வியப்பும் ஆவலும் ஏற்பட்டிருந்தது என்னவோ உண்மைதான்.

சென்ற இரண்டு நாட்களாக விலாசன் அம்மூவர்களுடைய நடையுடை பாவனைகளையும் ரகசியமாக அறிவதில் ஈடுபட்டிருந்தான். அவர்களுடைய மனோபாவனைகளையும் ஆராய்ந்து நன்கு பரிசிலனை செய்து வந்தான்.

எல்லாவற்றிற்கும் மேலாக விலாசனுக்கு ஒரு விஷயத்தில் மட்டும் அபாரமான மனக் கலக்கமும் தீவிரமான கவலையும் உண்டாயின. ஆசாவும் சரத்சந்திரனும் முற்றும் வேறுபாடான கொள்கைகளை உடையவர்கள். அப்படி இருந்தாலும் சரத்சந்திரன் தன் கொள்கைகளை யெல்லாம் ஒதுக்கிவிட்டு ஆசா தேவி நடத்தப்போகும் சத்தியாக்கிரக மறியலில் தீவிரமாக ஈடுபடுவானேன்? இது உண்மையில் குழப்பம் தரும் விஷயமே. அவர்கள் இருவருக்கும் உண்டான அபிப்பிராய பேதங்கள் அவரவர்களுக்குள் மறைந்து ரகசியமாக வைக்கப்பட் டிருக்கவும் இல்லை; அவர்கள் வெளிப்படையாகவே தங்களுக்குள் வாதம் செய்து கொண்டனர். சத்தியாக்கிரக மறியலின் சம்பந்தமாகவும், அதை வெற்றிகரமாக முடிப்பதுபற்றியும் பற்பல யோசனைகளை ஆசாதேவி சொல்லும் போதெல்லாம் சரத்சந்திரன், ''ஆமாம்'', ''சரி'' என்று சொல்லுவான். சிற்சில சமயங்களில் அவன் கொஞ்சம் வேடிக்கை கலந்த குரலில், ''உண்மையாக இந்தச் சத்தியாக்கிரகத்தினால் உங்களுக்கு நியாயமும் ஜயமும் கிடைக்கிறதைப் பார்த்துத்தான் விடலாமா? — ஹூம், இதெல்லாம் வெறும்......'' என்று ஏதேதோ பேசுவான்.

''ஆம்; நீர் பார்க்கத்தான் போகிறீர்; இதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு'' என்பாள் ஆசா.

பிறகு சரத்சந்திரன் சற்று உரத்த குரலில், ''எத்தனை நாள்தான் இந்த அசட்டு நம்பிக்கையை வைத்துக்கொண் டிருக்கப் போகிறீர்களோ யார் கண்டார்கள்? முன்பு பம்பாயில் பத்திரிகைத் தொழில் நடத்தினீர்கள். அதை நிறுத்துவதற்காகச் சர்க்காரில் பெருந் தொகை ஜாமீன் கேட்டார்கள். ஜாமீன் தொகையைக் கட்டித் தொலைத்திருந்தால் இன்று உங்கள் பத்திரிகை அமோகமாய் நடந்துகொண் டிருக்குமே! ஒவ்வொரு பத்திரிகை ஆசிரியரிடமும் போய்க் கெஞ்ச வேண்டிய காலம் அப்போது வந்திருக்காது. ஆனால் அப்போதும்

இந்த இழவெடுத்த சத்தியாக்கிரகம் வந்து உம் மண்டையில் முளைத்தது. ஜாமீன் பணம் கட்ட முடியாது என்று அழும்பு செய்தீர்கள். எனவே சர்க்காரால் உங்களுடைய சிறு அச்சுக் கூடம் பறிமுதல் செய்யப்பட்டது. அதே மாதிரிதான், இப் போதும் நடக்கப் போகிறது, இந்தச் சத்தியாக்கிரகத்திலும்! புனுத் தலைவர்களை நீங்கள் ரொம்ப தூரம் நம்பி இருக்கிறீர்கள்! ஆனால் ஒன்று சொல்லுகிறேன்: அவர்கள் உம்மை ஏமாற்றி மோசம் செய்யாவிட்டால் என் பெயரை மாற்றி வைத்துக் கொள்வேன்!'' என்பான்.

ஆசா சிரித்தாள். ''நான் ஒருவருடைய பெயரையும் மாற்றி வைக்க ஆசைப்படவில்லை. நான்தான் கேட்கிறேன், வெறுமனே ஏன் புனுத் தலைவர்களின் மேல் அவநம்பிக்கை கொள்ள வேண்டும்? நீங்களும் என்னுடன் புனுவுக்கு வந்துதான் இருந்தீர்கள். எங்கள் மறியலின் சம்பந்தமான செய்திகளைப் பல பத்திரிகைகளுக்குக் கொடுத்தனுப்புவதிலும், இங்கே வந்து பல இடங்களில் பிரசங்கங்கள் செய்வதிலும் அவர்கள் மிகவும் கஷ்டமான பொறுப்பை ஏற்றுக்கொண் டிருக்கின்றனர். அவர்கள் பல விதத்திலும் எங்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்தபோது தாங்களும் என்னுடன் கூடத்தானே இருந்தீர்கள்?''

''பிரசங்கங்கள் செய்வதற்காக அவர்கள் கட்டாயம் இங்கு வரத்தான் செய்வார்கள்! நான் எப்போது இல்லை என்று சொன்னேன்? ஆனால் உண்மையான சத்தியாக்கிரகியாக மறியலில் சேர்ந்து அடிபடுவதற்கு, வரும் வருஷப் பிறப்பன்று புனுத் தலைவர்கள், 'நான் முந்தி, நீ முந்தி' என்று முந்திக்கொண்டு வருவதை நான் பார்த்துவிடுகிறேன். ஏன், நீங்களும் பார்க்கத் தான் போகிறீர்கள்!''

''சரி, ஆகட்டும்; நானும் பார்க்கிறேன். புனுத் தலைவர்கள் ஒருவர்கூட வராவிட்டாலும் இந்த மறியல் ஒன்றும் நின்றுவிடப் போவதில்லை அல்லவா? ஐந்நூறு அறுநூறு குடியானவர்கள் நிலத்தின்மேல் படுத்துக்கொண்டு சத்தியாக்கிரகம் செய்தால் கம்பெனியார்களின் கண்கள் திறந்து போய் இவர்கள் மேல் கருணை பிறக்கும் என்பது என் நம்பிக்கை.''

''நீர் சொல்லுவது தப்பென்று யார்தாம் சொல்லுவார்கள்? நான் சொல்வது, கம்பெனிக்காரர்களின் கண்கள் இப்போதும் நன்றாகத் திறந்துதான் இருக்கின்றன என்பதுதான்.

சத்தியாக்கிரகத்தை எந்த வழிகளினுல் அடக்கவேண்டும் என்ற முறைகளை அவர்கள் முன் கூட்டியே நிர்ணயித்து வைத்திருப்பார்கள். உங்கள் எல்லோரையும் பிடித்துச் சிறையில் அடைப்பார்கள்; பிறகு அணைக்கட்டுச் சம்பந்தமான வேலைகளை ஆரம்பித்தே தீருவார்கள்!''

''ஓ, ஆக்ஷேபம் கிடையாது, சிறைக்குப் போக நாங்கள் தயார்.''

''நீங்கள் ஒருவேளை போகத் தயாராக இருக்கலாம்; ஆனுல் நான் அப்படி அன்று. பலம் பொருந்திய ஒருவனிடம் அசக்தனுகிய ஒருவன் அடிபடும் இந்தக் கொள்கை எனக்குச் சற்றேனும் பிடிக்கவே இல்லை. சிறைக்குப் போய்த்தான் தீர வேண்டும் என்று இருந்தால் அதற்கு அடி படுவதைக் காட்டிலும் அடித்துவிட்டுப் போவதே மேலானது. என்ன விலாஸ்! உனக்கு இது விஷயமாக என்ன தோன்றுகிறது? நீயோ எங்கள் எதிர்க் கட்சியில் சேர்ந்தவர்களில் ஒருவன். ஆனுல் நீ இங்கே எங்களுடன் தங்கி இருக்கும் வரையில் உன்னிடம் இது விஷயமான அபிப்பிராயம் கேட்பதில் தடை ஒன்றும் இல்லை அல்லவா?''

இதற்குள் ஆசா குறுக்கிட்டாள்.

''சீ, சீ, விலாசனை நான் ஒருநாளும் எதிரிகளின் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லத் தயாராக இல்லை. அத்துடன் கூட நிற்காமல், அவரை மெல்லத் திருப்பி, எங்கள் சத்தியாக்கிரகத்திலே பங்கெடுத்துக்கொள்ளச் செய்யவேண்டும் என்று எனக்கு ரொம்ப ஆசையாக இருக்கிறது.''

''ஆனுல் அந்த ஆசை வெறும் அசட்டுத்தனமான ஆசா என்று நான் நினைக்கிறேன்'' என்று விலாசன் உடனடியாகவே பதிலளித்தான். 'ஆசை' என்பதற்குப் பதிலாக வாய் குழறி 'ஆசா' என்று வந்ததைக் கேட்டு அம்மூவரும் பலமாகச் சிரித்தனர்.

மேற்படி வேடிக்கையினுல் முதலில் வேகமாக ஆரம்பிக்கப்பட்ட தர்க்கம் அத்துடன் நின்றுவிட்டது. ஆனுல் சரத் சந்திரனுக்கும் ஆசாவுக்கும் அபிப்பிராய பேதமும் கொள்கைகளில் வித்தியாசமும் உண்டு என்பதாக விலாசன் எண்ணியிருந்தது மேற்படி தர்க்கத்தினுல் இன்னும் ஊர்ஜிதமாயிற்று.

அதே விதமாக விலாசனுக்கு மற்ருெரு சந்தேகமும் தோன்றியது. அன்று மத்தியான்னம் சாப்பிடும்போது விலாசனுக்கும் ஆசாவிற்கும் நடுவில் ஏகமாய்த் தகராறும் அபிப்பிராய பேதமும் தர்க்கமும் நடந்துங்கூட, அதே மாலையில் மறியல் விஷய

மாக நடந்த பிரசங்கத்திற்குச் சரத்சந்திரனும் அவருடன் போனான். முற்றும் முரண்பாடான இந்தச் செய்கை விலாச னுக்குச் சந்தேகத்தைக் கிளப்பியது.

ஒருவேளை ஆசாவும் சரத்சந்திரனும் ஒருவரை ஒருவர் காதலித்து..........?

யார் கண்டார்கள்; ஒருவேளை இருந்தாலும் இருக்கலாம்; இதனால் நமக்கு........

ஆசாவைப் போன்ற அழகியைக் கண்டு அவள்மேல் காதல் கொள்ளாமல் இருப்பது முடியாத காரியம்; எனினும்......

சரத்சந்திரன் விஷயமாக விலாசனுக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம், சரத்சந்திரன் ஒரு தனவந்தரின் மகன், பட்டம் பெற்றவன், சிறந்த எழுத்தாள னாகவும் பேச்சாளனாகவும் இருந்தான் என்னும் விஷயங்களே. ஆனால் தற்சமயம் பணக்காரத் தன்மையிலிருந்து எந்தக் காரணத் தினாலோ விலகி, எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, ஆசாவின் காதலுக்காக அலைந்துகொண் டிருக்கிறான் என்பதையும் விலாசன் அறிவான்.

ஆனால், ஆசாவும் சரத்சந்திரனும் ஒருவரை ஒருவர் காதலித்துத்தான் வந்தார்களா? நிச்சயமாக அவர்கள்......

இவ்விதம் எண்ணியபோது விலாசன் மனத்தில் பொறாமை யின் சாயை சற்றுப் படர ஆரம்பித்ததை அவன் உணர்ந்தான். ஏன் அவ்விதம் உண்டாக வேண்டும் என்பதை அவன் அறிய முடியவில்லை.

தன் மனத்தில் உண்டான இந்தக் கற்பனை பொய்யானதாக இருக்குமோ என்னவோ? இந்தக் கற்பனை நல்லதல்ல........

ஆசாவும் விலாசனும்!....சீ, எத்தனை பொய்யான கற்பனை!

மனத்தைக் கலக்கும் இந்தப் பிரச்னை இரவில் படுத் திருக்கும் போது விலாசனுக்கு எத்தனை தரந்தான் தோன்றித் தோன்றி மறைந்தது! கடைசியில் தூக்கத்தை வரவழைத்துக் கொள்ளும் முயற்சியில் விலாசன் தன் போர்வையை இழுத்து விட்டுக்கொண்டான். வலது கைப் பக்கமாக உள்ள ஜன்னலின் வழியாக எதிரே வெகு தூரத்தில் உள்ள மலைகளின்மேல் எரியும் தணல் நெருப்புச் சுவர்போல் தகதகவென்று மின்னிக்கொண் டிருந்தது. அவன் மனத்தில் தோன்றிய எண்ணம், 'எனக்கு இப்போது உடம்பு முழுவதும் சௌக்கியமாகி விட்டது. எனவே நாளைக்கே இவ்விடம் விட்டுப் போகவேண்டும்' என்பதுதான்.

# அத்தியாயம் 8

அன்று இரவு ஏற்பட்ட விபத்தினால் பழுதடைந்த விலாசனின் மோட்டார் மாடுகளால் இழுக்கப்பட்டு லோணவலாவின் காரியாலயத்தை அடைந்தது. இன்று விலாசன் தளவலா ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒன்பதரை மணிக்குப் புறப்படும் 'பாசஞ்ஜர்' வண்டியில் லோணவலாவிற்குப் போக இருந்தான்.

பாலூ ஸாஹிபும் சரத்சந்திரனும் காலையில் எழுந்ததுமே ஏதோ முக்கிய வேலைக்காகப் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்றிருந்தனர். ஆசா மட்டும் வீட்டிலேயே தங்கியிருந்தாள். வெளியே சென்ற இருவரும் ஒன்பது மணிகளுக்குள்ளாகத் திரும்பிவிடுவதாகச் சொல்லியிருந்தனர். அவர்கள் வந்தபிறகு விலாசனை ரெயில்வே ஸ்டேஷன் வரையில் கொண்டுபோய் வழியனுப்புவதாக நிச்சயமாகியிருந்தது.

மணி ஒன்பது அடித்தாகிவிட்டது; இன்னும் அவர்கள் திரும்பிவராததைக் கண்ட விலாசன் ஆசாவிடம், "சரத்சந்திரனை எதிர்பார்ப்பதில் பிரயோஜனம் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான்.

"அவர் எப்போதும் இப்படித்தான். சொன்னபடி நடப்பது என்பதை அவர் கனவிலும் அறியார்போலும்! அவர் புறப்படும் போதே நான் ஆயிரம் தடவை சொல்லியுங்கூட அவர்...." என்று ஆசா சொல்லிக்கொண்டிருக்கும் போதே விலாசன், "அவன் வராவிட்டால்தான் என்ன பிரமாதம்? நான் தனியே ஸ்டேஷனுக்குப் போக முடியாதா என்ன? சென்ற ஐந்தாறு நாட்களை நான் மிகவும் ஆனந்தமாகக் கழித்தேன். நீங்கள் செய்த நன்றிக்காக நான் எந்த விதத்தில் உங்களை...." என்று இழுத்தான்.

"அப்படி என்றால் நீங்கள் இப்போதே புறப்பட்டு விட்டீர்களா என்ன?"

"ஆமாம்; இப்போது புறப்பட்டால்தான் சரியான நேரத்தில் ஸ்டேஷனுக்குப் போகலாம், அல்லவா?"

''புறப்படத்தான் வேண்டும்; ஆனால் நான் விடை எதற்காக இப்போது கொடுக்க வேண்டும்?''

''அப்படியானால்?''

''அப்படியானால் என்ன? நானும் உங்களை வழியனுப்புவதற்காக ஸ்டேஷனுக்கு வரப் போகிறேன்.''

''சே, சே, நீங்கள் ஏன் வீணாகச் சிரமப்பட வேண்டும்? நான் இப்போது வெறும் விருந்தாளியாக வந்த அன்னியன் அல்ல, உங்கள் வீட்டுடன் சேர்ந்தவனாகவே இருக்கட்டுமே!''

''அதனால்தான் நானும் வருகிறேன் என்கிறேன்.''

''இப்போதே வெயில் தகிக்கிறதே! நீங்கள் திரும்பி வரும்போது வெயில் ஜாஸ்தியாகிவிடுமே.''

''இந்த வெயில் என்னை ஒன்றும் செய்யாது!'' ஆசா பேசும்போது சற்றுச் சிரித்தாள். ''நான் என்ன மிகவும் கோமளமான தேகம் உடையவளாக உங்களுக்குக் காணப்படுகிறேனா என்ன?''

''எனக்கு மட்டும் அல்ல; யாருக்குமே அப்படித்தான்.'' இவ்விதம் சொல்லிக்கொண்டே விலாசன் சிரித்தான். எனினும் தான் அவ்விதம் பேசினதற்காக மனத்திற்குள்ளாக வெட்கப்பட்டுக்கொண்டான்.

அவன் அவ்விதம் பேசியதனால் ஆசாவின் முகத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படுகிறதா என்று கவனித்தான். ஒன்றும் இல்லை என்று கண்டவுடன் அவனுக்கு மனம் நிம்மதியாயிற்று.

இருவரும் வீட்டை விட்டு வெளிப்பட்டு ஸ்டேஷன் பக்கமாகப் புறப்பட்டனர்.

நடுவில் விலாசன் கேட்டான்: ''என்னுடைய ஞாபகம் தங்களுக்கு இருக்குமா?''

ஆசா விடை பகர்ந்தாள்: ''ஓஹோ, நீங்கள் பேசுவது விசித்திரமாய் இருக்கிறதே! நீங்கள் ஒரு பெரிய பணக்காரர் வீட்டுப்பிள்ளை. எங்களைப்பற்றிய ஞாபகம் தங்களுக்கு இருப்பது தான் கடினம்! நீங்கள் என்னை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவீர்களா?''

''உங்கள் விஷயமாக எனக்கு ஞாபகம் வைத்துக் கொள்ளுவதா இல்லையா என்பது எனக்கே தெரியவில்லை. காரணம் உங்கள் பழக்கம் எனக்கு இருதயத்தின் ஆழத்தில் போய்ப் பதிந்துவிட்டது. நாலைந்து நாட்களுக்கு முன்பு நான் ஒரு நாள் அதிகாலையில் பூபாள ராகத்தில் பாரதமாதா பள்ளியெழுச்சிப்

பாட்டைக் கேட்டேன் அல்லவா? அந்த விதமான மதுர கீதமும் சுகபாவமும் கலந்த சாரீரத்தை என் வாழ்நாட்களிலேயே அனுபவித்ததில்லை. நான் ஒவ்வொரு நாள் காலையிலும் மனக் காதுகளால் அதை இனிமேல் கேட்பேன். எத்தனை அழகாகப் பாடுகிறீர்கள் நீங்கள்! நீங்கள் ஏன் சிட்சை வைத்துக்கொண்டு சங்கீதம் கற்றுக் கொள்ளக் கூடாது?''

''நான்தானே?'' என்று கேட்டுக்கொண்டே விசித்திர மான குரலுடன் உரக்கச் சிரித்தாள். அவளுடைய சிரிப்பில் துக்கமே அதிகமாய் இருப்பதாக விலாசனுக்குப் பட்டது. மேலே அவள் ஏதாவது பேசுவாள் என்ற எண்ணத்துடன் சற்று நேரம் மௌனமாக இருந்தான். ஆனால் அவள் ஒன்றும் பேசாததைக்கண்டு, தானே மறுபடியும் தொடர்ந்து பேச்சை எடுத்தான்:

''உங்கள் சாரீரத்தைப் போன்ற மிருதுவான சாரீரத்தை நான் கேட்டதே இல்லை. உண்மையாகவே நீங்கள் பாட்டுக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.''

''கற்றுக் கொள்ளத்தான் போகிறேன்; ஆனால் அதற்கு நேரம் இப்போது கிடையாது. நான் பம்பாயில் காலேஜில் படித்துக்கொண் டிருந்தபோது மீட்டிங்குகளில் கடவுள் வணக்கப் பாட்டுக்கள் பாடியிருக்கிறேன். இப்படி ஒரு தரம் பாடியதைக் கேட்டுக்கொண் டிருந்த கான் சாஹிப் என்பவர் எனக்கு இலவசமாகச் சங்கீதம் கற்றுக் கொடுப்பதாகச் சொல் லிக்கொண்டு என் பின்னாலேயே சுற்ற ஆரம்பித்தார்.''

''அப்படியா? கான் சாஹிப் இத்தனை சங்கீத நிபுணர் என்று எனக்கு இதுவரையில் தெரியவே தெரியாதே! கடைசியில் உங்களுக்கு அவர் சங்கீதம் சொல்லிக் கொடுக்காமல் போனது அவருடைய பைத்தியக்காரத்தனத்தையே குறிக்கிறது. அவ ருக்குப் பதிலாக நான் வந்திருந்தால் என்னதான் நேர்ந்திருந் தாலும் உங்களை விட்டிருக்க மாட்டேன். நிஜமாகவே சொல்லு கிறேன். நீங்கள் கட்டாயம் சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டும்; இன்றுமுதல் கற்றுக்கொள்ளுங்களேன்.''

''ஊம். சரி, ஆகட்டும்.''

''எப்போது?''

''சர்க்கார் என்னைக் கைது செய்து சிறையில் அடைக்கும்போது. 'என்ன வேலை செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்பார்கள். அப்போது நான், 'எனக்குப் பாட்டுக்

கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்று சொல்லப் போகிறேன்.''

''ஸ்திரீகள் என்ன கேட்ட போதிலும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க அரசாங்கத்தினர் பின் வாங்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். முன்பு ஒரு தடவை ஒரு ஸ்திரீ சிறைக்குச் சென்றபோது, தன்னைத் தக்ஷிண தேசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டாளாம். காரணம் தக்ஷிணத்தில், 'பூரணபோளி' எவ்விதம் செய்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காகத்தான். நிலைமையைச் சமாளிப்பதற்காக இந்தத் தயாரெல்லாம் ரொம்ப நல்லதே!''

இப்படிச் சொல்லிவிட்டு விலாசன் பலமாகச் சிரித்தபோது ஆசா, ''உங்கள் வேடிக்கையெல்லாம் எனக்கு நன்ருகப் புரிகிறது. சரத்சந்திரனின் நண்பன் ஒருவன் அரசாங்கக் காரணத்திற்காகச் சிறைக்கு அனுப்பப்பட்டான். சிறையில் உள்ள டாக்டருக்கு உதவியாகக் கம்பௌண்டர் வேலை அவருக்குக் கொடுக்கப்பட்டது. அவர் வெளியே வந்ததும் தம்மை டாக்டர் என்று அழைத்துக்கொண்டு ஒரு மருந்து ஷாப்பையும் நடத்தி வருகிருர்! அவ்விதமே நானும் என் மனத்தில் எண்ணிக்கொண்டிருக்கிறேன்; சிறையில் இருக்கும்போது சங்கீதம் கற்றுக்கொண்டு, வெளியே வந்த பிறகு ஒரு பெரிய சங்கீத விதுஷியாகிவிடலாம்! நிறையப் பணம் சம்பாதித்துக் கியாதியையும் அடையலாம்! நான் சீக்கிரமாகவே சிறைக்குள் நுழையப் போவது என்னவோ நிச்சயம்.''

விலாசன் உடனடியாக, ''சிறைக்குச் சென்ருல் என்ன பிரயோஜனம்? இதில் என்ன அவ்வளவு ஆனந்தம்?'' என்று கேட்டான்.

''ஆனந்தம் என்ன? வெறும் எதிர்ப்புக்காகத்தான் மறியல் செய்தால் கட்டாயம் சிறைவாசம் கிடைக்கத்தான் செய்யும். மறியலையோ செய்யாமல் நிறுத்தப் போவதில்லை.''

''இந்த மறியல் எல்லாம் எதற்காக?''

''இந்த மறியல் என்ருல்?''

''இந்த என்ருல் இவ்விதப் பைத்தியக்காரத்தனமான என்று பொருள். நிலத்தின் மேல் படுப்பது! பிறகு தடி அடி வாங்குவது, பிறகு சிறைவாசம் அனுபவிப்பது. கடைசியில் எடுத்த காரியமும் முடிவதில்லை. இதில் என்ன புத்திசாலித்தனம் இருக்கிறதோ எனக்குத் தெரியவே இல்லை.''

''ஆழ்ந்து கவனித்துப் பார்க்காவிடில் அதிலுள்ள அர்த்தம் உங்களுக்குத் தெரியாது.''

''வாஸ்தவம்; நீங்கள் என் கண்ணுக்கு முன்பாக இருக்கும் வரையில் உங்கள் மறியலின் உட்பொருள் எனக்குத் தெரியாது என்பது உண்மையே!''

இதற்குமேல் பேசுவதற்கு ஆசா சற்றுத் தயங்கினுள். பிறகு ரஸ்தாவின் ஓரத்திலுள்ள ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டிக்கொண்டே, ''இதோ பார்த்தீர்களா, இந்த மரத்தில் எத்தனை நாவல் பழம் பழுத்து இருக்கின்றன?'' என்று கேட்டாள்.

அவள் அழகைப்பற்றி விலாசன் புகழ்ந்ததை அவள் அறியாததைப்போல் பாசாங்கு செய்வதற்காக ஆசா கையாண்ட சாதுரியம் விலாசனுக்கு மிகவும் சந்தோஷத்தை அளித்தது. அவன் மரத்தில் ஏறி நாவல் பழம் பறித்தான். அவர்கள் இருவரும் அதை மென்று துப்பிக்கொண்டே மேலே நடந்து சென்றுர்கள்.

ஸ்டேஷனுக்கு அருகில் ஒரு 'கேட்' இருந்தது. அதன் அருகில் இருவரும் சென்றபோது, கையில் பச்சைக் கொடி பிடித்திருந்த 'கேட்கீபர்' (வாயிற் காப்போன்) ஆசாவின் முன் குனிந்து நமஸ்காரம் செய்துவிட்டு, ''பம்பாய்க்குப் புறப் பட்டீர்கள்போல இருக்கிறது?'' என்று கேட்டான்.

''இல்லை; எங்கள் வீட்டிற்கு வந்த விருந்தாளியை வழியனுப்புவதற்காகத்தான் வந்திருக்கிறேன்; நீ சௌக்கியமாக இருக்கிருயா?''

''ஆமாங்க.''

''எங்கள் ஜாயீ எங்கே காணவில்லை?''

''இருக்காளே, உள்ளே குடிசையில் இருக்கிருள்.''

இவ்விதம் சொல்லிக்கொண்டே அந்த ஏழைக் காவலாளி தன் குடிசைக்கு அருகில் போய் மிகவும் சந்தோஷத்துடன் உரக்க, ''ஜாயே, ஏ ஜாயே, வெளியே வந்து பார், யார் வந்திருக்கிருர்கள் என்று'' என்று கூப்பிட்டான்.

நாலு அல்லது ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி துணிகூடச் சரியாக உடுத்தாமல், கையில் ஒரு ரொட்டித் துண்டை வைத்துக் கடித்துக்கொண்டே, குடிசைக்கு வெளியே வந்தாள். ஆசாவைக் கண்டதும் சிரித்துக்கொண்டே தன் இரு கைகளையும் மேலே தூக்கிய வண்ணம் அவள் அருகே ஓடிவந்தாள்.

ஆசா அவளைத் தூக்கி எடுத்துக்கொண்டு, அழுக்கடைந்த அவ்வளுடைய முகத்தில் ஒரு முத்தமும் கொடுத்தாள். எண்ணெயையோ தண்ணீரையோ கண்டு அநேக நாளான அந்தச் சிறுமியின் தலைமயிரைத் தன் கைவிரலால் கோதி விட்டுக்கொண்டே ஆசா, ''எப்போது பார்த்தாலும் தின்றுகொண்டே இருக்கிறாயே!'' என்றாள்.

ஜாயீ சிரித்தாள்; பிறகு அவள் தன் இடது முழங்கையினால் தன் மூக்கை ஒரு தரம் தடவி விட்டுக் கொண்டாள்.

காவற்காரன் ஆசாவிடம், ''மத்து கயிக்வார்கூட என்னிடம் சொன்னான். நாள்கூட நிச்சயமாய் விட்டது போல் இருக்கிறதே?'' என்று கேட்டான்.

''ஆமாம்; வருஷப்பிறப்பன்று கம்பெனியார்களின் ஆட்கள் அணைக்கட்டின் சுவர்களுக்கு வேண்டிய அஸ்திவாரத்தை ஆரம்பிக்கப் போகின்றனர். அதே சமயத்தில் அன்றைத்தினமே நம்முடைய சத்தியாக்கிரகமும் ஆரம்பிக்கப்படும். தேடாமலே நல்ல நாளாக அகப்பட்டு விட்டது எங்கள் வேலையை மங்களகரமாக ஆரம்பிப்பதற்கு.''

''நானும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடட்டுமா?''

''யார் தாது? நீயா?''

''ஆமாம், நானும் என் சம்சாரமுங்கூட...''

''ஆனால் தாது! உன் வேலை போய்விடுமே. பிறகு நீயும் உன் சம்சாரமும் சிறைக்குச் சென்றுவிட்டால் உங்கள் குழந்தை குட்டிகளை யார் கவனித்துக்கொள்வார்கள்? இதை எல்லாம் யோசிக்காமலேயே......''

''கடவுளுக்குக் கருணை இருப்பது உண்மையானால், அவன் அவர்களைப் பற்றிய கவலையை எடுத்துக்கொள்ளுவான். எத்தனையோ பேர்கள் தியாகம் செய்து இதில் ஈடுபடும்போது நான் மட்டும் பின்தங்கி நிற்பேனா? சீ, சீ, ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டேன். என்னையும் கூப்பிட மறந்துவிடாதீர்கள் அக்கா!''

''சரி, அன்றைக்கு முன்தினமே ஊர்வலம் புறப்படும்; அதில் சேர்ந்துகொள்ளலாம். ஊம், ஜாயி! இறங்கு இப்போது இடுப்பிலிருந்து. எனக்கு ஸ்டேஷனுக்கு அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது.''

ஆனால் அந்த அடம் பிடித்த சிறுமி ஆசாவை முன்னிலும் பலமாக அணைத்துக்கொண்டே, ''என்னையும் அழைத்துக்

கொண்டு போங்களேன்'' என்ருள்.

ஆசா சிரித்தாள்.

தாது தன் மகளை அதட்டியவண்ணம், ''ஏ அசடு, கீழே இறங்கி, வா இங்கே'' என்ருன்.

அவன் அந்தச் சிறுமியை ஆசாவிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கி எடுத்துக்கொண்டான். உடனே அவள் தன் கையிலுள்ள ரொட்டித் துண்டத்தை வீசி எறிந்துவிட்டுக் கைகளையும் கால்களையும் உதறிக்கொண்டே அழ ஆரம்பித்துவிட்டாள்.

ஆசா ஒரு பைசாவை எடுத்து அவள் கையில் வைத்தாள். மந்திரம் போட்டு அடிக்கியதைப் போல் அச்சிறுமியின் அழுகை நின்றுவிட்டது.

கேட்டைத் தாண்டியதும் ஸ்டேஷனின் பிளாட்பாரத்தில் நடந்துகொண்டே ஆசா விலாசனிடம், ''இந்தத் தாது என்பவனுக்குப் பரம்பரைச் சொத்தாகக் கொஞ்சம் நிலம் இருந்தது; எங்கள் ஊரிலுள்ள பெரிய சாவுக்கார் அவன் கொடுக்கவேண்டிய கடனுக்காக அவனுடைய வீடு, தாவர ஜங்கம சொத்துக்கள், நிலம் எல்லாவற்றையும் ஜப்தி செய்துவிட்டான். பாவம்! அந்த ஏழை இப்போது ஏழு ரூபாய் சம்பளத்திற்கு ஒரு வேலை பார்த்து வருகிருன். அதே சாவுக்கார்தான் இப்போது தீன்ஷா கம்பெனியாருடன் கூட்டு முதலாளியாகச் சேர்ந்திருக்கிருர். இன்னும் தாதுவைப் போன்ற குடியானவர்களுக்கெல்லாம் இன்று அந்தக் கம்பெனியார் 'நாங்கள் கொடுக்கும் விலையை வாங்கிக்கொண்டு நிலத்தை விற்றுவிடுங்கள்; வீணே சத்தியாக்கிரகம் என்று அட்டகாசம் செய்வதில் பயனில்லை' என்று உபதேசமும் செய்கின்றனர்'' என்ருள்.

இதற்குமேல் என்ன பதில் சொல்லுவது என்று விலாசனுக்குப் புரியவில்லை. அவன் மௌனமாக நடந்துகொண்டிருந்தான்.

வண்டி வந்ததும் விலாசன் ஒரு பெட்டியில் ஏறிக்கொண்டான். ஜன்னலின் வழியாக எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தபோது ஆசா அவனை, ''மறுபடியும் எப்போது திரும்பி வருகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

விலாசனின் கவனம் முழுவதும் ஆசாவின் பேச்சின்மேல் இல்லாமல் அவளுடைய முகமண்டலத்தின்மீதே இருந்தது. அதிக நடையினுல் ஆசாவின் முகம் சற்றுச் சிவப்பாக மாறியிருந்தது; நெற்றியிலும் பிடரியிலும் வேர்வைத் துளிகள் பிரகாசித்துக்

கொண்டிருந்தன. முதுகின்மீது தொங்கிக்கொண் டிருந்த அவளுடைய நீண்ட பின்னலின்மேல் சூரிய கிரணங்கள் பிரகாசித்துக்கொண் டிருந்தன. வீட்டிலிருந்து புறப்படும் சமயத்தில் தலையில் சூட்டிக்கொண் டிருந்த கனகாம்பரப் புஷ்பம் மிகவும் வாடி வதங்கிப்போயிருந்தது. விலாசன் அதையே உற்று நோக்கியவண்ணம் இருந்தான்.

எனவே ஆசாவின் பேச்செல்லாம் அவனுடைய காதுகளில் ஏறவே இல்லை. எனவே அவன், "ஊம், என்ன சொன்னீர்கள்?" என்றான்.

"இல்லை. மறுபடியும் சந்திப்பது எப்போது என்று கேட்கிறேன்?"

"சந்திப்பா, நீங்கள்தாம் லோனுவலாக் 'காம்பு'க்கு வாருங்களேன்."

"'காம்பு'க்கா? அப்படியென்றால் எதிரியின் இடத்திற்கே என்னை அழைக்கிறீர்களா? அங்கு வந்துவிட்டால் என்னைப் பிடித்து அடைத்துவிடுவீர்கள்! நான் மாட்டேன், நீங்கள்தாம் மறுபடி ஒரு தரம் எப்போதாவது இங்கு வாருங்களேன்."

"சரி; அப்படியே ஆகட்டும்; மற்றொரு தடவை விபத்து ஏற்பட்டு நான் உங்கள் வீட்டிற்கு......"

"உச்! அப்படியா சொன்னேன் நான்?"

இவ்விதம் பேசிக்கொண்டே ஆசா தன் பின்னலை எடுத்து முன்னால் விட்டுக்கொண்டாள். சேலைத் தலைப்பை எடுத்துக் கையினால் திரித்த வண்ணம் பூமியை நோக்கினாள்.

இதற்குள் ஒரு பூக்காரச் சிறுவன் பெட்டியின் அருகில் வந்து தன் கூடையிலிருந்து மஞ்சள் சம்பங்கியை எடுத்துக் காட்டி அதை வாங்கும்படி கேட்டுக்கொண்டான்.

விலாசன் அந்தப் பூக்களில் பெரியதாகக் காணப்பட்ட இரண்டு புஷ்பங்களை எடுத்துக்கொண்டான். சட்டைப் பையிலிருந்து எவ்வளவோ பணத்தை எடுத்து அந்தச் சிறுவன் கையில் கொடுத்தான். அந்தச் சிறுவன் ஆனந்தத்துடன் ஓடிவிட்டான். விலாசன் ஆசாவிடம், "இந்தாருங்கள், பூ" என்றான்.

ஆசா மிகவும் ஆச்சரியத்துடன், "இதற்காகத்தான் வாங்கினீர்களா?"

"என் ஞாபகமாக எதைக் கொடுப்போம் என்று யோசித்துக் கொண்டே இருந்தேன். இதற்குள்ளாக அந்தச் சிறுவன் வந்து

என் யோசனைக்கு முடிவு கூறினான்.''

''ஓஹோ, அப்படியா?'' என்று கேட்டுக்கொண்டே ஆசா புஷ்பங்களைக் கையில் வாங்கி அதை மோந்து பார்த்தாள்.

''தலையில் வைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் வைத்துக் கொண்டிருக்கும் கனகாம்பரம் ரொம்ப வாடி வதங்கிப் போயிருக்கிறது'' என்றான் விலாசன்.

சென்ற ஐந்தாறு நாட்களாக ஆசாவின் அழகைப்பற்றியே விலாசனின் மனத்தில் எண்ணங்கள் நிலவின. இப்போதும் அவளுடைய அழகையே அவன் பருகிக்கொண்டிருந்தான். விலாசன் புஷ்பத்தைப் பற்றிச் சொன்னபோது ஆசாவின் முகம் நாணத்தால் சிவந்ததை அவன் கண்டான்.

ஆசா தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள். புஷ்பத்தை மயிரில் செருகுவதற்காக ஒரு கையைத் தலையில் வைத்தும், மற்றொரு கையால் புஷ்பத்தை எடுத்து வைப்பதற்காகத் தூக்கியும் ஆக இரண்டு கைகளையும் மேலே தூக்கிய வண்ணம் ஆசா அந்தப் பக்கமாகத் திரும்பினாள்.

காலைப் பனியினால் குளிர்ச்சியடைந்த அந்த இரண்டு சம்பங்கிப் புஷ்பங்களும் பார்வைக்கு மிகவும் லாவண்யமாக இருந்தன. ஆனால் அந்தப் புஷ்பங்களுடன் கூடக் காணப்படும் இரண்டு கரகமலங்கள் - தாமரையை ஒத்த உள்ளங்கைகள், அந்தச் சம்பங்கிப் புஷ்பங்களைக் காட்டிலும் அதிக மிருதுவாகவும் அழகாகவும்——?

இதை நிர்ணயிப்பதற்காக விலாசன் அந்தப் புஷ்பங்களையும் ஆசாவின் கைகளையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் இருந்தான்.

இதற்குள் ஆசா சடுதியில் அவன் பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டே, '' 'த்யாங்க் யூ' என்று அவசியம் சொல்லித்தான் ஆகவேண்டுமா?'' என்றாள்.

விலாசன் மறுமொழி ஒன்றும் கூறாமல் தன் உதடுகளைச் சுருக்கிக்கொண்டே சிரித்தவண்ணம் வேண்டாம் என்று தலையை அசைத்தான்.

சற்று நேரம் கழித்து அவன், ''சரத்சந்திரனிடம் நான் அவன் மேல் ரொம்பக் கோபம் கொண்டிருப்பதாகச் சொல்லுங்கள்'' என்றான்.

ஆசா சிரித்தாள். ''அப்படியா சமாசாரம்? அப்போது ரொம்ப நல்லதாய்ப் போச்சு; உங்கள் கோபம் எனக்குத் துணை

யாக ஆயிற்று. காரணம், நானும் அவர்மேல் கோபம் கொள்ளப்போவதாக உத்தேசம்.''

''நீங்கள் கூடவா? நீங்கள் எதற்காக அவன்மேல் கோபம் கொள்ள வேண்டும்? நீங்கள் உண்மையாகவே கோபத்தை வெளியே காட்டிக்கொண்டாலுங்கூடத் சரத் அதைக் கோபம் என்றே எடுத்துக்கொள்ள மாட்டானே. கெட்டிக்காரனான யுவன் அழகிய யுவதியின் கோபத்தைக் கோபமாகவே பாவிப்ப தில்லை.''

''பின் என்னவென்று பாவிக்கின்றனர்?''

''பிரேம கலகம் என்று கொண்டால்!''

''போங்கள்; ஏதேதோ பேசுகிறீர்கள்!'' இப்படிச் சொல்லிக் கொண்டே ஆசா தலையைத் திருப்பிக் கொண்டாள். பார்வையை வேறு பக்கமாகச் செலுத்தினாள். அவளுடைய முகமண்டலத்திலிருந்து ஒருவித மின்னொளி வெளிப்பட்டு நாலு பக்கங்களிலும் சென்றதாக விலாசனுக்குத் தெரிந்தது. அவளுடைய இவ்வித அசாதாரண அழகு விலாசனின் கண் களுக்கு அதிக ரமணீயமாக இருந்தது. அவன் அவளையே உற்று நோக்கினான்.

அவள் வெட்கத்தால் தலை குனிந்தது முற்றும் இயற்கை யாகவே தோன்றியது. ஆனால் முகத்தைத் திருப்பித் தன் பார்வையை வேறு பக்கமாகச் செலுத்தும்போது உதடுகளைக் கடிப்பானேன்? ஒரே கணத்தில் மனத்தில் கலக்கம் ஏற்பட்ட தைப் போன்ற முகபாவனை அவள் கண்களில் தோன்றுவதேன்? அவளுடைய சிவப்பான முகத்தில் ஒருவிதச் சாயை படர்வது வழக்கத்தைக் காட்டிலும் ஏன் சற்று அதிகமாய்க் காணப்படு கிறது? இவைகளின் காரணம் அவனுக்குத் தெரியவே இல்லை.

இன்னும் எதையாவது பேசி அவளை வெட்கப்படச் செய்ய அவன் ஆசை கொண்டதை அடக்கியும் முடியாதுபோல் தோன்றியது.

அதிகச் சிரமத்துடன் விலாசன் தன் ஆவலை அடக்கிக் கொண்டான்.

அவன் அழகைக் கண்டு ரஸிப்பவனே ஆயினும் தன் எதிரில் நிற்கும் அந்த அபூர்வமான அழகி, அவனுடைய மித்திரனின் காதலி என்பதை அவன் மறந்துவிடவில்லை. எனவே உதடுகள் வரையிலும் வந்த சொற்களைக்கூட அவன் பேசாமல் அடக்கிக் கொண்டான்.

வண்டி நகர்ந்து சென்றதும்; விலாசன் பெட்டிக்குள் தன்னந்தனியாக இருந்தபோது தான் அடக்கி வைத்துக்கொண்டிருந்த சொற்களை வாய்விட்டுச் சொல்லாமல் இருப்பது சிரம சாத்தியமாகிவிட்டது. அவன் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான்.

* * * *

தான் சரத்சந்திரன் மேல் கோபம் கொண்டதாக ஆசா விலாசனிடம் சொல்லியது வெறும் வேடிக்கைக்காகவே தான். ஆனால் விதியின் விளையாட்டினால் உண்மையாகவே சரத் சந்திரன் மேல் கோபம் கொள்ளும்படியான சம்பவங்கள், அவள் வீட்டிற்குத் திரும்பின போது நடந்திருந்தன.

எந்தச் சாவுக்கார் தாதுவின் நிலத்தையும் வீட்டையும் ஜப்தி செய்வித்தானோ, எந்தச் சாவுக்காரைப்பற்றி இப்போது தான் அவள் விலாசனிடம் பேசிக்கொண்டிருந்தாளோ, அதே நானுஸாஹிப் சாவுக்கார் அவளுடைய வீட்டிற்கு வந்திருந்தார். சரத்சந்திரனும் பாலுஸாஹிபும் சாவுக்காருமாக, கோபம் கலந்த குரலில் உரக்கப் பேசிக்கொண்டிருந்ததை அவள் திண்ணையிலேயே கண்டாள்.

ஆசாவைக் கண்டதுமே சாவுக்கார் படபடப்புடன் பேசத் தொடங்கினார்:

''வந்து சேர்ந்தாயா அம்மா? நல்லதாய்ப் போச்சு. உன்னைத் தான் வழி பார்த்துக்கொண்டே இருந்தோம். உனக்கு நான் ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன்: இந்தச் சத்தியாக்கிரகம் தேசபக்தி முதலிய இழவுகளை எல்லாம் உன் மண்டையிலிருந்து எடுத்து எறிந்துவிடு என்று; உனக்கு நாலு வார்த்தை நல்ல புத்தி சொல்லவேண்டும் என்று பாலு ஸாஹிப் கேட்டுக் கொண்டார். அடி பெண்ணே! தேசபக்தியின் வேலைகள் ஸ்திரீ களுக்குச் சரிப்படுமா? எங்களுடைய அக்கா இல்லையா, உன்னைப் போல் படித்த நாகரிகப்பெண்? நான்தான் அவளுக்காக ஒரு கல்யாண மாப்பிள்ளையைத் தேடினேன். வாயைத் திறக்காமல் அவனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு அவனுடன் ஆனந்த மாகக் குடும்பம் நடத்துகிறாள். இரண்டு பையன்கள் பிறந்து இப்பொழுது மூன்றாவது தடவையாக அவள் உண்டாகி யிருக்கிறாள்!''

ஆசா சிரித்துக்கொண்டே, ''ஆஹா! சேதியைக் கேட்டு

எனக்கு ஆனந்தமாக இருக்கிறது. அக்கா மறுபடியும் பிரசவிக்கும் பொழுது என்னைக் கூப்பிடுங்கள். அந்தச் சமயம் நான் சிறைவாசத்தில் இல்லாமல் வெளியே இருப்பின் ஆனந்தமாகப் பிரசவகால மஞ்சள் குங்கும மகோத்ஸவம் நடத்துவேன். தேசபக்தியைப் பற்றி நீங்கள் ஏன் வீணாகக் கவலைப்பட்டு நொந்துகொள்ளுகிறீர்கள்?'' என்றாள்.

''ஏன் கவலையா? உன்னுடைய இந்தப் பைத்தியக்காரத் தகப்பன் உன்னைக் கவனித்துக்கொண்டிருந்தால் எங்களுக்குக் கவலையே இல்லை. ஆனால் தேசசேவையின் காற்று உங்கள் மூன்று தலைமுறையாக வந்தவர்களுக்குப் பிடித்ததைப் போல் உனக்கும் பிடித்திருக்கிறது. எனக்கு இது விஷயமாகத் துக்கம் தாங்க முடியவில்லை. அந்தத் திலகனின் உபதேசத்தால் இந்தப் பாவூ ஸாஹிப் தன் வீடு வாசல் எல்லாவற்றையும் நிர்மூலமாக்கிக் கொண்டான். இப்போது காந்தியின் சத்தியாக்கிரகத்தால்—''

இதற்குள் பாவூஸாஹிப் ஆத்திரத்துடன், ''அடே நானா! என் வீடு வாசல் போனதைப்பற்றி உனக்கு ரொம்பவும் மனது துடிக்கிறதோ - எனக்குத் தெரியும். ஜாக்ஸனின் கொலை விஷயமாக என்னை அரசாங்கத்தார் கைது செய்தபோது எனக்காக ஐயாயிரம் ரூபாய் ஜாமீன் கட்டுவதற்கு உங்களில் யார் முன் வந்தீர்கள்? நான் சிறைக்குச் சென்றபோது சிரித்து விளையாடிக்கொண்டேதான் என்னை நீ பார்த்துக்கொண்டிருந்தாய்!'' என்றார்.

''பின்னே என்ன உங்கள் அர்த்தமில்லாத தேச சேவைக்காக .....''

சாவுக்காரின் இவ்விதமான கேவலப் பேச்சினால் தன் தந்தைக்கு ஆத்திரம் அதிகமாகும் என்பதை உணர்ந்த ஆசா குறுக்கிட்டுப் பேசினாள்:

''ஆனால் நானாஸாஹிப்! இந்தத் தகராறு எல்லாம் முன்பு பல தடவை நடந்திருக்கிறது. இப்போதைய சத்தியாக்கிரகத்தின் போதும் மறியலின் போதும் மட்டும் நீங்கள் எனக்கு உபதேசம் செய்யவில்லை. உங்களுடைய அபிப்பிராயமும் எங்களுடைய அபிப்பிராயமும் வெவ்வேறு. வழிகளும் முற்றும் முரண்பாடானவை. ஏன் வீணே தர்க்கமும் சண்டையும்? ஏழைகளை வதைத்துப் பிடுங்குதல், எட்டின மட்டும் சுரண்டுதல், அரசாங்கத்தின் நல்ல மதிப்பைப் பெறுதல், அதிகார வர்க்கத்தின் தாசனாக இருத்தல் இவைதாம் உங்கள்

கொள்கைகள். இவற்றை நீங்கள் தாராளமாக மேற்கொள்ளுங்கள். எங்களுக்கு நல்லது என்று படும் கொள்கைகளுக்காக நாங்கள் பாடு படுகிறோம். வருஷப் பிறப்பன்று அணைக்கட்டு வேலைகளை ஆரம்பிக்க விடாதபடி நாங்கள் சத்தியாக்கிரகம் செய்வதாக நிர்ணயித்துள்ளதை மாற்றப்போவதே இல்லை. நீங்கள் எத்தனைதான் உபதேசம் செய்தாலும் நாங்கள் கேட்கப் போவதில்லை; அதில் பிரயோஜனமும் இல்லை. தடியடிப் பிரயோகம் நடந்தாலுங்கூட நாங்கள் பயப்படப்போவதில்லை.''

''நான் ஏனம்மா உங்களைப் பயம் காட்டப் போகிறேன்? அந்தப் பூச்சாண்டி வேலையெல்லாம் உங்கள் மறியலில்தான் இருக்கும்!''

''நாஜு ஸாஹிப்! கொஞ்சம் நாக்கை அடக்கியே பேசுங்கள்'' என்று ஆசா தீவிர ஸ்வரத்துடன் பேசினாள்.

''அடக்க வேண்டுமா, எதற்கு? வேலை செய்யும்போது மட்டும் கண்மூக்குத் தெரிவது கிடையாது; நான் ஏதாவது தகராறு செய்தால் மட்டும் கோபம் பொங்கிக் கொண்டு வருகிறது. நீ இங்கு வராததற்கு முன்பு இதைப்பற்றித்தான் பேச்சு நடந்து வந்தது. நீங்கள் வெறும் பூச்சாண்டி காட்டுகிறீர்கள் என்பதை நான் சுலபமா நிரூபிக்கமுடியும்.''

ஆசா அலக்ஷ்யமாகக் கேட்டாள்: ''என்ன? என்னதான் சொல்லுகிறீர்கள்?''

நாஜு ஸாஹிப் சிரித்துக்கொண்டே பதில் சொன்னார்: ''ஏன் மறுபடியும் வாயைக் கிண்டுகிறாய்? சொல்லுகிறேன் கேள். இன்று காலையில் நான் படுக்கையைவிட்டு எழுந்ததும் என் தலையணைக்குப் பக்கத்தில் ஒரு சீட்டு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அந்தச் சீட்டில், 'நீங்கள் கம்பெனியிலிருந்து காம்பென்ஸேஷன் (நஷ்ட ஈட்டுப் பணம்) வாங்கினீர்களானால் - ஜாக்கிரதை, உங்கள் உயிர் போய்விடும்!' என்று எழுதியிருந்தது. இதற்குக் கீழே 'சத்தியாக்கிரகி' என்று கையொப்பம் இட்டிருந்தது.''

ஆசா மிகவும் ஆவேசத்தோடு, ''சே, சே, எங்களில் யாரும் இவ்விதமான சீட்டை எழுதியிருக்கவே முடியாது'' என்றாள்.

''பின் யார்தாம் எழுதியிருப்பார்கள்?''

''எங்கள்மேல் பொதுஜன விரோதம் ஏற்படுவதற்காக யாரேனும் இவ்விதஞ் செய்திருக்கலாம்; நான் என்ன சொல்லட்டும்?''

"வேண்டாம்; சொல்ல வேண்டியதில்லை; உங்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காகவே இங்கு வந்தேன். ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். இதோ நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்."

"அந்தச் சீட்டு எங்கே, சற்றுக் காட்டுவீர்களா?"

"ஓ! இதோ காட்டுகிறேன்! என்னை என்ன, பச்சைக் குழந்தை என்று எண்ணியிருக்கிறாயா? நான் அந்தச் சீட்டை ஸி. ஐ. டி. யிடம் கட்டாயம் கொடுக்கத்தான் போகிறேன்."

சரத்சந்திரன் உரத்த குரலில், "கொடுங்கள், தாராளமாகக் கொடுங்கள்; உடனே போய்க் கொடுங்களேன். ஏனெனில் அடுத்த வருடம் பட்டம் பெற்றவர்கள் ஜாபிதாவில் உங்களுக்கு ஒரு 'ராவ் பகதூர்' கட்டாயம் கிடைக்கும்" என்றான்.

இவ்விதக் கேலிக் கூத்தினால் நானுஸாஹிபின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. அவர் கோபமாய் ஏதேதோ பேசிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார்.

பாலூ ஸாஹிப் எழுந்து வீட்டிற்குள் சென்றதும் சரத் சந்திரன் ஆசாவிடம், "ஆள் எப்படி மிரண்டு போயிருக்கிறான் பார்த்தாயா? நானுஸாஹிபைத்தான் சொல்லுகிறேன்" என்றான்.

அவன் மேலே பேசுவதற்குள் ஆசா அவனைக் கூர்ந்து நோக்கினாள். உடனே சரத்சந்திரன் அவளை, "நீ ஏன் என்னை இப்படி விழித்துப் பார்க்கிறாய்?" என்று கேட்டான்.

அவள் சற்றுக் கம்பீரமான குரலில், "நான் கேட்கும் கேள்விக்கு உண்மையான - நேரான பதில் நீங்கள் கொடுக்க வேண்டும்" என்று சொன்னாள்.

"என்ன?"

"அந்தச் சீட்டு நீங்கள் எழுதியதுதானே?"

"ஆமாம்!"

"நிலைமையை ரொம்ப மோசமாக்கிவிட்டீர்களே!"

இத்துடன் நில்லாமல் ஆசா கோபமாக அவனைக் கண்டபடி வையவும் செய்தாள்.

அஹிம்ஸைக் கொள்கையில் சரத்சந்திரனுக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை என்பது ஆசாவுக்கு நன்கு தெரிந்ததுதான்; மேலும் அஹிம்ஸைக் கொள்கையை அவன் ஒப்புக்கொள்ளுவதற்காக அவள் எத்தனையோ சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறாள். எத்தனையோ தடவைகளில் அவள் சரத்சந்திரனின் பலாத்காரக் கொள்கையைக் கண்டித்துக் கடினமான பாஷையில்

பேசியிருக்கிருள். இன்றும் அதே காரணத்தைக் கொண்டு அவனைக் கடினமாகப் பேசினுள். கடைசியாக, "உங்களுக்குப் பலாத்காரத்தில் நம்பிக்கை இருந்ததென்ருல் தாராளமாக வைத்துக்கொள்ளுங்கள். ஆனல் என்னை விட்டு விலகிவிடுங்கள். என்னுடன் இருக்கும் வரையில் நீங்கள் இவ்விதம் செய்வது முற்றும் தவருகும். உங்களுக்கு எது நல்லது என்று படுகிறதோ அந்தப் பாதையில் செல்ல உங்களுக்குப் பூரண உரிமை உண்டு; ஆனல் அதைக் கைக்கொள்ளும் முன்பு நம் இருவருக்கும் உள்ள நட்பும் சம்பந்தமும் ரத்தாகிவிட வேண்டும்" என்ருள்.

சரத்சந்திரன் தழுதழுத்த குரலில், "சே, சே, இப்படிப் பேசாதே ஆசா; என் இருதயத்தில் இரண்டு விஷயங்கள் — முற்றும் முரண்பாடான இரண்டு விஷயங்களின் யுத்தம் நடப்பதை நீ எப்படி அறிவாய்? உனக்கு அதைப்பற்றிய கற்பனைக்கூடக் கிடையாது. ஒரு பக்கம் சுதந்தரப் போராட்டத்தில் எனக்குச் சரி என்று படும் மார்க்கத்தில் போக வேண்டும் என்ற இச்சையும் ஆவலும்; மறுபக்கம்......"

மேலே பேசுவதற்குள் சரத்சந்திரன் தொண்டை வறண்டு விட்டது. அவன் கீழே தரையில் தன் பார்வையைச் செலுத்திக் கொண்டே உட்கார்ந்திருக்கும் ஆசாவைப் பார்த்தவண்ணம், "......மறுபக்கம், உன்மேல் கொண்டுள்ள விலை மதிப்பற்ற காதல்!...." என்று வாய்க்குள்ளேயே முணுமுணுத்தான்.

# அத்தியாயம் 9

தளவலா சத்தியாக்கிரக மறியல் நாளுக்கு நாள் அதிகப் பிராபல்யம் அடைந்து வந்தது. எங்கே பார்த்தாலும் மறியலின் தடபுடல்கள் அதிகமாகிக் கொண்டே வந்தன. பெரிய யுத்தத்திற்காக இரு தரப்பின் சைனியங்கள் தயாராவதைப் போலவே மறியல்காரர்களும், எதிரிகளான கம்பெனியார்களும், வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டிருந்தனர்.

புயலுக்குப் பிறகு பெய்யும் மழையை எதிர்பார்த்துத் தானே ஆகவேண்டும்? உண்மையாகவே மழைக் காலம் ஆரம்பிப்பதற்குள்ளாக மறியலை அடக்கிவிடவேண்டும்:

மழைக்சாலம் ஆரம்பிக்கு முன்பே அணைக்கட்டின் சுவர்கள் ஏறக்குறையப் பாதிக்கு மேல் வந்துவிட வேண்டும். அப்போது தான் பாக்கி வேலைகள் தங்கு தடையின்றி நடந்தேறும். ஆனால் இதில் கொஞ்சமாவது தாமதம் ஏற்பட்டாலும் மலைகளின் மேல் பெய்யும் மழைஜலம் தேக்கத்திற்குள் வந்து நிரம்பி அரைகுறையாகக் கட்டப்பட்ட சுவர்களை அடித்துக்கொண்டு போய்விடும். சுமார் நான்கு மாதங்கள் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்து வேடிக்கை பார்க்க வேண்டியதாகும். மறுபடியும் அக்டோபர் மாதத்தின் நடுவில் முதலிலிருந்து வேலை துவங்க வேண்டியதாக வரும். எனவே மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு இடையிலுள்ள இரண்டு இரண்டரை மாதங்களுக்குள் அணைக்கட்டின் சுவர்களில் பாதிக்குமேல் எழுப்பப்பட்டுவிட வேண்டும் என்னும் நோக்கத்துடன், ஏராளமான சுண்ணாம்பும், ஆயிரக் கணக்கான சிமிட்டு மூட்டைகளும், கருங்கற்களும், சல்லி சரளைக் கற்களும், செங்கல்லும், மற்றும் கட்டிடத்திற்கு வேண்டிய சகல சாமான்களும் அளவின்றிச் சேர்க்கப்பட்டுத் தளவலா அணைக் கட்டு கட்டப்படவேண்டிய இடத்தில் குவிக்கப்பட்டிருந்தன.

கொத்தர்கள், சிற்றாட்கள், கூலிகள், தச்சர்கள், மேஸ்திரிகள், என்ஜினீயர்கள், ஓவர்சீயர்கள், ஸூபர்வைஸர்கள் இன்னும்

ஆயிரக் கணக்கான தொழிலாளிகள் தளவலா கிராமத்தில் முகாம் போட்டிருந்தனர்.

கம்பெனியார்களின் உயர்ந்த உத்தியோகஸ்தர்களின் முகாம் லோனுவலாவில்தான் இருந்தது. ஆயிரக்கணக்கான கூலிகளின் குடிசைகளோ தளவலாவில் நன்செய் நிலங்களின்மேல் எழுப்பப் பட்டுவிட்டன. வருஷப் பிறப்பன்று நல்ல முகூர்த்தத்தில் கல்லுளி களின் 'டக் டக்' என்ற சத்தம் ஆரம்பித்தால், இரவும் பகலும் இடைவிடாது வேலையை நடத்தி மழைக் காலத்திற்குள் சுவரை உயர்த்திவிடக் கம்பெனியார் ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்துகொண் டிருந்தனர்.

கம்பெனியாரின் இந்தத் திட்டங்களையெல்லாம் ஆசாவும் அவளைச் சேர்ந்தோர்களும் நன்கு அறிந்துதான் இருந்தனர். சத்தியாக்கிரகிகளும் தங்கள் நோக்கப்படி ஒருவிதத் திட்டம் தயார் செய்திருந்தனர். அதாவது, மழைக்காலம் ஆரம்பிக்கும் வரையில் எவ்விதமாவது கஷ்டத்துடன் மறியலை நடத்திக் கொண்டே இருந்தால் பிறகு இயற்கையன்னையே இவர்களுக்குச் சாதகமாக இருப்பாள். மழைக்காலம் ஆரம்பித்தவுடன் சத்தியாக் கிரகிகளுக்கு வேலை ஒன்றும் இல்லை. அணைக்கட்டுக் கட்ட வந்தவர்களின் பாடு 'அரோஹரா' தான். சுமார் நான்கு மாதங்கள் பூர்ண ஓய்வு கிடைக்கும்; கட்சிக்கு ஆள் பலமும் திரவிய பலமும் அந்தக் காலத்தில் நிறையச் சேர்த்துக்கொள்ள சாவகாசம் கிடைக்கும். மறுபடியும் கோடை வரும்; ஆனால் யார் கண்டார்கள்? கம்பெனியார் முதலில் அடைந்த நஷ்டத்தை ஈடு கட்ட முடியாமல் ஒருவேளை அணைக்கட்டுக் கட்டும் யோசனையை நிரந்தரமாகவே கைவிட்டுவிடலாம். எனவே மழைக் காலம் ஆரம்பிக்கும் வரையில் மும்முரமாக மறியல் செய்துகொண் டிருந்தால், தங்கள் கட்சி பாதிக்குமேல் ஜயித்து விட்டதாகவே பொருள்படும் என்று ஆசாவும், மற்றையோரும் எண்ணியிருந்தனர். இதன்பொருட்டு அவர்கள் பகீரதப் பிரயத் தனம் செய்து வந்தனர் என்றால் அதில் மிகை ஒன்றும் இல்லை.

ஆசாவும் கேவலம் புனாத் தலைவர்களையும் தொண்டர் களையும் மட்டுமே நம்பியிருக்கவில்லை. ஆனால் மகாராஷ்டிர தேசம் எங்கும் அவள் பிரயாணம் செய்து மறியலுக்கு உதவியைச் சம்பாதித்துக்கொண் டிருந்தாள். அத்துடன் நிற்காமல் ஸ்ரீமதி ஆசாதேவி மகாத்மா காந்தியடிகளைக் கண்டு பேசித் தன் மறியலின் காரணங்களை எடுத்துக் கூறி அவருடைய அனுமதியையும்

பெற்றிருந்தாள். மகாத்மாவின் அனுதாபம் தங்கள் கட்சிக்கு உண்டு என்பதை அகில பாரத தேசமும் அறியும்வண்ணம் பிரகடனப்படுத்தியும் இருந்தாள். அவளுடைய பிரகடனத்துக்கு மறுமொழி தருவதேபோல் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் அவளுக்கு உதவியளிக்கப் பலர் காத்திருந்தனர். பணமும் நிதியும் ஏகமாய்ச் சேர ஆரம்பித்தன. கேவலம் நாகபூருக்கும் ஹுப்ளிக்கும் நடுவில் உள்ள மகாராஷ்டிர தேசம் மட்டும் அல்ல. மதராஸ், பஞ்சாப், குஜராத் முதலிய மாகாணங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வந்து கூடினர். நாளுக்கு நாள் கூட்டம் அதிகரித்தது.

சத்தியாக்கிரகத்தின் இந்தத் தடபுடல்களை எல்லாம் கவனித்த சோராப்ஜீ தீன்ஷா கம்பெனியாரின் டைரெக்டர்கள் மனத்திற்குள்ளாகவே கலக்கம் அடையாமல் இல்லை.

புனவைச் சார்ந்த ஒரு பெரிய தலைவரை மத்தியஸ்தராக நியமித்துக் கம்பெனியார்கள் சமாதானப் பேச்சை ஆரம்பித்தனர்.

அந்தத் தலைவர் நடத்திய ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் இரண்டு கட்சிகளிலும் முக்கியமாகக் கருதப்பட்ட பிரதிநிதிகள் கூடினார்கள்.

ஆனால் இந்தச் சமாதானப் பேச்செல்லாம் மிகவும் ஆழமான சூழ்ச்சிக்காகக் கம்பெனியார்கள் செய்திருக்கிறார்கள் என்பதை ஆசா நன்கு அறிவாள். சமாதானப் பேச்சின்போது, அர்த்தமில்லாத சில நிபந்தனைகளைக் கம்பெனியார்கள் போடுவார்கள். அதனால் சமாதானப் பேச்சை சுமார் ஒரு மாத காலத்திற்கு இழுத்துப் போட்டு நடத்துவார்கள். இந்த இடைவேளைக்குள்ளாக வேலையும் வேகமாக நடக்கலாம். கடைசியில் நிலச் சொந்தக்காரரான குடியானவர்களில் அயோக்கியர்களாகச் சிலரைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்கு நிறையப் பணம் கொடுத்துத் தம் வசமாக்கிக்கொள்ளுவார்கள். குடியானவர்கள் தம் இஷ்டத்துக்கு இணங்கிவிட்டார்கள் என்று பிரகடனப்படுத்துவார்கள். இந்த சூழ்ச்சிகளை எல்லாம் ஆசா முன்னாலேயே அறிந்திருந்தாள்.

எனவே சமாதானத்திற்காகக் கூடும் அந்தக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே ஆசா மிகவும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்:

"கம்பெனியார்கள் எங்களுடன் சமாதானம் செய்து

கொள்ள முன் வந்ததைப் பற்றி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகிறது. காரணமின்றி ஆயிரக் கணக்கான ஏழை மக்களைச் சத்தியாக்கிரக மறியலில் ஈடுபடச் செய்து கஷ்டப் படுத்த வேண்டும் என்று எங்களுக்கு ஆசை இல்லை. சமாதானம் நிலவ வேண்டும் என்பது எங்களுக்கும் விருப்பமே! ஆனால் கம்பெனியார்கள் உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசி, 'எங்களுடையது எங்களுக்கே சொந்தம்; உங்களுடையதும் எங்களுக்கே சொந்தம்' என்னும் கொள்கையைக் கடைப்பிடித் தார்களானால் சமாதானப் பேச்சுக்கள் வெறும் வேஷப் பேச்சுக் களாகும் என்பதை யாவரும் உணரவேண்டும். நன்செய் நிலத்தின் சொந்தக்காரர்களான குடியானவர்களுக்கு அவர்கள் கம்பெனியாருக்கு விற்கும் நிலத்தின் அதே அளவுள்ள நன்செய் நிலங்கள் வேறு இடங்களில் வாங்கித் தரப்படுதல் அவசியம். பதிலுக்குப் பதில் நன்செய் நிலங்கள் வாங்கித் தரவேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. இதற்கு அவர்கள் இணங்காவிடில் குடியானவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் நிலங்களின் விலையை அவர்களே நிர்ணயிக்க வேண்டும். கேட்கும் தொகையைக் கம்பெனியார் கொடுத்துத்தான் ஆகவேண்டும். குடியானவர்கள் நிர்ணயிக்கும் விலையில் பேரம் பேசுவதற்கு இடமே இல்லை. இந்த நிபந்தனைகளுக்குக் கம்பெனியார்கள் இணங்கினால்தான் இன்று கூடின கூட்டம் பலன் அளிக்கக் கூடியதாக இருக்கும். உடனே நான் சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிடவும் கூடும். வேறு எந்த நிபந்தனைகளின் மேலும் சமாதானப் பேச்சுக்கு இடமே கிடையாது. பிரயோசனம் இல்லாத வெறும் வாய் வேதாந்தம் பேசிக் காலத்தைக் கடத்த நாங்கள் தயாராக இல்லை.''

ஆசாவின் பிரசங்கம் அங்கே கூடியிருந்தவர்களைப் பிரமிக்கச் செய்தது. அவள் பேசி முடித்ததும் சபையில் ஒரு விதமான நிச்சப்தம் குடிகொண்டது. மேலே என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியவில்லை.

கம்பெனி டைரெக்டர்கள் ஒன்று கூடித் தமக்குள்ளாகவே ஏதோ 'கசு முசு' வென்று காதைக் கடித்துக்கொண்டனர். எந்தப் பத்திரிகைக் காரியாலயத்தில் கூட்டம் கூடியிருந்ததோ அந்தப் பத்திரிகை ஆசிரியர் முகத்தில் ஒருவிதச் சோபை காணப் பட்டது. டைரெக்டர்களில் அதிமுக்கியமான ஒருவர் அந்த ஆசிரியரின் காதில் வாயைவைத்து ஏதோ முணுமுணுத்தபோது,

அவர், ''நான் மட்டும் என்ன செய்துவிடப் போகிறேன்?'' என்று சொல்லுவதைப்போல் இரண்டு மூன்று தரம் கனைத்துக் கொண்டார். அவர் பிறகு மெள்ளக் கண் சிமிட்டிக்கொண்டே ஆசாவை ஒரு பக்கமாக அழைத்துக்கொண்டு போய்த் தாழ்ந்த குரலில், ''நீங்கள் என்ன இப்படிக் காரியம் செய்து விட்டீர்கள்? கேவலம் இந்தக் குடியானவர்களால் மறியலை வெற்றிகரமாக நடத்த முடியுமா என்ன?'' என்றார்.

''மறியலை நிறுத்துவதாக எங்களுக்குக் கொஞ்சமும் யோசனையே இல்லை. இந்த நோக்கத்துடன்தான் இந்தச் சபை கூட்டப்பட்டது என்பது இப்போதுதான் தெரிகிறது. இதற்குத் தானா எங்களைக் கூப்பிட்டனுப்பியது? சத்தியாக்கிரகத்தை மிகவும் விரிவான முறையில் நடத்துவதற்கு நாங்கள் களைத் தவர்கள் அல்ல. நீங்களும் தக்க ஏற்பாடுகள் செய்துகொண் டிருப்பதாகத் தெரிகிறது. சத்தியாக்கிரகத்தின்போது நீங்களும் எங்களுடன் சேர்ந்து மறியல் செய்து நிலத்தின்மேல் படுத்துக்கொண்டு வேலையை நடக்கவொட்டாது தடுப்பதாக எங்களிடம் பிரதிக்ஞை செய்திருக்கிறீர்கள்; ஞாபகம் இருக் கிறதோ தங்களுக்கு?'' என்றாள். உடனே அந்த ஆசிரியர் சிரிப்ப தைப்போல் பாவனை செய்துவிட்டு, ''அம்மா, நான் சொன்ன தென்னவோ உண்மைதான். ஆனால் நடப்பது அவ்வளவு எளிதாக எனக்குப்படவில்லை. என்னைப்போன்ற பெரிய ஆசிரியர் கள்கூட உங்கள் பக்ஷமாக இருப்பதைக் கண்டுதான் கம்பெனி டைரெக்டர்கள் சமாதானம் பேச முன்வந்தனர். இந்த நிலைமை யில் சிலர், 'இதை விடக்கூடாது' என்பதையும் சிலர், 'போனால் போகட்டும்' என்பதையும் தாங்கள் அறிவீர்கள்'' என்றார்.

ஆசா அவரைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே, ''உங்களு டைய இந்தச் சாதுரியமான கோழைத்தனம் உங்கள் வரையில் இருக்கட்டும். அது உங்களுக்குக் கோடி நன்மைகள் பயக் கட்டும்! குடியானவர்களின் லாப நஷ்டங்களைப் பணயமாக வைத்து விளையாட நாங்கள் தயாராக இல்லை. உயிரையும் கொடுத்து அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்கவே நாங்கள் முயல்வோம்'' என்றாள் கண்டிப்பாக. இப்படிப் பேசியவுடன் ஆசா அவ்விடம் விட்டு அகன்று தன் இடத்தில் போய் உட் கார்ந்தாள்.

அந்த ஆசிரியர் டைரெக்டர்கள் நடுவில் போய் உட்கார்ந்து

கொண்டு அவர்கள் காதில் ஏதோ ரகசியம் பேசினுர்.

டைரெக்டர்களும் ஒருவருக்கு ஒருவர் 'கசு முசு' என்று பேசி விட்டுத் தலையை ஆட்டினுர்கள். அவர்கள் முகத்தில் மந்தகாசம் தவழ்ந்தது; கண்கள் பிரகாசம் அடைந்தன.

பிறகு சபையை விட்டு அவர்கள் வெளியேறினுர்கள். சபை ஆரம்பிக்கும்போது அவர்கள் அங்கத்தினர்களையெல்லாம் கையைக் குலுக்கின அன்பும் பேசின குதூகலமும் அவர்கள் சபையை விட்டு வெளியேறும்போது எங்கே சென்றனவோ தெரியாது. வெளியே போகும்போது அவர்கள் யாரையும் கை குலுக்கவில்லை.

இப்படி அந்தச் சபை கலைந்தது.

சத்தியாக்கிரகம் நடந்தே தீரும் என்பது நிச்சயம் ஆயிற்று.

கோபித்துக்கொண்டு வெளியேறின டைரெக்டர்கள் இனி மேல் சத்தியாக்கிரகத்தை எவ்விதத்திலெல்லாம் அடக்க முடியுமோ அவ்வளவு முறைகளையும் கையாளுவார்கள் என்பது ஆசாவுக்குத் தெரிந்தது.

கம்பெனியார்கள் கையாள இருந்த முறைகளைப் பற்றியும், மற்ற விஷயங்களைப் பற்றியும் தளவலாவுக்கு வரும் ஜனங்கள் பற்பல விதமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசும் பேச்சுக்கள் அதி விசித்திரமாய் இருந்தன. உண்மையிலேயே சத்தியாக்கிரகத்திலும் அஹிம்சைத் தத்துவத்திலும் நம்பிக்கை கொண்டவர்கள் எதிரிகளின் அடக்கு முறைகளைப் பற்றிக் கொஞ்சமும் அச்சம் கொள்ளவில்லை என்பதை ஆசா நன்கு அறிந்திருந்தாள். எனினும் அவ்விதமான உண்மை மனச்சாட்சி கொண்டவர்கள் சிலரே இருப்பார்கள் என்பதையும் பயந்துகொண்டு வீம்புக்காகவாவது சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிரிக் கட்சியினர் செய்யும் அட்டகாசங்களைப் பற்றிய பயம் அதிகரிக்கும் என்பதையும் அவள் அறியாமல் இல்லை.

ஒரு பக்கத்தில் அவள் எல்லோருக்கும் தைரியம் ஊட்டும் வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தாள்; மறுபக்கத்தில் கம்பெனியார்கள் அடக்குமுறைகளை எவ்விதம் கையாளப் போகிறுர்கள் என்பதன் விஷயமாகத் தகவல்கள் கிடைக்குமா என்று ஆவலுடன் இருந்தாள். சிலர் பலவிதமான விஷயங்களை அவளுக்கு எடுத்துக் கூறியும், அவ்விஷயங்களில் அவளுக்கு நம்பிக்கையே உண்டாகவில்லை. நடுவில் அவளுக்குச் சந்தேகமும்

ஏற்படும். தன் காதுகளுக்கு எட்டும் விஷயங்கள் எதுவரையிலும் பொய், எது வரையிலும் உண்மை என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

இந்த நேரத்தில்தான் அவளுக்கு விலாசனின் நினைவு வந்தது. உயரமான, சிவப்பான, மெலிந்து ஒடிந்து விழுவதைப்போல் இருந்த அந்த விலாசனின் உருவம் அவள் கண்களின் முன் வந்து நின்றது.

'விலாசன் என்னை முற்றும் மறந்துவிட்டானா?' இந்தக் கேள்வி அவள் ஒரு மனத்தில் உதித்ததும் அவளுடைய மற்றொரு மனம், 'சீ, ஒருபோதும் அப்படி நடக்காது!' என்று சொல்லியது.

மனத்தில் நடந்த அவளுடைய தர்க்கம் பொய்யாகவில்லை.

ஒருநாள் மாலையில் அவள் பிரசார வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தபோது பாவூ ஸாஹிப் அவளிடம், "உன் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது" என்றார்.

"எங்கே இருக்கிறது?"

"இதோ, இங்கேதான் இருக்கிறது. சாயங்காலம் ஓர் ஆள் அதைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்துவிட்டுப் போனான். யார் கொடுத்தனுப்பினார்கள் என்று அவனை விசாரித்து அறிவதற்குள் அந்த மனிதன் இவ்விடம் விட்டுப் போய்விட்டான். 'தனிப்பட்ட விஷயம்' என்று கவரின்மேல் எழுதியிருப்பதால் அதை நான் திறந்து பார்க்கவில்லை."

ஆசா கவரைத் திறந்து கடிதத்தைப் படித்தாள்.

கடிதத்தின் கீழ் விலாசனின் கையொப்பம் போட்டிருந்தது. விஷயம் மிகவும் அடக்கமாக இருந்தது.

"உங்களிடம் பல முக்கியமான விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. உங்கள் வீட்டிற்கே வந்து உங்களைச் சந்திக்க என்னால் முடியாது. காரணம் என்னவெனில் முன்பு நான் உங்கள் வீட்டில் ஐந்தாறு நாட்கள் தங்கியிருந்ததனாலேயே கம்பெனியார்கள் என்மீது சந்தேகப்பட ஆரம்பித்திருக்கின்றனர்!

"ஆகையால் நீங்கள் தயவுசெய்து இவ்விடம் புறப்பட்டு வந்தால் நல்லது. இவ்விடம் என்றால் என் 'காம்பு'க்கு அல்ல; அது முற்றும் கெடுதி பயக்கும் விஷயம். இவ்விடத்திற்குச் சமீபமாகக் 'கிரஸென்ட் ஹோட்டல்' என்னும் ஒரு ஹோட்டல் இருக்கிறது. அங்கே நாம் சந்தித்துப் பேசுவோமானால் ஒரு வம்பும் இல்லை. நாளை இரவுப் போஜனத்திற்காக நான் மூன்று

பேர் சாப்பாட்டிற்கு 'ஆர்டர்' கொடுத்திருக்கிறேன். மூன்று பேருக்கு ஏன் சொன்னேன் என்றால் உங்களுடன் சரத்சந்திரனும் வரலாம் என்று எண்ணினேன். அவனையும் நீங்கள் கூட்டிக் கொண்டு வர வேண்டுகிறேன். அன்றைத் தினம் அவன் என்னை ரெயில்வே ஸ்டேஷன் வரையிலும் வழியனுப்ப வரவில்லை என்ற காரணத்தால் அவனைச் செம்மையாக வையவேண்டும் என்று இருக்கிறேன். சாப்பாட்டுக்கு அழைத்து அவன் வாயில் பக்ஷணங் களைத் திணித்துவிட்டுப் பிறகு அவன் பேசமுடியாத சமயத்தில் அவனுடன் சண்டைபோட வேண்டும் என்பதே என் ஆசை.

''இந்த என் திட்டத்தைப் பற்றி அந்தப் புளுகனிடம் ஒன்றும் சொல்லவேண்டாம்.

''நாளை உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

விலாசன்.

இந்தக் கடிதம் ஆசாவிற்கு உண்மையில் ஆனந்தம் விளை வித்தது.

விலாசனின் அழைப்புக்கு இணங்கிச் சரத்சந்திரனுடன் ஆசா அவ்விடம் போகத் தீர்மானித்தாள்.

ஆனால் மறுநாள் அவளுடைய தந்தைக்கு அசௌக்கியம் ஏற்பட்டது. சமீபகாலமாகவே அவருடைய தேக நிலை சற்று மோசமாகவே இருந்துவந்தது. சத்தியாக்கிரக மறியலுக்கு உண்டான ஏற்பாடுகளைச் செய்யும்போது ஆசாவிற்குத் தன் தகப்பனாரின் தேக நிலைமையைப்பற்றிய கவலையும் அடிக்கடி தோன்றித் தோன்றி மறைந்தது. அவருக்கு 'ஆஸ்த்மா' இருந்ததினால் இடையிடையே இழுப்பு வந்துவிடும். மூச்சுக்கூட விட முடியாதபடி அவர் படுத்த படுக்கையாகிவிடுவது வழக்கம்.

இன்றைக்கும் அவருக்கு இழுப்பு வந்துவிட்டது. பாயும் படுக்கையுமாக விழுந்துவிட்டார். எனவே ஆசா சரத்சந்திர னிடம், ''நீங்கள் மட்டுந்தான் விலாசனைப் பார்க்கப் போக வேண்டும். நான் வரமுடியாதபடி இடையூறுகள் எதிர்பாராத விதமாக ஏற்பட்டுவிட்டதை அவரிடம் சொல்லி என்னைக் கோபிக்காமல் இருக்கச் சொல்லுங்கள்'' என்றாள்.

கிரஸெண்ட் ஹோட்டலில் சரத்சந்திரனையும் ஆசாவை யும் வழிபார்த்துக்கொண்டிருந்த விலாசனுக்கு, சுமார் ஏழு மணிக்குச் சரத்சந்திரன் மட்டும் வந்து நுழைவது தெரிந்தது.

அவனை வரவழைத்து நல்வரவு கூறுவதற்காக விலாசன்

எழுந்து அவனிடம் சென்றான். சரத்சந்திரன் முகத்தில் ஒரு விதக் கலக்கமும் காணப்படாமல் இருந்ததைக் கண்டு விலாசன், "இது என்ன? நீ மட்டும் தனியாக வந்தாயோ?" என்று கேட்டான்.

"ஆமாம்; ஆசா வரவில்லை: உனக்கு என்ன ரொம்ப ஏமாற்றம் ஆகிவிட்டதா?"

"மடத்தனமாகப் பேசாதே."

சரத்சந்திரன் சிரித்துக்கொண்டே ஆசா வராத காரணத்தை எடுத்துச் சொன்னான்.

விலாசன், "அவள் வந்திருந்தால் ரொம்ப நல்லதாக இருக்கும். நீயாவது வந்தது வெகு நல்லதாகவே போயிற்று. பல முக்கியமான விஷயங்களை உன்னிடம் சொல்லவேண்டியிருக்கிறது. வா, போகலாம்; அதோ அந்த அறையை நமக்கென்று நான் முன்னாலேயே 'ரிஸர்வ்' செய்திருக்கிறேன்" என்றான்.

அறையில் போய் உட்கார்ந்ததும் சரத்சந்திரன் மிக ஆவலுடன், "ஊம் சொல்லு சொல்லு சீக்கிரம், சொல்ல வேண்டியதை யெல்லாம்" என்றான்.

"அடே அப்பா! என்ன இத்தனை அவசரம்; நான் ஜோரான விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே எல்லாவற்றையும்!" என்றான் விலாசன் சிரித்துக்கொண்டே.

"நல்லது, நல்லது."

"ஆம்......இது வந்து........."

"என்ன?"

"நீ கொஞ்சம் மது சாப்பிடுகிறாயா?"

"சாப்பிடலாமே!"

"என்ன கொண்டுவரச் சொல்லலாம்?"

"எதுவானாலும் சரி. நான் ரொம்ப நாட்களாகவே மது பானம் செய்வதில்லை. இப்போது கொஞ்சம் சாப்பிட்டால் ரொம்ப நல்லதுதான். நீயோ அன்னிய நாட்டு மதுபானங்களை நன்கு ருசி பார்த்திருக்கிறாய்! நீ கொண்டுவரச் சொல்லும் பானம் உயர்ந்ததாகவே இருக்கும்; அல்லவா?"

விலாசன் சிரித்துவிட்டுப் பரிமாறுபவனைக் கூப்பிட்டு 'ஒயின்' கொண்டுவரச் சொன்னான்!

புட்டியையும் கோப்பையையும் கொண்டுவந்து வைத்து

விட்டுப் பரிசாரகன் போய்விட்டான். விலாசன் கோப்பையில் மதுவை ஊற்றிக்கொண்டே, "யாருடைய பெயரால்?" என்றான்.

"நீ யாருக்காகச் சாப்பிடுகிறாயோ அவர் பெயரால்!"

"உன் மனத்தில் கோயில் கொண்டிருக்கும் பெண்ணின் பெயரால்" என்று சொல்லிக்கொண்டே விலாசன் கோப்பையை வாயில் வைத்து உறிஞ்சினான்.

"உன் மனத்தைக் கொள்ளைகொண்ட மங்கைக்கு" என்றான் சரத்.

"அப்படி யாரும் காணோமே!"

"பொய் சொல்லாதே!"

பேச்சை மாற்றுவதற்காக விலாசன், "அது கிடக்கட்டும், சரத்! இந்த அர்த்தமற்ற சத்தியாக்கிரகத்திலிருந்து ஆசாவை மீட்க என்ன உபாயம் இருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?"

"நீயும் அப்படித்தான் எண்ணுகிறாயா? அஹிம்சைத் தத்துவத்தில் அவளுக்கு எல்லையற்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் வர வர அனுபவத்தில் அது பிரயோஜனமில்லை என்பதை அவளே அறியலாம்."

"இந்த மறியல் எவ்விதம் நடக்கப் போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. இதை அறிவதற்காக ஆசாவையே இங்கு வரவழைக்க ஆசைப்பட்டேன். கம்பெனியார்கள் பெரிய ராக்ஷஸ உபாயங்களைக் கையாண்டு மறியலை அடக்குவதற்கு யோசித்திருக்கிறார்கள்."

"அப்படியென்றால், என்னதான் செய்யப்போகிறார்கள் கம்பெனியார்கள்?"

அக்கம்பக்கத்தில் ஒருவரும் இல்லையா என்பதை அறியும் பொருட்டு விலாசன் தன் பார்வையை நாலு பக்கங்களிலும் செலுத்திக்கொண்டே, தாழ்ந்த குரலில் ரகசியமாகச் சரத் சந்திரனிடம், "சொல்லுகிறேன் கேள்! அணைக்கட்டுக் கட்டிட வேலை நடக்கும் இடத்தில் வேலை செய்வதற்காக எங்கள் கம்பெனியாரின் கூலிகள் செல்லும்போது, அரசாங்கத்திலிருந்து போலீஸ் பட்டாளத்தையும் மாஜிஸ்ட்ரேட்களையும் ஜாகையில் கொண்டுவந்து நிறுத்துவதாகக் கம்பெனியார்கள் திட்டம் போட்டிருக்கின்றனர்."

"பூ, இவ்வளவுதானா? போலீஸ் பட்டாளம் வராமல்

எங்கேயாவது மறியல் நடந்திருக்கிறதை நீ அறிவாயா? இவைகளையெல்லாம் சத்தியாக்கிரகிகள் எதிர்பார்த்துத்தான் இருக்கின்றனர்.''

''அது சரிதான்; ஆனால் எந்த விஷயம் கவலையைக் கொடுப்பதாக இருக்கிறதோ அந்த விஷயத்தை நான் இன்னும் உன்னிடம் சொல்லவே இல்லை.''

''அது என்ன அப்படிப்பட்ட விஷயம்?''

''கம்பெனியார்கள் பம்பாயிலிருந்து நூற்றுக்கு மேலான பட்டாணியர்களை வரவழைத்திருக்கின்றனர். சத்தியாக்கிரகிகள் தரையின்மேல் படுத்துக்கொண்டதும் இந்தப் பட்டாணியர்கள் அவர்களைத் தூக்கி அப்பால் எறிவார்கள். மறுபடியும் சத்தியாக்கிரகிகள் தங்கள் இடத்திற்குத் திரும்பிவரினும் அப்படியே தூக்கி எறிந்துவிடுவார்கள். அப்படிச் செய்தும் சத்தியாக்கிரகிகள் கேட்காவிடில் அவர்கள் மேல் கொதிக்கும் ஜலத்தை ஊற்றுவதற்காகப் பெரிய பெரிய பம்புகளும் குழாய்களும் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலும் வெற்றி காணாவிடில் பட்டாளத்தார்களை ஏவி ஆட்களை ஒவ்வொருவராய்ப் பிடித்துக் கைது செய்து மாஜிஸ்ட்ரேட் முன்பு ஆஜர் செய்வித்துச் சிறைவாசமும் அபராதமும் விதித்துத் தக்கபடி தண்டிக்கப் போகிறார்கள்.''

''ஓஹோ! அப்படியா சேதி!''

இவ்விதம் சொல்லிக்கொண்டே பெருமூச்சு விட்டு சரத்சந்திரன் அதிகக் கவலையில் ஆழ்ந்துவிட்டான்.

கொஞ்சநேரம் கழிந்ததும் அவன் கேட்டான்:

''ஏண்டா விலாஸ்! இந்த முறைகளெல்லாம் யாருடைய அபாரமான மூளையில் உதித்தனவாம்? எந்த முட்டாள் இந்த மாதிரியெல்லாம் திட்டம் வகுத்தானோ அவன் தலையைத் துண்டு போடவேண்டும் என்று எனக்கு உண்மையாகவே ஆவல் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ராக்ஷஸனை அவனுடைய பலாத்காரக் கொள்கையின் மூலமாகவே நன்றாக விசாரிக்க வேண்டும்; அல்லவா? முள்ளால்தானே முள்ளை எடுக்க முடியும்? யார் அந்த நிபுணன்? அவன் பெயர் என்ன? சொல்லுடா விலாஸ்.''

''கம்பெனியாரின் டைரெக்டர்களில் அவனும் ஒருவன். அவன் பெயர் ஒகார்மென். பெரிய போக்கிரி, கடின நெஞ்சுடையவன், மற்ற டைரெக்டர்கள் எல்லோரும் பார்ஸிகள். இந்தச் சத்தியாக்கிரகத் தடபுடல்களையெல்லாம்

கண்டு மிரண்டுபோன அவர்கள் தம்மால் மறியலை அடக்க முடியாது என்று கண்டு இந்தக் கொடும்பாவியான ஒகார்மென் கையில் அடக்குமுறைகளை ஒப்பித்துவிட்டனர்.''

''அவன் இருப்பிடம் எது? பம்பாயா?''

''சீ, சீ; ஆசாமியின் தற்கால இருப்பு லோனுவலா காம்ப் தான்.''

''எனக்கு ஒரு தரம் ஆளைக் காட்டேன். ஆசாமிதான் எப்படி இருக்கிறுன் என்பதைப் பார்க்கலாம்!''

''வெறும் ராக்ஷஸன்தான்! என்னைப்போல் நாலைந்து மடங்கு பருத்தவன்; உயரம் சரியாக ஆறரை அடி இருக்கும். மூக்கு கருடன் மாதிரி வளைந்து இருக்கிறது. உதடுகளைப் பார்த்தால் அவன் யார்மீதோ க்ஷாத்திரம் வைத்துக்கொண்டவனைப்போல் எப்போதும் சுருங்கியவண்ணமாகவே இருக்கும். உடம்பு முழுவதும் ஒரே மயிர்க்காடு. காதுகளின் ஓரங்களில் கூட மயிர் அடர்ந்து வளர்ந்திருக்கிறது. தலையில் இருக்கும் செம்பட்டை மயிர் எண்ணெயைக் கண்டு பல மாதங்கள் ஆகியிருக்கும். கண்கள் குழிவிழுந்திருக்கின்றன. ஆனல் நீல நிறமாகவும் மிகவும் பிரகாசமுள்ளனவாகவும் இருக்கின்றன. நெற்றியின் புருவ மயிர் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிரல் நீளம் வளர்ந்திருக்கிறது.''

''எனக்கு அந்த ஆசாமியின் விஷயமாக ரொம்ப ஆவல் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் காம்பில் அவன் எந்தப் பக்கமாக வசிக்கிறுன்? எத்தனை மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்து, எப்போது காலைச் சாப்பாடு சாப்பிடுகிறுன், அணைக்கட்டு வேலையைப் பார்க்க எப்போது போகிறுன், மறுபடியும் எப்போது திரும்பி வருகிறுன், இவைகளைப் பற்றியெல்லாம் விவரமாகச் சொல்லுடா, விலாஸ்! இது மட்டுமல்ல, அவன் மோட்டாரை ஓட்ட டிரைவர் இருக்கிறுனு, தானே ஓட்டுகிறுனு? டிரைவர் இருந்தால் அவன் யார்? அவன் ஆள் எப்படி, அவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவன்; இவைகளை எல்லாம் எனக்கு விவரமாகச் சொல்ல வேணும்டா விலாஸ்!''

விலாசன் சிரித்துக்கொண்டே, ''பெரிய விசித்திரமான மனுஷனுடா நீ; ஒகார்மென் விஷயமாக உனக்கு என்னடாப்பா இத்தனை அக்கரை?'' என்றுன்.

''அட, இந்தச் சத்தியாக்கிரக விஷயமாக நான் ஒன்றும் கேட்கவில்லை. எதிரிகளைவிட எதிரியின் சேனைத் தலைவனைப்பற்றி

அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு பழமொழி உண்டல்லவா?''

''அடேயப்பா! நீ என்னப்பா நெபோலியனைப்போல், 'எதிரி', 'சேனை', இவைகளைப்பற்றியெல்லாம் பேசுகிறாயே!''

இதற்குமேல் சரியானபடி பேசுவதற்குச் சரத்சந்திரனால் முடியவில்லை. அவன் கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டே, ''வெற்றி வீரனாகிய நெபோலியனுக்கு!'' என்று நாடக தோரணையில் கோப்பையில் உள்ள மதுவைக் குடிக்க ஆரம்பித்தான்.

விலாசன் சிரித்துக்கொண்டே, ''சரத்! நீ சினிமாவில் நடிக்க ஆசை கொண்டிருக்கிறாய் போலும். சினிமாவில் சேர்ந்துவிடடா. அது கிடக்கட்டும்; நமக்குச் சாப்பாடு வந்து விட்டது. சாப்பிடுவோமா?'' என்றான்.

பரிசாரகன் அப்போதுதான் கொண்டுவந்து வைத்த சாப் பாட்டுத் தட்டிலுள்ள கத்தியை எடுத்துக்கொண்டே சரத் சந்திரன், ''சரி, நான் தயார்'' என்றான்.

இப்படிச் சொன்னதும் அவன் பலமாகச் சிரிக்கத் தொடங்கினான்.

கையிலிருந்த கத்தியை அப்படியும் இப்படியும் ஆட்டிக் கொண்டே சரத், நெபோலியனைப்பற்றி ஒரு பிரசங்கம் ஆரம் பித்துவிட்டான்.

இடையிடையே எதையோ தன் கண்முன் கண்டு வெறுப் பதுபோல் பற்களை நறநறவென்று கடித்தான்.

சரத்சந்திரனுக்கு மதுபானப் பழக்கம் இல்லாததனால் போதை அவன் தலைக்கு ஏறியிருப்பதாக விலாசன் எண்ணினான். பிறகு விலாசன் மெதுவாக அவனோடு பேச்சுக் கொடுத்து அவனை ஒருவாறு சமாதானம் செய்தான்.

# அத்தியாயம் 10

வருஷப்பிறப்பும் வெகு சமீபத்தில் வந்துவிட்டது. ஆசா இரவும் பகலும் இடைவிடாது மறியலுக்கான ஏற்பாடுகளைச் செய்துவந்தாலும் அவளுடைய முகத்தில் புன்னகை தாண்டவம் ஆடியது. ஆனால் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு ஆசாவின் புன்னகையிலும் ஒரு நிழல் இருப்பது தெரியவரும். சென்ற இருபது இருபத்தைந்து நாட்களாகவே அவளுடைய மனத்தில் ஒருவிதக் கலக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அவள் நெற்றிக்கோடுகள் காட்டின. அவளுடைய முகத்தில் தவழும் ஒருவிதப் பிரகாசம் சற்றுக் குறைந்திருந்தது. அவளுடைய பேசும் கண்களைச் சுற்றிச் சிறிது கருமை படர்ந் திருப்பது நன்கு கவனித்தால்தான் தெரியவரும்.

இவைகளுக்கெல்லாம் காரணம் கேவலம் அவளுடைய சரீர உழைப்பு மட்டுந்தான் என்று சொல்லிவிட முடியாது. மனத்தி லும் அவளுக்கு ஒருவிதக் கலக்கமும் கவலையும் ஏற்பட்டிருக்க வேண்டும். அந்தக் கவலையையும் கலக்கத்தையும் அவளுடைய கோமளமான நெஞ்சு கொஞ்சங்கூடப் பொறுக்க முடியாமல் முகவாட்டம் ஏற்பட்டிருந்தது. அவளுடைய தந்தையின் தேக நிலைமை நாளுக்கு நாள் அதிகக் கவலை கொடுத்தது. தான் சிறைக்குச் சென்ற பிறகு பாவூ ஸாஹிப்புக்குச் சுசுருஷை செய்வது யார், நோயாளியை நன்கு பாதுகாத்து வேண்டிய அன்னரசம் கொடுப்பவர் யார் இருக்கிறார்கள், ஒரு வேளை தான் சிறைவாசம் முடிந்து வெளியே வரும்போது தந்தையின் சந்திப்பு ஏற்படுமோ, அதற்குள்ளாகவே தந்தை........, இவ்விதமான பல யோசனைகள் அவள் நெஞ்சில் உதிக்கும் போதெல்லாம் அவள் படும்பாடு வெளியே நோக்குபவர்களுக்கு எப்படித் தெரிய வரும்? இந்த விசாரங்கள் அவள் மனத்தில் கொந்தளிக்கும் போதெல்லாம் அவளுக்கு ஒன்றுமே தோன்றாமல் ஸ்மரணை அற்ற வளைப்போல ஆவாள். அவள் மிகவும் தைரியமும் விடாமுயற்சி யும் உள்ள ஸ்திரீயே ஆனாலும், நெஞ்சில் குமுறிக்கொண் டிருந்த

நிலையற்ற ஒரு சோகம் அவள் வீர இருதயத்தையும் கலங்கச் செய்தது. தான் மனத்திற்குள்ளாகவே அல்லல் பட்டுக்கொண்டிருப்பதைத் தந்தையான பாலூ ஸாஹிப் கண்டுகொள்ளக் கூடாதவாறு அவள் தன் முகத்தில் செயற்கைப் புன்னகையையும், ஸ்பஷ்டமான பேச்சையும் வரவழைத்துக்கொண் டிருந்தாள். முகபாவத்திலும் கண் பார்வையிலும் பேச்சிலும் தன் மனக் கலக்கத்தை வெளிக்காட்டாதவாறு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண் டிருந்த ஆசா, தன் தகப்பனாரின் பராமரிப்புக்காக இரவில் அவர் படுக்கையருகே போய் உட்கார்ந்தால் பாலூ ஸாஹிப் அவள் கையைத் தன் கையில் வைத்துக் கொண்டே பேசும்போது அந்த ஸ்பரிசத்தின் வழியாக மின்சாரம்போல் ஆசாவின் மனக்கலக்கம் பாலூ ஸாஹிபின் கைக்கு ஏறி அவருடைய நெஞ்சையும் எட்டும். அவர் அவளுடைய கலக்கத்தை ஒருவாறு உணர்ந்து கொண்டார். ஸ்பரிசத்தின் ஊமைப் பாஷை பிதாவின் உணர்ச்சி மிகுந்த இருதயத்தின் காதுகளுக்கு எட்ட அதிக நேரமா வேண்டும்?

பாலூ ஸாஹிப் அவளிடம், "ஆசா, அடி பைத்தியக்காரி, எனக்காக ஏன் வீண் கவலையில் ஆழ்ந்திருக்கிறாய்?" என்றார்.

"இல்லையப்பா" என்று சொன்னதும் கீழ் உதட்டைப் பலமாகக் கடித்துக்கொண்டே பொங்கி வரும் துக்கத்தை அடக்குவதற்காகவோ என்னவோ முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டாள் ஆசா.

"இதே விதமாக எனக்குத் தேகநிலை வரவர மோசமாகிக் கொண்டு வந்தால் உனக்கு இது ஒரு சோதனைக் காலமாகவே இருக்கும். ஆனால் கடவுள் அருளால் உனக்கு இந்தச் சோதனையிலிருந்து மீளப் பூரண பலம் இருக்கிறது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்."

ஆசா ஒன்றுமே பேசவில்லை. தன் கையில் பிடித்திருந்த பாலூ ஸாஹிபின் விரல்களை அவள் சற்று அழுத்தினாற்போல் பிடித்துக்கொண்டாள்.

"இந்த நெருக்கடியான சமயத்தில் நீ மனத்தைச் சற்றுக் கடினப்படுத்திக்கொண்டு என்னைப் பற்றியே மறந்துவிடவேண்டும். இது சாதாரணமான விஷயம் அன்று என்பது எனக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் நீ எந்த விஷயத்திலும் அசிரத்தையுடன் இருந்ததே இல்லை என்பதையும் நான் நன்கு அறிவேன்.

ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் நீ மறந்துவிடக் கூடாது. அதாவது, உன் தந்தையாகிய எனக்கு என்றைக்கும் மரண பயம் - சாகப் பயப்படும் தன்மை-அறவே இல்லை. அடி மகளே, இன்று இல்லாவிட்டாலும் நாளைக்கு இந்தத் தேகம் சாம்ப லாகியே தீரும் என்பது பகிரங்க உண்மை. அந்தத் தகனத் திற்குக் காரணமான மரணம் வீட்டில் விரிக்கப்பட் டிருக்கும் படுக்கையில் நடந்தால் என்ன, நாலு பக்கமும் சூழ்ந்துள்ள சுவர்களின் நடுவில் சிறைச்சாலையில் நடந்தால்தான் என்ன? எல் லாம் ஒன்றுதானே? என் ஆத்மா கேவலம் தேகக் கூட்டிலிருந்து விடுதலையடைந்து வெளிப்படும் சமயத்தில் என் அருமை மகள் பக்கத்தில் இருந்தால் என்ன, இல்லாமல் போனால்தான் என்ன? 'யாருக்கு யாரோ புரந்தர விட்டலா?' எனக்கு இரண்டும் ஒன்றேதான்'' என்றார் அவர்.

''சே, சே, என்ன இது, கண்டபடியெல்லாம் பேசுகிறீர்கள்? எனக்குக்கூட அந்த விஷயமாக மனத்தில் சந்தேகமே உதிக்கிறது; நான் சிறைச்சாலைக்குச் சென்றுவிட்டால் உங்களுக்கு இங்கு....''

''அடி மகளே, என் தேக நிலைமையை நான் கூடியமட்டும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுவது என்னவோ நிச்சயந் தான். என் உயிர்த் தோழன், அந்தக் கிழவன் இருக்கிறானே— தௌலதீ, அவன் என்னைக் கண்ணின் இமைபோல் காப்பான்; நீ இதைப்பற்றிக் கவலைப்படவே காரணம் இல்லை. இதோ பார், நான் ஒருவேளை நடக்கக்கூடிய விஷயங்களைக் கற்பனை செய்து பேசுகிறேனே ஒழிய அப்படியே நடைபெறும் என்று சொல்லமுடியுமா? எனக்கு என்னவோ என் தேக நிலைமையைப் பற்றி நம்பிக்கையேதான் இருக்கிறது. நீ சிறையிலிருந்து திரும்பி வரும் வரையில் நான் கட்டாயம் பிழைத்துத்தான் இருப்பேன் என்று என் அந்தராத்மா சொல்லுகிறது. எனக்கு இன்னும் கொஞ்ச நாட்களில் பூரண சௌகரியம் ஏற்படும் என்பதே என் எண்ணம். சென்ற தடவை படுக்கையாகப் படுத்துப் பிறகு 'மொட்டுப்போல்' எழுந்து உட்காரவில்லையா? இந்த இழுப்பு நோயே இந்தமாதிரிதான். 'ஆச்சு, போச்சு' என்று தொண்டை வரையில் உயிர் வந்துவிடும். பிறகு சில தினங்களில் பூரணமாகச் சௌக்கியம் ஆகிவிடும்.

இவ்விதமாக அவள் தந்தை அவளுக்குப் பல விதத்தில் ஆறுதலும் தைரிய மொழிகளும் சொல்லி வந்தாலுங்கூட ஆசாவின் இருதயத்தில் உதித்த அந்த மனக்கலக்கத்தை இம்மி

யளவும் அகற்றவே முடியவில்லை. நாளுக்கு நாள் அவள் மனக் கவலை அதிகமாகிக் கொண்டே வந்தது.

இந்தக் கவலைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் மறியலுக்கு உண்டாகும் தடங்கல்களைப்பற்றிய கவலையும் அவளுக்கு அதிகரித்து வந்தது.

புனாத் தலைவர்களில் அதி முக்கியமான ஒருவர், 'சத்தியாக்கிரக மறியல் நடக்கும் பட்சத்தில் ஏழைக் குடியானவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக நான் முதலில் நிலத்தின்மேல் படுத்து விம்பு செய்வேன்' என்று பிரதிக்ஞை செய்திருந்தாரல்லவா? அவர் சமாதானக் கூட்டம் கலைந்ததும் வேறு ஆசாமியாக மாறிவிட்டார். அவருடைய நெஞ்சழுத்தத்தின் சாயம் வெளுத்துவிட்டது! அவர் தமக்குச் சத்தியாக்கிரகத்தில் முக்கிய பாகம் எடுத்துக்கொள்ளச் சௌகரியப்படாது என்று ஆசாவுக்குத் தெரிவித்துவிட்டார். அவர் ஆசிரியர் வேலை பார்த்துவரும் பத்திரிகையிலும் சத்தியாக்கிரக விஷயமாக வரும் தலையங்கங்களில் கொள்கை வித்தியாசமாகக் காணப்பட்டது. அந்தப் பத்திரிகையில் சத்தியாக்கிரக விஷயமாக நடக்கும் செய்திகள் ஒன்றுகூட வெளிவராமல், அதைப்பற்றிய விமர்சனக் கட்டுரைகளே அதிகம் வெளிவந்தன.

அந்த விமர்சனங்கள் ஒன்றில், "பொது ஜனங்களின் நன்மைக்காகச் சில இடங்கள் தேவையாக இருப்பின் அந்த இடத்தை அரசாங்கத்தார் எவ்வித நிபந்தனையும் இன்றி எடுத்துக்கொள்ளப் பூரண உரிமை பெற்றிருக்கின்றனர் என்பது தெளிவு. எனவே உயிர் போனாலும் நிலத்தை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று குடியானவர்கள் பிடிவாதம் பிடிப்பது அவர்களுக்கே நன்மை பயக்காது என்பது நிச்சயம். நிலத்தின் பெறுமான விலையைக் கொடுத்து வாங்கவேண்டும் என்பது நியாயமான விஷயமே ஆகும். கம்பெனியார்களும் விலை இல்லாமல் நிலங்களை எடுத்துக்கொள்ளுவதாகச் சொல்லவில்லையே! கம்பெனியார்கள் ஒருவேளை அதை ஒப்புக்கொள்ளாவிட்டால் நாங்கள் எங்களால் ஆன முயற்சி செய்து அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்யவும் கூடும்" என்று எழுதியிருந்தது.

இவ்விதக் கட்டுரைகளினால் மறியல் விஷயமாக நம்பிக்கை கொண்டிருந்த மகாராஷ்டிர ஜனங்களுக்கு இப்போது அதில் நம்பிக்கை சற்றுக் குறைவுபடாமல் இருக்கவில்லை. ஆனால் ஆசாவும் நம்பிக்கையை இழக்கும்படியான நிலைமையில் புனா

யுவர்கள் எல்லாவித உதவியும் தருவதாக வாக்களித்ததால் அவளுக்கு மட்டும் தைரியம் மறுபடியும் உண்டாயிற்று. புனைத் தலைவர்கள் அவளுடைய திட்டத்தைக் காலைவாரிவிட்டதால் அவளுக்கு மனத்தில் துக்கம் இருக்கத்தான் இருந்தது. புனைவிலிருந்து இருநூறு இருநூற்றைம்பது தொண்டர்கள் தளவலாவிற்கு வந்திருந்தனர். இன்னும் வந்துகொண்டுதான் இருந்தனர்.

புனைவைத் தவிர வேறு இடங்களிலிருந்தும் தொண்டர் படை வந்து குவிந்த வண்ணமாக இருந்தது.

அந்தத் தொண்டர் படையில் அநேக ஸ்திரீகளும் இருந்தனர். பதினாறு பதினேழு வயதுள்ள அநேக கோமளமான யுவதிகளும் இருந்தனர். அவர்களுடைய பால் வடியும் முகங்களைக் காணுந்தோறும் ஆசாவிற்கு, "இருக்கிறது, என் தேசம் நல்லபடியாகச் சுதந்தரமடையும் என்னும் நம்பிக்கை இருக்கத்தான் இருக்கிறது" என்று தோன்றும். எனவே ஆசாவிற்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவளுடைய நெஞ்சில் நம்பிக்கை அலைகள் மோதியவண்ணம் இருந்தன.

இந்த நிலைமையில்தான் வருஷப்பிறப்பு நாளும் வந்தது.

* * * *

அங்கே கம்பெனியார்களும் நிலைமையைச் சமாளிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்வித்திருந்தனர்.

ஒகார்மென் துரையின் காரியாலயத்தில் 'டைப்' அடிக்கும் மெஷின்களின் 'டப் டப டப்' என்ற சத்தம் பொரி பொரிப்பதைப்போல் பொரித்துக்கொண்டிருந்தது. தந்திகள் இங்கும் அங்கும் பறந்தன; கட்டளைகள் பிறந்த வண்ணம் இருந்தன. எனவே ஒகார்மென் துரைக்கு அரைவிநாடி கூடச் சாவகாசமே கிடைக்கவில்லை.

வருஷப் பிறப்பின் முந்தின நாளன்று ஒகார்மென் விலாசனைத் தன் அறைக்குக் கூப்பிட்டனுப்பிப் பின்வருமாறு சொன்னார்.

"நான் எல்லா என்ஜினீயர்களுக்கும் விட்டிருந்த சுற்றறிக்கையில் நீ மட்டும் ஏன் கையெழுத்துப் போடவில்லை?"

"காரணம் விளக்கமாகத்தானே இருக்கிறது; அந்தச் சுற்றறிக்கை என் கைக்கு வரவே இல்லை!"

"ஏன்? நேற்று மாலை நீ எங்கே போயிருந்தாய்?"

''டென்னிஸ் விளையாடுவதற்காக வழக்கம்போல் போயிருந்தேன்.''

''வழக்கம் போலவா? பமன்ஜீ மாஸ்டரின் மகளுடனு?''

''அது என் சொந்த விஷயம். அதைப்பற்றிக் கேட்க யாருக்கும் அதிகாரமில்லை.''

இந்தச் சூடான பதிலினுல் ஒகார்மென் துரைக்கு மூக்குச் சற்றுச் சிவந்தது. அவர் மனத்தில் எண்ணுவதை வெளிக் காட்டாமலிருப்பதில் சமர்த்தர். சற்றுச் சிரித்துவிட்டு, ''நீ ஒரு யுவன்; ஆகையால் இந்தப் படபடப்பு இருக்கத்தான் இருக்கும்! அது கிடக்கட்டும். இதோ பார், அந்த நோட்டீஸ்; என் மேஜை மேல் இருக்கிறது. நாளைக் காலையில் வேலை தொடங்கும் சமயத்தில் குறிப்பிட்ட என்ஜினீயர்கள் அவரவர்களுக்கு உண்டான இடங்களில் தவருமல் ஆஜராகி இருக்கவேண்டும் என்றுதான் அந்தச் சுற்றறிக்கை சொல்லுகிறது. அதைப் படித்துவிட்டுக் கையெழுத்துப் போடு'' என்ருர்.

விலாசன் அறிக்கையைப் படித்ததும் அதன் கீழே கையெழுத்துப் போட்டுவிட்டு, ''இன்னும் ஏதாவது வேலை இருக்கிறதா?'' என்ருன்.

''ஹும்..வேறென்றுமில்லை. போய் வா!''

''வருகிறேன்!'' என்று களை இழந்த முகத்துடன் சொல்லிவிட்டு விலாசன் அவ்விடம் விட்டு அகன்ருன்.

மேஜை டிராயரிலிருந்து ஒகார்மென் துரை ஒரு டயரியை எடுத்தார். அந்த டயரியில் அன்றைத் தேதியிட்ட பக்கத்தில் அவர், 1,2 இப்படி எண்களை எழுதி அதனடியில் ஏதோ நிகழ்ச்சிகளை எழுதியிருந்தார். அதன் குறுக்கே சிவப்புப் பென்சிலினுல் ஒரு கோட்டை இழுத்தார்.

இதற்குள் யாரோ ஒருவன் அந்த அறையில் நுழைந்து அவருக்குச் சலாம் செய்தான்.

ஒகார்மென் துரை தலையைத் திருப்பி, வந்தது யார் என்று பார்த்தார்; அவருடைய பட்டாணிய மோட்டார் டிரைவர் தான் அங்கே வந்திருந்தான்.

''இன்னும் ரொம்ப நேரம் இருக்கிறதே புறப்படுவதற்கு? இதற்குள் ஏன் இங்கு வந்து தொந்தரவு செய்கிருய்?''

''வெளியே புறப்படும் விஷயமாக நான் இங்கு வரவில்லை ஸார். வேறு முக்கியமான விஷயம்......''

''எனக்கு வேலை ரொம்பக் கிடக்கிறது. நான் உன்னிடம் சொல்லியிருந்த வேலையைச் செய்தாயா?''

''இல்லை, ஆனால் நான்—''

''ஆனால் என்ன, சொல்லித் தொலையேன்?''

''என்னைப் பம்பாய்க்குக் கூட்டிப்போக அங்கிருந்து ஆள் வந்திருக்கிறான். என் சொந்தக்காரன் ஒருவனுக்குக் கல்யாணம்; நான் கட்டாயம் போகத்தான் வேண்டும்.''

''சட், சட். உனக்கு லீவு இப்போது குட்டிக்கரணம் போட்டாலும் கிடைக்காது; போ, போ வேலைக்கு.''

ஆனால் அந்தப் பட்டாணியன் அசைவதாக இல்லை.

ஓகார்மென் துரைக்குக் கோபம் வந்தது; உரத்த குரலில் அவர், ''அடே! நீ எதற்காக இன்னும் இங்கேயே நிற்கிறாய்? உனக்கு லீவு கிடைப்பது சாத்தியமில்லை. இந்த நாட்களில் எனக்கு எப்போதும் மோட்டார் தயாரில் இருக்கவேண்டும். நீ போய்விட்டால் பிறகு மோட்டாரைச் செலுத்துபவன் யார்? மோட்டார் என்ன தானாகவே ஓடுமா என்ன?''

''நான் பர்த்தி வைத்துவிட்டுப் போகிறேன்.''

''பர்த்தி ஆள் எனக்கு வேண்டாம். உன்னை விட்டால் எனக்கு யாரையும் பிடிக்காது.''

''ஆனால் ரொம்ப நல்ல பர்த்தி ஆசாமி சார்; என்னைக் காட்டிலும் மிகவும் நன்றாகவும் ஜாக்கிரதையாகவும் வண்டியை ஓட்டுவான்.''

''எந்த ஜாதியைச் சேர்ந்தவன்?''

''பட்டாணியன்தான்.''

''எங்கே இருக்கிறான்?''

''வெளியே நின்றுகொண்டிருக்கிறான். உள்ளே அழைத்து வரட்டுமா?''

ஓகார்மென் துரை வெறுமனே தலையை அசைத்தார். உடனே டிரைவர் வெளியே போய்ச் சற்று நேரத்தில் மற்றொரு பட்டாணியனுடன் உள்ளே நுழைந்தான்.

அவனைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே ஓகார்மென் கேட்டார்: ''உன் பெயர் என்ன?''

''பிர் ்தாஸ், சர்க்கார்.''

''ஆம், ஆம், இது ஒரு பெரிய கவியின் பெயரல்லவா?''

''ஆமாம் சர்க்கார்.''

''நீதானா 'பர்த்தி' யாக வருபவன்?''

"ஆமாம், சர்க்கார்."

"வேலை நன்றாய்ச் செய்வாயா?"

"ஆமாம், சர்க்கார்."

ஓகார்மென் தன் டிரைவரைப் பார்த்துக்கொண்டே, "சரி, நீ போ" என்றார். டிரைவர் குனிந்து சலாம் செய்தார்.

ஓகார்மென், "நீ எப்போது திரும்புவாய்?" என்று கேட்டார்.

"கல்யாணம் முடிந்ததும் உடனே—"

அன்று பிற்பகலில் ஓகார்மெனின் டிரைவர் உண்மையாகவே பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றான். அவன் பம்பாய்க்குப் போய்ச் சேர்ந்தபோது மாலை மூன்று மணி அடிக்கும் சமயம். அவன் நேராக ஒரு மதுபானக் கடைக்குள் நுழைந்தான். இரண்டு பெரிய புட்டி சீமைச் சாராயத்தை வெகு சுலபமாகப் போட்டவுடன் மூன்றாவது புட்டிக்கும் 'ஆர்டர்' கொடுத்தான். அதைக் கண்டு சந்தேகப்பட்ட கடை முதலாளி, "ஏ பாயி! பையில் பணம் இருக்கிறதா? ஏது, எக்கச் சக்கமாய் ஏற்றிக் கொண்டே போகிறாயே?" என்றான்.

இதற்குள் அந்தப் பட்டாணியன், தலை சுற்ற, சிவந்த கண்களை முடிந்தவரையில் அகல விழித்து, "பணமா? எத்தனை பணம் வேண்டும்? இதோ பார்" என்றான்.

இவ்விதம் சொல்லிக்கொண்டே அவன் தன் நீண்ட அங்கியின் உள் பையிலிருந்து ஒரு கட்டு நோட்டுக்களை எடுத்துக் கடை முதலாளியின் முகத்தில் வீசி எறிந்தான்.

இங்கே ஓகார்மென் துரையிடம் பதிலுக்கு வேலை பார்க்க வந்த பிர்தோஸ் என்பவன் அவரை மோகினி அடித்ததுபோல் மயக்கித் தன்வசம் ஆக்கிக்கொண்டான். அரை விநாடியில் அவன் அவருடன் குஷியாகப் பேசியும் பணிவாக இருந்தும் அவருடைய நன்மதிப்பை வெகுதூரம் பெற்றுவிட்டான். மோட்டார் ஓட்டும் தொழிலில் அவன் நுணுக்கங்களெல்லாம் தெரிந்த ஒரு நிபுணனாக இருந்ததோடு மட்டும் அல்லாமல், ஓகார்மென் துரைக்கு மிகவும் இஷ்டமான எந்த எந்த வேலை எல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் ஒன்றுகூடத் தவறாமல் செய்து அவரை மிகவும் மகிழ்வித்தான். தானாக அவன் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை என்பதைக் கண்ட ஓகார்மென் வேண்டும் என்றே அவனுடன் பேசும் நோக்கத்துடன் ஏதாவது கேள்விகள் கேட்டால், அவன் தலை குனிந்து 'சர்க்கார்',

'ஹுஜூர்' முதலிய பெரிய பதங்களை உபயோகித்து மிகவும் செட்டாகவும் அர்த்த புஷ்டியுடனும் விடை பகர்ந்து வந்தான். மட்டு மரியாதை தெரியாத சேவகர்கள் சளபளவென்று எதை யாவது பேசிக்கொண் டிருப்பதை ஓகார்மென் எத்தனை தூரம் வெறுத்து வந்தாரோ, அதேயளவு அவர் மரியாதையும் பணிவும் பணத்திற்கு வணக்கம் செய்யும் சுபாவமும் உள்ள சேவகர்களைக் கண்டால் அதிகமாய் நேசித்து வந்தார் என்பதும் உண்மை. எனவே பிர்தோஸ் அவருடைய நன்மதிப்பில் அதிகதூரம் முன்னேறிவிட்டான்.

* * * *

கடைசியில் வருஷப் பிறப்பு தினமும் விடிந்தது.

அணைக்கட்டு ஏற்படவேண்டிய அந்த ஸ்தலம் ஒரு பெரிய யுத்தகளத்தின் தோற்றத்தை அடைந்தது.

கம்பெனியின் வேலைக்காக ஆயிரக்கணக்கான வேலையாட்கள் தயாராக இருந்தனர். கொதிக்கும் தண்ணீர்ப் பம்புகள் கொண்டுவரப்பட் டிருந்தன. போலீஸ்காரர்களின் கூட்டம் தூரத்தில் காத்துக்கொண் டிருந்தது. மாஜிஸ்ட்ரேட் அங்குள்ள மரத்தினடியில் நாற்காலி ஒன்றின்மேல் உட்கார்ந்திருந்தார். எல்லாவித ஏற்பாடுகளையும் அவர்கள் முன்கூட்டியே செய் திருந்தனர்.

ஓகார்மென் ஒருவர் மட்டுமே வர வேண்டியவராக இருந் தார். மற்றையோர் எல்லாரும் அங்கே பிரசன்னமாகி இருந் தனர். அவர் வரத் தவறமாட்டார் என்று எல்லோரும் நம்பி இருந்தனர்.

கம்பெனியின் பார்ஸி டைரெக்டர்கள் தாங்களே நேரில் பம்பாயிலிருந்து தளவலாவிற்கு வந்திருந்தனர். ஓகார்மெனின் கட்டளைப்படி எல்லா என்ஜினீயர்களும் தத்தம் இடங்களில் ஆஜர் ஆயினர். விலாசனும் அவர்களிடையே காணப் பட்டான்.

அவனுடைய கவனம் முழுவதும் எதிரில் உள்ள சத்தியாக் கிரகிகளின் முகாமின் மேலேயே சென்றுகொண் டிருந்தது. அவன் அந்தக் கூட்டத்தில் ஆசாவைக் கண்டுபிடிக்கப் பெருமுயற்சி செய்துகொண் டிருந்தான்.

பொழுது விடியும் முன்பிருந்தே சத்தியாக்கிரகிகள் தேசீய கீதங்களின் பஜனையை ஆரம்பித்திருந்தார்கள். இன்று வருஷப் பிறப்பாக இருந்தும் தளவலாவின் குடிபடைகள் அவரவர்கள்

வீட்டில் *கொடியைக் கட்டவே இல்லை. ஊரின் பெரும்பாலான குடிபடைகள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தனர். அங்கே மைதானத்தில் பறந்துகொண் டிருந்த கம்பீரமான தாயின் மணிக் கொடியையே தங்கள் வீட்டுப் பூஜைக்கொடி என்று நினைத்துக் கொண்டார்கள் போலும்! பால சூரியனின் தங்கமயமான கிரணங்கள் இயற்கையாக அமைந்த சிருஷ்டி சிங்காரத்துடன் கலந்து விளையாடின. தொண்டர்கள் சிவாஜி, திலகர், மகாத்மா காந்திஜி இவர்களின் நாமங்களை உச்சரித்து 'ஜே, ஜே' என்று கோஷமிட ஆரம்பித்தனர். எறும்பின் வரிசையைப்போல் அவர்கள் நடந்து சுற்றிக்கொண்டே பிறகு காம்பின் பக்கமாகவே திரும்பிவிட்டனர். இனிச் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டியதுதான். ஒவ்வொரு கோஷ்டியின் முதலில் இருந்தவர் களும் தேசியக்கொடியைப் பிடித்திருந்தனர். எல்லாவற்றிற்கும் முன்னால் ஒரு பெரிய கொடியைப் பிடித்துக்கொண்டு நடந்த ஓர் உயரமான மனிதனுடன் ஆசாவும் நடந்து வந்தாள். அவள் பக்கத்தில் சரத்சந்திரனும் நடந்து வந்தான்.

இந்தக் காட்சியைக் கண்ட விலாசனுக்கு மயிர் சிலிர்த்தது.

எந்தக் கொள்கைக்காக ஆசாவும் அவளைச் சேர்ந்தோரும் இடைவிடாது தியாகம் செய்துகொண் டிருந்தார்களோ, அந்தக் கொள்கை வெறும் முட்டாள்தனமான கொள்கை என்றே விலாசனுக்குப் பட்டது. ஆனால் சத்தியாக்கிரகிகளின் இணையற்ற துணிவும் உத்ஸாகமும், தியாகம் செய்வதில் அவர்களுக்குண்டான புத்தியும், அவர்கள் தைரிய பாவத்துடன் காலடிகளை எடுத்து முன்னால் வைக்கும் கம்பீரமும், உச்ச ஸ்வரத்தில் பாடப்படும் அவர்களுடைய உணர்ச்சி மிகுந்த கீதமும், ஆகிய இவைகளெல்லாம் துணிவும் சாகசமும் நிறைந் துள்ள விலாசன் மனத்திற்கு ஆனந்தத்தையும் அனுதாபத்தையும் உண்டாக்காமல் இல்லை. அவன் உடம்பு முழுவதும் முதல் முதலாக நடுக்கம் எடுத்தது. உட்கார்ந்த இடத்திலிருந்து

*மகாராஷ்டிரர்கள் வருஷப் பிறப்பன்று வெள்ளை, சிவப்பு, பச்சை மூன்று வர்ணங்களுடைய கொடியைக் கட்டி அதன் உச்சியில் வேப்பிலை, பூ முதலியவைகளைக் கட்டி, அதைச் சுற்றிச் சுற்றி வந்து, பூஜை முதலியன செய்து அதை வணங்குவார்கள். இது ஒவ்வொரு வீட்டிலும் நடைபெறும்.

வேகமாய்க் கிளம்பி நேரே சத்தியாக்கிரகிகளுடன் சேர்ந்து, ஆசாவின் கையைப் பிடித்துக்கொண்டு தானும் மறியல் செய்ய வேண்டும் என்று அவனுக்கு அடக்க முடியாத ஆவல் உண்டாகி விட்டது; அதை அவன் சிதறிக்கிடக்கும் தன் பலங்களையெல்லாம் கூட்டிச் சேர்த்துப் பெருமுயற்சியுடன் அடக்கிக்கொண்டான்.

அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பார்ஸி டைரெக்டர்களுள் ஒருவன் அடுத்தாற்போல் உட்கார்ந்திருந்த மற்றொரு டைரெக்டரைக் கூப்பிட்டு, ''அதோ அந்தப் பெண்தான் இத்தனை தொந்தரவுகளுக்கும் காரணம்'' என்றான்.

அந்த இரண்டாவது மனிதன், ''ஆமாம்; அவளுக்குச் சீக்கிரமாகவே செலவுக்குக் கிடைக்கப்போகிறது'' என்றான்.

இந்தச் சம்பாஷணை விலாசனுக்கு எல்லையற்ற கோபத்தைக் கிளப்பியது.

அவன் மிகவும் பிரயாசையுடன் கூர்ந்து கவனித்ததில் ஆசாவின் லாவண்யமான முகத்தில் பிரகாசத்தின் சிவப்பான தேஜஸ் பரவியிருந்தது. மற்றவர்களுடன் சேர்ந்து அவளும் தேசீயகீதம் பாடிக்கொண்டே இருந்தாள். இதனால் அன்றொரு நாள் அவள் தன் மதுரமான குரலில் பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி பாடிக்கொண்டிருந்த ஞாபகம் விலாசனுக்கு உண்டாயிற்று. பல்லாயிரக் கணக்கான குரல்களினின்றும் பிரிக்க முடியாத அவளுடைய தனிக்குரலை மட்டும் விலாசன் தனியாகக் கேட்கலானான். அவன் பல நாட்களாகக் கனவில்கூடப் பார்த்துக்கொண்டிருந்த ஆசாவின் கூந்தல் இன்று ஒரு பெரிய கருநாகம்போல் அவள் மார்பின் நடுவிலிருந்து வந்து இடுப்புக்கும் கீழே ஊசலாடிக்கொண்டிருந்தது.

தன்னிடத்திலேயே உட்கார்ந்திருப்பது விலாசனுக்கு மிகவும் கடினமாக இருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் சத்தியாக்கிரகிகள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் தரையில் உட்கார்ந்தார்கள். வந்தே மாதர கீதம் கூட்டத்தாரால் பாடப்படும் போது உண்மை இந்தியன் எவனுக்குத்தான் பக்தியும் தைரியமும் ஏற்படாது?

டைரெக்டர்கள் ஒருவருக்கு ஒருவர் 'கசுமுசு' வென்று காதைக் கடிக்க ஆரம்பித்தனர்.

''ஒகார்மென் எங்கே?''

''ஏன் இன்னும் வரக்காணோம்!''

"நான் நேற்று இரவுகூட ஆயிரம் தரம் உம்மிடம் படித்துப் படித்துச் சொல்லியிருந்தேனே!"

"நேற்றுக் காலையிலேயே கார்லாவின் பங்களாப் பக்கமாக ஒரு வேலை விஷயமாகப் போனாரே!"

"ஆனால் காலையில் வேலை நேரத்திற்குக் கட்டாயம் ஆஜர் ஆகிவிடுவதாகச் சொல்லியிருந்தாரே!"

"அவர் வராமல் இருக்கவே மாட்டார்! இதோ வந்து விடுவார்."

"இப்போது வருவாரா? நேற்று இரவு வழக்கத்துக்கும் அதிகமாகக் குடித்திருந்தால் ஒருவேளை———."

"சே, சே, நீங்கள் என்ன இப்படிப் பச்சையாக—."

"ஆனால் அவரை எதிர்பார்த்துத்தான் ஆகவேண்டும் என்பது என்ன?"

"கொஞ்சம் பார்க்கலாமே!"

"இதற்குள்ளாகவே அந்தக் கூட்டம் நம் முன்னால் வந்து உட்கார்ந்துவிட்டதே!"

"உட்காரட்டுமே!"

"உட்காரட்டுமா? நாம் சும்மா இருப்பதைக் கண்டால் அவர்கள் தலைக்குமேல் ஏறிவிடுவார்கள். பட்டாணியச் சேவகர்களை ஏவலாமா, அவர்களைத் தூக்கி அப்பால் எறிய!—"

"நாம் சொன்னால் உடனே நடந்துவிடுமோ! வேண்டுமானால் முயன்று பாருங்களேன்!"

"நல்லது."

அந்தப் பார்ஸி கனவான் அண்டையிலிருந்த மேஜை மேல் கிடந்த ஊதலை எடுத்துப் பலமாக ஊதினார்.

உடனடியாக - அங்கு நடந்த கலவரங்களைக் காணும் ஒருவனுக்கு ஒரு பெரிய யுத்தத்தின் ஞாபகமும், ஒரு புரட்சியின் தத்ரூபக் காட்சியும், ஒரு பெரிய ஜன சமுத்திரத்தின் அடங்காத கொந்தளிப்பும் கண்முன்னால் தோன்றியிருக்கும். உண்மையில் அது யுத்தகளத்தினும் அதிகமான பயங்கரத்துடன் விளங்கியது.

அந்தச் சத்தியாக்கிரகிகளின்மேல் பாய்ந்து சென்ற பட்டாணியர்கள் பேசும், நடக்கும், ஓடும் மலைகளாகவே விளங்கினர். அவர்களுக்கு விதிக்கப்பட்ட வேலையைத் தவிர வேறொன்றும் அவர்களுக்குத் தெரியாது. மாலையின் புஷ்பங்களைப் பிய்த்து தூர எறிவதையொத்து அவர்கள் சத்தியாக்கிரகிகளைப் பிருண்டி இழுத்துச் சிறிதும் கருணையின்றித் தூர எறிந்தார்கள்.

அவர்கள் சிறு குழந்தைகள் என்றும் பார்க்கவில்லை. கோமளமான ஸ்திரீகள் என்றும் பார்க்கவில்லை! தூர எறியப்பட்ட சத்தியாக்கிரகிகளில் மயக்கமடையாதவர்கள் மறுபடியும் திரும்பித் தம் இடத்திற்கு வந்து அமர்ந்து, "காந்தி மகாராஜ்கீ ஜே" என்று கோஷம் இட்டனர். பட்டாணியர்கள் மறுபடியும் அவர்களைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டே போய்த் தூரத் தூக்கி எறிந்தனர். இப்படிப் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் நடந்தன. பிறகு சத்தியாக்கிரகிகளின் பிடிவாதத்தினால் சற்று வெறுப்படைந்த பட்டாணியர்கள் மெள்ளத் தங்கள் கைபலத்தையும் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். உடனே முன்பு ஊதின அதே பார்ஸி ஆசாமி மறுபடியும ஊதுகுழலை உரக்க ஊதினார். பட்டாணியர்கள் அவ்விடம் விட்டு விலகிச் சென்றனர். ஆனால் விலகிச் செல்லும்போது, தாங்கள் தோற்று விட்டதன் காரணமாகச் சத்தியாக்கிரகிகளில் கைக்கு அகப்பட்டவர்களை யெல்லாம் பலமாகப் புடைத்துவிட்டே சென்றனர். பட்டாணியர்கள் தூர விலகியவுடன் இத்தனை நேரம் சும்மா நின்றுகொண் டிருந்த கொதிநீர்ப் பம்பு வேலைசெய்ய ஆரம்பித்தது. சத்தியாக்கிரகிகளின்மேல் கொதிக்கும் ஜலத்தின் தாரை பெய்ய ஆரம்பித்தது. பொறுக்கமுடியாமல் சில சத்தியாக்கிரகிகள் ஓடிவிட்டனர்; ஆனால் பலர் நெஞ்சைக் கடினமாக்கிக் கொண்டு, கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு குற்றுயிராக அவ்விடமே கிடந்தனர்.

விலாசனுக்கு இது சற்றும் பிடிக்கவே இல்லை. அவன் சற்று எழுந்து நின்றுகொண்டான்.

இதற்குள்ளாக ஒரு பெரிய கூழாங்கல் காற்றைப் பிய்த்துக் கொண்டு 'விர்' என்ற சத்தத்துடன் வந்து ஊதல் ஊதின பார்ஸியின் நெற்றிப் பொட்டில் தாக்கியது; அவன் பிரக்ஞை இழந்து தரையில் சாய்ந்தான்.

அந்தக் கணமே ஒரே அமர்க்களம் ஆகிவிட்டது.

விலாசன் ஆசாவின் பக்கமாக ஓடினான்.

வழியில் சரத்சந்திரன் அவன் கண்ணில் பட்டான்.

அவனுடைய கையில் இன்னும் இரண்டு மூன்று கற்கள் இருந்தன.

அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டே விலாசன், "சரத், சரத்! உனக்கென்ன பைத்தியமா? அந்தக் கற்களைத் தூர எறிந்துவிடு முதலில்—"

சரத்சந்திரன் கேட்பதாக இல்லை.

விலாசன் பலவந்தமாக அவன் கைகளிலுள்ள கற்களைப் பிடுங்கித் தூர எறிந்தான்..

"சரத்! போலீஸ்காரர்கள் உன்னைக் கண்டுபிடித்து விட்டால் உன் கதி என்னவாகும் தெரியுமா?"

விசித்திரமாகச் சிரித்துவிட்டுச் சரத்சந்திரன், "என்ன நேர்ந்துவிடும் பிரமாதம்? எனக்கெல்லாம் தெரியும் அப்பா! நான் ஒகார்மெனுக்கு என்ன என்ன உபசாரங்கள் செய்திருக்கிறேன் என்று உனக்கு—" என்றான்.

அவன் வாயைப் பொத்திக்கொண்டே விலாசன், "அட பைத்தியமே! நீ இவ்விதம் பலாத்காரத்தைக் கையாளுவதால் ஆசாவின் மனத்தில் எத்தனை கலக்கம் உண்டாகும் என்பதைச் சற்று எண்ணிப் பாரேன்?" என்றான்.

உடனே சரத்சந்திரன் தன் வலது உள்ளங்கையால் நெஞ்சை அமுக்கிக்கொண்டு, "ஆசாவுக்காக - ஆசாவை நான்—" என்றான்.

"ஆம், ஆசாவுக்காகத்தான்; இங்கே ஒரு நிமிஷமும் நிற்காதே, ஓடு, இவ்விடத்திலிருந்து. ஆம்; ஆசாவை நீ—"

சரத்சந்திரன் ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். கண் இமைப்பதற்குள் எங்கோ மறைந்துவிட்டான். அவன் சென்ற இடம் விலாசனுக்குத் தெரியவே இல்லை.

சத்தியாக்கிரகிகளின்மேல் கொதிநீர் பெய்தவண்ணமாகவே இருந்தது.

விலாசன் பதைபதைக்க ஓடினான்; தன் இரு கைகளாலும் கண்களை இறுகப் பொத்திக்கொண்டு அந்தக் கொதிக்கும் மழையில் உட்கார்ந்திருக்கும் ஆசாவிடம் போய்—

அவன் அவ்விடம் செல்லும் முன்பே மூர்ச்சை அடைய ஆரம்பித்த ஆசா தலையைச் சாய்த்துக் கீழே விழுந்தாள்.

கொதிக்கும் ஜலம் விலாசனின் மேலேயும் பொழிந்தது; ஆனால் அந்தச் சமயம் அவன் உடம்பில் சுரணையே இல்லை!

அவன் குனிந்து ஆசாவைத் தன் இரு கரங்களாலும் வாரி எடுத்துத் தூக்கிக்கொண்டான்.

ஒரு புஷ்பத்தைப் போன்று லேசாக........; ஆஹா எத்தனை கோமளமாக இருக்கிறாள் இந்தப் பெண்! இந்த மெல்லிய புஷ்பத்தின் மேலே கருணையற்ற துராக்கிரகிகள்......

இதற்குள்ளாகப் போலீஸுடன் மாஜிஸ்டிரேட்டும் அவ்

விடம் வந்து ஆட்களைக் கைது செய்த வண்ணம் இருந்தனர்.

ஆசாவிற்குக் கொஞ்சம் சுய உணர்வு ஏற்பட்டது. கண்களைச் சற்றுத் திறந்து விலாசனை நோக்கினாள்; ஏதோ ஓர் அபூர்வமான காட்சியைக் கண்டதுபோன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. அவள் சற்றுப் புன்முறுவல் செய்துகொண்டே, ''நீங்களும் எங்கள் சத்தியாக்கிரகத்தில் சேர்ந்துவிட்டீர்களா?'' என்றாள்.

இந்தக் கற்பனையினால் அவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை அவளுடைய முகபாவத்திலிருந்து விலாசன் நன்கு அறிந்துகொண்டான். அவளுடைய கற்பனை ஆனந்தத்தை எள்ளளவும் குறைப்பது விலாசனுக்கு உயிர்போவதைப் போல் தோன்றியது. ஆனால் அவன் அவளிடமா பொய் சொல்லுவது? பொய் சொல்லுவது விலாசனுக்கு வழக்கம் இல்லை. அவன் வெறுமனே தலையை அசைத்தான்.

இதற்குள் போலீஸார்கள் அவ்விடம் தோன்றி ஆசாவைக் கைதுசெய்து, தங்கள் பிடியில் பிடித்துக் கொண்டனர்.

# அத்தியாயம் 11

“சொந்த விஷயங்களைப் பற்றியும், சமூக விஷயங்களைப் பற்றியும் சாவகாசமாகவும் நிதானமாகவும் தீர ஆலோசித்து, ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து தீர்மானத்திற்கு வருவதற்குச் சிறைவாசத்தைப் போன்ற சௌகரியமும் சாந்தமும் நிறைந்த இடம் வேறு ஒன்றும் இல்லை” என்று பிரபல ஆசிரியரான ஆஸ்கார் ஒயில்ட் எழுதின புஸ்தகம் ஒன்றில் ஆசா படித்திருந்தாள். அது மிகவும் பொருத்தமான அபிப்பிராயம் என்பது ஆசாவிற்கு இன்று அனுபவத்தின் மூலம் ஊர்ஜிதம் ஆயிற்று.

ஆறு மாத வெறுங்காவல் தண்டனை அவளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. சிறைக்குள் நுழைந்த நிமிஷம் முதல், இத்தனை நாளாகப் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து வந்த வெளி உலகம் அழிந்து போய்விட்டதாகவே அவளுக்குத் தோன்றியது. முதல் இரண்டு மூன்று நாட்கள் அவளுக்கு வெறும் பிரமை பிடித்தது போலவே தோன்றியது. எந்தக் காலதேவனுடன் வேகமாய் அடியெடுத்து வைத்து ஓடுவதில் ஆசா வெகு சிரமப்பட்டுக் கொண்டிருந்தாளோ அதே காலதேவன் இப்போது அவள் முன்னால் அசையாது நின்றுகொண்டிருந்தான்; அவனைப் ‘போ, போ’ என்று ஆசா விரட்டியடிக்க வேண்டியதாயிற்று. ஆயினும் அவன் மெள்ள ஊர்ந்துகொண்டிருந்தான்.

மிகவும் மந்தகதியுடன் சுற்றும் உலக கோளத்தின் சுற்றுக்களை அவள் ஒவ்வொன்றாக எண்ணவேண்டியிருந்தது. இன்னும் நூற்றெண்பது சுற்றுக்கள் இந்தப் பூகோளம் சுற்றி வந்தால், பிறகு அவளுக்கு விடுதலை! அப்பாடா! இன்னும் எத்தனை சுற்றுக்கள் பாக்கி இருக்கின்றன!

அவளுக்கு மனிதர்களின் முகங்களைக் கண்டால் ஏதோ விசித்திரமான அபூர்வ வஸ்துவைக் காண்பது போல இருந்தது. மனித முகமே அவளுக்குத் தென்படுவதில்லை; ஏதோ ஒன்றிரண்டு முகங்களை அவள் பார்க்க நேரிட்டால் அந்த முகங்களில்

நம்பிக்கை இழந்த விரசமும், உலகத்தாரிடையே இருந்து அனுபவித்த கஷ்டங்களை வெறுக்கும் வெறுப்பும், கவலையுமே அவளுக்குக் காணப்பட்டன! சிறைச்சாலையில் இந்த மாதிரி ஆட்களைத் தவிர வேறு யார் உள்ளனர்? இந்த விதமான ஆட்களைப் பார்க்காமல் இருப்பதே நல்லதாக அவளுக்குப் பட்டது. அவள் காதில் எப்போதாவது படும் சத்தமும் மனிதக் குரலாகவே அவளுக்குத் தோன்றவில்லை. சூரிய உதய காலத்திலும் சூரிய அஸ்தமன காலத்திலும் அடுத்து இருந்த மரமடர்ந்த காட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் பக்ஷிகள் 'கில் பில்' என்று இனிமையான குரலில் பேசுமே, அந்த இயற்கைப் பாஷையை ஆசா கேட்க விரும்பினாள். யாருடனும் பேச வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு உண்டாக வில்லை. நாளுக்கு நாள் உடம்பின் பலத்தை க்ஷீணிக்கச் செய்யும் ஒருவித மூச்சு வியாதியால் கஷ்டப்படுவதைப்போல் அவள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள்.

நாலைந்து நாட்கள் கழிந்ததும் ஆசாவுக்கு அந்தச் சிறை வாசத்திலும் கொஞ்சம் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. வெளியுலகத்தினின்றும் அறவே ஒதுக்கப்பட்டிருந்த அவளுக்குப் பற்பல யோசனைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்ற ஆரம்பித்தன. சத்தியாக்கிரக மறியலுக்காக அவள் அல்லும் பகலும் உழைத்தது, எத்தனையோ கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு வேலைகளையெல்லாம் கவனித்தது, முக்கிய ஏற்பாடுகளை எல்லாம் தானே நேரில் நிர்வகித்தது-இவைகளுக்கெல்லாம் உண்மையில் ஏதாவது பலன் கிடைத்ததா? தன்னைப் போலவே பிறரையும் மறியலில் ஈடுபடச் செய்து, அதனால் ஏற்படும் கஷ்டங்களையெல்லாம் சகித்துக்கொண்டு மேலே முன்னேறத் தயார் செய்தாளே அந்தப் பரிசிரமங்களுக்குப் பலனாக என்ன நன்மையைக் கண்டுவிட்டாள்? இந்தச் சிறைவாசத்தில் வந்து விழுந்தாளே அதுதான் கண்ட பலன்! சத்தியாக்கிரகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபோது, அந்த முயற்சிகளினால் தேசத்திற்கு நன்மை ஏதாவது உண்டாகுமா என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்படாமல் இல்லை. ஆனால் அந்தச் சுறுசுறுப்பான காலத்தில் அவளுக்கு இதைப்பற்றித் தீர ஆராயப் போதிய சாவகாசம் கிடைக்கவில்லை. தன்னைப்போல் பிறரையும் சிறைவாசத்திற்கு அனுப்புவதுதான் சத்தியாக்கிரகத்தின் நோக்கம் என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

இப்போது அவளுக்கு வேறுவிதமான எண்ணங்கள் மனத்தில் தோன்ற ஆரம்பித்தன. சிறைக்கு வருவதுதான் முடிவு என்றால் அது வீண் விரயந்தானே? சிறைக்கு வந்ததால் கோரிய முடிவு ஏற்பட்டால் அதைப் பிரயோஜனம் உள்ளதாக எடுத்துக் கொள்ளலாம். சத்தியாக்கிரகத்தின் நோக்கம் அவர்களுடைய பித்ரார்ஜிதமான நிலங்களைப் பிறருக்கு விட்டுக் கொடுக்காமல் காப்பாற்றுவதுதான். ஆனால் இன்று ஆசா சிறைக்கு வந்ததனால் நிலங்களைக் கம்பெனியார் பலாத்காரமாக எடுத்துக்கொள்ளாமல் விட்டு விட்டார்களா? அதுதான் இல்லை. அவர்கள் தங்கள் எண்ணத்தை ஈடேற்றிவிட்டார்கள்! இதையெல்லாம் யோசிக்காமல் அவள் சும்மா சிறைக்குச் செல்லுவதிலேயே ஆர்வம் கொண்டிருந்தாள்: சிறைக்குச் சென்ற பிறகு மேலே நடப்பது என்ன? இந்தக் கேள்விக்குப் பதில் அவளுக்குச் சரியாகப் புரியவே இல்லை. ஆனால் இன்று சிறையில் ஏகாந்தமாக இருக்கும்போது இவ்விஷயங்களை அவள் மனசு நன்றாக யோசனை செய்யத் தொடங்கிற்று. எந்தப் பாதையில் அவள் இன்று வரையில் வந்துகொண் டிருந்தாளோ அந்தப் பாதை நேரே சிறைக்குச் சென்றதே ஒழிய முடிவான வெற்றிக்கு அது பாதையாக இல்லாததை இன்று உணர்ந்தாள். சிறைவாசத்திற்குப் பிறகு என்ன செய்வது? இந்தப் பிரச்னை அவளுக்குத் திரும்பத் தோன்றிற்று. தான் இது வரையில் நடந்துவந்த பாதை ஒரு வேளை தப்பி இருக்குமோ? வழி தவறிய ஒரு வழிப்போக்கன் எப்படி வழியை ஆராய்வானோ அப்படியே ஆசா தன் கொள்கைகளையும் ஆராய்ந்தாள். சத்தியாக்கிரகத்தைப் பற்றி இதற்கு முன் அவள் இத்தனை ஆராய்ச்சி செய்ததே இல்லை.

சத்தியத்தின் வெற்றிக்காகத்தான் தன் சுக சௌகரியங்களையும் மற்றெல்லாவற்றையும் தியாகம் செய்து, பலாத்காரம், அடக்கு முறை, அதிகாரத்துவம் முதலிய கெட்ட குணங்களுக்கு முன் சத்தியத்திற்காகத் தன்னையே ஆகுதியாக, நைவேத்தியமாகச் சமர்ப்பித்தும் சத்தியமே வெற்றி பெறும் என்று இன்றளவும் நம்பிக்கை கொண்டிருந்தாள் அவள். ஆனால் தனிமையில் இருந்து இன்று யோசித்துப் பார்த்தபோது தான் செய்த தியாகங்களுக்காகத் தனக்கு வெற்றி கிடைத்ததா? பலாத்காரத்தின் கொடுமைகளுக்கும் அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைகளுக்கும் தாங்கள் பயப்படவில்லை என்பதை வெளிக்காட்டிக் கொள்ளுவதற்காகத்தான் சிறை

வாசம் என்பது அவளுக்குப் புலனாயிற்று. அது உண்மையேதான். ஆனால் கோரிய காரியம் நிறைவேறிற்று? சிறைக்கு வருவதைத் தவிர வேறு என்ன பலன் கிடைத்தது? பலாத்காரத்தின் பலத்தை அவள் எத்தனை தூரம் குறைத்துவிட முடிந்தது? ஏழைக் குடியானவர்களின் நிலத்தைப் பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டதை அவளால் தடுக்க முடிந்ததா? ஏழைகளின் கஷ்டங்களை அவள் எவ்வளவு குறைத்திருக்கிறாள்? சிறைக்கு வருவதனால் குடியானவர்களின் கஷ்டங்கள் அதிகமாயினவே ஒழியக் குறையவே இல்லை. ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சும் முதலாளிகளின் மனத்தில் ஏதாவது அனுதாபம் உண்டாயிருக்குமா? தாங்கள் சத்தியத்தையே நம்பிப் பிடிவாதமாகக் காரியங்களை நடத்தினால் எதிரிக்குக் கட்டாயம் மனமாற்றம் உண்டாகும் என்று பொருள் படும்படியாக மகாத்மா காந்தியடிகளின் கட்டுரைகளில் அவள் படித்திருந்தாள்; அதை அவள் முற்றும் நம்பியும் இருந்தாள். ஆனால் கேவலம் சத்தியாக்கிரகத்தினால் மட்டும் காரியங்களைச் சாதித்துவிட முடியாது என்னும் உண்மை அவளுக்கு இப்போது தான் ஏற்பட ஆரம்பித்தது.

சோராப்ஜீ தீன்ஷா கம்பெனியார்களும், அவர்களுக்கு உதவியாக இருக்கும் அதிகார வர்க்கமும், சாதாரண ஜனங்களுக்குக் காட்டும் கருணைகூடச் சத்தியாக்கிரகிகள் மேல் காட்டவில்லை! சத்தியாக்கிரகிகளை முதல் நாளில் எத்தனை கஷ்டங்களுக்கு உள்ளாக்கினார்களோ அதைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பின் வந்த நாட்களில் கஷ்டப்படுத்தினார்கள். அவர்கள் ஆட்களைப் பிடித்துக் கைதி செய்ததும் கணக்கு வழக்கு இல்லை. மறியல் செய்வதனால் கம்பெனியின் வேலைகள் தடைப்படும் என்னும் உண்மை வர வர அனுஷ்டானத்தில் பிரயோஜனம் இல்லாமல் போயிற்று. மறியல் செய்வோர்கள் நிலத்தின்மீது படுத்துக்கொண்டிருப்பதைக் கம்பெனியர்கள் கைகட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்திருந்தால் விஷயம் வேறு விதமாக முடிந்திருக்கும்.

ஆனால் கம்பெனியார்கள் அவர்களைப் பிடித்துக் கைது செய்து சிறைக்கு அனுப்புவதில் அல்லவா முனைந்திருந்தனர்? இருநூறு முந்நூறு சத்தியாக்கிரகிகள் தினம் காலையில் வந்து நிலத்தின்மேல் படுத்துக்கொண்டு மறியல் செய்வதும் பிறகு கைதிகளாகச் சிறைக்குச் செல்லுவதுமாக இருந்தது. கம்பெனியார்களின் வேலையோவெனில் துரிதமாக நடந்துகொண்டுதான்

இருந்தது. சத்தியாக்கிரகத்தினுல் கம்பெனி டைரெக்டர்களுக்கு மன இரக்கமும் வெட்கமும் தோன்றவே இல்லை! எளியவனுடைய வேண்டுகோளை வலியவன் காது கொடுத்துக் கேட்டால்தானே? இன்றைய நிலைமையில் சத்தியாக்கிரகிகளின் பலம் எதிரிக்கும் குறைவு பட்டதேயாகும். சத்தியாக்கிரகிகளின் எண்ணிக்கையோ அதிகமாகத்தான் இருந்தது. ஏறக்குறைய எண்ணூறு சத்தியாக்கிரகிகள் அங்கு மறியலில் ஈடுபட்டிருந்தனர். நாளுக்கு நூறு பேர் வீதம் கைது செய்தாலும் ஒரு வார காலத்தில் இடைஞ்சல்கள் எல்லாம் தீர்ந்து நிலைமை அமைதியாகிவிடும். கம்பெனியார்கள், பெயரளவில் நடக்கும் இடைஞ்சல்கள்கூட இல்லாமல் வேகமாய் வேலையை முடித்துவிடுவார்கள் என்பது நன்கு விளங்கியது.

ஆனல் வெளியே நடக்கும் இந்த விஷயங்கள் எல்லாம் சிறைச்சாலையில் கட்டுண்டு கிடக்கும் ஆசாவிற்கு எப்படித் தெரியும்? ஆனல் அங்கே நடந்த ஒரு சம்பவம் அவளுக்கு வெளியுலகத்தின் விஷயத்தையும் அறிய இடங் கொடுத்தது!

சிறைச்சாலைக்கு வந்த அதேநாள் மாலையில் அவளுக்கு அறிமுகம் இல்லாத ஓர் ஆசாமி சிறைக்குள் நுழைந்து அவளுடைய அறைக்கு முன் வந்து நின்ருர். அத்துடன் இருந்துவிடாமல் அவர் பேசவும் தொடங்கினர்:

"உங்கள் விஷயமாக எனக்கு அதிக அனுதாபம் உண்டாகிறது. சாதாரண ஜனங்கள் சிறைக்குள் வசிப்பதைப்போல் நீங்களும் வசிக்க நேரிட்டால் உங்களுக்கு அதிகக் கஷ்டங்கள் உண்டாகும். கைதிகளுக்கு ஏதாவது அல்பு உபகாரங்களையும் உதவிகளையும் செய்து கொடுக்க இங்கிருக்கும் ஜெயிலருக்கு அதிகாரம் இருக்கிறது. ஜெயிலரை எனக்கு ரொம்ப நன்ருகத் தெரியும். உங்களுக்கு எந்த விதமான உதவியாவது தேவையாக இருந்தால் என்னிடம் சொன்னல் நான் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். சொல்லுகிறீர்களா, என்ன வேண்டும்?"

ஆசா அந்த மனிதரைக் கூர்ந்து கவனித்தாள். அவர் உடம்பு முழுவதும் மேனுட்டு உடைகளாலேயே மூடப்பட்டிருந்தது. அவர் கையில் ஒரு பிரம்பு இருந்தது. இவைகளை எல்லாம் பார்த்த ஆசா, "உங்கள் பெயர் என்ன என்பதை அறியலாமா?" என்று கேட்டாள்.

அந்த மனிதர் சிரித்துக்கொண்டே, "என் பெயர்

பார்க்கவராம். நான் யார் என்பதை உங்களுக்குச் சொல்லப் போவதில்லை. ஏனெனில் உங்களுக்குச் செய்யும் உதவிகளுக்கு அது தடையாக இருக்கும் என்று எண்ணுகிறேன். உங்கள் விஷயமாக எனக்கு நிரம்ப அனுதாபம் உண்டு. உங்களுக்கு இங்கே இருக்கும் கஷ்டங்களைச் சற்றுக் குறைக்கும் எண்ணத்துடன் தான் நான் இங்கு வந்தேன். உங்களுக்கு என்னால் ஏதாவது உதவி வேண்டியதாக இருக்குமா? சொல்லுங்கள்'' என்றார்.

ஆசா மறுபடியும் பார்க்கவராமைக் கூர்ந்து கவனித்தாள்.

சில மனிதர்களின் முகத்தைப் பார்த்து அவர்களுடைய நல்ல குணங்களையோ கெட்ட குணங்களையோ அறிந்து கொள்ளுவது கடினமாகிறது. பார்க்கவராமின் முகமும் அந்த ரகத்தில் சேர்ந்ததாகவே இருந்தது.

எனவே அவருடைய முகத்தைப் பின்னும் அதிக நேரம் கவனியாமலேயே ஆசா, ''தினம் சத்தியாக்கிரக விஷயமாக என்ன என்ன நடவடிக்கைகள் நடக்கின்றன என்பதைப்பற்றி அறிய எனக்கு ஆவலாக இருக்கிறது. ஆகையால் தயவு செய்து எனக்கு மராட்டி தினசரிப் பத்திரிகை ஒன்று தினம் கிடைக்கச் செய்தால் உங்களுக்கு நான் கடமைப்பட்டிருப்பேன்'' என்றாள்.

''பூ. இது என்ன பிரமாதம்? இதற்கு ஏற்பாடு இப்போதே செய்து விடுகிறேன். வேறு ஏதாவது......?''

தன்னுடைய தந்தையின் தேகசுகத்தின் விஷயமாக முடிந்தால் ஏதாவது தகவல் கிடைக்கும்படி செய்யச் சொல்லலாமா? ஆனால் என்ன தோன்றிற்றோ தெரியாது. ஆசா உடனடியாகவே அதை அடக்கிக் கொண்டாள்.

''வேறு ஒன்றும் வேண்டியதில்லை.''

''அப்படியானால் நான் போகட்டுமா?''

''சரி! உங்களுக்கு நிரம்ப வந்தனம்.''

''சே, சே, எனக்கு ஏன் வந்தனம்?'' என்று சொல்லிக் கொண்டே பார்க்கவராம் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

மறுநாள் ஆசாவிற்கு மராட்டி தினசரிப் பத்திரிகையின் பிரதி ஒன்று கிடைத்தது. அதில் இன்னும் ஐம்பது சத்தியாக்கிரகிகள் கைது ஆன விஷயம் பிரசுரமாகி இருந்தது. அவர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. சத்தியாக்கிரகத்தின்

வெற்றியைக் குறித்து ஏற்கனவே சந்தேகித்துக்கொண் டிருந்த ஆசாவிற்கு இதனுல் சற்று மனக்கலக்கமும் ஏற்பட்டது.

இதன் பிறகு தினமும் தவருமல் தினசரிப் பத்திரிகை அவளுக்குக் கிடைத்துக் கொண்டுதான் இருந்தது. தினம் ஆசா அதைத் திறக்கும்போது சரத்சந்திரன் விஷயமாக ஏதேனும் வெளி வந்திருக்கும் என்று எதிர்பார்த்துத்தான் திறப்பது வழக்கம் ஆகிவிட்டது. அவனும் தன்னைப்போல் கைதியாகிச் சிறைவாசம் அனுபவிக்கும்படி நேரிட்டிருக்கும். அந்தச் செய்தியைப் பத்திரிகையில் தான் படிக்கப் போவதாக மனத்தில் தயார் செய்துகொண்டுதான் படிக்க ஆரம்பிப்பாள். ஆனல் சரத்சந்திரன் விஷயமாக ஒன்றுமே பிரசுரம் ஆகாததைக் கண்டதும் மனத்தில் கலக்கமும் பற்பல விதமான சந்தேகங்களும் அவளுக்கு எழுந்தன. ஒரு நாள் பத்திரிகையில் ஒரு விநோதமான விஷயத்தைப் படித்தபோது அவளுக்குச் சரத் சந்திரன் விஷயமாக இன்னும் சந்தேகம் அதிகரித்தது. இதனுல் அவள் கொஞ்சம் பயப்படவும் பயப்பட்டாள்.

அந்த விசித்திர விஷயம் பத்திரிகையில் பின்வருமாறு வெளிவந்து ஆசாவுக்குக் கிட்டியது.

## சத்தியாக்கிரக நாடகத்தில் ஒரு ஹாஸ்ய நடிகர்!

### கம்பெனி டைரெக்டர்களில் முக்கியமானவர் ஒரு ஹனுமார் கோயிலில் கைதியானர்!!

புதிய டிரைவர்! ருசிகரமான கதை!!

**லே**வலா காம்பில் அணைக்கட்டு மேற்பார்வை பார்க்கும் உத்தியோகஸ்தர்களின் காரியாலயத்தில் நடந்த ஒரு ருசிகரமான சம்பவத்தைப்பற்றி நம் நிருபர் நேரில் கண்டு எழுதுவதை வாசகர்கள் அனைவரும் சந்தோஷத்துடன் வரவேற் பார்கள் என்று நாம் நம்புகிறோம். வருஷப்பிறப்பன்று நடை பெற்ற சத்தியாக்கிரக மறியலை அடக்குவதற்கான சகல முறைகளையும் ஏற்பாடுகளையும் கம்பெனி டைரெக்டர்கள் ஒகார்மென் என்னும் துரையினிடம் ஒப்பித்திருந்தனர் என்று தெரிய வருகிறது. ஆனல் கனம் ஒகார்மென் துரையவர்கள்

வருஷப்பிறப்பன்று சத்தியாக்கிரகம் ஆரம்பித்த சமயத்தில் காணப்படவே இல்லை. அவர் வராதிருந்து விட்டதன் காரணம் என்ன என்பது கம்பெனி டைரெக்டர்களுக்கும் தெரியாத பரம ரகசியமாக இருந்தது. ஆனால் அவர் வராதிருந்ததன் காரணத்தை அன்று மாலையில் ஓகார்மென் துரையே கம்பெனி டைரெக்டர்களிடம் நேரில் சொன்னார். பிறகுதான் அது தெரிந்தது. கம்பேனி டைரெக்டர்கள் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவதைப்பற்றிப் பரம ரகசியம் பாராட்டுகிறார்கள். அவர்கள் அன்றிரவே ரகசியப் போலீசாரிடம் சென்று விஷயங்களைச் சொல்லி இருக்கின்றனர். எங்கள் நிருபர் பெருமுயற்சியுடன் சில விஷயங்களைத் துப்பறிந்து தெரிந்து கொண்டார். அவைகளை நம் வாசகர்களுக்கும் தருகிறோம்.

வருஷப்பிறப்புக்கு முந்தின இரவன்று ஓகார்மென் கார்லாவிலுள்ள ஒரு நண்பர் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றிருந்தார். அங்கே அரசாங்கத்தாரின் பி. டபிள்யூ. டி. (மராமத்து இலாகா) யைச் சேர்ந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தர் முகாம் செய்திருந்தார். அவருக்கும் ஓகார்மென் துரைக்கும் இடையில் நெருங்கிய நட்பு இருந்ததனால்தான் அவர் அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில்கூடத் தவறாது விருந்துக்குச் செல்லவேண்டியதாயிற்று. சாப்பாடு முடிந்ததுமே நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டு அன்றிரவே திரும்பி லோனாவலாவிற்கு வந்து விடுவதாகவும், மறுநாள் காலையில் அதிசீக்கிரம் எழுந்திருந்து சத்தியாக்கிரக அடக்குமுறைகளை நன்கு கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் திட்டம் போட்டிருந்தார். ஆனால் 'மனிதன் திட்டம் போடவும், கடவுள் மட்டம் போடவும்' என்னும் ஆங்கிலப் பழமொழியைப்போல், அவர் ஒன்று நினைக்கத் தெய்வம் மற்றொன்று நினைத்தது. அவர் திரும்பி லோனாவலாவிலுள்ள தம்முடைய காம்பிற்கு வர முடியவில்லை! அதற்குப் பதிலாக வழியில் உள்ள ஓர் இடிந்த காட்டு ஹனுமார் கோயிலில் அடைக்கப்பட்டுக் கிடந்தார்!!

கார்லாவில் விருந்து சாப்பிட்டு முடிந்ததும் சுமார் பதினொரு மணிக்கு வீட்டிற்குத் திரும்பப் புறப்பட்டதாக அவர் டைரெக்டர்களிடம் சொன்னதாகத் தெரிகிறது. புறப்படும் போது அவர் டிரைவரிடம் வண்டியைச் சற்று வேகமாக ஓட்டும் படிக்கும், சீக்கிரமாக முகாமுக்குத் திரும்ப வேண்டும்

என்றும் சொன்னாராம். டிரைவரும் வணக்கமாய் 'நல்லது' என்று சொல்லிவிட்டு வண்டியைச் சுமார் நாற்பது ஐம்பது மைல் வேகத்தில் ஓட்ட ஆரம்பித்தான். ஆனால் பத்து நிமிஷங்களுக்கெல்லாம் வண்டி இருந்திருந்தாற்போல் நின்றுவிட்டது! டிரைவர் வண்டியைவிட்டு இறங்கி யந்திரத்தின் மேல்முடியைத் திறந்தான். உள்ளே என்னவோ சரிப்படுத்துவதாகப் பாவனை செய்தான். பிறகு மறுபடியும் வண்டியில் ஏறி உட்கார்ந்து 'திராட்டில்' என்னும் அடைப்பானைத் திறந்து வண்டியை ஓட்ட முயன்றான். வண்டி 'கிர்கிர்......' என்று அலறிற்றே ஒழிய ஓர் அடிகூட நகரவே இல்லை! கடைசியில் டிரைவர் மிக வணக்கத்துடன், ''ஸார், வண்டியிலுள்ள பெட்ரோல் ஆகிவிட்டது'' என்றான். ஒகார்மென் அவனைக் கொஞ்சம் காரமொழிகளால் வைதார். உடனே டிரைவர் சிவந்த முகத்துடன் படபடப்பாகப் பேசினான். ''ஸார், ஜாக்கிரதையாகப் பேசுங்கள்; நான் பட்டாணியன்; ஈனமான வசைச் சொற்களைக் கேட்கமாட்டேன்!'' என்றான்.

மேலே என்ன செய்வது என்பது ஒகார்மென் துரைக்குப் பெரிய பிரச்னையாகவே பட்டது. வழியில் வேறு ஏதாவது ஒரு மோட்டார் போனால் அதிலிருந்து கொஞ்சம் பெட்ரோல் வாங்கிக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் அவர் வெகுநேரம் வரையில் வண்டியிலேயே உட்கார்ந்திருந்தார். ஆனால் நெடுநேரம் வரையில் காத்திருந்தும் அவ்வழியில் ஒரு மோட்டார்கூட வரவே இல்லை. ரஸ்தாவிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள கிராமத்தில் மினுமினுவென்று விளக்கு வெளிச்சம் தெரிந்து கொண்டிருந்தது. அங்கே சென்று ஒரு மாட்டு வண்டியை வாடகைக்குப் பேசினால்தான் ஊர்போய்ச் சேர முடியும் என்று டிரைவர் யோசனை கூறினான். அந்த யோசனை ஒகார்மென்னுக்கு நல்லதாகப்பட்டது. அவர் டிரைவரையே கிராமத்துக்குள் போகச் சொன்னார். அப்படியே டிரைவரும் சென்றுவிட்டான். சற்று நேரத்தில் அவன் திரும்பி வந்து துரையிடம், ''ஸார், நான் எத்தனையோ மன்றாடிப் பார்த்து விட்டேன். ஒருவரும் என்னை நம்பி வண்டி விடமாட்டேன் என்கின்றனர். நீங்களே நேரில் வந்தால் பயந்துகொண்டு வண்டியை வாடகைக்கு விடுவார்கள் என்று தோன்றுகிறது'' என்றான்.

ஒகார்மென்னுக்கு ஏதாவது ஒரு வழி தோன்றாதா என்று கவலையாக இருந்தது. எனவே டிரைவர் வந்து விஷயத்தைத்

தெரிவித்ததும், ''சரி, நானும் வருகிறேன்; போகலாம் வா'' என்று சொல்லிவிட்டு வண்டியிலிருந்து இறங்கினர். டிரைவர் புறப்படுவதற்குமுன் வண்டிக்குப் பின்னால் கட்டப்பட் டிருந்த தாம்புக்கயிற்றை அவிழ்த்துச் சுருட்டிக் கையில் எடுத்துக்கொண் டான். இதைக் கண்டு ஒகார்மென், ''எதற்காகக் கயிறு?'' என்று அவனை விசாரித்தபோது அந்த டிரைவர் ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, ''ஸார், இருட்டுக் காலம் ஸார், கையில் கயிறு அல்லது தடி இருப்பது நல்லது'' என்றான். அதற்குமேல் ஒகார்மென் ஒன்றும் பேசாது அவனைப் பின் தொடர்ந்தார். அந்த இருள் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் அவ்விருவரும் வழி நடக்கலாயினர்.

சுமார் ஒரு மைல் நடந்ததும் அவர்கள் ஒரு சிறு ஓடையைக் கடக்கவேண்டியதாயிற்று. ஓடையைத் தாண்டிச் சென்றதும் அவர்கள் ஓர் இடிந்துபோன ஹனுமார் கோயிலருகில் வந்திருப் பதை உணர்ந்தனர். கோயிலில் ஒரு விளக்கு மினுக்கு மினுக் கென்று எரிந்துகொண் டிருந்தது. ஆனால் கோயிலைச் சுற்றிலும் வெகுதூரம் வரையில் ஜனசஞ்சாரம் என்ற பேச்சே அற்றிருந்தது. கோயில் அருகில் சென்றதும் டிரைவர் ஒகார்மென்னைப் பார்த்து, ''ஸார், கோயிலுக்குள் போகலாம் ஸார்'' என்றான். ஒகார் மென்னுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சிறிது நேரத்தில் அந்த ஆச்சரியம் பன்மடங்கு பெருகிப் பயமாக மாறி விட்டது. ''உனக்கென்ன பைத்தியமா?'' என்று டிரைவரை வினவ, அவன் சற்று அதட்டிய குரலில், ''நீ கட்டாயம் உள்ளே வரத் தாண்டா வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே தன் கையிலுள்ள கயிற்றினால் ஒகார்மென்னைச் சுற்றிப் பலவந்த மாகக் கட்டத் தொடங்கினான். ஒகார்மென் பெரிய ஆக்ருதியை உடையவராக இருப்பினும் அந்த முரட்டுப் பட்டாணியன்முன் பலமற்ற சிறு குழந்தையாகவே போய்விட்டார். அந்தக் கட்டுண்ட நிலைமையிலும் ஒகார்மென் வாயால் தம் பலத்தைக் காட்டப் பின் வாங்கவில்லை. அவர் அப்போதும் டிரைவரைக் கண்டபடி வைது வசைமாறி பொழிந்தவண்ணம் இருந்தார். ஆனால் அந்த முரடன் ஒகார்மென்னின் வாயில் துணியைத் திணித்து அவர் நாக்கை அடக்கினதுமல்லாமல் கைகால் களிலும் முதுகிலும் நையப் புடைத்தான். முகத்தை மூடினதும் அவரை இழுத்துக்கொண்டு கோயிலுக்குள் நுழைந்தான்.

பிராகாரத்தில் ஒரு கல்தூண் இருந்தது. ஒகார்மென் அந்தத்

தூணுடன் தூணாக இறுகக் கட்டப்பட்டார். ஒகார்மென்னின் சட்டைப் பையில் இருந்த பணம், பல கடிதங்கள் முதலியவற்றை டிரைவர் ஒன்று விடாமல் காலி செய்துவிட்டான். பிறகு ஒரு கூரிய கத்தியின் உதவியால் ஒகார்மென்னின் உடைகளில் பத்துப் பதினைந்து இடங்களில் ஓட்டை போட்டுக் கிழித்தான். எல்லா வற்றையும் முடித்துக்கொண்டு வெளியே சென்றபோது அந்த டிரைவர் ஒகார்மென்னை நோக்கி, ''ஸார், ஸார், ஸலாம் ஸார்; மோட்டாரில் பெட்ரோல் ஒரு சொட்டாவது குறையவில்லை. வண்டியும் நல்ல ஸ்திதியில்தான் இருக்கிறது. வயிறு புடைக்கத் தின்றதனால் மோட்டாரை நீங்களே ஓட்ட முயலவில்லை போலும்! வந்தனம். நான் பம்பாய் போவதற்கு வண்டி இல்லையே என்று கவலைப்பட்டேன். எனக்குச் சமயத்தில் வண்டி கிடைத்தது. ஸலாம்'' என்றான்.

''இந்த டிரைவர் ஒகார்மென்னிடம் புதிதாக வேலைக்கு அமர்ந்தவன். பழைய டிரைவர் ஒரு கல்யாணத்தை முன்னிட்டுப் பம்பாய்க்குச் சென்றதால் அவனுக்குப் பதிலாக இவன் நியமிக்கப் பட்டிருந்தான்.

மறுநாள் பிற்பகல்வரையில் ஒகார்மென் அந்தப் பாழடைந்த கோயிலிலேயே சிறைப்பட்டுக் கிடந்தார். அந்தக் கோயில் ஊருக்கு வெளியே கட்டப்பட்ட ஒரு காட்டு ஹனுமார் கோயில். விளையாட்டுச் சிறுவர்கள் சிலர் விளையாடும் நோக்கத் துடன் அந்தக் கோயிலுக்குள் தற்செயலாக நுழைந்தார்கள். ஒரு வெள்ளைக்காரன் அரை அம்மணமாகத் தூணோடு தூணாய்க் கட்டுண்டு கிடப்பதைக் கண்ட அச்சிறுவர்களுக்குத் திகில் உண்டாயிற்று. ஓவென்று அலறிக்கொண்டே பக்கத்திலுள்ள கிராமத்திற்குச் சென்று விஷயங்களைத் தெரிவித்தார்கள். பிறகு குடியானவர்கள் சிலர் அவ்விடத்திற்குச் சென்று துரையை விடுவித்தனர்.

லோனுவலாக் காரியாலயத்திற்கு வந்து சேர ஏறக்குறைய இருட்டாகும் சமயம் ஆகிவிட்டது. அவர் காரியாலயத்தில் நுழையும்பொழுது அவருடைய உடை அழகைக் கண்டவர்கள் பாக்கியசாலிகளே!

மேலாகப் பார்ப்பவர்களுக்கு அந்த டிரைவர் பம்பாய் டவுனிலுள்ள ஒரு பட்டாணியப் போக்கிரி என்றுதான் தோன்றும். ஆனால் ஒகார்மென்னுக்கும் கம்பெனி டைரெக்டர் களுக்கும் அந்த டிரைவர் சத்தியாக்கிரகிகளில் ஒருவனாக இருக்க

வேண்டும் என்றும், அவன் வேஷம் தரித்து வந்திருக்கவேண்டும் என்றும் தோன்றியது. இதை நிருபித்துவிட்டால் பிறகு அரசாங்கத்தாரின் அனுதாபம் தங்கள் கட்சிக்குக் கிடைக்கும் என்றும் ஆவலோடு இருந்தனர்.

விஷயம் இவ்வளவுதான்; முடிவு எப்படியோ? காத்திருந்து பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

மேற்கண்ட விஷயங்களைப் பத்திரிகையில் படித்தபொழுது ஆசாவின் மனக்கண்களின் முன்பு சரத்சந்திரனின் உருவம் இடைவிடாது தோன்றிக்கொண் டிருந்தது. மேற்கண்ட நிகழ்ச்சியில் சரத்சந்திரனின் பெயர் ஓர் இடத்தில்கூடக் காணப்படவில்லை என்றாலும் 'பட்டாணிய டிரைவர்' என்ற வார்த்தையைப் படிக்கும்போதெல்லாம் ஆசாவிற்குச் 'சரத் சந்திரன்' என்று எழுதப்பட்டிருப்பதைப் போலவே தோன்றியது. சரத்சந்திரனுடைய கொள்கைகளைப்பற்றி ஆசா நன்கு அறிந்திருந்தாள். அவனுடைய முரட்டுச் சுபாவமும் அவளுக்கு நன்கு தெரியும். அவன் மனது வைத்தால் இன்னும் எத்தனையோ சாதுரியமான காரியங்களில் ஈடுபட முடியும். அதற்கு வேண்டிய சாமர்த்தியமும் பலமும் அவனிடம் பொருந்தியிருந்தன. அவனைப் போன்ற முன்கோபிகள் வெகு சிலரே இருப்பார்கள். அவனுடைய பலாத்காரக் கொள்கைகளையும் முன்கோபத்தையும் ஆசா பெரு முயற்சியுடன் அடக்கி வைத்திருந்தாள். கேவலம் ஆசாவின் மனத்தைத் திருப்தி செய்யும் நோக்கத்துடன் மட்டுமே அவன் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தான். அஹிம்சைக் கொள்கையில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் தான் காதலித்துவரும் பெண்ணிற்கு உதவியளிக்கும் நோக்கத்துடன் அவன் அஹிம்சைப் போரிலும் அவளுக்குப் பக்கத்தில் இருந்தான். தன்னுடைய பலாத்காரக் கொள்கைகளை அவன் ஆசாவிடம் வெளிக்காட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் முன்பெல்லாம் அவன் ஆசாவிடம், "எனக்கு நம்பிக்கையில்லாத விஷயத்தில் ஈடுபட என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய்? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். உன் சத்தியாக்கிரக மறியலுக்குப் பலாத்காரக் களங்கம் ஒன்றும் விளைவிப்பதில்லை என்று சபதம் செய்கிறேன்" என்று சொல்லியிருந்தான்.

பத்திரிகையில் வெளிவந்த கதையைப் படித்ததுமே ஆசாவிற்குச் சரத்சந்திரன் முன்பு அவளிடம் சொன்ன

சபதங்கூட ஞாயகத்திற்கு வந்தது. இதனால் அவள் அந்தப் பட்டாணிய டிரைவர் சரத்சந்திரனாக இருக்கமாட்டான் என்று எண்ணத் தொடங்கினாள். ஆனால் அவளுடைய சந்தேகத்தை நீக்கிக்கொள்ளுவது அவளுக்கே கஷ்டமாகிவிட்டது.

ஆனால் சரத்சந்திரன் சத்தியாக்கிரகம் செய்து கைதியான விஷயமாய்ப் பத்திரிகையில் செய்தி ஒன்றுமே வெளிவராததை நினைத்தபோது ஒகார்மென்னுக்கு ஏற்பட்ட விபத்தும் சரத் சந்திரனாலேயே ஏற்பட்டிருக்க வேண்டும் என்று மறுபடியும் ஆசா நினைத்தாள்.

ஆசா இவ்விதம் மனக்கலக்கம் அடைந்துகொண்டு இருந்த சமயத்தில்தான் மறுபடியும் பார்க்கவராம் சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்தார்.

அவர் ஆசாவைப் பார்த்து, "என்ன, உடம்பு சௌக்கியமா? ஏதாவது வேறு உதவி தேவையாக இருக்கிறதா?" என்று கேட்டார்.

இவரிடம் சரத்சந்திரனைப் பற்றிய தகவல்கள் ஏதேனும் கேட்டு அறியலாமா என்று முதலில் எண்ணிய ஆசா பிறகு என்ன தோன்றிற்றோ என்னவோ அதை அடக்கிக்கொண்டே பேசாது நின்றாள். பார்க்கவராம் உடனே அவளிடம், "உங்களுக்கு இங்கே எந்த விதமான வேலை கொடுக்கப் பட்டிருக்கிறது?" என்றார்.

"கம்பளி நெய்வதற்கான செம்மறியாட்டின் ரோமங்களைக் கயிறாகத் திரிக்கும் வேலைதான் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது."

"சே, சே, உங்களைப்போன்ற கோமளமான யுவதிகளுக்கு இந்த முரட்டு வேலையையா கொடுப்பது? ஏதேனும் பட்டிக் காட்டு அநாகரிக ஸ்திரீகளுக்கு அல்லவா கொடுக்க வேண்டும் இந்த வேலையை? அதிருக்கட்டும், நான் ஜெயிலரிடம் சொல்லி உங்களுக்கு இன்னும் சுலபமான வேலை ஏதாவது கொடுக்கும் படியாகச் சொல்லுகிறேன்."

"வேண்டாம், வேண்டாம், இந்த வேலையே எனக்குப் போதுமானது."

"வேண்டாமல் என்ன? இதோ பாருங்கள், உங்களுடைய பட்டுப்போன்ற இளங் கைகளின் தோல்கூட உரிந்துவிட்டதே."

இப்படிச் சொல்லிக்கொண்டே அவர் ஆசாவின் இரண்டு கரங்களையும் தம் கைகளால் பிடித்து அமுக்கிக்கொண்டே புன்

முறுவல் புரிந்தார்.

அவர் அப்படித் தன் கைகளைப் பிடித்து அழுத்திக்கொண்டே காமத்தால் குருடராகிச் சிரித்ததைக் கண்ட ஆசா உடனே தன் கைகளைப் பிடுங்கிக்கொண்டாள்.

இந்தக் கேவலமான நிலைமையில் சரத்சந்திரனைப்பற்றி ஆசா அவரிடம் என்ன கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும்? எனவே அவள் தன் யோசனையை மறந்தே போனாள்.

பிறகு அந்தப் பார்க்கவராம் என்ன பேசினார் என்பதை ஆசா கவனிக்கவே இல்லை. அவர் அவ்விடம் விட்டு அகன்றார். அவர் தொலைந்தது நல்லதாகப் பட்டது அவளுக்கு.

கம்பிக் கதவின் இடதுபுறமாக வார்டுக் காவல் கிழவி நின்றுகொண் டிருப்பது ஆசாவுக்குத் தெரிந்தது. அவள், அந்தக் கிழவியைக் கூப்பிட்டு, ''இந்த மனிதன் யார் அம்மா?'' என்று கேட்டாள்.

''தாயே! என்ன சொல்லட்டும் உங்களுக்கு! அவர் ஸி. ஐ. டி. யைச் சேர்ந்த ஒரு துப்பறிபவர். அவர் உங்களிடம் வந்து போவதுகூட எனக்கு அத்தனை சிறந்ததாகப் படவில்லை. நீங்கள் சற்று ஜாக்கிரதையாக—''

''எனக்கு ஒன்றும் புரியவில்லையே; விளக்கிச் சொல்லேன்.''

''தாயே, உங்கள் மறியல் விஷயமாக நான் எதிர்ப்பு ஒன்றும் கூற முன்வரவில்லை; ஆனால் உங்களைப்போன்ற அழகான யுவதிகள் சிறைக்கு வருவது அத்தனை நல்லதாக எனக்குப் படவில்லை.''

''ஏன், சிறைச்சாலை எங்களை விழுங்கிவிடுமா?''

''விழுங்கி விட்டால்தான் ஒரே பாடாகப் போய் விடுமே! ஆனால் விஷயம் வேறு; ஒரு பஞ்சாபிப் பெண் பம்பாய்ச் சிறையில் அடைபட் டிருந்தபோது இதே பார்க்கவராமின் 'கருணை' அவள் மேல் விழுந்தது. அந்தப் பெண் மானத்தைப் பெரிதாக எண்ணி உயிரையே விட்டுவிட்டாள்.''

இந்த விஷயத்தைக் கேட்டதும் பார்க்கவராமைப்பற்றி ஏற்கனவே பயப்பட்டுக்கொண் டிருந்த ஆசாவிற்கு மயிர்க் கூச்சல் எடுத்தது.

சத்தியாக்கிரகம் செய்வதனால் சிறைக்குச் செல்ல நேரிட்டால், அங்கு எவ்விதமான கஷ்டங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி ஆசா முன் கூட்டியே ஒரு திட்டம் போட்டிருந்தாள். ஆனால் அப்போதுங்கூடக் கேவலம்

காம இச்சையைப் பூர்த்தி செய்யும் கொடூரமான கஷ்டத்தை அவள் எதிர்பார்க்கவே இல்லை. ஆகையால் இந்த எதிர்பாராத இடியை அவள் தலை கொடுத்துத் தாங்கவேண்டுமே என்ற பயத்தினால் துடிதுடிக்கலானாள்.

அந்தச் சிறைச்சாலை அப்போது அவளுக்கு நரகம்போல் தோன்றியது.

# அத்தியாயம் 12

எந்த ஒரு விஷயம் பத்திரிகையில் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாளைக்காவது கட்டாயம் பிரசுரமாகியே தீரும் என்று ஆசா எண்ணி எதிர்பார்த்திருந்தாளோ அந்த விஷயம் கடைசியில் ஒரு நாள் பிரசுரம் ஆகியே விட்டது. இந்த விஷயம் பத்திரிகையில் வராதிருந்துவிட்டால் ஆசா மிகவும் ஆனந்தித்திருப்பாள். ஆனால் வருவது வந்தே தீரும் என்பதைப்போல் அவள் பயந்துகொண்டு எதிர்பார்த்த விஷயம் கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்பட்டு விட்டது. அதை அவள் படிக்கவும் படித்தாள்.

சத்தியாக்கிரக மறியலில் ஈடுபட்டவர்களின் கடைசிக் கூட்டத்தையும் பிடித்துச் சிறைக்கு அனுப்பிவிட்டதால் இனி மேல் அணைக்கட்டுக் கட்டிடம் ஆரம்பிப்பதற்குத் தங்கு தடை ஒன்றுமே இல்லை.

தினசரிப் பத்திரிகையில் பெரிய எழுத்துக்களில் **"சத்தியாக்கிரகம் அடக்கப்பட்டு முடிவடைந்தது!"** என்று அச்சிடப்பட்டிருந்தது.

அந்த எழுத்துக்கள் மிளகாய்ப்பொடி தூவுவது போன்று ஆசாவின் கண்களை உறுத்தின!

மிகவும் முயற்சியுடனும் நம்பிக்கையுடனும் கடைந்து வெண்ணெய் புறப்படுமுன்பே தாழி உடைந்து போனால்?

சத்தியாக்கிரகத்திற்காக நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழைத்தும், பிறரையும் கஷ்டப்பட்டு ஈடுபடச் செய்தும் என்ன பலனைக் கண்டாள்?

அவளையும் கெடுத்துக்கொண்டு மற்றவரையும், கஷ்டப் படுத்தினளே!-தானும் சிறைக்கு வந்தாள்; ஆயிரக்கணக்கான மற்றையோரையும் சிறைக்கு அனுப்பினள்! சிற்சில குடும்பங் கள் மேற்சொன்ன மறியலினல் கொஞ்சம் க்ஷீணதசையை அடைந்தன. மறியலுக்காகச் சேமித்த பணத்தின் செலவுதான் கண்ட பலன். தொண்டர்களுள் பலர் கொதிநீர்ப் புண்களால் ஆஸ்பத்திரியை அடைந்தனர். தொண்டர்களை நம்பி உயிர்

வாழ்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் வாயில் மண் விழுந்தது!

சத்தியம் வெற்றி அடைந்திருந்தாலும் இவ்வளவும் தகும். சத்தியத்திற்காக இன்னும் உயிரையே கொடுத்தாலும் அது வீணாகாது. சத்தியம் விலை மதிப்பற்ற ஒரு தெய்விகம்.

ஆனால் சத்தியத்திற்கு யார் மதிப்புக் கொடுத்தார்கள்?

இவ்விதக் கவலைகள் அவள் மனத்தில் கிளம்பினவுடன் அவள் கைகள் தாமாகவே பத்திரிகையின் தாள்களை தூர எறிந்தன.

பத்திரிகைத் தொழில் நடத்துவது ஒரு சிறந்த கலைதான். ஆனாலும் தற்சமயம் ஆசா பத்திரிகைகளின்மீதே ஒருவித வெறுப்பும் துவேஷமும் கொண்டாள்.

பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கருணை என்பதே கிடையாது! ஒரு கொள்கையையும் அவர்கள் பின்பற்றுவதில்லையா? இன்றைக்கு ஒரு விதமாகவும் நாளைக்கு வேறு விதமாகவும் எழுதுகின்றனரே! இந்த மறியல் வெற்றியடைந்திருந்தால், "சத்தியாக்கிரகத்தின் மகத்தான வெற்றி!" என்று 'சக்கை விளாசு' விளாசிவிடுவார்களே. இன்று "சத்தியாக்கிரகம் அடக்கப்பட்டுவிட்டது!" என்பதைப் பற்றி அந்த ஆசிரியர்கள் தடபுடல் படுத்திக்கொண் டிருக்கிறார்களே! கேவலம் அன்றன்று நடக்கும் விஷயத்தைப்பற்றிக் கூக்குரல் போடுவதைத் தவிர வேறு ஒன்றையும் அறியாவா இப்பத்திரிகைகள்? வெறும் வாயை மெல்லுவதைக் காட்டிலும் அவல் அகப்பட்டால் நல்லதல்லவா? வெறும் வெள்ளைக் காகிதத்தைக் கறுப்பாக்கி எந்த விஷயம் அகப்பட்டாலும் அதைப் பற்றி முரசடிப்பதுதான் பத்திரிகையில் கண்ட உண்மை! உள்ளே இருதயமே இல்லாது, முகத்தில்மட்டும் ஆயிரக்கணக்கான நாக்குகளைப் படைத்த ஓர் அரக்கனைப்போல் தோன்றியது பத்திரிகையைக் கண்டால் ஆசாவிற்கு!

கண்களை இறுக மூடிக்கொண்டாள். இடது கையைத் தன் மார்பின்மேல் வைத்துப் பொங்கி வரும் தன் துக்கத்தை ஒருவாறு அடக்க முயன்றாள்.

ஒரு குரல் பேசியது: "அம்மா, உங்களிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்துவிடும்படியாக ஜெயிலர் சாகிப் கொடுத்தனுப்பினார்."

ஆசா கண்களைத் திறந்து மேலே நோக்கினாள். பிறகு யந்திர பாவத்துடன் கையை நீட்டி அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டாள்.

அந்தக் கடிதம் அவளுடைய தகப்பனார் எழுதியது என்பதை

ஆசா உணர்ந்தாள். கடிதத்தின் பல இடங்களில் பல வாக்கியங்களைக் கறுப்பு மையினுல் தீற்றிப் படிக்க முடியாதபடி செய்திருந்தது.

ஆசா படிக்கத் தொடங்கினுள்:

''என் உடம்பு சௌக்கியமாக இருக்கிறது. நீ வீண் கவலைப்பட்டு மனத்தைப் புண்ணுக்கிக் கொள்ளாதே! நீ என் அருகில் இல்லாததால் எனக்கு மனத்திற்குக் கவலையாக இருக்கும் என்றும் எண்ணித் துன்புறவேண்டாம். தௌலதீ எனக்கு வேண்டிய பராமரிப்புகளைச் செய்கிறுன்.

''வருஷப் பிறப்பன்று காலையில் நீயும் சரச்சந்திரனும் என் கால்களைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுச் சத்தியாக்கிரகம் செய்யக் கிளம்பினதிலிருந்து நீ என்னைச் சந்திக்க முடியவில்லை. அதைப்போலவே சரத்சந்திரனையும் கண்ணிலேயே காணவில்லை. எங்கேதான் சென்றுனே தெரியவே இல்லை. அவனைப் பற்றிய தகவலே ஒன்றும் இல்லை.''

இதற்குப் பிறகு கடிதத்தில் சில வரிகள் கறுப்பு மையினுல் அடையாளம் தெரியாதவாறு அடிக்கப்பட்டிருந்தன. கறுப்புமை போடுவதற்கு முன்பு கத்தியால் அந்த வரிகளைச் சுரண்டி இருந்தது. எழுத்துக்களின் மேல்பாகம் கீழ்ப்பாகம் இவை மட்டும் சில இடங்களில் இன்னும் இருந்தன. ஆசா அதை எப்படியாவது படித்துவிடவேண்டும் என்று பலவாறு முயன்றும் பயன்படவில்லை. எழுதப்பட்ட விஷயம் சரத்சந்திரனைப் பற்றியதே என்பதை அவள் எப்படி அறிய முடியும்? எனவே மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டு அவள் மேலே படிக்கலானுள்.

''நீ விடுதலையாகி வெளியே வருவதற்கு நிரம்ப நாட்கள் இருப்பது என்னவோ உண்மைதான். ஆனுல் நீ வெளியே வந்த பிறகு எனக்கும் உனக்கும் இடையே சந்திப்பு இருக்கும் என்று நான் பூரணமாக நம்புகிறேன். நீயும் அதைக் கட்டாயமாக நம்பத்தான் வேண்டும். நீ வருவதற்குள்ளாக நான் பூர்ண சுகம் அடைந்துவிடுவேன். பம்பாயில் உன்னுல் நடத்தப்படும் பால் கிடங்கைப் பற்றியும் எனக்குத் தகவல்கள் எட்டிக் கொண்டுதான் இருக்கின்றன. அதைப்பற்றியும் நீ சற்றும் கவலைப்பட வேண்டாம்.

''இங்கே இரண்டு நாட்கள் தங்கியிருந்தாரே ஓர் அழகிய வாலிபர் - விலாஸ் என்பவர் - உனக்கு ஞாபகம் இருக்கிறதா?

அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. ஏதாவது உதவி வேண்டும் என்றால் தமக்குத் தெரிவிக்கும்படியாக அவர் எழுதியுள்ளார். மேலும் என்னிடமிருந்து உனக்குப் போகும் கடிதங்களில் எல்லாம் அவருடைய நமஸ்காரங்களையும் அன்பையும் தெரிவிக்கும்படி எழுதியிருக்கிறார். நான் அவரைப் போய்ச் சந்தித்துவிட்டு வரும்படியாகத் தௌலதீயை அனுப்பி யிருந்தேன். ஆனால் அவர் இப்போது லோனுவலா முகாமில் இல்லையாம். பம்பாய்க்குப் போய்விட்டாராம். கம்பெனி வேலையை அவர் விட்டுவிட்டுத் தம் ஊருக்கே போய்விட்டாராம். இனி இங்கே திரும்பியே வரமாட்டார் என்று அங்கே தகவல் கிடைத்ததாம். கம்பெனியார்கள் ஒரு விஷயத்தில் இவரையே பெரிதும் எதிர்பார்த்து—''

பின்னால் எழுதப்பட்ட வரிகள் சுரண்டப்பட் டிருந்தன. இடையிடையே சுரண்டப்பட்ட வரிகளைக் காணும்போது ஆசாவிற்கு என்றும் இல்லாத மனவெறுப்பு உண்டாயிற்று. எத்தனை தடவைதான் அவள் தன் கண்களைச் சுருக்கிக்கொண்டு, சுரண்டி எடுக்கப்பட்ட இடங்களில், ஏதாவது எழுத்துக்களின் அடையாளம் தெரிகிறதா என்று பார்ப்பது? கடிதத்தைத் தூக்கிப் பிடித்தும், தாழ்த்திப் பிடித்தும், கண்களுக்கு அருகில் வைத்தும், தூரத்தே கொண்டுபோயும் அவள் பலவிதமாக முயன்றும் ஒன்றும் பலன் அளிக்கவில்லை. திரைக்குப் பின்னால் ஓர் ஆள் ஒளிந்துகொண் டிருந்தால் அதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். ஆனால் ஒளிந்தது யார் என்பதைக் கண்டுபிடிக்க முகத்தைப் பார்த்துத்தான் ஆகவேண்டும். அதைப் போலவே எழுதப்பட்ட விஷயங்கள் என்னவோ அதிக முக்கியமாக இருக்கவேண்டும் என்பது விளங்கியும் அவ்விஷயம் என்ன என்பது திரையிடப்பட்டு மூடிக் கிடந்தது.

வேறு வழியின்றி ஆசா மேலே படிக்கலானாள்:

''வெயில் மிகவும் கடுமையாக இருக்கிறது. வழக்கம் போல் இந்த வருஷம் மழை எப்போது பெய்யும் என்ற விஷயமாய் நடக்கும் சர்ச்சைகள் இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. ஏனெனில் உழுவதற்கும், பரம்படிப்பதற்கும், விதைப்பதற்கும், நாற்றைப் பிடுங்கி நடுவதற்கும் இங்கே யார் காத்துக்கொண் டிருக்கின்றனர்? இங்கே யாரிடந்தான் ஓர் அடி நிலம் இருக்கிறது? இருந்த நிலம் எல்லாவற்றையுமே கம்பெனியார்கள் சொந்தமாக்கிக் கொண்டனரே! எனவே மழையைப் பற்றிய

சர்ச்சைகளுக்குக் காரணமே இல்லை. எது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். பிரதி வருஷமும் நிலத்தை உழுது உழுது களைத்துப்போன காளைமாடுகளுக்கு இந்த வருஷம் நல்ல வருஷந்தான். அவைகள் சாவகாசமாகப் படுத்து, இன்பக் கனவுகள் கண்டவண்ணம் அசை போட்டுக்கொண்டிருக்கின்றன! நம் வீட்டுப் பசுமாடு சினையாக இருந்ததல்லவா? அது இன்னும் பத்து நாட்களில் ஈனும் என்று தோன்றுகிறது. கன்று போட்டதும் உனக்குத் தெரிவிக்கிறேன். நீ சென்றதிலிருந்து இரண்டு மூன்று நாட்கள் வெள்ளைப்பசு பால் கொடுக்கவே இல்லை. பிறகு வழக்கம்போல் பால் கொடுத்துக் கொண்டு வருகிறது. நம் வீட்டுக் கிளியும் வழக்கம்போல் அதிகாலையில் ''ஆசா எழுந்திரு'' என்று கூப்பிடுகிறது. அந்த நேரத்தில் நீ இங்கே இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.''

கடிதத்தைப் படித்து முடித்ததும் ஆசாவிற்கு அடக்க முடியாதபடி துக்கம் பொங்கிவந்தது. தன் தகப்பனார் எழுதிய விஷயங்களைவிட, எழுதியும் தனக்குத் தெரிவிக்கக் கூடாதபடி சுரண்டப்பட்டிருந்த வார்த்தைகள்தாம் அவளுக்கு இன்னும் அதிகத் துக்கத்தைக் கிளப்பின. அவள் ஒரே கற்பனைக்களஞ்சியமாக உட்கார்ந்து விட்டாள். உயிரற்ற சடலமே அந்தச் சிறையில் இருந்தது. அவள் மனமோ அவளுடைய வீட்டில் உலாவியது. அந்தச் சின்னஞ் சிறிய சுத்தமான அழகான வீடு, பக்கத்தில் உள்ள தொழுவத்தில் நிற்கும் மாடுகள், வீட்டிற்கு முன்புள்ள சிறு முற்றம் - அதில் பெரிய விருக்ஷங்களினின்றும் உதிர்ந்த சில இலைகளும் புஷ்பங்களும் கிடக்குமே! வெயிலில் அந்த மரங்களின் நிழல் முற்றத்தில் விழுந்திருக்கும். காற்றினால் இலைகள் அசையும்போது தரையின்மீது படர்ந்த நிழலும் கூடவே அசையும். அந்தச் சமயத்தில்தான் எத்தனை விதமான சித்திர விசித்திரங்கள் அதில் தோன்றும்? இந்தக் காட்சிகளிலேயே ஆசா மெய்ம்மறந்திருந்தாள். ஆகையால் அவள் இருதயமே நின்றுவிட்டதாக அவளுக்குத் தோன்றியது.

உண்மையில் இந்தச் சிறைவாசத்தின் தனிமையை அவள் பல நாட்களுக்கு முன்பே எதிர்பார்த்துத்தான் இருந்தாள். தகப்பனாரைப் பிரிந்து இருக்க வேண்டிய கஷ்டத்தை அவள் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளத் தயாராகத்தான் இருந்தாள். ஆனால் மனிதரின் மனக்கலக்கம் மிகவும் விசித்திரமான ஒரு விஷயம் ஆகும். அந்த மனக்கலக்கம் வருமுன்பே அதை எதிர்

பார்த்து நிற்பது சகஜமே. ஆனால் வாஸ்தவமாகவே கஷ்டம் வரும்போது துக்கம் பொங்கி வரத்தான் செய்கிறது. துக்கத்தின் அலை எழும்பி, நேரே இருதயத்தைப் போய்த் தொடாமல் இருப்பதில்லை. துக்கம் உண்மையில் விசித்திர மானதே!

அன்று ஒரு நாள் ஆட்டு ரோமத்தைத் திரித்து நூல் ஆக்கிக்கொண் டிருந்தபோதே அவள் மனத்தில் பல விதமான எண்ணங்கள் எழும்பி ஒரே குழப்பம் விளைவித்தன.

அன்று மாலையிலும் பார்க்குவராம் அவ்விடம் வந்தார்.

அவர், ''என்ன சமாசாரம்? சௌக்கியந்தானே?'' என்றார்.

அவரைத் திரும்பிப் பாராமலேயே ஆசா, ''எல்லாம் சௌக்கியந்தான்'' என்றாள்.

''உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை மாற்றும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன்.''

''வேண்டாம், வேண்டாம்; எந்த வேலையை ஜெயிலராகப் பார்த்து எனக்குக் கொடுத்தாலும் அதை நான் ஆட்சேபிக்காமல் செய்வேன்.''

''நீங்கள் இவ்விதம் அடம் பிடிப்பது நன்றாகவே இல்லை.''

''நீங்கள் இப்படி அடிக்கடி இங்கே வருவதும் நன்றாயில்லை.''

''நன்றாக இருக்க என்ன வேண்டும்? உங்களுக்குத் தனியாக இருக்க மிகவும் கஷ்டமாக இருக்குமே; யாருடனாவது நாலு வார்த்தை வாயாரப் பேசினால் கொஞ்சம் மன நிம்மதியாக இருக்குமே. அதனால்தான் நான் இவ்விடம் அடிக்கடி வருகி றேன். நீங்கள் என் சொற்படி கேட்டால், இந்தச் சிறையில் உங்களுக்கு வேண்டிய சகல சுக சௌகரியங்களையும் நான் ஏற்பாடு செய்வேன்.''

''நான் சுகம் விரும்புவதை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்?''

''இதில் என்ன கஷ்டமான விஷயம் இருக்கிறது? நீங்கள் உங்களுக்கு வேண்டிய காதலனை விட்டுவிட்டு இங்கே தனிமையில் கஷ்டப்படுவது எனக்கு நன்றாக—''

''ஓஹோ, என்மேல் அனுதாபம் காட்டுவதற்காகத் தான் இவ்விடம் வருகிறீர்களா? உங்கள் தயை எனக்கு வேண் டாம் என்றால்?''

'' நீ வேண்டாம் என்றாலும் நான் உனக்குச் சுகம் கொடுக்கத்தான் போகிறேன். என்னால் பொறுக்க முடியவில்லை. உன் மீதுள்ள——''

''இதைத் தடுக்கப் பல உபாயங்கள் இருக்கின்றன.''

''என்னவோ?''

''நான் ஜெயிலரிடம் புகார் சொல்லி நீ இங்கே வருவதைத் தடுப்பேன்; ஜாக்கிரதை!''

''இது வீண் கனவு!''

''கனவாகவே இருக்கட்டும். நீ இவ்விடத்தை விட்டு இப்போதே போகிருயா. இல்லாவிட்டால்——''

''நான் தற்சமயம் போய்விட்டு வருகிறேன்; எனக்கு அவசரம் ஒன்றும் இல்லை. இன்னும் ஆறுமாதகாலம் நீ இந்தச் சிறையிலேயே கிடக்க வேண்டும். அதற்குள்ளாகவா எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்காது?''

இப்படிப் பேசிக்கொண்டே பார்க்கவராம் அவ்விடம் விட்டு அகன்ருர். ஆனல் அவரைக் கண்டதும் ஆசாவிற்கு ஏற்பட்ட நெஞ்சுத்துடிப்பு இன்னும் அடங்கினபாடில்லை.

அவள் வெளியே பார்த்தபோது மாலை நேரம் முடிவடைந்து இருட்டின் சாயை அங்கும் இங்குமாகப் பரவிக்கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஆள் வருவதும் போவதும் கண்ணுக்கு மங்கலாகத் தெரியுமே ஒழிய இன்னுர் என்பது தெரியாது. சிறையில் வேலை பார்க்கும் சேவகரில் சிலர் அங்கும் இங்கும் நடந்தபோது நிழல் நடப்பதைப் போல் தோன்றியது. தூரத்தில் சிறைச்சாலையின் உயர்ந்த மதில் சுவர் இருட்டினுலேயே கட்டப்பட்டதுபோல் கறுப்பாகத் தெரிந்துகொண்டிருந்தது. அதையெல்லாம் தாண்டி ஒரு பெரிய ஆலமரம்——அது நெடுங்காலத்து மரமாகையால் மிகவும் பரந்து வளர்ந்திருந்தது. அது அந்த இருட்டை இன்னும் பயங்கரமாக்கிற்று. அதன் பொந்தில் வசிக்கும் ஆந்தைகள் தங்கள் சிறகுகளைப் படபடவென்று அடித்துக் கொண்டதால் அங்கே நிலவிய பயங்கர நிச்சப்தம் சற்று அதிகமாய்ப் பரிணமித்தது!

அன்றிரவு ஆசாவின் மனத்தில் ஒரே ஒரு கேள்வி; 'தனக்கு வர இருக்கும் சங்கடத்தை எப்படித் தவிர்ப்பது? தன் கற்பிற்குப் பங்கம் வந்தால் அதை எப்படித் தடுப்பது?' ஆசாவிற்குத் தூக்கம் எப்படிப் பிடிக்கும்?

ஜெயிலரிடம் புகார் செய்து ஏதாவது உதவி பெறலாமா என்ருல் அது சாத்தியமே இல்லை. ஜெயிலருக்கும் மேலதிகாரி, பார்க்கவராமுக்கு மிகவும் வேண்டியவர் என்பதைப் பார்க்கவராமே அவளிடம் முன்பு சொல்லியிருக்கிருர். இவ்விதம்

இல்லையேல் அவர் அடிக்கடி எப்படி இங்கே வர முடியும்? ஜெயிலருக்கும் மேலான அந்தப் பெரிய உத்தியோகஸ்தரிடமே போய் முறையிடலாம் என்றால் அதுவும் முடியாதே? அப்பாடா! அவ்வளவு பெரிய ஆபீசர் வீட்டு வாசலை அவள் எப்படி மிதிக்க முடியும்? ஜெயிலர் என்றால் சிறையில் உள்ள யதேச்சாதிகார சுல்தான் தான்! அவர் இஷ்டப்பட்டால் எலியைப் புலியாகவும் புலியை எலியாகவுங்கூட மாற்ற முடியும். சிறையின் சட்ட திட்டங்களையும் ஒழுங்கையும் மீறினதாகக் குற்றம் சாட்டிக் கைதிகளை அவர்கள் சவுக்கினாலும் தடியினாலும் உயிர்போக அடித்து நொறுக்குவதை ஆசா கண்டிருக்கிறாள். சிறையில் நடக்கும் எந்த விஷயத்திற்கும் பொறுப்பாளி ஜெயிலர் தானே.

இவ்வித எண்ணங்கள் திரும்பத் திரும்பத்தோன்றி ஆசாவின் மனத்தைக் கலக்கின. அவளுக்கு வர்ணிக்க முடியாதபடி ஒருவித அவநம்பிக்கையும் வெறுப்பும் தோன்றின. சங்கடம் வரப்போவது நிச்சயமாகத் தெரிந்தும் அதைத் தடுக்கச் சக்தி இல்லையேல் மனிதருக்கு எத்தனை சஞ்சலம் உண்டாகும்? நெஞ்சு பொறுக்க முடியாமல் ஆசா தரையின்மீது விழுந்து 'ஓ' வென்று அழ ஆரம்பித்தாள்.

அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு மார்க்கத்தைக் கண்டுபிடித்துவிட்டாள்! திடீரென்று ஒரு யோசனை அவள் மனத்தில் உதித்தது. தன் கற்பைக் காத்துக்கொள்ள ஒரு மார்க்கம் இருக்கிறது.

'எங்கேயாவது தேடிப் பிடித்து ஒரு கத்தியைச் சம்பாதித்து வைத்துக்கொண்டால்?'

கத்தியின் யோசனை மனத்தில் உண்டான அதே கணம் ஆசா திடுக்கிட்டாள்!

அவள் மனம் கேட்டது: 'பலாத்காரத்தில் இறங்குவதில்லை என்றும் அஹிம்சையே மேல் என்றும் நீ சத்தியம் செய்திருக்கிறாயே! அது இப்போது எங்கே?'

ஆனால் அவள் நெஞ்சின் ஆழத்தில் அழுந்திக் கிடந்த மற்றொரு மனம் மெள்ளச் சொல்லிற்று: 'கற்பு என்பது விலை மதிப்பற்ற பொருள்; அந்த அமூல்ய வஸ்துவிற்கே பங்கம் வர இருந்தால் அதைத் தடுக்கும் வழிகள் எவையாயினும் அவற்றை அனுஷ்டிக்க வேண்டியதே ஆகும். கற்பைக் காக்க எந்தக் கொடுமையான காரியமும் செய்யலாம். எது நல்ல வழி, எது தீங்கற்ற மார்க்கம் என்று யோசிக்கச் சாவகாசமும் இருப்ப

தில்லை. எதிராளி மிகவும் பலமுள்ளவன். அந்தத் துஷ்டனுக்கு மனம் எத்தனை கெட்ட வழிகளில் செல்லுகிறதோ, அத்தனை துணையையும் அவன் பெற்றிருக்கிறான். பலவானின் முன்பு பலமற்றவன் அஹிம்சை அனுஷ்டித்தால் அது கோழைத் தனம் ஆகும். நானோ பலவிதத்திலும் துர்ப்பல முள்ளவள்; ஆள் பலம் கிடையாது; உடல் பலமும் இல்லை; அரசாங்க உதவியோ கனவிலும் கிடைக்காது. எனவே......,அஹிம்சை யினால் எனக்கு என்ன உபயோகம் ஆகப்போகிறது? ஆகை யால் எப்படியாவது ஒரு கத்தியைச் சம்பாதித்து வைத்துக் கொண்டால்........'

முதல் மனச்சாட்சி மறுபடியும் பேசலாயிற்று; 'தேசத்தை அன்னியரிடமிருந்து மீட்கமட்டும் நீ ஏன் எப்போதும் சத்தியாக் கிரகத்தையே நம்புகிறாய்? பலாத்கார வழிகளில் அப்போது நம்பிக்கையே உண்டாவதில்லையே! உன் கற்பு மட்டும் விலை மதிப்பற்ற பொருளானால், தேச சேவை மட்டும் என்ன, குப்பையில் கிடக்கும் பொருளா? தன் கற்புக்குப் பங்கம் வரும் போது அஹிம்சை மார்க்கம் உபயோகம் இல்லை என்று உனக்கே தெரியும்போது, தேச சேவைக்கு மட்டும் அது எப்படி உபயோகம் உள்ளதாகும்? எதிரியின் மனத்தில் ஈவிரக்கம் கொஞ்சமாவது இருந்தால், அஹிம்சையினால் அதைக் கிண்டி விட்டு அதிகப்படுத்த முடியும். ஆனால் மனிதத் தன்மையே கிஞ்சித்தேனும் இல்லாத முரடனிடம் கோமளமான அஹிம்சைத் தத்துவம் செல்லாது.'

இதுவரையில் தான் அனுஷ்டித்து வந்த அஹிம்சைக் கொள்கையை விட்டுவிடுவதா? ஒருபோதும் முடியாது!

முடியாமல் போனால் என்ன? வெறும் கொள்கைக்காகக் கற்பை விட்டுவிடுவதா? சீ, இந்தக் கெட்ட யோசனை!

ஆசா மூர்ச்சை அடைந்தவள்போல் தரையில் அசைவற்றுக் கிடந்தாள். அவள் கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன.

ஆனால் அவளுக்கு ஆழ்ந்த தூக்கம் பிடிக்கவில்லை. வித விதமான கனவுகளைக் கண்டவண்ணம் இருந்தாள்:

சிறையிலிருந்து ஆசா கடைசியில் ஒரு நாள் விடுதலை அடைந்தாள். எதையோ தேடிக்கொண்டு அவள் வேகமாய் ஓட ஆரம்பித்தாள். ஆயிரக்கணக்கான நிழல்கள் அவளைப் பின் தொடர்ந்து வந்தன! அவள் திரும்பிப் பார்த்ததும் அந்த நிழல் கள் மறைந்துவிட்டன! ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒன்று

சேர்ந்து தேசீய கீதம் பாடுவது அவளுக்குக் கேட்டது. யாரோ ஒருவன் ஓடி வந்து மறுபடியும் அவளைக் கைது செய்து நியாய ஸ்தலத்திற்குக் கொண்டு போனான். ஆனால் சிறைக்கதவுகளின் கம்பிகளைச் சிறு கொடிகளை அறுத்தெறிவதைப் போல் சின்ன பின்னம் ஆக்கிவிட்டு மறுபடியும் வெளியே ஓடலானாள். இப்போது அவள் ஓர் அகன்ற ராஜவீதியின் வழியாகப் போனாள். வேகமாய் நடந்தபோது அவளுடைய காலை ஏதோ தடுக்கிற்று. குனிந்து நோக்கினாள் ஆசா; என்ன ஆச்சரியம்! அங்கே பார்க்கவராம் உணர்ச்சி இழந்து கட்டையாகக் கிடக்கிறான்! அவள் வேகமாக ஓட ஆரம்பித்தாள். கடைசியில் தளவலா கிராமத்தில் கட்டப்பட்ட பெரிய அணைக்கட்டிற்கு அவள் போய்ச் சேர்ந்தாள். அவள் அங்கேயே சற்று உட்கார்ந்தாள். எங்கிருந்தோ கொதிக்கும் ஜலம் அவள் மேல் ஊற்ற ஆரம்பித்தது. அவள் ஸ்மரணை இழந்து கீழே சாய்ந்தாள். ஸ்மரணை திரும்பியதும் அவள், சிவப்பாய், மெலிந்து, உயரமான ஒரு யுவனின் கைகளில் இருப்பதை உணர்ந்தாள். அவள் அந்த யுவனைக் கேட்டாள்: 'நீங்களும் எங்களுடன் சத்தியாக்கிரகம் செய்யவந்து விட்டீர்களா?' என்று. அவன் தலையை அசைத்தான். ஆனால் அதன் பொருள் யாதோ........

அவள் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்து பார்த்தாள். அருணோதயத்தின் மங்கிய வெளிச்சம் சிறைச்சாலைக்குள் பிரவேசித்துக்கொண் டிருந்ததை அறிந்தாள்.

அன்று மத்தியான்னம் வார்டுக் காவல் கிழவி அங்கே வந்தபோது ஆசா அவளிடம், "உங்களைக் கண்டு பேசுவதில் எனக்கு ஆனந்தம் உண்டாகிறது. சூரியனின் கொதிக்கும் கிரணங்களினால் சாய்ந்து கிடக்கும் முடிவற்ற மணல் வெளியில் நடக்கும் பிரயாணிக்கு அடிவானத்தில் தெரியும் பாலைவன நீருற்றைப் போல், பயங்கரமான இந்தச் சிறையிலிருக்கும் எனக்கு நீங்கள் நம்பிக்கையையும் குளிர்ச்சியையும் தருகிறீர்கள். எனக்கு ஏதாவது சங்கடம் நேர்ந்தால் நீங்கள் எனக்குச் சற்றுக் கை கொடுப்பீர்கள் என்று எண்ணுகிறேன்" என்றாள்.

மிகவும் விநய பாவத்துடன் அந்தக் கிழவி பேசலுற்றாள்:

"அம்மா, நான் ஒருத்தி மட்டுந்தான் இங்கே வேலைக்காரி. நான் யாருக்கு எப்படி உதவி செய்ய முடியும்? இந்தச் சிறையில் வேலை செய்வதிலேயே என் வாழ்நாட்களுள் பாதிக்கு மேல் கழிந்துவிட்டன. இங்கே போக்கிரியிலும் பொறுக்கி எடுக்கப்

பட்ட 'பத்மாஷ்' போக்கிரிகள் கைதியாகி வருகிறார்கள். சில சமயங்களில் நிரபராதியான சிலரும் அநியாயமாகத் தண்டிக்கப் பட்டு இங்கே வந்து சேருகிறார்கள். சகலத்தையும் வெறுத்த வயோதிகர்கள், ஏமாற்றமடைந்த யுவர்கள், எழுதப் படிக்கத் தெரியாத குடியானவர்கள், நன்றாகப் படித்துப் பட்டம் பெற்ற பொய்யர்களும் போக்கிரிகளும், நாகரிகத் திருடர்கள், இன்னும் பலவிதமான ஜனங்களும் இங்கே வருகிறார்கள். வந்தபிறகு விடுதலை அடைந்தும் போகிறார்கள். இந்த உலகத்தில் தோன்றும் இந்தக் களேபரங்களை யெல்லாம் பார்க்கப் பார்க்க எனக்கு என்னவெல்லாமோ தோன்றுகிறது: சுகமும் துக்கமும் மனிதர்களுக்கு ஏன் உண்டாகின்றன? சுகம் அதிகமா, துக்கம் அதிகமா? அதற்கு ஒன்றும் எல்லையே இல்லையா? எவன் எவன் எப்படிப்பட்ட சுக துக்கங்களை அனுபவிக்க வேண்டும் என்று பகவானால் தலையில் எழுதப்பட் டிருக்கிறதோ அதை எள்ளளவும் மாற்றுவது முடியாத காரியம். ஒருவனுடைய சுகதுக்கத்தை மற்றொருவன் குறைக்கவோ அதிகப்படுத்தவோ பிரயத்தனப் படுவது முட்டாள்தனமான செய்கையே ஆகும். ஒருவரும் பிறருடைய சுக துக்கங்களை மாற்றமுடியாது. நானோ தனியாக வேலை பார்க்கும் ஒரு கிழவி. உங்களுக்கு நான் என்ன உதவி செய்யமுடியும் அம்மா? உங்களுக்கு நேரிடப் போகும் சங்கடந்தான் யாது?''

''நீங்கள்தாமே எனக்கு அந்தச் சங்கடத்தின் அறிகுறியாக ஏதேதோ சொன்னீர்கள்? நேற்றுப் பார்க்கவராம் மறுபடியும் இங்கே வந்திருந்தானே. நீங்கள் பார்க்கவில்லையா?''

''ஓஹோ, அதைத்தான் சங்கடம் என்கிறீர்களா! ஆமாம்; அது ஒரு பெரிய கஷ்டந்தான். யோசிக்காமலேயே அதை ஒரு சர்வ சாதாரணமான சம்பவம் என்று சொல்லுவது தப்புத்தான். அப்படிச் சொல்லுவதில் அர்த்தமே இல்லை. ஆனால் உங்களைப் பார்த்தால் மகாலக்ஷ்மி மாதிரி இருக்கிறது. உங்களுக்கு அந்தக் கஷ்டம் ஒருபோதும் நேராது. ஏதோ ஒரு வேளை நேரிட்டாலும் நேர்ந்துவிடலாம்போல் தோன்றுகிறதே ஒழிய, ஒரு போதும் உங்களுக்குக் களங்கம் ஏற்படாது என்பதை உங்கள் முகத்தைப் பார்த்தே சொல்லிவிடலாம். எல்லாவற்றிற்கும் ஆண்டவன் இருக்கிறான், அம்மா! அவன் என்ன தூங்கவா தூங்குகிறான்?''

அந்தக் கிழவியின் வாயால், 'ஆண்டவன்' என்ற வார்த்தை வந்ததுமே ஆசாவின் பார்வை அந்தக் கிழவியின் கழுத்தி

லிருந்த துளசி மாலையின்மீது சென்றது. சிறைக்கு முதல் முதலாக அவள் வந்தபோது ஆசாவின் கண்களில் பட்டது அந்தத் துளசி மாலைதான். சாந்தச் சேவையின் அடையாள மான அந்தத் துளப மாலையைக் கழுத்தில் அணிந்த அந்தப் புனிதமான கிழவி, ஏன் சிறைச்சாலையில் வேலைக்கு அமர வேண்டும் என்று அவள் அப்பொழுது முதலே யோசித்துக் கொண்டிருந்தாள்.

ஆசாவிற்குக் கடவுளின்மேல் பாரத்தைப் போடுவதில் நம்பிக்கையே கிடையாது. என்றாலும் வயோதிகமான அந்தக் கிழவியின் மனத்தைப் புண்படுத்த அவள் விரும்பவில்லை. அவள்கூட இன்றுவரையில் அஹிம்ஸையில் ஆழ்ந்த நம்பிக்கை தானே கொண்டிருந்தாள்? சுத்தப் பைத்தியக்காரத்தனம். அவள் மேலே பேசினாள்:

''ஆண்டவன் தூங்கவில்லை; ஆனாலும் மனிதர்களும் விழித்துக்கொண்டுதானே இருக்கவேண்டும்? இல்லையா?''

''ஆமாம்; அதுவும் வாஸ்தவந்தான்.''

''அப்படியானால் தயவு செய்து எனக்கு ஓர் உதவி செய் யுங்கள்; நீங்கள் இந்த உதவியைச் செய்யாவிடில் எனக்குத் தூக்கமே பிடிக்காது.''

''என்ன உதவி செய்யவேண்டும்?''

''எனக்கு எங்கிருந்தாவது ஒரு கத்தி சம்பாதித்துக் கொடுங்களேன்.''

அவள் வாயிலிருந்து கத்தி என்ற பதம் வந்ததுமே கிழவி திடுக்கிட்டாள்.

அவள் ஆசாவைச் சற்றுக் கூர்ந்து கவனித்துவிட்டுப் பிறகு அக்கம் பக்கம் ஒருவரும் இல்லையா என்று பார்ப்பதைப்போல் அங்குமிங்கும் திரும்பினாள்.

எதிரில் கைதிகள் கருப்பஞ்சாற்றைப் பிழிந்து கொண் டிருப்பதைக் கண்காணிக்கும் பொருட்டு ஜெயிலர் அங்கே நிற்பதை அவள் கண்டாள்.

இதை அவள் கடைக்கண்ணின் ஜாடையால் ஆசாவுக்குத் தெரிவித்ததும் அவ்விடத்தை விட்டுச் சட்டென்று அகன்றாள்.

# அத்தியாயம் 13

மாலையில் சுமார் ஆறு மணி அடிக்கையில் வழக்கம்போல் தாதாஸாஹிபின் வீட்டு வாசலில் அவருடைய கார் வந்து நின்றது.

டிரைவர் வண்டியை விட்டுக் கீழே இறங்கினதும் வண்டியின் பின் கதவுகளில் ஒன்றைத் திறந்தான். அவருடைய நித்திய கர்மானுஷ்டானங்களில் ஒன்றையேனும் பங்கப்படுத்தக் கூடாது என்ற கண்டிப்பை உணர்ந்த வாயிற் காப்போன், உடனே வண்டியின் கதவருகில் வந்து நின்று தாதாஸாஹிபுக்குச் சலாம் செய்தான். வண்டியிலிருந்து கீழே இறங்கும் சமயத்தில் வழக்கம்போல் தாதாஸாஹிப் ஒப்பிக்கவேண்டியதைத் தவறாமல் ஒப்பித்தார்:

''இந்தா, இதைக் கொண்டுபோய் என் மேஜை மீது வை.''

தினம் இந்த வார்த்தையை எஜமான் தனக்குத் திரும்பத் திரும்பச் சொல்லுவார் என்பது தெரிந்தும், அந்த வாயிற் காப்போன், ''சரி, அப்படியே வைக்கிறேன் ஸார்'' என்று அரைகுறையாகச் சொல்லவேண்டும் என்பது தாதாஸாஹிபின் விருப்பம். இதை அவன் முன்கூட்டியே உணர்ந்திருந்தான். எஜமானருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக அவன் இன்றும், ''சரி, அப்படியே வைக்கிறேன் ஸார்'' என்றான்.

தினம் தவறாது செய்வதைப் போலவே இன்றும் அந்தச் சேவகன் வண்டிக்குள் இருந்த பை, காகிதக் கட்டுகள், 'ஹாட்', கைத்தடி முதலியவைகளை எடுத்துக்கொண்டு மாடிமேல் சென்றான். வழக்கப்படி வைக்கவேண்டிய இடங்களில் அவைகளை வைத்துவிட்டு நேரே திண்ணைக்கு அடுத்தாற்போல் இருந்த அறையில் எப்போதும் நுழைவதைப்போல் நுழைந்தான். அங்கே ஒரு சாய்வு நாற்காலியில் தாதாஸாஹிப் உட்கார்ந்திருந்தார். அவர் காலில் அணிந்திருந்த பூட்ஸின் கயிற்றை அவிழ்த்து அதைக் கழற்றலானான் சேவகன்.

டீ குடித்துக்கொண்டிருந்தபோது தாதாஸாஹிப் தம்

மனைவியிடம், ''விலாசன் எங்கே இருக்கிறான்?'' என்றார்.

கொஞ்சம் வருத்தம் கலந்த குரலில் சுதேஷ்ணா, ''மேலே இருக்கிறான் உங்கள் அறையில்'' என்றாள்.

''வெளியே இன்றைக்கும் போகவில்லையா?''

''இப்பொழுதெல்லாம் அவன் வெளியே போவதுதான் கிடையாதே!''

''விளையாடவும் போவதில்லை, ஊர் சுற்றித் திரிவானே, அதற்கும் போகக் காணோமே, ஏன்?''

அவருடைய குரலிலும் கேள்வியிலும் சந்தேகமும் வருத்தமும் கலந்திருந்தன.

உண்மையில் லோனாவலாவின் உத்தியோகத்தை விட்டு விட்டு வந்ததிலிருந்து விலாசனுடைய நடத்தை முழுவதும் மாறியிருந்ததைக் கண்டு சுதேஷ்ணாபாய்க்கு ஒரு பக்கம் ஆச்சரியமும் மறுபக்கம் வருத்தமுமாக இருந்தன. ஆனால் தான் ஆச்சரியப்பட்டதை அவள் தன் புருஷனுக்குக் காட்டிக் கொள்ள விரும்பவேயில்லை. எனவே அவள், ''முன்பு அவன் வெறுமனே விளையாட்டிலேயே பொழுதைப் போக்குவதையும், ஊர் சுற்றுவதையுமே வேலையாகக் கொண்டிருந்தானே, அப்போதும் அவன் செய்கைகள் உங்களுக்குப் பிடிக்கவில்லை. இப்போது நல்ல பிள்ளையாக வீட்டிலேயே தங்கி இருக்கிறான் என்றால் அதுவுமா பிடிக்கவில்லை உங்களுக்கு?'' என்றாள்.

பேச்சின் குரலைச் சற்றுத் தாழ்த்தவேண்டிய நேரம் வந்து விட்டதை உணர்ந்த தாதாஸாஹிப் மிகவும் பணிவுடன், ''இல்லை, வெறுமனே விளையாட்டாகக் கேட்டேன். சும்மா வீட்டிலேயே இருந்து என்னதான் பண்ணுகிறான்? பொழுது எப்படிப் போகும் அவனுக்கு?'' என்றார்.

''எனக்கு என்ன தெரியும்? நான் அவனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் அவன் எப்போதும் புஸ்தகமும் கையுமாகத்தான் இருக்கிறான். எப்போது அவன் அறைக்குள் நுழைந்தாலும் அவன் கையில் புஸ்தகம் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.''

''தினம் கிர்காமுக்குப் போய் எல்லாப் பத்திரிகைகளிலும் ஒவ்வொரு பிரதி வாங்கிவரும்படியாக டிரைவரிடம் சொல்லி யிருக்கிறானாம்.''

''லோனாவலாவிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து அவன் பழைய விலாசனே அன்று. முற்றும் மாறியிருக்கிறான். அங்கே

என்ன விசேஷம் நடந்ததோ தெரியவில்லை.''

தாதாஸாஹிப் தம் இரண்டு கைகளாலும் சட்டையை வயிற்றின்மேல் இழுத்து விட்டுக்கொண்டார். ஒரு கனைப்புக் கனைத்தார். தாம் பேசப்போகும் விஷயம் தம் மனைவிக்கு எப்படிப் படுமோ என்னவோ என்று ஐயம் கொண்டவராய்த் தயங்கினார். பிறகு வந்தது வரட்டும் என்று முடிவு கட்டிய பாவனையில் உதட்டைச் சற்று நாக்கினால் தடவிய பிறகு, ''ஊம். ஆ......ம்'' என்று குரலைச் சுருதி சேர்த்து மேலே பேசலானார்:

''உன்னிடத்தில் பல நாட்களாக ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். அதை இப்போது......?''

''சொல்லுங்களேன், என்ன அது?''

தாதாஸாஹிப் மறுபடியும் கனைத்தார். வலது கையினால் கழுத்தைத் தடவிக்கொண்டார். இடது கையினால் வயிற்றின் மீது தாளம் போட்டுக்கொண்டார். கடைக் கண்ணால் தம் மனைவியின் மன நிலைமையை நாடிப் பரீக்ஷை செய்தார். பிறகு கொஞ்சம் உரத்த குரலில், ''லோனாவலாவின் வேலையை விட்டு விட்டு வந்ததும் உன்னிடம் ஏதோ சொன்னானே, என்ன? ஞாபகம் இருக்கிறதா?'' என்றார்.

''ஆம்; அந்த வேலையை அவனால் பார்க்க முடியவில்லை என்பதால் வந்துவிட்டதாகச் சொன்னான்.''

''அப்படிச் சொன்னதில் என்ன அர்த்தம் இருக்கலாம், உனக்குத் தெரிகிறதா?''

''அர்த்தம் என்ன அனர்த்தம்? வெயிலிலும் மழையிலும் கஷ்டப்பட முடியாது என்றுதான் அர்த்தம். அவன் முகங்கூடக் கறுத்துச் சுருங்கி வாடி இருந்ததே அப்போது?''

''ஆம்; நான்கூட இன்று வரையில் அப்படித்தான் எண்ணி யிருந்தேன். ஆனால் இன்று எங்கள் ஆபீஸ் இடை நேரத்தில் சோராப்ஜீ தின்ஷா கம்பெனியாரின் டைரெக்டர்களுள் ஒருவர் என்னைச் சந்தித்தார். அவர் விலாசன் வருகைக்கு வேறு ஒரு புதிய காரணம் சொன்னார்.''

''ஆமாம்; அவன்மேல் ஏதாவது அபாண்டமாகச் சொல்லி இருப்பான். கட்டுக்கதைகள்தாமே?''

சரி; இனி எதிர்க் கட்சிக்குச் சற்றுக் கோபம் வந்து விட்ட தாகையால் யுத்தம் ஆரம்பிக்கலாம்போல் தோன்றியது. ஆகை யால் உடனடியாகவே அவர், ''சே, சே, அபாண்டமாகச்

சொன்னால் நான் நம்பிவிடுவேனா?'' என்றார்.

சற்றுச் சாந்தமடைந்த குரலில் சுதேஷ்ணாபாய், ''என்ன சொன்னார் அவர்?'' என்றாள்.

''அவர் சொன்னதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் விலாசன் அவன் மேலதிகாரிகளிடம் அடக்கமே இல்லாமல் கண்டபடி பேசிவிட்டு அவ்விடம் விட்டு வந்துவிட்டானாம்.''

''வீணாக ஒருவரைக் கண்டபடி பேசுவதற்கு அவனுக்கு என்ன பைத்தியமா?''

''அணைக்கட்டுக் கட்டுவதற்கு இடையூறாக அங்குள்ள குடி படைகள் சத்தியாக்கிரகம் செய்தார்கள் என்று நீகூடப் பத்திரிகையில் பார்க்கவில்லையா? சத்தியாக்கிரகிகளை அடக்குவதற்காகக் கம்பெனியார்கள் கண்டபடி அடக்குமுறைகளைக் கையாண்டனர். இது விஷயமாக விலாசன் அதிகாரிகளுடன் தகராறு செய்ய ஆரம்பித்தானாம். இந்த அடக்கு முறைகளை அவன் வெறுத்தான். அதிகாரிகள் சாதாரணமாக அவனைக் கூப்பிட்டு, 'வேலையில் மனத்தைச் செலுத்தவேண்டுமே தவிரச் சத்தியாக்கிரகம் போன்ற விஷயங்களில் தலையிடக் கூடாது' என்று உபதேசம் செய்தார்களாம். ஆனால் விலாசனுக்குக் கோபம் தாங்க முடியாமல் படபடப்புடன் ஒரு பெரிய பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டானாம். 'உங்கள் வேலையை இந்த க்ஷணத்திலேயே விட்டு விட்டேன்' என்றதுடன் நிற்காமல் அந்த முதலாளிகளையெல்லாம் கருணையற்ற கபடர்கள் என்றும், அநியாய வழிகளில் சம்பாதித்த கொள்ளைக்காரர்கள் என்றும், நாகரிகத் திருடர்கள் என்றும், ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள் என்றும், அவர்களுடைய திமிர் அடங்கி ஒழிந்து விடவேண்டும் என்றும் பற்பலவாறு பேசிக் கொட்டினானாம். இத்தனை பேசியும் மறுபடியும் முதலாளிகள் இவனைச் சற்று நிதானமாகப் பேசும்படி சொன்னார்களாம். ஒன்றையும் லட்சியம் செய்யாமல் தன் சாமான்களை எடுத்து மோட்டாரில் வைத்துக் கொண்டு அவன் அவ்விடத்தை விட்டுவிட்டு வந்தே விட்டானாம். எனக்கும் இதுவரையில் இந்த விஷயங்கள் எல்லாம் தெரியவே தெரியாது. தற்செயலாகக் கம்பெனி டைரெக்டர்களுள் ஒருவரைச் சந்தித்ததால்தான் அவர் சொன்னார். விலாசனிடம் நீ ஒன்றும் இதைப்பற்றிச் சொல்லாதே.''

இதற்குள் தாதாஸாஹிபுக்கு நித்திய கர்மங்களின் ஞாபகம் வரவே அவர் தம் சட்டைப் பையிலிருந்த கடிகாரத்தை எடுத்து

மணி பார்த்தார். வீட்டுப் பேச்சுப் பேசும் நேரம் முடிய இன்னும் இருபத்தேழு விநாடிகள்தாம் பாக்கியிருந்தன. எனவே அடுத்த படியாக அவர் மாடியிலுள்ள தம் அறைக்குப் போகவேண்டும். எழுந்து கொண்டே அவர், ''இதனால் பிரமாதம் ஒன்றும் நடந்து விடவில்லை. இவையெல்லாம் சர்வ சாதாரணந்தான். லோனாவலாவின் டைரெக்டர் என்னைச் சந்தித்ததாக நீ விலாசனிடம் ஒன்றுமே வாயைத் திறக்காதே! என்ன?'' என்றார்.

''நன்றாயிருக்கிறது. நான் ஏன் போய்ச் சொல்லுகிறேன்?'' இப்படிச் சுதேஷ்ணா சொல்லும் முன்பே தாதாஸாஹிப் தம் அறையில் போய் நுழைந்துவிட்டார்.

சுதேஷ்ணாவும் வழக்கப்படி தோட்டத்திற்கு முன்புள்ள சுவரில் சாய்ந்து யோசனை செய்ய ஆரம்பித்து விட்டாள். அந்தக் காட்சி அவளுக்கு உயிருக்குயிரான ஒரு தோழி.

அவள், அந்தத் தோட்டத்தினிடம் கேட்டாள்: ''நான் என் புத்திரன் விஷயமாக வீண் கவலைப்படுவது எதற்காக? இது பைத்தியக்காரத்தனந்தானே?''

அந்தக் கேள்விக்குப் பதில் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று சொல்லுவது கடினமாகப் பட்டதனாலோ என்னவோ அந்தத் தோட்டம் மௌனம் சாதித்தது.

என்னவோ எதிரில் நின்றுகொண் டிருந்த நாரத்தை மரங்களையும் வெளியே தெருவின் ஓரங்களில் மிக உயரமாக வளர்ந்திருந்த மரமல்லிகை விருக்ஷங்களையும் சூன்ய திருஷ்டியுடன் பார்த்துக்கொண்டே சுதேஷ்ணா வெகு நேரம் வரையில் அவ்விடத்திலேயே நின்றிருந்தாள்.

யாரோ நடக்கும் காலடிச் சத்தம் கேட்கவே அவள் திரும்பிப் பார்த்தாள்.

விலாசன் தன் முன்னால் நிற்பதைக் கண்ட சுதேஷ்ணா பாயிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று.

''வெளியிலா புறப்பட்டாய்?''

''சற்றுச் சமுத்திரக் கரைக்குப் போய்விட்டு வருகிறேன். இன்று பகல் முழுவதும் அகோரமான வெயில் அடித்ததோ இல்லையோ? சற்றுக் காற்றாடப் போய்விட்டுப் பிறகு ஸ்நானம் செய்தால் நல்லது.''

''ஆனால் இப்போது இருட்டும் சமயம் ஆகிவிட்டதே. இந்த நேரத்தில் யாராவது சமுத்திரத்திற்குப் போவார்களா?''

''இந்த நேரந்தான் நல்ல நேரம். யாரும் நம்மைக் கண்டு

பேச வரமுடியாது. யாரையும் பார்த்துப் பேச எனக்கு இப்போது வரவரப் பிடிக்கவே இல்லை, அம்மா!''

விலாசனின் முகத்தில் உண்மையிலேயே வெறுப்பின் சின்னங்கள் காணப்பட்டன. அவன் வெறுப்பைக் கண்டு சுதேஷ்ணுபாயிக்கு மனத்தில் சற்று இரக்கம் உண்டாயிற்று. அதற்குக் காரணம் என்ன என்பதைக் கேட்டறியலாம் என்றாலும் விலாசன் தன் இருதயத்தைத் திறந்து எல்லா விஷயத்தையும் பகிரங்கமாகச் சொல்லிவிட மாட்டான் என்பதையும் அவள் அறிவாள். அவள் விலாசனைப் பார்த்து, ''சீக்கிரமே வந்துவிடுவாய் அல்லவா?'' என்றாள்.

''ஆம்; முக்கால்வாசி சீக்கிரம் திரும்பிவிடுவேன். ஆனால் என்னை நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம். எனக்குச் சரியாகவே பசி எடுப்பதில்லை.''

''ஏண்டா வரவர இப்படிப் போய்விட்டாய்! உன் பசி எல்லாம் எங்கே பறந்து போய்விட்டது?'' என்று கேட்க வாய் எடுத்தாள் சுதேஷ்ணு. ஆனால் ஏனோ தெரியவில்லை, அவள் வாய் திறந்து பேச முடியாதபடி வார்த்தைகள் தொண்டையிலேயே நின்றுவிட்டன.

டிரைவர் விலாசனின் மோட்டாரைக் கொண்டு வந்து 'போர்ச்சி'ல் நிறுத்தினான். விலாசன் அவனை நோக்கி, ''பாபூ, நானே ஓட்டிக்கொண்டு போகிறேன்; நீ வர வேண்டாம்'' என்றான். பிறகு வண்டியை ஓட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டான். வெளியே இருக்கும் 'கேட்' பக்கத்தில் போகும் போது சுதேஷ்ணு அவனை நோக்கி, ''விலாஸ் ——— '' என்று கூப்பிட்டாள்.

விலாசன் சற்றுத் தயங்கி நின்று பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டே, ''என்ன அம்மா? ஏன் கூப்பிட்டாய்?'' என்றான்.

''சுநேத்ராவைப் போய்ப் பார்க்கவில்லையா?''

''ஒரு வாரத்திற்கு முன்பு ஒருதரம் போய்ப் பார்த்து விட்டு வந்தேன். அப்புறம் போகவில்லை, அம்மா.''

''நான் நினைக்கிறேன், நீ அடிக்கடி அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வருவது நல்லது என்று; உன்னைப் போன்றவர் போய் எதையாவது பேசிக்கொண்டிருந்தாலே அவளுக்குச் சற்று மன நிம்மதி ஏற்படும்; உடம்பும் சற்றுக் குணம் அடையும் அல்லவா?''

''அப்படி என்ன ரொம்ப அதிகமாய் இருக்கிறதா அவளுக்கு வியாதி? அவளுடைய டாக்டரிடம் நான் கேட்டபோது அவளுக்கு உடம்பில் ஒரு கோளாறும் இல்லை என்றும், மனக்கோளாறு தான் என்றும் சொன்னாரே! அவளுக்கு என்ன மன வருத்தமோ?''

''உடம்புக்கு ஒன்றும் இல்லையாவது? சாப்பாடு இல்லை, தண்ணீர் இல்லை; படுக்கையை விட்டு அசைவதும் இல்லை! வேறு என்ன வேண்டும்?''

''வெறுமனே படுத்துக்கொண் டிருந்தாலே வியாதிதான். எதையாவது நினைத்துக்கொண்டு தன்னைத் தானே நொந்து கொண்டால் அதற்கு மருந்துதான் என்ன கொடுக்க முடியும்?''

இவ்விதம் சொல்லிவிட்டு விலாசன் மறுபடியும் வண்டியில் ஏறிக்கொண்டு அதை ஓட்ட ஆரம்பித்தான்.

வண்டியும் 'பர்ர்ர்ர்........' என்ற தொனியுடன் அவ் விடத்தை விட்டு அகன்றது. மோட்டாரின் பின்னால் உள்ள புகைக் குழாயின் வழியாக வந்த பெட்ரோலின் எண்ணெய்ப் புகை வெகு நேரம் வரையில் காற்றில் கலந்து பரிணமித்தது.

சுதேஷ்ணாபாயிக்கு, விலாசன் பிறருடைய மனத்தை அறியும் சக்தியைப் பெற்றிருக்கவில்லையே என்று தோன்றியது.

ஆனால் விலாசனின் மனத்தை அவள் அறிந்து கொள்ளும் சக்தியைச் சுதேஷ்ணா பெற்றிருந்தால் அவ்விதம் சொல்லி யிருக்க மாட்டாள்.

ஏனெனில் வண்டியை மிகவும் வேகமாய் ஓட்டிக்கொண்டே விலாசன் மனத்தில் பின்வருமாறு எண்ணிக் கொண்டே சென்றான்:

'என் பேச்சினால் அம்மா ஏமாற்றம் அடைந்தாளோ என்னவோ யாருக்குத் தெரியும்? திரும்பத் திரும்பச் சுநேத்ராவின் விஷயமாய்ப் பேசிக்கொண் டிருந்தால் எனக்குப் பிடிக்கவே இல்லை. அவள் விஷயமாக ஏதாவது பேச்சு வருவதால் தானே நான் ஏதாவது சுடச்சுடப் பதில் கொடுக்கவேண்டி நேரு கிறது? சுநேத்ராவின் விஷயமோ எனக்கு ஒரு பெரிய பிரச்னை யாகத்தான் தோன்றுகிறது. அவளுடன் எப்படிப் பழகுவது என்றே எனக்குத் தெரியவில்லை. அவள் என்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாள் என்பதை நான் அறிவேன். ஆனால் எனக்கு அவள் காதல் பிடிக்கவே இல்லையே! அவள்மீது எனக்குப் பெயரளவில்கூடக் காதல் ஏற்படவில்லையே. இதற்கு நான் என்ன செய்யட்டும்? அவளுக்கு வியாதி ஒன்றும் இல்லை.

அவளுக்கு வியாதி சொஸ்தமாக என்ன மருந்து என்பதையும் நான் அறிவேன். நான்தான் அவளுக்கு மருந்து. ஆனால் ஏனோ அவளிடம் எனக்குச் சற்றும் காதல் உணர்ச்சியே வருவதில்லை. அவளுடைய ஸ்பரிசத்தாலும் என் மனத்தில் ஓர் ஆவலும் எழும்புவதில்லையே! இந்தச் சங்கடத்திற்கு நானா பொறுப்பாளி? அவள் தன்னையே நொந்துகொள்ளுவதைக் கண்டால் அவள்மேல் எனக்கு இரக்கந்தான் உண்டாகிறது. எத்தனைதான் நான் அவளைக் காதலிக்கவில்லை என்பதை வெளியே காட்டிக்கொண்டாலும் அவள் திரும்பத் திரும்ப என்னையே நினைந்து உருகுவதில் பயன் என்ன இருக்கிறது? காதல்தான் எத்தனை சிக்கலான விஷயம்? ஒரு தலைப்பட்ட காதல் அதிகமாகக் காணப்படுவது எதனால்? எட்டாத பழந்தான் இனிக்கும் என்பார்களே! எளிதில் கிடைக்கக் கூடியதன்மேல் ஏன் காதல் உண்டாவதில்லை? எனக்குக் கிடைக்காத பொருளின் மேல் நான் இச்சை வைத்து....? ஆசாவோ சரத்சந்திரனைக் காதலிக்கிறாள். நான் அவளை அடையமுடியாது என்று நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. பின் ஏன் மேலும் மேலும் ஆசை உண்டாகிறது? நான் மட்டும் ஆசாவைக் காதலித்து ஏமாற்றம் அடையலாமா? சுநேத்ரா என்னைக் காதலிப்பதில் எனக்கு வெறுப்பு ஏற்பட்டால், ஆசாவுக்கும் என்மீது வெறுப்புத்தானே ஏற்படும்? சீ, என்ன சிக்கலான விஷயமடா இது? பின் ஆசா...?' ஆசாவை நான் எப்போது மறுபடியும் சந்திப்பேன்? ஆசா? எட்டாத பழமே!...'

ஆசாவின் குளிர்ந்த முகம் அவன் கண்களின் முன்பு தோன்றியது.

'அவளுடைய ஒவ்வொரு நுணுக்கமான அம்சமும் விலாசன் ஞாபகத்திற்கு வந்தன. அவளுடைய பாதி மூடின கண் இமைகள்; ஆ, எத்தனை குளிர்ச்சியான பார்வை! ஓவியத்தில் தீட்டியவை போன்ற அவளுடைய சிவப்பான உதடுகள்! கீழ் உதடு சற்றுத் தடித்தும் சுருங்கியும் இருந்தது. இதுவரையில் கணக்கற்ற வேளைகளில் அவன் அவளைப் பற்றியே எண்ணியிருக்கிறான். ஆனால் ஒவ்வொரு தரமும் அவன் தன் மனத்தில் உள்ள காதலை வெளியே காட்டிக்கொள்ளாமல் அடக்க முயன்று வந்தான். சரத்சந்திரனும் அவளும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். சரத்சந்திரன் பலாத்காரப் புரட்சி மனப்பான்மை கொண்டவன் என்பதை ஆசா உணர்ந்தால் ஒருவேளை அவள் தன்

காதலைத் திரஸ்கரித்து ஜன்மம் முழுதும் கன்னியாகவே இருந்து விடுவாள். எனவே விலாசன் சரத்சந்திரன் விஷயமாக ஆசா விடம் ஒன்றுமே சொல்லக்கூடாது. இவர்களுடைய காதலைப் பங்கப்படுத்துவது மகாபாவம்!

தன் காதலை ஆசாவிடம் வெளிக்காட்டிக்கொள்ளுவது கேவலமாகும். சகோதர பாவனையில் அவள் விலாசனுடன் பழகுகிறாள். 'காதல்' என்ற வார்த்தையைக் கேட்டால் அவளுக்கு இவன்மேல் வேண்டா வெறுப்பு வந்துவிடுமோ? சே, அப்படி ஆகுமா? இருந்தாலும் அது தப்பான வழிதான்.

உண்மையில் காதல் உணர்ச்சி விலாசனுக்கு ஆசாவைக் கண்டது முதல்தான் ஏற்பட்டது என்று சொல்லலாம். இது வரையில் அவனுக்கு ஆணுக்குரிய காமவேகம் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் காதல் என்பதை அவன் இப்போதுதான் அனுபவத்தில் கண்டறிந்தான். தான் ஆசா வைக் காதலிப்பது அவளுக்குத் தெரியவேண்டுமா? தனக்குத் தானே அதை வைத்துக் கொள்ளலாமா? உண்மையில் ஆசாவைப் பற்றிய எண்ணமே ஒருவித ஆனந்தத்தைக் கொடுக் கிறது. அவளுடன் பேசிப் பழகுவதே மனச் சந்துஷ்டியை அளிக்கிறது. அது போதாதா? ஆனால்? மனம் இத்துடன் நிற்க வில்லையே! தன் காதலை உரியவரிடத்தில் வெளியிடா விட்டால் தூக்கமே வராதா? ஐயோ! இது என்ன? மனக் கலக்கம் உண்டா கிறதே. தன்னையும் ஆசா காதலித்தால்? ஆஹா! உலகத்தில் வேறு ஒன்றும் வேண்டாம். ஒரு தலைப்பட்ட காதல் மிகக் கொடியது என்று அவன் புஸ்தகங்களில் படித்திருக்கிறான். ஆனால் நடை முறையில் ஆசாவின் காதலைச் சம்பாதிப்பதற்காக அவன் உயிரையும் விட்டுவிடச் சித்தமாக இருந்தான். அவளு டைய நன்மதிப்பைப் பெற வேண்டும். விலாசனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. காதல் என்பது உண்மையில் அடக்க முடியாத ஒரு பிரவாகந்தான். ஆனால் தன் காதலை ஒரு தரம் வெளியிட் டால் தன் ஜீவிய காலத்திலேயே செய்த ஒரு பெரிய குற்றத்தை அவன் செய்தவனாவான். ஆசாவின் துரபிப்பிராயமேதான் அவனுக்குக் கிடைக்கும் பலன்.

'ஒருவேளை ஆசாவின் எல்லையற்ற அழகைக் கண்டுதான் மோகித்துவிட்டோமோ என்னவோ?' என்று அவன் யோசித் தான். அது முடியாத காரியம். ஆசாவின் மேல் அவனுக்கு உண்டான அன்பு, கேவலம் அவளுடைய அழகை உத்தேசித்து

மட்டும் அல்ல என்பதை அவன் நன்கு அறிவான். அழகான ஸ்திரீகளை அவன் இதுவரையில் சந்தித்ததே இல்லையா? இங்கிலாந்திலிருந்து அவன் தாய் நாட்டிற்குத் திரும்புகையில் பாரீஸ் நகரத்தில் ஒரு மாத காலம் முகாம் போட்டானே! அங்கே 'சுஜான்' என்ற பெயருடன் கூடிய ஒரு பிரெஞ்சு அழகியுடன் சிநேகம் செய்து கொண்டானே! அவளுடன் சுகபோகங்கள் அனுபவித்தானே! அப்போதுகூட அவளுடைய காதலைச் சம்பாதிக்க அவன் முயலவே இல்லை. அவள் அழகுக்காக எத்தனை பணம் வாரி இறைத்தான்! ஆனால் அவள் அவனுக்குக் கொடுத்த ஓர் அழகிய போட்டோவை அவன் ஊருக்கு வந்ததும் திரும்ப எடுத்துப் பார்க்கக்கூட இல்லை. ஏன் அதிகம் சொல்லிக் கொண்டே போக வேண்டும்? ஆசாவைச் சந்திக்கும் வரையில் அவன் ஸ்திரீகளின் சௌந்தரியத்தைக் கேவலம் ஒரு நிமிஷ நேரம் அனுபவிக்கும் பொருளாகவே கருதினன். முரட்டுத்தனமான ஆவலைத் தணிக்க உபயோகிக்கும் கருவியாகவே ஸ்திரீகளை அவன் எண்ணினன். ஆனால் இன்று அவனுக்குக் காதல் என்பது இருதயத்திலேயே ஊற ஆரம்பித்தது!

இனி என்ன செய்தாலும் இந்தக் காதலை மாற்ற முடியாது.

சத்தியாக்கிரகத்தின்போது ஆசாவைப் போலீஸ்காரர்கள் பிடித்தபோது, விலாசனுக்கு அரசாங்கத்தாரின் கொடி அடக்குமுறைகளின்மீதும், முதலாளிகளின் ஈவிரக்கம் அற்ற நெஞ்சழுத்தத்தின் மீதும் எல்லையற்ற வெறுப்பும் கோபமும் உண்டாயின. அது இன்றுவரையில் அதிகமாயிற்றே ஒழியக் குறையவே இல்லை. ஆசா கையாண்ட அந்த அசட்டுச் சத்தியாக்கிரகம் அர்த்தமற்றது என்று அவன் எண்ணியிருந்தான். இன்றும் அப்படியே எண்ணினன். ஆனால் அந்த அஹிம்சா மார்க்கத்தை விட்டுவிட்டால், பிறகு எந்த வழியில் முதலாளித்துவத்தையும் அடக்குமுறைகளையும் ஒழிக்கமுடியும் என்பதைப் பற்றித் தீர விசாரிக்கவேண்டும். வேறு எந்த வழியில் முடியும்?

"அவருடன் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தால் அவருடைய மனத்தையும் கொள்கைகளையும் கட்டாயம் மாற்றிவிடுவேன்" என்று ஆசா பல தடவை விலாசனைக் குறித்துச் சொல்லியிருக்கிறள். சத்தியாக்கிரகத்தைப் பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்ற உண்மையை அவன் ஆசா விடுதலையாகி வந்த பிறகும் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஆசா அனுஷ்டித்து வரும் சத்தியாக்கிரகம் உண்மையில் மிகப் பரிசுத்தமானதே.

தன்னலம் கருதாது பிறருடைய நலனுக்காகத் தியாகம் செய்வது சாமானிய விஷயமா? ஏழை மக்களின் கஷ்டங்களை நிவர்த்திக்கப் பாடு படுவது மகத்தான தியாகமே. அவள் விடுதலையாகி வந்ததும் அவளுடைய இந்தத் தியாகத்தைப்பற்றி வானளாவப் புகழ்ந்து பேசவேண்டும். அவள் இந்த மார்க்கத்திலேயே சற்று மாறுதல்கள் செய்துகொண்டு தேசசேவை செய்வதாக இருந்தால் தானும் அவளுடன் கூடச் சேர்ந்து தேசசேவை செய்ய வேண்டும். ''தேசசேவை செய்ய உங்கள் உடம்பு இடங் கொடுக்குமா? தேசசேவை என்பது கரடுமுரடான பாதை'' என்று ஆசா சொன்னால், ''நான் தயார்'' என்று சொல்லுவ தற்கு வேண்டிய ஏற்பாடுகளை இனிமேல் செய்யவேண்டும். இதையெல்லாம் உத்தேசித்துத்தானே அவன் வேலையை விட்டு விட்டு மறுபடியும் வீட்டிற்கு வந்தான்?

சத்தியாக்கிரகத்தை அடக்குவதற்காகக் கையாளப்பட்ட கொடூரங்கள் அவன் மனத்தை விட்டு அகலவே இல்லை. அந்த ராக்ஷஸ முறைகளை எப்படித்தான் கம்பெனியார்கள் கையாள முன்வந்தனர்? இந்தப் பயங்கரமான கருணையற்ற செய்கைகளைச் செய்ய அவர்களுக்கு எப்படித் தைரியம் பிறந்தது? இந்தக் கேள்விக்கு அவன் மனது உடனே பதில் சொல்ல ஆரம்பித்தது: 'எப்படிப் பிறந்ததோ தைரியம்? அவர்களுக்குப் பண ஆசை இருப்பதால்தான்! அவர்கள் அட்டூழியங்களைக் கேட்க ஆள் கிடையாது என்பதால்தான்! ஏழைக் குடியானவர்களை இஷ்டப்படி வாட்டினாலும் அவர்களோடு ஒத்துழைக்க அர சாங்கத்தார் காத்துக்கொண் டிருப்பதனால்தான்! தைரியம் ஏன் உண்டாகாது? இன்று வரையில் உலகத்தில் இந்த அநியாயந்தான் நடைபெற்று வந்தது; வருகிறது! இனியும் இந்தக்கதிதான்!'

இந்த முதலாளித்துவத்தை அடக்க வேண்டும் என்றால் குடியானவர்களையும் தொழிலாளிகளையும் ஒற்றுமையுடன் திரளச் செய்து, பயத்தையும் கோழைத்தனத்தையும் அறவே அகற்றச் செய்யவேண்டும். அவர்கள் பலத்தை ஓங்க வைக்கவேண்டும்.

இதற்கு எந்த வழியில் முயலலாம்?

ஒருவனாக மட்டும் இந்த மகத்தான கேள்விக்குப் பதில் சொல்லிவிட முடியாது என்று உணர்ந்த விலாசன் இதைப்பற்றிப் பலருடன் சம்பாஷணை செய்து உண்மையை அறிய ஆவலாக இருந்தான். முன்பு எப்போதையும்விட இப்போது அதிகமாய்ப் புத்தகங்களைப் படிப்பதில் நேரத்தைச் செலவு செய்தான்.

புத்தகங்களைப் படிப்பதில் அவனுக்கு ஒருவித இன்பமும் உண்டாக ஆரம்பித்தது. ஆசாவைப் போலீஸார் கைதியாக்கியபோது அவனுக்கு எத்தனை ஆக்ரோஷமும் உள்ளக் கொதிப்பும் ஏற்பட்டனவோ அவற்றைப்போல் ஆயிரமடங்கு ஆவேசம், பெரிய பெரிய எழுத்தாளர்களின் புஸ்தகங்களைப் படிக்கையில், ஏற்படுவதை விலாசன் உணர்ந்தான். அந்த எழுத்தாளர்களின் கட்டுரைகளில் காணப்பட்ட உண்மைகளைக் கண்டு உத்ஸாகமடைந்த அவனுக்கு அவைகளைத் திரும்பத் திரும்பப் படிக்க ஆசை தூண்டியது. முன்பு டென்னிஸ் விளையாடும் போதெல்லாம் நேரங் கழிவதே அவனுக்குத் தெரியாது. அதைப் போலவே புத்தகங்களைப் படிப்பதிலும் நேரம் செல்லுவதே அவனுக்குத் தெரியவில்லை. முன்பு அறிமுகமானவர்களைச் சந்திப்பது அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

லோனுவலாவிலிருந்து திரும்பி வந்த விலாசன் பழைய விலாசனே அன்று என்று சுதேஷ்ணுபாய் சொன்னது முற்றும் உண்மையான விஷயம்.

இன்று அவன் வண்டியை மிகவும் நிதானமாக விட்டுக் கொண்டே சென்றுன்!

அவன் கடல் ஸ்நானத்தில் அதிக நேரம் செலவழிக்கவில்லை. தண்ணீரில் மிதக்கும்போது மட்டும் அவனுக்கு எல்ஸியின் ஞாபகம் வந்தது. லோனுவலாவிற்கு வேலைக்குப் போவதன் முன் தினம் அவளுடன் ஜலக்கிரீடை செய்ததும், அன்று அவள் வீட்டிலேயே சாப்பிட்டதும், பிறகு எல்ஸியிடம் தான் போய் வருவதாகச் சொன்னபோது அவள் அங்கேயே தூங்கும்படி கேட்டுக்கொண்டதும், விலாசன் அதை மறுத்துவிட்டுப் புறப்பட்ட போது எல்ஸீ மிகவும வருத்தத்துடன் அவனை நோக்கியதும் இவைகளெல்லாம் இனிமாக் காட்சியைப்போல் அவன் மனக் கண்ணின் முன் தோன்றின. ஆனல் அவைகள் கேவலம் சரித்திரம் படிக்கும்போது உண்டாகும் இன்பத்தைக்கூட அவனுக்கு அளிக்க வில்லை. அப்போது நடத்திய அதே வாழ்க்கையைத்தானு இப் போதும் நடத்துகிறுன் விலாசன்? மறுபடியும் எல்ஸீயைச் சந்தித்தால் அவளுடன் எந்த வகையில் பழக வேண்டும் என்பதை அவன் கற்பனை செய்து பார்த்தான்.

ஆனல் அந்தக் கற்பனைகள்கூட அவன் மனத்தில் நெடு நேரம் தங்கி இருக்கவில்லை. தண்ணீரிலிருந்து கரையேறி, தலை, உடம்பு இவைகளைத் துடைத்துக்கொண்டு, ஆடைகளை அணிந்த

வண்ணம் அவன் வீடு திரும்பினான். அப்போதும் ஆசாவைப் பற்றிய எண்ணமேதான் அவனுக்கு உதித்தது.

வண்டியைச் சற்று வேகமாய் விட்டுக்கொண்டு போனதும், வழக்கப்படி வாயில் வைக்கவேண்டிய சிகரெட்டின் ஞாபகம் அவனுக்கு வந்தது. அவன் தன் இடது கையால் சட்டைப் பைகளைத் தடவினான்.

சட்டைப் பைகளில் சிகரெட் அகப்படவில்லை என்பதைக் கண்டதும் வரும்போது டப்பாவிலிருந்த அத்தனை சிகரெட்டு களையும் குடித்ததும், பிறகு அந்த அட்டைப் பெட்டியை வீசி எறிந்ததும் அவனுக்கு நினைவுக்கு வந்தன.

அவன் உடனே குவீன்ஸ் ரோட்டை விட்டுக் கோட்டைப் பக்கமாக வண்டியைத் திருப்பினான். ஒரு நாற்சந்தியின் மூலையில் ஓர் இரானியன் கடை இருந்தது. சாதாரண காலங் களில் ஐந்து மட்டும் அன்று, ஐம்பது ரூபாய் இனாம் கொடுத்துப் போகச் சொன்னாலுங்கூட அந்த இரானியன் கடைக்கு விலாசன் போகமாட்டான். ஆனால் சிகரெட்டின் ஆவல் அவனுக்கு அதிகமாய்ப் போய்விட்டதனால் அவன் எப்படியாவது தூம்ர பானத்தை அடைய முயன்றான். அவனுக்குள்ளாகவே, "புயலில் எந்தத் துறையானால் என்ன?" என்ற பொருள்கொண்ட ஆங்கிலப் பழமொழியின் ஞாபகம் வந்தது; சமயத்தில் சட்ட திட்டம் சரிப்படுமா? எனவே இரானியன் கடைக்குப் போக நிச்ச யித்தான். அவனுடைய செய்கையில் அவனுக்கே சிரிப்பு வந்தது.

கடையில் நுழைந்ததும் அங்கே போடப்பட்ட உயரமான ஸ்டூலின்மேல் உட்கார்ந்திருக்கும் கடை முதலாளியிடம் அவன் ரூபாயை எடுத்துக் கொடுத்தான்.

"ஒரு சிகரெட்பெட்டி கொண்டுவா." திறந்த மார்பின் மேல் உள்ள வேர்வையைத் துடைத்துக் கொண்டே கடைக் காரன், "பெரிய டப்பா இல்லை ஸார், சிறிய பாக்கெட் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றான்.

"புயலில் எந்தத் துறையானால் என்ன?" இந்தப் பழ மொழியை விலாசன் மனத்திற்குள் சொல்லிக் கொண்டே பாக்கெட்டை வாங்கினான்.

அவன் மேஜைமீது வைக்கப்பட்ட பாக்கிச் சில்லறைகளை எடுப்பதற்காகக் கையை மேஜையின்மீது வைத்தான். இதற்குள் பின்னாலிருந்து ஒருவன் ஓர் அணாவை விட்டு எறிந்துகொண்டே, "ஒரு கோப்பை டீயின் காசை எடுத்துக்கொள்" என்றான்.

அந்த ஓர் அணுக் காசு விலாசனுக்குக் கொடுக்கப்பட்ட சில்லறையில் விழுந்ததால் விலாசன் திரும்பி யார் அணுவை வீசியது என்பதைப் பார்த்தான்.

தன் பார்வையில் நம்பிக்கை இல்லாதவனைப்போல் கண்களைச் சிமிட்டிக்கொண்டே விலாசன், "யார் சரத்தா? ஹலோ!" என்றான்.

இப்படிச் சொல்லிக்கொண்டே அவன் சரத்சந்திரனின் கையை அதிக நேசபாவத்துடன் பிடித்தான்.

சரத் விலாசனை நோக்கி, "நீ பம்பாய்க்கு எப்படி வந்தாய்? ஒருவேளை ஞாயிற்றுக்கிழமை லீவிற்கு வந்திருக்கிறாயோ?" என்றான்.

"இல்லை; நான் கம்பெனி வேலையை விட்டு விட்டேன்."

மிகவும் ஆச்சரியத்துடன் சரத், "நிஜமாகவா? ஏன், எதற்காக வேலையை விட்டு—?" என்றான்.

"சும்மாத்தான்; அது இருக்கட்டும், உன்னுடன் நான் ரொம்ப ரொம்பப் பேசவேண்டியிருக்கிறது."

"எனக்குந்தான்; அது இருக்கட்டும், ஆசா சௌக்கியந்தானே?"

அவனுடைய அந்தக் கேள்வியில் காதலின் எதிரொலி ஒலிப்பதை விலாசன் அறிந்துகொண்டான்.

அவன், "ஊம். போவோம் வா, உனக்கு எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொல்லுகிறேன். என் வண்டி வாசலில் நிற்கிறது" என்றான்.

அவர்கள் இருவரும் கழுத்தைக் கட்டிக்கொண்டு வெளியே போகும்போது கடைக்காரன் உரக்கக் கத்தினான்: "சேட்! உங்களுடைய பாக்கிச் சில்லறையை நீங்கள் மறந்து இங்கேயே விட்டுவிட்டுப் போகிறீர்களே?" என்று.

விலாசன் உரக்கச் சிரித்துவிட்டுச் சில்லறையை எடுத்துக் கொண்டான்.

# அத்தியாயம் 14

வண்டியில் ஏறி உட்கார்ந்ததும் விலாசன் சரத்சந்திரனிடம், "எங்கள் வீட்டுக்குப் போவோம்; சாப்பாட்டை முடித்துக்கொள்ளுவோம். பிறகு மணிக்கணக்காய் உட்கார்ந்து பேசுவோம். சரிதானு? உனக்கு ஆட்சேபம் ஒன்றும் இல்லையே?" என்றுன்.

"ஆட்சேபம் என்ன? அதற்கு மாருக வெகு நாட்களுக்குப் பிறகு உன்னுடன் சாப்பிடப் போகிறேனே என்பதால் ஆனந்தமாகத்தான் இருக்கிறது."

"உண்மையிலேயே உன்னை எங்கள் வீட்டிற்கு அழைத்துப் போய் எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. நீயும் நானும் ஹிந்து தேகாப்பியாச மண்டலத்தாரால் நடத்தப்பட்ட டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் விளையாடின பிறகு நீ வீட்டிற்கு வந்து என்னுடன் சாப்பிட்டாயே, அதுதான் கடைசியாகச் சாப்பிட்டது! அடேயப்பா! எத்தனை வருஷம் ஆகிவிட்டதடா அது நடந்து!"

"ஆம், சுமார் நாலைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. காலந்தான் எத்தனை வேகமாய்ப் பறக்கிறது பார்த்தாயா?"

"காலத்தின் அதிசயந்தான் என்ன! ஞாபகத்திற்குக் கொண்டு வந்தால் இப்போதுதான் நடந்ததைப்போல் தோன்றும்."

இப்படிப் பேசிக்கொண்டே விலாசன் தன் மோட்டாரை வெகு வேகமாய் விட ஆரம்பித்தான். இருவருடைய வாயிலும் புகைந்துகொண்டிருந்த சிகரெட்டுகளின் நெருப்புப் பொறிகள் பறந்து காற்றில் மிதந்து பிறகு அவிழ்ந்துவிட்டன. காலதேவனின் செய்கையும் அப்படித்தான்; வேகமாய்ச் சென்று மறைந்துவிடுகிறது நம்முடைய ஆயுட் காலமும்!

"எத்தனை பயங்கர வேகத்துடன் ஓட்டுகிருயப்பா!" என்றுன் சரத்.

"எனக்கு மெள்ள ஓட்டவே பிடிக்கவில்லை."

"அதனுல்தான் அடிக்கொரு தரம் விபத்து ஏற்படுகிறது."

''அது சரியாகாது; என் வாழ்க்கையிலேயே பெரிய விபத்து ஒரே ஒரு தரந்தான் ஏற்பட்டது.''

''ஆம்; தளவலா கிராமத்தில் நடந்ததே, அதுதானே?''

''ஆமாம்; அந்த விபத்தில் எனக்குச் சரீரத்தில் அதிகமாய் அடி ஒன்றும் ஏற்படவில்லை; ஆனால் மனத்தில்தான் அடிவிழுந் திருக்கிறது.''

''ஆசாவின் சகவாசத்தினலா?''

''ஆமாம்.''

''அவள் ஓர் அசாதாரணப் பெண்மணிதானடா, இல்லையா?''

''அதில் என்ன சந்தேகம்? சரத்! நீ என்னிடம் வெளியிட்டுச் சொல்லாவிட்டாலும், நீ அவளைக் காதலிக்கிறாய் என்பது எனக்குத் தெரியாததல்ல. உன் அதிருஷ்டத்தைக் கண்டு எனக்கு உண்மையில் மனச் சந்தோஷம் ஏற்படுகிறது.''

இவ்விதமாய் ஆசாவின் மேலுள்ள பிரேமையைப்பற்றி அந்தத் தோழர்களிடையே நெடுநேரம் சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. விலாசன் வீட்டிற்குச் சென்றதும் சரத்சந்திரனுடன் சாப்பாட்டை முடித்துக்கொண்டான். சாப்பாடு முடிந்தும் அவர்கள் சம்பாஷணை முடிந்தபாடில்லை. நடுவில் பிற விஷயங்களைப்பற்றியும் கொஞ்சம் சர்ச்சை நடந்தது. ஆனால் விஷயம் மறுபடியும் ஆசாவின் பக்கம் செல்லத் தொடங்கியது. ஒரு 'ஸ்பிரிங்' இழுக்கப்பட்டு விடுபட்டால் மறுபடியும் அது பழைய நிலைமைக்கே வந்துவிடுவதுபோல், அவர்களிடையே நடந்த சம்பாஷணையில் பிற விஷயங்கள் நடுவில் குறுக்கிட்டாலும் பேச்சுச் சற்று மாறினலும் மறுபடியும் ஆசாவைப் பற்றியே திரும்பிற்று.

சரத்சந்திரனிடம் விலாசன் தான் கம்பெனியின் உத்தியோகத்தை விட்டு வந்த காரணங்களை எல்லாம் சொன்னன். கடைசியாக அவன் தன் மன மாறுதலையும் வெளியிட்டான்.

''சரத்! நான் எத்தனைதான் வானளாவப் புகழ்ந்தாலுங்கூட, ஆசாவின் மனத்தில் இருக்கும் பரந்த நோக்கங்களையும், கருணையையும், ஏழைகளுக்காக அவள் செய்யும் தியாகங்களையும் என்னல் பூர்ணமாக வருணித்துக் கூறவே முடியாது. தேசத் தொண்டு என்பது ஒன்றையே அவள் ஆபரணமாகக் கொண்டுள்ளாள்; சற்றுநேரம் மின்சாரம் தவறிவிட்டபடியால் முக்கியமான ஒரு சக்கரம் சுழல்வது நின்றுவிடுகிறது. உடனே ஒரு பெரிய ஆலையே வேலை செய்யாமல் நின்றுவிடுகிறது. அதைப்

போலவே கம்பெனி உத்தியோகத்தால் எனக்கு ஆசாவின் சந்திப்புக் கிடைத்தது. அந்தச் சந்திப்பினால் என் பழைய கொள்கைகள் என்னும் ஆலை அப்படியே நின்றுவிட்டது. நான் கம்பெனியின் வேலையை மட்டும் விடவில்லை. என் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் நான் மாற்றம் கண்டிருக்கிறேன். முன்பு ஆசையுடன் விளையாடின டென்னிஸ் இப்போது போன இடம் தெரியவில்லை. டென்னிஸ் 'ராக்கெட்டு'களைக் கண்டாலே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. அவைகள் மூலையில் தூங்குகின்றன. என் துப்பாக்கியைத் தொட்டு எந்தக் காலம் ஆகிறதோ, அது எனக்கே தெரியாது. இன்னும் எத்தனையோ மாறுதல்கள்! ஆசா எப்போது விடுதலையடைவாள்? நீ, நான், ஆசா மூவரும் சேர்ந்து உட்கார்ந்து தேச சேவைக்கு உண்டான திட்டங்களை வகுக்க வேண்டும். முதியோர் கல்வித் திட்டம் முதலியனவற்றையும் அதில் சேர்க்கவேண்டும். எனக்கு இப்போதே தேச சேவையில் ஈடுபட ஆவலாக இருக்கிறது'' என்றான் விலாசன்.

சரத்சந்திரன் சற்று வருத்தமும் ஏமாற்றமும் கலந்த குரலில், ''நாம் மூவரும் சேர்ந்து என்கிறாய். யாருக்குத் தெரியும்?'' என்றான்.

விலாசன் ஆச்சரியத்துடன், ''ஏன், யாருக்குத் தெரியும்' என்று ஏன் சொல்லுகிறாய்? நான் வகுக்கும் திட்டங்களில் உனக்கு நம்பிக்கையே இல்லையா?'' என்று கேட்டான்.

''சே, சே, ஆசாவின் தூண்டுதலால் உனக்கு ஏற்பட்டிருக்கும் மனமாற்றத்தில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் எப்படித் தோன்றும்?''

''பின் எதற்காக 'யாருக்குத் தெரியும்' என்று சொன்னாய்?''

''அதற்கு ஒரு பெரிய காரணம் இருக்கிறது.''

''என்னிடத்தில் சொல்லக்கூடாதோ அதை?''

''அதை உன்னிடமாவது சொல்லலாம் என்றுதானே நீ கூப்பிட்டதும் வந்து சேர்ந்தேன்? நீ தற்செயலாக என்னைக் காணாமல் இருந்தால்கூட நானே உன்னைத் தேடி வரலாம் என்று இருந்தேன்!''

''அப்படியென்றால் விஷயத்தைத் நன்றாகச் சொல்லேன்?''

''ஆசா விடுதலையாகி வெளியே வருவதற்குள்ளாக ஒருவேளை நானே சிறைவாசத்திற்குப் போய் விடுவேனோ என்னவோ?''

''எதற்காகச் சிறைவாசம்?''

"குற்றம் வெகு நாட்கள் ஒளிந்திருக்க முடியாதல்லவா?"

"நீ என்ன அப்படிப்பட்ட குற்றம் செய்து விட்டாய்?"

"சத்தியாக்கிரகத்திற்கு முந்தின இரவு நான் ஒகார்மென் துரையைச் செம்மையாகப் புடைத்து மாருதி கோயிலில் சிறைப் படுத்தினேனே, அந்தச் சமாசாரம் உனக்குத் தெரிந்திருக்க லாம்; அல்லவா?"

"ஆமாம்; அதற்கென்ன?"

"அந்த ரகசியம் சீக்கிரமே வெளிவந்தாலும் வந்து விடும்போல் தோன்றுகிறது. அந்த டிரைவர் பிர்தோஸ் என்னைத் தொந்தரவு செய்த வண்ணமாக இருக்கிறன். இன்னும் இரு நூற்றைம்பது ரூபாயை அவனுக்கு எண்ணி வைத்துவிட்டால் அவன் தன் சுய தேசமான ஈரானுக்கே போய்விடுகிறனும். இல்லையேல் போலீஸ் இலாகாவிற்குச் சென்று நான்தான் குற்றவாளி என்பதை நிரூபித்துவிடுவேன் என்கிறன். இதனுல் எனக்கு மனத்தில் சமாதானமே ஏற்படுவதில்லை. உன்னைச் சந்தித்து உதவி பெறவேண்டும் என்று எண்ணி வந்தேன். ஆனுல் வந்தது வரட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டேன். லோனுவலாவிலேயே நீ இருப்பாய் என்று எண்ணியிருந்தேன். நல்லவேளையாக நீ இன்று என்னைச் சந்தித்தாய்."

இவ்வளவையும் சொல்லிவிட்டுச் சரத்சந்திரன் நெற்றிச் சுருக்கங்களுடன் தன் வலது கையால் தலையைத் தாங்கிக்கொண்டு சற்றுச் சாய்ந்தான். தன்னுடைய கஷ்ட நிஷ்டூரங்களைத் தன் உயிர் நண்பனிடம் சொன்னது என்னவோ வாஸ்தவந்தான். ஆனுல் அவ்விதம் சொல்லுவது முறையா தவறு என்பது அவனுக்கே தெரியவில்லை.

"ஆனுல் அந்தப் பிர்தோஸுக்கு நீ இத்தனை பணம் கொடுத்தும் அவன் தன் சொந்த ஊருக்குப் போய்விடுகிறன் என்பது என்ன நிச்சயம்?" என்றுன் விலாசன்.

தலையை அப்படியே தன் வலது கையின்மேல் சாய்த்த வண்ணம், சரத்சந்திரன், "உண்மையைச் சொல்லப் போனுல்.......... ஒரு கைத்துப்பாக்கியால் அவனைச் சுட்டுக் கொன்றுவிடலாமா என்றுகூடத் தோன்றுகிறது............ உன்னிடங்கூட ஒரு 'ரிவால்வர்' இருந்ததே!" என்றுன் சரத்.

விலாசனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "சரத்! உன் மூளையில் எப்போதும் பலாத்காரத்தின் அலைகளே கொந்தளிக் கின்றன; ஏன்?" என்றுன் கலவரத்தோடு.

''என் ரத்தத்திலேயே அது ஊறிவிட்டது.''

''ஆனால் நீ இந்தக் கொள்கையைக் கட்டாயம் விட்டுவிட வேண்டும். ஆசாவுக்குப் பலாத்காரத்திலும் அழிவு வேலையிலும் நம்பிக்கையே இல்லை என்பதை நீ அறியாயா? அவள் ஆக்க வழியிலும் அஹிம்ஸையிலுமேதான் நம்பிக்கை கொண்டிருக்கிறாள்.''

''அவளைச் சந்தோஷப்படுத்துவதற்காகத்தானே நான் என் ஆத்திரத்தையும் பலாத்காரக் கொள்கைகளையும் அடக்கி வைத்துக்கொண் டிருக்கிறேன்?''

''இனிமேலும் உன்னை அவள் அடக்கி வைத்துக்கொள்ளத்தான் போகிறாள்!'' என்று சொல்லிக்கொண்டே விலாசன் சிரித்துவிட்டுச் சரத்சந்திரனின் முதுகில் ஒரு தட்டுத் தட்டினான். பிறகு அவன் எழுந்து இரும்புப்பெட்டி புதைக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தான்.

சற்று நேரம் கழித்து விலாசன் செலாவணி நோட்டுக்களின் கட்டு ஒன்றை எடுத்து வந்து சரத்சந்திரனின் கையில் கொடுத்து விட்டு, ''பிர்தோஸின் வாயை மூட இத்தனை ரூபாய் போதுமா?'' என்றான்.

எல்லையற்ற நன்றியையும் பிரியத்தையும் கண்களில் காட்டிக் கொண்டே சரத்சந்திரன் தலையை அசைத்தான்.

விலாசன் அவன் தோள்மேல் கைவைத்துச் சொன்னான்:

''இனிமேல் நீ சற்றும் கவலைப்பட வேண்டியதே இல்லை.''

சரத்சந்திரன் தன் இரு கைகளாலும் விலாசனின் முழங்கை முழுவதையும் பிடித்துத் தன் முகத்துடன் வைத்து அணைத்துக் கொண்டே, ''உன் உபகாரத்தை நான் எப்படியடா மறப்பேன்? உன்னை நான் மறவேன்'' என்றான்.

விலாசன் உரக்கச் சிரித்தான். ''பைத்தியமே! நான் உனக்குப் பணம் கொடுத்தது என் மனச் சமாதானத்திற்கும் சாந்திக்குமே ஆகும். இதை நீ ஏன் பெரிதாகப் பேசுகிறாய்? நீ, ஆசா, நான் - இம்மூவரும் சேர்ந்து தேச சேவையில் ஈடுபட வேண்டும் என்பதே என் மனமார்ந்த விருப்பம். நான் எண்ணியதை நடப்பித்துக் காட்டவே உன்னைச் சிறைக்குள் அனுப்பாமல் தடுக்க முயல்கிறேன்.''

சரத்சந்திரன் விலாசனை உற்று நோக்கிப் பெருமூச்சு விட்டான். பிறகு, ''எத்தனைதான் அழகாக இருக்கிறாயடா

விலாஸ்! உன் உடல் அழகை ஒத்து மனமும் உனக்கு நல்லதடா! நீ இன்னும் ஓர் உபகாரமும் செய்யவேண்டும், முடியுமா?'' என்றான்.

''உபகாரமா? யாரிடமிருந்து உன்னைக் காப்பாற்ற வேண்டும்?''

''ஆசாவினிடமிருந்து!''

''ஆசாவிடமிருந்தா? இது என்ன விசித்திரமாகப் பேசுகிறாயே?''

''பொய் அல்ல; ஓகார்மென் விஷயமாக நான் செய்த ஏற்பாடுகளை உலகத்தின் கண்களினின்றும் மறைத்தது போலவே ஆசாவின் கண்களினின்றும் மறைக்கவேண்டும். ஆசாவிற்கு என் பலாத்காரக் கொள்கைகளும் பயங்கர இயக்கங்களும் தெரிந்துவிட்டால் அவள் என்னை அறவே வெறுக்க ஆரம்பித்து விடுவாள். நான் சத்தியாக்கிரக சமயத்தில் அந்த டைரெக்டரின் மீது கற்களை வீசி எறிந்தேனே, அதையும், இந்த ஓகார்மென் நாடகத்தையும் நீ ஆசாவிடம் சொல்லாதே! சொன்னால், பிறகு என்னுடைய பிரேம தீபம் அணைந்து விடும்! என் காதல் கோட்டை தகர்ந்துவிடும். என் காதலின் சுகமான கனவு-----''

''ஏ கிறுக்கா, இந்த விஷயமெல்லாம் அவளுக்குத் தெரிந்தால்தானே?''

''அப்படிக்கு ஒன்றுமில்லை; ஆனால் உனக்கு இந்த ரகசியங்களெல்லாம் தெரியுமே; ஒருவேளை நீ—''

''ஏ காதலின் மகிமையே! நான் என்ன உனக்கு எதிர்ப் பிரசாரம் செய்வேன் என்று உனக்குச் சந்தேகமா? அதை இப்போதே மற. இந்த ரகசியங்களைப் பற்றிய எந்தச் செய்தியையும் நான் யாரிடமும் வெளியிடுவதே இல்லை! நீ உன் காதல் பந்தயத்தில் ஜயிக்கவேண்டும். நீயும் ஆசாவும் ஆனந்தமாகக் காதல் வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதே என் மனப்பூர்வமான ஆவல். காதலின் அனுபவம் எனக்கு முன்பெல்லாம் கிடையாது. அதனுடைய தன்மை எனக்கு அறவே தெரியாது. ஆனால் இப்போது . . . . . . .''

அந்த வாக்கியத்தை முடிக்காமலேயே விலாசன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு சிகரெட் பாக்கெட்டை மேஜையின்மீது வைத்தான்.

''உம். ஆனால் இப்போது? . . . . . யாருடைய காதலில் அகப்பட்டாய்?'' என்றான் சரத்.

பதில் ஒன்றும் சொல்லாமல் தலையை அசைத்துவிட்டு விலாசன் சிகரெட்டின் புகையை இரண்டு மூன்று தரம் உள்ளே இழுத்துவிட்டுப் பிறகு வெளியில் கொஞ்சங் கொஞ்சமாக விட்டான். பிறகு தலையை உயரத் தூக்கிக்கொண்டு உதடுகளைக் குவித்துப் புகையைக் கம்பிபோல் மேல்நோக்கி விட்டான். அந்தப் புகைப்படலத்தைப் பார்த்துக்கொண்டே பேசுவதைப் போல், ''ஒன்றும் இல்லை. யாரிடமும் இல்லை'' என்றான்.

வெகு நாட்களுக்குப் பிறகு அன்று சரத்சந்திரனைச் சந்தித்ததால் விலாசனுடைய மனத்தில் ஒருவிதத் திருப்தியும் ஆனந்தமும் உண்டாயின. எனினும் அன்றிரவு அவனுக்குச் சரியான தூக்கம் பிடிக்கவில்லை.

அவன் ஆசாவைப்பற்றியும் தான் அவள்மேல் கொண்டுள்ள ஊமைக் காதலைப்பற்றியும் சிந்தனை செய்துகொண்டே படுத்திருந்தான்.

தான் அவள்மீது எல்லையற்ற காதல் கொண்டுள்ளது என்னவோ உண்மைதான். ஆனால் இந்தக் காதல் கடைசியில் பன்மடங்காகப் பரிணமித்து அதனால் ஏதாவது விபரீதம் நேரிட்டால்?

அவ்விதம் பன்மடங்காகப் பரிணமிப்பதாக அவன் கற்பனை செய்கையில் அவன் மனம் சற்றுத் தயங்கியது. அவன் மனமே அவனைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தது.

'காதல் பன்மடங்கு பெருகுவதாவது? அதை வெளியிட்டே தீரவேண்டும் என்பது என்ன சட்டம்? வெளிப்பகட்டுக்காகச் செய்யப்படும் காதல் உண்மைக் காதலே ஆகாது. அது வெறும் கற்பனையே ஆகும். ஆனால் காதல் கொள்ளுவதிலேயே ஓர் ஆனந்தம் உண்டாகிக் காதலுக்காகவே காதலித்தால் அதுதான் நிஷ்களங்கமான பிரேமையாகும். உடல் சுகத்தையோ சிற்றின்பத்தையோ கருதிச் செய்யப்படும் காதல் காமமே ஆகும். நிஷ்காம்யமாகக் காதல் செய்வதில் பரிணமிப்பு ஏது?'

இந்த யோசனையினால் அவன் மனத்திற்குச் சற்றுச் சமாதானம் உண்டாயிற்று.

'யாருடைய பிரேமைக்காக நீ ஏங்குகிறாயோ அந்த ஆத்மாவுக்குத் தெரியாமலே நீ காதல் கொள்ளுவது எப்படி? ஆ! ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தினால் தன் காதல் தற்செயலாக வெளிப்பட்டுவிட்டால்...... அந்தக் கற்பனையே எத்தனை இன்பகரமாக இருக்கிறது! ஆனால்......, ஒருதலைப்பட்ட

காதலை வெளியிடுவதை விட வெளியிடாமல் இருப்பதே மேல். நீ ஆசாவைக் காதலிப்பதில் உனக்கு இன்பமே! ஆனால் அதைக் காட்டிலும் இன்பம் ஆசா உன்னைக் காதலிக்கிறாள் என்று நீ அறிந்தால். ஆனால் அவள் உன்னைக் காதலிக்கிறாளா? இல்லையே! கடவுளே! இப்படி ஏன் சிக்கலான காதலில் என்னை இறக்கினாய்? யார் தன்னை நேசிக்கவில்லையோ அவர்களின் மேல் காதல் உண்டாவது எந்தத் தெய்வத்தின் சிருஷ்டியோ?' என்றது மற்றொரு மனம்.

விலாசனுக்கு உடனே சுநேத்ராவின் நினைவு வந்தது; அவன் தன்னையும் சுநேத்ராவையும் ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்தான். தான் ஒருநாளும் வாக்குக் கொடுக்காதிருக்கையிலேயே அவள் அவனைக் காதலிக்கிறாள்! தன்னையே மணம் புரிய வேண்டும் என்று அவள் திடசித்தமாக இருந்ததனால் அவளையே அவன் கடிந்துகொண்டும், வெறுத்துங்கூட வருகிறான். அவள் ஒரு மூர்க்கம் பிடித்த பெண் என்று நினைத்தான். ஆனால் சுநேத்ரா அவனைக் காதலிப்பதால் மட்டும் குற்றவாளியானால், தான் ஆசாவைக் காதலிப்பதால் குற்றவாளி தானே ஆகவேண்டும்? சுநேத்ராவுக்கும் ஒருதலைப்பட்ட காதல்தான் கிடைத்தது. அவள் தன்னையே நொந்து கொண்டு வாழ்க்கையை வெறுத்திருக்கிறாள். ஆனால் இவன் ஆசாவிடம் தன் காதலை வெளியிடக் கூடாது. அவளுடைய காதலையும் எதிர்பார்க்கக் கூடாது. அப்படியென்றால் இவனுக்கு இன்பம் ஏது? ஆம், இவன் இன்பத்தையே இவன் தியாகம் செய்துதான் ஆக வேண்டும். "ஆசாவிடம் என் காதலை வெளியிடவே மாட்டேன்."

மறுபடியும் அவன் மனது பாம்பு படம் எடுப்பது போலத் தலையைத் தூக்கிச் சற்று வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தது:

'ஆனால் நீ மறுபடியும் ஆசாவைப் பார்க்காமல் இருந்து விடுவாயா? அவளுடன் பேசாமல் வாய்மூடி மௌனியாக இருந்து விடுவாயா? அவளுடன் நெருங்கிப் பழகாமல் உன்னால் இருக்க முடியுமா? ஏன்! பதில் சொல்லு! நீ மட்டும் பின் ஏன் சுநேத்ராவுடன் பேசவும் பழகவும், அவளைப் போய்ப் பார்க்கவும் வெறுப்புக் கொள்கிறாய்? நீ ஆசாவைக் காதலிப்பதில் எள்ளளவேனும் குறைச்சலாகவா சுநேத்ரா உன்னைக் காதலிக்கிறாள்! சொல், விடை சொல்? அவள் மட்டும் குற்றவாளியோ—? நீ........?'

இதற்குச் சரியான விடை விலாசனுக்குக் கிடைக்கவில்லை. வெகு நேரம் வரையில் அவன் தூங்காமலேயே படுக்கையில் இங்கும் அங்கும் புரண்டுகொண்டு கிடந்தான்.

சுநேத்ராவின் காதலைத் தான் திருப்ப முடியாததில் தன்மேல் ஒரு குற்றமும் இல்லை என்று அவன் எண்ணலானான். ஆனால் தன் மீது சுநேத்ரா காதல் கொண்டுள்ளாள் என்பதனால் மட்டும் அவள் குற்றவாளி ஆகிவிடுவாளா? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். காதல் உண்டாவது மனித யத்தனம் அல்ல என்பது வெளிப்படை. ஆனால் காதலை அடக்குவதும் முடியாத காரியம் என்பதை இன்றைக்குத்தான் — அதாவது ஆசாவின் மேல் உள்ள தன் காதலை அடக்க முடியாதபடி அவன் திண்டாடும் இன்றைக்குத்தான் — அவன் அறிந்துகொண்டான். காதலின் சிக்கலான பிரச்னைதான் எத்தனை இன்பமாகவும் துன்பமாகவும் இருக்கிறது? உண்மையில் காதல் ஒரு மனிதனைப் பைத்தியமாக அடித்துவிடுகிறது!

கடைசியில் சுநேத்ராவின்மேல் அவனுக்கு இரக்கம் உண்டாயிற்று. ''சுநேத்ரா! துர்ப்பாக்கியம் பிடித்த பெண்ணே!''

ஆனால் செய்வது என்ன? கடைசியில் சுநேத்ராவின் கதி என்னவாக முடியுமோ?

அவனையும் அறியாமல் நித்திரையில் ஆழ்ந்தான் விலாசன்.

மறுநாள் பகலில் அவன் புத்தகத்தைப் பிரித்துத் தன் கண் முன் பிடித்திருந்தாலும் மனம் ஆசாவை ஒரு தட்டிலும் சுநேத்ராவை ஒரு தட்டிலும் வைத்துச் சீர்தூக்கிக்கொண்டிருந்தது.

மாலையில் சுஷேணபாய் அவன் அறைக்குள் எதிர்பாராத விதமாய் நுழைந்தாள்.

''என்ன செய்துகொண்டு இருக்கிறாயடா விலாஸ்!''

புத்தகத்தின் நடுவில் வைத்த விரலை எடுக்காமல் அதை மேஜையின் மீது வைத்துக்கொண்டே அவன், ''ஒன்றும் இல்லை'' என்றான்.

''எங்கேயாவது வெளியில் போகப் போகிறாயா?''

''நிச்சயமாகச் சொல்ல முடியாது.''

''என்னுடன் வருகிறாயா? நான் வெளியே போகிறேன்

''எங்கே?''

''சுநேத்ரா வீட்டுக்கு. வருகிறாயா?''

''வேண்டாம்; நீங்கள் இன்று போங்கள். நாளைக்கு நான் போகிறேன்.''

அதற்குமேல் சுதேஷ்ணுபாய் ஒன்றுமே பேசவில்லை. க்ஷண நேரம் அவள் அங்கேயே நின்றுவிட்டுப் பிறகு கீழே இறங்கிச் சென்றுவிட்டாள்.

மோட்டாரின் சத்தம் ஆரம்பித்து அது பிறகு கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்துகொண்டே வந்து பிறகு மறைந்து விட்டது. வண்டி போய்விட்டதை விலாசன் அறிந்து கொண்டான்.

சுநேத்ராவை அவன் காதலிக்க முடியாதது பற்றி அவள் எத்தனை தரம் மன வேதனை அடைந்தாளோ, அதைப்போலவே தன் தாயான சுதேஷ்ணுவும் மன வருத்தம் அடைந்தாள் என் பதை விலாசன் எண்ணிப் பார்த்தான். ஜன்மம் தந்த தாய்க்குத் தன் மனதறிந்தே துக்கம் கொடுப்பதுதான் பாவங்களுக் கெல்லாம் தலைமையான பாவம். ஆஹா! இந்த உலகத்தின் பொருத்தங்களைத்தான் சற்று யோசித்துப் பார்த்தால் எத்தனை விசித்திரமான பின்னல்களாகப் பின்னப்பட்டிருக்கின்றன என்பது தெரியவரும். இந்தச் சிக்கலான வலையில் கஷ்டப்படா தவன்தான் யார்? இந்தப் பிரம்மாண்டமான சிருஷ்டியில் மனிதனின் கைக்கு எட்டாத விஷயங்கள் எத்தனையோ இருக்கும் போது மனிதன் என்ன செய்ய முடியும்?..........

விலாசன் தன்னைத்தானே நொந்துகொண்டான்!

இந்தத் தாபத்தைக் கொடுக்கும் விஷயங்கள் மனத்தை எட்ட இயலாத ஓர் இடத்திற்குப் போகவேண்டும் என்று எண்ணியவனாய் அவன் மோட்டாரில் ஏறிக்கொண்டு வெளியே புறப்பட்டான்.

பிரின்ஸ் ரோட்டில் உள்ள தனக்குப் பிரியமான ஒரு ஹோட்டலின் வாசலில் வண்டியை நிறுத்தினான். வில்லையை அணிந்த சேவகன் ஒருவன் விலாசனுக்குச் சலாம் செய்து வண்டியின் கதவைத் திறந்து விட்டான்.

ஹோட்டலில் நுழைந்ததும் அங்கே எரிந்துகொண் டிருந்த மின்சார விளக்குகளின் ஜோதியைக் கண்டு விலாசனுக்கு மனத்தில் ஒருவித ஆனந்தம் ஏற்பட்டது.

'பிரகாசமான வெளிச்சத்தில் என்னதான் ஆனந்தம் ஏற்படு கிறது? மாலையின் ஜோதிமயமான விளக்கு வெளிச்சம் உண்மையில் ஆனந்த தாயகமாகவே இருக்கிறது. இந்த ஆனந்தம் எதனால் ஏற்படுகிறது? எல்லாருக்குந்தான் இவ்வித ஆனந்தம் உண்டாகிறதா, எனக்கு மட்டும் உண்டாகிறதா, இதை யார்

கண்டார்கள்? என்னிடம் எத்தனையோ விதமான மாறுதல்கள் ஏற்படினும் என் பழைய சுகபோக செளகரியங்களை மட்டும் நான் மாற்றிக் கொள்ளவே முடியாதுபோல் தோன்றுகிறதே. அது ஏன்?..........'

ஹோட்டலின் முதலாளி அவனுக்குச் சலாம் செய்துவிட்டு ஆங்கிலத்தில், ''வந்து ரொம்ப நாட்களாகி விட்டன இந்த ஹோட்டலுக்கு'' என்றான்.

விலாசன் சற்றுப் புன்முறுவல் செய்துவிட்டுத் தலையை அசைத்தான். அந்த அசைப்பின் பொருள் எது வேண்டுமானாலும் இருக்கட்டுமே என்று அவன் எண்ணினான்.

நாலைந்து பரிசாரகர்கள் விலாசனுக்கு நல்வரவு கூறுவதைப் போல் உட்காரும் இடத்தைத் துடைத்தும் உட்காரச்சொல்லி அபிநயம் செய்தும், பிரசன்ன வதனத்துடன், 'வாருங்கள்' என்று சொல்லியும் ஏக தட புடல் படுத்தினார்கள்.

அவர்களிடம் எதையாவது கேட்டு அவர்களுடைய உபசாரத்தை ஏற்றுக்கொண்டதாகக் காட்டிக்கொள்ள வேண்டும் என்று விலாசன் வாயெடுப்பதற்குள்ளாக, மேல் மாடியின் ஜன்னலிலிருந்து ஒரு குரல் கூப்பிட்டது:

''ஹலோ, விலாஸ்!''

விலாசன் தலைநிமிர்ந்து மேலே நோக்கியதும் அங்கே சாக்ஷாத் பார்க்கவராம் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

விலாசனும் உடனே மாடிப்படிகளின் வழியாக ஏறி அவர் உட்கார்ந்திருந்த இடத்திற்குப் போனான்.

''என்ன, உலகவிஷயங்கள் எப்படி இருக்கின்றன? சாதாரணமா, விபரீதம் ஏதாவது உண்டா?''

விலாசன் மறைபொருளாக ஆங்கிலத்தில் கேட்டதைப் பார்க்கவராமின் மக்கு மூளை அறிய முடியவில்லை. அவர் ஓர் அச்சுச் சிரிப்புச் சிரித்தார்.

தன்னைக் கண்டதும் பார்க்கவராம் மேலே வரும்படி கூறியதன் காரணத்தை விலாசன் நன்கறிவான்.

''என்ன சாப்பிடப் போகிறீர்கள், என்ன கொண்டுவரச் சொல்லட்டும்?''

''வேண்டாம், ஒன்றும் வேண்டாம்.''

''சே, சே, அப்படிச் சொல்லக்கூடாது.''

''வேண்டாம், வேண்டாம்'' என்று பார்க்கவராம், வாயால் சொன்னது வாஸ்தவமே ஆயினும் அவர் மனத்தில்

எதைக் குடிக்க வேண்டும் என்று எண்ணினுரோ அது அவருக்கு முன்பு நிற்க விலாசன் ஏற்பாடு செய்தான். வைத்ததும் இரண்டு கோப்பை மதுவை அவர் ஒரே மூச்சில் குடித்துத் தீர்த்தார்.

அவருக்குப் போதை தலைக்கு ஏறப்போவதை உணர்ந்த விலாசன் ஏற்கனவே அவரைக் கேட்க வேண்டும் என்று யோசித்திருந்த கேள்விகளைக் கேட்கலானுன்.

''என்ன, மிஸ்டர் பார்க்கவராம், அந்த ஒகார்மென்னின் விஷயம் பிறகு என்ன ஆயிற்று? குற்றவாளி அகப்படுவான் போல் இருக்கிறதா இல்லையா?''

பார்க்கவராம் கையில் பிடித்த கண்ணுடிக் கிண்ணத்தை அப்படியும் இப்படியுமாக ஆட்டிக்கொண்டே கண்களைப் பாதி மேலே இழுத்த வண்ணம், ''ஊஹும், அது ஒரு பெரிய விசித்திரமான ரகசியமாகவே இருக்கிறது தம்பி!'' என்ருர்.

''விசித்திரமான என்றுல் மிகவும் கவர்ச்சியுள்ளதாகவும் இருக்கும் என்று சொல்லுங்கள்?''

''கவர்ச்சி ஏது, மண்ணுங்கட்டி ஏது? கடைசியில் எங்கள் ரகசியப் போலீஸ் இலாகாவிடம் வந்து சேர்ந்தது அந்த விஷயம்.''

''அப்படியென்ருல்? எனக்குப் புரியவே இல்லையே?''

''ஐயா, ஒரு விஷயத்தைப் பற்றித் துப்பு அறிவதற்கு முன் அந்த விஷயத்தை நாங்கள் அதிமாகப் பரவ விடுவதில்லை. குற்றவாளி அகப்படும் வரையில் அவனைப் பற்றிய துப்புத் துலங்கும் வேலையும் நடக்க வேண்டும் என்பதே எங்கள் இலாகாவின் முக்கியமான கொள்கை. ஆனுல் பிரஸ்தாப 'கேஸ்'கள் மாதிரி ஏதாவது நேரிடின் அதை அதிசீக்கிரம் கண்டு பிடித்தால்தான் உண்டு. அதாவது சம்பவம் நடந்த ஒரு மாதத்திற்குள்ளாக ஆள் அகப்பட்டால் உண்டு. இல்லையேல் நாம் துப்புத் துலக்க முடியாது. அதுவன்றி ஒரு மாதத்திற்குள் ஆள் அகப்படாவிடில் நாம் விஷயத்தை ஆபீஸரிடம் ஒப்படைத்துவிட்டு வெறுமனே இருக்கிருேம். தற்செயலாக ஆள் தானுக வந்து அகப்பட்டுக் கொண்டால்தான் நமக்குச் சாதகம். ஆள் அகப்படாவிடில் நாம் என்ன செய்ய முடியும்? ஆறின கஞ்சி பழங் கஞ்சி தானே? அந்தக் 'கேஸ்' கைவிடப் பட்ட கேஸ்தான். என்ன, இப்போது புரிந்ததா?''

''ஓஹோ, விஷயம் அப்படியா? ஆகையால் அந்தக் 'கேஸ்' ரத்தாகிவிட்டது என்று சொல்லுகிறீர்களாக்கும்? இன்னும்

வேண்டுமானால் இரண்டு 'பாட்டில்' போடுங்களேன்! வேண்டாம் என்று சொல்லக்கூடாது. அவசியம் குடியுங்கள். கொண்டு வரச் சொல்கிறேன்.''

பார்க்கவராம் பின்னும் குடித்ததால் அவருக்குப் போதை அதிகரிக்கத் தொடங்கிற்று. இந்தச் சமயம் போனால் மறு சமயம் வாய்ப்பது அரிது என்று கண்ட விலாசன் இன்னும் சில ரகசியங்களைக் கக்கவைக்கலாம் என்ற எண்ணத்துடன், ''உங்களைத் தவிர வேறு யாராவது என்னிடம் இப்படிச் சொல்லியிருந்தால் நான் அவர்களைக் கேலி செய்திருப்பேன். ஆனால் உங்களைப் போன்ற பெரிய ஆபீஸரே சொல்லும்போது நான் நம்பத்தான் வேண்டியிருக்கிறது. அந்த ஒகார்மென் 'கேஸ்' இத்துடன் நின்று விட்டது என்றுதான் அர்த்தமா?'' என்றான்.

''ஆமாம்; அந்தக் 'கேஸ்' விஷயமாக நானும் அதிகமாய் ஒன்றும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. நான் இதைக் காட்டிலும் முக்கியமான மற்றொரு 'கேஸ்' விஷயமாக முனைந்திருக்கிறேன்.''

''ஓஹோ; அந்தப் புதுக் கேஸ் எதுவோ?''

'' 'கேஸ்' என்.........று.........ல், 'கேஸ்'...... இல்லை........ ஓர் அழகான........ பெண்........ இருக்கிறாள், பெண்!''

''பெண்ணா? எந்தப் பெண்? எனக்குச் சொல்லக் கூடாதா? இன்னும் ஒரே ஒரு 'பாட்டில்' வாங்கிக் கொள்ளுங்கள். எந்தப் பெண்ணைப் பற்றிச் சொல்லுகிறீர்கள்?''

''தளவலா சத்தியாக்கிரகத்தைத் தலைமை வகித்து நடத்தினாளே! அவள்தான்....உங்களுக்குத் தெரியாது?''

''எனக்கு ஸ்திரீகளைப் பார்க்கும் பழக்கம் அதிகமாக இல்லை. யார் அந்தப் பெண்?''

''அப்படியானால் நீ அவளைப் பார்க்கவில்லையா?''

''அது சரி, அந்தப் பெண்ணுக்கு என்ன?''

''கொஞ்ச காலமாக அந்தப்... பெண்.... மேல் எனக்கு.... 'லவ்' உண்டாகி இருக்கிறது. அவளைப்பற்றியே சதா ஞாபகம். நான் என்ன சொல்லட்டும் விலாஸ்! அந்தச் சரக்கை....எப்படியாவது...மயக்கிவிடவேண்டும். இதென்ன, உங்கள் முகத்தில் கலவரம் தோன்றுகிறதே? அந்தச் சத்தியாக்கிரகம் அரசாங்கத்தாரால் சட்ட விரோதம் என்று கருதப்பட்டாலும் நான் அவளை உத்தேசித்தாவது அப்படி இல்லை என்று

மறுப்பேன்! ஐயா! அந்தச் சத்தியாக்கிரகக் கடலைக் கடைந்ததனால்தானே இந்தப் பாவை என்னும் அமிருதம் கிடைத்திருக்கிறது!''

இப்படிப் பார்க்கவராம் பேசியபோது விலாசனுக்கு என்றும் இல்லாத ஆத்திரம் கிளம்பிற்று. அவன் கன்னத்தில் பளார் பளார் என்று இரண்டு அறை இழுக்கலாமா என்று அவன் கை துடித்தது. ஆனால் அவன் தன்னைத்தானே அடக்கிக்கொண்டு மேலே பேசலானான்.

''அமிருதம் யாருக்குக் கிடைத்தது? உங்களுக்கா? அப்படி என்றால் அவள் சிறையில் இருக்கிறாள் என்று சொல்லுங்கள்?''

பார்க்கவராம் இப்போது முழுவதும் மதுவின் வசம் ஆகிவிட்டதனால் அர்த்தம் இல்லாமல் உரக்கச் சிரித்துக்கொண்டே பேசினான்: ''ஐயா! சிறைச்சாலைக்குள் சென்றால் எங்கள் வீட்டுப் படுக்கையறையில் சென்ற மாதிரிதானே? எனக்கு இல்லாத சௌகரியமா அங்கே?''

'' 'எந்த ஸ்திரீ ஒருவனைக் காதலிக்கவில்லையோ அந்த ஸ்திரீயை அவள் விருப்பத்துக்கு மாறாகப் பலாத்காரப்படுத்தித் தன் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளுவதனால் கேடுதான் விளையும். அதனால் துக்கமே அதிகமாக ஏற்படும்' என்று காதலைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் சொல்லுகின்றனவாமே, வாஸ்தவமா?''

''அவள் விருப்பத்துக்கு மாறாக என்று ஏன் சொல்லுகிறீர்கள்? சிறையில் இருக்கும்போது அவளுக்கு என்று ஒரு விருப்பமும் உண்டா? எங்கள் விருப்பமேதான் அவளுக்கும். எனவே எங்களுக்கு இந்தக் காரியம் ஒரு பிரமாதமான காரியம் அல்ல. அவள் என்னை இப்போது எத்தனைதான் கடிந்துபேசினாலும் கடைசியில் இணங்கித்தானே தீரவேண்டும்? வரும் ஞாயிற்றுக்கிழமை காரியம் கைகூடிவிடும் என்று நம்புகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் ஒரு தரம் என்னைச் சந்திக்க நேர்ந்தால் நான் அப்போது உங்களிடம், 'காரியம் முடிந்துவிட்டது!' என்று சொல்லத் தவற மாட்டேன்! விலாஸ், அதோடு மட்டும் அல்ல . . . . . . .''

விலாசன் இதற்குமேல் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை.

அவன் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை இரு கைகளினாலும் பின்னால் தள்ளிக்கொண்டே சூராவேசத்துடன் எழுந்தான்.

கண்ணில் தீப்பொறி பறக்க, நெற்றியின் கற்றை நாற, விண்ணிற் சுடரும் சுடர் தோன்ற, அவன், ''போதும் நிறுத்து.

மேலே ஒரு மூச்சு விட்டாயானாலும் உன் உயிர் போய்விடும்!'' என்றான்.

கையில் இருந்த கண்ணாடிக் கிண்ணத்தை மேலும் கீழும் ஆட்டினார் பார்க்கவராம். அவர் தலையும் அப்படியும் இப்படியுமாக அசைந்தது. ஒரு பக்கம் உதட்டை இழுத்த வண்ணம் அவர் சிரித்துக்கொண்டே, ''ஓஹோ! விலாஸ்! உங்களுக்கு என்மேல் பொறாமை உண்டாகி இருக்கிறதோ! அடேடே! நீங்கள் முன்னாலேயே சொல்லக்கூடாதா? வேண்டுமானால் நீங்களும் அதில் பங்கெடுத்துக் கொள்ளுங்களேன். உங்களுக்கும் உண்டு அவளுடைய இன்பத்தில் ஒரு பாகம்!'' என்றார். இப்படிச் சொல்லிக்கொண்டே பார்க்கவராம் சிரிக்க முயன்றார்.

ஆனால் அவர் சிரிப்புக்குப் பதில் சுடச்சுட விழுந்தது அவர் வாய்மேல்! விலாசன் தன் பலம் முழுவதையும் பிரயோகித்து அவர் மோவாய்க்கட்டையின்மீதும் உதடுகளின்மீதும் மூன்று நான்கு குத்துகள் விட்டான்!

அவ்வளவுதான். பார்க்கவராமின் முகம் சாக்ஷாத் ஸ்ரீ மாருதியின் முகம்போல் ஆகிவிட்டது. எலும்பு முறிந்தது போன்ற ஒரு சத்தம் கேட்டது. அவர் கையில் பிடித்திருந்த கண்ணாடிக் கோப்பை கீழே விழுந்து சுக்கு நூறாயிற்று. பார்க்கவராம் மனிதருக்கு இல்லாத ஒருவித விசித்திரக் குரலுடன் நாய் ஊளையிடுவதைப்போல் கத்திக்கொண்டே கீழே விழுந்தார். அவர் வாயிலிருந்து மது 'களகள'வென்று வெளியே வந்தது.

விலாசன் இன்னும் தன் ஆத்திரத்தைப் பார்க்கவராமின் மேல் காட்ட இருந்தான். ஆனால் அதற்குள்ளாக ஹோட்டல் முதலாளியும் மற்றும் சிலரும் அங்கே கூடிவிட்டனர். சிலர் விலாசனை விலக்கிவிட்டுப் பார்க்கவராமைத் தூக்கி உட்கார வைத்து ஆசுவாசப்படுத்த முயன்றனர்.

பார்க்கவராம் வாயிலிருந்து ரத்தம் கசிந்து தரையின் மேல் ஓடிக்கொண்டிருந்தது. கூர்ந்து கவனிப்பவர்களுக்கு அந்த ரத்தத்தில் பார்க்கவராமின் காவி படிந்த இரண்டு மூன்று பற்களும் விழுந்து இருப்பது தெரியவரும். ஏற்கனவே போதையில் இருந்த பார்க்கவராம் இப்போது முற்றும் செத்த பிணத்தைப்போல் ஆகிவிட்டார்!

அவரைத் தூக்கிக்கொண்டு சென்ற நாலைந்து ஹோட்டல் பரிசாரகர்கள் விலாசனை உற்று நோக்கினார்கள். 'என்ன

நடந்தது?' என்று அவர்கள் கேட்பது போல் தோன்றியது அவர்களுடைய பார்வை.

''கண்ட கண்ட பெண்களைப்பற்றி யெல்லாம் வாய்க்கு வந்தபடி யெல்லாம் உளறுகிறான்! நாக்குக்கு நரம்பு இல்லையா? இது என்ன போக்கிரித்தனம்! அவன் உயிரையே எடுத்திருக்க வேண்டும்! இதற்குள்,....'' என்றான் ஆத்திரத்தோடு.

பார்க்கவராம் யார் என்பதை அங்கே வேலை பார்த்து வந்த ஹோட்டல் பரிசாரகர்கள் நன்கு அறிவார்கள். எனவே அவரைத் தூக்கிக்கொண்டே மாடிப் படிகளின் வழியாகக் கீழே இறங்கினர். விலாசன் அந்த ஹோட்டலுக்கு அடிக்கடி வந்து போய்க்கொண் டிருந்ததால் அவனையும் அங்குள்ளோர் நன்கு அறிவர்.

விலாசன் தன் சட்டைப்பையிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அந்த ஹோட்டல் முதலாளியிடம் கொடுத்துவிட்டு, ''இதோ, இந்த வித்வானை அவர் ஜாகைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பித்துவிடுங்கள்! அவர் மது மயக்கத்தினால் கீழே விழுந்து பற்களை உடைத்துக்கொண் டிருக்கிறார்! பாவம்! ஒரு 'டாக்ஸி' வைத்து அழைத்துச் செல்லுங்கள். ஆனால் அவருக்குப் புதுப் பற்கள் கட்டுவதற்கு உண்டான செலவை நான் ஏற்றுக்கொள்ள முடியாது!'' என்றான்.

இப்படிச் சொன்னதும் அங்கே கூடியிருந்த அனைவரும் உரக்கச் சிரித்தனர்.

அவர்கள் எல்லோரும் அவ்விடம் விட்டு அகன்ற பின் விலாசன் நாற்காலியில் உட்கார்ந்து, 'அப்பாடா! இன்னும் ஒரு மாத காலமாவது இந்தப் பேய் ஆசாவைச் சந்திக்க முடியாது. அதற்குள்ளாக எப்படியாவது முயன்று ஆசாவை....' என்று யோசித்துக்கொண் டிருந்தான்.

# அத்தியாயம் 15

அன்று விலாசனிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு சென்ற சரத்சந்திரன் பிறகு அவ்விடம் வரவே இல்லை. பத்துப் பதினைந்து நாட்களாகியும் சரத்சந்திரன் வராததைக் கண்டு விலாசனுக்கு மனத்தில் ஆச்சரியமும் சந்தேகமும் தோன்ற ஆரம்பித்தன.

சரத்சந்திரனை அன்று தற்செயலாக விலாசன் சந்தித்தவுடன், தான் வெகு நாட்களாக மனத்தில் போட்டிருக்கும் திட்டத்தை வெளியிட்டு அதைப்பற்றிச் சர்ச்சை செய்து ஒரு முடிவுக்கு வரும் நேரம் வந்து விட்டதாகவே நம்பினான். ஆனால் சரத்சந்திரன் வராததைக் கண்டு அவனுடைய நம்பிக்கை ஈரம் குறைந்த களிமண்ணைப்போல் வெடித்துத் துண்டு துண்டாகப் போயிற்று. ஒரு தனி மனிதனின் அடிபிடிக் கட்டாயமான தனி அபிப்பிராயத்திற்கு இடங்கொடுக்கும் கொள்கையைப் பற்றி அவன் ஏற்கனவே வெறுப்படைந்திருந்தான். ஒரு விஷயத்தை ஒருவராகச் செய்வதைவிடப் பலராக முடிவு செய்வதில் அவனுக்கு அபார நம்பிக்கை இருந்து வந்தது. ஆசா விடுதலையடைந்து வெளியே வந்ததும் அவளுடன் யோசனை செய்து, தேச சேவையில் பயனுள்ள வேலையாக எதைச் செய்யலாம் என்பதைத் தெளிவாக்கிக் கொள்ளல் வேண்டும். பிறகு வெறும் 'வந்தேமாதரம் என்று உயிர் போகுமட்டும்' வாழ்த்தியும் முடி தாழ்த்தியும் பிரயோஜனம் ஒன்றும் இல்லை என்பதை நிர்ணயப் படுத்திக்கொண்டு, வேறு பயன்தரக் கூடிய மார்க்கத்தில் ஆசாவையும் திருப்பவேண்டும்!

இந்த மகத்தான காரியங்களில் யோசனை சொல்ல அந்த வீரன் சரத்சந்திரனும் தன்னுடன் கூட இருப்பான் என்று, மிகவும் ஆசையுடன் நம்பியிருந்தான் விலாசன். நல்லவேளையாகச் சரத் அன்று அவனைத் தற்செயலாகச் சந்தித்தான், எனவே தான் திட்டம் போட்ட காரியம் கட்டாயம் கைகூடிவிடும் என்று அவன் ஊர்ஜிதம் செய்துகொண்டான். அந்தச் சர்ச்சையில்

ஆசா, சரத் இவர்களுடைய யோசனைகளை நன்கு வரவேற்கவும், தன் மனத்தில் தோன்றும் வழிகளையும் சொல்லி, பிறகு ஒரு நிச்சயமான, எளிதில் கைக்கொள்ளக்கூடிய வழியைக் கடைப் பிடிக்கவும் முடியும் அல்லவா? இவ்விதம் அவன் சரத்சந்திரனைக் கண்டதும் மனத்தில் நினைத்துச் சந்தோஷப்பட்டான். ஆனால் அன்று தற்செயலாகச் சந்தித்த சரத்சந்திரன் பிறகு எங்கே போனானோ? அவன் பிறகு வரவே இல்லை!

பத்து நாட்கள் கழிந்தன, பதினைந்து நாட்கள் சென்றன. இருபது இருபத்தைந்து நாட்களும் ஆகிவிட்டன. ஒரு மாத காலமும் கடந்துவிட்டது. ஆனால் சரத்சந்திரன் ஏன் வரவே காணோம்? அவன் எங்கே போனானோ, என்ன ஆபத்தோ? விலாசனுக்குக் கவலையும் சந்தேகமும் ஏற்பட்டன என்று சொல்லவும் வேண்டுமா?

கடைசியில் அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. ஆசா நடத்தி வந்த பால் கிடங்கில் ஒருவேளை அவன் தங்கியிருப்பானோ? அந்தப் பால் கிடங்கு பரலாபாக் என்ற இடத்தில் அல்லவா இருக்கிறது? அந்தப் பால் கிடங்கு ஏழைக் குழந்தைகளுக்குக் குறைந்த விலையில் பசும் பால் கிடைக்கும்பொருட்டு ஆசாவால் நடத்தப் பட்டது என்பதையும், ஆசா சிறைக்குச் சென்றாலும் பால் கிடங்கை மட்டும் நிறுத்தாமல் வைத்திருக்கச் சகல ஏற்பாடு களையும் செய்திருந்ததையும் அவன் முன்பே அறிந்திருந்தான். சரத்சந்திரன் ஆசாவுக்கு உதவி செய்யும் எண்ணத்துடன் இப்போது பால் கிடங்கைக் கவனித்து வருகிறானோ என்னவோ, யார் கண்டார்கள்? ஆனால் இதற்கு முன்பெல்லாம் சரத்சந்திரன் பால் கிடங்கு விஷயமாக ஒரு வேலையிலும் தலையிட மாட்டானே! ஒருவேளை அங்கே அடிக்கடி வந்து போய்க் கொண்டாவது இருக்கமாட்டானா? என்னவோ, அவனைப்போய் அங்கே தேடி விட்டு வருவதில்தான் நஷ்டம் என்ன ஏற்படப் போகிறது? எனவே விலாசன் சரத்சந்திரனைத் தேடும் நோக்கத்துடன் பரலா பாக்கிற்குப் புறப்பட முடிவுசெய்தான்.

ஆடைகளை மாற்றிக்கொண்டு புறப்பட்டான்.

மாடிப்படிகளைவிட்டுக் கீழே போனதும் டெலிபோன் மணி 'கண கண' என்று அடித்தது. விலாசன் டெலிபோன் ரிஸீவரைக் காதருகில் வைத்துக்கொண்டான்.

''ஹலோ, யாருடன் பேசவேண்டும்?''

''விலாசனுடன்!''

அந்தப் பெயரைக் கேட்டதும் அவனுக்குத் தயக்கம் ஏற்பட்டது. காரணம் மறு முனையில் பேசும் குரல் சாக்ஷாத் எல்ஸீயின் குரல் என்பதை அவன் தெரிந்து கொண்டான். லோனுவலாவிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து அவன் ஒரு தரமாவது எல்ஸீயைப் போய்ப் பார்க்கவே இல்லை.

மேலே பேசலாமா, ரிஸீவரை வைத்துவிட்டுக் 'கம்பி நீட்டலாமா' என்று அவன் யோசித்துக்கொண்டே ஒன்றுமே பேசாமல் சிறிது நேரம் தயங்கினான்.

மறுபடி எல்ஸீயின் குரல்: சற்று வருத்தத்தோடு, ''ஹலோ, ஹலோ, விலாஸ் வீட்டில் இருக்கிறாரா?'' என்றது.

''ஆமாம், நான்தான் பேசுகிறேன்.''

''அருமை நண்பா! உண்மையில் நீதானா பேசுவது?''

அவளுடைய குரலில்தான் எத்தனை பிரியமும் வணக்கமும் காதலின் நிழலும் கலந்திருந்தன!

ஆனால் அந்த உணர்ச்சி ததும்பும் குரலினால் விலாசனுக்கு ஒரு விதமான மாற்றமும் உண்டாகவில்லை. அவன் பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

''நான் உன்மேல் ரொம்ப ரொம்பக் கோபிக்கிறேன். தெரியுமா உனக்கு?''

''கோபிக்கிறாயா? எதற்காக, தேவி?''

''இங்கே பம்பாய்ப் பட்டினத்திலேயே இருந்துங்கூட நீ என்னை வந்து சந்திக்கவே இல்லை அல்லவா? நேற்று மாலையில் நான் 'காபிடல் சினிமா' வாசலில் நின்றுகொண்டிருக்கையில் நீ உன் மோட்டாரில் போவதைப் பார்த்தவுடன்தான் நீ இங்கேயே இருக்கிறாய் என்பது தெரியவந்தது.''

''நேற்றுத்தான் நான் இவ்விடம் வந்தேன்.''

''நீ பொய் பேச அஞ்சமாட்டாய்; இது எனக்கு நன்றாய்த் தெரிந்தது தானே.''

''நான் சொல்லுவதெல்லாம் வெறும் பொய் என்று உனக்குப்பட்டால் பின் ஏன் என்னிடம் வந்து பேச்சுக் கொடுக்கிறாய்?''

''அது கிடக்கட்டும்; நீ உடனே என்னை வந்து பார்க்க வேண்டும். உன்னைக் காணவேண்டும் என்று நான் எவ்வளவு துடியாகத் துடிக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? என்ன, பதில் பேசவே இல்லை? வருகிறாயா உடனே?''

''என்ன, இப்போதேயா?''

''ஆம், இப்போதேதான்; நான் ஒன்றும் மலையாளத்திலாவது புஷ்டு பாஷையிலாவது பேசவில்லையே.''

விலாசன் உரக்கச் சிரித்தான்.

அவனுடைய சிரிப்பின் ஒலி எல்ஸிக்குக் கேட்டிருக்க வேண்டும்.

''எனக்கு உன்னைப்போல் 'அவுட்' சிரிப்புச் சிரிக்கத் தெரியாது. உன்மேல் எனக்குக் கோபந்தான் உண்டாகியிருக்கிறது'' என்று சொன்னாள்.

''அந்தக் கோபத்தின் வேகத்தில் பன்னிரண்டு வருஷங்கள் முடியும் வரையில் என்னைக் கண் எடுத்தும் பார்ப்பதில்லை என்று சபதம் செய்துவிடுவாய்போல் இருக்கிறதே!''

''பன்னிரண்டு வருஷமா? கடவுளே! நான் செத்தே போய் விடுவேன். இனிமேல் பன்னிரண்டு நிமிஷங்களைக்கூட உன்னைக் காணாமல் நான் கழிக்க முடியாது; உடனே புறப்படுவாயா?''

''எல்ஸி! உண்மையில் எனக்கு இப்போது வேறு அவசரமான வேலை இருக்கிறது.''

''வேலை, கீலை. . . . . .அதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்; என்மீது உனக்குக் கொஞ்சங்கூடக் கருணை என்பதே உண்டாவதில்லையா?''

''உன்மேல் நான் இரக்கங்கொள்ள என்ன நேர்ந்துவிட்டது எல்ஸீ? அதிருக்கட்டும், உண்மையில் நான் மிகவும் அவசரமான ஒரு முக்கிய வேலையைக் கவனிக்க வேண்டி யிருக்கிறது.''

இப்படிச் சொல்லி விலாசன் எல்ஸியின் பேச்சை மேலே வளரவிடாமல், டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு, அவ்விடம் விட்டு அகன்றான்.

விலாசனின் தற்போதைய மாறுதலான புது வாழ்க்கையில் முன்பின் இருந்த பாசங்களை எல்லாம் அவன் அறவே களைந்தெறிய முயன்று வந்தான். ஆனால் அந்தப்பாசங்களை அறவே ஒழிப்பது அவனுக்கு மிகவும் சிரமமாகவே இருந்தது. இதனால் அவனுக்கு மனக் கலக்கம் ஏற்பட்டது.

பரலாபாக்கிற்குச் சென்று பால் கிடங்கில் சரத் காணப்படுகிறானா என்று தேடினான். ஆனால் சரத் அங்கே காணப்படவில்லை. அவன் அவ்விடத்திற்கு வந்து வெகு நாட்கள் ஆகிவிட்டன என்பதையும் அறிந்த விலாசனுக்குச் சரத் விஷயமாகச் சற்று வருத்தமும் சந்தேகமும் ஏற்பட்டன. நேரே திரும்பித் தன் வீட்டை அடைந்தான் விலாசன்.

அவன் தன் அறையில் போய் நுழையும் சமயத்தில் ஒரு சேவகன் அவனுக்கு முன்னால் வந்து நின்று பேசலானான்.

"நீங்கள் போனதிலிருந்து யாரோ உங்களை டெலிபோனில் அழைத்தவண்ணமாகவே இருக்கிறார்கள்."

"யார் அது?"

"யாரோ தெரியவில்லை. ஆனால் சென்ற ஒரு மணி நேரத்திற்குள் ஐந்தாறு தடவை டெலிபோன் செய்து விட்டனர். குரலிலிருந்து யாரோ பெண் என்று தெரிய வருகிறது."

"ஓஹோ, அப்படியா? சரி, பார்த்துக்கொள்ளலாம்."

பேசிக்கொண்டிருக்கும்போதே விலாசன் மாடிப்படிகளின் பக்கமாகத் திரும்பினான்.

இதற்குள் மறுபடியும் டெலிபோனின் மணி அடித்ததைக் கண்ட சேவகன், "இதோ பாருங்கள்; மறுபடியும் மணி அடிக்கிறது" என்றான்.

ஒருவேளை அந்தச் சேவகன் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருக்காவிட்டால் விலாசன் டெலிபோனை எடுத்து மறுமொழி தந்திருப்பானோ என்னவோ. ஆனால் சேவகன் அவ்விடத்தில் நின்றுகொண்டிருக்கும்போது தான் பேசுவது உசிதமாகாது என்று எண்ணி வெறுமனே இருந்து விட்டான் விலாசன்.

விலாசன் சற்று நேரம் கழித்து எழுந்து டெலிபோனருகே சென்றான்;

அந்தப் புத்திசாலியான சேவகன் தனக்கு அவ்விடம் வேலை ஒன்றும் இல்லை என்று தெரிந்ததும் மெள்ள நழுவி விட்டான்.

டெலிபோன் ரிஸீவரைக் காதில் வைத்து விலாசன் மேலே பேசலானான்.

"ஹலோ!"

"யார்? விலாசன்தானா?"

"எல்ஸி! உனக்கு என்ன பித்தம் தலைக்கேறி விட்டதா என்ன? அடிக்கு ஒரு தரம் டெலிபோன் செய்கிறாயாமே?"

"ஆமாம்; அப்படித்தான் நிமிஷத்திற்கு ஒரு தரங்கூட டெலிபோன் செய்வேன். டெலிபோனுக்கும் நீ அசைந்து கொடுக்காவிடில் நேரே உன் பங்களாவிற்கே வந்து உன்னைக் கையோடு பிடித்துக் கொள்வேன்."

"எல்ஸீ, உனக்கு என்ன மூளை குழம்பிவிட்டதா?"

...MARA PUBLIC LI...

"நீ என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். ஆனால் கட்டாயம் இன்று நீ என்னைச் சந்தித்தே தீர வேண்டும்."

"இல்லையானால்—?"

"நான் விஷத்தைத் தின்று உயிரை விடுவேன்; என் மேஜை மீது, 'விலாசன் என்னைத் திரஸ்கரித்ததால் உயிர் விடுகிறேன்' என்று சீட்டும் எழுதி வைத்துவிட்டுச் சாவேன்."

"என்ன, பயங்கரமாகப் பேசுகிறாயே!"

"பொய் இல்லை; முக்காலும் உண்மை."

"நன்றாயிருக்கிறது. நீ இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் எனக்குப் பிடிக்காது."

"பின் நீ ஏன் சீக்கிரம் புறப்பட்டு வரக்கூடாது? 'வருகிறேன்' என்று சொல்லேன்."

"சரி; வருகிறேன்."

"என் கண்மணி அல்லவா நீ!"

இப்படிச் சொல்லி எல்ஸீ டெலிபோனை ஒரு முத்தம் கொடுத்தாள். அந்தச் சத்தம் விலாசனுக்கு நன்கு கேட்டது.

* * * *

எல்ஸீயின் வீட்டு மாடிப்படியில் ஏறிச் சில படிகள் சென்றதும் வேறு பக்கமாகத் திரும்பிச் செல்லவேண்டியிருக்கும். அவ்விடத்தில் பட்டப்பகல் நேரத்திலுங்கூட இருட்டாகவே இருக்கும். ஆனால் இருட்டில் சில படிகள் ஏறிச் சென்றதும் மாடியின் அறையில் பூரணமான சூரிய வெளிச்சம் வந்து கொண்டிருக்கும். ஆதலால் படிகளில் காணப்படும் குறையை யாரும் அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. காற்றோட்டமுள்ள அந்த அறையில் நுழைந்ததும் விலாசனுக்கு மனத்தில் சற்று உத்ஸாகம் ஏற்படலாயிற்று.

அவனைக் கண்டதும் எல்ஸீயின் மனத்தில் உண்மையாகவே ஆனந்தம் உண்டாயிற்று என்பது அவள் முக பாவத்திலிருந்தே தெளிவாய்த் தெரிந்தது. ஆனந்த மேலீட்டினால் எல்ஸீ ஏதேதோ களபளவென்று பேச ஆரம்பித்ததைத் தடுக்க முடியாது என்று அறிந்த விலாசன் அவளையே பேசும்படி விட்டு விட்டான்.

தன்னுடைய வெறும் தரிசனத்தால் மட்டுமே பல பெண்களுக்கு ஆனந்தம் ஏற்படுகிறது என்னும் உண்மையை அறிந்த எந்த யுவனுக்கும் மனத்தில் சற்றுக் கர்வம் ஏற்படத்தானே

ஏற்படும்? ஆனால் ஆனந்தப்படும் பெண்ணின்மேல் குறிப்பிட்ட யுவனுக்குக் காதல் உணர்ச்சியே ஏற்படாவிட்டால் நிலைமை மிகவும் சங்கடம் ஆகிவிடும்.

விலாசனுடைய நிலைமையும் அவ்வாறே இருந்தது. அவனுடைய முகபாவம் ஒருவிதமாக மாறியிருந்தது.

விலாசனின் முகத்தில் ஏற்பட்ட அந்த மாறுதலை எல்ஸீ நன்கு கவனிக்கவில்லை போலும்! அவள் விலாசன் அவ்விடம் வந்ததைக் குறித்து—இல்லை, வரவழைக்கப்பட்டதைக் குறித்து மிகவும் ஆனந்த பரவசம் ஆகிவிட்டாள். அந்த ஆனந்த மேலீட்டினால் ஏதேதோ பேசிக்கொண்டே இருந்தாள்.

அவன் எல்ஸீ இருந்த இடத்திற்குச் சற்றுத் தூரத்தில் இருந்த நாற்காலி ஒன்றின்மேல் உட்கார்ந்ததைக் கண்ட எல்ஸீக்கு மனத் திருப்தியே ஏற்படவில்லை. அவள் விலாசனைத் தன் அருகில் சோபாவில் வந்து உட்காரும்படி பன்முறை வேண்டிக் கொண்டாள். ஆனால் தன் சொல்லை விலாசன் மதிக்காததைக் கண்டதும் எல்ஸீ தானே எழுந்து விலாசன் உட்கார்ந்திருந்த நாற்காலியிலேயே அவனுடன் நெருக்கிக்கொண்டு உட்கார்ந்தாள்.

தான் பேசிக்கொண்டே இருந்த விஷயங்களைப் பற்றி விலாசனுக்குக் கிஞ்சித்தும் கவர்ச்சி ஏற்பட்டதா என்று கவனிக்காமலேயே எல்ஸீ மேலும் மேலும் ஏதேதோ பேசிய வண்ணமாகவே இருந்தாள்.

தான் தினம் விலாசனுக்காக எப்படி வழி பார்த்துக்கொண்டிருந்தாள், அவனைப் பார்க்க எத்தனை ஆவலுடன் இருந்தாள், இவைகளைப்பற்றி எல்ஸீ வர்ணித்துவிட்டாள். பிறகு யார் யாருடன் எந்த எந்த இடங்களில் டென்னிஸ் விளையாடினாள் என்பதைக் கூறி முடித்ததும் யாருடன் விருந்து சாப்பிட்டாள் என்பதையும் வர்ணித்துக் கூறினாள். சமுத்திர ஸ்நானத்திற்கு எவர் எவருடன் சென்றாள் என்பதையும் கூறாமல் விடவில்லை. விலாசனை ஊருக்கு அனுப்பிய பிறகு எத்தனை ரூபாய்க்குத் துணிமணிகள் வாங்கினாள் என்றும், அவைகளின் அழகையும் சிறிது நேரம் எடுத்துரைத்தாள். பிறகு எழுந்து உள்ளே சென்று சில புதிய துணிகளை நேரில் எடுத்து வந்து காண்பிக்கவும் காண்பித்தாள். மறுபடியும் விலாசனுடன் நெருக்கியடித்துக்கொண்டு உட்கார்ந்த வண்ணம், தான் பார்த்த புதிய சினிமாக்களின் கதைப் போக்கு, நல்ல அம்சங்கள், கெட்ட அம்சங்கள் இவை

களைப் பற்றியும் விஸ்தாரமாகப் பேசினாள். ஒரு ஜோஸியனிடம் ஓர் அணாவை விட்டெறிந்து தன் கைரேகைப் பலன்களை அறிந்த விஷயங்களைக்கூட அவள் சொல்லத் தவறவில்லை.

விலாசன் அவளுடைய பேச்சிற்கு ஒரு சிறிதும் செவி சாய்க்காததைக் கண்டதும் எல்ஸீ, விலாசனுடைய அழகு பொருந்திய, தன்னை வெகுதூரம் மயக்கிய, கறுத்த பளபளப்பான தலைமயிரைத் தடவிவிட்டுக்கொண்டே, "ஏய்! நான் சொல்லுவதெல்லாம் உனக்குக் காதில் கேட்கிறதா, என்ன?" என்றாள்.

தன் கையினால் அவளுடைய கையைச் சற்று விலக்கி விட்டுக் கொண்டே விலாசன், "கேட்காமல் என்ன? அந்த ஜோஸியன் என்ன சொன்னான்?" என்றான்.

"அடேயப்பா! அந்த ஜோஸியன் என்னவெல்லாமோ சொல்லிக்கொண்டே போனான். எனக்கு அவன் சொன்ன தெல்லாம் இன்பகரமாகத்தான் இருந்தது. ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் மிகவும் பயங்கரமாக........"

"அது என்ன? உன் கல்யாண விஷயமோ?"

"சீ, அதைக்காட்டிலும் பயங்கரமானது. எங்கே சொல்லு பார்க்கலாம் என்ன என்பதை?"

"உன் சிறு தாயார் சீக்கிரம் இறந்துவிடுவாள் என்பதா?"

"ஏறக்குறையச் சரியான விடைதான்; இருந்தாலும் முற்றும் சரியில்லை."

"என்னால் முடியவில்லை எல்ஸீ! நீயே சொல்லிவிடு."

"சொல்லட்டுமா? நான் இந்த இடத்திலேயே மரணம் அடையப் போகிறேனாம்!"

"அடேயப்பா! இதே அறையில்தானா?"

"அறை, வீடு என்று இல்லை, இந்த வீட்டுக்குள்ளேயே தான்."

"மாடியில்தான் இருக்கலாம்! மாடிப்படியில் இருட்டாக இருக்கிறதல்லவா? அவ்விடத்தில் ஏற்படலாம். அதிருக்கட்டும். இந்த மரண விஷயத்தைப்பற்றி என்னிடம் பேசவா என்னை அழைத்தாய்?"

"என்ன பேசினாலும் நீதான் மறுமொழியே தருவதில்லையே. ஆகையால் நான் எல்லாவற்றையும் சொல்லித் தீர்த்தேன். இனி மேல் எங்கள் ஆபீஸ் விஷயமாக ஏதாவது பேச்சு எடுத்தால்தான் உண்டு; இல்லையானால் பேசுவதற்கு வேறு விஷயங்கள் அகப்பட

வில்லை. நான் சொல்லுவதை யெல்லாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரிடமும் வெளியிடக்கூடாது, தெரியுமா? சட்ட விரோதமான ஒரு சிலரைப் பம்பாயில் கைது செய்யப் போவதாக ஒரு சமாசாரம்.........''

''ஓஹோ அப்படியா? இந்த விஷயங்கள்தாம் கேட்க மிகவும் ரம்மியமாக இருக்கின்றன.''

''ஆம், ரசமானவைகளே! இந்தச் சட்ட விரோதமான கூட்டம் பஞ்சாபிலிருந்து வந்திருக்கிறதாம். வங்காளத்திலிருந்தும் பலர் வந்திருப்பதாக வதந்தி. அவர்களுடன் பம்பாய் ஆசாமி ஒருவனும் சேர்ந்திருக்கிறுனும். எங்கள் இலாகாவின் கண்ணேட்டம் அவன்மேல் விழுந்திருக்கிறது. அவன் பெயர் வந்து.........என்ன?......ஆம்...... சரத்சந்திரன்!''

அந்தப் பெயரைக் கேட்டதும் விலாசனுக்கு எதிர்பாராத அதிர்ச்சி ஏற்பட்டது. அதன் வேகத்தில் விலாசன் எல்ஸீயின் கையைப் பிடித்துப் பலமாக அழுத்தினுன்.

பிறகு, ''என்ன சொன்னுய்? சரத்சந்திரனு?'' என்றுன்.

எல்ஸீ அவன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு பிரமித்துப் போய்விட்டாள்.

''இது என்ன, உன் முகம் ஒரேயடியாக வெளுத்து விட்டதே? உனக்குப் பிடிக்காத விஷயங்கள் பலவற்றை நான் பேசிக்கொண்டே இருந்துவிட்டேன். நான் ஒரு முழு மூடாத்மா. எனக்கு வருத்தமாய் இருக்கிறது. மன்னிக்க மாட்டாயா? கொஞ்சம் இரு, நான் உனக்கு ஒரு டம்ளர் சர்பத் கொண்டு வருகிறேன். அதைப் பருகினுல் மனத்திற்குச் சற்று நிம்மதியாக இருக்கும். என் வீட்டிற்கு ஒரு புதிய சமையல்காரி வந்திருக்கிறுள். அவளுடைய சமையலின் ருசி சொல்ல முடியாது! உனக்காக இன்றைக்கு 'ஸ்பெஷல்' சாப்பாடு தயார் செய்யச் சொல்லியிருக்கிறேன். நீ ஒரு சாப்பாட்டு ராமன் என்பது எனக்குத் தெரியும் அல்லவா?''

கடைசி வார்த்தைகளைப் பேசுகையில் அவள் உரக்கச் சிரித்தாள். பிறகு அழகாய் வேலைப்பாடு செய்யப்பட்ட ஓர் அலமாரியிலிருந்து சாப்பாட்டிற்கான கோப்பைகளையும் தட்டுகளையும் எடுக்க ஆரம்பித்தாள்.

* * * *

**சா**ப்பிடுவதற்காக இருவரும் எழுந்து சாப்பாட்டு அறைக்குள் நுழைந்தனர். நாற்காலியில் உட்காரும்போது

விலாசனின் பார்வை அங்கே தொங்கிக்கொண்டிருந்த ஒரு புகைப்படத்தின்மேல் விழுந்தது. இத்தனை நாளும் எல்ஸியின் சாப்பாட்டு அறையில் ஒரு புகைப்படம் இருந்ததாக விலாசனுக்கு நினைவில்லே. புகைப்படத்தில் கண்ட ஆசாமி யார் என்பதையும் அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

''இவ்வளவு கூர்மையாக எதைக் கவனிக்கிறாய், விலாஸ்?'' என்றாள் எல்ஸீ.

''அந்தப் புகைப்படத்தை!''

''அத்தனை கவனத்துடன் பார்க்க அதில் என்ன இருக்கிறது?''

''யாருடைய படம் அது?''

''யாருடையதாய் இருந்தாலும் உனக்கென்ன? அது கிடக்கட்டும்; நீ என்னையே பார்த்துக்கொண்டு பேசமாட்டாயா?''

''யார்தான் அது, சொல்லேன்?''

''உன் புகைப்படத்திற்குத் தங்கச் சட்டம் போட்டு என் படுக்கை அறையில் வைத்திருக்கிறேன். இவர் படத்தை இங்கே சாப்பாட்டு அறையில் வைத்திருப்பதால் உனக்கு ஒன்றும் இடைஞ்சல் இல்லையே? நீ ஏன் வீணாக அவர் மேல் சந்தேகமும் துவேஷமும் கொள்ளுகிறாய்? அவரிடம் உனக்குப் பொறாமை ஏற்படக் காரணமே இல்லை. என்ன, விளங்கிற்றா?''

விலாசனுக்கு எல்ஸியின் மீது எல்லையற்ற காதலும் ஏற்பட்டு, அவள் தன்னைத் தவிர வேறு யாரையும் காதலிக்கக் கூடாது என்று அவன் உண்மையில் நினைத்திருந்தால் எல்ஸீ சொன்ன வார்த்தைகள் ஆனந்த தாயகமாக இருந்திருக்கலாம். ஆனால் விஷயந்தான் அப்படி ஒன்றும் இல்லையே. அவன் ஒருபோதும் எல்ஸியைக் காதலித்ததும் இல்லை. காதலிக்கப் போவதும் இல்லை. விலாசனின் பழைய கேளிக்கை வாழ்க்கையும் அடியோடு மாறி இருந்தது. எனவே எல்ஸீ பேசிய பேச்சின் உள் அர்த்தம் அவனுக்குச் சரிவர விளங்கவில்லை. ஆனால், 'பொறாமை' என்று அவள் சொன்னதுமட்டும் விலாசனுக்கு மனத்தில் சற்றுக் கலக்கத்தை உண்டாக்கிற்று. அவன் உடனே, ''பொறாமையா? சீ! உனக்குச் சொல்ல இஷ்டமில்லை யானால் அந்தப் படத்திலுள்ளவர் யார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. நான் ஏதோ தற்செயலாகக் கேட்டேனே ஒழிய எனக்கு ஏன் அவர்மேல் பொறாமை ஏற்படவேண்டும்?

முன்பு எப்போதும் இந்தப் படம் இங்கு இல்லையே, ஏது புதிதாக இருக்கிறதே என்பதனாலேயே நான்—'' என்றான்.

''இதற்குமுன் நான் எப்படி இந்தப் படத்தை இங்கே மாட்டமுடியும்? எனக்கு இந்த ஆசாமியை அப்பொழுது தெரியாதே. சென்ற மூன்று மாதங்களாகத்தானே இவர் எனக்கு அறிமுகம் ஆகி என்னுடன் பழக வருகிறார்.''

''யார் இந்த மனிதர்?''

''உன்னால் இன்னும் இவரை அடையாளம் கண்டு பிடிக்க முடியாததைக் கண்டு எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஆறு ஏழு மாதங்களுக்கு முன்பு பொதுவுடைமைச் சதி வழக்கு விசாரணை நடத்த ஒரு மனிதர் பம்பாய்க்கு வந்திருந்தார் அல்லவா? உனக்கு ஞாபகம் இல்லையா?''

''அப்படியானால் ஜஸ்டிஸ் ஒயிட்பீல்டின் புகைப் படம் என்று நீ சொல்ல வருகிறாயா?''

''ஆமாம் அவரேதான், அவரேதான்.''

எல்ஸீயின் இந்த மறுமொழி விலாசனின் காதுகளில் பட்டதோ என்னவோ யார் கண்டார்கள்? காரணம் அவனே ஆச்சரியத்தில் மூழ்கிப்போய் இருந்தான். அவனுடைய ஆச்சரியத்திற்குக் காரணம் ஓர் அழகிய யுவதியிடம் வயோதிகனுடைய படம் இருப்பதைக் கண்டு அல்ல; ஆனால் தான் சமீப காலமாகப் படித்துவரும் இந்திய நாகரிகம், இந்தியப் பண்பின் விமர்சனம், புதிய பாரதத்தின் கடமை முதலிய புஸ்தகங்களின் ஆசிரியரான அதே ஜஸ்டிஸ் ஒயிட்பீல்டின் படத்தைத் தற்செயலாக எல்ஸீயின் வீட்டில் பார்த்ததைக் குறித்தே அவன் ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தான். ஜஸ்டிஸ் ஒயிட்பீல்டின் புஸ்தகங்களை அவன் பெரிதும் விரும்பினான் என்று சொல்லத் தேவையில்லை.

சாப்பாட்டை அரைகுறையாக முடித்துக் கொண்டு கைக்குட்டையால் கையைத் துடைத்துக்கொண்டு எழுந்து சென்று அந்தப் படத்தையே கூர்ந்து கவனித்தான் விலாசன்.

''இவரை உனக்கு எப்படி அறிமுகமாயிற்று?'' என்றான் விலாசன்.

''அது ஒரு பெரிய ராமாயணம்.''

''இவர் அடிக்கடி உன்னைச் சந்திக்க வருகிறாரோ?''

''இல்லை இல்லை. ஆனால் அவர் ஒரு பெரிய படிப்பாளி. எனக்கு இவரிடம் மட்டற்ற மதிப்பும் அன்பும் இருக்கின்றன. என்றாலும் காதல் உண்டாக இடம் இல்லை என்பதை இவர்

அறிந்துதான் இருக்கிறார். இவர் என்னிடம் தகப்பனார் போலப் பழகிவருகிறார். ஆனால் இவர் என்னை எவ்விதத் தொந்திரவுகளுக்கும் ஆளாக்குவதில்லை. இவருக்குக் கவலையும் சோர்வும் தோன்றினால் உடனே எனக்கு டெலிபோன் செய்கிறார். நான் 'தாராளமாக வரலாம்' என்று சொன்னால்தான் இவ்விடம் வருகிறார்.''

''இவருக்கு அப்படிக் கவலை உண்டாகக் காரணம் என்ன? நான் அவர் எழுதியபுஸ்தகங்களை வாசித்திருக்கிறேன். வருத்தமும் சோகமும் கிஞ்சித்தும் அவர் கதைகளில் காணவே முடியாதே. ஆனால் அவைகளின் நடை ஆனந்தமாக இருக்கிறதே!''

''அடே சுத்தப் பைத்தியமே! கேவலம் ஒருவர் எழுதிய புஸ்தகங்களை மட்டும் வைத்துக்கொண்டு ஆசிரியருடைய குணாதிசயங்களையும் வாழ்க்கை நிலைமையையும் கண்டுபிடித்து விட முடியாது. அதற்கு நேர் விரோதமாக எழுத்தாளர்கள் தங்கள் மனத்தைச் சமாதானப்படுத்த வேறு வழியின்றித் தாங்கள் சாதிக்க முடியாதவைகளைப் புஸ்தகத்தில் எழுதித் திருப்தியை அடைகிறார்கள். துக்கமயமான ஓர் ஆசிரியர் தம் கதைகளில் இன்பத்தையே பிரதானமாக வைத்து எழுதிவிடுகிறார். வீரக்கதைகள் எழுதும் ஆசிரியர்கள் வாழ்க்கையில் கோழைகளாக இருந்திருக்கிறார்கள் அல்லவா? அதைப்போலவே ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் என்பவரும் துக்கமயமான வாழ்க்கையையே நடத்துகிறார்.''

''ஓஹோ, அப்படியா?''

''ஆமாம்; அவர் மனைவிக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. மகனோ அவிழ்த்து விட்ட கழுதையாகி விட்டான். மகளோ வெனிஸ் எதிர்பாராத விபத்தில் அகப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள், பாவம்! அவரைக் கண்டால் எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது.''

''அடேயப்பா—''

இப்படிச் சொன்னதும் விலாசன் திரும்பத் தன் இடத்தில் வந்து உட்கார்ந்தான்.

சமையல் மிகவும் ருசிகரமாக இருந்ததை விலாசன் அறிந்தும், சாப்பாட்டில் நாட்டம் கொள்ளாது வேறு எதிலேயோ கவனம் செலுத்திய வண்ணம் இருந்தான்.

சிறிது நேரத்திற்கு முன்பு அவன் ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் துரையைப் பற்றி வேறு விதமாக எண்ணியிருந்தான். உயர்ந்த

கல்வியும், அறிவும், நிரம்பக் கியாதியும் பெற்ற அந்த வயோதிகர், ஒரு சிறு யுவனைப்போல் எல்ஸீயின் வீட்டிற்கு அடிக்கடி வரக் காரணம் யாதாக இருக்கலாம் என்பதே அவன் பிரச்னை. நன்கு யோசித்துப் பார்த்ததில் அவர் இங்கு வருவது கேவலம் காம வேட்கை கொண்டு அல்ல என்பது அவனுக்கு ஸ்பஷ்டமாகப் புலனாயிற்று. இந்த உலகத்தில் பற்பல விஷயங்கள் ஒன்றுக்கொன்று பின்னிக் கிடக்கும் சிக்கலான நிலைமையைப் பற்றி விலாசன் சற்றுச் சிந்திக்கலானான்.

சாப்பாடு முடிந்ததும் எல்ஸீ பற்ற வைத்துக் கொடுத்த சிகரெட்டை இரண்டு மூச்சு இழுத்ததும் விலாசன் அதைச் சாம்பல் கிண்ணியில் போட்டுவிட்டு, ''நல்லது எல்ஸீ! போய் வருகிறேன்'' என்றான்.

அவன் நீட்டிய கைகள் இரண்டையும் எல்ஸீ மிகவும் அன்போடு பற்றிக்கொண்டு, ''முடியாது! நீ என்னை விட்டுப் போக நான் அனுமதிக்க மாட்டேன்'' என்று கெஞ்சினாள்.

''எல்ஸீ, நான் இனிமேல் இங்கே அதிக நேரம் தங்க முடியாது. வெறுமனே நீ என்னைத் தொந்தரவு செய்கிறாய்.''

இவ்விதம் பேசியபோது தற்செயலாக விலாசனின் பார்வை ஜஸ்டிஸ் ஒயிட்பீல்டின் புகைப்படத்திற்குச் சென்றது.

விலாசன் அந்தப் படத்தைப் பார்த்தது எல்ஸீக்கு வேறு விதமாகப்பட்டது. விகல்பமான எண்ணங்கொண்ட அவள், ''ஓ, எனக்குச் சமாசாரம் புரிந்துவிட்டது! என்மேல் ஆணையாக நான் உன்னைத் தவிர யாரையுமே காதலித்ததில்லை; காதலிக்கப்போவதும் இல்லை! நீ ஏன் வீணாகச் சந்தேகப்படுகிறாய்? நீ எப்போதுமே என்னைக் காதலிப்பதாக வாய்விட்டுச் சொன்னதில்லை. ஆனால் முன்பெல்லாம் என்னைத் தொட்டு விளையாடுவாய். கழுத்தில் கையைப் போட்டு வளைத்துக்கொள்வாய்! அவைகளை எல்லாம் இப்போது ஏன் செய்வதில்லை? என்மேல் இருந்த ஓரளவு காதல் கூட இப்போது இல்லாமல் போய்விடக் காரணம் என்ன?'' என்றாள்.

விலாசன் அவளைக் கூர்ந்து கவனித்தான். அவளுடைய கேள்விகளுக்கு நீண்டதோர் விடையளிக்க எண்ணுபவனைப்போல் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னான்:

''எல்ஸீ! என்னிடம் எவ்விதமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை என்னாலேயே சொல்லமுடியவில்லை. நீ என்ன தான் வியாக்கியானம் செய்யச் சொன்னாலும் அதை நான் சரிவர

வெளியிட முடியாது. நீ மட்டும் ஏன், எவர் கேட்டபோதிலும் நான் என் மாறுபட்ட வாழ்க்கைக்குக் காரணங்களைச் சொல்ல முடியாது. சுருங்கச் சொன்னால் சுக துக்கங்கள் எனக்கு இப்போது பலமாக ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன. முன்பு கேளிக்கைகளிலும் ஆட்டங்களிலும் நாட்டங்கொண்ட என் மனம் இப்போது ஏனோ ஒரு நிலையற்றதாய் அவைகளை வெறுக்கிறது. எந்தக் குளிர்ச்சியான சந்திரிகையின் கிரணங்கள் முன்பெல்லாம் என் மனத்தைக் கவர்ந்தனவோ, எந்தக் குளிர்ச்சி பொருந்திய நிலா வெளிச்சத்தில் நாம் இருவரும் விளையாடினோமோ, அதே சந்திரிகை இன்று எனக்குத் தகிக்கும் பகலோன் கிரணங்களைப் போல் தோன்றுகிறது. காரணம் தெரியவில்லை. கேளிக்கை எனக்கு இப்போது வேப்பங்காயாகத் தோன்றுகிறது. பெண்களுடன் பழகவும்,—ஒரே ஒரு பெண்ணைத் தவிர வேறு எவருடனும் பழகவும் எனக்கு இப்போது இஷ்டமே இல்லை.''

எல்ஸீ அவனை வெகுநேரம் வரையில் உற்று நோக்கிக்கொண்டிருந்தாள். பிறகு ஆச்சரியத்துடன், ''நீ என்ன, காதல் நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறாயா?'' என்றாள்.

''ஆம்; எந்தப்பெண் எனக்குக் கிஞ்சித்தும் எட்டாதவளோ, எவளை நான் தீண்டுவது வெறுங்கனவோ, அந்தப் பெண்மீது என் காதல் செல்லுகிறது.''

''பின், என்னைத் துன்புறுத்துவதில் உனக்கு என்னதான் லாபம் வரப்போகிறது?''

எல்ஸீ மறுபடியும் விலாசனின் கைகளைப் பற்றினாள்.

''இல்லை எல்ஸீ, நான் உனக்கு எவ்விதத்திலும் துக்கம் விளைவிக்கவில்லை. நான் உன்னுடன் சிநேக பாவத்துடன் தான்—''

''நானும் உனக்கு ஒருவிதத்திலும் தீங்கு எண்ண மாட்டேன். ஆனால் விலாஸ், இன்று ஒரே ஒரு நாள் மட்டும் நாம் இருவரும் ஒன்று கலந்து—''

விலாசன் எல்ஸீயின் கைகளை விடுத்து விலகினான்.

''எல்ஸீ! என்ன இது? நான் சொல்வதை நீ நிராகரித்தால் எனக்கு உன்மேல் வெறுப்புத்தான் ஏற்படும்!''

''நீ என் பேச்சைக் கேட்காவிட்டால் உன் மீது எனக்கு எல்லையற்ற துவேஷந்தான் உண்டாகும்! ஒரு பெண்ணின் துவேஷம் ஆயிரம் அம்புகளைக் காட்டிலும் கொடியது என்பதை நீ அறியாயா?''

''நீ என்மேல் துவேஷம் கொண்டால் எனக்கு மனவருத்தம் ஏற்படுவது உண்மைதான். ஆனால் அதுதான் கடவுள் சித்த மானால் அதை மாற்றவல்லார் யார்? சரி, நேரம் ஆகிறது; வருகிறேன்'' என்று கூறி, விலாசன் அங்கே ஒரு கணமும் நிற்கா மல் திரும்பினான்.

அன்று விலாசன் தனக்கு ஒரு புதிய விரோதியைச் சிருஷ்டித்துக்கொண்டான்! ஆனால் அவன் நிர்மாணித்த விரோத பாவத்தைப் பற்றி அவனுக்கே ஒன்றும் தெரியாது. ஆசா விற்குச் சமர்ப்பிக்கவேண்டிய தன் இணையற்ற காதலை மிகவும் தூயதாக வைத்துக் கொண்ட பெருமையால் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. பக்தன் ஈசுவரனுக்குத் தன் பூஜையினால் இன்பம் உண்டாகிறதா துன்பம் உண்டாகிறதா என்பதைப் பற்றி எண்ணுவதில்லை. பூஜைக்கான பூக்கள் மிகவும் புதியன வாகவும், வாசனை உள்ளனவாகவும் இருந்துவிட்டாலே பக்த னுக்கு ஆனந்தம். காதலுக்கும் தன் காதல் யாருக்கு அர்ப் பணமோ அவர்கள் அதனால் ஆனந்தப்படுகிறார்களா என்ற கவலை இல்லை. தாங்கள் சமர்ப்பிக்கும் காதல் தூயதாக இருந்தாலே போதுமானது.

# அத்தியாயம் 16

என்றைக்கு அந்தக் காவல்காரக் கிழவியிடமிருந்து கத்தியை வாங்கி வைத்துக்கொண்டாளோ, அன்றைத் தினத்திலிருந்தே ஆசாவின் மனத்தில் பற்பல குழப்பங்கள் ஏற்பட ஆரம்பித்தன.

தன் கற்புக்குப் பங்கம் வரும்போலிருந்தால் தற்காப்பிற்காகவும் ஆத்மத் தியாகத்திற்காகவும் உபயோகப்படும் ஒரு கத்தி தன்னிடம் இருக்கிறது என்று எண்ணும் போதெல்லாம் அவளுக்கு மனச் சமாதானம் ஏற்படும். ஆனால் மறு கணமோ எனில் தன் தூய தன்மை எவ்விதத்திலாவது பங்கப்பட்டு விடுமோ என்ற கவலை அவளை அல்லலுறச் செய்யும். அவளுடைய எண்ணம் அந்த ஒரு விஷயத்திலேயே ஆழ்ந்து பதிந்து கிடந்தது. விழித்துக்கொண் டிருக்கையிலும் அந்த ஒரே யோசனைதான். தூங்கும்போது கனவு கண்டாலும் அதே விஷயத்தைப் பற்றிய கனவேதான். ஒவ்வொரு கணத்திலும் அவள் தனக்கு வரப் போகும் கஷ்டத்தை எதிர்பார்த்துத் துடித்துக்கொண் டிருந்தாள். கனவில் ஏதாவது கேவலமான காட்சியைக் கண்டு உடனடியாக விழித்துக்கொள்ளுவாள். அப்போது அந்தச் சிறைச் சாலையின் பயங்கர இருட்டும், எங்கேயோ தூரத்தில் கத்திக்கொண் டிருக்கும் வண்டுகளின் இரைச்சலும் அவளுடைய பயத்தை அதிகரிக்கச் செய்யும். சஸ்திர சிகித்ஸையை எதிர்பார்த்திருக்கும் ஒரு சீக்காளி இரவும் பகலும் அந்த ரண சிகித்ஸையைப் பற்றியே கனவு காண்பதைப்போல் ஆசாவும் தனக்கு வருவதாக இருந்த துன்பத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள்.

ஒரு வாரம் கழிந்தது. பிறகும் பதினைந்து நாட்கள் ஆகி விட்டன. ஒருமாத காலமும் சென்றது. ஆனால் பார்க்கவராமின் பயங்கரத் தோற்றம் ஆசாவுக்குக் கிடைக்கவே இல்லை. அவன் அங்கு வரவே இல்லை. எனவே ஆசாவின் மனத்திலும் கொஞ்சங் கொஞ்சமாகக் கவலை குறைய ஆரம்பித்தது.

எனக்கு ஏற்பட இருந்த அந்தத் துன்பமயமான நிகழ்ச்சி ஏதேனும் எதிர்பாராத விதமாகத் தடைப்பட்டு நின்றுவிட்டதா என்ன? இவ்விதமான கேள்வி அவளுடைய மனத்தில் அடிக்கடி தோன்றித் தோன்றி மறைந்தது. அவளுக்கு அப்போது உண்மையில் ஆனந்தம் ஏற்படும். அடுத்த கணமே அந்த ஆனந்தத்திற்கு முற்றுப்புள்ளி வந்துவிடும். அவள் தன் மனத்திற்குள்ளேயே சந்தேகத்தைக் கிளப்பிவிடுவாள். 'ஏ பைத்தியக்கார மனமே! ஏன் வீணுகப் பொய் ஆனந்தத்தில் ஆசாவை மெய்ம்மறக்கச் செய்கிறுய்? மனிதனுக்கு ஒரு தரம் கஷ்டம் வர இருந்து அது எக்காரணத்தாலாவது தடைப்பட் டிருந்தால், அது இனி வராது என்று கருதுவதற்கு இடமில்லை. ஒரு வேளை பின்னுல் இருந்து அது ஆளை எதிர்பாராத விதமாகத் தாக்கினுலும் தாக்கலாம்.'' அல்லும் பகலும் அனவரதமும் ஆசாவுக்கு இதே நினைவுதான்.

இப்படிக் கவலைப்பட்டுக்கொண்டு கழித்த நாட்களில் ஆசாவுக்கு மனக் கொதிப்பைப் போலவே உடலிலும் தாபம் ஏற்பட்டது.

கடைசியில் ஒரு நாள் மாலையில் 'ஆர்டர்லி' ஒருத்தி வந்து, ''உங்களை ஜெயிலர் சாஹிப் உடனடியாக வரச் சொன்னுர்'' என்றுள்.

ஆசாவின் அடிவயிற்றில் இடி விழுந்தது!

''எதற்காக?'' என்றுள்.

''எனக்கு என்ன தெரியும்? கையோடு அழைத்துக்கொண்டு சீக்கிரம் வரச்சொன்னுர்; இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.''

''ஆபீஸில் ஜெயிலர் ஸாஹிப் மட்டும் தனியாக இருக்கிறுரா?''

''இல்லை; இன்னும் ஒருவரும் கூட இருக்கிறுர்.''

''யார், பார்க்கவராமா?''

''அது யார் பார்க்கவராம்? எனக்கு அதெல்லாம் தெரியாது.''

''அவர்தான், ஸி. ஐ. டி. ஆபீஸர்.''

''எனக்கு அவரைத் தெரியாது; ஒருவேளை அவராக இருந்தாலும் இருக்கலாம்.''

ஆசாவின் நெஞ்சு பட்டுப்பூச்சியின் சிறகைப்போல அடித்துக் கொண்டது.

அவள் தன் பற்களால் கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டே இரண்டு விநாடி மௌனம் சாதித்தாள். பிறகு நடுங்கும்

குரலில், "நான் வர முடியாது என்று சாஹிபிடம் சொல்லி விடுங்கள்!" என்றாள்.

'ஆர்டர்லீ' ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனாள்.

"அம்மா, கைதிகள் இவ்விதம் பதில் சொல்லக் கூடாது. சாஹிப் பிறகு ரொம்பக் கோபித்துக் கொள்ளுவார். நான் சொல்லுவதைக் கேளுங்கள். பேசாமல் என்னுடன் வாருங்கள்" என்றாள்.

ஒருவேளை இந்த 'ஆர்டர்லீ' ஸ்திரீயும் அந்த அயோக்கியக் கூட்டத்தாரைச் சேர்ந்தவளாக இருப்பாளோ என்று எண்ணிய வாறு ஆசா வாய்திறந்து ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் வெறுமனே இருந்தாள்.

"உம், புறப்படுங்கள் அம்மா, ஸாஹிப் உங்களை வழி பார்த்துக் கொண்டே காத்திருப்பார்."

"காத்திருந்து களைத்துப் போகட்டுமே; நான் அங்கு வரா விட்டால் என்ன தண்டனை விதிப்பாரோ விதிக்கட்டும். உனக்கு என்ன அத்தனை அக்கறை? நீ போய் நான் வர முடியாது என்று சொன்னதாகத் தெரிவித்துவிடு, அவ்வளவுதான்."

அந்த ஸ்திரீ கோபத்தால் எதையோ வாய்க்குள்ளேயே முனகிக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றாள்.

ஆசா தன் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு 'கோ' என்று அழ ஆரம்பித்துவிட்டாள்! காலடியிலிருந்து தரையே நழுவிவிடுவதைப்போலவும், உயரத்திலிருந்து கீழ் நோக்கியே விழுந்து கடைசியில் கரையற்ற ஜல சமுத்திரத்தில் விழுந்து தத்தளிப்பதைப் போலவும் அகோரமாக எரிந்துகொண்டிருக்கும் ஜுவாலையின்மீது நடப்பதைப்போலவும் பற்பல விதமான உணர்ச்சிகள் அவளுடைய இருதயத்தில் தோன்ற ஆரம்பித்தன!

அவளுடைய மனத்தில் உடனே ஓர் எண்ணம் தோன்றியது.

தன்னிடம் இருக்கும் கத்தியால் தன் நெஞ்சிலேயே ஒரு குத்துக் குத்திக்கொண்டு........?

கண்கள் மூடினபடியே இருந்தன. இடது கையினால் கண்களைப் பொத்திக்கொண்டே, வலது கையினால் இடுப்பி லுள்ள கத்தியை எடுக்கும் நோக்கத்துடன் இடுப்பைத் தடவினாள்.

அதே க்ஷணத்தில் அவளுக்கு ஒரு குரல் கேட்டது.

"ஆசா!"

சத்தியாக்கிரக மறியல் செய்துகொண்டிருக்கையில் அவள் உணர்ச்சி இழந்ததையும், பிறகு தனக்குச் சுயஅறிவு ஏற்பட்டதையும், தான் ஒரு சிவப்பான உயர்ந்து மெலிந்த அழகிய வாலிபனின் கையில் இருப்பதாக உணர்ந்ததையும் அவள் ஞாபகம் மூட்டிக்கொண்டாள். அதே உருவம் இப்போதும் தன் கண்களின் முன்பு தோன்றி......

இவ்விதம் எண்ணிக்கொண்டே ஆசா குதூகலமடைந்தாள். அதே உருவம் மறுபடியும் தோன்றி அவளை இரக்கத்துடன் தூக்கிச் சென்றாலும் செல்லலாம். ஆ, அது எத்தனை இன்பகரமான எண்ணம்! இவ்விதம் எண்ணியபோது ஆசாவின் கைவிரல்கள் அவளை அறியாமலே கத்தியை இன்னும் பலமாக இடுப்பிலேயே மறைத்து வைத்தன.

மறுபடியும் அதே குரல் கேட்கிறதே!

"ஆசா! ஆசா! இது என்ன? என்னைப் பாரேன்."

ஆசா கண்களைத் திறந்து மேலே பார்த்தபோது அவளுக்கு உலகமே சுழன்றது! இது என்ன?

"யார் விலாசனா?"

"ஆம், நான்தான்!"

"நான் கனவு காண்கிறேனா, அல்லது எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?"

"ஏன் இன்னும் சந்தேகம்? நான் உன் முன்னால் உண்மையாகவே நிற்கிறேனே!"

எந்த வஸ்துவின் இருக்கையில் நம்பிக்கை ஏற்படவில்லையோ அதை உணரும் நோக்கத்துடன் தடவிப் பார்க்க முயலுவதைப் போல் ஆசா தன் கையை முன்னால் நீட்டி விலாசனைத் தடவிப் பார்க்க முயன்றாள்.

அவளுடைய கையைத் தன் கையில் அழுத்திப் பிடித்துக்கொண்டே விலாசன், "இப்போதாவது சந்தேகம் தீர்ந்ததா? நான் விலாசன்தானே?" என்றான்.

"ஆமாம்."

இப்படிச் சொன்னதும் ஆசா தன் கையைக் கம்பிக் கதவுக்குள் இழுத்துக்கொள்ள முயன்றாள்.

ஆனால் விலாசன் அவள் கையை விடாமல் பிடித்துக்கொண்டதைப் பார்த்து அவள் அந்த முயற்சியை விட்டுவிட்டாள்.

"நீங்கள் இந்த நேரத்தில் எப்படி, எதற்காக, எங்கே? ......"

''உங்களை இன்று சிறையிலிருந்து விடுதலை செய்திருக்கின்றனர். உங்களை அழைத்துச் செல்லுவதற்காகவே நான் இவ்விடம் வந்திருக்கிறேன்'' என்றான் விலாசன்.

''என்ன, எனக்கா விடுதலை! எப்போது - இன்னும் எத்தனை நேரத்தில் விடுதலை? எந்தக் கணம் நான் மரணத்தை வலுவில் ஆலிங்கனம் செய்துகொள்ள இருந்தேனோ அதே கணத்தில் நீங்கள் எனக்கு விடுதலை என்று சொல்லுகிறீர்களே! எனக்கு எப்படி விடுதலை கிடைக்கும்?''

அவளுடைய பேச்சின் நடுவில் 'மரணத்தை ஆலிங்கனம்' செய்துகொள்ளுவதைப் பற்றிச் சொன்னதை விலாசன் புரிந்து கொள்ள முடியவில்லை. அதைப்பற்றி அவன் ஆழ்ந்த யோசனை செய்யவும் அப்போது அவகாசம் கிடைக்கவில்லை.

''உண்மையாய்ச் சொல்லுகிறேன்; உங்களுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. விடுவிக்கும்படியாக உத்தரவு வந்திருக்கிறது. உம், ஜெயிலரின் ஆபீஸ் பக்கமாகப் போகலாம், வாருங்கள், அவரும் நானும் உங்களுக்காகக் காத்துப் பார்த்தோம். நீங்கள் கொடுத்தனுப்பிய விசித்திரமான பதிலைக் கண்டு நானே இவ்விடம் வந்து சேர்ந்தேன். உண்மையாகவே நீங்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறீர்கள்.''

''ஆனால் எதற்காகச் சீக்கிரமாகவே விடுதலை என்று எனக்குப் புரியவே இல்லை!''

''அது விஷயமாக நான் பிறகு சாவகாசமாகச் சொல்லுகிறேன். ஏன் தாமதம்? நான் கட்டாயம் சொல்லத்தான் வேண்டும், வாருங்கள்.''

கட்டாயம் சொல்லத்தான் வேண்டுமா? ஏன்? ஆசாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஒன்றுமே வாய் திறவாமல் அவள் விலாசனுடன் சிறையின் திறந்த கதவுகளின் வழியாக வெளியே சென்றாள்.

அந்த நேரத்தில் துவாதசியின் சந்திரப் பிறை மேகத்திலிருந்து விலகிப் பிரகாசமாகத் தெரிய ஆரம்பித்தது. இரண்டு பட்சிகள் 'சிவ் சிவ்' என்று கத்திக்கொண்டே ஒன்றுக்கொன்று ஒட்டின வண்ணம் ஆகாயத்தில் பறந்து சென்றன.

# அத்தியாயம் 17

அரசாங்கத்தாரின் அனுமதிபெற்று ஆசாவைச் சிறையினின்றும் விடுதலை செய்வது எத்தனை கடினமான காரியமாக இருந்ததோ, அதைக் காட்டிலும் கடினமாக இருந்தன பிறகு நடக்கவேண்டிய விஷயங்கள். இனிமேல் நடக்கவேண்டிய விஷயங்களின் பொருட்டேதான் விலாசன் ஆசாவைச் சீக்கிரமாக விடுதலை செய்யவேண்டியதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டான். ஆனால் தன் மனத்தில் போட்டிருக்கும் திட்டங்களைப் பற்றியும், அஹிம்சைக் கொள்கையினால் தேசத்திற்கு ஒரு சிறிதும் நலன் கிட்டாது என்று தான் கண்ட அனுபவத்தையும், விலாசன் உடனடியாக ஆசாவிடம் சொல்லிவிட விரும்பவில்லை. மனத்திலேயே தன் திட்டங்களை அடக்கிக்கொண்டு, சமயம் வரும்போது கொஞ்சங் கொஞ்சமாக வெளியிடலாம் என்பதே அவன் எண்ணம். வார்த்தைகள் அவன் உதட்டளவில் வந்து நின்று போயின. ஆசா ஒரு வேளை தன்னுடைய திட்டங்களினால் கலக்கம் அடைவாளோ......

சிறைச்சாலையின் வாசலுக்கு வந்ததும் அங்கே விலாசனின் மோட்டார் தயாராக நின்றுகொண்டிருப்பதைக் கண்ட ஆசாவுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

"ஓஹோ! ஏற்கனவே மோட்டார் எடுத்துக்கொண்டுதான் வந்திருக்கிறீர்களா?"

"என்னால் மட்டும் முடியுமானால் விமானமே கொண்டு வந்திருப்பேன்!"

ஆசா சிரித்துக்கொண்டே, "நான் ஆகாயத்திலிருந்து இறங்கிய ஒரு தேவதையால்தான் விடுதலை செய்யப் பட்டேன் என்று எண்ணியதை நீங்கள் மெய்ப்படுத்தி இருப்பீர்கள், அல்லவா?" என்றாள்.

ஆனால் விலாசன் ஆசாவின் ஹாஸ்யம் பொருந்திய அந்தச் சொற்களின் உட்பொருளை அறிந்தும் அதைப்பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. அவன் அவளை எந்தக் காரணத்திற்காக விடுதலை

செய்தாளே அந்த விஷயங்களைப்பற்றி எந்த விதத்தில் பேச்சை ஆரம்பிக்கலாம் என்று எண்ணியவாறே அவன் இருந்தான். பேச்சு அவன் தொண்டைவரையில் வந்து பிறகு வெளிவராமல் அப்படியே நின்றுவிட்டது. ஆசாவிற்கு எதிர்பாராத விதமாக விடுதலை கிடைத்ததைப்பற்றி எவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை விலாசன் நன்கு உணர்ந்திருந்தான். அந்த ஆனந்தத்தைப் பங்கப்படுத்த விலாசனுக்கு மனம் வரவில்லை. எனவே அவன் அவளிடம், ஒன்றுமே பேசாமல் வாய் மூடி மௌனியாக இருந்தான்.

மோட்டார் புறப்பட்டு வேகமாய்ச் செல்ல ஆரம்பித்ததும் அவள் விலாசனைப் பார்த்து, ''என்னை இவ்விதமாகச் சீக்கிரம் எப்படி விடுதலை செய்தீர்கள்? எனக்கு இது ஆச்சரியமாக இருக்கிறது. நான் இதை எதிர்பார்க்கவே இல்லை........'' என்றாள்.

ஆனால் வண்டியின் கையால் பிரேக்கைத் திருப்புவதிலும், 'கியர்' மாற்றுவதிலும் கவனமாக இருந்த விலாசனுக்கு ஆசாவின் கேள்வி சரிவரக் கேட்கவில்லை. அவன் குனிந்து 'கியர்' மாற்றுவதிலேயே கவனமாக இருந்தான்.

ஐந்தாறு நிமிஷங்கள் சென்றதும் ஆசா, ''இப்போது நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?'' என்றாள்.

''சொல்லுகிறேன்'' என்று சொன்னதும் விலாசன் மறுபடியும் மௌனம் சாதிக்கலானான்.

ஆனால் மூன்றாவது தடவையாக ஆசா விலாசனை நோக்கி, ''இது என்ன? நீங்கள் ஏன் பதிலே பேசவில்லை? நீங்கள் எதிர்பாராத விதமாக வந்தது எப்படி? என்னை விடுதலை செய்தது எப்படி? உங்களுடன் எங்கே அழைத்துச் செல்லுகிறீர்கள் என்பதைச் சொல்லக்கூடாதா? எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே!'' என்றாள்.

விலாசனுக்கு ஒரு விதத்தில் துணிவு ஏற்பட்டது. வேப்பங்காயைப்போல் கசக்கும் உண்மைகளை ஆசாவிடம் சொல்லியே தீருவது என்று தன் தைரியத்தையெல்லாம் கூட்டிக்கொண்டு முடிவு செய்தான் விலாசன். வண்டியைச் சாலையின் ஓரத்தில் நிறுத்திவிட்டுத் தன் பேச்சை ஆரம்பித்தான்:

''நான் என்ன சொல்லப் போகிறேனே அதைக் கேட்கும் பொருட்டு நீங்கள் மனத்தைக் கடினமாக்கிக்கொண்டு சற்றுத் தயாராக இருக்கவேண்டும்.''

ஒன்றுமே பேசாது ஆசா விலாசனின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

மோட்டார் வண்டிக்குள் பொருத்தப்பட்டிருந்த வேகத்தைக் காட்டும் யந்திரத்திலுள்ள ஒரு சிறிய மின்சார விளக்கின் மங்கிய ஒளி ஆசாவின் முகத்தில் படிந்திருந்தது. சிறைக்குச் செல்லுமுன் சத்தியாக்கிரகத்தின் அலைச்சலினுல் ஆசாவின் முகம் சற்று வாட்டமடைந்திருந்தது. இப்போது சிறைவாசத்தின் கெடுதிகளால் அவள் முகம் இன்னும் அதிகமாய் வாட்டமடைந்திருந்ததை விலாசன் கவனித்தான். மிகவும் மென்மையும் அழகும் பொருந்திய ஒரு ஸ்திரீயின் முகம் சற்று வாட்டம் அடைந்தும் துக்கத்திஞல் கலங்கியும் காணப்பட்டால் அதனுல் எந்த யுவனின் இருதயமும் கொஞ்சம் அனுதாபம் காட்டத்தான் செய்யும். ஏற்கனவே துக்கமயமாக இருந்து வாட்டமடைந்துள்ள ரோஜா மொட்டை ஒத்த ஆசாவின் முகத்தை, மேலும் துக்ககரமான சொற்களைச் சொல்லித் துன்புறுத்துவதற்கு விலாசனின் மனம் இடங்கொடுக்கவே இல்லை. மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளும்படியாக ஆசாவை விலாசன் கேட்டுக் கொண்டது என்னவோ உண்மைதான். ஆனுல் உண்மையில் தன் மனத்தையே அவனுல் திடப்படுத்திக் கொண்டு விஷயத்தை வெளியிட முடியவில்லை.

ஆசாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்துப் பேசவும் அவன் துணியவில்லை.

பேசுவதற்குத் தயாராவதைப்போல் அவன் ஒரு தரம் கனைத்துக்கொண்டான்; ஆனுல் சொற்கள் வாயளவில் நின்றுவிட்டன.

''மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளும்படி ஏன் கேட்டுக் கொண்டீர்கள்? ஏதாவது துக்ககரமான விஷயத்தை என்னிடம் வெளியிடப் போகிறீர்களா?'' என்ருள் ஆசா.

அவளைத் திரும்பிப் பார்க்காமலேயே, ''ஆம்; துக்ககரமான விஷயத்தைத்தான் சொல்லப் போகிறேன். அதனுல்தான் நீங்கள் உங்களுக்கு உண்டான சகல தைரிய மனப்பான்மையையும் ஒன்று சேர்த்துத் திரட்டிக்கொண்டு மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளும்படி நான் கேட்டுக்கொண்டேன். உங்கள் கண்களிலிருந்து ஒரு சொட்டு ஜலம் வெளிவந்தாலும் என் நெஞ்சு வெண்ணெய்போல் உருகிவிடும்'' என்ருன் விலாசன்.

இதற்குப் பிறகு சிறிது நேரம் வெறுமனே இருந்துவிட்டு ஆசா நீண்ட ஒரு பெருமூச்சுடன் கேட்டாள்.

''நல்லது; நான் என் மனத்தை ஏற்கனவே திடப்படுத்திக் கொண்டுவிட்டேன். சொல்லுங்கள் விஷயத்தை! நீங்கள் எதைச் சொல்லப்போகிறீர்கள் என்பதை நான் ஒருவிதமான கற்பனையினால் ஊகித்துள்ளேன். நான் இந்த உலகத்தில் முற்றும் ஆதரவற்ற அகதியாகிவிட்டேனா?—''

அந்தக் குரலில் வெளிவந்த ஒருவிதமான நடுக்கமும் பரிதாபமும், விலாசனின் இருதயத்தில் பாயக்கூடிய ஒரு கூரிய ஈட்டிபோல்தான் தோன்றின.

ஆசா எதைக் கல்பிதம் செய்துகொண் டிருக்கிறாள் என்பதை உணர்ந்த விலாசன், அவள் நினைத்தது சரியல்ல என்று சொல்லும் பொருட்டு உடனே குறுக்கிட்டுச் சொன்னான்:

''சீ, அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் உங்கள் தகப்பனார் ஸ்ரீ பாஹு ஸாஹிப் மிகவும் அவஸ்தையில் இருக்கிறார் என்பதை மட்டும் சொல்லுகிறேன். நீங்கள் சிறை செல்லும்போது அவர் தம்முடைய உடம்பின் உண்மையான நிலைமையை உங்களிடம் சொல்லாமல் ஒளித்து வைத்தார். ஆனால் எனக்குமட்டும் அவர் தம் தேகஸ்திதி கேவலமாக இருப்பதாய்ச் சொல்லியிருந்தார். நான் என் தகப்பனாரின் சிபார்சினால் பெரிய அதிகாரிகளைப் போய்ப் பார்த்து அவர்களிடம் இருக்கும் நிலைமையை வெளியிட்டு உங்களை விடுவிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அனுமதி வாங்கிக்கொண்டு மோட்டார் சகிதம் உடனடியாகச் சிறைச்சாலைக்குப் பறந்து வந்தேன். பாஹுஸாஹிப்பின் தேக நிலைமையை நானே நேரில் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். எனவே உங்களுக்கும் உங்கள் தகப்பனாருக்கும் கடைசி முறையாக ஒரு சந்திப்பு இருக்கும் என்பது எனக்கு நிச்சயமாகிவிட்டது; ஆனால்........ அந்தச் சந்திப்பு......கடைசிச் சந்திப்பு என்பதை எண்ணும் போது......?''

''என்ன சொன்னீர்கள்? கடைசிச் சந்திப்பா?......''

இவ்விதம் சொன்னதும் ஆசா தன் இரு கைகளினாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு பொங்கிப் பொங்கி அழலானாள்.

மனத்திற்குள்ளாகவே அடக்கிக்கொண் டிருந்த துக்கத்தின் வேகத்தினால் அவளுடைய சரீரம் 'கடகட' வென்று நடுங்க ஆரம்பித்தது.

காற்றின் வேகமான அலை ஒன்று எங்கிருந்தோ புறப்பட்டு வந்தது. சாலை ஓரத்தில் நின்றுகொண் டிருந்த விருக்ஷங்கள் எல்லாம் 'சோ' வென்ற சப்தத்துடன் அசைந்தன. அவைகளி

லிருந்து உதிர்ந்த சருகுகள் காற்றில் பறந்து மோட்டார் வண்டியிலும் விழுந்தன. சற்றுத் தூரத்தில் ஒரு கரிச்சான் குருவி 'கீச் கீச்' என்று கத்திக்கொண்டே பறந்தது. தொடர்ந்து வந்த சில விநாடிகள் அங்கே நிச்சப்தம் குடிகொண்டது.

ஆசாவை எவ்விதம் தேற்றுவது என்பது விலாசனுக்குப் புலனாகவில்லை.

எல்லையற்ற சோகத்தின் அலைகள் இன்றுதான் அவனுடைய இருதயமான கரையில் மோத ஆரம்பித்திருந்தன.

* * * *

மறுநாள், பாலூஸாஹிபின் உயிரை மிருத்தியுபாசம் அணு அணுவாக இழுத்துக்கொண்டிருந்தபோது அவர் தம் உயிரினும் அதிகமாக நேசித்து வந்த தம் ஏகபுத்திரி ஆசாவை அழைத்து, கடைசி நேரத்தில் சொல்லவேண்டியவைகளை மிகவும் சிரமத்துடன் எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார். அந்தக் கோரமான காட்சி விலாசனுக்கு அதுதான் முதல் தடவையாகையால் அவன் கண்களில் அன்று முதல்முதலாகக் கண்ணீர் ஊற ஆரம்பித்தது.

ஆசா திரும்பத் திரும்ப, "பாலூ", "பாலூ" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டு கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினாள். அவள் கண்களினின்றும் வெளிவந்த சூடான கண்ணீர் பாலூஸாஹிபின் முகத்தில் விழுந்தன. வாயில் நுரை வர, தொண்டையில் கபம் 'கர் குர்' என்று இழுக்க மரணாவஸ்தையிலிருந்த பாலூஸாஹிப் அரைகுறையான வார்த்தைகளால் ஆசாவிடம் சொன்னார்: "ஆசா, முன்பு உனக்கு இருந்த தைரியம் எல்லாம் எங்கே போயிற்று? நான் என்ன மிகவும் கஷ்டப்பட்டுத் துர்மரணமாகவா சாகிறேன்? இல்லை, இல்லவே இல்லை. நான் ஒரு நாள் பூமியை விட்டுப் போகவேண்டியதுதானே. அது இன்றைக்கு நேரிடுகிறது! அவ்வளவுதான். சாகும்போது உன் உஷ்ணமுள்ள மூச்சு என் கன்னத்தில் பட்டுக்கொண்டிருக்கையில் எனக்குத் துர் மரணம் எப்படி நேரிடும்? இதைக்காட்டிலும் சமாதானமாகவும் ஆனந்தமாகவும் நான் சாகவே முடியாது. இதோ பார்! சாவதற்கு அஞ்சுபவர்கள் இரண்டே பேர்தாம். ஒருவர் பிறருக்குத் தீங்கிழைத்து அதனால் பிழைத்தவர்; மற்றவர் இந்த உலகத்தில் மண், பெண், பொன் ஆசை பிடித்து அலையும் பேய்கள். இந்த இரண்டு விதமான ஜனங்களில் என்னையும் சேர்க்கிறாயா, ஆசா?"

ஆசா தன் தகப்பனாரின் கன்னத்தின்மேல் தன் கன்னத்தைப் பொருத்தி வைத்துக்கொண்டே, ''இல்லை, இல்லை, பாலூ....ஆனால்....'' என்றாள்.

பாலூ பெருமுயற்சியுடன் தம் பலமிழந்த வலது கையால் ஆசாவின் இடுப்பைச் சுற்றி வளைத்துக்கொண்டார். வரவர மேலே சென்றுகொண்டிருந்த அவருடைய கண்களை எத்தனை நேரம் முடியுமோ அத்தனை நேரம் விழித்து, ஆசாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே அவர், ''ஆசா, நான் மிகவும் நிம்மதியுடன் சாகிறேன். உன் தாயும் இப்படியே சுகமாக இறந்தாள். ஒவ்வொருவரும் இந்த உலகத்தை ஒரு நாள் நீத்துச் செல்லத்தானே வேண்டும்? அவ்விதம் பிரியாவிடை பெற்றுப் போகையில் தனக்கு வேண்டியவர்கள் முன் நிற்கப் 'போகிறேன்' என்று விடை பெற்றுக்கொண்டு செல்வது எத்தனை மேலானது? உன்னைக் கடைசி முறையாகச் சந்திக்கச் செய்தது, இதோ இந்த விலாசன்தான்——'' என்றார்.

மேலே பேசமுடியாமல் தவித்துப் பாலூ ஸாஹிப் தம் இடது கையை முன்னாலே நீட்டினார். இதைக் குறிப்பால் உணர்ந்த விலாசன் உடனடியாகச் சென்று அந்தக் கையைத் தன் இரு கரங்களிலும் ஏந்தி வைத்துக் கொண்டான்.

அவருக்கு விக்கலும் இருமலும் மேலும் மேலும் வர ஆரம்பித்தன. கண்களைச் செருக ஆரம்பித்தது. இந்த மரணாவஸ்தையை விலாசன் கண்ணெடுத்தும் பார்க்கச் சகியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்துப் பாலூ ஸாஹிப் மறுபடியும் கண்களைத் திறந்தார். அவர் ஆசாவையும் விலாசனையும் மாறி மாறிப் பார்த்தார். அவருடைய கண்களின் பார்க்கும் சக்தி வரவரக் குறைந்துகொண்டே வந்து கடைசியில் ஒன்றுமே தோன்றாது இருண்டிருக்க வேண்டும். எனவே தம் பிரியமுள்ள ஆசா தம் கண்களுக்கு முன் இனி நிரந்தரமாகப் பிரிந்துவிட்டாள் என்று எண்ணும்போது - பிரிந்துகொண்டிருக்கும் அவருடைய ஆத்மா எத்தனை பாடுபட்டிருக்க வேண்டுமோ? யார் கண்டார்கள்?

அவர் கண்களை மறுபடியும் மூடிக்கொண்டார்.

மறுபடியும் சிறிது நேரங்கழித்துக் கண்களைத் திறந்தபோது அவருக்கு உலகத்தில் ஒன்றுமே தோன்றாது இருட்டாக இருந்திருக்க வேண்டும்; காரணம், அவர் விலாசனைப் பார்க்காமலே - எங்கேயோ விழித்துக்கொண்டு பேசலானார்:

''விலாஸ்! என் மகளாகிய இவள் துணிவும் தைரியமும் கொண்டவள். உச்சிமீது வானமே இடிந்து விழுந்தாலும் கலக்கமடையாது கடினமான பொறுப்புகளுக்குத் தலையைத் தருவது எங்கள் தலைமுறை தலைமுறையாக வந்த தத்துவம். எனவே இவளும் எதுவரினும் சகித்துக்கொண்டுதான் இருந்திருப்பாள். ஆனால் நான் இந்த உலக பாந்தவியத்தினின்றும் விடுதலையடைந்து நிரந்தரமாகப் பிரியும்போது என் அன்பிற்குப் பாத்திரமான ஓர் ஆத்மா பக்கத்தில் இருந்தால் எனக்கு மனச் சாந்தி ஏற்படும்......''

விலாசனின் கையைத் தம் பலமிழந்த விரல்களால் சற்று அழுத்துவதற்கு முயன்றார் பாலூ ஸாஹிப்; ஆனால் முடியவில்லை. விலாசன் அவருடைய குறிப்பை உணர்ந்து கொண்டான்.

விலாசன் ஏதோ பேசுவதற்கு வாயெடுத்தான். அதற்குள் பாலூ ஸாஹிபிற்கு ஒரு பெருமூச்சு வந்தது. ஒரு விக்கல் ஏற்பட்டது. அவ்வளவுதான்! அந்தத் தீவிர தேசபக்தனின் ஆத்மா எல்லையற்ற ஆகாயத்தின் அணுக்களாக மாறிவிட்டது!

கண நேரத்திற்கு முன்பு மகளுக்கு ஆறுதலளித்துக் கொண்டிருந்த அந்தப் பிதா மறுகணம் இல்லாது மறைந்து விட்டார். எந்தக் கண்களிலிருந்து அன்பினால் உண்டான கண்ணீர் அரும்பரும்பாக வெளிவந்து கொண்டிருந்ததோ அந்தக் கண்களே இப்போது நிரந்தரமாகப் பஞ்சடைந்து போயின. சேதனமாய் இருந்த அவருடைய தேகம் அரை நொடியில் அசேதனமாக அசைய முடியாதபடி கட்டையாக மாறி விட்டது.

சிருஷ்டி விநோதங்களில் மிகவும் சிக்கலானதும் எத்தனை ஆராய்ச்சிகள் செய்தாலும் புரியாததுமான மரணம் என்னும் பயங்கர நிகழ்ச்சியை அன்றுதான் விலாசன் தன் கண்முன்பாகக் கண்டான்! அவன் தலையின்மேல் கையை வைத்துக்கொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டான்.

தன்னையும் அறியாது, தேக்கத்தினின்றும் பிய்த்துக் கொண்டு செல்லும் பிரவாகம் போல் எழும்பி வரும் துக்கத்தைத் தாங்க முடியாமல் ஆசா ''ஐயோ'' என்று வாய் விட்டு அலறிக் கொண்டே இறந்துபோன தன் பிதாவின் தேகத்தில் விழுந்து கதறினாள். இந்தத் துக்ககரமான அழுகையைக் கேட்பதைக் காட்டிலும், இயற்கையிலேயே ஏன் செவிடாகப் பிறந்திருக்கக் கூடாது என்று விலாசன் எண்ணமிடலானான். செவிடாகப் பிறந்

திருந்தால் இந்த அழுகை எப்படிக் காதுகளில் விழுந்து மனக் கலக்கம் அடையச் செய்யும்?

* * * *

ஆசாவின் அந்தத் தீனமான குரலில் தொனித்த துக்கத்தின் நிழல் வெகு நாட்கள் வரையில் விலாசனின் காதுகளை விட்டு அகலவே இல்லை. அவளுடைய சோக மயமான குரல் அவன் காதுகளில் ரீங்காரம் செய்த வண்ணமாகவே இருந்தது.

மனிதர்களுடைய மனந்தான் எத்தனை விசித்திரமானது! தம்மைச் சுற்றிலும் உள்ள மனிதர்களுக்கு உண்டாகும் உணர்ச்சிகளுக்கு ஏற்ப மனமும் ஒத்த உணர்ச்சி கொள்ளுகிறது. குறிப்பிட்ட சம்பவத்தைப் போல் மற்றென்று நேரின், உடனே மனம் ஏன் சென்ற விஷயங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறது? ஒரு சிலரைக் கண்டதும் ஏதேதோ பல கற்பனைகள் மனத்தில் ஏன் உதிக்கவேண்டும்? இவைகளுக்கு விடை யாராலாவது சொல்ல முடியுமா?

ஆசா முன்பு ஒரு நாள் அதிகாலையில் பாடின பாரத மாதா திருப்பள்ளியெழுச்சியின் இனிமையான குரலோசையும், பிறகு அவளுடைய தகப்பனார் இறந்து போனபோது அவள் கருணை ததும்பும் குரலுடன் அலறியதும், மாறி மாறி விலாசனின் ஞாபகத்துக்கு வந்துகொண் டிருந்தன. எவ்விதத்தில் மறக்க முயன்றாலும் அவனால் முடியவில்லை. அன்று அதிகாலையில் பூபாள ராகம் பாடிய அதே குரல்தானா பிறகு தந்தையின் பிரிவால் அலறியது என்ற சந்தேகம் அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது. ஆ! அந்த இரண்டு குரல்களுக்கும் இடையில் எத்தனை வித்தியாசம்? அது மட்டுமா? முன்பு தகப்பனார் இப்பூமியின் வாழ்க்கையினின்று விடுதலை அடைந்தபோது அலறி அழுத அதே ஆசாதானா இப்போது தகப்பனாரின் பிரிவாற்றாமையைக் கொஞ்சங் கொஞ்சமாக மறந்து சாந்தி நிறைந்த இருதயத்துடன் இனி நடக்கப் போகும் காரியங்களைக் கவனிக்க முயன்று வந்தாள்? மனுஷ்ய இருதயத்தின் மாறுதல்கள் தாம் என்னே! பம்பாய்க்கு வந்த பிறகு ஆசாவை விலாசன் அடிக்கடி போய்ச் சந்தித்த போதெல்லாம் அவனுக்கு மேற்படி எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருவது வழக்கமாகிவிட்டது.

உண்மையில் ஆசா தகப்பனாரின் பிரிவை மறக்கத் தேச சேவைக்கான காரியங்களில் அதிகமாய் மனத்தைச் செலுத்த ஆரம்பித்தாள்.

சிறை வாசத்தின் போதே ஆசா எதிர்காலத் தேச சேவையைப் பற்றிப் பற்பல விதமாகத் திட்டம் போட்டிருந்தாள். மிகவும் தீவிரமாகச் தேசசேவையில் இறங்க வேண்டும்; ஆனால் அதில் பலாத்காரமும் பயங்கர இயக்கங்களும் சம்பந்தப் படலாகாது. ஆசாவிற்கு இன்னும் பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லை. அவள் ஒன்றும் செய்யாது வெறுமனே இருக்கவும் விரும்பவில்லை.

சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளும் பொருட்டுத் தேச சேவையினின்றும் சொற்பகாலம் விலகி இருக்கும்படி விலாசன் அவளைக் கேட்டுக்கொண்டதற்கு ஆசா பதில் கூறினாள்:

"சிறைவாசத்தின் போது எனக்குப் பூர்ண ஓய்வு கிடைக்கவில்லையா? என்னுடன் சிறைக்குச் சென்ற பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் சிறையிலேயே இருக்கும்போது, நான் மட்டும் வெளியே தங்குவது சற்றேனும் எனக்குப் பிடிக்கவில்லை. நிலைமை இவ்வாறு இருக்க நான் தற்சமயம் தேச சேவையினின்றும் ஓய்வு எடுத்துக்கொண்டு இருந்துவிட்டால் அதைக் காட்டிலும் கேவலமும் துரோகமும் வேறு இருக்க முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுடைய அனுதாபமும் உதவியும் எனக்குக் கிடைத்திருக்கும்போது என் உத்ஸாகம் பன்மடங்கு பெருகுகிறது. பெருகி வரும் உத்ஸாகத்தை அடக்கிக்கொண்டு நான் எப்படி வாளா இருக்க முடியும்?"

தன்னுடைய ஒத்துழைப்பும் உதவியும் கிடைத்ததைப் பற்றி ஆசாவிற்கு ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சியினால் அவளுடைய முக மண்டலத்தில் மறைந்து போயிருந்த பழைய தேஜசும் கம்பீரமும் திரும்பத் தோன்றியதைப் பார்த்த விலாசனுக்கு மனத் திருப்தியும் சந்துஷ்டியும் ஏற்பட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

"உங்கள் வேலைகளுக்கு நான் பக்க பலமாக வந்திருப்பதில் அதிசயிக்கத் தக்க விஷயம் ஒன்றுமில்லை. என் கடமையைச் செய்யவே நான் உங்களுக்கு என்னாலான உதவியைச் செய்கிறேன். என் உதவியை நீங்கள் பெரிதாக மதித்துப் பேசுகையில் எனக்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. வேலையைவிட்டு நான் பம்பாய்க்கு வந்ததும் சரத்சந்திரனும் நானும் நீங்களுமாகச்

சேர்ந்து தேச சேவைக்கான எதிர்காலத் திட்டங்கள் வகுக்க வேண்டும் என்று எனக்குள்ளாகவே நிச்சயம் செய்து கொண்டேன்'' என்றான் விலாசன்.

சரத்சந்திரனின் பெயரைக் கேட்டதும் ஆசாவிற்கு மனத்தில் ஒருவிதக் கலக்கம் ஏற்பட்டதை விலாசன் அவள் முகத் தோற்றத்திலிருந்து அறிந்துகொண்டான்.

''சரத்சந்திரனை நீங்கள் சமீபத்தில் சந்தித்தீர்களா? அவரைப் பற்றித் தகவல்கள் ஒன்றும் தெரியவில்லையே!''

தன் காதலனுடைய தகவல்கள் ஒன்றும் தனக்குத் தெரியவில்லை யாகையாலும், இரண்டு மூன்று மாதங்களாக அவனைச் சந்திக்கவே முடியவில்லை என்பதனாலும் ஆசாவின் மனம் கலங்கி இருக்கவேண்டும் என்று விலாசன் எண்ணினான்.

''ஆசாமி எங்கே போனான் என்று தெரியவே இல்லை! ஆனால் இன்றைக்கு அல்லது நாளைக்கு அவன் கட்டாயம் வருவான் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றான்.

''அவருடைய செய்கைகள் எனக்கு மனவேதனையைத் தருகின்றன.''

காதலனைப் பிரிந்த காதலியின் மனவேதனையைத் தன்னால் ஆனவரையில் துடைக்க முயலும் யோசனையுடன் விலாசன், ''நீங்கள் எதிர்பாராத விதமாகச் சிறையினின்றும் விடுதலையடைந்து வெளியே வந்ததைப்பற்றி அவன் எப்படி அறிவான்? விஷயத்தை மட்டும் அவன் அறிந்திருந்தால் உங்களை வந்து சந்திப்பதில் அரை விநாடிகூட அவன் தாமதித்திருக்கமாட்டான்'' என்றான்.

* * * *

விலாசன் எண்ணியபடியே சரத்சந்திரன் அன்று மாலை அவன் பங்களாவிற்கு வந்து சேர்ந்தான். ஆசாவின் விடுதலையைப் பற்றி விலாசன் மூலம் அவன் அறிந்தவுடனே, அரைக்கணமும் தாமதியாமல் ஆசாவைக் காணப் புறப்பட்டான்.

''அடே, போய்த்தான் பார்க்கப் போகிறாயா? ஆனால் எதற்காக இத்தனை அவசரம்? இத்தனை நாட்களும் எங்கே அஞ்ஞாத வாசம் செய்துகொண்டிருந்தாய்? அதைச் சொல் முதலில்'' என்றான் விலாசன்.

இருந்த இடத்திலிருந்து எழுந்துகொண்டே சரத்சந்திரன், ''இனி ஒரு கணமும் மனம் தாளேன்! ஆசாவைக் கண் குளிர என்

றைக்குக் காண்பேனே என்று தவங் கிடந்தேன். நான் உடனே போய் ஆகவேண்டும்'' என்றான்.

''அடேயப்பா! டீயாவது ஒரு கப் சாப்பிடுவாயோ அதுவும் மாட்டாயோ?''

''ஊஹூம். வேண்டாம்!''

''சிகரெட் கூடவா?''

''சே!''

''உங்கள் காதலின் லீலா விநோதந்தான் என்ன?''

இதைக் கேட்டதும் சரத்சந்திரன் வாய்விட்டு உரக்கச் சிரித்தான். பிறகு தலையை அசைத்துக்கொண்டே சொன்னான்: ''புரிந்ததையா மகாராஜா! உனக்கும் ஆசா காதலியாக ஏற்பட்டு அவள் பிரிவாற்றாமையினால் நீ வாடும்போது நான் உன் எதிரில் இருந்தால் அப்போது சொல்லுவேன் கதை கதையாக!'' என்றான்.

இப்படிச் சொன்னதும் சரத்சந்திரன் மாடிப் படிகளின் வழியாக அதிவேகமாக இறங்கி ஓடிவிட்டான். ஓடும்போது அவன் இரண்டு இரண்டு படிகளாகத்தாண்டித் தாண்டி இறங்கி இருக்கவேண்டும். விலாசனுக்கு அவன் 'திடும் திடும்' என்று குதித்த சத்தம் நன்கு கேட்டது.

'ஆசாவின் ஆகர்ஷணந்தான் என்ன!....ஆசா ஒரு காதலியாக ஏற்பட்டு....'

சரத்சந்திரன் சொன்ன அந்த வார்த்தைகளுக்குச் சரியான பொருள் கண்டுபிடிப்பது சற்றுச் சிரமமாகத்தான் இருந்தது. அவன் அதைப்பற்றிப் பற்பலவிதமாக ஆராயலானான்.

ஆசாவைச் சந்தித்துவிட்டு அவளிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பி, சரத்சந்திரன் விலாசனிடம் வந்த போதுங்கூட அவன் பழைய ஆராய்ச்சியிலேயே லயித்துப் போயிருந்தான். அவனுடன் விலாசன் பேசும்போதுகூடப் பாதி ஞாபகத்துடன் தான் பேசலானான். இதைக் கண்ட சரத்சந்திரன், ''நீ ஏன் சரியாகப் பேசவில்லை? எதைப்பற்றி இத்தனை ஆர்வத்துடன் யோசித்துக்கொண்டிருக்கிறாய்?'' என்றான்.

''யோசிக்கிறேனா? ஒன்றும் இல்லையே!''

உண்மையில் சரத்சந்திரனுடன் பேசிக்கொண்டிருப்பதை அப்போதுதான் விலாசன் உணர்ந்தான். தன் முகத்தின் பாவனையைச் சற்று மாற்றிக்கொண்டான்.

''அது சரிதானையா பெரிய மனுஷ்யரே! இத்தனை நாளும் ஆசாமி எவ்விடம் மறைந்துகொண்டிருந்தாயோ? சொல், எங்கே போயிருந்தாய்?''

''அடேயப்பா! விடமாட்டாய்போல் இருக்கிறதே! பம்பாய்ப் பட்டினத்தின்மேல் எனக்கு வெறுப்பு ஏற்பட்டதனால் சற்று ஊர்ப் பிரயாணம் செய்து வந்தேன்.''

''ஊர்ப் பிரயாணமா? எங்கேயோ?''

''கான்பூருக்கு.''

கான்பூர் என்ற பெயரைக் கேட்டதுமே விலாசன் திகிலடைந்தவனைப்போல் காணப்பட்டான். எல்ஸீ சொல்லியிருந்த ரகசியமான கதைகள் ஞாபகத்திற்கு வந்தனபோலும்! போலீஸ் ஒற்றர்கள் ஒரு சட்ட விரோதமான கூட்டத்தைத் தேடுவதில் முனைந்திருந்ததும், அதன் தலைவன் கான்பூரில் அகப்படலாம் என்று போலீஸார் நம்புவதாகவும் எல்ஸீ விலாசனிடம் சொல்லியிருந்தாள் அல்லவா? அந்த எண்ணம் அவன் மனத்தில் மின்னல்போல் தோன்றி மறைந்தது. அவன் தன் பிரமிப்பைச் சற்று அடக்கிக்கொண்டான்.

''என்ன சொன்னாய்? கான்பூருக்கா? பின் ஏன் போகும் போது என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுவிட்டாய்? ஏதாவது ரகசிய வேலைகளுக்காக மறைமுகமாகச் சென்றிருந்தாயோ?''

''ரகசியமா? என்னிடம் என்ன ரகசியம் இருக்கிறதப்பா? இங்கிருந்து புறப்படுவதே முன் யோசனையின்றித் திடுமென்று கிளம்பினேன். அங்கே சென்றதும் தினம் இவ்விடம் திரும்பி வருவதாக எதிர்பார்த்துக்கொண்டிருந்ததால் கடிதமும் எழுத முடியவில்லை. அது இருக்கட்டும், ஏன்டா விலாஸ்! இது வந்து....''

''ஓஹோ, இப்படிப் பேசி, விஷயத்தை மறைத்து விடலாம் என்று எண்ணுகிறாயோ! பேச்சை மாற்றாதே! எங்கே போயிருந்தாய், சொல்லு சீக்கிரம்?''

''இது ஒரு பிரமாதமா? கான்பூரிலுள்ள என் நண்பன் ஒருவன் என்னைத் தற்செயலாகச் சந்தித்தான். என்னை வரும்படி கூப்பிட்டான். நானும் சென்றேன்.''

''அப்படியா? உன் நண்பனின் பெயரையாவது அறியலாமோ?''

"பெயரா? விலாஸ், சிற்சில சமயங்களில் நீ ஒரு பெரிய வக்கீலைப்போல் வாதாடுகிருயப்பா! சரி, உன் மோட்டாரை எடுத்துக்கொண்டு கிளம்பு; இப்படிச் சற்றுக் காற்ருடப் போய் விட்டு வரலாம்."

விலாசன் அவனைக் கூர்ந்து கவனித்தான். விஷயத்தை இத்துடன் நிறுத்திக் கொள்ளுவதுதான் நல்லது என்று அவனுக்குப் பட்டதோ என்னவோ, மேலே பேசாது வாளா இருந்தான்.

ஆனல் இப்போது நிறுத்திக்கொண்டாலும் மற்ருெரு சமயத்தில் தன் திட்டங்களைச் சொல்லி, சரத்சந்திரனின் யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விலாசன் நினைத்தான். பலாத்காரக் கொள்கையில் அவனுக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை போலும். ஆசாவும் ஒருவேளை பலாத்காரத்தை இன்னும் வெறுத்து வருகிருளா?......வேறு ஏதேனும் ஒரு புதிய மார்க்கத்தைக் கைக்கொள்ளுவதாக?........ஆயினும் ரகசியமான பயங்கர இயக்கம் விலாசனுக்கு மட்டும் அன்றி ஆசாவிற்கும் வெறுப்பையே தந்தது. சரத்சந்திரன் இப்படிப் பலாத்கார வழியில் செல்லுகிருன் என்பதை உணர்ந்தால் ஒருவேளை ஆசாவிற்கு அவன் மேலுள்ள காதல்கூடக் கம்மியாகி விடுமோ?..

விலாசனுக்கு ஆசாவின்மேல் எல்லையற்ற காதல் இருந்ததென்னவோ உண்மைதான். ஆனல் அவன் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. ஆசா சரத்சந்திரனைக் காதலித்திருப்பதாகவே அவன் எண்ணியிருந்தான். ஆசாவின் சுகமே தன் சுகம் என்று எண்ணிய விலாசன் சரத்சந்திரன் விஷயமாக அவளிடம் ஒன்றுமே பேச விரும்பவில்லை.

காதலின் விளையாட்டுத்தான் எத்தனை சமத்காரமானது!

# அத்தியாயம் 18

ஆசா விடுதலையடைந்த செய்தி காட்டுத் தீப்போல் நாலு பக்கங்களிலும் வெகு சீக்கிரம் பரவ ஆரம்பித்தது. தினசரிகள் அவள் விடுதலையைப் பற்றிக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டன. பம்பாயில் அவள் நடத்திவந்த பால் கிடங்கு இப்போது மிகவும் பிராபல்யம் அடைந்துவிட்டது. அதி காலையிலிருந்து இரவு பத்து மணி வரையிலும் அங்கே கல்யாணம் பட்ட பாடாகத்தான் இருந்தது. வருகிறவர்களும் போகிறவர்களுமாகக் கலகலவென்று ஆகிவிட்டது அந்தப் பால் கிடங்கு. அந்தப் பக்கங்களில் வசித்து வந்த ஏழைக் கூலிகளின் அனுதாபத்தை ஆசா வெகு தூரம் பெற்றிருந்தாள். ஏழைகளின் தோழியாக, அவர்களிடையே வித்தியாசம் இன்றிப் பழகிவந்ததாலும், அவர்களில் பலருக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வந்ததாலும் அந்த நன்றி மறவாத ஏழை மக்கள் இவள் சொற்களை வேதம் என்றே கொண்டனர். நம் நாடு இப்போது இருக்கும் கேவலமான நிலைமையை எடுத்துக் கூறி, இந்திய சமுதாயம் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்றால் ஏழைகளின் ஒற்றுமையும் தயவுமே வேண்டும் என்றும் கூறி அவர்களை அவள் உத்ஸாகப்படுத்துவாள்.

''நம்முடைய மகாலக்ஷ்மி திரும்பி வந்துவிட்டாள்'' என்று ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொண்டனர். ஆசாவின் தகப்பனார் இறந்துபோனார் என்ற செய்தியைக் கேட்டதும் அந்தப் பிராந்தியத்தில் வசிக்கும் ஜனங்கள் அத்தனை பேரும் ஒருவர் பின் ஒருவராக வந்து ஆசாவிடம் துக்கம் விசாரித்தார்கள். அழகிய யுவர்கள் அவளுடன் பேசுவதற்கு ஆசைப்பட்டுத் துக்கம் விசாரிக்கும் பாவனையுடன் அங்கு வந்தனர். அரசியலில் ஈடுபட்ட தைரியமான யுவர்கள் ஆசாவுடன் தர்க்கம் செய்து அவள் கொள்கைகளைத் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் வந்து கூடினர். முன்பு அவள் தீவிர அஹிம்சைக் கொள்கையுடன் இருந்தபோது அவளுக்கு நண்பர்களாய் இருந்த

புலர். இப்போது ஆசா அஹிம்சையை ஓர் அளவு கைவிட்டு விட்டதை எண்ணி, அவளைத் தங்கள் பக்கமாக மறுபடியும் திருப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் சர்ச்சை செய்தனர். சத்தியாக்கிரகத்தைத் தவிர வேறு ஏதாவது வழியினால்தான் நாம் சுதந்திரம் பெறலாம் என்ற கொள்கையை யுடையவர்கள், ஆசா சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கை இழந்ததைக் கண்டு சந்தோஷங்கொண்டு அவளைத் தங்கள் பக்கமாகத் திருப்பும் யோசனையுடன் வாத விவாதங்கள் புரியலாயினர்.

ஆசாவின் அந்தப் பால்கிடங்கு தேர் விழாவைப் போன்ற கூட்டங்களுக்கு நடுவில் கம்பீரமாகத் திகழ்ந்தது.

இப்படி வாத விவாதங்கள் நடக்கும் சமயத்தில் சரத் சந்திரன் கலந்துகொள்வது இயற்கை. ஆனால் விலாசனோ சாப்பாட்டு நேரம் போக மற்ற நேரங்களில் எல்லாம் ஆசா வுடனேயே காணப்பட்டான். சர்ச்சை மும்முரமாக நடக்கும் போதெல்லாம் ஆசா விலாசனின் அபிப்பிராயத்தைத் திரும்பத் திரும்பக் கேட்டு வந்தாள். விலாசனின் அபிப்பிராயத்தை ஒட்டியே அவளும் பேசி வந்ததால் அங்கே கூடியுள்ளவர்களின் கவனத்திற்கு அந்த விஷயம் வராமல் போகவில்லை.

அஹிம்சைக் கொள்கையில் நம்பிக்கையற்றுப் போனாலுங் கூட அந்தக் கொள்கையைப் பரப்பின பெரிய தேசீய ஸ்தாபனத்துக்கு விரோதமாக நடக்கக் கூடாது என்பதே விலாசனுடைய அபிப்பிராயம். 'நாஷனல் காங்கிரஸ்' மகா சபைதான் அகில ஹிந்துஸ்தானத்திலும் மிகப் பெரிய அரசியல் கட்சி; அது ஒன்றேதான் ஜாதி மத பேதமின்றி, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இன்றி, சகலரையும் தன்னுள் கொண்ட பெரிய தேசீய ஸ்தாபனம். தாங்கள் சத்தியாக்கிரகத்தில் சிறிது மாற்றம் தேடினாலுங்கூடக் காங்கிரஸுக்கு விரோதமாகப் போகக் கூடாது என்றே அவ்விருவரும் விரும்பினர்.

பம்பாய்ப் பட்டினத்தில் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்குத் தலைமை வகித்தவர்கள் அந்தச் சமயத்தில் அங்கு வந்திருந்தனர். வேலை நிறுத்தம் செய்வதாலேயே புரட்சியை உண்டு பண்ணலாம் என்றும், புரட்சியினால்தான் விடுதலை பெற முடியும் என்றும் அவர்கள் நம்பினார்கள். ஆசா, விலாசன், சரத்சந்திரன் இம் மூவரும் கூடிய முக்கூட்டுத் தலைமையை அவர்கள் தங்கள் கட்சிக்குச் சாதகமாகப் பயன்

படுத்தப் பார்த்தார்கள். 'மில் தொழிலாளர் யூனியன்', 'டிரேட் யூனியன்', 'சிவப்புக்கொடி யூனியன்' முதலிய பற்பல சங்கங்களின் தலைவர்களும் ஆசாவையும் அவளுடைய நண்பர்களான விலாசன், சரத்சந்திரன் இவர்களையும் தங்கள் கட்சிக்கு இழுத்துக் கொள்ள முயன்றனர். இவ்விதக் கட்சிக்காரர்கள் தங்களுடைய கட்சிகளின் நல்ல அம்சங்களை ஒன்றுக்குப் பத்தாக்கி வானளாவிப் புகழ்வதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் அவர்கள் அத்துடன் நிற்பதில்லை. பிற கட்சிகளில் உள்ள குறைபாடுகளை அமோகமாகப் பெருக்கி வர்ணித்து, அதன் தலைவர்களை வாய்கொண்ட மட்டும் வைது, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலுள்ள கேவலமான அம்சங்களையும் எடுத்துக் கூறத் தயங்குவதில்லை. இப்படிச் செய்வதால் அவர்கள் தங்களுடைய தேசபக்தி வெறும் கூடு என்பதை வெளிக் காட்டிக்கொள்ளத் தயங்கவில்லை.

இவ்விதம் எதிர்க்கட்சித் தலைவர்களைக் 'கன்னா பின்னா' என்று வைவது ஆசாவிற்குச் சற்றும் பிடிக்கவில்லை.

"நீங்கள் இப்படி மட்டு மரியாதை இல்லாமல் பேசுவது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. உண்மையில் எனக்கு உண்டாகும் வெறுப்புக்கு அளவே இல்லை. உங்களுக்குச் சரியானதாகப் படாத கட்சியின் தலைவர்களுக்கும் தங்களுடைய நோக்கங்களை வெளியிட்டு அதைப் பரப்ப உரிமையுண்டு என்பதை நீங்கள் மறந்து விடுகிறீர்கள். அரசியலில் கற்றுக் கொள்ள வேண்டிய 'அ ஆ இ ஈ' எழுத்துக்களைக்கூட நீங்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. மற்ற எவ்வளவோ விஷயங்களில் மகாத்மா காந்தியடிகளின் அபிப் பிராயங்கள் அனுபவ சாத்தியம் இல்லாவிடினும், இந்த விஷயத்தில் எல்லோரும் அவரைப் பின்பற்றவே வேண்டும். நீங்களே யோசித்துப் பாருங்கள்: இந்தப் பம்பாய்ப் பட்டினத்தில் எத்தனை சங்கங்கள் இருக்கின்றன! எத்தனை 'யூனியன்'கள் இருக்கின்றன? அவைகள் எல்லாமே தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தும் செய்கையிலேயே ஈடுபட்டிருக்கின்றன. அவைகளை ஏன் ஒன்று படுத்தி ஒரு பெரிய மத்திய ஸ்தாபனமாகச் செய்யக் கூடாது? ஒவ்வொரு யூனியனும் தனக்கு உண்டான கடமைகளை மறந்து விட்டு மற்ற யூனியன்களையும் கட்சிகளையும் ஏன் தூஷிக்க வேண்டும்? உங்கள் சிவப்புக் கொடி யூனியன்தான் மற்றொரு கட்சியுடன்

முதலில் ஒற்றுமை யாகட்டுமே. இதை நீங்கள் ஏன் செய்யக் கூடாது?''

மேற்படி கேள்வியை ஆசா யாரைப் பார்த்துக் கேட்டாளோ, அந்த யுவன் சிவப்புக் கொடி யூனியனின் ஒரு முக்கியமான தூண் போன்றவன். அவன் தோற்றத்தில் மிகவும் எளியவனுக இருந்ததும் அன்றி, ரத்த க்ஷயம் பிடித்தவனைப்போல் வெளுப்பாகவும் பலஹீனமாகவும் காணப்பட்டான். கண்களில் குழி விழுந்திருந்தது; கன்னங்கள் மாங்கொட்டையைப்போல் வற்றியிருந்தன. ஏற்கனவே அவன் முகத்தில் அளவிற்குச் சற்றுப் பெரியதாக இருந்த மூக்கு, இன்னும் பெரியதாகத் தோன்ற ஆரம்பித்தது. அவன் 'கிராப்' செய்துகொண்டு பல நாட்கள் ஆகி இருக்க வேண்டும். அவன் காதுகளின் பக்கங்களிலும் பிடரியிலும் நீண்ட மயிர்கள் வளர்ந்திருந்தன. அவன் தலை வாரப்படாமல் இருந்ததால் கூந்தல் புரட்சிக்காரர்களைப்போலச் சொன்னபடி கேட்காமல் இப்படியும் அப்படியும் தாறுமாருக நின்றது. அவன் தலையில் ஒரு நாளும் தொப்பி தரித்துக்கொள்ளுவதே இல்லை. ஆனுல் நீண்டு அழுக்கடைந்த ஒரு தொப்பியை மடித்து அவன் சதா சர்வகாலமும் வைத்திருப்பது எக்காரணம் கொண்டோ யார் கண்டார்கள்? பேச்சு மிகவும் சுவாரஸ்யமாக இருக்கையில் அவன் தன் வலது கையால் தொப்பியின் மடிப்பைப் பிடித்துக்கொண்டு இடது உள்ளங்கையில் தாளம் போட்டுக்கொண் டிருக்க மட்டும் தவறுவதே இல்லை.

ஆசா அவனை நோக்கிக் கேள்வி கேட்டதுமே அவன் எக்கச்சக்கமாய் அகப்பட்டுக் கொண்டவன் போல் விழித்துக்கொண்டே, ''நீங்கள் என்னைக் கேட்டதுபற்றி மிகவும் சந்தோஷம். உங்களுக்கு அதைப்பற்றி முழுவதும் விவரித்துச் சொல்லுகிறேன்.... ....'' என்று பலமாக ஆரம்பித்தான். பிறகு சற்று மௌனம் சாதித்தான். ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டதும் அவன் தன் தொப்பியினுல் தாளம் போட ஆரம்பித்துவிட்டான். பேச்சின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க அவன் தாளம் போடுவதும் பலமாக இருந்தது. அவன் நீண்ட பிரசங்கம் செய்தானே ஒழிய அதில் அர்த்தபுஷ்டியான பாகம் ஒன்றுமே இல்லை.

அவன் பேசின வியாக்கியானத்தின் சாராம்சம் இதுதான்: தொழிலாளர்களிடையே ஒற்றுமை உண்டாக்கவும் அவர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தயார் செய்யவும், ஒவ்வொருவனும் கார்ல் மார்க்ஸ் என்னும் பொதுவுடைமை வாதியின் கிரந்தங்

களை நெட்டுருச் செய்யவேண்டும். கார்ல் மார்க்ஸின் புத்தகங்கள்தாம் வேத புத்தகங்கள். கார்ல் மார்க்ஸ் கொள்கையை முழுவதும் அறியாதவர்கள் தொழிலாளர் தலைவராக வர அதிகாரமில்லை. ரஷ்யாவில் புரட்சி செய்ததனுல்தான் பொதுவுடைமைச் சர்க்கார் ஏற்பட்டது. எனவே இந்தியாவிலும் பொதுவுடைமைச் சர்க்கார் ஏற்பட ரஷ்யாவில் நடந்ததைப் போலவே இங்கும் நடத்தல் வேண்டும். இங்கும் புரட்சி உண்டாகவேண்டும். அப்போதுதான் நாடு விடுதலையடையும்.

விலாசன் இடையில் குறுக்கிட்டு, "ஓகோ, புரட்சிக்குக் காரணமாக இருந்த காரியங்கள் எல்லாம் இங்கேயும் உண்டாக வேண்டுமா?" என்று கேட்டான்.

தொப்பியினுல் போடும் தாளத்தை இன்னும் சற்று வேகமாகப் போட்டுக்கொண்டே அந்தச் சிவப்புக் கொடி வீரன், "ஆம்; எல்லாம் இங்கேயும் உண்டானுல்தான் புரட்சி ஏற்படும்" என்ருன்.

"கொலையும் ரத்தவெள்ளமுங் கூடவா?" என்ருள் ஆசா.

"எங்கள் கொடியின் சிவப்பு வர்ணமே உங்கள் கேள்விக்குப் பதிலளிக்கும்."

"ரஷ்யர்கள் ஆரம்பித்த புரட்சிமயமான கொள்கையில் உங்களுக்கு ஏன் அத்தனை பற்றுதல்? ரஷ்யாவில் நடக்கும் அரசாங்க முறை ஒன்றினுல்தான் நமக்கு விடுதலை கிடைக்குமா? எனக்கு இது புரியவே இல்லை! ரஷ்யாவின் கொள்கைகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது இந்த நாட்டில் சாத்தியமாகாது. சீதோஷ்ண நிலைமையும், பரம்பரையாக வந்த பண்புகளும், சுற்றுப் புறங்களின் தன்மையும், மதத்தின் பேரால் நடந்த கொடுமைகளும் ரஷ்யப் புரட்சிக்குச் சாதகமாக இருந்தன. நம் நாட்டுக்கு அவை முற்றும் பொருந்தா. எனவே நாம் ஏன் தனித்த முறையில் நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபடுதல் கூடாது? தொழிலாளர்களை ஒற்றுமைப் படுத்த ரஷ்யாவைப்போல் புரட்சிதான் தேவையா? நமது தேசீயக் கொடிதான் நமக்கு மேலானது. ரஷ்யாவின் சிவப்புக் கொடியினுல் மட்டும் சுதந்தரம் கிடைத்து விடுமா?" என்ருன் விலாசன்.

தொப்பியின் தாளம் மிகவும் வேகமாயும் பலமாயும் விழுந்துகொண் டிருந்தது என்று சொல்லத் தேவையில்லை. பிறகு விடை கிடைத்தது:

''உங்கள் தேசியக் கொடியின் பின்னணியில் முதலாளித்துவ மனப்பான்மை பரிணமித்து நிற்கிறது. ஏழைத் தொழிலாளிகளை ஒன்றுபடுத்த முதலாளித்துவமான ஒரு கொடி எப்படிப் பிரயோஜனப்படும்? உங்கள் தேசியக் கொடி கேவலம் பாரத தேசத்திற்காக மட்டும் - அதிலும் பணக்காரர்களும் மத்திய வகுப்பார்களும் ஆதரிக்கின்ற கட்சிக்காக மட்டுமேதான் ஏற்பட்டிருக்கிறது. 'நம் நாடு மட்டும் உருப்படட்டும், மற்றவை அழியட்டும்' என்ற குறுகிய கொள்கை எங்களுக்குப் பிடிக்காது.''

''பேஷாகச் செய்யுங்கள்! உங்கள் கொள்கைகளைத் தாராளமாக விரிவாக்குங்கள்! சொந்த வீட்டிற்கு உதவாதவன் சமூக சேவை எப்படிச் செய்வான்? சொந்த நாடு முன்னேறுவிடில் உலக சேவை எப்படிச் சாத்தியமாகும்? அகில இந்தியாவிற்கும் பொதுவாய் அமைந்த அந்த மாபெரும் தேசிய சபையை நீங்கள் தூஷிப்பது முட்டாள்தனத்தின் சிகரம் என்றே சொல்ல வேண்டும்.''

''ஆம்! முட்டாள்களுக்குப் புத்திசாலியைக் கண்டால் அப்படித்தான் தோன்றும். உங்கள் காங்கிரஸ், முதலாளிகளின் ஸ்தாபனம்! மறைமுகமாக ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கும் சபை! அதை நாங்கள் எங்கள் லக்ஷ்யமாகக் கருத முடியாது. இந்த உலகத்திலுள்ள தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி ஒரு தொழிலாளர் சாம்ராஜ்யம் ஸ்தாபிப்பதே எங்கள் நோக்கம். 'உலகத் தொழிலாளிகளை ஒன்றுபடுத்துங்கள்' என்பதே எங்கள் குருதேவனின் ஆக்ஞை.''

''தயவு செய்து எனக்கு உண்டாகும் ஒரு சந்தேகத்தை நிவர்த்தி செய்வீர்களா?''

''கட்டாயமாய்; சொல்லுங்கள், என்ன சந்தேகம்?''

''உலகத்திலுள்ள எல்லாத் தொழிலாளர்களையும் ஒரு சாம்ராஜ்யத்தில் ஒன்று சேர்க்க வேண்டும் என்கிறீர்கள். ஆனால் தீர யோசித்தால், இது சரிவர நடக்காது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது! தொழிலாளிகளிலும் பல வித்தியாசங்கள் உள்ளனவே! இதற்கு என்ன செய்வது?''

''செய்வது என்ன?''

''இங்கிலாந்துத் தொழிலாளிகள், ஜெர்மனித் தொழிலாளிகள், ஜப்பானியத் தொழிலாளிகள், இந்தியத் தொழிலாளிகள் இவர்களுக்குள் அடிப்படையான வித்தியாசங்களும் அபிப்பிராய

பேதங்களும் இருக்கவில்லையா? இந்த நாட்களில் முதலாளிகள் தங்களுக்குள் போட்டியிட்டுச் சண்டையிடுகின்றனர். அதற்குத் தொழிலாளிகளும் உடந்தையாயிருப்பது ஒரு புறம் இருக்கட்டும். நாளைக்குத் தொழிலாளர்களுக்குள் ஒரு யுத்தம் உண்டாகாது என்று எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்? சாம்ராஜ்யம் ஸ்தாபிப்பது முதலாளியானால் என்ன, தொழிலாளியானால் என்ன? அது ஒருவிதமான ஏகாதிபத்தியத்தில் தானே கொண்டுபோய்ச் சேர்க்கும்!'' என்றான் விலாசன்.

''ஆஹா! அந்த இடத்தில்தான் நீங்கள் தப்பபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள்.'' தொப்பியின் தாளத்தை அதிக வேகமாய்ப் போட்டுக்கொண்டே அந்த வற்றலான மனிதன் பேச ஆரம்பித்தான்: ''ஐயா! தொழிலாளர்கள் ஏற்படுத்தப் போகின்ற சாம்ராஜ்யம் முதலாளிகளின் ஏகாதிபத்தியம் போன்றதாகாது. அந்தச் சாம்ராஜ்யத்தில் தனிப்பட்ட சொத்துரிமை ஒன்றுமே இருக்காது. பணக்காரன் ஏழை என்னும் வித்தியாசமே இல்லாது ஒழிந்து போகும். யாருமே பணம் சேர்க்கவும் முடியாது, கொள்ளை லாபம் அடிக்கவும் முடியாது. பணக்காரன் ஆகும் யோசனையே ஒழிந்து போகும். எனவே யுத்தம் ஏது? விரோதம் எப்படி ஏற்படும்? தயவுசெய்து யோசித்துப் பாருங்கள்.''

''நீங்கள் பேசுவது சுலபமாகப் பேசிவிடுகிறீர்கள். ஆனால் எங்களுக்கு அதில் ஒன்றுமே சரியாகப் புரிவதில்லை'' என்றாள் ஆசா.

''விளங்கவில்லையா? ஓஹோ!''

''செங்கொடிக்காரர்களுக்குத்தான் புத்தி இருக்கிறது. எங்களுக்கெல்லாம் இல்லை என்று அர்த்தமா? ஏழைத் தொழிலாளர்களுக்காக ரஷ்யா பாடுபடுகிறது என்பதனால் அந்தத் தேசத்தின்மேல் எங்களுக்கு மதிப்பும் நட்பும் உண்டாகின்றன; இதில் சந்தேகமே இல்லை. ஆனால் ரஷ்யாவின் கொள்கைதான் உலகம் முழுவதும் உபயோகிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதும் முயல்வதும் வீணான காரியமே ஆகும். ரஷ்யாவின் கீழ் நாம் இருக்கவேண்டியதா என்ன? முற்றும் வேறுபாடுகளைக் கொண்ட தொழிலாளர்களிடையே சகோதரத்துவம் ஏற்படுத்துவது கேவலமான காரியம் என்று யார் சொல்லுவார்கள்? முடிந்தால் கொண்டு வாருங்களேன்! ஆனால் அந்தச் சகோதரத்துவத்திற்காக இந்தியத் தொழிலாளர்களும்

மே தினக் கொண்டாட்டம் கொண்டாடி ஊர்வலம் புறப்பட வேண்டும் என்பது என்ன அவசியம்? தலைக்குமேல் சிவப்புக் கொடி பிடித்துக் கொண்டு 'இன்கிலாப் ஜிந்தாபாத்' என்று கூச்சலிடுவது எதற்காக? அது துராக்கிரகமேயாகும்'' என்றான் விலாசன்.

இதைக் கேட்டதும் ஆசாவிற்கு அடக்க முடியாத சிரிப்பு ஏற்பட்டது.

அவளுடைய சிரிப்பைக் கண்டு மாங்கொட்டைக் கன்னத்தைக் கொண்ட அந்த வீரனின் முகம், அவன் ஆசை வஸ்துவான ரஷ்யக் கொடியைக் காட்டிலும் சிவப்பாக மாறிற்று. எழுந்து போகும்போது அவன், ''உங்களுக்கு யோசிக்கும் சக்தியே இல்லை. சுத்த முழு மூடர்கள்! உங்களால் தேச சேவை எப்படிச் சாத்தியமாகும்!'' என்றான்.

வாத விவாதங்கள் முற்றிக் கடைசியில் சண்டையிலும் வசை மொழிப் பிரயோகத்திலும் முடிந்ததைக் காண ஆசாவிற்கு மன வருத்தம் ஏற்பட்டது. கூட்டமெல்லாம் கலைந்து வெகுநேரம் வரையில் ஆசா தன் இடத்திலேயே கவலை தோய்ந்த முகத்துடன் எதைப்பற்றியோ சிந்தித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

இதைக்கண்ட விலாசன் அவளை நோக்கி, ''ஏன் இத்தனை கவலையுடன் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''விளையாட்டு முற்றி வினையாக முடிந்ததே. எனக்கு இதனால் மனக் கலக்கமேதான் உண்டாகிறது. அபிப்பிராயங்களுக்குள் எத்தனையோ பேதங்கள் இருக்கலாம். ஆனால் எதைக் கண்டாலும் மூடத்தனமாக எதிர்ப்பது, தனிப்பட்ட முறைகளில் கொள்கையைக் கைவிடுவது, வீம்புக்காக எடுத்த விஷயத்திற்கெல்லாம் ஏட்டிக்குப் போட்டி செய்வது, பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டும் என்று உரக்கக் கூவிக்கொண்டு சமயத்தில் ஓடி ஒளிவது, துராக்கிரகத்தால் அடத்தைச் சாதித்துக்கொள்ளுவது, இவ்விதமான துர்க்குணங்களினின்றும் என் நாடு என்றைக்குத்தான் விடுதலை பெறுமோ, நான் அறியேன். இதையெல்லாம் பார்க்கையில் நம் ஒப்பற்ற தலைவர் மகாத்மா சொல்லுவதைப்போல் ராஜ காரியங்களை விட்டுத் தீண்டாமை, மது விலக்கு, முதியோர் கல்வி, மூட நம்பிக்கை ஒழித்தல், விதவா விவாகம், குடிசைத் தொழில் முதலிய சமூக விஷயங்களில்

சிரத்தை ஏன் அதிகமாய் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றே தோன்றுகிறது'' என்ருள் ஆசா.

விலாசன் பதில் ஒன்றும் பேசாமல் இரண்டொரு தடவை சற்று வாய்விட்டுச் சிரித்தான். அதைக்கண்ட ஆசா அவனை, ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''இல்லை. சமூக சேவை செய்தால் தேவலை என்று சொன்னீர்களே! அதில் மட்டும், தன்னலப்பற்று, அடம், விரோத மனப்பான்மை இவைகளெல்லாம் இல்லையோ?''

ஆசா ஒரு பதிலும் கூறவில்லை. ஆனல் அவளுடைய வளைந்த புருவங்களிலிருந்தும், சற்று வெளியே வந்து நின்ற கோவைப் பழம் போன்ற உதட்டின் அசைவுகளிலிருந்தும் விலாசன் சொன்ன வார்த்தைகளை அவள் முற்றும் ஆமோதிப்பது தெரிந்தது. விலாசன் மேலும் பேசலாஞன் :

''சிக்கலாக இருக்கும் அரசியலையும் அதனுடனேயே பின்னிக்கொண்டிருக்கும் சமூகப் பிரச்னைகளையும் வெவ்வேருக நாம் பிரித்துக்கொண்டு, சமூக முன்னேற்றத்திற்காக மட்டும் உழைத்தாலுங்கூட, அரசியல் ஓரளவு அதில் கலக்கத்தான் கலக்கும். சமூக சேவைக்காக மறியல் செய்வதானுல் அது கட்டாயம் அரசியல் பிரச்னையில்தான் அழுத்திவிடும் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமா? ஏழைகளுக்கு உதவி செய்து அவர்களை என்றென்றைக்கும் சுகஜீவிகளாக மாற்றவேண்டும் என்பதுதான் உங்கள் இச்சை என்ருல் அது அரசியலில் சம்பந்தப்படாமல் எப்படி முடியும்? எனக்குத் தோன்றியதை ஒளிக்காமல் வெளியிட்டேன். உங்கள் அபிப்பிராயம் என்னவோ?''

''நீங்கள் பேசுவதெல்லாம் என் மனத்திலிருந்து வரும் வார்த்தைகளைப்போலவே இருக்கின்றன. உங்கள் சாதுரியமான வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தாலே போதுமானது.''

இப்படிச் சொன்னபோது அவளுடைய உதடுகள் சற்று அசைந்து புன்முறுவல் கொண்டன. வாயில் வரிசையாக அமைக்கப்பட்டவைபோல் இருந்த பளபளப்பான பற்கள் சற்று வெளியே தெரிந்தன. நீண்ட மூக்கின் அடியில் பவழ நிறத்துடன் திகழ்ந்த அவளுடைய மேல் உதடு சற்றுச் சுருங்கி நீண்டது; கீழ் உதடு - அது சற்றுத் தடிப்பானது - குவிந்து முன் வந்தது. உண்மையில் அவை விலாசனின் கண்களுக்கு கோவைப் பழம் போலவே தோற்றின.

ஆசா சொன்னதை 'ஆம்' என்று ஒப்புக்கொள்ளும் பாவனையுடன் அவன் தலையைச் சற்று அசைத்தான்.

''வெறுமனே புகழ்ச்சி செய்வதுதான் பெண்களின் வழக்கமோ?''

''ஓ, அப்படியானால் தங்களுக்குப் பிடித்த வஸ்துக்களை அநாவசியமாகப் புகழ்வதுதான் ஸ்திரீ தர்மமா என்ன?''

''அப்படியல்ல; ஆனால் ஸ்திரீகளுக்கு உண்மையில் ஒரு விஷயம் பிடித்ததாக வைத்துக் கொள்ளுவோம்; அதைப்பற்றி அவர்கள் ஒன்றுக்கு நாலாகப் புகழ்வதில் ஒரு தனி இன்பத்தை அடைகிறார்கள் என்று தோன்றுகிறது.''

''அப்போது, புருஷர்களுக்கு ஒரு விஷயமும் பிடிக்காமலே இருந்துவிடுமா என்ன?''

இப்படிச் சொல்லிக்கொண்டே ஆசா விலாசனின் முகத்தைச் சற்று உற்று நோக்கினாள். விலாசன் அவள் நோக்கைச் சந்தித்ததும் ஆசாவிற்குச் சற்று வெட்கம் ஏற்பட்டது. அவள் தன் நீண்ட பின்னலை முன்னால் இழுத்து அதன் நுனியைக் கை விரல்களால் கோத ஆரம்பித்தாள்.

அவளுடைய விஷமத்தனமான பேச்சையும் அவர்களுடைய கண்கள் இரண்டும் தற்செயலாகச் சந்தித்ததையும் அவள் தலை குனிந்து வெட்கப்பட்டதையும் கண்ட விலாசனுக்குத் தலைக்கு மேல் காதல் அலைகள் கிளம்பிச் சென்றன. உணர்ச்சியின் வேகத்தில் அவன் எதையாவது உளறி இருப்பினும் அதில் ஆச்சரியம் இல்லை. ஆனால் அவன் மனத்தை அடக்கிக் கொண்டதனால், வாய் அளவில் சொற்கள் நின்றுவிட்டன. அவன் முகம் ரத்தம்போல் சிவந்தது. எவ்விதக் காரணத்தைக் கொண்டும் தான் ஆசாவின்மேல் கொண்டுள்ள எல்லையற்ற காதலை வெளியிடக்கூடாது என்று தான் செய்துகொண்ட முடிவு அவன் ஞாபகத்திற்கு வந்தது. எனவே அவன் மௌனம் சாதித்தான்.

இவ்விதமான பேச்சுக்கள் எப்போதுமே அபாயகரமானவை என்று அவன் எண்ணினான். உணர்ச்சி வேகத்தினால் அவன் ஆசாவின் மேல் பாய்ந்து அவளைப் பலங்கொண்ட மட்டும் இறுகத் தழுவி, அவளுடைய உதடுகளைக் கடித்து, அவள் நாக்கைத் தன் நாக்கால் தடவலாமா என்று அவனுக்கு ஆத்திரம் பிறந்தது. ஆனால் விவேகம் என்னும் கயிற்றால் தன் ஆசைகளை யெல்லாம் கட்டியபின் அவன், தான் அங்கிருப்பது சரியல்ல என்று

எண்ணியவனாய், "நான் போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தான்.

எதிர்பாராத விதமாக அவன் திடீரென்று எழுந்து போவதன் காரணத்தை உணராத ஆசா, "இதென்ன? இருந்திருந்தாற் போல் எழுந்து ஓட்டம் பிடிக்கிறீர்களே?" என்றாள்.

"நான் இங்கே வந்து வெகு நேரமாகிவிட்டதே! மூன்று மணி நேரத்திற்கும் அதிகம் ஆகி இருக்குமே!"

"கடிகாரத்தின் மேல்தான் உங்கள் நோக்கம் பூராவையும் வைத்துக்கொண்டே பேசினீர்களோ?"

"அப்படி இருந்திருந்தால் மூன்று மணி நேரம் சென்றது கூடத் தெரியாமல் பேசிக்கொண்டிருப்பேனா?"

"ஓ, பணத்தைக் காட்டிலும் நேரத்தைச் செலவு செய்வதில் உங்களுக்கு இத்தனை கணக்கு ஏன்? 'காலம் கைப்பொருளினும் மேலானது' என்று ஒரு கவி பாடி இருக்கிறாரே, அதனாலா?"

"ஒருவேளை அந்தக் கவி உங்களுடைய அரிய நேரத்தைப் பற்றியே அவ்விதம் பாடியிருக்கலாம். உங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கணநேரமும் அதிக சிரேஷ்டமான பொருளே!"

"அப்படியானால் நீங்கள் இவ்விடம் விட்டுப் போகவேண்டியதே இல்லை. என் நேரத்தின் மதிப்பு எனக்குத் தெரியும். எப்படிக் கழித்தால் அது வீண் விரயமாகாது, யாருடன் கழித்தால் அது பிரயோஜனமாகக் கழிந்ததாகும் என்னும் விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். நான் எப்போது 'போங்கள்' என்று சொல்லுவேனோ அப்போதுதான் நீங்கள் போகமுடியும். ஆனால் 'போங்கள்' என்ற வார்த்தை என்றைக்குமே வரப்போவதில்லை."

அவள் பேச்சில் ஒலித்த வெளிப்படையான, குற்றமற்ற ஹாஸ்ய ரசத்தை விபரீதமாக அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது என்று எண்ணிய விலாசனுக்கு உணர்ச்சியை மட்டும் அடக்குவது மிகவும் சிரமசாத்தியமாகிவிட்டது. ஆயினும் பேச்சை மாற்றிக்கொண்டான்.

"அடேயப்பா! இப்போதல்லவா தெரிந்தது? இனிமேல் இங்கே வருவதாக இருந்தால் சற்று முன்யோசனை செய்துவிட்டுத்தான் வர வேண்டியதாக்கும்! சரி, இப்போது நான் போகவேண்டிய நேரம் வந்துவிட்டது."

விலாசன் இனிமேல் தங்கமாட்டான் என்று கண்ட ஆசா தன் இடத்திலிருந்து எழுந்து அவன் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள்.

''நாளைக்குச் சீக்கிரமே வந்துவிடுவீர்கள் அல்லவா? இல்லை, உங்களுக்காக வழி பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதானு?''

''இல்லை, நாளைக்கு வெகு சீக்கிரம் வந்துவிடுகிறேன்.''

மோட்டாரில் ஏறினதும் விலாசன் அதைக் கிளப்பிச் சடுதியில் புறப்பட்டான். ஆனல் அவன் முகம்....இது என்ன?

பின்னல் திரும்பி ஆசாவை ஒரு தரம் பார்க்கத்தான் வேண்டுமோ? அவனுடைய கட்டுக்கு அடங்காமலேயே கண்கள் ஆசாவை நோக்கின. ஆசா தன்னையே பார்த்துக்கொண்டிருந்ததை அவன் கண்கள் கண்டன. இருவர் விழிகளும் சந்தித்ததும் விலாசனுக்கு ஏற்பட்டதைப் போலவே ஆசாவிற்கும் வெட்கம் உண்டாயிற்று.

வண்டி செல்லும்போதே விலாசனின் மனத்தில் பற்பல எண்ணங்கள் உதித்தன. ஆசா தன்னிடம் பேசியதெல்லாம் வெறும் ஹாஸ்ய ரஸமான சம்பாஷணையே ஒழிய அதில் கேவலமான அர்த்தம் ஒன்றும் இருக்க முடியாது. அவள் பேசின சொற்களின் தொனி ஒரு விதமாக இருந்தது. விலாசன் மறுமொழி கூறியதில் ஏதாவது தப்பான பொருள் இருக்குமோ! சே! என்ன காரியம் செய்தான்! விலாசன் தன்னையே குற்றவாளியாக்கிக் கொண்டான். ஆசாவிடம் இனிமேல் கண்டபடியெல்லாம் பேசக்கூடாது.

*   *   *   *

அன்றிரவு சந்திரன் தன் பூரணப் பொலிவுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தான்.

விளக்குகளை யெல்லாம் அணைத்தவுடன் ஆசா ஒரு சாய்வு நாற்காலியை ஜன்னல் அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு அதன்மேல் சாய்ந்தவண்ணம் எதைப்பற்றியோ விசாரப் பட்டுக் கொண்டிருந்தாள்.

வெளியே ரஸ்தாவில் ஓசையெல்லாம் அடங்கிக் 'கப் சிப்' என்று இருந்தது. எதிர்ப்புறத்தில் இருந்த கட்டிடங்களின் நிழல் தெருவில் விழுந்திருந்தது. தெருக்கோடியின் முச்சந்தியில் ஒரு டீக்கடை இருந்தது. அதில் ஒரு பிரகாசமான விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அங்கே 'டீ' குடிக்க வந்தவர்களின் பேச்சும்,

கோப்பையில் கரண்டியை விட்டுக் கலக்கும்போது உண்டாகும் ஒலியும் மெள்ளக் காற்றில் பரவிக்கொண்டிருந்தன. ராஜ வீதியில் போய்க்கொண்டிருந்த 'டிராம்' வண்டியின் 'கட கட' வென்ற ஒலி வெகுதூரம் வரையில் கேட்டது. இடையிடையில் மணி அடிக்கும் சத்தமும் கேட்கத் தவறவில்லை. டிராம் வண்டியின்மேல் நீட்டிக்கொண்டிருக்கும் கம்பி, மின்சாரக் கம்பியின் மீது உராய்ந்து செல்லும்போது பிரகாசமான மின் பொறிகள் தோன்றுவதுகூட ஆசாவிற்குத் தெரிந்தது. இடையே போலீஸ் காரர்களின் 'ஜாக்கிரதை' என்ற சப்தமும் சேர்ந்து ஒலித்தது.

ஆசா ஜன்னலருகேயே உட்கார்ந்திருந்தும் சரத்சந்திரன் அங்கே வந்து நுழைந்ததைக் கவனிக்கவே இல்லை. அவன் மறுபடியும் ஜன்னலின் கீழ் வந்து நின்று அவளைக் கூப்பிட்ட போதுதான் ஆசாவிற்கு அவன் வருகையைப் பற்றித் தெரிந்தது. உடனே அவள் கீழே இறங்கிச் சென்று விளக்குகளைப் போட்டாள். கதவைத் திறந்து விட்டு மறுபடியும் மாடியின்மேல் உள்ள தன் அறைக்குச் சென்றாள். அவளுக்குப் பின்னாலேயே வந்த சரத்சந்திரனைக் கண்டதும் அவள், "இது என்ன? இந்த நிசி வேளையில் எங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"உன்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன் என்பது தெரிந்துங்கூட நீ என்னைக் கேள்வி கேட்டு மடக்குகிறாயா?"

"உங்களுக்கு மராட்டி பாஷையின் மரபே தெரியாதுபோல் இருக்கிறது! இந்த இடத்தில் 'எங்கே?' என்றால் 'ஏன்?' என்பதே பொருள்."

"இதை நான் சொல்லித்தான் நீ அறிய வேண்டுமா என்ன? உன்னைக் காணாமல் அரைக்கணமும் தாமதிக்க முடியாமல்தான் இவ்விடம் ஓடிவந்தேன்."

"இதை உண்மை என்று நான் நம்புவதற்கு முயன்றும் என்றால் முடியவே இல்லை. இங்கு வருவதே உங்களுக்கு இந்நாட்களில் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது."

"எனக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பைப்பற்றி உனக்கே தெரியும்!"

"எதன்மேல்? தேச சேவையிலா?"

"சீ, சீ, அப்படிக்கு ஒன்றும் இல்லை!"

"பின் எதன்மீது? என்மீது வெறுப்பா?"

"ஊஹூம்; இல்லையே!"

"பின்?"

''நீ என்னிடம் பழகும் விதத்தின்மீதுதான் எனக்கு வெறுப்பு! நீ இவ்விதம் ஒளிவு மறைவாக என்னிடம் பழகுவது இன்னும் எத்தனை நாட்களுக்கு?''

''எந்த விஷயத்தில் ஒளிவு மறைவு? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே.''

''புரிந்தும் புரியாததைப் போல் எத்தனை நாட்களுக்கு வேஷம் போடப்போகிறாய்?''

இந்தப் பேச்சைக் கேட்டதும் ஆசாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் உள்ளத்தில் உண்டான மாறுதலை முகத்தில் காட்டிக்கொள்ளாமல் அவள் வாளா இருந்தாள்.

அவள் ஏதாவது பதில் சொல்லுவாளோ என்று சற்று நேரம் காத்திருந்தும் பயன் இல்லாதது கண்டு சரத்சந்திரன் பின்னும் பேசலானான்:

''ஆசா. நான் உன்மேல் எல்லையற்ற காதல் கொண்டுள்ளேன் என்பதை நீ என் செய்கைகளிலிருந்தே அறிந்திருப்பாய். நீ என் காதலை ஒரு நாளும் பொருட்படுத்தவே இல்லை. அதைப் போலவே நீ உனக்கு இஷ்டம் இல்லை என்பதையும் வெளிக் காட்டிக்கொள்ளவே இல்லை. உன்மீது கொண்ட காதலினாலேயே நான் உன் சத்தியாக்கிரகம் முதலிய காரியங்களில் உனக்கு உதவியளித்து வருகிறேன். இவைகளையெல்லாம் நீ அறிந்திருப்பாய். ஒருவேளை நான் உன்மீது கொண்டுள்ள காதல் ஆழமானதும் நிலையுள்ளதும் விசாலமானதுந்தானா தற்காலிகமானதா என்று முடிவு கட்டுவதற்காக நீ இவ்வளவு நாளும் வெறுமனே இருக்கிறாயோ என்னவோ எனக்குத் தெரியாது. எனவே உன் காதல் எனக்குக் கிட்டும் என்ற நம்பிக்கை மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. மறுதளிக்கப்பட்ட காதல் மனிதனின் நெஞ்சைப் பிளக்கும். ஆனால் நான் நம்பியிருக்கும் காதல் அனுதினமும் வளர்ந்து கொண்டே வருகிறது. அதை நான் அடக்க எத்தனையோ பிரயாசைப்பட்டும் என்னால் முடியவில்லை. அணையை உடைத்துக்கொண்டு செல்லும் பிரவாகம் போல் என் காதல் இனிமேல் கட்டுக்கு அடங்காது. எனவே நான் அதைப் பூர்த்தி செய்துகொள்ளவே இங்கு வந்தேன். நீ என்மீது தோஷம் கற்பிப்பாயா? நீ ஒருவேளை நினைக்கலாம்; 'இவன் எந்தக் காரணங் கொண்டு என் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு என்னுடனேயே உழைக்கிறானோ அதே காரணம் கடைசி வரையில் நிலைத்து நிற்குமா?' என்று. நான் சொல்லுகிறேன் கேள்:

காதல் எத்தனை பவித்திரமானதோ அத்தனை தகிக்கும் சக்தியையும் கொண்டது. எத்தனை தியாகத் தன்மையை உடையதோ அத்தனை தன்னலமும் கொண்டது! நான் ஏன் பேச்சை அதிகம் வளர்க்கவேண்டும்? காதல் ஒரு மனிதனை மிருகப் பிராயத்திற்கும் கொண்டுவந்து விடுகிறது. அது கைகூடிவிட்டால் தேவர் உலகத்தில் உள்ள கந்தருவனாக அவனை மாற்றிவிடும் சக்தியும் அதற்கு உண்டு.

''எனக்குத் தேச சேவையில் விருப்பம் இருக்கிறது. நீயும் ஒரு தேச சேவிகை என்பதனாலேயே உன்மீது எனக்கு முதல் முதலில் அன்பும் அனுதாபமும் பிறந்தன. பிறகு நாளடைவில் அவை முற்றிக் காதலாக மாறின. என் கொள்கைகளுக்கும் உன் கொள்கைகளுக்கும் வித்தியாசம் ஏற்படக் கூடாது என்ற காரணத்தினால் நான் உன் கொள்கைகளையே பின்பற்றி வருகிறேன். நான் உன்னை அடையும் இன்பத்திலேயே புதைந்து போய் எனக்குச் சரியானதாகப் படும் கொள்கைகளைக்கூடத் திரஸ்கரித்து விட்டேன். நான் இவ்விதம் செய்ததால் உனக்கு லாப நஷ்டம் ஒன்றும் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆயினும் காதலுக்காக நான் என் இருதயத்தையே பலியிட்டுள்ளேன் என்பதை உனக்கு எடுத்துக் காட்டி என் பிரேமை மிகவும் பவித்திரமானது என்பதை நிதர்சனப்படுத்துகிறேன். ஆனால் இவ்விதம் செய்வதனாலெல்லாம் ஒரு பெண்ணின் இருதய சாம்ராஜ்யத்தை நாம் ஆள முடியாது என்னும் உண்மை இப்போதுதான் எனக்குத் தெரியலாயிற்று. கேவலம் நீ ஒரு வேளை என்னைக் காதலிக்கிறாயோ என்ற சந்தேகத்தை வைத்துக் கொண்டே நான் இத்தனை நாட்கள் இன்பம் அனுபவித்து வந்தேன். ஆனால் இனி அது நடக்காது. நான் இப்போது பட்டவர்த்தனமாக உன்னிடம் வேண்டுவது உன் நிஷ்களங்கமான பிரேமையையே. நீயே எனக்குத் தேவை! ஆசா! உன் விலைமதிப்பற்ற காதலை நான் பிச்சை கேட்கிறேன்; உன்னைத் தவிர எனக்கு இந்த உலகத்திலே ஒன்றுமே பிடிக்கவில்லை..''

அவனுடைய கண்களைச் சந்தித்துப் பேச ஆசாவிற்குத் தைரியம் வரவில்லை. கீழே குனிந்துகொண்டு சூன்ய திருஷ்டியுடன் அவள் தரையையே நோக்கிக்கொண்டிருந்தாள். ஒரு பக்கத்தில் சரத்சந்திரனின் மேல் தான் கொண்டுள்ள சகோதர வாஞ்சையை எண்ணினாள். மற்றொருபக்கம் அவன் தன்மீது கொண்டுள்ள எல்லையற்ற காதலை உன்னிப் பார்த்தாள். ஆஹா,

அந்தப் பவித்திரமான காதலுக்கு ஒரு சிறிதும் பிரதிபலன் கிடைக்காதே என்பதை நினைத்தபோது ஆசாவின் மனம் துடி யாகத் துடித்தது. அவள் நெஞ்சில் சரத்சந்திரன் மேல் அனு தாபம் ஏற்பட்டதே ஒழியக் காதல் பொறி ஒன்றுகூட உற்பத்தி யாகவே இல்லை.

அவன் காதல் மொழிகளால் ஆசாவின் நெஞ்சில் பிரதி உணர்ச்சி உண்டாகவே இல்லை என்பதை அவனும் அறிந்து கொண்டானோ என்னவோ! ஆனால்....சரத்சந்திரன் தன்னைக் காதலிக்கிறான் என்பதன் அறிகுறிகளை அவள் ஏற்கனவே அறிந் திருந்தாள். ஆனால் ஏனோ தெரியவில்லை, அவள் தன் சந்தேகத்தை வெளியிடவே இல்லை. ஒருவேளை தன் மௌனத்தைக் குறிப்பாக உணர்ந்து சரத்சந்திரன் தன்னைக் காதலிப்பதை மறந்து போவான் என்று அவள் எண்ணினாள் போலும்! மௌனம் என்பது பாதிச் சம்மதத்தின் லட்சணம் என்னும் லௌகிக உண்மையை அந்தப் பேதை அறிய வில்லை. எனவே சரத்சந்திரன் தன்மேல் கொண்டுள்ள காதலைப் பற்றிப் பேச்சு எடுத்தவுடன் அவள் திடுக்கிட்டாள். என்ன பதில் பேசலாம் என்பதே அவளுக்குத் தெரியவில்லை. பாஷையின் எல்லா வார்த்தைகளை யும் அவள் ஒரேயடியாக மறந்துவிட்டாளா என்ன? அவளுடைய நாக்குக்குப் பேசும் சக்தி போய்விட்டதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. கீழே தரையையே நோக்கிக்கொண் டிருந்த கண் களைத் திருப்பி, சரத்சந்திரனை ஏறிட்டுப் பார்க்க அவள் மனம் இடங்கொடுக்கவில்லை. இந்த விதமான சிக்கலான பிரச்னைகளில் அகப்படும் சமயத்தில் ஒரு ஸ்திரீ என்ன செய்வாளோ அதையே ஆசாவும் செய்தாள்.

அவள் தேம்பித் தேம்பி அழலானாள்!

அன்று அலர்ந்த புஷ்பங்களைத் தீண்டுவதுபோல் மிகவும் லேசாகச் சரத் அவள் கரத்தைப் பற்றினான்; பேசினான்:

''ஆசா! இது என்ன? என்னைச் சற்றுத் திரும்பிப்பார்.''

ஆசா தலைதூக்கி மேலே பார்த்தாள். அவள் கண்கள் இறுக மூடியிருந்தன. உதட்டைப் பற்களால் கடித்துக்கொண் டிருந் தான்.

அவளுடைய கையைச் சற்று அழுத்தியதும் சரத்சந்திரன், ''சொல்லேன், என்மீது உனக்குப் பிரேமை இல்லையா?'' என்று கேட்டான்.

பெருகி வரும் கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுவதற்காக ஆசா கண்களைத் திறந்தாள்.

சரத்சந்திரன் மறுபடியும் பேசலானான்:

"ஆசா, சொல்லிவிடு! உன் பதிலை நோக்கித்தான் என் எதிர்கால வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். என வாழ்வும் தாழ்வும் உன் விடையில்தான் உள்ளன."

"சரத்!"

முடியாது என்று சொல்லும் பாவனையாக ஆசா தலையை அசைத்தாள். பிறகு அவன் பிடியினின்றும் தன் கையை மெள்ள எடுத்துக்கொண்டாள்.

சரத்சந்திரன் ஆசாவின் வீட்டை விட்டு வெளியேறிய போது, உலகமே சூன்யமாக இருந்தது. சந்திரனும் மேற்குத் திசையின் அடிவானத்தருகில் சென்றுவிட்டது. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. வானத்தினின்றும் மழைபோல் பனி பெய்து கொண்டிருந்தது. வஸந்த ருது கழிந்து கிரீஷ்மருது ஆரம்பிக்கும் காலம் அது. ஆஹா! சரத்சந்திரனின் உணர்ச்சியை எழுதி முடியாது! இத்தனை நாளாய் நம்பிக்கையுடன் அவன் கட்டிய அரண்மனை விழுந்து தவிடுபொடி ஆயிற்று. இனி உலகத்தில் அவனுக்கு வேலை....?

'முடிந்தது; பிரேமையின் சுகக் கனவிலிருந்து விழித்துக் கொண்டுவிட்டேன்! இனி விழிப்பு ஏற்பட்டது! என் பலாத்காரக் கொள்கைகளை இழுத்துப் பிடித்திருந்த காதல் கயிறுகள் அறுந்து போயின. இனி நான் ஒரு சுதந்தர மனிதன்! என் இச்சைப்படி நடக்கலாம். என்னையே நான் போக்கிக்கொள்ளுவதில் இனிமேல் தடை என்ன?' என்று அவன் எண்ணலானான்.

எதிரில் போய்க்கொண் டிருந்த டிராம் வண்டி காலியாகச் சென்றது. அதோ எதிரில் அதன் 'ஷெட்' உள்ளது. வண்டி உள்ளே செல்லும் முன்பு அதன் மீது மாட்டப்பட்ட கம்பி மின்சாரத் தொடர்பை விட்டுக் கீழே விழுந்தது. வண்டி 'கட கட' என்று சப்தித்து ஓர் இடத்தில் போய் நின்று விட்டது.

சரத்சந்திரன் அதைக்கண்டு ஒரு ஜீவனற்ற சிரிப்புச் சிரித்துக் கொண்டான்.

# அத்தியாயம் 19

பின்தொடர்ந்த ஐந்தாறு நாட்களில் ஆசா கூடிய மட்டும் சந்தோஷகரமான முகபாவனையுடன் இருந்தாள் என்றாலும் அவளுடைய உள்ளத்தில் சிறிதளவேனும் நிம்மதியே ஏற்படவில்லை.

தேச சேவையில் ஹிம்ஸை வழி நல்லதா அஹிம்ஸா மார்க்கம் சிறந்ததா என்பதைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவது அவ்வளவு சுலபமான விஷயமாக அவளுக்குப் படவே இல்லை. வித விதமான கொள்கைகளையுடைய வித விதமான கட்சிகளின் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் ஆசாவைத் தங்கள் தங்கள் பக்கமாக இழுத்துக்கொள்ளும் நோக்கத்துடன் திரள் திரளாக வந்துகொண்டுதான் இருந்தார்கள். சத்தியாக்கிரகத்தில் எத்தனையோ நல்ல அம்சங்கள் இருப்பினும், அதில் உள்ள குறைகளையும் ஆசா நன்கு அறிந்திருந்தாள். ஆயினும் சுபாவத்திலேயே மிகவும் இரக்கமும் அன்பும் கொண்டுள்ள ஆசா பல கட்சிகளில் தலையிட விரும்பவே இல்லை. அவளுடைய யோசனா சக்தி வேகமாய் வேலை செய்துகொண் டிருந்தது.

அரசாங்கத்திலும் சரி, மற்றச் சமூக பொருளாதார விஷயங்களிலும் சரி, முதலாளிகளின் இச்சைப்படியே எதுவும் நடந்து வருகிறது. பணக்காரர்களே உலகத்தில் மனிதர்களாக வாழ இடம் உண்டு; ஏழைகளை யார் விசாரிக்கின்றனர்? சட்ட சபைகளும் மந்திரிப் பதவிகளும் பணக்காரர்களுக்குத்தாம். ஆனால் அதே சட்ட சபைக்கு ஏழை மக்களையும் அனுப்ப முடிந்தால்....? எனவே சட்ட சபைகளை ஏழை மக்களிடம் கொண்டுவர வேண்டும்; இல்லையேல் காரியம் கை கூடாது. ஏழை மக்களின் பிரதி நிதித்துவம் வாய்ந்த காங்கிரஸ்காரர்கள், ஏழை மக்களின் வாக்குகளின் மூலம், சட்டசபையில் வீற்றிருக்க வேண்டும். தேசிய சர்க்கார் அமைக்கப்படல் வேண்டும். * ஆனால் எதன்

---

* ஸ்ரீ பட்கே இதை எழுதிய சமயத்தில் காங்கிரஸ் அதிகாரம் வகிக்கவில்லை.

மூலம் ஏழை மக்களின் அரசியலை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும் என்பது சுலபமான பிரச்னையல்ல. பற்பல விதமான எண்களைக் கொண்டு, பற்பல விஷயங்களைப்பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்து பிறகு ஒரு முடிவுக்கு வருவது மிகவும் கஷ்டமான காரியம் என்றாலும் அதையே ஒரு கலையாக எண்ணி உழைக்கும் மனிதர்களுக்குச் சிக்கலான ஆராய்ச்சிகள் ஒருவித இன்பத்தையே விளைவிக்கின்றன.

விசாரத்திலும் சிந்தனையிலுமே அவர்களுடைய வாழ்நாட்களில் பெரும்பாகம் கழிந்துவிட்டாலுங்கூட அவர்களுக்கு மனக் கஷ்டமோ வியாகுலமோ ஏற்படுவதில்லை. ஆனால் ஆசா அவ் விதம் இருக்கவில்லை. ஒரு விஷயத்தைப்பற்றி மூலையில் உட்கார்ந்து மனத்தினால் ஆராய்வதைவிட நடைமுறையில் அதைக் கொண்டுவந்து பரிசோதித்து முடிவு கட்டவே அவள் மனம் விரும்பியது. சிறு வயதுமுதல் அவள் அவ்விதமே வளர்ந்தவள். ஆகையால் ஒரு விதத்திலும் நிர்ணயமான முடிவுக்கு வராமல் சஞ்சலத்துடன் கால விரயம் செய்வதற்கு அவள் சற்றும் விரும்ப வில்லை.

சில தினங்களுக்கு முன்பு சரத்சந்திரன் விஷயமாக ஏற்பட்ட கலக்கம் இன்னும் அவள் மனத்தில் குமுறிக்கொண்டே இருந்தது. அதற்குப் பிறகு ஏழெட்டு நாட்களாகியும் சரத் சந்திரன் அவ்விடம் வரவே இல்லை. அவன் மீது அவள் காதல் கொள்ளாவிடினும், நெடுநாட்களாகச் சேர்ந்து பழகி வந்ததால் ஒருவிதமான சகோதர வாத்ஸல்யம் கொண்டிருந்தாள். ஏன் அதிகம் வர்ணிக்க வேண்டும்? இத்தனை நாட்கள் தன்னுடன் பழகியும், எல்லையற்ற பவித்திரமான காதலைத் தன்மீது சொரிந்தும் வந்த சரத்சந்திரனைப் பிரதிக்கிரியைக்காக ஏன் காதலிக்க முடியவில்லை என்ற கேள்வி அவள் மனத்திலேயே எழுந்தது. அவள் எத்தனைதான் முயன்றாலுங்கூடக் காதல் உணர்ச்சி என்பது ஒரு சிறிதும் உண்டாகாததைக் கண்டு ஆசா ஆச்சரியப்பட்டாள்.

அவனுடைய பராக்கிரமம், சாகஸம் நிரம்பிய வாழ்க்கை, துணிவுடன் செய்யும் காரியங்கள், சுபாவத்திலேயே அமைந்த பகிரங்கமான மனம், யாருடனும் சாதாரணமாகப் பழகும் சுபாவம் இவைகளினாலெல்லாம் ஆசா சரத்சந்திரனை வெகு தூரம் அன்புடன் நடத்தி வந்தாள். பலாத்காரக் கிரியைகளினால் சரத்சந்திரன் எச்சமயத்திலும் போலீசார் கையில்

சிக்கிக்கொள்ளலாம் என்றும், அச்சமயங்களில் தான் உடனே உதவி செய்து அவனை ரட்சிக்க வேண்டும் என்றும் எண்ணு வாள். சரத்சந்திரனை எந்த விதத்திலும் துன்புறுத்தக் கூடாது என்று எண்ணிய ஆசாவிற்குத் தான் தன் காதலைக் கொடுக்க மறுத்ததனுல் அவன் மனம் உடைந்துபோய்த் தற்கொலை செய்து கொள்ளுவானே என்னவோ என்ற எண்ணமும் கூடவே உதித்தது. ஆயினும் அவள் நெஞ்சு சரத்சந்திரனிடம் காதல் செலுத்த மறுக்கிறதே! இது என்ன அதிசயம்! ஏன் ஒருவரை மட்டும் காதலிக்க வேண்டும், மற்றவர்களை அன்புடன் நடத்தினுலும் காதலிக்கக் கூடாது? இவைகளெல்லாம் ஒரு பெண்ணின் இயற்கையான குணங்களா?

பத்தினிப் பிரேமைக்கு முன்பாகத் தாய் அன்பும் ஒரு பெண்ணுக்கு எப்படியோ ஏற்படுகிறதே. அதன் காரணம் யாது? பிரேமையின் அன்பைக் காட்டிலும் வாத்ஸல்யத்தின் அன்புதான் ஸ்திரீகளுக்கு அதிகமாய் அமைந்திருக்கிறதா? ஆனுல் நிபுணர்கள் சொல்லுகிருர்கள்: பிரேமையைத் தவிர ஒரு ஸ்திரீக்கு வாழ்க்கையில் இன்பமும் சாந்தியும் தரக்கூடியது வேறு ஒன்றும் இல்லை என்று! இது உண்மையா? அல்லது ஸ்திரீ, கருணையும் அன்பும் கொண்ட வாத்ஸல்யமின்றி உயிர் வாழ முடியாது என்று சொல்லுவது உண்மையா? இயற்கையிலேயே ஜீவன்களை உற்பத்தி செய்து அவற்றை அன்புடன் வளர்க்கத் தன் நெஞ்சில் பால் ஊறச் செய்கிருள் ஸ்திரீ! எனவே அவள் வாத்ஸல்யத்தின் இருப்பிடம் என்று ஏன் சொல்லிவிடக் கூடாது?....

இவ்வித எண்ணங்கள் ஆசாவின் மனத்தில் அலைகள்போல் ஒன்றன்பின் ஒன்ருய் மிதந்துகொண்டிருந்தன. சரத்சந்திரன் மேல் தான் கொண்டுள்ள விசாலமான, ஆழமான, தெள்ளிய அன்பு, காதல் ஆகாது என்பதை மட்டும் அவள் திடமாக நம்பினுள். சரத்சந்திரனுக்குத் துக்கம் ஏற்படும்படியாக அவள் ஒரு வகையிலும் நடந்து கொள்ள விரும்பவில்லை. எனவே அன்று சரத்சந்திரனிடம் தான் வேண்டாவெறுப்புடன் வெளியிட்டுத் தீரவேண்டிய கசப்பான உண்மை, அவனை எத்தனை தூரம் வாட்டியிருக்கும் என்பதை எண்ணி அவள் துக்கப் பட்டாள்.

ஏழெட்டு நாட்களாகியும் சரத்சந்திரன் அவ்விடம் வராதத னுல் ஆசாவின் துக்கம் பன்மடங்கு பெருகிற்று. வாழ்க்கையில்

சாதாரணமான கஷ்டங்களைக் குறித்து மனிதன் அதிகம் துக்கப்படுவதில்லை ஆனால் காதல் விஷயமாக ஓர் ஆத்மா துன்புறுத்தப்பட்டால் அந்தத் துக்கத்தின் அளவைச் சொல்லி முடியாது.

ஆசாவைப் போன்ற கோமளமான இருதயத்தை உடையவர்களுக்குத் துக்கம் எப்படி இருக்கும் என்பதை அவரவர்களே ஊகித்து அறிய வேண்டியதுதான். தன் துக்கத்தை அவள் எத்தனைதான் ஒளித்து வைத்துக்கொண்டிருந்தாலும், கூர்மையாகக் கவனித்துப் பார்ப்பவர்களுக்கு அவள் மனத்தில் ஏற்பட்ட கலக்கம் நன்கு வெளியாகும்.

விலாசன் கூர்மையாகக் கவனிக்கும் சக்தியுடையவன். அவன் அங்கே வந்து ஆசாவைக் கூர்ந்து கவனிப்பதை அவள் அறிந்துகொள்ளவில்லை. ஒரு நாள் விலாசன் தன்னையும் மீறி அவளிடம் ஏற்பட்டுள்ள மனக் கலக்கத்தைப் பற்றிக் கேட்டபோது, தன்னந்தனியாக ஒளிந்துகொண்டிருந்த அவளை அவன் கண்டுபிடித்துவிட்டதைப் போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது.

"ஏன் சமீப காலமாகக் காற்று ஒருவிதமாக வீசுகிறது?"

"மழைக்காலம் சமீபித்து வருவதன் அறிகுறி."

"ஆனால் மழைத் துளிகள் கன்னங்களின்மீது கறை படிய விடுவதில்லையே! கண்ணீர்த் துளிகளே அவை. விளக்குகளை அணைத்தால் ஒழிய நிழல் போகவே மாட்டாது. நீங்கள் எத்தனை ஒளிக்க முயன்றாலும் உங்கள் முகம் எடுத்துச் சொல்லுகிறது உண்மையை. இப்போது சொல்லிவிடுங்கள்........என்ன நேர்ந்தது? அதை என்னிடம் வெளியிடுவதில் தவறு ஒன்றும் இல்லையே!"

ஆசா திடுக்கிட்டாள்.

"எங்கே? எனக்கு என்ன நேர்ந்தது? ஒன்றும் இல்லையே!"

அவள் சிரிக்க முயன்றாள். அவளுடைய முகத்தில் தேஜோமயமான பிரகாசம் உண்டாயிற்று. ஆனால் அது ஜீவனற்றதாய்க் காணப்பட்டது.

அவளுடைய முக மண்டலத்தில் தோன்றிய பிரகாசமான சோபையைக் கண்டு விலாசன் எப்போதும் சந்தோஷம் அடைவது வழக்கமே ஆயினும் அன்று ஏனோ அதைக் கண்டு அவனுக்கு ஒருவிதமான இரக்கமே தோன்றிற்று. விலாசன் தன் முகத்தையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் அவள் சடுதியில்

முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு தரையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

''உண்மையில் எனக்கு ஒன்றும் நேரவில்லை; ஒரு சம்பவமும் நடக்கவும் இல்லை!'' என்றாள் ஆசா.

''ஓஹோ, என்னிடம் சொல்ல முடியாது என்றால் நான் கட்டாயப்படுத்த விரும்ப வில்லை. ஆனால் துக்கத்தை மற்றவர் களிடம் வெளியிடுவதால் ஓரளவு குறைகிறது என்று ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறான் என்பது உங்களுக்கும் தெரியுமே!''

''அதெல்லாம் சாதாரணமான துக்கத்திற்கே பொருந்தும்.''

''ஓ, அப்படியானால் உங்களுக்குத் துக்கம் உண்டாகியிருப்ப தோடு மட்டும் அல்ல; அந்தத் துக்கம் அசாதாரணமான துக்கம் என்பதையும் அறிந்தேன். உங்கள் விடை அதைத்தானே சொல்லுகிறது?''

அவள் தன் வாயினாலேயே விஷயத்தை வெளியிட வேண்டிய சந்தர்ப்பம் வந்ததைக் கண்ட விலாசனுக்கு மனத்திற்குள் ளாகவே சிறிது சிரிப்பு ஏற்பட்டது. தான் தன் வெளிப்படை யான பேச்சினால் விஷயத்தை வெளிக்காட்டி விட்டதை எண்ணி ஆசாவும் கொஞ்சம் சிரித்துக் கொண்டாள்.

''மனிதர்கள் பேசும் வார்த்தைகளில் உள்ள நேர்ப் பொருளை எடுத்துக்கொள்ள வேண்டுமே அன்றி, வலிந்து வேறு பொருள் கொள்ளுவது கூடாது ஐயாவே!''

''மனிதர்கள் தங்கள் மனத்தில் ஏதாவது சிக்கலான பிரச்னை ஏற்பட்டால், அதை நேரடியாக வெளியிட வேண்டும் அம்மையே!''

தான் பேசிய வாக்கியத்தின் போக்கிலேயே ஒரு கேலி விடை கிடைத்தது பற்றி ஆசா சற்றுச் சிரித்துக் கொண்டாள்.

''போதும், உங்கள் குதர்க்கம்; உண்மையில் சொல்லு கிறேன், எனக்கு ஒன்றுமே ஏற்படவில்லை.''

மேலும் மேலும் கிண்டிக் கேட்டு அவள் மனத்தை வீணாக அல்லல்பட விடக்கூடாது என்று எண்ணியவனாய் விலாசன் சற்று மௌனம் சாதித்தான்.

சிறிது நேரம் கழித்து விலாசன் தன் மௌன விரதத்தை முறித்தான்:

''சரத் எங்கே கண்ணிலேயே காணோம்? ஒரு வாரத்துக்கு மேலாகியும் அவனைச் சந்திக்கவே முடியவில்லையே?''

உண்மையில் விலாசன் தற்செயலாகச் சரத்சந்திரன் ஞாபகம் வந்துதான் அப்படிச் சொன்னான். ஆனால் ஆசாவின் மனக் கலக்கத்திற்கும் சரத்சந்திரன் அங்கு வராமைக்கும் உள்ள சம்பந்தத்தை அவன் எப்படி அறிந்து கொண்டான் என்று ஆசா ஆச்சரியப்பட்டாள். அவள் முகம் வெட்கத்தினால் சிவந்தது. விலாசன் தொடர்ந்து பேசலானான்:

''ஒருவேளை நான் இங்கு வருவதற்குச் சற்று முன்புதான் அவன் இவ்விடம் விட்டுப் போகிறான் போலிருக்கிறது. நானும் அவனும் சந்திக்கவே முடிவதில்லை. அவன் வரும்போது நான் வர முடிவதில்லை. நான் இங்கே இருக்கையில் அவன் வருவதில்லை; இது ஓர் ஆச்சரியமே!''

இதென்ன? ஆசாவின் உதடுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொண்டுவிட்டனவா? அவளால் பேசவே முடியவில்லையே! ஆனால் அவள் புருவங்களில் ஏன் இத்தனை வளைவு ஏற்படவேண்டும்? விலாசன் பின்னும் பேசினான்:

''ஓ, விஷயம் இப்படித்தான் இருக்கவேண்டும்: சரத் இவ்விடம் வந்து ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது என்று எண்ணுகிறேன். ஆகையால்தான் நீங்கள் இத்தனை மனக் கிலேசப் படுகிறீர்கள். நான் சொல்லுவது சரிதானே?''

ஆசா ஒன்றும் பேசவில்லை. தலையைத் தூக்கிப் பார்வையை விலாசனிடம் செலுத்தினாளா?—அதுவும் இல்லை. வாயில் ஊறின எச்சிலை ஒரு தரம் விழுங்கினாள். அவளுடைய கண்டத்தில் அலைபோன்ற ஓர் அசைவு ஏற்பட்டது. ஆஹா, அந்த அசைவில்தான் எத்தனை நளினமும் அழகும் தென்பட்டன!

தான் ஊகித்துச் சொன்னது சரியாகிவிட்டது என்று எண்ணிய விலாசன் தன் பேச்சை அத்துடன் நிறுத்தவில்லை.

''சரத் ஒரு விசித்திரமான பேர்வழி! தற்செயலாக அவனை நான் சந்திக்க நேரிட்டால் அவனுடைய இந்த அலக்ஷ்ய மனப் பான்மைக்குச் சரியான பாடம் கற்பிப்பேன். கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்து வந்து தங்கள் முன்பு நிற்க வைத்து அபராதம் கொடுக்கச் சொல்லி அவன் செய்த குற்றத்திற்காகப் பிராயச்சித்தமும் செய்துகொள்ளச் செய்வேன்! எட்டு நாட்கள், உங்களை விட்டு அரைக் கணமேனும் பிரிந்து போகாதபடி, இங்கேயே உட்காரச் செய்வேன். இது போதுமா?—''

பாவம்! விலாசன் உண்மையில் விசித்திரமானவன். 'ஆசாவிற்குச் சரத்சந்திரன் மேல் எல்லையற்ற காதல் இருக்கிறது;

சரத்சந்திரனும் ஆசாவை மனப்பூர்வமாகக் காதலிக்கிறான். ஆயினும் ராஜீய காரியங்களில் அவன் உழல்வதால் ஆசாவைக் கவனிக்க முடிவதில்லை' என்று எண்ணியிருந்தான் விலாசன். விலாசனின் பேச்சு நிற்காது என்று கண்ட ஆசா இனி வாளா இருப்பதில் பயனில்லை என்று கண்டு பேசினாள்:

"பாவம், நீங்கள் எனக்காக இத்தனை பாடுபடும்போது எனக்கு வேறு என்ன வேண்டும்? இதுவே போதும்!"

விலாசனின் ஊகம் பின்னும் ஊர்ஜிதமாயிற்று. உண்மையில் ஆசா சரத்சந்திரனின் விரக தாபத்தால்தான் தவிக்கிறாள்! எனவே அவன் வீட்டிற்குப் புறப்படத் தயாரானான். சரத் சந்திரனை எப்படியாவது கண்டு பிடித்து ஆசாவிடம் கூட்டி வந்தால் ஒழிய மறுபடி இங்கு வரக்கூடாது என்ற கருத்துடன் புறப்பட்டான் விலாசன்.

வண்டியில் போகும்போது அவன் தன் மனத்துடனேயே சற்றுப் பேசினான்:

"சரத்சந்திரன் சுத்த மோசமான ஆள்; ஆசா போன்றவர்களின் காதல் அவனுக்குக் கிடைப்பதே அரிதல்லவா? ஆசா போன்ற அழகிய ஸ்திரீகளின் விலை மதிப்பற்ற பிரேமை அவனுக்குக் கிடைக்கும்போது—அவள் மேல் இவன் அன்பை அள்ளி வருஷிக்க வேண்டாமா? அவனுக்கு ஏன் இது தெரியவே இல்லை? ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பதுபோல் எளிதில் காதலைச் சம்பாதித்துவிடலாம். ஆனால் அதைக் காப்பதுதான் மிகவும் கடினம்...."

ஆசாவைக் காதலிப்பது எப்படி என்ற பிரச்னையின்மேல் அத்தனை ஆராய்ச்சி செய்த விலாசனுக்குச் சரத்சந்திரன் அகப்படவே இல்லை! எனவே நாட்கள் நான்காகியும் விலாசன் ஆசாவிடம் செல்லவே இல்லை!

எனவே சுதேஷ்ணாபாய் விலாசனின் அறைக்கு வந்து அவனைக் கேட்டாள்:

"விலாஸ், உனக்குத் தெரியுமோ விஷயம்?"

"என்ன?"

"பாபாஸாஹிப் சுநேத்ராவைக் கூட்டிக்கொண்டு சுந்த்வாடாவிற்குப் புறப்படப் போகிறார்."

"அப்படியா? நான் ஏழெட்டு நாட்களுக்கு முன்பு அவரைச் சந்தித்தபோது என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே!"

''அப்போது அவருக்கே விஷயம் தெரியாது! நேற்றுத்தான் டாக்டர் சுநேத்ராவை வேறு குளிர்ந்த பிரதேசத்திற்குக் கொண்டுபோக வேண்டும் என்று கூறினாராம்.''

''எதற்காக?''

''சுநேத்ராவை இனி இங்கே வைப்பது பிசகாகுமாம்; அவளுக்கு மன வியாதிதானும்; ஒன்றுமே சாப்பிடுவதில்லையாம்; உடம்பு இளைத்துத் துரும்பாக இருக்கிறது; பாவம்!''

''ஓ, அப்படியா விஷயம்?''

இப்படிச் சொல்லிக்கொண்டே விலாசன் தான் அணிந்திருந்த கோட்டு முதலியவைகளைக் கழற்றலானான். உண்மையிலேயே தாய் சொன்ன விஷயத்தைப் பற்றி அவன் சற்றுக் கவலைப்பட்டான் என்பது அவன் முகத்தில் படர்ந்த நிழலிலிருந்தே தெரிந்தது. ஆனால் சுதேஷ்ணைபாய் அதைக் கவனிக்கவில்லை. தான் சொன்ன விஷயங்களினால் விலாசனுக்கு ஒருவித மனமாறுதலும் ஏற்படவில்லை என்றே அவள் எண்ணினாள். சுநேத்ராவின் தேக நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்பதை அவள் முன்பு பல தடவைகளில் எடுத்துச் சொன்னபோது விலாசனுக்கு அதனால் சற்றும் இரக்கம் உண்டாகவில்லை. அதைப் போலவே இப்போதும் அவனுக்குச் சுநேத்ராவின் விஷயமாக அலட்சிய மனப்பான்மையேதான் இருந்துகொண்டு வருவதாக அவள் எண்ணினாள். ஆசாவை விலாசன் காதலிப்பதைச் சுதேஷ்ணை அறியாள். ஆசாவின்மீது தான் எல்லையற்ற காதல் கொண்டதைப் போலவே சுநேத்ரா தன் மீது காதல் கொண்டு அதை அடைய முடியாததால் மனம் நொந்து உயிர் விடும் தறுவாயில் இருக்கிறாள் என்பதைக் கேட்ட விலாசனுக்கு மனம் இரங்காமல் இருக்கவில்லை. ஆனால் சுதேஷ்ணை இதையும் அறியாள்.

வெகு நேரம் வரையில் அவர்கள் இருவரிடையேயும் பேச்சு வார்த்தையே இல்லை.

கடைசியில் சுதேஷ்ணை பேசலுற்றாள்:

''விலாஸ்,—''

''அம்மா, நீ எதைப்பற்றிப் பேசப்போகிறாய் என்பதை நான் முன் கூட்டியே அறிந்திருக்கிறேன். நான் சாப்பிட்டு முடிந்ததும் சுநேத்ராவைப் பார்க்கப் போகிறேன்.''

''உண்மையாகவே போவாயா?''

பாவம்! சுதேஷ்ணு பாய்க்குத் தன் மகன் சுநேத்ராவைக் காதலிக்க ஆரம்பித்திருக்கிறான் என்ற பொய் நம்பிக்கை ஏற்பட்டது! மறுபடியும் கேட்டாள்:

''நிஜமாகவே நீ அவளைப் போய்ப் பார்க்கிறாயா?''

இப்படிக் கேட்கையில் அவள் முகத்தில்தான் எத்தனை ஆனந்தம் காணப்பட்டது! விலாசனுடைய கவனம் அவளுடைய முகபாவத்தின்மீது செல்லாமல் இருக்கவில்லை. அதைக் கண்டு விலாசனுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அவன் சுநேத்ராவிடம் போவதாகச்சொன்ன இந்த வார்த்தைகளே அவன் தாய்க்கு இத்தனை ஆனந்தம் விளைவித்தால், உண்மையிலேயே அவளைக் காதலித்து விவாகமும் செய்துகொண்டால் அவன் தாய்க்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவு ஏது? ஆனால்....?

ஆனால் அவன் ஆசாவைக் காதலிப்பதுபோல் சுநேத்ராவை ஏன் காதலிக்க முடியவில்லை....?

ஏன்....?

ஆனால் அது முடியும் காரியமா? பிற ஜீவன் ஒன்று தன் காதலால் வாடி உயிரை விட்டாலுங்கூட அதைக்கண்டு மன இரக்கம் உண்டாகிறதே தவிர உண்மைக் காதல் உண்டாவதே இல்லையே! தியாக புத்தியுடன் ஓர் உயிரைத் திருப்தி செய்வதற்காகவேதான் சுநேத்ராவைக் காதலிக்க முயற்சி செய்தாலும் ஓர் அணுவளவேனும் காதல் உண்டாவதில்லையே! இரக்கமும் அனுதாபமுந்தானே ஏற்படுகின்றன! இயற்கையில் காதல் ஏன் இத்தனை சிக்கலான பிரச்னையாக இருக்கவேண்டும்?......

அன்று இரவு சாப்பாடானதும் விலாசன் சுநேத்ராவின் வீட்டிற்குப் போனபோதுங்கூட மேற்படி எண்ணங்களே அவன் மனத்தில் உதித்தவண்ணம் இருந்தன.

அவனைக் கண்டதும் சுநேத்ராவின் தகப்பனார் பாபாஸாஹிப் சொன்னார்:

''வாருங்கள், வாருங்கள். சுநேத்ராவுடன்தான் இத்தனை நேரம் இருந்தேன். அவளுக்கு இப்போதுதான் சற்றுத் தூக்கம் வந்தது. சிறிது கண் அயரட்டும் என்றே இங்கு வராந்தாவில் வந்து சற்றுக் காற்றாட உட்கார்ந்திருக்கிறேன். அதிருக்கட்டும்; அரசியல் விஷயங்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன? என்ன சமாசாரம்?''

சட்டைப் பையில் இருந்த சிகரெட் டப்பாவிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்து அதை அதன்மேலேயே மெள்ளத் தட்டிக்கொண்டே விலாசன் சொன்னான்:

"இருங்கள், பற்ற வைத்துக்கொண்டு பிறகு சொல்லுகிறேன்."

ஆனால் அதற்குள்ளாகப் பாபா ஸாஹிப்புக்குத் தாங்க முடியுமா? அவருக்குப் பேசாமல் இருப்பது என்றால் பகீரதப் பிரயத்தனம்! நாக்கின் அரிப்புப் பொறுக்க முடியாமல் அவர் உடனே பேச ஆரம்பித்து விட்டார்:

"நீங்கள் சொல்லும் வரையில் நான் ஏன் காத்திருக்க வேண்டும்? காந்தியாரின் மறியலும் சத்தியாக்கிரகமும் சாயம் வெளுத்துப்போய்ச் சுய ரூபத்தைக் காட்டிவிட்டன! நான் முன்னாலேயே உங்களிடம் சொல்லவில்லையா? காந்தியாரின் இந்த அர்த்தமற்ற பகிஷ்கார வேலைகளினால் அரசியல் முன்னேற்றம் தடைப்பட்டுவிடுவதும் அன்றிக் காரியங்கள் கெட்டும் விடுகின்றன என்று நான் ஆயிரம் தரம் சொல்லியிருக்கிறேன். நான் சொன்னபடியே நடக்கிறது; பார்த்துக்கொள்ளுங்களேன். மூன்று விதமான பகிஷ்காரங்களில், மாணவர்கள் காலேஜுக்குப் போகாதபடி வேலை நிறுத்தம் செய்யவேண்டும் என்பதும் ஒன்று. ஆனால் ஒரு மாணவனாவது காந்தியாரின் வார்த்தையைக் கேட்டானா? ஆகையால் அது தோற்றுப்போய்விட்டது என்பதில் என்ன சந்தேகம்? எனவே காந்தியார் அதை வாபஸ் வாங்கிக் கொண்டார். போகப் போக மற்ற இரண்டு பகிஷ்காரங்களையும் வாபஸ் வாங்கிக்கொள்ளத்தான் போகிறார். ஆனாலும் அவர் தம் பழைய பல்லவியான, 'சத்தியாக்கிரகத்திற்குத் தோல்வி என்பதே ஏற்படாது' என்பதையே பாடிக்கொண் டிருப்பார்! ஷேர் மார்க்கெட்டில் விலைவாசிகள் மலிந்தபோது பங்குகள் எடுத்துக்கொண்டு விலை ஏற்றத்தின்போது பிறருக்குத் தன் பங்குகளை விற்றுக் கொள்ளை லாபம் அடிக்கும் பனியா ஜாதியில் பிறந்தவர் அல்லவா இந்தக் காந்தியார்? இவர் மறைமுகமாக முதலாளிகளை ஆதரிக்காமல் பின் யாரை ஆதரிப்பார்? இன்றைய 'லீடர்' பத்திரிகையில் ஸ்ரீ சிந்தாமணியின் கட்டுரை ஒன்று வெளிவந்திருக்கிறது. அதில் இதைப் பற்றியே தான் சொல்லியிருக்கிறார். அதைப் படித்ததும் எங்களுக்கெல்லாம் மன ஆறுதல் ஏற்பட்டது. இந்தப் பத்திரிகை ஆசிரியர்களின் போக்கே ஒரு தினுசானது. முதலில் காந்தியாரைத் தலையில்

தூக்கி வைத்துக்கொண்டு ஆடினார்கள்; இப்போது அவர்மேல் மண்ணை வாரி இறைக்கிறார்கள்......''

விலாசன் ஒரு நீண்ட கொட்டாவி விட்டுக் கைவிரல்களைச் சொடுக்கெடுத்துக் கொண்டான். பிறகு தாழ்ந்த குரலில் சொன்னான்:

''பாபா ஸாஹிப்! நீங்கள் இனிமேல் பத்திரிகை படிக்கும் வழக்கத்தை அடியோடு நிறுத்திவிட்டு வேறு உபயோகமான விஷயங்களில் நேரத்தைச் செலவழித்தால் உங்களுக்கும் மன நிம்மதி ஏற்படும்; பிறருக்கும் தொந்தரவு கொஞ்சம் குறைந்தாலும்........''

''மன நிம்மதியா? எப்படி ஏற்படும்?''

''ஐயா! நீங்கள் இவைகளைப் படிப்பதனால் எத்தனை விதமான ஆராய்ச்சிகள் செய்கிறீர்கள்? வீணே மனத்துக்கு ஓய்வு இல்லாமல் எதை எதையோ யோசித்துக்கொண்டிருக்கிறீர்கள். யோசிப்பதும் மௌனமாக இல்லாமல் வாய்விட்டு யோசிக்கிறீர்கள் — அதுதான் சங்கடம்! அரசியலில் ஈடுபட்டவர்கள் எல்லோரும் முட்டாள்கள் என்கிறீர்கள். முட்டாள்களின் விஷயத்தைப்பற்றியேதான் உங்களுக்குத் தியானம் மனம் ஸ்வப்பனம் இம் மூன்றிலும் சிந்தனை! ஏன் இந்தத் தொல்லை? உங்கள் மனத்துக்கு நிம்மதி எப்படி ஏற்படும்? உங்களுக்கு இயற்கையிலேயே பலவீனமாய் உள்ள மூளையை ஏன் இன்னும் குழப்பிக் கொள்ளுகிறீர்கள்? நீங்கள் கொஞ்ச நாளைக்குச் சித்வாடாவிற்குப் போய்த் தங்கினீர்களானால் சுநேத்ராவைவிட உங்களுக்கு நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. அங்கே செய்திப் பத்திரிகைகள் கிடையா—''

''ஓஹோ! நீங்கள் சொல்லுவது விசித்திரமாய்த்தான் இருக்கிறது! எல்லாப் பத்திரிகைகளையும் சித்வாடாவுக்கே அனுப்புமாறு ஏற்பாடு செய்துவிட்டேன்.''

''அப்படியா?''

இப்படிச் சொன்னபோது விலாசன் தன் நெற்றிமீது வந்த வேர்வையைத் துடைத்துக்கொண்டான்.

பாபா ஸாஹிப் பேசலானார்:

''இதோ பாருங்கள் விலாஸ், நான் ஒரு ஜோசியன் அல்ல. ஆனால் வரப்போகும் காங்கிரஸ் கூட்டத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதை நான் இப்போதே முன்கூட்டியே சொல்லி விடுகிறேன். நீங்களும் முன்போல் அல்லாமல் இப்போது

அரசியல் விஷயங்களில் அதிகம் ஈடுபட்டு வருவதனால் நான் சொல்லுவதை ஆர்வத்துடன் கவனிப்பீர்கள் என்று நினைத்தே இதைச் சொல்லுகிறேன். கேட்பதுமட்டும் அல்ல. ஒரு காகிதத்தில் எழுதி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்.''

பேசிக்கொண்டே அவர் மேஜையின் 'டிராயரை' இழுத்துக் காகிதத்தையும் பேனாவையும் எடுக்கப் போனார்!

ஆனால் எதிர்பாராத விதமாக உள்ளேயிருந்து வந்த ஒரு குரல் அதைத் தடுத்து விட்டது. விலாசனின் குரலைக் கேட்ட சுநேத்ரா விழித்துக்கொண்டு விட்டாள் என்றும், 'அவன் ஏன் இன்னும் உள்ளே வரவில்லை' என்று சுநேத்ரா கேட்கிறாள் என்றும் தெரிய வந்தது.

உள்ளே இருந்த அறையில் வெளிச்சம் அதிகமாய் இல்லை. ஜன்னல் கதவுகளெல்லாம் மூடப்பட்டுக் கிடந்தன. ஒரு மூலையில் ஊதுவத்தி ஏற்றப்பட்டு எரிந்துகொண்டிருந்தது. அதனுடைய நறுமணம் லேசாகக் காற்றில் தவழ்ந்து பரவிக்கொண்டிருந்தது. சுவரில் தொங்கிக்கொண்டிருந்த கடிகாரம் அரை மணியைக் குறிப்பதற்காக ஒரு தடவை அடித்தது. அதனுடைய ஒலி அதிர்ச்சிகள் வெகுநேரம் எழும்பிக்கொண்டிருந்தன. விலாசன் அங்கே போட்டிருந்த நாற்காலியில் உட்காரும் முன்பு சுநேத்ராவின் படுக்கை அருகில் சென்று குனிந்துகொண்டே பேசினான்:

''இத்தனை நேரம் தூங்கினாயா? — தூக்கம் பிடிக்கவில்லையா?''

அவள் ஒன்றும் பேசவே இல்லை. அவள் தன் இடது கையைச் சற்றுத் தூக்கினாள். அதை விலாசன் தன் கையால் பிடித்துக்கொண்டு தடவவேண்டும் என்று விரும்புவதைப்போல் அவள் கண்களின் பாவம் சொல்லிற்று.

விலாசன் அவளுடைய உள்ளங்கையைத் தன் இரு கரங்களாலும் தடவிக் கொடுத்தான்.

சுநேத்ராவின் தாய் அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்தாள். அவளருகே தன் பார்வையைச் செலுத்திச் சுநேத்ரா சொன்னாள்:

''தயவு செய்து இங்கே விலாசனைத் தவிர யாரும் இருக்க வேண்டாம்.''

தாய் அவ்விடம் விட்டு அகன்றபிறகு சுநேத்ரா விலாசனைத் திரும்பிப் பார்த்தாள். அங்கிருந்த இருட்டில் விலாசனின் முகம் சரிவரத் தெரியவில்லை. எனவே அவள் விலாசனைச் சற்று விளக்கைத் தூண்டும்படி கேட்டுக் கொண்டாள்.

"உனக்கு வெளிச்சம் இருந்தால் கஷ்டமாக இருக்குமோ என்னவோ? உன்னால் வெளிச்சத்தைப் பார்க்க முடியுமா?"

"கஷ்டமா? வெளிச்சத்தில் உங்கள் முகத்தைக் கூர்ந்து கவனித்துப் பார்ப்பதில் எனக்கு எத்தனை இன்பம் உண்டாகும்?"

அவ்விதமே அந்தப் பிரகாசமான வெளிச்சத்தில் அவள் விலாசனின் முகத்தைக் கண் கொட்டாது பார்த்துக்கொண்டே இருந்தாள்.

அவள் மெலிந்து எலும்புந் தோலுமாகக் கிடந்தாள். களையற்ற அவளுடைய முகத்தில் ஒருவிதப் பிரகாசம் தோன்றிற்று. அவளை அறியாமலே அவளுடைய உதடுகள் புன் முறுவல் செய்தன.

அவள் சொன்னாள்:

"நான் இவ்விடம் விட்டுப் போகப் போகிறேன்!"

"ஆமாம்; கேள்விப்பட்டேன்."

"இனி நான் திரும்பியே வரப் போவதில்லை!"

"அது ஏன்? சிந்த்வாடாவிற்குப் போனால் வெகு சீக்கிரம் குணமடைவாய்! குணமடைந்ததும் திரும்பி வர வேண்டியது தானே!"

"ஊஹூம்; எனக்கு நம்பிக்கை இல்லை. நான் இந்த உலக வாழ்வை நீத்துப் போகத்தான் போகிறேன்—நிரந்தரமாகப் போகிறேன். டாக்டர் மறைத்துவைத்துப் பேசினாலும் என் நிலைமை எனக்குத் தெரியவில்லையா?"

"சீ, இது என்ன, கிறுக்குத்தனமாகப் பேசுகிறாய்?"

விலாசன் தன் நிலைமையை முற்றும் உணரவில்லை என்று எண்ணிய சுநேத்ரா, அவன் தன்னைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளட்டும் என்ற எண்ணத்துடன் சொன்னாள்.

"அதனால்தான் நான் போகும்போது ஒரு தரம் உங்கள் சுந்தர வதனத்தைக் கண்டு களித்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்துடன், உங்களை இங்கு வரவழைத்தேன். மறு ஜன்மம் என்பது உண்மையாக இருக்குமோ என்னவோ, யார் கண்டார்கள்? இருப்பது உண்மையானால் நான் மறு ஜன்மத்திலும் உங்களைப் பார்க்கவும் உங்களுடன் பேசவும் விரும்புகிறேன். கண்ணை மூடிக்கொள்ளும்போது உங்கள் உருவம் என் முன் நின்றால் அதை நான் மறக்கவே மாட்டேன். நீங்கள் என்னை இப்போது ஸ்பரிசிப்பதை நான் ஜன்ம ஜன்மாந்திரங்களிலும் நிரந்தரமாக்கிவிட ஆசைப்படுகிறேன்."

விலாசன் அவளுடைய நெற்றியின்மீது கையை வைத்துக் கொண்டே, ''ஏன் கண்டபடியெல்லாம் பேசி உடம்பை அலட்டிக்கொள்ளுகிறாய்? கொஞ்சநேரம் பேசாமல் இளைப்பாறு'' என்றான்.

''அப்படி இல்லை. இனி உலகத்தில் எனக்குச் சுகம் கொடுக்கக்கூடிய விஷயம் ஒன்றே ஒன்றுதான். அதாவது உங்களுடன் பேசிக்கொண்டிருப்பதுதான். இத்தனை நாளும் என் மனவேதனையினால் வாடித் தனிமையிலேயே கிடந்து தவித்தேன். நான் உங்கள் விலை மதிப்பற்ற காதலை ஏன் பெற முடியவில்லை என்பதைக் கண்டுகொண்டேன். ஆனால் இப்போது காலம் கடந்துவிட்டது. என் வாழ்நாட்களெல்லாம் உங்கள் காதலைப் பெற முடியும் என்று எண்ணி ஏமாந்தேன். உங்களை எவ்விதத்தில் திருப்தி செய்து என்மேல் அன்பு கொள்ளும்படி செய்வது என்பதை நான் அறிந்துகொண்டேன். ஆனால் இது அகாலமாகப்போய்விட்டது. நான் என் வாழ்க்கையின் மாலை நேரத்திற்கு வந்துவிட்டேன். என் ஜீவ சூரியன் மலை வாயில விழுந்துவிட்டான். கேவலம் சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கும், என்னுடைய மதிப்புக் கெட்டுவிடுமே என்பதற்கும் பயந்ததே இதற்குக் காரணம். நானே குற்றவாளி. ஆனால் அதை நான இன்று வெல்ல முடியாத நிலைமைக்கு வந்துவிட்டேன். டென்னிஸ் பந்தயத்தின் போது நான் உங்களைப்பார்த்து என் கைக்குட்டையை ஆட்டியிருப்பேன்! பலபேர் அறியப் பகிரங்கமாக உங்களைக் கட்டியணைத்து முத்தமும் தந்திருப்பேன்! ஆனால் நம சுய தர்மத்திற்காகவும் சமூகக் கட்டுப் பாட்டிற்காகவும் நான் அவ்விதம் செய்யத் துணியவில்லை! விலாஸ், நீங்கள் ஹிந்துப் பெண்களின் மடமையையும் நாணத்தையும் பற்றி என்னிடம் எத்தனையோ தரம் சொல்லியிருந்தும், இந்தத் துர்ப்பாக்கியவதி தன் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவைகளை விட்டுவிட்டு உங்களை அடைய முயலவில்லை. இது யாருடைய குற்றம்? ஆண்களை மயக்கும் வித்தையைக் கற்காதது யாருடைய குற்றம்? என் குற்றமேதான்! நீங்கள் டென்னிஸ் விளையாடும்போது நான் இனிமேல் வெட்கப்படாமல் என் கைக்குட்டையை எடுத்து ஆட்டுவேன். ஆனால் என் காலம் முடிவடைந்துவிட்டதே!''

மேலே பேச முடியாதபடி அவளுடைய உதடுகள் நடுங்க ஆரம்பித்தன. நெஞ்சினுள் இருக்கும் பாரத்தைத தாங்க முடியாமல் அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

பிறகு கண்களை மூடிக்கொண்டு அரை நாழிகை மௌனமாக இருந்தாள்.

விலாசன் அவளுடைய முகத்தைப் பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. சற்றுநேரம் தொடர்ந்தாற்போல் பேசியதால் சுநேத்ராவிற்குப் பலஹீனம் அதிகமாக ஏற்பட்டது. கேவலம் மனத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தினலேயே அவளுக்கு வியாதி வந்திருக்கிறது என்பதை விலாசன் முன்பே அறிந்திருந்தான். அவனுடைய எண்ணம் இப்போது ஊர்ஜிதமாயிற்று. அவளுடைய உடம்பில் ஒரு கோளாறும் இல்லை என்றும், மன வியாதியால்தான் அவள் அல்லல் உறுகிருள் என்றும் டாக்டர் ஏற்கனவே விலாசனிடம் அறிவித்திருந்தார். ஆனல் மனச் சாஸ்திரம் படித்த டாக்டர், மனம் உடலின் மீது ஆதிக்கம் செலுத்துகிறதனல், உடம்பிலும் வியாதி கண்டு, பிறகு அது முற்றி ரத்த க்ஷயமாக மாறிவிட்டதாகவும் சொல்லியிருந்தார். எனவே சுத்தமான, குளிர்ந்த வறண்ட காற்று அவளுக்கு மிகவும் அவசியம் என்பதை உத்தேசித்து அவளைச் சிந்த்வாடாவிற்கு அனுப்பச் சொன்னர். மனத்திற்கும் உடலுக்கும் உள்ள சம்பந்தந்தான் என்ன? மனிதர்களின் சரீரத்தில் மனம் எந்த இடத்தில் இருக்கிறது? தேகத்தின் ஒவ்வோர் அணுவிலும் வியாபித்து இருக்கிறதா?...... கை கால்களைப்போல் மனத்தையும் அசைக்க முடியுமா? அதை வேருெருவரிடம் மாற்றிக்கொள்ள முடியுமா? அப்படியெல்லாம் இருந்தால்...... இந்த உலகத்தில் எத்தனை காரியங்கள் மிகவும் சுலபமாக முடியும்?..

வியாதிக்கு ஆளான ஒரு பெண்ணின் அருகில் உட்கார்ந்து தாஞே இவ்விதமாய் எல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று விலாசன் எண்ணிஞன். வெகு தூரம் உயரத்தில் பறக்கவிட்ட பட்டத்தை இழுத்துப் பிடிப்பதைப் போல் எங்கெங்கோ சென்ற அவனுடைய மனத்தை அவன் வெகு முயற்சியுடன் திருப்பிக் கொண்டான். சுநேத்ராவின் கையில் அணிந்திருந்த தங்க வளையல் அவள் முழங்கை வரையிலும் சென்றது. அதைச் சரிப்படுத்திக் கொண்டே விலாசன் சொன்ஞன்:

"டாக்டர் உன்னைச் சிந்த்வாடாவிற்குப் அனுப்பிஞல் சௌக்கியமாகிவிடும் என்று சொல்லியிருக்கிருர்."

"டாக்டர் ஏன் அவ்வாறு சொன்ஞர் என்பது எனக்குத் தெரியும். நான் இத்தனை நாளும் என்னையே ஏமாற்றிக்கொண்டு இருந்தேன்; ஆனல் இப்போதோ நீங்கள் எல்லோரும் சேர்ந்தே

என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள். நான் எல்லாவற்றையும் அறிந்துதான் இருக்கிறேன். இதோ பாருங்கள், நீங்கள் முன்னால் இழுத்துவைத்த வளையல் மறுபடியும் முழங்கையைத் தேடிக்கொண்டு சென்று விட்டது!''

விலாசன் மறுபடியும் வளையலை இழுத்து அவள் மணிக் கட்டில் வைத்து அதைப் பிடித்துக்கொண்டே, ''இனிமேல் விழாது பார்!'' என்றான்.

''ஏன் இந்த வீண் பிரயத்தனம்? விழுவதை நழுவ நழுவ இழுத்து வைப்பது எத்தனை நேரத்திற்குச் சாத்தியமாகும்? யாரும் என்னைச் சப்பைகட்டிப் பிழைக்கவைக்க வேண்டாம்! இனி நான் அதிக நாள் பிழைப்பது கடினம். சீட்டு விளையாடும் போது நமக்கு வேண்டிய ஜாதிச் சீட்டுகள் கிடைக்காவிடில் அந்த ஆட்டம் முடிவடைந்ததுதான். வாழ்க்கை விளையாட்டிலும் தனக்கு இஷ்டமான ஆத்மா கிடைக்காவிடில் ஆட்டம் முடிவடையும். என் ஆட்டம் முடிவடைந்துவிட்டது. இனி நான் விடை பெறவேண்டியதுதான். ஆட்டத்தில் தோற்றேன் என்பதனால் எனக்குச் சற்றும் துக்கம் இல்லை! தோற்றதற்குப் பிராயச்சித்தமாக என் உயிரையே பலியிடு கிறேன். நான் உங்களை வருந்திக் கேட்டுக்கொள்ளுவது என்ன வென்றால் நான் உயிருடன் இருக்கும் இந்த இரண்டொரு நாட்கள் என்னுடனேயே என் முன்னால் இருங்கள்; அது போதும்.''

அவள் குரல் விலாசனின் இருதய ஆழத்தில் சென்று ஒலித்தது. அவன் துக்கப்பட்டான்.

இந்தப் பெண் வீணாகத் தன் மீது எல்லையற்ற காதலை வைத்து ஏன் அல்லல் படவேண்டும்? அவள் தன் மீதே மண்ணை வாரி இறைத்துக்கொண்டாள்! உண்மையில் அவளேதான் அவளுடைய அழிவைத் தேடிக்கொண்டாள்!

ஆனால்....விலாசன் மீது ஒரு குற்றமும் இல்லையா?

வலுவில் வந்த காதலை அலட்சியம் செய்வது குற்றந் தானே?....

குற்றம் என்றால் என்ன என்பதை ஆராய்ச்சி செய்வதே மூடத்தனம்!....

விலாசனின் கைகள் சுநேத்ராவின் தலைமயிரைத் தடவிய வண்ணம் இருந்தன.

''சுநேத்ரா! உன்னை விட்டுப் பிரியேன்! இப்போது திருப்தி தானே?''

''வெறுமனே உட்கார்ந்து மட்டும் பிரயோஜனமில்லை; வாய் வலிக்கும் மட்டும் பேசிக்கொண்டே இருக்க வேண்டும்.''

''உன்னால் ரொம்ப நேரம் பேச முடியாதே!''

''நான் ஒன்றும் பேசப் போவதில்லை! நீங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கப்போகிறேன்.''

''சரி; அப்படியே ஆகட்டும்.''

இப்படிச் சொல்லியதும் விலாசன் சிறிது சிரித்தான். களையிழந்த சுநேத்ராவின் உதடுகளும் ஜீவனற்ற சிரிப்பு ஒன்றைச் சிரித்தன.

* * * *

விலாசன் தன் வாக்கை மீறவில்லை. அவன் மூன்று நாட்கள் அல்லும் பகலும் சுநேத்ராவிடமே உட்கார்ந்திருந்தான்.

பிறகு அவள் சிந்த்வாடாவிற்குப் புறப்படுகையில் ரெயில்வே ஸ்டேஷனுக்கும் சென்று, வண்டி புறப்படும் வரையில் அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

அவள் அதிகம் பேசவில்லை. எனினும அவளுடைய பார்வை விலாசனின் மேலேயே இருந்தது. அந்தப் பார்வையில் தான் எத்தனை ஆனந்தம்! எத்தனை ஆவல்! எத்தனை ஏமாற்றம்! ஆயிரம் வருஷம் பசியுடன் பிழைத்திருந்த பிறகு அன்னத்தைக் கண்டால்....அது கிடைக்காது....கைக்கு எட்டாது என்று இருந்தால்....ஓர் ஆத்மாவின் மனத்தில் எத்தனை ஆனந்தமும் துக்கமும் கலந்து தோன்றும்!

''பாபா சாகிபிடம் சொல்லியிருக்கிறேன். உன் உடம்பைப்பற்றி எனக்கு இரண்டு நாளைக்கு ஒரு தரம் கடிதம் எழுதச் சொல்லியிருக்கிறேன்.''

வாய் மூடு முன்பே அவள் கேட்டாள்:

''விலாஸ்! என்னை மறந்துவிடாதீர்கள்! நீங்கள் உங்கள் பரந்த இருதயத்தின் ஒரு குளிர்ந்த மூலையை எனக்கென்று நிரந்தரமாக ஒதுக்கி இருக்கிறீர்கள் என்று நான் அறிந்தால் எனக்கு மனச் சாந்தி ஏற்படும். நான் நிம்மதியுடனும் ஆனந்தத்துடனும் சாவேன்! என்னை மறக்கமாட்டீர்களே?''

இதே கேள்வியை அவள் அடிக்கு ஒரு தரம் சொல்லிக் கொண்டிருந்தாள். வண்டி புறப்படுவதற்காக ஊது குழல்

ஊதப்பட்டதும் விலாசன் கீழே இறங்கினான். அப்போதும் சுநேத்ரா அதே கேள்வியைத்தான் கேட்டாள்.

எஞ்ஜின் 'விசில்' சத்தம் வரப் போகும் துர்ச்சகுனம் போல் அலறிற்று. சுநேத்ராவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து வரலாயிற்று. கன்னங்களில் வழிந்த கண்ணீரை அவள் விலாசனின் கைகளால் துடைத்துக் கொண்டாள்! கடைசியில் தன் துணிவை யெல்லாம் ஒன்று கூட்டி அவன் கையைப் பிடித்து ஒரு முத்தமிட்டாள்!

அந்தத் துர்ப்பாக்கியம் பிடித்த பெண் தன் வாழ் நாட்களிலேயே செய்த துணிவான காரியம் அதுதான். அவள் ஒரு யுவனுக்குத் தன் முத்தத்தை அளித்தது அதுதான் முதல் தடவை; அதுவே கடைசித் தடவையும் ஆகும்! ஆ, காதலின் எல்லையற்ற சக்தியே!

# அத்தியாயம் 20

அன்று மாலையில் விலாசன் ஆசாவிடம் சென்றான். சுநேத்ராவுடன் மூன்று நாட்கள் இடைவிடாது தங்கியிருந்த அவனுக்கு இப்போது ஆசாவின் ஞாபகம் வருவது சகஜந்தானே? விலாசனுடைய காதலைச் சுநேத்ரா எதிர்பார்த்தாள். ஆனால் அது அவளுக்குக் கிட்டவில்லை. விலாசன் ஆசாவை மறைமுகமாகக் காதலிக்கிறான். ஆனால் ஆசாவின் காதலைப் பெற அவனால் முடியாது என்றே எண்ணினான். எவ்விதத்திலாவது ஆசாவை மறந்துவிட முயன்றும் அது அவனால் முடியாது போயிற்று. காதலைப் பெற முடியாவிடினும் அவளுடன் சகவாசமாவது வைத்துக்கொள்ளலாம் அல்லவா? எனவே ஆசாவிடம் சென்றான் விலாசன்.

அவன் சென்றபோது அவள் எதையோ எழுதிக்கொண்டிருந்தாள். அதைக் கண்ட விலாசன் கேட்டான்:

"என்ன, எழுத்து வேலை பலமாக இருக்கிறது?"

ஆசா உடனே விலாசனைத் திரும்பிப் பார்த்து, "யார் யாருக்கு என்ன என்ன வேலைகளில் ஆர்வம் இருக்கிறது என்பதை ஒருவாறு கணக்கிடுகிறேன்."

"ஓஹோ, அப்படியா? ஆமாம், காகிதத்தில் கணக்கிட்டு எப்படி ஆர்வத்தை மதிப்பிட முடியும் தேவி?"

"அதற்கு ஒரு வழி இருக்கிறது. பின்னால் யாராவது ஏதாவது தகராறு செய்தால் முகத்தில் அடிப்பதைப்போல் கணக்கைக் காட்டலாம் அல்லவா? சரத் பதினொரு நாட்கள் ஆஜராகவில்லை. நீங்கள் மூன்று நாட்கள் ஆஜராகவில்லை."

"ஆமாம், மூன்று நாட்களாக நான் இங்கு வர முடியாதபடி தடுக்கப்பட்டேன் என்பது வாஸ்தவம். ஆனால் என் கவனமும் யோசனைகளும் உங்கள் மேலேயே இருந்தன என்பதை நீங்கள் எப்படி அறிய முடியும்? அதை எந்த விதமாகக் குறித்துக் கொள்ள வேண்டுமோ அந்த விதத்தில் குறித்துக்கொள்ளுங்கள். அதைப்போலவே சரத்சந்திரன் இங்கு ஆஜராகாவிட்டாலும்,

உங்களைப் பற்றிய எண்ணம் ஒவ்வொரு கணமும் அவனுக்கு வந்துகொண்டே இருக்கும். அதையும் குறித்துக்கொள்ள மறந்துவிடாதீர்கள்.''

''ஓஹோ, அப்படியானால் என்னைக் காட்டிலும் சரத்சந்திரனின் மனத்தை நீங்கள் நன்கு ஆராய்ந்திருக்கிறீர்கள்; அப்படித் தானே?''

''ஆராய்ச்சி செய்திருந்தாலும் அதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் ஒன்றும் இல்லை. ஏனெனில் ஆட்டம் ஆடுபவனைக் காட்டிலும் அதைக் கவனிப்பவனுக்குத்தான் அது நன்கு புலனாகும் என்பதைத் தாங்கள் அறியீர்களா?''

மேஜையின் மீது சிதறிக் கிடந்த காகிதங்களை யெல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்ட ஆசா விலாசனைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு பவுண்டன் பேனாவின் மூடியைத் திருகிக்கொண்டு அவனிடம் திரும்பப் பேசலானாள்:

''கேலி எல்லாம் போதும்; உண்மையில் கேட்கிறேன்: மூன்று நாட்களாக ஏன் இந்தப் பக்கமே வர வில்லை?''

''பம்பாய் விட்டு எங்கேயும் ஓடிவிடவில்லை; இங்கேதான் இருந்தேன்; ஆனால்......அது கிடக்கட்டும், சரத்சந்திரன் ஏன் வெகு நாட்களாகக் காணப்படவே இல்லை? உங்களுக்கும் அவனுக்கும் ஏதாவது பலமான சச்சரவு ஏற்பட்டதா?''

ஆசா மௌனம் சாதித்தாள்.

சுநேத்ராவின் பெயரைக்கூட அவளிடம் வெளியிடக்கூடாது என்று எண்ணிய விலாசனுக்கு, ஆசா சரத்சந்திரனின் விஷயமாய் நடந்த விவரங்களைச் சொல்ல விரும்பமாட்டாள் என்பது எப்படித் தெரியும்? தாங்கள் காதலிக்கும் ஆத்மாவிடம் பிற ஜனங்களைப் பற்றிச் சொல்லுவது யாருக்கும் பிடிக்காததுதானே?

அவன் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான். சற்று நேரத்திற்கு முன்பு அவளுடைய முகத்தில் காணப்பட்ட சாந்தியும் அமைதியும் மங்கிப்போய், துக்கத்தின் நிழல் படர்ந்து வருவதை விலாசன் கண்டான். சரத்சந்திரனின் பிரிவாற்றாமையினால்தான் அவள் கஷ்டப்படுகிறாள் என்று விலாசன் எண்ணினான்.

''சரத்சந்திரனைக் கையைப் பிடித்து இழுத்து இவ்விடம் கூட்டிக்கொண்டு வருவதாகச் சொல்லியிருந்தீர்கள் அல்லவா?''

''நான் அவனைச் சந்திக்கவே முடியவில்லையே! அவன் எங்கு மாயமாய் மறைந்துவிட்டானோ யார் கண்டார்கள்? அவன் இருப்பிடம் எங்கு இருக்கிறதோ அதுவும் எனக்குத் தெரியாது.''

''நான் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்; உடனே நான் போய் அவனை இழுத்துக் கொண்டு வருகிறேன். சரிதானே?''

''சரிதான்.''

''நாம் இருவரும் சேர்ந்தே போவோம்; வெளியில் என் வண்டி நிற்கிறது.''

''வாருங்கள், புறப்படலாம்; சரத்சந்திரன் வந்த பிறகு தான் நாம் இனிமேல் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றித் தீர ஆராயவேண்டும்! எனவே எத்தனை சீக்கிரம் அவனைப் பிடிக்க முடியுமோ அத்தனை சீக்கிரம் பிடித்து வருவோம். ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள் அல்லவா, 'மகமது மலைக்கு வராவிட்டால் மலை நகர்ந்து மகமதண்டை போகவேண்டும்' என்று? அதைப்போல் சரத்சந்திரன் நம்மிடம் வராவிட்டால் நாமே அவனைத் தேடிக் கண்டுபிடிக்கலாம்.''

''நான் மகமது துக்ளக் என்று முடிவு கட்டுகிறாயா? நான் மகமதும் ஆகவில்லை, மலையாகவும் இருக்கவில்லை.''

''இல்லை என்று சொன்னால் போதாது; நகர்ந்துவர வேண்டும். என் பேச்சைக் கேட்டு உடனே புறப்படா விட்டால் நீங்களே உங்களை மலை என்று ஒப்புக்கொண்டதாக அல்லவா அர்த்தம்?''

''நான் மகமதாகவே இருக்கிறேன், மலைதான் இங்கு வரட்டுமே!''

''நான் ஒரு பிகம்போல் புறப்படட்டுமா?''

இப்படிச் சொல்லிக்கொண்டே அவள் சற்று விலகிச் சென்றாள். செல்லும்போது ஓர் உரத்த சிரிப்பு அவளை அறியாமலே வெளிவந்தது. மேஜைக்கு அருகில் சென்று தன் தலைமயிரை அள்ளி ஒரு பெரிய முடிச்சாகப் போட்டுக் கொண்டாள். மேஜைமீதிருந்த கொண்டை ஊசிகளை எடுத்து ஒவ்வொன்றாகத் தன் தலையில் செருகிக்கொண்டாள். பிறகு சிரித்த முகத்துடன், ''போகலாமா?'' என்றாள்.

இத்தனை சீக்கிரமாக அலங்காரம் முடிந்துவிட்டதைக் கண்ட விலாசனுக்கு ஆசாவின் சாதாரணத் தன்மையைப் பற்றிச் சற்று ஆச்சரியம் ஏற்பட்டது.

வண்டியில் ஏறிப் போய்க்கொண் டிருக்கையிலேயே விலாசன், தான் ஆசாவைக் கொண்டுபோய்ச் சரத்சந்திரனிடம் சேர்ப்பித்ததும் என்ன செய்வது என்பதைப் பற்றியே யோசனை

செய்து வந்தான். இருவரும் காதல் நிரம்பிய வார்த்தைகள் ஆடி ஒருவருக்கு ஒருவர் சல்லாபமாக இருக்கும்போது அவன் எப்படி அதன் நடுவில் ஓர் உணர்ச்சியற்ற தூண்போல் அங்கேயே இருக்க முடியும்? எனவே ஆசாவை அவன் சரத்திடம் கொண்டு சேர்த்தவுடனேயே, ''போய்வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பவேண்டும்....?

ஆனால் நடப்பு அவ்விதமெல்லாம் ஆகவில்லை. ஏனெனில் கால்பாதேவி ரோட்டில் உள்ள சரத்சந்திரனின் ஜாகை பூட்டிக் கிடந்தது. ஆசா அவனை எங்கெங்கெல்லாம் அடிக்கடி சந்திப்பாளோ அவ்விடங்களிலெல்லாம் தேடியும் அவன் காணப்படவில்லை. எனவே சற்று ஏமாற்றம் கலந்த குரலில் அவள், ''இனி அடுத்தபடியாகச் செய்யவேண்டியது-என்ன?'' என்றாள்.

''வேறு எங்கேயாவது தேடவேண்டிய இடம் பாக்கி இருக்கிறதா?''

''எனக்குத் தெரிந்து வேறொன்றுமில்லை.''

''அப்புறம்? திரும்பிச் செல்ல வேண்டியதுதானா?''

''அவ்வளவுதான்!''

அச்சமயத்தில் மாலையில் வெளிவந்த தினசரிப் பிரதிகளைக் கையில் ஏந்திக்கொண்டு சிறுவர்கள், ''ஸார் பேப்பர் ஸார்'' என்று கூவிக்கொண் டிருந்தனர். அச்சிறுவர்களில் ஒருவன் விலாசனிடம் வந்து, ''ஸார் 'பயனீர்' பத்திரிகை வேண்டுமா?'' என்றான்.

அவன் கையில் பிடித்திருந்த போஸ்டரில் பெரிய எழுத்துக்களில் கீழ்க்கண்ட விதம் எழுதப்பட் டிருந்தது.

## ரகசியக் கூட்டத்தார் பிடிபட்டனர். ஒவ்வொருவருக்கும் ஆறுவருஷக் கடுங்காவல்

விலாசன் ஒரு பிரதி வாங்கினான். முதல் பக்கத்தைப் பிரிக்கையிலேயே ஒரு காற்றடித்து அதை மடக்கிவிட்டது. அவன் அதைப் பெருமுயற்சியுடன் சரிப்படுத்திக்கொண்டான்.

''தீர்ப்பின் முழு விவரமும் வெளிவந்திருக்கிறது. அவசியம் படிக்க வேண்டும்.''

இருவரும் தலைக்கு ஒரு பக்கமாக அந்தப் பத்திரிகையைக் கையில் பிடித்துக்கொண்டு அதைப் படிக்க ஆரம்பித்தனர். இதற்குள் ஆசா சொன்னாள்:

''இங்கே தெருவில் நின்றுகொண்டு படிப்பது எனக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. விஷயமோ நாலைந்து பத்திக்குமேல் இருக்கிறது. இவ்வளவையும் இங்கேயே நின்று படிப்பது என்றால் நாலு பேருக்கு நடுவில் நன்றாக இருக்காது.''

''வீட்டுக்குச் செல்லும் வரையில் என்னால் காத்திருக்க முடியாது.''

''பின் இங்கே ரோட்டில் நின்றுகொண்டுதான் படிப்பீர்களோ?''

''செய்வதுதான் என்ன? எனக்கு ஒன்று தோன்றுகிறது; பக்கத்தில் ஒரு ஹோட்டல் இருக்கிறது. அங்கே போய்ப் படிக்கலாமா?''

''இது என்ன கூத்து? ஹோட்டலுக்குப் போவது செய்தித் தாளைப் படிக்கவா?''

''ஏன், அதற்கென்ன?''

''அப்போது காபி சாப்பிடப் பத்திரிகை ஆபீசுக்குத்தான் போகவேண்டும் என்று அர்த்தமா?''

உரக்கச் சிரித்த விலாசன் சற்று நேரம் கழித்துக் கேட்டான்:

''பின் என்ன? வருவீர்களா?''

''சரி, புறப்படலாம் வாருங்கள்.''

இவ்விதம் சொல்லித் தன் சேலைத் தலைப்பை இழுத்து விட்டுக்கொண்டு புறப்படத் தயாரானாள் ஆசா. காற்றில் அவள் சேலைத் தலைப்பு, பறந்து விலாசன்மீது உராய்ந்தது. அதை இழுத்து விட்டுக்கொண்டே அவள் சொன்னாள்:

''அடேயப்பா! என்ன முரட்டுக் காற்றுத்தான் அடிக்கிறது சனியன்!''

''காற்றோடு உங்களுக்கு என்ன சண்டை? 'காற்றோடு கூடச் சண்டை போடுகிறாள்' என்று உங்களைக் கண்டு எல்லோரும் சிரிக்கமாட்டார்களா?''

* * * *

அவர்கள் இருவரும் ஹோட்டலில் நுழைந்தபோது இருட்டிவிட்டது; எனவே மின்சார விளக்குகளின் ஜகஜ் ஜோதியான பிரகாசத்தில் மிகவும் நாகரிகமாக உடை தரித்த ஸ்திரீ புருஷர்கள் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண் டிருந்தனர். சாப்பாட்டின் பக்குவங்களில் அவர்களுடைய கவனம் இருந்ததோ என்னவோ, அது நமக்குத் தெரியாது. ஆனால்

அவர்களில் பலர் அங்கே சாப்பிட வந்ததாகத் தெரியவில்லை. தங்கள் ஆடைகளை விளம்பரப் படுத்திக்கொள்ளவும் தங்களால் எத்தனை உரக்கப் பேச முடியும் என்பதைப் பரிசோதிப்பதற்காகவுமே வந்திருந்ததாகத் தெரிந்தது. பெண்கள் பல வர்ணப் பட்டாடைகள் உடுத்துக்கொண்டு, நகைகளால் தங்களை அலங்காரம் செய்துகொண் டிருந்தனர். அவைகளில் சில நகைகள் நம்பிக்கைத் துரோகம் செய்தன. பிறரிடம் தங்கம் என்று சொல்லிக்கொண்டு வந்ததை யெல்லாம் பொய் என்று ருசுப்படுத்துவது போல் உள்ளே இருந்த செம்பும் பித்தளையும் தங்கமுலாம் தேய்ந்துபோன இடங்களின் வழியாக வெளியுலகத்தை எட்டிப் பார்த்தன. பெண்களுடைய பேச்சுக்களில் ஹாஸ்யம் கலந்திருந்ததோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் பேசும் பேச்சுக்கெல்லாம் ஏனோ அர்த்தமில்லாமல் சிரிக்கிறார்கள்? காதில் அணிந்த தொங்கட்டங்கள் ஊசலாட வேண்டும் என்றுதான் அவர்கள் தலையை ஆட்டி ஆட்டிப் பேசுகிறார்களோ?

ஆனால் அந்த ஆடம்பரக் கூட்டத்தில் சாதாரணமான கதர்ப் புடைவையை உடுத்துக்கொண்டு, இயற்கை அழகே அழகு என்று சொல்லும்படியாக ஒரு நகையும் பூணாமல், சோபை மிகுந்த முகத்துடன் ஆசா நின்றிருந்ததைக் கண்ட விலாசனுக்கு, அவள் ஒரு ராணியைப் போலவே தோன்றினாள்.

உட்கார இடம் இல்லாமல் ஆசா நான்கு பக்கமும் பார்த்தாள். அவளுடைய கண்கள் மருண்ட மானின் கண்களைப் போல் இருந்தன.

கடைசியில் அவள் ஓர் இடம் காலியாக இருப்பதைக்கண்டு அதைச் சுட்டிக் காட்டிக்கொண்டே சொன்னாள்:

''வாருங்கள், அங்கே போய் உட்காரலாம்.''

''அங்கேயா?''

விலாசன் ஆசாவின் கையைப் பிடித்துக்கொண்டு நேரே அவ்விடம் சென்றான். நாற்காலியில் உட்கார்ந்ததும் பரிமாறும் சிறுவன் அங்கே வந்து, ''ஸாஹிப், என்ன கொண்டு வரட்டும்'' என்றான்.

விலாசன் ஆசாவை ''என்ன சாப்பிடுகிறாய்?'' என்று கேட்டான்.

''நீங்கள் பத்திரிகை படிக்க ஹோட்டலுக்குள் நுழைந்திருக்கிறீர்கள்! என் ஜன்மத்திலேயே இதுதான் எனக்கு முதல் தடவை இந்த ஹோட்டல் கோலாகலம் எல்லாம்.''

''ஓஹோ! நான் உங்களுக்குப் பெரிய தீங்கு இழைத்து விட்டேன் என்றே சொல்லுங்கள்! உங்கள் விரதத்தைப் பங்கம் செய்துவிட்டேன்! ஏன், முதலிலேயே, 'நான் வர முடியாது' என்று சொல்லி இருக்கலாமே!''

''வேறு யாராவது என்னை அழைத்திருந்தால் அவ்விதந்தான் சொல்லியிருப்பேன்!''

அப்படி ஆசா பதில் அளித்ததைக் கண்டு விலாசனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது! 'இது என்ன? இவள் தன்னைக் காதலிக்கிறுளா? சீ சீ......ஒரு போதும் இல்லை! ஏதோ சாதாரண மனப்பான்மையுடன்தான் அவ்விதம் சொல்லியிருப்பாள். அதைத் தப்பிதமாக அர்த்தம் செய்துகொண்டுவிடுவது அபாயம். சரத்சந்திரனைத் தவிர அவள் யாரைக் காதலிக்க முடியும்?' எனவே விலாசன் தன்னிடம் வந்து நின்ற பரிசாரகனை நோக்கி, ''இரண்டு கப் காபி கொண்டுவா!'' என்றுன்.

ஆசா குறுக்கிட்டு, ''உங்கள் முக்கியமான வேலை பத்திரிகை படிப்பதல்லவா?'' என்றுள்.

விலாசன் பத்திரிகையை மேஜையின் மீது விரித்தான். அவ்விருவரும் படிக்கலாயினர்.

காபி ஆறிப்போய் விட்டதெனினும் அவ்விருவர்களுடைய கவனமும் அதன்மீது செல்லுவதாகக் காணேம்! விஷயங்கள் அதிக முக்கியமானவையாக இருந்தன பத்திரிகையில்! விலாசன் தான் படித்த செய்தியின் கடைசிப் பாகத்தை ஒரு தரம் படித்துத் திருப்தி யடைவதாகத் தோன்றவில்லை. எனவே அவன் திரும்பத் திரும்ப அதைப் படிக்கலானுன்:

''தண்டனை அளிக்கப்படும் யுவர்களின்மீது என் அனுதாபம் இருக்கிறது. இவர்கள் எல்லோரும் வீரம் படைத்த யுவர்கள். பயம் அறியாத இளம் காளைகள்! இவர்கள் செய்த காரியங்கள் குற்றங்களே எனினும், இவர்கள் சிறந்த தியாகபுத்தி கொண்டு தான் இவ்விதக் குற்றங்கள் செய்திருக்கின்றனர். ஏழைத் தொழிலாளிகளையும் விவசாயிகளையும் ஒன்றுபடுத்தி அவர்களுடைய அரசாங்கம் நிறுவப்படல் வேண்டும் என்பதுதான் இவர்களுடைய கொள்கை என்று தெரிகிறது. ஆனுல் அதை நிறைவேற்றுவதற்குத் தக்க வழியை இவர்கள் அறியவில்லை. எனவே அட்டகாசமான அழிவு வேலைகளைக் கைக்கொண்டனர். இவர்கள் தங்களுடைய அறிவையும் ஆற்றலையும் சன்மார்க்கத்தில் உபயோகித்தால் அதனுல் சமூகத்திற்கும் தேசத்திற்கும்

எத்தனையோ நன்மைகள் உண்டாகும் என்பதில் ஐயமில்லை! ஆனால் உணர்ச்சியின் வேகத்தினாலும் தாம் செய்வதுதான் சரியான மார்க்கம் என்று இவர்கள் உண்மையில் நம்பு வதனாலுமே இவர்கள் இவ்வித அக்கிரமங்களில் ஈடுபடுகின்றனர். இவ்விதம் இவர்கள் செய்தது தப்பிதமேயாகும். தப்பிதம் செய்தவர்களுக்குத் தண்டனை அளித்துத்தான் தீரவேண்டும். எனவே வேறு வழியின்றி இவர்களைத் தண்டிக்கிறேன். அரசாங்கச் சட்டங்களை மீறியதனால் தண்டனை மிகக் கொடிய தாக இருக்க வேண்டும் என்று சர்க்கார் சார்பில் உள்ள வக்கீல்கள் வாதாடுகின்றனர். உண்மையில் அப்படித்தான் என் நோக்கமும். ஆனால் சரியான சுற்றுப்புறமும் தனிமையும் கொடுக்கப்பட்டால் காலப்போக்கில் இந்த யுவர்கள் தங்க ளுடைய கொள்கைகளை மாற்றிக்கொண்டு நல்லவர்களாக மாற இடம் உண்டு. எனவே இவர்களுக்கு ஆறு வருஷக் கடுங்காவல் விதிக்கப்பட் டிருக்கிறது.''

கடைசி வாக்கியத்தைப் படித்ததும் விலாசன் ஆசாவைப் பார்த்து, ''எத்தனை அழகாய் எழுதப்பட்டிருக்கிறது. பார்த்தீர் களா? இதில் உள்ளதெல்லாம் உண்மைதானே?...... நீங்கள் ஏன் ஒன்றும் பேசவில்லை?'' என்றான்.

''நியாயத் தீர்ப்பு என்னவோ அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால் அழகாய் இருப்பதனாலேயே ஒரு விஷயத்தை நாம் நல்லது என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. நல்ல பாம்பும் எட்டிப் பழமும் கண்ணுக்கு எத்தனை ரம்மியமாக இருக்கின்றன? ஆனால் அவைகளின் விஷந்தான் எத்தனை? என் தேசத்தில் பிறந்த சில வீர யுவர்களுக்குத் தலைக்கு ஆறுவருஷக் கடுங்காவல் என்பதைக் கேட்கும்போது எனக்கு மனக் கலக்கமும் துக்கமும் உண்டாகாமல் இரா. சுதந்தரமும், ஜனசமூக நலன்களைத் தேடு வதும் மிகவும் உத்கிருஷ்டமான காரியங்கள். அவைகளை அடையப் பல தியாகிகள் பலவித மார்க்கங்களைச் சொல்லுகின் றனர். எனவே ஏதாவது ஒரு மார்க்கத்தில் போனவர்களை, அந்த மார்க்கம் சரியல்ல என்று எண்ணுகிறவர்கள் குற்றவாளி கள் என்று தீர்மானிப்பது நல்லதா? தீர்ப்பு அழகாகத்தான் இருக்கிறது. அழகாகப் பேசுபவன் ஒருவனுக்குப் பொய்யை உண்மை போலவும் உண்மையைப் பொய் போலவும் ஆக்கும் வல்லமை உண்டு. அவன் பேசுவது அழகாய் இருக்கிறது என்பதால் மட்டுமே அதை நாம் உண்மை என்று எப்படி

ஏற்றுக்கொள்ளலாம்? 'லோகோ பின்னருசி:' என்றான் கவி காளிதாஸன். அபிப்பிராயமும் வித்தியாசப்படும். எனவே அது குற்றம் ஆகுமா? நானும் பலாத்காரக் கொள்கைகளை வெறுத்து வந்தேன்—வெறுக்கிறேன்—வெறுப்பேன். ஆனாலும் அவ்வழியே போகிறவர்களைக் குற்றவாளிகள் என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்தச் சாதாரண உண்மைகளைக்கூட மறந்துவிட்டு நியாயத் தீர்ப்பின் அழகிலேயே நீங்களே மூழ்கிக் கிடப்பதைக் கண்டு நான் உங்கள்மேல் இரக்கப் படுகிறேன்!''

இவ்விதம் பேசுகையில் அவள் சாக்ஷாத் வீரலக்ஷ்மியைப் போல் தோற்றம் அளித்தாள். வெண்மையான அவள் முகம் ரோஜாப் புஷ்பத்தைப்போல் சிவந்தது. விலாசன் காபியை எடுத்துக் குடிக்க ஆரம்பித்ததும், அவளும் காபியை இரண்டு மூன்று வாய் குடித்துவிட்டு மறுபடியும் பேசலானாள்:

''மேற்படி ஆறு யுவர்களில் சரத்சந்திரன் ஒருவனாக இருப்பானோ என்று எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது; அவனைப் பற்றிய கவலை எனக்கு அதிகரிக்கிறது. அவன் என்னிடம் வந்து பதினொரு நாட்களுக்குமேல் ஆகிறது.''

சரத்சந்திரனைப் பற்றி ஆசா கவலைப்படுவது இதுதான் முதல் தடவையல்ல. எனினும் இன்று அவள் முகமே ஒருவிதப் பயங்கரமான கவலையுடன் வாடி இருந்தது. ஒருவேளை சரத்தின் மேல் உள்ள காதலாலும், அவனுடைய பிரிவாற்றாமையினாலும் அவ்விதம் அவள் கவலைப்படுகிறாளோ என்று எண்ணினான் விலாசன்.

''சரத்சந்திரனைப் பற்றி நீங்கள் ஏன் வீணாக கவலைப்பட வேண்டும்? காதலின் சக்தி அதிவேகமானது. அதுவன்றி நீங்கள் விரும்பாத ஒரு மார்க்கத்தில் சரத்சந்திரன் ஒரு நாளும் செல்ல மாட்டான். இதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம். ஏனெனில் அவன் அரசியல் கொள்கை உங்களுடையதைப்போல் அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்டதல்ல என்றாலும், உங்கள் மனத்தைத் துன்புறுத்தக் கூடாது என்பதற்காகவாவது அவன் பலாத்கார வழியில் செல்லமாட்டான்.''

இதைக் கேட்டபோது ஆசா உதட்டைக் கடித்துக்கொண்டாள். கண்களின் ஓரங்களில் வழிந்த நீர்த்துளிகளை மறைத்துக் கொள்வதற்காக அவள் தலைகுனிந்தாள். ஆனால் விலாசனின் கவனத்திற்கு அவ்விஷயம் வராமலில்லை.

ஆசாவின் மனத்தைச் சரத் அகாரணமாகப் புண்படுத்திய தாக அவன் எண்ணினான். எனவே அவனால் வெறுமனே இருக்க முடியவில்லை. ''எப்படியாவது சரத்சந்திரனை இழுத்து வரலாம் என்று முயன்றும் ஒன்றுமே முடியவில்லையே!'' என்றான்.

* * * *

இது நடந்த சில தினங்களை விலாசன் சரத்சந்திரனைத் தேடுவதிலேயே கழித்தான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் ஒரு நாள் பிற்பகல் சரத் அவனைத் தேடிக்கொண்டு அவன் பங்களாவிற்கு வந்தபோது விலாசனுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லை.

அவனுடைய இரு கரங்களையும் பிடித்துக்கொண்டே விலாசன் சொன்னான்:

''அடே, யோக்கியா! இத்தனை நாட்களாக எங்கே போயிருந்தாய்?''

தன் கைகளை விலாசனின் இறுகிய பிடிப்பினின்றும் விடுவித்துக்கொண்டே சரத்சந்திரன் பதிலளித்தான்:

''என்னடா இது! என் கைகளுக்கெல்லாம் கறுப்பு வர்ணத்தைத் தடவிவிட்டாய்?''

''ஓ, என்னை மன்னித்துக்கொள் சரத்; என் கைகள் அசுத்த மாய் இருக்கின்றன என்பதை நான் கட்டோடு மறந்து விட்டேன்! என்னுடைய கைத்துப்பாக்கியைக் கழற்றிச் சுத்தம செய்துகொண் டிருந்தேன்; நீ வந்ததும் மறந்தாற்போல் அழுக்குக் கைகளால் உன் கையைப் பிடித்துவிட்டேன்.''

''சரிதான்; அது இருக்கட்டும். எந்த வேட்டைக்காக இவ் வளவு முஸ்தீப்புகள் நடக்கின்றன, தோழரே?''

''வேட்டை எங்கே இருக்கிறது நமக்கு? இதைத் துடைத்துப் பல நாட்கள் ஆகிவிட்டன; ஆகையால்தான் எடுத்துத் துடைக்க ஆரம்பித்தேன்.''

''ஓஹோ, இந்த ரிவால்வரை இடையிடையே கழற்றித் துடைக்கவேண்டுமா? எனக்கு என்ன தெரியும் இந்தத் துப்பாக்கி யின் விஷயங்களெல்லாம்? இது உன் சொந்தத் துப்பாக்கியா? அப்படியானால் இது மிகவும் உயர்தரச் சரக்காகத்தான் இருக்கும்! அதிருக்கட்டும். இதை எப்படி உபயோகிப்பது? குறிவைப்பது எப்படி? காட்டு, பார்க்கலாம்.''

ரிவால்வரை எடுத்துக் கையில் பிடித்துக் கொண்டான் சரத் சந்திரன்.

''இப்படித்தான் பிடித்துக்கொள்ளுவதோ ரிவால்வரை! நிரம்பக் கெட்டிக்காரன்தானடா நீ!''

''பின்னே எப்படி? என்ன இது? துப்பாக்கியில் ரவையும் மருந்தும் பெயருக்குக்கூட இல்லையே!''

''அட அடிமுட்டாளே! இந்தச் 'சேம்பர்' காலியாகக் கிடக்கிறதே! இதுகூடவா தெரியவில்லை?''

''ஓஹோ, இதைத்தான் 'சேம்பர்' என்று சொல்லுவதோ? குண்டுகளை எங்கே போடுவதாம்?''

''குண்டுகளை இந்த இடத்தில் அடுக்கி வைக்க வேண்டும்; அது இருக்கட்டும்; ரிவால்வரைப் பற்றி இத்தனை ஆராய்ச்சியும் ஊக்கமும் கொண்ட உனக்கு ஆசாவைப் பற்றி மட்டும் ஏன் அணுவளவுகூட ஞாபகமே இல்லை?''

''நான் இனி அவளைப்பற்றிக் கேட்டு என்ன பயன்? நீயே தான் எல்லாவற்றையும் சொல்லேன்!''

''சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? நானே உன்னை அவளிடம் அழைத்துச் செல்லப்போகிறேன்.''

''அடே அப்பா! நான் இன்னும் சாப்பிடக்கூட இல்லை. ஆசாவிடம் போக இப்போது எனக்கு நேரம் ஏது? தயவு செய்து என்னை விட்டுவிடு; நான் இன்று மாலையில் கட்டாயம் உன்னுடன் வருகிறேன்.''

''சத்தியமாக வருவாயா?''

''என் மனச்சாட்சிக்குப் பொதுவாக நான் வர முயல் கிறேன்.''

''ஆசாவின்மேல் ஆணைவைத்துச் சொல்லுவாயா?''

''ஆசாவின்மேல் ஆணையாகச் சொல்லுகிறேன்.''

''சபாஷ்! நீ இத்தனை நல்ல பையனாக மாறியதற்காக உனக்கு என்ன பரிசு கொடுக்கட்டும்? சரி, கொஞ்சநேரம் இரு; இந்தக் களேபரத்தை எல்லாம் எடுத்து வைத்து விட்டுக் கைகளை அலம்பிக்கொண்டு, பிறகு உனக்கு ஒரு கிளாஸ் ருசிகரமான சர்பத் கொண்டுவந்து தருகிறேன்.''

''வெறும் சர்பத் மட்டுந்தானா? ஏதாவது தின்பதற்கும் கொடுத்த பிறகு சர்பத் குடிக்கலாம். எனக்குப் பசி காதை அடைக்கிறது! சர்பத்தை விட எனக்குக் கொஞ்சம் டீ போட்டுக் கொடுத்தால் தேவலை.''

''ஆனால் ஆசாவின் பால்கிடங்கில் கிடைக்கும் டீயைவிட என் வீட்டில் குடிக்கும் டீ உனக்கு எப்படி ருசிக்கும்? ஆசா

தயாரித்த டீ என்றால் அதன் மணமே அலாதி! அப்படித் தானே?''

''வேடிக்கை அப்புறம் ஆகட்டும்; முதலில் துப்பாக்கியைத் துடைத்துப் பொருத்திவை! எனக்குக் கொஞ்சம் ஆகாரம் கொண்டுவர வழி பார்! சாப்பிட்டதும் ஆகட்டும் உன் வேடிக்கைகளெல்லாம்.''

அவ்விதமே விலாசன் ரிவால்வரின் பாகங்களை எல்லாம் எடுத்துப் பொருத்தி வைத்தான். பிறகு அதை நன்றாகத் துடைத்து, தன் மேஜையின் டிராயரில் வைத்து விட்டு, கைகளைச் சுத்தம் செய்துகொள்ளக் கிணற்றுக்குச் சென்றான்.

மாடிப்படிகள் வழியாக விலாசன் இறங்கின சத்தம் சற்று அடங்கியதும், அவன் கீழே இருந்தபடியே உரத்த குரலில் பேசலானான்: ''சரத்! என் மோட்டாரை ரிப்பேர் செய்வதற்காகக் கம்பெனியிலிருந்து ஓர் ஆள் வந்திருக்கிறான்; அவனுக்குச் சில விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் செல்லும் நான் திரும்பி வருவதற்கு. தயவு செய்து மன்னித்துக்கொள். மேஜையின் வலது கைப்பக்கம் உள்ள டிராயரில் சிகரெட் பெட்டி இருக்கிறது. உனக்கு வேண்டிய மட்டும் எடுத்துப் பிடித்துக்கொண்டிரு. ஆனால் பெட்டியை மட்டும் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு கம்பியை நீட்டிவிடாதே!''

சரத் - வேண்டுமென்றே என்னவோ - மிகவும் உரக்கச் சிரித்தான். அதைக்கேட்டு விலாசனும் பதிலுக்காகச் சிரித்தான்.

சுமார் இருபது நிமிஷங்களுக்குப் பிறகு விலாசன் திரும்ப மாடியின் அறைக்குள் நுழைந்தபோது, சமையற்காரன் ஒரு வெள்ளித் தட்டில் பலவித தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு பின்னாலேயே வந்தான்.

டீ குடிக்கும்போது விலாசன் திரும்பத் திரும்பச் சரத் சந்திரனைக் கேட்கலானான்:

''உனக்கும் ஆசாவிற்கும் அடிக்கொரு தரம் தகராறு ஏற்படுகிறதே, எதனாலடா சரத்?''

''யார் சொன்னார்கள், நாங்கள் இருவரும் சச்சரவு செய்கிறோம் என்று?''

''யார் சொல்லவேண்டும்? எனக்குக் கண் இல்லையா? அல்லது காதுகள்தாம் செவிடா? உங்கள் இருவருடைய உறுமலுந் தான் உலகம் எல்லாம் கேட்கிறதே!''

''அப்படியென்ருல் எங்களைப் பூனைகள் என்று சொல்லுகிருயோ?''

''நான் சொல்லவில்லை! ஒரு பிரெஞ்சு எழுத்தாளர்தாம் அவ்விதம் சொல்லியிருக்கிருர். காதலர்கள் பூனைகளாக நடந்து கொள்ளும்போதுதான் விசேஷம் இருக்கிறது. அப்பொழுது அவர்கள் பூனைகளைப் போலவே உறுமியும் பிருண்டியும் கொள் கிருர்கள்.''

''சமீபகாலமாக நீ ஏன் மனநூல் ஆராய்ச்சியில் இறங்கி இருக்கிருய்?''

இவ்விதம் இரு நண்பர்களிடையேயும் வெகு நேரம் வேடிக்கையாகச் சம்பாஷணைகள் நடந்தன. பிறகு சரத் எழுந்து விடை பெற்றுக்கொண்டபோது விலாசன் கேட்டான்: ''சாயங்காலம் கட்டாயமாக ஆசாவைப் போய்ப் பார்ப்பாயா?''

''அடேயப்பா! சபதம் அல்லவா செய்திருக்கிறேன்!''

''அதிருக்கட்டும்; அந்தக் கைப்பையில் என்ன சாமான் இருக்கிறது?''

''அவைகளா, எங்கள் கம்பெனியின் தஸ்தாவேஜிகள்.''

''உங்கள் கம்பெனியா? அது என்ன புதிதாக இருக்கிறதே!''

''ஆம்; எங்கள் கம்பெனியின் வேலையும் புதிதுதான்.— அதாவது உயிரை வாங்கும் வேலை! — அடேயப்பா! நீ ஏன் இப்படித் தூக்கி வாரிப்போட்டுக் கொண்டு பயப்படுகிருய்? உயிரை வாங்கும் வேலை என்ருல் உன்னைப்போன்ற பணக்காரர் களின் உயிரை இன்ஷூர் செய்துகொள்ளும்படி செய்வது! முடிந்தவரையில் நாங்கள் உயிர்களை வாங்கிக்கொண்டேதான் இருப்போம். உன் உயிரைக்கூட வாங்கிப்போடலாம் என்று நினைக்கிறேன்.''

''நினைப்பது என்ன? நண்பனுக்காக உயிரைக்கூடத் தாராளமாகக் கொடுக்கத்தானே வேண்டும்? அது இருக்கட்டும்; என் மோட்டார், ரிபேருக்காக ஒர்க் ஷாப்பிற்குப்போய் இருக்கிறது; ஆகையால் நீ நடந்தேதான் செல்ல வேண்டியிருக்கும்.''

''பரவாயில்லை; வருகிறேன்!''

''நீண்ட பிரிவா என்ன? நீ மாலையில் மறுபடியும் இங்கே வந்துதானே ஆசாவிடம் செல்லுவாய்?''

''இல்லை, இல்லை; நேரடியாகவே சென்றுவிடுவேன்.''

சரத் அவ்விடம் விட்டு அகன்ருன்.

* * * *

விலாசன் அன்று மாலையில் ஆசாவிடம் சென்றபோது அவனுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அவன் நெஞ்சு படபடவென்று துடித்தது.

அவன் கேட்டான்:

''சரத் போய்விட்டானா?''

''என்ன? சரத் இங்கே எங்கே வந்தான்?''

''ஏன்? அவன் இங்கு வரவே இல்லையா?''

''எதனால் இப்படிக் கேட்கிறீர்கள்?''

''மத்தியான்னம் அவன் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தான். மாலையில் உங்களிடம் கட்டாயம் வருவதாக வாக்களித்தான்; அதனால்தான் கேட்டேன்.''

''வாக்களித்தும் இவ்விடம் வரவில்லையானால் அவர் இஷ்டப் படியே விட்டுவிடுங்கள். அது இருக்கட்டும், ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்?''

தன்னுடைய ரிவால்வர் காணாமல் போன விஷயமும் சரத் சந்திரன்மீது இவனுக்கு இருந்த சந்தேகமும் விலாசனைப் பன் மடங்கு கலக்கமடையச் செய்தன. எனினும் அவன் ஆசாவிடம் அவ்விஷயங்களை வெளியிட விரும்பவில்லை.

''நான் எங்கே பயப்படுகிறேன்?''

இவ்விதம் சொல்லியபோது அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

தான் சிரிக்கும் ஒலியில் ஜீவனே இல்லாதிருந்ததை அவனே உணர்ந்தானோ என்னவோ! அவன் முகம் களையிழந்து வெளுத்தது.

அவன் மறுபடியும் சிரித்தான்.

# அத்தியாயம் 21

மறுநாள் சரத்சந்திரனைக் கண்டுபிடிப்பதற்காக விலாசன் எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் வீணாயின. அன்றொரு நாள் ஆசாவுடன் சேர்ந்து சரத்தை எங்கெங்கெல்லாம் தேடினானோ, அவ்விடங்களுக்கெல்லாம் விலாசன் தவறாது சென்று தேடினான். அவனைப்பற்றிப் பலரிடமும் விசாரித்தான்; ஆனால் ஒருவராவது சரத் இருக்கும் இடத்தை அறிந்ததாகத் தெரியவில்லை.

ரகசியக் கூட்டத்தில் சேர்ந்த ஒரு மனிதனுடைய இருப்பிடம், சுற்றுப்புறங்கள் இவைகளை மற்றொருவன் சுலபமாக அறிந்துகொள்ளுவது அத்தனை சுலபமான காரியமானால், பிறகு அந்தக் கூட்டத்திற்கு ரகசியக் கூட்டம் என்ற பெயர் எப்படிப் பொருந்தும்?

ரிவால்வர் அது வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து காணாமல் போனதுமே விலாசனுக்குத் தூக்கி வாரிப் போட்டிருக்கும் என்றும், அவன் தன்மீதே சந்தேகம் கொள்ளுவான் என்றும் சரத்சந்திரன் நன்கு அறிந்துதான் இருந்தான். விலாசன் அவனைக் கட்டாயம் தேடத்தான் தேடுவான். ஆனால் சரத் என்ன அவ்வளவு சீக்கிரம் அகப்படுகிறவனா என்ன? ஒருவேளை அவனுக்கு அறிமுகமான யாராவது தற்செயலாகக் கண்டுகொண்டால்......? அதுவும் சாத்தியமில்லை! ஒருவேளை விலாசனே நேரில் வந்தால்கூட அவன் சரத்சந்திரனைக் கண்டுபிடிக்க முடியாது. அவன் சுய உருவத்தை மாற்றி முற்றும் வேறான ஒரு வேஷம் தரித்திருந்தான்.

அவன் அணிந்திருந்த பலவர்ணம் கொண்ட பட்டாணியப் பாய்ஜாமா, காலில் உள்ள சுருண்ட ஜோடுகள், முழங்கால் வரையில் தொங்கும் நீண்ட அங்கி, அதன்மேல் போட்டுக்கொண்ட கையில்லாத அரைக்கோட்டு, கழுத்தில் அழுக்குப் பிடித்துப்போன கறுப்புப் பட்டு நூலில் கட்டித் தொங்கும் பெரிய தாயத்துக்கள், கையில் திகழும் தோலுடன் கூடிய தடி,

செம்பட்டையான மீசை, கூர்மையான தாடி, மற்றும் தலையில் சுற்றப்பட்ட பெரிய முண்டாசு, அதன் ஒரு நுனி முதுகில் நெடுந்தூரம் தொங்கின விதம், அந்த முண்டாசுக்கு நடுவில் சிகரம்போல் விளங்கும் சரிகைக் கலசம் - இவைகளை எல்லாம் பார்த்த ஒருவன் அவனை உண்மையில் சரத்சந்திரன் என்று எப்படிச் சொல்ல முடியும்?

தானே சரத்சந்திரனா, அல்லது கூடுவிட்டுக் கூடுபாயும் தன்மையால் அவன் ஒரு பட்டாணியன் உடம்பில் புகுந்து கொண்டுவிட்டானா என்ற சந்தேகம் அவனுக்கே ஏற்பட்டிருந் தாலும் அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

குலாபா பேட்டையில் உள்ள ஹைஸ்கூலின் மேல்மாடியில் இருந்த அறையின் சுவரில் ஒரு பெரிய நிலைக்கண்ணாடி பொருத்தப் பட்டிருந்தது. அதன் முன்னால் நின்றபடியே தன் மீசையைச் சரிப்படுத்திக்கொள்ளும் போதெல்லாம் சரத்சந்திரனுக்கு மேற் சொன்ன விதம் சந்தேகம் தோன்றும். அவன் தன் பிரதிபிம் பத்திடம் கேட்பான்: "நீதான் சரத்சந்திரனா? இல்லை, சரத்சந்திரன் இறந்துபோய் இன்றுடன் மூன்று நாட்கள் ஆகின்றன!"

உண்மையில் சரத்சந்திரன் தானாக மாற்றிக்கொள்ளா விடினும், இயற்கையாகவே அவனுடைய நடை உடை பாவனை களில் முற்றும் வித்தியாசம் காணப்பட்டது. மனப்பூர்வமாக ஒருவன் தன்னை ஒருவிதமாக எண்ணுவானாகில் அவன் தான் நினைத்தபடியே மாறி விடுகிறான். ஓர் ஆண், தன்னைப் பெண்ணாகவே நினைத்துக் கொண்டானாகில் அவனுக்குப் பெண் தன்மை தானாகவே வந்துவிடும். ஆண் உடலில் ஒரு பெண் உயிர்கொண்ட விசித்திர ஜீவனாகிவிடுவான் அவன். அவன் பெண்களைக் காதலிக்க முடியாது. அதற்கு மாறாக அவன் ஆண் களையே காதலிப்பான். ஆனால் அவனை எந்த ஆணும் சீந்தமாட் டான்! ஒரு பொய்யை ஒருவன் பல தரம் சொல்லிக்கொண்டே இருந்தால் அது அவனுக்கு உண்மையாகவே படும் என்று மன நூல் சொல்லுகிறது.

எனவே தன் கூட்டத்தாருக்கு ஆறு வருஷக் கடுங்காவல் அளித்த அந்த ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் துரையைச் சம்ஹாரம் செய்வதற்காக அவன் தன்னை ஒரு பட்டாணிய முஸல்மானாகவே நினைத்துக்கொண்டான். சனிக்கிழமை இரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் துரை தன் ரிவால்வரின்

குண்டுக்கு இரை யாவார்! இதை நினைத்தபோது அவனுக்கே ஒருவித வெறி உண்டாயிற்று.

தன்னுடன் வேலைசெய்யும் தோழர்களுக்கு ஆறு வருஷம் கடுங்காவல் என்றால், அது சரத்சந்திரனால் பொறுக்க முடியவில்லை. எனவே ஜஸ்டிஸ் ஒயிட்பீல்டின் உயிரைக் குடித்துவிட வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது. சீட்டுக் குலுக்கிப் போட்டதில் சரத்சந்திரன்தான் அந்தத் திருப்பணியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆயிற்று! மற்றும் பல தோழர்கள் அவனுக்கு உதவியாக இருப்பார்கள். ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் துரையின் தினசரி வாழ்க்கையின் ஒவ்வொரு நுணுக்கமான விஷயத்தையும் அவர்கள் கவனித்தும் விசாரித்தும் வந்தனர். ஒயிட்பீல்ட் துரை இரவு நேரங்களில் அநேகமாக எல்ஸியின் வீட்டிற்கு வருகிறார் என்பதையும், முக்கியமாய்ச் சனிக்கிழமை இரவு அவர் நடுநிசி வரையில் அவ்விடமே தங்கி இருப்பதையும் அவர்கள் அறியலாயினர். எல்ஸியின் எதிரிலுள்ள இரானியன் கடையில் அந்தத் தோழர் கூட்டம் அடிக்கடி முகாம் செய்தனர். எனவே வருகிற சனிக்கிழமை இரவு ஒயிட்பீல்ட் துரை கைலாச யாத்திரைக்கு டிக்கட்டு வாங்கிவிடுவார் என்று சரத் நம்பினான். எனவே சனிக்கிழமை இரவின் வருகைக்காக அவன் ஆவலுடன் காத்திருந்தான்.

வெள்ளிக்கிழமை ஒருவாறு வந்தது. ஆனால் சரத்சந்திரனுக்குத் தான் செய்யப்போகும் காரியத்தில் ஏனோ நம்பிக்கை குறைந்துகொண்டே வரலாயிற்று. சென்ற இரண்டு மூன்று நாட்களாக அவனுக்குத் தூக்கம் என்பதே இல்லாமல் போயிற்று. 'வெள்ளிக்கிழமை இரவில் அவனுக்கு ஒருவிதமான வெறி ஏற்பட்டது. கண்கள் சிவந்திருந்தன. தலை பாரமாகத் தோன்றியது. நாசிகளின் வழியாக ஆவி போவதைப்போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. உள்ளங்காலிலும் கைகளிலும் 'திகுதிகு' வென்று எரிச்சல் கண்டது. மறுநாள் இரவு ஆகவேண்டிய ஒரு பொறுப்பான காரியத்தை எவ்விதம் நிறைவேற்றி வைப்பது என்பதிலேயே அவன் மனம் புதைந்து கிடந்தது. கொலைசெய்யப்படுபவனைக் காட்டிலும் கொலை செய்பவனுக்கே அதிகமான துன்பம். அவனை அறியாமலே அவன் கை விரல்கள் துப்பாக்கியைச் சுடுவதுபோல் ஆடிக்கொண்டிருந்தன. உண்மையில் சரத்சந்திரன் ரத்த வெறியில் இருந்தான்.

எல்ஸீயின் வீடு இருந்த தெருவில் எத்தனை மின்சார விளக்குகள் இருக்கின்றன, அவற்றின் வெளிச்சம் எத்தனை தூரம் அடிக்கிறது, இவைகளையும் அவர்கள் நன்கு ஆராய்ந்து வைத்திருந்தனர். எல்ஸீயின் வீட்டு வாசலில் யாராவது காவலர்க இருப்பார்களோ என்று சந்தேகம் கொண்டு, அதுவும் இல்லை என்று ஊர்ஜிதப்படுத்திக் கொண்டனர். மாடிப்படிகள் எத்தனை என்பதையும் அவைகள் எந்த எந்தப் பக்கம் வளைந்து செல்லுகின்றன என்றும் வெகு முயற்சியுடன் கேட்டறிந்தனர். மேலிருந்து ஒருவன் இறங்குகையில் கீழிருந்து ஒருவன் ஏறினால் இருவரும் எங்கே சந்திக்கலாம் என்பதையும் தெரிந்துகொண்டனர். கைத்துப்பாக்கியின் சத்தம் கேட்டதும் வெளியிலிருந்து ஜனங்கள் எந்தப் பாதையாக உள்ளே நுழைவார்கள், அப்போது சரத் அபாயம் இன்றித் தப்பி ஓட எந்த வழி ஏற்றது, மற்றும் அநேகவிதமான சந்தேகங்களை எல்லாம் அவர்கள் ஏற்கனவே சோதனை செய்துவைத்திருந்தனர். விலாசனின் ரிவால்வரில் மருந்தும் ரவைகளும் இட்டு அது தயாராக இருந்தது. ஆனால் சுட்டவுடன் ஓடுவதற்கு ஒரு மோட்டார் தேவையாக இருந்தது. இதற்காக ஓர் ஏற்பாடும் ஆகியிருந்தது. பிரசித்திபெற்ற ஓர்க் ஷாப் ஒன்றில் வேலை செய்யும் ஒரு பட்டாணியன் இவர்களுடைய கோரிக்கைக்கு உடன்பட்டுச் சிறந்த வண்டி ஒன்றைத் தயாராக்கி வைத்திருக்கச் சம்மதித்தான். நம்பர்ப் பலகையை எடுத்துவிட்டால் போலீஸ் எப்படி அடையாளம் தெரிந்துகொள்ள முடியும்?

மேற்படி எண்ணங்களெல்லாம் சரத்சந்திரன் மனத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்தன. இன்னும் சுமார் இருபத்துநான்கு மணிகள் இடையே இருக்கின்றன! அவை சீக்கிரம் கழிந்துவிட்டால் பிறகு காரியத்தைச் சீக்கிரம் முடித்துவிடலாம். நேரம் ஆமை வேகத்தில் நகர்ந்தது. ஒரு நிமிஷம் ஒரு யுகமாக இருந்தது அவனுக்கு.

அவன் தனக்குள்ளாகவே திரும்பத் திரும்பக் கேட்கலானான்: ''நாளை இத்தனை நேரத்திற்கு ஒயிட்பீல்ட் துரை இந்த உலகத்திலிருந்து விடை பெற்றிருப்பார்! அப்புறம் சரத்சந்திரன் . . . .?''

அந்தக் கேள்விக்குப் பதில் அவனுக்கே தெரியவில்லை. கண்களை இறுக முடிக்கொண்டு வெகு நேரம் யோசித்தான். அவன் கதி என்ன ஆகுமோ? யார் கண்டார்கள்?

ஒருவேளை இந்தத் தூக்கமற்ற இரவே அவனுடைய கடைசி இரவாக இருந்துவிடுமோ?

ஆ, அதை நினைத்தபோது சரத்சந்திரன் உடல் நடுங்கிற்று. மயிர் சிலிர்த்தது. கடைசி இரவா? இத்தனை நாளும் எந்த அழிவற்ற கொள்கைக்காக அவன் உழைத்தானே, அது அவனுக்குச் சபலமாகவில்லை! ஆசா அவனைக் காதலிக்கவில்லை என்பதை அவன் தெரிந்துகொண்டுவிட்டான்! இனி அவன் இருந்தென்ன? இறந்தென்ன? 'ஆசா! பிரேமையின் பொக்கிஷமே!' 'இன்றிரவே கடைசி இரவாக இருந்தால் ஏன் ஒருதரம் ஆசாவைப் போய்க் கண்குளிரக் கண்டு களித்துவிடலாகாது? கட்டாயம் ஒரு தரம்......'

சீ! என்ன யோசனைகள்; கற்பனைக் குதிரை வேகமாகப் பறந்து எங்கெங்கேயோ செல்லுகிறதே! மனத்தை வேறு விஷயங்களில் திருப்ப, சரத் பெருமுயற்சி செய்தும் அது அவனுக்கு அசாத்தியமாயிற்று. அவன் தன்னைத்தானே கேட்கலானான்: "யாருடைய காதல் நிஷ்பலனாகப் போய்விட்டதோ அதைப்பற்றித் திரும்பத் திரும்ப என்ன யோசனை?" வேறு விதம் பதில் கிடைத்தது: "இருப்பது இன்றைக்கு ஒரே இரவு. இதைத் தவறவிட்டால் பிறகு........அவன் உயிர் பிழைப்பது என்ன நிச்சயம்? எனவே வெறும் தரிசனம் மட்டும் கிடைத்தால் போதும்! போய்ப் பெற்றுக்கொண்டு வா. அவளைச் சந்திப்பது கூட அவசியமில்லை. ஆனால் இதில் என்ன இத்தனை இன்பம்!"

கடலின் சுழி அலைகளைப்போல் அவன் மனத்தில் பற்பல எண்ணங்கள் எழுந்து கொந்தளித்தன.

கடைசியில் அவன் கால்கள் அவனை அறியாமலே எழுந்தன. பர்லாபாக் செல்லும் டிராம் வண்டியில் அவன் ஏறி உட்கார்ந்தான்.

ஆசாவின் வீட்டிற்கு அடுத்துப்போகும் தெருவில் சந்தடி எல்லாம் அடங்கி நிர்மானுஷ்யமாகக் காணப்பட்டது.

தன் தலையை மேலே உயர்த்திப் பார்த்தபோது ஆசாவின் வீட்டு மாடி அறை ஒன்றில் விளக்கு எரிந்துகொண்டிருந்ததைக் கண்டான்.

வீட்டு வாசலில் ஒரு பட்டாணியன் நின்றுகொண்டு மேல் மாடி ஜன்னலையே பார்த்துக்கொண்டிருந்தால் எந்தப் போலீஸ்காரனாவது விட்டுவிடுவானா? ஒரு போலீஸ் சேவகன் அவ்விடம் தோன்றி வழக்கமாய் உபயோகிக்கும் அதட்டலான குரலில், "யாரடா அவன்? இங்கே நின்றுகொண்டு என்ன செய்கிறாய்? உனக்கு இங்கே என்ன வேலை?" என்று கேட்டான்.

''வேலையா, ஒன்றும் இல்லையே!''

''பின்னே, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!''

''சரி, சரி, இதோ போகிறேன் ஐயா!''

இதற்குள் ஆசாவின் வீட்டிலிருந்து விலாசன் வெளியே வந்ததை அவன் கண்டான். இத்தனை நேரம் ஜன்னலின் வழியாக வந்துகொண்டிருந்த விளக்கொளியும் நின்றுவிட்டது. ஒடிந்து போன நெஞ்சுடனும், அதையும்விட ஒடிந்துபோனவை போலுள்ள பலமற்ற கால்களோடும் சரத்சந்திரன் அவ்விடம் விட்டு மெள்ள நடந்துசென்றான்! அவனுக்கு உலகமே சூன்ய மாகக் காணப்பட்டது.

வெகு தூரத்தில் யாரோ ஒரு பிச்சைக்காரன் 'ஓ' வென்று அழும் சத்தமும், ஒரு நாய் அவனைப் பார்த்துக் குறைக்கும் சத்தமும் லேசாக அவன் காதுகளுக்கு எட்டின!

என்னே இந்த உலகம்!

* * * *

ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் துரையைச் சம்ஹாரம் செய்ய வேண்டிய நபர்கள் அன்றிரவை எப்படித் தூக்கமில்லாமல் கழித்தார்களோ அதே விதம் ஒயிட்பீல்ட் துரையும் அன்றிரவைத் தூக்கமில்லாமலே கழித்தார்.

தம்முடைய அறையில் உட்கார்ந்து அவர் எதையோ எழுதிக் கொண்டிருந்தார்.

அறையில் கதவுகள் மூடப்பட்டிருந்தன. ஜன்னல்களின் மீது தொங்கவிட்டிருந்த திரைகளுங்கூடச் சற்றும் விலகாமல் மூடியப்பட்டிருந்தன. வெளி உலகத்துடன், தாம் ஒரு விதத்தி லும் சம்பந்தம் வைத்துக்கொள்ள விரும்பாதவர்போல் காணப் பட்டார் ஒயிட்பீல்ட்!

மாலையில்தான் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து அவருக்கு டெலிபோன் மூலம் அழைப்பு வந்தது. காரணம் அவருடைய மனைவி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்ததால்தான். அவருடைய மனைவிக்குச் சாமீப காலமாகச் சித்தப்பிரமை ஏற் பட்டிருந்ததால் அவள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தாள். ஆஸ்பத்திரியில் வேலை செய்து வந்த இரு தோட்டக்காரர்களை அவள் சம்மட்டி கொண்டு பலமாக அடித்துவிட்டாள் என்றும், அவ்விருவருக்கும் பலத்த காயம் என்றும் தெரியவந்தது. எனவே ஒயிட்பீல்ட் துரை கோர்ட்டிலிருந்து வந்ததும் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். இதற்குள் அவருடைய தறுதலை மகன் நன்றாய்க்

குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து, சமையல்காரனுடன் சண்டை போட ஆரம்பித்தான். வீட்டிலுள்ள பால் தயிர் முதலியவை களைக் கீழே கொட்டிவிட்டு அவன் எங்கேயோ கிளம்பிவிட்டான்.

எனவே குடும்பக் கவலைகளினால் தொல்லையடைந்த ஒயிட் பீல்ட் துரை வெளி உலகத்தின் காற்றைக்கூடச் சுவாசிக்க விரும் பாமல் தம் உலகமான அந்த அறையிலேயே அடைபட்டுக் கிடந் தார். அவருக்கு மனக்கவலை அதிகமாய்விட்டால் உடனே பேனாவை எடுத்துக்கொண்டு தம் எழுத்து வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்து விடுவார். இந்த இரவிலும் அவர் கட்டுரைகளை எழுதிய வண்ணம் இருந்தார்.

சித்தப்பிரமை கொண்ட தம்முடைய மனைவியைப் பற்றிய கவலை ஒருபுறம்; அடங்காமல் திரியும் போக்கிரியான தம் மகனைப்பற்றிய சிந்தனை மற்றொரு புறம்; இவைகளுக்கெல்லாம் மேலாக அன்று அவர் நிரபராதிகளான இளைஞர்களை அரசாங்கச் சட்டங்களுக்கு உட்பட்டுக் கடுமையாகத் தண்டிக்க நேரிட்டதை எண்ணி மனங் கலங்கினார். அவ்விளைஞர்கள் செய்த குற்றந்தான் என்ன? ராஜத் துரோகமா? தேச விடுதலைக்காக அவர்கள் தங்கள் உயிரைப் பணயமாக வைத்துத் துணிச்சலாக வேலை செய்தால் அது ராஜத் துரோகம் ஆகிவிடுமா? தம்முடைய மகன் அடங் காமல் திரிவதற்குத் தண்டனை யார் கொடுப்பார்கள்? தம் மனைவி பைத்தியத்தால் பீடிக்கப்பட்டுத் தோட்டக்காரர்களைப் படுகாயத் திற்குள்ளாக்க வில்லையா? அவளை மட்டும் ஏன் தண்டிக்கக் கூடாது? தேசவெறி கொண்ட அவ்விளைஞர்களுக்கும் தாம் பலாத்காரப் பாதையில் செல்லுவதுதான் சிறந்தது என்று எண்ணம். அதுவும் ஒருவிதப் பைத்தியமே ஆகும்! பின் அவர் களையும் ஏன் மன்னித்துவிடக்கூடாது? ஒருவேளை மனைவி மீதிருந்த பிரேமையினாலா அவளைத் தண்டிக்க வில்லை? இவ்விதக் கேள்வி களுக்குப் பதில் சொல்லுவது சாத்தியமே இல்லை.

மேற்சொன்ன விசாரங்களினால் ஒயிட்பீல்ட் துரைக்கு எழுதுவதிலும் கவனம் செல்லவில்லை. மனத்தை ஒரே நிலையில் வைத்திருக்க அவர் அரும்பாடு பட்டும் முடியவில்லை.

அவர் அப்போது எழுதிக்கொண் டிருந்த புஸ்தகம் அவருடைய முந்திய புஸ்தகங்களைக் காட்டிலும் மிகவும் கவர்ச்சி யுள்ளதாக இருக்கவேண்டும். சம்பவங்களும் மிகவும் சந்தோஷ கரமாக இருத்தல் வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அவர் கற்பனைகளையும் நடையையும் எளியனவாக அமைத்துக்கொண்டே

போனார். அவர் எழுதிக்கொண்டிருந்த புதிய புஸ்தகத்தின் பெயர் "சுதந்தரத்தின் அடிமைகள்." அவர் அன்று எழுதிய அத்தியாயத்தின் பெயர் "அரசியல் கொலையாளிகளுடைய மனஸ் தத்துவம்" என்பதே ஆகும்.

அதை எழுதிக்கொண்டிருந்த அதே ஓயிட்பீல்ட் துரையை இன்னும் இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் அரசியல் கொலைஞர்கள் குண்டு வீசிச் சுடுவார்கள் என்ற மகத்தான உண்மையை அவர் எப்படி அறிவார்?

வாழ்க்கையில் தன்னால் சாதிக்க முடியாதவைகளை எழுத்தாளன் தன் நூல்கள் மூலம் செய்து காட்டுகிறான். அரசியல் பலாத்காரக் கொள்கையை உபயோகிப்பவர்களை அதிகமாகத் தண்டிக்க அவர் விரும்பவில்லை. எனினும் அரசாங்கத்தாரின் சட்டங்களுக்கு உட்பட்டு அவர்களைத் தண்டிக்க வேண்டியதாயிற்று. எனவே அரசியல் குற்றவாளிகளின் மனஸ் தத்துவத்தைப் பற்றி அவர் தம் புஸ்தகத்தின் மூலம் வெளியிடலானார். மெய்ம்மறந்து அவர் எழுதிக்கொண்டிருந்தபோது மணி இரண்டு அடித்தது. கடிகாரத்தைப் பார்த்து மணியை அறிந்ததும் அவர் ஒரு கொட்டாவி விட்டார். மேஜையின்மேல் கிடந்த பல தாள்களையும் ஒன்று சேர்த்து மேஜையின் டிராயரில் வைத்துப் பூட்டினார். பிறகு ஜன்னல் அருகே நின்றுகொண்டு தெருவைப் பார்த்தவண்ணம் எதையோ யோசித்துக்கொண்டு வெகு நேரம் நின்றிருந்தார். பிறகு மணி இரண்டரைக்காக ஒரு தரம் அடித்ததும் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டார்.

* * * *

சனிக்கிழமை மாலை கோர்ட்டிலிருந்து வந்ததும் அவர் டெலிபோனிடம் சென்று எல்ஸீயின் வீட்டு நம்பரைத் திருப்பினார். பிறகு கேட்டார்:

"ஹலோ எல்ஸீ?"

ஆனால் எல்ஸீயின் குரலுக்குப் பதிலாகச் சமையல்காரியின் குரல்தான் விடை பகன்றது. எல்ஸீ ஏதோ வாங்குவதற்காகக் கடைத்தெருவுக்குப் போயிருக்கிறாள் என்று தெரிந்தது.

குளித்தவுடன் ஆடைகளை அணிந்துகொண்டு மறுபடியும் ஒரு தரம் அவர் டெலிபோனிடம் போய்ப் பேசினார்:

"எல்ஸீ வந்தாளா இல்லையா?"

"ஆம்; எல்ஸீயேதான் பேசுகிறேன்."

''எல்ஸீ, இன்று சனிக்கிழமை அல்லவா?''

''தெரியும்; நான் உங்களைத்தான் வழிபார்த்துக்கொண்டிருக்கிறேன்; எப்போது வருகிறீர்கள்?''

''டென்னிஸ் கிளப்பிற்குப் போய்விட்டு உடனே உன்னிடம் வர வேண்டியதுதான்.''

''நல்லது; நான் எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன்; சீக்கிரம் வாருங்கள்.''

இரண்டு மூன்று மணி நேரம் கழித்து ஒயிட்பீல்ட் துரை எல்ஸீயிடம் சென்றபோது அவள் அவருக்காக உண்மையாகவே வழிபார்த்துக்கொண்டிருந்தாள் என்பது தெரியலாயிற்று.

அவர் ஒரு சோபாவில் போய் உட்கார்ந்ததும் எல்ஸீ அவரை நோக்கி, ''விஸ்கி கொண்டு வரட்டுமா அல்லது பிராந்தி வேண்டுமா?'' என்று கேட்டாள்.

ஒயிட்பீல்ட் சோபாவின்மீது கால்களை நீட்டிக்கொண்டே, ''இன்றைக்கு எனக்கு விஸ்கீ வேண்டாம், பிராந்திதான் வேண்டும்; வழக்கத்தைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாக ஊற்றிக் கொடுக்கவேண்டும். இன்று நான் இந்த உலக ஞாபகங்களை எல்லாம் மறந்து கொஞ்ச நேரம் உல்லாசமாக இருக்க விரும்புகிறேன்'' என்றார்.

''என்னைக்கூட மறந்துவிடுவீர்களோ?''

''எல்ஸீ, இன்று எனக்குப் பதிலாக ஒரு யுவன் இங்கு உன்னுடன் பேசிக்கொண்டிருப்பானேயாகில் அவன் ஒருவேளை உன்னைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பான். எனவே நீ கேட்ட கேள்விக்கு, 'எல்ஸீ, நான் உன்னை எப்படி மறப்பேன்?' என்று கூறியிருக்க முடியும். நானோ ஒரு யுவன் அல்ல. மேலும் ஒரு யுவனைப்போல நடித்து உன்னை ஏமாற்றவும் நான் தயாராக இல்லை. பொய் வார்த்தைகளைப் பேசியதால் நீ திருப்தி அடைவாயாகில் நானும் ஏதேதோ சொல்ல முயல்வேன். நான் உன்னிடம் அடிக்கடி வருவது உன் காதலைப் பெறுவதற்காக அல்ல. ஆனால் ஒடிந்துபோன என் நெஞ்சைச் சற்றுச் சரிப்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடனேயே இங்கு வருகிறேன். யௌவனப் பிராயத்தில் மனிதன் ஸ்திரீயைத் தன் சரீர சுகத்திற்காக மட்டும் விரும்புகிறான். ஆனால் வயோதிகத்தில் அவனுக்கு மனச்சாந்தியளிப்பது ஸ்திரீயின் சகவாசமேயாகும். எனவே ஒரு தருணனைப் போலவே ஒரு வயோதிகனுங்கூட இளம் பெண்களைத் தன்னுடன் நட்பு

கொள்ளச் செய்ய ஆசைப் படுகிறான். ஒரு தாசிப் பெண்ணின் சுய சரித்திரத்தில் நான் படித்திருக்கிறேன்: அவளைக் காதலித்த யுவர்களைக் காட்டிலும், வயோதிகர்களே அவள்மேல் உண்மையில் அன்பு கொண்டவர்களாக இருந்தனராம். அது மெய் என்பதே என் துணிபு. வயோதிகர்கள் வாழ்க்கையின் பல துறைகளிலும் நன்கு அனுபவம் பெற்றவர்கள். எனவே எந்த விஷயத்திலும் அவர்கள் ஒருவித முடிவுக்கு வருவது சுலபம். மேலும் வெறும் சிற்றின்பமே அவர்களுக்கு இன்பம் பயக்காது. எனவே அவர்கள் ஸ்திரீகளைக் கெட்ட பார்வையுடன் நோக்காமல் அவர்களைச் சாந்தி தரும் ஒரு கோயிலாகப் பாவிக்கின்றனர். என்னைப் போன்ற வயோதிகர்களுக்குக் கவலைகள் பல. எனவே தன் கவலைகளையெல்லாம் போக்கிக்கொள்ள ஒருவன் கோமள மான ஒரு பெண்ணின் சேர்க்கையை விரும்புகிறான். நான் இங்கு வருவதன் நோக்கம் உனக்கு நன்கு புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். என் கவலைகளைப் போக்கிக்கொள்ளவேதான் இவ்விடம் வருகிறேன். அதிலும் இன்று நான் என்னையே மறந்துவிட்டு இருக்க ஆசைப்படுகிறேன். ஆகையால் ஒரு பைத்தியத்தின் கணவன், ஒரு போக்கிரியின் தகப்பன், ஒரு குடும்பத்தின் தலைவன், ஊருக்கு நியாயம் வழங்கும் ஒரு நியாயாதிபதி என்னும் இவ்விஷயங்களை யெல்லாம் மறந்து உன்னுடனேயே சற்றுச் சாந்தத்துடன் இருக்க விரும்பு கிறேன் .......''

''அன்பரே, நீங்கள் ஏன் இன்று இவ்வளவு பேசுகிறீர் கள்?''

இவ்விதம் சொல்லிக்கொண்டே எல்ஸீ ஒயிட்பீல்டின் கழுத்தைச் சுற்றிக் கையைப் போட்டுக்கொண்டாள். பிறகு தன் உதடுகளைக் குவித்து, அவர் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தாள்.

ஆனால் ஒயிட்பீல்ட் அவளுக்குப் பதில் முத்தம் தரவில்லை.

* * * *

சுமார் ஒன்றரைமணி நேரம் கழிந்தது.

எல்ஸீ வீட்டு மாடிப்படியின் வளைவான இடத்தில் பகல் நேரத்திலேயே சற்று இருட்டாக இருக்கும். அன்றோ அமாவாசை இருட்டு. கேட்கவா வேண்டும்? அந்தக் கும்பிருட்டில், ஒரு மூலையில் பட்டாணிய யுவன் ஒருவன் ரிவால் வரைத் தயாராகப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

எல்ஸியிடம் விடைபெற்றுக் கொண்டு ஒயிட்பீல்ட் துரை புறப்படும் சத்தம் கேட்டது. சரத்சந்திரனின் உடல் முழுதும் வேர்த்தது; மயிர் சிலிர்த்தது. கைகளில் பலம் குறைந்து கொண்டே வந்தது.

தலையை நிமிர்த்திக் காதை மாடி அறையின் பக்கமாகச் சாய்த்துச் சரத்சந்திரன் உற்றுக் கேட்டுக்கொண் டிருந்தான்.

''போய் வருகிறேன், எல்ஸீ!''

''போய் வாருங்கள். உங்கள் கைத்தடியை எடுத்துக் கொண்டீர்களா?''

சரத்சந்திரன் யோசித்தான்: 'இவன் கையில் தடி வேறு எடுத்து வருகிறானா? சரி, அப்போது ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்.'

''எடுத்துக்கொண்டேன் எல்ஸீ, தடியை; போய் வரட்டுமா?''

''நானும் உங்களுடன் கீழே வாசல் வரையிலும் வரட்டுமா? பாதை இருட்டாக இருக்கிறதே?''

சரத்சந்திரன் தனக்குள்ளேயே எண்ணலானான்: 'எதற்காக நீயும் வருகிறாய்? அவனுடன் சேர்ந்து சாகவா?'

''வேண்டாம், வேண்டாம்; நான் தினம் தனிமையில் இந்தப் பாதையில் நடந்து போகவில்லையா என்ன?'' என்று ஒயிட்பீல்ட் பதில் அளித்தார்.

''சட்டைப் பையில் 'டார்ச் லைட்' இருக்கிறதா?''

''ஓ, இருக்கிறது.''

'டார்ச் லைட்' என்றதுமே சரத்சந்திரன் வயிற்றில் பகீர் என்றது; மற்ற எல்லா விஷயங்களையும் முன் கூட்டியே ஊகித்து அறிந்தவன் இந்த 'டார்ச் லைட்' விஷயத்தை மட்டும் யோசிக்கவில்லை. விதி கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணிய நூலினால் மனிதனை இழுத்துச் செல்லுகிறது. அதை அவன் மீற முடியாது. ஆனால் சமயோசித புத்தியையுடைய சரத்சந்திரனுக்கு மற்றோர் உபாயம் தோன்றியது. அவன் கூடியமட்டும் சுவருடன் ஒட்டிக்கொண்டு, டார்ச் லைட்டின் ஒளி தன்மேல் படாதவாறு நிற்க முயன்றான்.

ஒயிட்பீல்ட் துரை மாடியின் இரண்டு படிகளைக் கடந்து விட்டார். மறுபடியும் எல்ஸீயின் பக்கமாகத் திரும்பி ''போய் வருகிறேன், அன்பே!'' என்றார்.

''போய் வாருங்கள் அன்பரே!''

காலில் அணிந்துள்ள பூட்ஸ் டக் டக் என்று சத்தம்போடக் கைத்தடியை ஊன்றிக்கொண்டு ஒயிட்பீல்ட் மறுபடி இறங்கலானார். சரத்சந்திரன் நிமிர்ந்து நின்றான். தன் கைத்துப்பாக்கியின் விசையில் விரலை மாட்டிக்கொண்டு அவன் சுடத் தயாராக நின்றான்.

மாடிப்படிகள் வளைந்து திரும்பும் இடத்திற்கு ஒயிட்பீல்ட் வந்ததும் சரத்சந்திரனின் விரல் விசையை இழுக்கவே துப்பாக்கி வேகமாய்ச் சுட்டது.

ஐயோ இது என்ன! காதுகள் பிளந்து போவதைப் போன்ற பேரிடியா?

''டபார்!''

பூமி அதிர்ந்தது.

மாடிப்படிகள் கிடுகிடுத்தன.

ஒயிட்பீல்ட் துரைக்குப் பூமியே சுழல்வதைப் போல் தோன்றியது!

அந்த அரை விநாடிக்குள்ளாக அவர் மனத்தில் ஆயிரம் எண்ணங்கள் தோன்றி மறைந்தன. அவர் ''ஹோ'' என்று அலறினார். ஆனால் கீழே விழவில்லை! அவர் பிடித்துக்கொண்டு அடித்த டார்ச் லைட்டின் பிரகாசமான ஒளியில் சரத்சந்திரனின் கண்கள் கூசின. வெளிச்சம் வந்த திக்கைக் குறியாக வைத்துக்கொண்டு சரத்சந்திரன் மறுபடியும் சுட்டான்!

அதே கணத்தில் ரிவால்வர் பிடித்திருந்த கையின்மீது ஒயிட்பீல்டின் பலத்த தடி அடி விழவே, அந்தக் கைத்துப்பாக்கி தூரத்தில் போய் விழுந்தது. இருட்டில் அது எங்கு நழுவி விழுந்ததோ சரத்சந்திரனுக்குத் தெரியவில்லை.

இரண்டாவதாகச் சுட்ட குண்டு கட்டாயம் ஒயிட்பீல்ட் துரையைச் சமாப்தி செய்திருக்கும் என்பதில் சரத்சந்திரனுக்கு கொஞ்சங்கூடச் சந்தேகம் தோன்றவில்லை. காரணம் ஒயிட்பீல்ட் துரை 'ஓ' என்று அலறினார்; பிறகு அவருடைய சரீரம் கடகட வென்று உருண்டு மாடிப்படி வழியாக வந்ததையும் அவன் கண்டான். ஒயிட்பீல்ட் துரை இன்னும் உயிருடன் இருக்க முடியுமா?

அதே கணத்தில் எல்ஸி மாடியிலிருந்து இறங்கி வந்து உச்சி வானமே இடிந்து விழுவதைப்போல் 'கீச்' என்று அலறினாள்.

சரத் ஒரே குதியில் மாயமாக மறைந்தான்.

இரண்டு பர்லாங்குகளுக்கு அப்பால் ஒரு மோட்டார் தயாராக நின்றுகொண்டிருந்தது. அதில் சரத்சந்திரன் ஏறிக் கொண்டதும் வண்டி மாயமாகப் பறக்க ஆரம்பித்தது.

சரத்சந்திரனுக்கும் அந்த வண்டியின் டிரைவருக்கும் தாங்கள் தப்பிவிட்டதாகவே எண்ணம் உண்டாயிற்று. ஆனால் விதி அவர்களை வேறு பாதையில் இழுத்துச் சென்றது.

அந்த ரஸ்தாவில் தற்செயலாக இரண்டு போலீஸ் சேவகர்கள் பாராக் கொடுக்க வந்திருந்தனர். வண்டி அதிக வேகமாகப் பறந்து போவதையும், நம்பர்ப் பலகையை எடுத்து விட்டதையும் அவர்கள் கண்டனர். வண்டியின் மேல்கூரை பிரிக்கப்பட்டிருந்ததை அவர்கள் அடையாளம் வைத்திருந்தனர். வழியில் வேறு யாராவது போலீஸ்காரர்கள் இருப்பின் அவர்களுக்கு அடையாளம் தெரிவிப்பதற்காக அந்தப் போலீஸ்காரர்கள் தங்கள் ஊதுகுழலை ஊதினார்கள்.

டிரைவரின் காதுகளில் அந்தச் சத்தம் கேட்டதும் அவன் வண்டியை இன்னும் அதிக வேகமாய் விட ஆரம்பித்தான். ஒரு வேளை போலீஸார் தங்களைப் பின்பற்றி வந்தால் என்ன செய்வது என்று இருவரும் கவலைப்பட்டனர்.

"எங்கேயாவது ஓடிவிடலாம் என்றால் எவ்விடம் போவது?" என்று சரத்சந்திரன் தன் நண்பனைக் கேட்டான்.

"வண்டியைப் புனா ரோட்டில் விடுகிறேன்!"

"சரி, அப்படியே விடு."

"பம்பாயை விட்டு, முடிந்தவரையில் சீக்கிரமாக வெளியே ஓடிவிட வேண்டும்."

"ஆமாம்" என்று சரத் சொன்னதும், டிரைவர் மிகமிக வேகமாய் வண்டியை விடலானான்.

அவர்களுக்குப் பின்னால் போலீஸ் ஊதுகுழலின் சீட்டிச் சத்தம் அடிக்கடி நெருங்கி வந்துகொண்டிருந்தது.

குவீன்ஸ் ரோடு, ஸ்டான்லி பிரிட்ஜ், இந்தப் பாதையாக அவர்கள் வண்டி சென்றது. வண்டி ஹிக்கிங் பார்க் என்னும் இடத்திற்குச் செல்லுகையில் ரஸ்தா மிகவும் ஏற்றமாக இருந்தது. இரு புறங்களிலும் மரங்கள்; அந்தச் சாலைக்கு வந்ததும் — ஐயோ! வண்டி இடக்குச் செய்ய ஆரம்பித்தது.

வண்டி நின்றுவிட்டது!

டிரைவர் கீழே இறங்கி எஞ்ஜினில் ஏதேதோ செய்து பார்த்தான். ஆனால் என்ன பிரயோஜனம்? எனவே நம்பிக்கை

இழந்த குரலுடன் அவன், "காரியம் கெட்டுப்போச்சு!" என்றான்.

"இடி விழுந்தே விட்டதா?"

"பெட்ரோல் — சமாப்தி!......"

"சரி; நல்லது; உனக்குத் தோன்றும் இடத்திற்கு நீ போய் விடு. எனக்குத் தோன்றும் இடத்திற்கு நான் ஓடிவிடுகிறேன்."

இருவரும் வண்டியிலிருந்து கீழே குதித்தனர்.

டிரைவர் எந்தப்பக்கமாய் ஓடினான் என்பது சரத்சந்திர னுக்குத் தெரியவில்லை.

சரத்சந்திரன் நின்ற இடத்திலேயே நின்று சற்று யோசித் தான். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல் திடீரென்று நேபியர்ஸ் ரோடு வழியாக ஓடலானான்.

விலாசனின் பங்களாப் பக்கமாக அவன் சென்றபோது அதே சமயத்தில் பங்களாவிலிருந்து ஒரு டாக்ஸீ வெளியே வருவதைக் கண்டான்.

விலாசன்தான் எங்கேயாவது வெளியில் கிளம்பி உள்ளானோ என்ற ஐயத்தினால் அவன் உரத்த குரலில், "விலாஸ்! — ஏ விலாஸ்!" என்று கூவலானான்.

விலாசன் "ஏன்?" என்று மறுமொழி பகர்ந்தது என்னவோ உண்மைதான். ஆனால் அவன் காரில் இல்லை; பங்களா வாசலில் நின்றுகொண்டிருந்தான்.

சரத் நினைத்தபடி விலாசன் வெளியே போகப் புறப்பட வில்லை. ஆனால் வெளியே இருந்து அப்போதுதான் டாக்ஸீயில் வந்து பங்களாவில் இறங்கியிருந்தான்!........

சரத் தோட்டத்திற்குள் நுழைந்தான். அவனுடைய பட்டாணிய உடையைப் பார்த்துப் பிரமித்த விலாசனுக்குச் சரத் உடனே தான் சரத் என்பதை வெளியிட்டான். அவன் விலாசனின் கையைப் பிடித்துக்கொண்டே, "விலாஸ், நான் பயங்கரமான சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன்; எனக்கு நீ உதவி செய்வாயா?" என்று கேட்டான்.

"யார், சரத்சந்திரனா?"

"ஆமாம்; ஜல்தி உன் வண்டியை எடு!"

"ஐயோ! என் வண்டி ஓர்க் ஷாப்பில் ரிபேருக்கு அல்லவா போயிருக்கிறது! இது என்ன வேஷம்? நீ ஏன் இப்படிக் காப்ரா அடைந்து காணப்படுகிறாய்? என்ன சமாசாரம்?"

"எல்லாவற்றையும் சொல்லுகிறேன். ஆனால் இப்போது மிகவும் அவசரம்! நான் போலீஸார் கையில் பிடிபடுவதைக் காட்டிலும் சாக விரும்புகிறேன். என்னை உன்னால் முடிந்த அளவு ஜல்தியாக எங்கேயாவது அழைத்துச் செல். பம்பாயை விட்டு நான் வெகு சீக்கிரம் வெளியேறிவிட வேண்டும். இல்லையேல் உன் கையாலேயே என்னைக் கொன்றுவிடு."

"சரி; என் தகப்பனாரின் வண்டி இருக்கிறது. அதை எடுத்துக்கொள்ளுவோம்."

"ஸபாஷ்! ஜல்தி."

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு கோவா செல்லும் ரோட்டில் விலாசன் மோட்டார் மணிக்கு ஐம்பது மைல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது.

# அத்தியாயம் 22

சீரத்சந்திரனுடன் விலாசன் இரவோடு இரவாக மோட்டார் காரை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டான் அல்லவா? அன்றைக்கு மறுநாள் காலையிலிருந்து வானம் பொத்துக்கொண்டு மழை கொட்ட ஆரம்பித்தது. மழை என்றால் சாமானியமான மழையல்ல! அடைமழை—இடைவிடாது பொழிய ஆரம்பித்தது. நகரம் முழுவதையும் அலம்பி எடுக்க வேண்டும் என்று வருண பகவான் எண்ணியிருந்தார் போலும்! தெருவில் நடக்க முடியாதபடி ஜலம் பிரவாகம் எடுத்துக்கொண்டது. இடுப்புவரையில் ஜலத்தில் வண்டிகள் போவது அசாத்தியமாகையால் போக்குவரத்துக்கள் நின்றன. டிராம் தண்டவாளங்கள் அங்கங்கே பெயர்ந்து போயிருந்தமையால் டிராம் விடுவதும் முடியாத காரியம் ஆயிற்று. பட்டணத்தைச் சுற்றியுள்ள பேட்டைகளில் இருக்கும் ஜனங்களுக்கும் டவுனிலுள்ளவர்களுக்கும் சம்பந்தம் அறவே அற்றுப் போயிற்று!

மரங்களின் கிளைகளின்மேல் குடியிருந்த பக்ஷி ஜாலங்களெல்லாம் இந்த அடைமழையினால் மிகவும் பாதிக்கப்பட்டன. அவைகள் தங்கள் சரீரத்தைக் குறுக்கிக்கொண்டும் உடலிலுள்ள ரோமங்களைச் சிலிர்த்துக்கொண்டும், மழைத் தாரையிலேயே உட்கார்ந்திருந்தன. நடு நடுவில் அவைகள் கொஞ்ச தூரம் பறந்து சென்று, பறக்க முடியாததால் திரும்பி மறுபடியும் மரங்களிலேயே வந்து உட்கார்ந்துகொள்ளும். சிறகுகளைப் படபடவென்று அடித்து ஈரம் போக்கிக் கொள்ளவும் அவைகள் தவறுவதில்லை. சில குருவிகள் குளிர் தாங்காமலோ என்னவோ மாண்டு போய் ரஸ்தா ஓரங்களில் கிடந்தன! பாவம், எளிய பிராணிகளை எவன் கவனிப்பான்? அவைகளுக்கு என்ன கஷ்டமோ?

நித்ய கர்மானுஷ்டானங்களை ஒழுங்காகச் செய்து வந்தவர்களுக்கு இந்த அடைமழை பெரிதும் பாதகமாயிற்று. அவர்கள் ஒரு வேலையும் நடக்காமல் திண்டாடினார்கள்.

சூரியன் இருக்கிறதோ இல்லையோ என்று சந்தேகிக்கும் நிலைமையில் ஆகாயம் முழுவதும் கறுப்பான மேகங்கள் ஓர் அங்குல இடங்கூட மிச்சமில்லாமல் அடைத்துக்கொண்டுவிட்டன. எங்கே பார்த்தாலும் ஒருவிதமான சூன்யமே காணப்பட்டது. மாடுகள் கன்றுகள் இவை குளிர் தாங்காமல், அசைபோடுவதையும் நிறுத்திவிட்டு அசையாது நின்றுகொண்டிருந்தன! பட்டணம் களையிழந்து காணப்பட்டது.

மூன்று நாட்களாகியும் வானம் திறக்கவில்லை! ஆனால் முன்போல் கனத்த மழை பெய்யாமல் இப்போது தவிட்டுத் தூற்றல் போட்டுக்கொண்டிருந்தது.

தெருக்களில் தண்ணீர் மட்டம் சற்றுக் குறைந்தது. வண்டிகள் நடமாடின.

ஜனங்கள் தங்கள் வலது கையால் இடுப்புத் துணியை மேலே தூக்கிக்கொண்டு, சிறு குழந்தைகளைப் போல் தண்ணீரில் மெதுவாக நடந்து சென்றனர். எனினும் சூரியன் தென்படவே இல்லை!

தாதாஸாஹிபுக்கு இன்று ஆபீஸ் இல்லை.

அவர் தம் சேவகனைக் கூவி அழைத்து, "விலாசன் வந்துவிட்டானா?" என்று கேட்டார்.

சேவகன் எதிர்மறை விடைக்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

தாதாஸாஹிப் வாயால் ஏதோ முனகிக்கொண்டே மறுபடியும் தம் ஆபீஸ் வேலையில் ஈடுபட்டார்.

கொஞ்ச நேரம் கழிந்ததும் அவர் தம் மனைவியைக் கூவி விலாசனைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்துவிட்டார். விலாசன் சனிக்கிழமை இரவோடு இரவாகச் சொல்லிக் கொள்ளாமல் சென்றதற்கும் நாட்கள் மூன்றாகியும் இன்னும் திரும்பி வராததற்கும் காரணம் சுதேஷ்ணாபாய்தான் என்று பொருள் படும்படி அவர் பேசலானார்.

அவருடைய பத்தினி வழக்கம்போலவே, அவருடைய பேச்சை லக்ஷ்யம் செய்யாமல் பேசாமல் இருந்தாள்.

மத்தியான்னச் சாப்பாடு ஆகிவிட்டது. விலாசன் இன்னும் வந்தபாடில்லை. டெலிபோன் மூலமாகவும் அவன் விஷயமாக ஒன்றும் தெரியவில்லை. சுதேஷ்ணாபாய்க்குக் கவலை ஏற்படலாயிற்று. விலாசன்மீது தான் மிகவும் கோபப்படுவதாகப்

பாவனை செய்துகொண் டிருந்த தாதாஸாஹிப்புக்கும் விலாசன் விஷயமாகக் கவலை ஏற்பட ஆரம்பித்தது.

மணி நான்கு அடித்துவிட்டது. விலாசன் வரவில்லை. அந்த விசித்திர தம்பதிகளிடையே விலாசனைப்பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் அபிப்பிராய பேதமே தோன்றும். ஆனால் இன்றோ அதிசயமாக இருவரிடையேயும் ஒற்றுமை காணப் பட்டது. அவர்கள் இருவருமே விலாசனைப் பற்றிக் கவலைப் பட்டார்கள் — அதை வெளியிடவும் செய்தனர்! சாதாரண விஷயங்களுக்காகச் சதா சர்வகாலமும் தகராறு செய்துகொண் டிருந்த அந்தத் தம்பதிகளுக்குள் மகத்தான ஒற்றுமையும் பரஸ்பர அன்பும் இருந்ததை இன்றுதான் அவர்களுக்கு வெளி யிடச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

மனஸ்தத்துவம் மிகவும் விசித்திரமானது. ஒரே உணர்ச்சி கொண்ட இரு ஆத்மாக்களை அந்த உணர்ச்சி ஒற்றுமைப் படுத்தி விடுகிறது. காதல் மட்டும் அல்ல, சந்தோஷம், சோகம், விசாரம், ஆச்சரியம் முதலிய எல்லா உணர்ச்சிகளும், அவ்வித உணர்ச்சி கொண்ட வேறு ஆத்மாக்களை ஒன்றுகூடச் செய் கின்றன. ஈச்வர சிருஷ்டியின் ரகசியங்களுக்குள் இதுவும் ஒன்று போலும்!

சுதேஷ்ணா, மாலை டீ குடிக்கும் நேரம் வந்ததும் தன் கணவனிடம், "சமையல்காரன் டீ தயாரித்து வைத்திருக்கிறான்; சாப்பிட வருகிறீர்களா?" என்றாள்.

"வேண்டாம்; எனக்கு இன்று டீ வேண்டியிருக்கவில்லை!"

"இது என்ன கூத்து? விலாசன் இன்று விளக்கு வைக்கும் வேளையில் வந்துவிடுவான். இதற்காக ஏன் வீண் கவலைப் படுகிறீர்கள்? வாருங்கள் டீ சாப்பிட."

"கவலைப்படுவது நானா நீயா? நீ அடிக்கு ஒரு தரம் வாசலில் சென்று எட்டிப் பார்த்துக்கொண் டிருந்ததை நான் கவனிக் காமல் இல்லை!"

ஐந்து மணிக்கு டெலிபோன் ஒலித்தது. சுதேஷ்ணா கீழே சென்று டெலிபோனில் கேட்டாள். மறுபடியும் மாடிக்கு வந்து, "எங்கேயோ 'மீட்டிங்' போலிருக்கிறது. நீங்கள் ஏன் வர வில்லை என்று யாரோ கேட்கிறார்கள். 'மீட்டிங்' இருக்கிறது என்பதையே மறந்து விட்டீர்களா?" என்றாள்.

"இல்லை, இல்லை; மீட்டிங் இருப்பது எனக்குத் தெரியும். ஆனாலும் எனக்குப் போகப் பிடிக்கவில்லை. இது என்ன?

மணி ஐந்தேகால் ஆகிவிட்டதே. இன்னும் அவனைக் காண வில்லையே.''

''வருவான்; இன்று இரவு வருமுன்பே கட்டாயம் அவன் வந்துவிடுவான்.''

''நீ எனக்குத் தைரியமூட்டும் நோக்கத்துடன் ஏதேதோ உளறுகிறாயா?''

''இல்லை இல்லை; எனக்கு மனத்தில் அவ்விதம் யாரோ சொல்லுவதைப்போல் தோன்றுகிறது. இதோ கேளுங்கள்: வண்டி வரும் சத்தம்.''

தாதாஸாஹிப் உடனே எழுந்து ஜன்னலண்டை சென்று தெருப் பக்கமாக எட்டிப் பார்த்தபொழுது உண்மையிலேயே ஒரு மோட்டார் அவருடைய பங்களாவிற்குள் வந்து நுழைவதைக் கண்டார்.

சுதேஷ்ணாபாய் அவசரம் தாங்க மாட்டாமல், ''யார், விலாசன்தானே?'' என்று கேட்டாள்.

''இல்லை; இது வேறு யாரோ ஒருவருடைய வண்டியைப் போல் தோன்றுகிறது.''

மோட்டாரிலிருந்து இரண்டு போலீஸ் சார்ஜெண்டுகள் இறங்கி உள்ளே வருவதைக் கண்ட தாதா ஸாஹிப்புக்கு ஒன்றுமே விளங்கவில்லை; கைகால்கள் தாமாகவே நழுவித் தரையில் விழுந்துவிடுவதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''யார் வருகிறார்கள்?'' என்று சுதேஷ்ணாபாய் கேட்டதற்கு, தாதாஸாஹிப், ''நீ இனி இங்கே இருக்க முடியாது; கீழே இறங்கிப் போய்விடு'' என்று பதிலளித்தார்.

சுதேஷ்ணாபாய் மாடிப் படிகளை விட்டு இறங்கும் போதே எதிரில் யமகிங்கரர்களைப்போல் இரண்டு சார்ஜெண்டுகள் நுழைவதைக் கண்டு பயமும் சந்தேகமும் கொண்டு மருள ஆரம்பித்தாள். 'இவர்கள் ஏன் இங்கு வரவேண்டும்?' என்று யோசிக்கத் தொடங்கினாள்; ஒரு சிறிய இடைநேரத்தில் அவளுடைய மனத்தில் ஆயிரம் சந்தேகங்கள் உதித்தன.

சார்ஜெண்டுகள் இருவரும் தாதாஸாஹிபின் உத்தரவின் பேரில் இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டனர். ஆனால் கொஞ்சநேரம் வரையில் வாய் திறந்து ஒன்றுமே பேசவில்லை.

பிறகு அவர்களில் ஒருவர், ''எங்களை மன்னிக்கவேண்டும்; உங்கள் மனத்திற்குப் பிடித்தமில்லாத ஒரு காரியத்தைச் செய்வதற்காக நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்'' என்றார்.

மறுமொழி ஒன்றும் கூருமல் தாதாஸாஹிப் அவர்களேயே பார்த்துக்கொண்டிருந்தார்.

மற்ருெரு சார்ஜெண்ட் பிறகு பேச்சை எடுத்தார்:

"சென்ற சனிக்கிழமை இரவு உங்கள் மகன், ஜஸ்டிஸ் ஒயிட் பீல்டின் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்; எனவே போலீஸ் வாரண்டுடன் நாங்கள் அவரைக் கைது செய்ய வந்திருக்கிருேம்."

மின்னலின் தாக்குதலால் ஸ்தம்பித்துப்போன ஜீவனைப் போல் தாதாஸாஹிப் உணர்ச்சியற்ற தூணுகிவிட்டார்!

பிறகு யந்திர மனிதனைப்போல் கை கால்களை மெள்ள அசைத்துக்கொண்டே, "விலாசன்மீது எதற்காக வாரண்டு பிறப்பிக்க வேண்டும்? சொல்லுங்கள்?" என்று கேட்டார்.

"அவன்தான் கொலை செய்திருக்கிருன் என்பதற்குப் போதுமான ருசுக்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் உங்களிடம் நாங்கள் சொல்லவேண்டியது அவசியம் இல்லை. உங்கள் மகன் இங்கே இருக்கிருனு? வேறு எங்கேயாவது போயிருக்கிருனு?"

"தெரியாது."

"என்ன தெரியாது?"

"அவன் இங்கே இல்லை. அதுதான் தெரியாது என்றேன்; சனிக்கிழமை இரவிலிருந்து அவன் காணப்படவில்லை."

"வெளியே சென்றிருந்தால் எங்கே செல்வது வழக்கம்?"

"தெரியாது."

"நீங்கள் கேட்டு அறிந்துகொள்ளுவதில்லையா?"

"இல்லை."

"உங்களிடம் சொல்லிக்கொள்ளாமல் எப்படிச் செல்ல முடியும்?"

"சென்றிருக்கிருன்; அவ்வளவுதான்."

"யாருடன்கூடச் சென்ருன் தெரியுமா?"

"தெரியாது."

"நடந்தா சென்ருன்?"

"இல்லை, என் மோட்டாரில்!"

இதைக்கேட்டதும் இரண்டு சார்ஜெண்டுகள் முகத்திலும் அசடு வழிய ஆரம்பித்தது. விலாசன் பம்பாயைவிட்டு ஓடிப் போயிருப்பான் என்பது அவர்களுக்கு நிச்சயமாகப் பட்டது. இனி அவனே எப்படிக் கண்டுபிடிப்பது?

மேலே நடக்கவேண்டிய வேலை என்னவென்று தெரியாமல் அந்த இரண்டு சார்ஜெண்டுகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அப்போதே பங்களாவில் ஒரு மோட்டார் வந்து நுழையும் சத்தம் கேட்டது.

மோட்டாரின் சத்தத்தினாலும் அது ஷெட்டில் கொண்டு போய் நிறுத்தப்பட்டதனாலும் தாதாஸாஹிப், அங்கு வந்தது விலாசன்தான் என்பதை நன்கு அறியலானார். ஆனால் ஏனோ தெரியாது, விலாசனின் வருகையைச் சற்றுமுன்பு ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டிருந்த அதே தாதாஸாஹிப் இப்போது அவன் வருகையால் கலக்கமுற்றார்! அன்றைத்தினம் இரவு அவன் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் சென்றதைப்போல் மறுபடியும் சென்றுவிடலாகாதா என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. சில நிமிஷ நேரங்களுக்கு முன்பு எந்த விஷயத்தை அவர் ஆவலுடன் வரவேற்கத் தயாராக இருந்தாரோ, அதே விஷயம் அவருக்கு ஆருத்துயரத்தை அளித்தது!

ஆனால் கீழே சுதேஷ்ணாபாயின் மனப்பான்மையே முற்றும் வேறுவிதமாக இருந்தது. விலாசன் வராமையினால் கவலைப் பட்டுக்கொண்டிருந்த அவளுக்குப் போலீஸ் சார்ஜெண்டுகளின் வருகையினால் எல்லையற்ற பயம் தோன்றிற்று. அந்தப் பயத்தில் அவள் விலாசனைப்பற்றி எண்ணவே இல்லை. ஆனால் சில நிமிஷங்களில் மோட்டார் வந்து நின்று அதிலிருந்து விலாசன் இறங்குவதைக் கண்ணுற்ற அவளுக்கு முன்பு இருந்த கவலை, பயம் எல்லாம் மாயமாக மறைந்துபோய், ஆனந்தம் அளவு கடந்து ஏற்பட்டது! மனித உருவங்களில் எத்தனை வித்தியாசம் காணப் படுகிறதோ அதிலும் அதிகமாய் அவர்களுடைய மனப்பான்மையிலும் வித்தியாசம் காணப்படுகிறது!

ஆவலுடன் ஓடிப்போய் அவள், "ஏண்டா இப்படிச் சொட்டச் சொட்ட இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"பாதையில் இடைவிடாத மழை, அம்மா. அது இருக்கட்டும். நான் சூடான தண்ணீரில் முதலில் நன்றாகக் குளிக்க வேண்டும். பிறகு சூடாக எதாவது தின்பதற்கு வேண்டும்; கொதிக்கக் கொதிக்க நல்ல டீ வேண்டும்."

இவ்விதம் பேசிக்கொண்டே விலாசன் மாடிப்படிகளின் பக்கம் விரைந்தான்.

ஆனால் சுதேஷ்ணாபாய் அவனைத் தடுத்தபோது அவனுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லை! உடனே அங்கிருந்த

சேவகன் மாடிக்குச் சென்று விலாசனின் வருகையைப்பற்றித் தாதாஸாஹிபிடம் அறிவித்தான்.

"சரி, நான் கூப்பிடுகிறேன் என்று சொல்லி, அவனை உடனே இங்கு அழைத்து வா!"

இரண்டு சார்ஜெண்டுகளின் முகத்திலும் படர்ந்திருந்த ஏமாற்றமான அறிகுறிகள் மறைந்து உயிருள்ள முகங்கள் என்று சொல்லும்படி சற்றுக் களை ஏற்பட்டது.

விலாசன் மாடிப்படிகள் ஏறி அந்த அறையில் பிரவேசித்து நேரே வந்து நின்றபோதுதான் அந்தச் சார்ஜெண்டுகளின் முகத்தில் ஜீவ களை தோன்றியது. அது மட்டும் அல்ல, ஒரு படி மேலே சென்று கொஞ்சம் ஆனந்தமும் ஏற்பட்டது.

அவர்களில் ஒருவன் தாதா ஸாஹிபிடம், "உங்களிடம் 'ரேஸிங் மாடல்' மோட்டார் ஒன்று உண்டா?" என்று கேட்டான்.

கேள்விக்குத் தாதா ஸாஹிப் பதில் அளிக்கு முன்பே விலாசன் குறுக்கிட்டுச் சொன்னான்:

"இந்தக் கேள்வியை நீர் ஏன் கேட்க வேண்டும்?"

"உங்கள்மேல் பிடி வாரண்டு உள்ளது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்!"

"அப்படியானால் பிடித்துக்கொண்டு போங்கள்; அநாவசியமான கேள்விகள் எதற்காக?"

"அநாவசியம் எதுவும் இல்லை. நீங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த அந்த இடத்தில் உங்கள் கைத்துப்பாக்கியே கிடைத்திருக்கிறது. லைசென்ஸ் நம்பர் தெரிந்து, பிறகு உங்கள் விலாசமும் தெரியலாயிற்று! நீங்கள் ஓடிப் போகலாம் என்று எண்ணங்கொண்டு மோட்டாரில் சென்றபோது, தெய்வாதீனத்தால் வண்டி நின்றுபோனதும் எங்களுக்குத் தெரியும். மோட்டாரின் நம்பர்ப் பலகையை நீங்கள் எடுத்து மறைத்துவிட்டால் எங்களுக்கு விஷயம் புரியாதா என்ன? அதே மோட்டார் வண்டியில் உங்கள் கையெழுத்திட்ட பெட்ரோல் கடை ரசீதும் அகப்பட்டது! இத்தனை ருசுக்கள் கிடைத்த பிறகு உங்களைப் பிடிக்காமல் என்ன செய்வது?"

"உங்களுக்குத்தான் எல்லா விஷயங்களும் நன்றாகத் தெரியுமே! தெரியாவிட்டாலும் நீங்கள் சும்மா இருப்பீர்களா? பின் ஏன் என்னைப் பிடித்துக்கொள்ளாமல் வெறுமனே ஏதேதோ பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்?"

விலாசனின் குரலில் கடுமை காணப்பட்டது.

சில நிமிஷங்களுக்குப் பிறகு விலாசன் அந்த இரு சார் ஜெண்டுகள் புடைசூழ மோட்டாரில் ஏறிப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான்.

* * * *

ஒரு நாள் விசாரணைக்காக விலாசன் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டான்.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்தில் யார் யார் இருந்தார்களோ, அவர்களையெல்லாம் சாட்சி விசாரணைக்காக வரவழைத்திருந்தனர். அவர்களுக்குள் எல்ஸியும் ஒருத்தி என்று சொல்லத் தேவையில்லை.

விலாசனைக் கண்டதும் எல்ஸிக்குத் தூக்கி வாரிப்போட்டது! பழைய சம்பவம் ஒன்றை ஞாபகப்படுத்திக்கொள்ளுவதைப்போல் அவள் காணப்பட்டாள். பிறகு தன் கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டே அவள் தன் தலையை அசைத்தாள். விலாசன் தன்னைக் கவனிக்கிறான் என்பதும் அவளுக்குத் தெரியும்.

அவள் திடுக்கிட்டது பற்றி விலாசனுக்கு ஆச்சரியம் ஏற்படவே இல்லை.

தன்னைக் கண்டதும் யார் யார் திடுக்கிடுவார்களோ அவர்களெல்லாரும் அங்கு ஆஜர் ஆகி இருப்பது, அவர்கள் ஆச்சரியப்படுவதைத் தான் காண்பது, தான் காண்பதை அவர்கள் அறிவது, இவைகளெல்லாம் அவனுக்கு வேண்டாமல் இருக்கவில்லை. அவைகளை அவன் எதிர்பார்த்துத்தான் இருந்தான்.

அவளைக் கண்டதும் வழக்கம்போல் ஹாஸ்யம் செய்ய வேண்டும், 'மாலை வந்தனம்' என்று சொல்லவேண்டும், பிறகு கையை உயர்த்தி அசைக்கவேண்டும்-இவைபோன்ற எண்ணங்கள் அவனுக்கு உண்டாயின. ஆனால் தான் இப்போது ஒரு சுதந்தர புருஷன் அல்ல என்பதும், தான் மாஜிஸ்டிரேட்டின் முன்பு கோர்ட்டில் நிற்பதும் அவன் ஞாபகத்திற்கு வந்ததால் ஒன்றும் செய்யாமல் வாளா இருந்தான். கோர்ட்டில் உள்ள ஆத்மாக்கள் மனிதர்களாகக் காணப்பட்டாலும், அவர்கள் இந்தச் சமூகத்தினின்றும் வேறுபட்ட கந்தர்வர்களின் கூட்டமாகவே தங்களை எண்ணிக்கொள்வார்கள் என்பதையும் விலாசன் அறிந்திருந்தான்.

போலீசார்கள் அவனை எங்கே சென்று நிற்கச் செய்தார்களோ அவ்விடத்தில் அசையாது நின்றான். மாஜிஸ்டிரேட், அவனுடைய பெயர், வயது, ஜாதி, வேலை முதலியவற்றைக்

கேட்டுக் குறித்துக்கொண்டார். பிறகு மாஜிஸ்டிரேட் கேட்டார் :

''ஜஸ்டிஸ் ஓயிட்பீல்ட் துரையின்மீது நீங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகப் போலீசார் உங்கள்மீது புகார் செய்திருக்கிறார்கள். அதை மறுத்துத் தாங்கள் ஏதாவது சொல்ல வேண்டியதிருந்தால் சொல்லலாம், ஏதாவது உள்ளதா?''

தலையை அசைக்காமலேயே விலாசன் ''இல்லை'' என்று பதில் கூறினான்.

மாஜிஸ்டிரேட் அவனை எல்லையற்ற வியப்புடன் நோக்கினார்.

குற்றவாளியைக் கேட்கும் கேள்விக்கு விடையை அவன் இத்தனை நேரத்திற்குள்ளாகத்தான் சொல்ல வேண்டும் என்று ஒருவிதச் சட்டமும் இல்லை. தீர ஆலோசித்துத்தான் அவன் விடை தரப்போகிறான் என்ற எண்ணத்துடன் மாஜிஸ்டிரேட், போலீஸ் ஆபீசர்கள் இருக்கும் பக்கமாகத் திரும்பி, ''நீங்கள் இது சம்பந்தமாக இன்னும் யார் யாரை விசாரிக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறீர்களோ அவர்களையெல்லாம் ஒருவர்பின் ஒருவராக இங்கே ஆஜர்ப்படுத்துங்கள்; சீக்கிரம்'' என்றார்.

முதலில் இரண்டு போலீஸ்காரர்கள் முன்வந்தார்கள். அவர்களில் ஒருவன் பேசலானான்:

''சனிக்கிழமை இரவு சம்பவம் நடந்தபோது அந்தத் தெருவில் நான் இரவு 'பீட்'டாகப் பாரா கொடுத்துக்கொண்டிருந்தேன். பிரஸ்தாபக் கட்டிடத்தில் துப்பாக்கி வெடிச் சத்தமும், அதைத் தொடர்ந்து ஒரு ஸ்திரீயின் 'கிரீச்' என்ற சத்தமும், மற்றும், 'அடி, பிடி, அதோ ஓடுகிறான்' என்று வீட்டிலுள்ளோர் கூவின சத்தமும் கேட்டுத் திடுக்கிட்டு அவ்விடம் ஓடினேன். உள்ளே சென்று பார்க்கையில் மாடிப் படிகள் இருக்குமிடம் படு இருட்டாக இருப்பதைக் கண்டேன். அந்த இருட்டில் ஓர் ஆள் தாறுமாறாக விழுந்து கிடப்பதையும் கண்ணுற்றேன். (எல்ஸியிடம் கையைக் காட்டிக்கொண்டே) இதற்குள் இந்த அம்மாள் மாடியின் படிகள் வழியாக ஓடி வருவதையும் கண்டேன். இவள் பைத்தியம் போல் கேட்டாள்: 'இது என்ன! இவரை யார் இப்படி அகோரப்படுத்தினார்கள்?' என்று. 'எனக்கு என்ன தெரியும்?' என்றேன். பிறகு நாங்கள் இருவரும் சேர்ந்து அவரைத் தூக்கினோம். இதற்குள் இந்த அம்மாள் கையிலிருந்த 'டார்ச்' விளக்கு வேறு பக்கம் திரும்பியதால் கீழே கிடந்த ஒரு 'ரிவால்வர்' என் கண்ணில்

பட்டது. அதை நான் எடுத்துக்கொண்டேன். போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனே டெலிபோன் செய்தேன். அந்த ரிவால்வரைப் போலீஸ் ஆபீஸரிடம் ஒப்பித்தேன். (மேஜை மேல் வைத்திருந்த ரிவால்வரைக் காட்டி) அந்த ரிவால்வர்தான் இது! பிறகு ஒரு டாக்ஸி கொண்டுவந்து காயம் பட்டவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். இந்த அம்மாளும் எங்களுடன் வந்தார்.''

இரண்டாவது போலீஸ்காரன், தான் கட்டிடத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதும், அங்கே போகும் நோக்கத்துடன் ஓடியதாகவும், இதற்குள் அங்கிருந்து ஒரு மோட்டார் அதிவேகமாகப் புறப்பட்டதாகவும் சொன்னான். அதன்பின் கொஞ்ச தூரம் ஓடியும் பயனற்றதாகிவிட்டது. ஆனால் அந்த வண்டி வேறு பக்கமாகத் திரும்புகையில், தெரு விளக்கின் வெளிச்சத்தில் அதன் நம்பரையாவது தெரிந்துகொள்ளும் நோக்குடன் நம்பர்ப் பலகையைப் பார்த்தோம். அது தென்படவே இல்லை! ஆனால் அந்த வண்டிக்கு 'டாப்' இல்லை என்பது மட்டும் நன்றாக நினைவில் இருந்தது என்று சொன்னான். மேலும், வாசலில் அப்போது நின்றுகொண்டிருந்த அதே மோட்டார்தான் அது என்றும் சொன்னான். ஆனால் வண்டிக்குள் உட்கார்ந்திருந்த ஆசாமி யார் என்பது சரிவர விளங்கவில்லை என்றும், மோட்டார் ஓட்டுபவனின் தலை பின்னாலிருந்து பார்க்கையில் அதோ (விலாசனைக் காண்பித்து) அந்த மனிதர் தலை போலவே காணப் பட்டது என்றும் கூறலானான். பக்கத்தில் ஒரு பட்டாணியன் உட்கார்ந்திருந்தான் என்றும் சொன்னான்.

இதற்குமேல் விசில் அடித்ததாகவும் அதற்கு 'ஹாஸ்கின்ஸ்' ரோட்டிலிருந்து பதில் கிடைத்ததாகவும், பிறகு 'கார்டன்' ரோட்டில் வண்டி பழுதாகக் கிடந்து அகப்பட்டதாகவும் விஸ்தாரமாகக் கூறினான். பிறகு ஆஸ்பத்திரிக்குத் தானும் சென்றதையும், டாக்டர், ஜஸ்டிஸ் ஒயிட்பீல்டிற்குச் செய்த உபசாரங்களையும் ஒன்றுவிடாமல் அவன் வர்ணித்தான்.

அதன் பிறகு எல்ஸி விசாரணைக்கு அழைக்கப்பட்டாள்.

ஒயிட்பீல்ட் துரை எத்தனை மணி எத்தனை நிமிஷங்களுக்குத் தன் அறையிலிருந்து வெளிவந்தார், அவர் எப்படி மாடிப்படிகளின் வழியாக இறங்கினர், துப்பாக்கியின் சத்தம் எப்படி அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது, அவள் ஸ்தம்பித்துப் போனது, இரண்டு மூன்று நிமிஷங்களுக்குப்பின் அவள் மாடிப்படி

வழியாக இறங்கியது, அங்கே ஒரு போலீஸ்காரன் இருந்தது – இவைகளை எல்லாம் வர்ணித்துச் சொல்லவே மாஜிஸ்டிரேட் அவைகளைக் குறித்துக் கொண்டார். பிறகு எல்ஸீ பேசலானாள்:

''அதோ (விலாசனைச் சுட்டிக்காட்டி) அவர்தாம் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்.''

இத்தனை நேரம் ஒன்றையுமே கவனிக்காதது போல் உட்கார்ந்திருந்த விலாசனுக்கு எல்ஸீயின் பேச்சு, மிகவும் ஆச்சரியத்தை விளைவித்தது. அவன் முகபாவனை மாறிற்று! யாரைத் தன் உயிரைக் காட்டிலும் அதிகமாக நேசித்து வந்தானோ அதே புருடஸ் என்னும் ரோமானியன் தன்னைக் கத்தியால் குத்தினான் என்ற உண்மையை அறிந்த ஜூலியஸ் ஸீஸருக்கு நம்பிக்கைத் துரோகத்தின் சக்தி எப்படித் தெரியலாயிற்று என்று அவன் காலேஜில் படித்திருக்கிறான்; அது அவன் ஞாபகத்திற்கு வந்தது. ''நம்பிக்கைத் துரோகம் என்ற பிசாசின் பலமான கைகள் அவன் நெஞ்சைப் பிளந்தன'' என்ற ஷேக்ஸ்பியரின் வார்த்தைகள் அவன் கண்முன் தோன்றின!

இத்தனை நாட்களாக எல்ஸீயும் அவனும் சேர்ந்து செய்திருந்த கேளிக்கைகள், விளையாட்டுகள் எல்லாம் அவன் கண்முன் காட்சிக்குப் பிறகு காட்சியாகத்தோன்றி மறைந்தன! எல்ஸீ சிநேகத்திற்கு மிகவும் உகந்தவள் என்பதை அவன் அவளுடைய செய்கைகளின் மூலமாகவே அறிந்திருந்தான். தன்னை அவள் காதலித்து வந்தாள் என்ற பகிரங்க ரகசியத்தையும் விலாசன் தெரிந்து கொண்டுதான் இருந்தான். எத்தனை நாள் அவள் இவனைக் கட்டி அணைத்திருப்பாள். எத்தனை தரம் தன்தலையை இவன் அகன்ற மார்பின்மேல் சாய்த்து வைத்துக்கொண் டிருப்பாள்! அதே எல்ஸீ இப்போது தன் கை விரலைக் காட்டி, 'இவன் தான் கொலையாளி' என்று பொய் கூறுகிறாள்! அடபாவி உலகமே! ஆசாவிடம் நேசங் கொண்டதைக் கண்டு பொறாமை கொண்ட எல்ஸீ தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளச் சாகசம் செய்கிறாள் என்பதையும் விலாசன் அறிந்தவன்தான்! பெண் அபலையானாலும், ஆவேசம் உண்டானால் ஆயிரம் யானைகளின் பலத்தைப் பெறுகிறாள்! அவள் தன் உயிரையும் மானத்தையும் ஈடாக வைத்துத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளப் பின்வாங்க மாட்டாள்!

மாஜிஸ்டிரேட் எல்ஸீயை மேலும் கேள்விகள் கேட்பதை அறிந்த விலாசன், அவர் என்ன கேட்கிறார் என்பதைக் கவனிக்கலானான். மாஜிஸ்டிரேட் கேட்டார்:

''இதே மனுஷன்தான் கொலை செய்திருக்க வேண்டும் என்பதைத் தாங்கள் எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?''

''சொல்ல முடியும்-சொல்லுகிறேன்; ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் என் வீட்டிற்கு வருவது விலாசன் ஒருவனுக்கேதான் தெரியும். வேறொருவரும் அவர் வருவதை அறியவில்லை என்றே நான் எண்ணுகிறேன். இதைத் தவிர வேறொரு காரணமும் உண்டு. ஜஸ்டிஸ் ஒயிட்பீல்டின் மீது விலாசனுக்குக் கோபமும் பொறாமையும் ஏற்கனவே ஏற்பட்டிருந்ததை நான் அறிவேன். இவன் என்னுடன் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகிவந்தான். ஆனால் ஒயிட்பீல்ட் என் வீட்டுக்கு வருவதை அறிந்ததும் இவன் என் சிநேகத்தை விட்டுவிட்டான். அது துவேஷமாகவும் மாறி விட்டது. இவன் கடைசித் தடவையாக என் வீட்டிற்கு வந்த போது என் சாப்பாட்டு அறையில் ஒயிட்பீல்டின் உருவப் படம் இருந்ததைக் கண்டு கோபம் கொண்டான். இவன் ஏன் அந்தப் படத்தையே உற்று நோக்க வேண்டும் என்று யோசித்த எனக்கு அப்போது ஒன்றுமே படவில்லை; இப்போதுதான் தெரியவருகிறது இவன் செய்கையின் அர்த்தம்!''

எல்ஸீ சொல்லுவது பொய் ஆகாது. ஆனால் அவள் விலாசன்மீது கொண்ட பழிவாங்கும் எண்ணத்தினால், தான் அபிப்பிராயப் பட்டதை ஊர்ஜிதம் செய்கிறாள். அவள் கோபமடைந்த நாகப் பாம்பைப்போல் காணப்பட்டாள். எல்ஸீ இத்தனை சாகசமுள்ளவள் என்பதை முன்கூட்டியே விலாசன் அறிந்திருந்தால்........?

எல்ஸீ சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கிச் சென்றாள்.

வேறு யாரையும் சாட்சி விசாரணை செய்யவேண்டியதில்லை என்று போலீஸார் தெரிவித்ததும் மாஜிஸ்டிரேட் விலாசனிடம் திரும்பி, ''இரண்டு கேள்விகளுக்கு நீங்கள் கட்டாயம் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இந்த ரிவால்வர் உங்களுடையது தானா?'' என்றார்.

''ஆமாம்.''

''போலீஸாரால் பேடர் ரோட்டில் கைப்பற்றப்பட்ட மோட்டார் உங்களதுதானா?''

''ஆமாம்.''

''நான் மறுபடியும் கேட்கிறேன்; உங்களுக்கு ஏதாவது சொல்லத் தேவையானால் சொல்லிக்கொள்ளலாம்.''

''இல்லை.''

''நல்லது'' என்று சொல்லியதும் மாஜிஸ்டிரேட் போலீ ஸாரைப் பார்த்துக் கேட்டார்:

''ஜஸ்டிஸ் ஒயிட்பீல்டின் வாக்குமூலம் வாங்குவது அவசியம் என்று படுகிறது. அதை வாங்குவதற்காக நீங்கள் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?''

''தாற்காலிகமாக அது அசாத்தியந்தான்.''

''ஆனால் உயிருடன் இருக்கும் அவருடைய வாக்குமூலம் இன்றியமையாதது என்பதை நீங்கள் அறிவீர்களா?''

''அறிவோம்; ஆனால் சித்தஸ்வாதீனமின்றிப் படுக்கையில் கிடக்கும் ஒயிட்பீல்ட் துரையை எவ்விதம் கோர்ட்டிற்கு வரவழைக்க முடியும்? நேற்று மத்தியான்னம் முதல்தான் அவர் ஏதோ கொஞ்சம் பேச ஆரம்பித்திருக்கிறார். இதற்குள்ளாக அவர் எப்படி எழுந்து இங்கு வரமுடியும்? எனவே இன்னும் இரண்டு தினங்களுக்குப் பிறகு கோர்ட்டாரே சென்று நேரில் அவர் வாக்குமூலத்தைப் பெற முயன்றால் நல்லது.''

''வேறு ஏதாவது உண்டா?''

''வேறு ஒன்றும் இல்லை; இந்த மனிதனை (விலாசனை) ரிமாண்டில் வைக்கத் தங்களுடைய அனுமதி வேண்டும்.''

''சரி, அப்படியே செய்யுங்கள்.''

அன்று விசாரணை அத்துடன் முடிவடைந்ததால் அனைவரும் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டனர்.

தான் சுதந்தரமுள்ள ஒரு தனி நபராக இருக்கவில்லை; ஆனால் அரசாங்கத்தாரின் கைதியாக இருக்கிறோம் என்னும் எண்ணம் முதல் முதலாக விலாசனுக்கு அப்போதுதான் உண்டா யிற்று. சாதாரண ஜெயிலின் காட்சிகள் அனைத்தும் அவன் கண் முன் வந்தன. கடைசியில் தன் உயிர்க் காதலி ஆசாவைப்போல் தானும் சிறைக்குச் செல்லுகிறான் விலாசன். சிறை அவனுக்கு அதிகத் தூரமில்லை.

மாஜிஸ்டிரேட் போலீஸார்களிடம் சொன்னார்:

''நான் இவரை ரிமாண்டில் வைக்கும்படி போலீஸுக்கு ஒரே ஒரு வார காலந்தான் அனுமதி தருவேன்.''

''போதும்; அத்தனை காலத்திற்குள்ளாக நாங்கள் விஷயத்தை ருசுப்படுத்திவிட முடியும்.''

மாஜிஸ்டிரேட் தம் ஆசனத்தை விட்டு எழுந்ததும் அங்கே விலாசனுடைய தகப்பனார் தாதாஸாஹிப் வருவதைக் கண்டார். அவருடன் அவருடைய வக்கீலும் வந்தார்.

விலாசனுடைய கைகளில் விலங்குகள் மாட்டப்பட இருந்தன. ஆனால் தாதாஸாஹிப் மாஜிஸ்டிரேட்டிடம் ஜாமீன் தொகையைச் செலுத்தியதும், விலாசனை விடவேண்டியதாயிற்று. விலாசன் தகப்பனுருடன் வீட்டிற்குச் சென்றான்.

விலாசன் பங்களாவிலேயே இருந்தான். வீட்டில் உள்ளோர் ஒருவருக்கு ஒருவர் முற்றும் அந்நியர்களைப்போல் பழக ஆரம்பித்தனர். எல்லாருடைய முகத்திலும் ஒருவிதமான பயமும் சோகமும் தெரியலாயின. துக்கத்தின் சாயை வீடு முழுவதும் புகை படருவதைப்போல் படரலாயிற்று. மனிதர்கள் நடமாட்டம் இருந்தும், நிர்மானுஷ்யமான காட்டைப் போல் காணப்பட்டது அந்த வீடு! வழக்கப்படி சுதேஷ்ணுபாய் வாசலில் வந்து நின்றாள். ஆனால் சிறிது நேரத்திற்குள்ளாகவே வானம் கறுப்பாக மாறிவிட்டது. எனவே மாடியின் ஜன்னல் கதவுகளையெல்லாம் மூடுவதற்காகச் சுதேஷ்ணு மறுபடியும் உள்ளே திரும்பிவிட்டாள். கதவுகள் சார்த்தப்பட்டுக்கொண்டிருக்கையிலேயே மழைத் துளிகள் படபடவென்று உதிரலாயின!

# அத்தியாயம் 23

சனிக்கிழமை இரவு விலாசனின் மோட்டாரை ஒர்க்ஷாப்பின் வேலை செய்துவந்த பட்டாணியன் திருட்டுத்தனமாக எடுத்துச் சரத்சந்திரனிடம் கொடுத்தான் அல்லவா? மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் ஒர்க்ஷாப் மூடப்பட்டிருந்தது. திங்கட்கிழமை மழை மிகவும் அதிகமாக இருந்ததனால் ஒர்க்ஷாப்புக்கு லீவு விடப்பட்டது. செவ்வாய்க்கிழமை ஒர்க்ஷாப் மானேஜர் காரியாலயத்தில் வந்து நுழைந்து, வழக்கம்போல் தம் அறைக்குள் சென்று நாற்காலியில் உட்கார்ந்ததும், ஒரு சேவகன் சலாம் செய்துகொண்டே அலர் முன் வந்தான்.

''ஸார், ஒரு விபரீதம் நடந்துவிட்டது!'' என்றான்.

''விபரீதமா, என்ன விபரீதம்?''

''998-ஆம் நம்பர் ரேஸிங் மாடல் வண்டி காரேஜி லிருந்து—''

''ஆமாம், ஆமாம்; அந்த வண்டியைப் பழுது பார்த்ததும் அதன் சொந்தக்காரருக்கு இன்று கட்டாயம் திருப்பிவிட வேண்டும்.''

''ஆனால் ஸார், பழுது பார்ப்பது எப்படி?''

''அடே, இது என்ன? பெட்ரோல் டாங்கியில் ஒழுகும் இடத்தை அடைத்து, பேட்டரியிலிருந்து மீட்டருக்குச் செல்லும் மின்சாரப் பிரவாகத்தை ஆம்பியருக்குச் செல்லும்படி தொடர்புறுத்த வேண்டும். அவ்வளவுதானே? இதை எப்படிப் பழுது பார்ப்பது என்று கேட்கிறாயே——''

''ஸார், அது எனக்குத் தெரியும். ஆனால் வண்டி இருந்தால் அல்லவா பழுது பார்க்க?''

''நீ என்ன சொல்லுகிறாய்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!''

''ஸார், உண்மையில் சொல்லுகிறேன்; ஷெட்டில் வண்டியைக் காணோம்!''

''அது எப்படி முடியும்? ஹெட் மேஸ்திரியைக் கூப்பிடு.'' சலாம் செய்துவிட்டுச் சேவகன் வெளியே சென்றான்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஹெட் மேஸ்திரியுடன் சேவகன் மறுபடியும் உள்ளே வந்தான்.

''998-ஆம் நெ. வண்டி ஷெட்டில் இருக்கிறதா?''

''இல்லை.''

''பின் அது எங்கே சென்றிருக்கிறது?''

''என் கீழ் வேலை பார்க்கும் பட்டாணிய மெகானிக் சென்ற சனிக்கிழமை மாலை எங்கேயோ சென்றுகொண்டிருக்கும்போது, வண்டியின் சொந்தக்காரர் வண்டி மிகவும் அவசியமாக இருப்பதாகவும், சிறிது நேரத்தில் மறுபடியும் திருப்பிக் கொண்டுவந்து விடுவதாகவும் சொல்லி, வண்டியை எடுத்துக்கொண்டு போகிறேன் என்றாராம்; பட்டாணியனும் ஒப்புக் கொண்டதும், வண்டி எடுத்துச் செல்லப்பட்டதாம்!''

மூக்குப்பொடியை உறிஞ்சினது போக மிச்சத்தைக் கீழே உதறிவிட்டு முதலாளி மேலே பேசலானார்:

''இது என்ன மானக்கேடு? வண்டியை ஒப்படைத்ததற்காகக் கம்பெனி ரசீது கொடுக்கப்பட்டிருக்கிறதல்லவா? ரசீதைக் காட்டித்தானே வண்டியை எடுத்துச் சென்றார் அவர்? அந்த ரசீது எங்கே? அந்தப் பட்டாணிய மெக்கானிக்கைக் கூப்பிடுங்கள்!''

''ஸார்! அவன் 'சிக் லீவ்' எழுதிவிட்டு எங்கேயோ போய் விட்டான்!''

''அடே பண்டரிநாதா! புருஷோத்தமா! என் தலைவிதி இப்படியா ஆகவேண்டும்? வண்டியை வேறு யாராவது பொய் சொல்லி எடுத்துக்கொண்டு சென்றிருந்தால் என் கதி என்ன ஆகும்? என் கம்பெனியை இறுக மூடிவிட வேண்டியதுதான்.''

''ஸார்! வண்டியின் சொந்தக்காரருக்கு டெலிபோன் செய்து பார்க்கலாமே!''

''சரி, சரி, பார்க்கலாம்.''

பொடி டப்பியை மேஜைக்கருகில் வைத்துவிட்டு டெலிபோனண்டை சென்றார் முதலாளி.

''ஹலோ, ஒரு விஷயம் கேட்கவேண்டியிருக்கிறது.''

''என்ன?''

''உங்களுடைய Y-998 வண்டியை எடுத்துச் சென்றீர்களே! ஏன் திருப்பி அனுப்பவில்லை?''

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"இல்லை, அந்த வண்டியில் இன்னும் கொஞ்சம் வேலை பாக்கி இருக்கிறது; அதையும் செய்து கொடுத்துவிடலாம் என்றுதான் கேட்கிறேன்! பட்டாணிய மெக்கானிக்கிடம் நீங்கள் உடனே திருப்பிக் கொண்டுவருவதாகச் சொல்லி வண்டியை எடுத்துக்கொண்டு போனீர்களாமே! ஏன் இன்னும் திருப்பி அனுப்பவில்லை."

"என்ன....ஓஹோ!....ஆமாம்!"

"ஸார், வண்டியை உடனே எடுத்து வாருங்கள்! பெட்ரோல் டாங்கியில் இன்னும் ஒழுக்கு இருக்கிறது. அடைத்து விட்டால் தான் நல்லது."

"இருக்கட்டும். அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்."

"என்ன ஸார்? பாதி வேலை ஆகியிருக்கும்போதே வண்டியை எடுத்துக்கொண்டு போய்விடுவதா?...."

பதில் கிடைப்பதற்கு மாறாக எதிர்ப் பக்கத்தில் டெலி போனைக் கீழே வைக்கும் சத்தம் கேட்டது.

மானேஜர் இரண்டு மூன்று தரம் 'ஹலோ, ஹலோ' என்று கூப்பிட்டும் பதில் கிடைக்கவில்லை.

அவருடைய மனத்திலிருந்து ஒரு பெரிய பாரத்தை இறக்கியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. வண்டியை வேறு யாரேனும் அமுத்திக்கொண்டு சென்றிருப்பார்களோ என்று சந்தேகப்பட்ட அவருக்கு இப்போது சந்தேகம் நீங்கியது. வண்டி உடையவரிடம் சென்று விட்டது என்று எண்ணிய போது அவருக்குக் கவலையும் விட்டது.

ஹெட் மேஸ்திரியையும் சேவகனையும் அவ்விடம் விட்டுப் போகும்படி சொன்னதும் அவர்கள் தத்தம் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டனர். எனவே இனி அவர் சஞ்சலம் இல்லாமல் நிதானமாகப் பொடியை உறிஞ்சுவதற்கு ஆயத்த மானார். அவருடைய கை வெள்ளிப் பொடி டப்பியைத் துழாவிப் பிடித்தது.

டெலிபோனைக் கீழே வைத்துவிட்டு விலாசன் மாடிக்கு வந்தான்.

காலையில் வெளிவந்த செய்தித் தாள்கள் அவன் மேஜை மீது கிடந்தன. முதல் நாள் பத்திரிகையிலேயே, ஒயிட்பீல்ட் சம்பவத்தைப் பற்றிய எல்லா விஷயங்களையும் அவன் பார்த் திருந்தான். எனவே அன்று காலைப் பத்திரிகையைப் பிரித்துப்

படிக்க அவனுக்கு இஷ்டமில்லை. பொய் வதந்திகளைப் பரப்பும் இந்தக் காகிதங்களின் வேலையை நினைத்துச் சற்று மந்தகாசம் செய்தான்.

சிகரெட் கேஸிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்து அதைப் பற்றவைத்தான். எதிரில் மேஜையின்மேல் வைத்திருந்த கண்ணாடியில் தன் முகம் தெரிந்ததை அவன் கண்கள் நோக்கலாயின. இரண்டு நாட்களாக க்ஷவரம் செய்து கொள்ளாததைக் கண்டான். கன்னத்தில் கையை வைத்துத் தடவிக் கொண்டே க்ஷவரம் செய்து கொள்ளுவதற்காக வெந்நீர் கொண்டுவரும்படி சொல்லச் சேவகனைக் கூப்பிட்டான்.

ஆனால் இதற்குள்ளாக அவன் மனத்துக்கு வேறுவித யோசனை தோன்றிற்று. 'ஒரு வாரத்திற்குள்ளாகத்தான் மறு படியும் கோர்ட்டிற்குப் போகவேண்டுமே; அங்கே தீர்ப்பு எப்படி ஆகிறதோ, யார் கண்டார்கள்? ஒருவேளை நாலைந்து வருஷக் கடுங்காவல் கிடைத்தால்....? சீ, இப்போது க்ஷவரமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்.'

எனவே சேவகன் வந்ததும், அவன், "ஒன்றும் இல்லை போ" என்று சொல்லிவிட்டான்.

அவன் ஜன்னலண்டை சென்று பார்த்தான்.

அன்று பல நாட்களுக்குப் பின் வானம் சற்று வெளுத்திருந்தது. மேகங்கள் சற்று நீலமாகக் காணப்பட்டன. பிறரை ஆனந்தப்படுத்தும் மனிதர்கள் தங்களுக்கும் ஆனந்தம் உண்டாவதைப் பார்ப்பார்கள். அதைப்போல் பிறரை ஆனந்தப்படுத்தும் நிர்மலமான ஆகாயம் தன்னைத்தானே அலங்கரித்துக் கொண்டது போல் குதூகலமாகக் காணப்பட்டது. ஒரு வாரகாலமாக அடைபட்டுக் கிடந்த பக்ஷிஜாலங்கள் 'கீச் மீச்' என்று கத்திக் கொண்டு இங்கும் அங்கும் பறந்தன. மழையினால் செத்துக் கிடந்த குருவி முதலியவைகளை எடுத்துச் செல்லப் பருந்துகள் ஆகாயத்தில் வட்டமிடலாயின! இடையிடையே மிகவும் லேசாகக் காற்று அடித்ததால் மரங்கள் சற்று அசையலாயின!

சென்ற சனிக்கிழமை இரவு தானும் சரத்சந்திரனும் பிரிட்டிஷ் எல்லையை விட்டுப் போர்ச்சுகீசிய கோவாவிற்குப் போனபோது—அடே அப்பா! என்ன விபரீதமான காற்று! என்ன பிரமாதமான மழை! எது வரினும் வரட்டும் என்ற எண்ணத்துடன் அவனை வெகுதூரம் கொண்டு போய் விட்டு விட்டேதான் வந்தான் அவன். அதோ பறந்து செல்லுகிறதே

மைனுக் குருவி, அதைப் போலவே அவன் வண்டியை மணிக்கு ஐம்பது மைல் வீதம் விட்டு, அதை ஏறக்குறையப் பறக்கவே வைத்தான்! ஆனல் இப்போது நிம்மதியாகச் சிறைவாசம் செய்யப் போகிருன்! ஒரு சில நாட்களுக்குள் எத்தனைதான் வித்தியாசம்!

ஆனல் சென்றன அந்த மேகங்கள். சரத்சந்திரன் இதற்குள்ளாகக் கோவாவில் காலடி எடுத்து வைத்திருப்பான். இனி இந்த அரசாங்கத்தாரால் அவனை ஒன்றும் செய்ய முடியாது!

அவனைக் கடைசியில் விட்டு வந்த இடம் பெல்காம். பெல்காமில் ரெயில் ஏறிக் கோவாவிற்குச் செல்லவேண்டும். சரத் சந்திரன் விலாசனிடம் விடைபெற்றுக்கொள்ளும்போது அவன் பேசின வார்த்தைகள் அனைத்தும் விலாசன் ஞாபகத்திற்கு வந்தன.

சரத், விலாசனின் கையைத் தன் இரு கைகளாலும் பிடித்துக் கன்னத்தில் வைத்துக்கொண்டு, ''விலாஸ், உனக்கு நான் எந்த விதத்திலும் கடமைப்பட்டவன். இந்த உயிரே உன்னல்தான் எனக்குக் கிடைத்தது. என் உயிரான நண்பனே!......'' என்று சொல்லி ஒரு பெண்ணைப்போல் விலாசனைக் கட்டியணைத்து, அவன் உதடுகளின்மேல் முத்தம் கொடுத்தான்.

''அட பைத்தியம்? என்ன இது......உயிர் கொடுக்க நான் யார்?''

''விலாஸ்! சம்பிரதாயத்திற்காக நான் உனக்கு ஏதேனும் சொல்ல முடியுமா? என் நெஞ்சு உன் உபகாரத்தால் நிரம்பி இருக்கிறது. நன்றியறிதலை நான் எவ்விதம் வெளிக்காட்ட முடியும்? இதன் மூலமாகத்தான்......''

சரத்சந்திரனின் கண்களிலிருந்து முதல் முறையாகக் கண்ணீர் வருவதை விலாசன் கண்டான்! தேக்கத்திலிருந்து பிய்த்துக் கொண்டு செல்லும் பிரவாகம்போல் அந்த உஷ்ணமான கண்ணீர் பெருகி வழிந்து விலாசனின் கையை நனைத்தது. சரத் மேலும் பேசலானுன்:

''சாவிலிருந்து நீ என்னைக் காப்பாற்றினுய் என்பதற்காக நான் உனக்குக் கடமைப் பட்டிருக்கவில்லை; காரணம், சாவதற்கு நான் அஞ்சாதவன்......ஆனல் போலீஸ் கையில் நான் அகப் பட்டிருந்தால்......என் கதி என்ன ஆகியிருக்கும்? எங்கள் கூட்டத்தின் சகல ரகசியங்களும் வெளியாகி, எங்கள் கொள்கை மண்ணைக் கவ்வி விடும். எனவே என்னைக் காப்பாற்றிய உனக்கு

நான் எப்படிக் கைம்மாறு செய்ய முடியும்?......இனி எனக்குக் கவலை இல்லை. வேஷத்தைக் கலைத்துவிட்டு நிர்ப்பயமாக வசிப்பேன்......பத்து வருஷங்களுக்குப் பிறகு சர்க்கார் என்னை மறந்துவிடும். நான் பம்பாய்க்கு வந்து உங்கள் அனைவரையும்......சந்திப்பேன்......''

சரத்சந்திரனின் கண்களில் மறுபடியும் கண்ணீர் பெருகியது.

''உங்கள் அனைவரையும்'' என்று சொல்லும்போது சரத் சற்றுத் தயங்கியதை விலாசன் கவனித்தான். ஆசாவின் மேலுள்ள காதல்தான் அவ்விதம் தயங்கச் செய்தது என்பதை விலாசன் அறிந்தான். ஆனால் அந்தக் காதல் கனவாகி விட்டது என்பதையும் விலாசன் எப்படி அறிவான்? ஆசா சரத்சந்திரனைக் காதலிக்கவில்லை என்று சொல்லிவிட்டதை விலாசன் இன்னும் அறியவில்லையே.

அவன் சொன்னான்: ''பத்து வருஷங்களா!...... எத்தனை நீண்ட காலமடா! உன் வழி பார்த்துக் காத்திருந்து ஆசாவின் கண்களும் பூத்துப் போகுமே! சரத்! முன்பின் யோசிக்காமல் இது என்ன, இப்படி அகோரமான காரியம் செய்து விட்டாய்!......ஆசாவை......''

''விலாஸ்! என் கையினால் ஆன காரியங்களை நான் முன் பின் யோசியாமல் செய்ததாகச் சொல்லமாட்டேன். ஏதோ என் உணர்ச்சியின் வேகத்தினால் அவசரமாக நடந்துகொண்டேன். இதுவே என் கடைசிப் பலாத்காரச் செயலாக இருக்கும் என்று நம்புகிறேன். மனச்சாட்சிக்கு விரோதமாக நான் கேவலம் கொள்கைக்காக உன் மனத்தை மட்டுமல்ல,........ஆசாவின் மனத்தையும் புண்ணாக்கிவிட்டேன். ஆசாவை நான் மறுபடியும் சந்திக்க முடியாது........! அவளிடம் நீ இது விஷயமாகச் சொல்லுவாயாகில்........''

''இல்லை, இல்லை......சரத்! நான் ஒருபோதும் ஆசாவிடம் இதை வெளியிடவே மாட்டேன்.''

''ஏன்? நான் தடுப்பதாக உன் எண்ணமா?''

''அப்படிக்கு ஒன்றும் இல்லை........ஆனால்........''

விலாசன் மேலே ஒன்றும் பேசாது வாளா இருந்தான்.

ஆசா இன்னும் சரத்சந்திரனையே காதலிக்கிறாள் என்றும் அவன் பலாத்காரத்தின் எல்லையை மீறிவிட்டான் என்ற செய்தியை அவளிடம் சொன்னால் ஒருவேளை அவள் சரத் மீது

வெறுப்புக் கொண்டுவிடுவாள் என்றும் எண்ணினான் அவன். இன்றில்லாவிடினும் நாளை சரத் ஆசாவிடம் வருவான் என்பது அவன் நம்பிக்கை. ஆசாவையும் சரத்சந்திரனையும் மறுபடியும் ஒன்று சேர்க்க அவன் சங்கல்பம் செய்துகொண்டான். ஆசா இன்பமுற்றால் அதைத் தன் இன்பமாகவே எடுத்துக்கொள்ள அவன் தயாராக இருந்தான். தன் நண்பனின் காதலுக்காகத் தன் காதலையே தியாகம் செய்தான். எனவே விலாசன் அதிகம் பேசவில்லை.

கோவா செல்லும் வண்டி வந்தது. சரத் அதில் ஏறிக் கொண்டான். அவன் கண்களில் மறுபடியும் கண்ணீர், பிரவாகம் எடுத்தது. அதை விலாசன் கவனித்தானோ இல்லையோ — யார் கண்டார்கள்?

''போய்வருகிறேன்'' என்றான் சரத்.

''போய் வா'' என்றான் விலாசன்.

''ஊ'' என்று ஊதியதும் வண்டி நகர்ந்தது. அந்தப் பிரிய நண்பர்கள் இருவரும் கடைசி முறையாகப் பார்த்துக்கொண்டார்கள்!

''சரத்! நீ கோவாவை அடைந்ததும் எனக்கு ஒரு தந்தி கொடுக்க ஏற்பாடு செய். அதில் 'இலையுதிர்காலம், சரத்ருது' என்று கையெழுத்திடு. நான் அறிந்துகொள்ளுவேன். போய் வா.''

''போய் வருகிறேன். ஆசாவை விட்டுவிடாதே!...... என்ன? ஆசாவை விட்டுவிடாதே!''

வண்டி நகர்ந்து, பிறகு வேகமாய்ச் சென்று மறைந்தது.

சூன்யமான மனத்துடன் விலாசன் திரும்பினான்.

''ஆசாவை விட்டுவிடாதே!''........ 'ஆசாவை விட்டு விடாமல் இருக்க நான் யார்?' என்று எண்ணினான் விலாசன்.

பழைய நினைவுகளை ஒன்றன்பின் ஒன்றாக எண்ணிக்கொண்டிருந்த விலாசன் திடீரென்று விழித்துக் கொண்டவன்போல் திரும்பிப் பார்த்தான். சேவகன் வந்து தன்னை அழைப்பதைக் கண்டான்.

''பெரிய எஜமான் உங்களைக் கூப்பிடுகிறார்கள்.''

விலாசன் தன் தகப்பனாருடைய அறையில் நுழைந்தபோது அங்கே வக்கீல் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

வக்கீல் தன் கழுத்தைச் சுற்றிக் கட்டிக்கொண்டே முரட்டுக் காலரைத் தடவி விட்டுக்கொண்டு, ஒரு தரம் கனைத்தார்.

பிறகு எச்சிலை விழுங்கினார். பேசத் தயாராக வாயைக் குவித்துக்கொண்டார்.

"உட்காருங்கள்—விலாஸ்! உட்காருங்கள்."

உட்காராமலேயே தகப்பனாரைப் பார்த்து விலாசன், "என்ன அப்பா?" என்று கேட்டான்.

"உட்காரச் சொன்னால் உட்காரேண்டா விலாஸ்!"

உட்கார்ந்துகொண்டே விலாசன், "என்ன சமாசாரம்?" என்றான்.

"இவர் உனக்கு என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்டுக்கொள்!"

"இவர் யார் என்பதை அறியலாமா?"

"நம்முடைய வக்கீல்."

"நம்முடைய என்றால்?"

"உன்னைத் தப்புவிக்கும்படி செய்ய இவர் வந்திருக்கிறார்."

இனிமேல் சும்மா இருக்கக்கூடாது என்று வக்கீல் பேசத் தொடங்கினார்.

"விலாஸ்! நீங்கள் மாஜிஸ்டிரேட்டிடம் ஒரு பதிலும் சொல்லாமல் இருந்தது நல்லதாயிற்று. மேலாக நோக்குமிடத்து உங்கள் 'கேஸ்' நம்பிக்கையற்றதாகப் பட்டாலும் நன்றாக யோசித்துப் பேசும் வக்கீல்களுக்கு இந்தக் கேஸ் ஜயிக்கும் என்றே படும். ஆனால் ஒரு விஷயம்: நீங்கள் எதையும் என்னிடம் ஒளிக்கவே வேண்டாம். வக்கீலிடமும் டாக்டரிடமும் ஒன்றையும் மறைக்கக்கூடாது. என்ன தாதாஸாஹிப், நான் சொல்லுவது சரிதானே?"

தாதாஸாஹிப் ஆமோதிப்பதற்காகத் தலையை அசைத்தார்.

விலாசன் கொஞ்சநேரம் கழித்துச் சொன்னான்: "நான் இங்கு இருப்பது உங்களுடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுப்பதற்காகவேதான். நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை. மேலே ஏதாவது சொல்லவேண்டி யிருக்கிறதா?"

"இப்படி, நம்பிக்கை இழந்து ஏன் பேசவேண்டும்? முதலில் சனிக்கிழமை இரவு ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் துரைக்கு அபாயம் ஏற்பட்டபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?......"

விலாசன் உடனடியாகப் பதிலளித்தான்: "நீங்கள் ஏன் வீணாகச் சிரமம் எடுத்துக் கொள்ளுகிறீர்கள்?"

தாதாஸாஹிப் தாழ்ந்த குரலில் பேசினார்:

''விலாஸ்! பெற்ற வயிற்றின் கலக்கம் உனக்கு எப்படியடா தெரியப்போகிறது?''

''அப்பா! நீங்களும் அம்மாவும் என்னை மிகவும் செல்வமாகவும் இஷ்டப்படியும் வளர்த்து வருகிறீர்கள் என்பதை நான் அறியாமல் இல்லை. ஆனால் தாங்களோ, அம்மாவோ, வக்கீலோ... வேறு யாரோ...என்னைத் தப்புவிக்கும்படி செய்ய வேண்டாம்....காரணம்...நான் சொல்லத் தயாராக இல்லை.''

சில நிமிஷங்களுக்குப் பிறகு விலாசன் எழுந்து வெளியே சென்றான்.

நேரே தன் அறைக்குள் சென்று படுத்த விலாசன் வெகு நேரம் வரையில் தூங்கினான். ஜஸ்டிஸ் ஒயிட்பீல்ட் இறந்து விட்டதாகவும்....இன்னும் பற்பல விதமான கனவுகளையும் கண்டவண்ணம் இருந்தான்.

ஒரு தரம் கண் விழித்ததும் மறுபடியும் கண்ணயர்ந்தான். தன் பாலியத்தில் தனக்கு ஞாபகம் இருந்த பல சம்பவங்களை நினைத்துக்கொண்டான். அதிலும் சென்ற ஐந்தாறு மாதகாலமாய் ஆசாவுடன் தான் பழகினதிலிருந்து அவன் வாழ்க்கையிலேயே ஏற்பட்ட மாறுதல்தான் எத்தனை! டென்னிஸ் பந்தயம்—டோமோ நாகாவின் தோல்வி — எல்ஸீயின் கடிதம் — சுநேத்ராவின் கோபம் — ஆஹா! அந்தத் துர்ப்பாக்கியவதி சுநேத்ரா இன்று எங்கே? தன் காதலுக்காக அவள் தன்னையே பலி இட்டாள்! அவள் உண்மையான காதலிதானே?....ஜானீ.... அவளுடன் ஒரு நாள் மோட்டாரில் போகும் போது — எத்தனை வேகமாய் வண்டியைச் செலுத்தினான்......சரத்சந்திரன் அவனை அன்று சந்திக்காவிடில்?........ இன்று நடந்த சம்பவங்கள் என்றுமே நடந்திரா! ஆசா......அவனை விடாமலிருக்கும்படி சரத் சொன்னானே! பாவம்!—சரத்...... தன் உயிர்க் காதலியைப் பிரிந்து சென்றான் அல்லவா? இது என்ன? யார் கூப்பிடுகிறார்கள்? ''விலாஸ்!''...... ''விலாஸ்!''

விலாசன் கண்களைத் திறந்து பார்த்தான்!

அறையில் இருட்டுப் பரவி இருந்தது. யாரோ வரும் சத்தம் கேட்டது.

''விலாஸ்!''

அறையின் வாசலில் யாரோ கூப்பிடுகிறார்கள்!

''விலாஸ்!''

விலாஸ் என்று கூப்பிட்ட அந்தக் குரலில்தான் எத்தனை நடுக்கமும் சோகமும்! அது யார் குரல்? பழகின குரல்தான்! அது யார்? கனவா?

''யார் அது?''

''விலாஸ், நான்தான் ஆசா!''

உடனடியாக எழுந்து விலாசன் மின்சார விசையை அமுக்கினான் — விளக்கு, 'பளிச்' சென்று எரிந்தது.

ஆசா உள்ளே வந்தாள்.

பைத்தியம் பிடித்தவன் போல் விலாசன் அந்த அறையில் இருந்த இருநூறு காண்டில் விளக்கையும் போட்டான். முதல் முதலில் கிருகப் பிரவேசம் செய்த ஆசாவை ஜோதிமயமான வெளிச்சத்தில்தானே வரவேற்க வேண்டும்!....

''இப்படி இருட்டில் படுத்துக்கொண்டு....''

''இந்த உலகத்தில்....நம்பிக்கை என்னும் ஒளி என்னைப் பொறுத்தவரையில் அணைந்துவிட்டது.''

ஆசா அவனைத் துக்கமும் இரக்கமும் கலந்த பார்வையோடு நோக்கினாள்.

''இது என்ன? உங்களுக்குப் பைத்தியமா!''

''ஏன்?''

''ஏனா? ஓஹோ! சனிக்கிழமை இரவு எங்கள் வீட்டிலிருந்து நீங்கள் ஒயிட்பீல்டைச் சுட்டீர்களோ? ஒரு மணி வரையில் அங்கேயே இருந்தவர், பதினொரு மணிக்கு எப்படிச் சுட முடிந்ததோ?''

''ஆனால், ஆசா அதைத் தயவு செய்து நீங்கள் வெளியே சொல்லவேண்டாம்...... அதனால் ஓர் உயிர் அவஸ்தைப்படும் என்பது உங்களுக்குத் தெரியாது.''

''நானே கோர்ட்டில் வந்து விஷயத்தைச் சொல்லப் போகிறேன். நீங்கள் சென்றபோது மணி அடித்ததைக்கூட ஒரு டைரியில் விஸ்தாரமாக எழுதியுள்ளேன். அதை எடுத்து வந்து கோர்ட்டில் காட்டுவேன். என்னால் முடிந்தமட்டும் பார்க்கிறேன்.''

''நீங்கள் இவ்விதம் செய்தால் ஒரு நபரைக் கொலை செய்த பாவம் நேரும்.''

''ஏன்? இந்தத் தியாகத்தை யாருக்காகச் செய்கிறீர்கள்? என்னிடங்கூடச் சொல்லலாகாதா?''

''சொல்லுகிறேன். ஆனால்......?''

''ஆனால் என்ன? சொல்லுங்கள்!''

''ஆசா தேவி! உங்களுக்காகத்தான் நான் இன்று சிறைக்குச் செல்லத் தயாராக உள்ளேன்.''

''எப்படி?''

''நீங்கள் என்னைக் காதலிக்காவிடினும்....நான் உங்களைக் காதலிக்கிறேன்; ஆனால் நீங்கள் சரத்சந்திரனைக் காதலிக்கிறீர்கள். நீங்கள் என்னைக் காதலிக்காவிடினும், உங்கள்மேல் எனக்குள்ள பிரேமையினால் உங்களை எந்த விதத்திலும் சுகமடையச் செய்வதே என் நோக்கம். நீங்கள் சரத்சந்திரனைக் காதலிக்கிறீர்கள். அவனைக் காப்பாற்றாவிட்டால் உங்கள் சுகம் எங்கே? உங்களுக்குச் சுகம் இல்லையேல் எனக்குச் சுகம் எங்கே? உங்கள் மீதுள்ள என் எல்லையற்ற காதலை நான் வெளியிடக்கூட இஷ்டமில்லாது ஒளித்துவைத்துக் கொண்டேன். காரணம் ஒரு தலைப்பட்ட காதலால் பயன் யாது?''

''விலாஸ்!'' என்று சொல்லிய வண்ணம் ஆசா மயக்கமுற்று அவன்மீது சாய்ந்தாள். பிறகு சற்றுக் கண்விழித்து, ''விலாஸ்! என் பிரிய காதலரே! நான் சரத்சந்திரனைக் காதலிக்கிறேன் என்று யார் சொன்னார்கள்? நான் உங்கள் காலடியிலேயே உயிரை விடுகிறேன்.''

''ஆசா! நீ ஏன் இப்படிப் பேசுகிறாய்?'' இப்படிச் சொல்லிக் கொண்டே விலாசன் அவளைத் தூக்கி இறுகத் தழுவிக்கொண்டான். அவனை அறியாமலேயே அவன் உதடுகள் ஆசாவின் உதடுகளுடன் சேர்ந்து சிநேகம் கொண்டாடின!

எத்தனை நேரம் அப்படி ஆலிங்கனத்தில் இருந்தார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

# அத்தியாயம் 24

மறுநாள் காலையில் ஆசா தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டதும், அந்தத் தெருக்கோடியில் இருந்த இரானியன் கடைக்குச் சென்று கடை முதலாளியிடம், "உங்கள் கடையில் 'டெலிபோன் கனெக்ஷன்' இருக்கிறதா?" என்று கேட்டாள்.

இந்த அழகான யுவதி தன் கடையில் டீ சாப்பிட வந்திருக்கிறாள் என்று எண்ணிய கடை முதலாளிக்கு முதலில் ஆனந்தம் ஏற்பட்டது. ஆனால் ஆசா அவனிடம் டெலிபோனைப்பற்றிக் கேட்டதுமே அவனுக்கு ஏமாற்றம் உண்டாகி முகத்தில் அசடு வழிந்தது. சிரித்துக்கொண்டே 'ஆம், இருக்கிறது' என்று சொல்லும் பாவனையில் தலையை அசைத்தான்.

"நான் கொஞ்சம் பேசலாமா?" என்று ஆசா கேட்டாள்.

"ஓ, தாராளமாகப் பேசலாமே!"

அவள் டெலிபோன் யந்திரத்தினிடம் சென்று நம்பர்த் தட்டில் கையைவைத்து விலாசனின் வீட்டு நம்பரைத் திருப்பினாள்; ரிஸீவரைக் காதில் வைத்துக் கொண்டே, "ஹலோ, விலாஸ்!" என்றாள்.

"விலாசன் மாடிமீது இருக்கிறார்; கூப்பிடட்டுமா அவரை?"

"சரி, கூப்பிடுங்கள்."

"யார் பேசுவதாகத் தெரிவிக்கட்டும்?"

"ஆம்....நீங்கள் கூப்பிடுங்களேன், போதும்."

"சரி, சரி." இரண்டு மூன்று நிமிஷங்கள் ஆசா காத்திருக்க வேண்டியதாயிற்று. ஆனால் எந்தக் குரலுக்காக அவள் ஆசையுடன் இருந்தாளோ அந்தக் குரலைக் கேட்க எத்தனை மணி நேரமாகிலும் காத்திருக்க அவள் தயாராகத்தான் இருந்தாள். கடைசியில் 'ஹலோ' என்ற குரல் அவள் காதில் விழுந்ததும் அவள் கண்களில்தான் எத்தனை ஆனந்தம் ஏற்பட்டது! அவள் பேசலானாள்: "ஹலோ, விலாஸ்!"

"யார், ஆசாவா?"

''ஏன், விடிந்ததும் விடியாததுமாக என்னிடமிருந்து டெலிபோன் வருவதனால் ஆச்சரியம் தாங்க முடியவில்லையா உங்களுக்கு?''

''இல்லையே தேவி!''

''ஆனால் இத்தனை சீக்கிரம் தாங்கள் எழுந்துவிட்டதைப் பற்றி எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.''

''நான் இன்னும் கண்ணையே மூடவில்லை. நீ எனக்குப் படுக்கவே இடம் வைக்கவில்லையே?''

''எப்படி?''

''கடைசி வரையில் கனவில் வந்து தொந்தரவு செய்து கொண்டே இருக்கிறாயே!''

''போதும், போதும்.''

''என்ன சொன்னாய்?''

''இப்படி எல்லாம் பேசிக்கொண் டிருந்தால் நான் டெலி போனைக் கீழே வைத்துவிடுவேன்.''

''சரி, இனிமேல் பேசவில்லை; ஏன் டெலிபோன் செய்தாய், சொல்லு?''

''சரத்சந்திரனிடமிருந்து தந்தி வந்ததா, சொல்லுங்கள்?''

''ஆம், வந்தது. ஆனால் தந்தி கைக்கு வருவதில் அதிகமான தாமதம்....''

''என்ன ஆயிற்று?''

''தந்தி வந்த சமயத்தில் நான் படுத்துக்கொண் டிருந் தேன். அப்பா அதைத் தமக்கு வந்ததாக எண்ணித் திறந்து பார்த்து விட்டார். அதில் என்ன எழுதியிருந்த தென்றால், பழக்கூடை அழுகாமல் வந்து சேர்ந்தது — இலையுதிர்காலம். இதைப் படித்துப் பார்த்து அர்த்தம் விளங்காத என் தகப் பனுருக்கு அப்போதுதான் தந்தி என் பெயருக்கு வந்திருப்பது தெரிந்தது. அவர்மேலே என் அறைக்கு வந்து என்னை எழுப்பித் தந்தியை என்னிடம் கொடுத்தார். அதைப் படித்ததுமே நான் அவரிடம், 'உங்கள் வக்கீலை உடனே கூப்பிட்டனுப்புங்கள், அப்பா!' என்று சொன்னேன். பழக்கூடைக்கும் நான் இருந் திருந்தாற்போல் வக்கீலைக் கூப்பிட்டனுப்பிக் குற்றவாளி நான் அல்ல என்று ஒப்புக்கொள்வதற்கும் உள்ள சம்பந்தத்தை அவர் எப்படி அறிவார்? இதுவரையில் என்மேல் அபாண்டமாகச் சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு மறுதளிக்காமல் 'கம்' என்று இருந்ததற்குக் காரணம் அவருக்கு என்ன தெரியும்? சரத்சந்திர

னிடமிருந்து தந்தி வந்ததும் அவன் சரியான பாதுகாப்புடன் வேறு இடத்திற்குப் போய்விட்டதை அறிந்த பிறகுங்கூட நான் ஏன் அர்த்தமில்லாமல் சும்மா இருக்க வேண்டும்? இனிமேல் நான் குற்றவாளியல்ல என்பதை ருசுப்படுத்தினுலும் சரத் சந்திரன் அதனுல் பாதிக்கப்பட மாட்டான் அல்லவா? நான் என் நண்பனுக்காகச் செய்த சிறிய தியாகத்தை என் தந்தை எப்படி அறிவார்? யார் என்ன செய்தபோதிலும் சரத்சந்திரன் என்னவோ பத்திரமான இடத்திற்குப் போய்விட்டான். இனி நான் என் மேல் குற்றம் இல்லே என்று வாதாட முடியும். இந்த உண்மையெல்லாம் அப்பாவுக்கு எப்படித் தெரியும்? நான் உன்ளே நேற்றுச் சந்தித்ததில் எனக்கு எத்தனேயோ ஆனந்தம் ஏற் பட்டது. இதை யாரிடமும் சொல்லிச் சாத்தியமில்லே. அப்பா மிக ஆச்சரியத்துடன் என்னேக் கூர்ந்து கவனித்துப் பார்த்துக்கொண்டே நின்று விட்டார்.''

இவ்விதம் சொல்லி விலாசன் சிரிக்க ஆரம்பித்தான். ஆசாவும் பதிலுக்குச் சிரித்தாள்.

''நீங்கள் ரொம்ப அழகாகச் சிரிக்கிறீர்கள்!''

''உம்; எல்லாம் என்னிடமிருந்து பேசக் கற்றுக்கொண்டு என்னிடமே பாடம் ஒப்பிக்கிருயே!''

''ஆனுல், அப்போது....''

''ஆசா! தகப்பனுரையும் என் தாயாரையும் எதிர்பாராத விதமாக ஆச்சரியப்படும்படி செய்ய வேண்டும். நீ சீக்கிரம் இவ்விடம் புறப்பட்டு வா; நான் உன் வீட்டிற்கு வண்டியை அனுப்புகிறேன்.''

''ஏன்?''

''அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உன்னேக் காட்டி அறிமுகப் படுத்தி வைக்கவேண்டும்.''

''ரொம்ப நன்ருயிருக்கிறது கூத்து! கூட்டிக் கொண்டு போய்க் காட்டி அறிமுகப்படுத்த நான் என்ன பாப்பாவா?''

''அதனுல்தானே அறிமுகம் செய்து வைக்கிறேன்?''

''ஒன்றும் வேண்டாம்; வெறுமனே இருங்கள்.''

''சரி, பேச்சை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்; இதோ வக்கீலின் வண்டியும் வாசலில் வந்து விட்டது. நான் மாடிக்குப் போகவேண்டி யிருக்கிறது. எங்கள் வீட்டு வண்டி அங்கே வந்ததும் உடனே புறப்பட்டு வந்து சேர். என்ன, ஊம்?''

"ஏதுக்காக நான்.... வராவிட்டால் என்ன செய்வீர்களோ?"

"இதோ பார்,...... நான்தான் மிஸ்டர் ஒயிட்பீல்ட் துரையைத் துப்பாக்கியால் சுட்டதாக ஒப்புக்கொண்டு......"

"அடி அம்மாடியோ!" - பயத்தின் பாவனையாக ஆசா பேசினாள்.

"பின்னே வா சீக்கிரம் புறப்பட்டு, ஊம்?"

"சரி, சரி, வருகிறேன்."

"அப்படி வா வழிக்கு."

டெலிபோனைக் கீழே வைத்துவிட்டு விலாசன் மாடிப்படியில் இரண்டிரண்டாகத் தாவி ஏறிச் சென்றான்.

* * * *

கொஞ்ச நேரம் கழிந்ததும் விலாசன் மோட்டார் ஒர்க்ஷாப்பின் காரியாலயத்திற்கு டெலிபோன் செய்தான். "நேற்று என் வண்டியை நானே எடுத்துவரச் சொன்னதாக உங்களிடம் சொன்னது வாஸ்தவம் அல்ல. என் வண்டியை யாரோ வேறொருவன் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். யார் வண்டியை எடுத்துச் சென்றது என்பதை உங்கள் ஆபீஸில் இருக்கும் பஞ்சாபி மேஸ்திரி அறிந்திருப்பான். ஆகையால் அவனை உடனடியாகப் போலீஸில் தாக்கல் செய்யுங்கள்" என்று அவன் சொன்னான்.

* * * *

ஒயிட்பீல்ட், துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளான அதே சமயத்தில் விலாசன் அங்கே இருக்கவில்லை என்பதையும், அவன் வண்டியை ரிப்பேர் செய்யும் நோக்கத்துடன் ஒர்க்ஷாப் காரியாலயத்திலிருந்து வீடு திரும்பினான் என்பதையும் மட்டும் ருசுப்படுத்தினால் போதும் என்று வக்கீல் சொல்லிக்கொண்டிருந்தார். விலாசனுடைய கைத்துப்பாக்கி காணுமற் போனது என்னவோ உண்மையே. ஆனால் யார் திருடினார்கள், எதற்காகத் திருடினார்கள் என்பதை அவன் எப்படி அறிவான்? அந்தத் துப்பறியும் வேலை அவனுக்குத் தெரியாது. போலீஸார்கள்தாம் அந்தத் திருட்டைக் கண்டுபிடித்துத் துப்புத் துலக்கவேண்டும். ரிப்பேருக்காகக் கொடுக்கப்பட்ட அவன் மோட்டாரை வேறொருவன் அயோக்கியத்தனமாக எடுத்துக்கொண்டு சென்றுனால் அது யாருடைய குற்றம்? மோட்டார்ச் சொந்தக்காரரைத்தான்

தண்டிப்பதா? அப்போது போலீஸ் இலாகாவிற்கு வேலைதான் என்ன?

இது எந்தச் சட்டத்திலும் சொல்லப்படவில்லையே! காண்பிக்கப்பட்ட கைத்துப்பாக்கி தன்னுடையதுதான் என்பதையும் மோட்டார் வண்டியும் தன்னுடையதுதான் என்பதையும் தவிர விலாஸன் மாஜிஸ்டிரேட்டின் முன்பு வேறொன்றும் சொல்லவில்லை. கைத்துப்பாக்கியை யாரோ திருடிக்கொண்டிருக்கவேண்டும், வண்டியை யாரோ ஒரு திருடன் எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்ற இந்த உண்மைகளை விலாசன் மறுதளித்துக் கூறவுமில்லை... கேள்வி வந்திருந்தால் அவன் சொல்லித்தான் இருப்பான். ஆனால் அப்படி யாரும் பேசவே இல்லையே? திருட்டைக் கண்டுபிடிப்பதில் காலதாமதம் ஏற்படுவதால் நியாயாதிபதியின்மேலேயே விலாசன் புகார் கூற இடம் உண்டு.

இவ்விதமான தர்க்கங்களை வக்கீல் தம் மனத்திலேயே நடத்திக்கொண்டிருந்தார்.

ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் அவருக்குக் கவலையை உண்டு பண்ணிற்று. ஓயிட்பீல்ட் ஏதாவது தப்பும் தவறுமாக விலாசன்தான் தன்னைச் சுட முயன்றான் என்று சொன்னால் பிறகு......

அவர் ஒருவேளை விலாசன்தான் தன்மேல் குண்டைப் பிரயோகித்தான் என்று சொன்னால் ஆசாமியை விட்டு விடுவதா? சாட்சிகள் சம்மன்கள் எங்கே? பஞ்சாயத்துப் பலமாக அல்லவா இருக்கும்?

எனவே ஓயிட்பீல்டின் பதிலைப் பொறுத்து இருக்கிறது விலாசனின்மேல் உள்ள தீர்ப்பு.

கடைசியில் புதன் கிழமை மாலையில் டாக்டர்கள் ஓயிட்பீல்டிற்குப் போதுமான குணம் ஏற்பட்டிருப்பதாகவும் விசாரணை நடத்தலாம் என்றும் அறிக்கை விட்டபோது மாஜிஸ்டிரேட் ஆஸ்பத்திரிக்கே நேரே வந்துவிட்டார்.

எத்தனை மணிக்கு எல்ஸியிடம் ஓயிட்பீல்ட் விடை பெற்றுக்கொண்டு வெளியே புறப்பட்டார், மாடிப் படியின்மேல் அவருக்கும் எல்ஸிக்கும் என்ன சம்பாஷணை நடந்தது, மாடியின் எத்தனையாவது படியில் நிற்கும்போது ரிவால்வரின் சத்தம் கேட்டது, அவர் கையிலிருந்த 'டார்ச்' விளக்கை எப்படிப் பொருத்திப் பார்த்தார், கைத்தடியினால் எப்படி அடித்தார், பிறகு இரண்டாவது குண்டின் சத்தம் கேட்டதும்

தாம் எப்படிக் கீழே விழுந்தார் என்பதையெல்லாம் அவர் விஸ்தாரமாகச் சொல்லிக்கொண்டே போனார். அவரே ஒரு பெரிய நியாயாதிபதி யாகையால் நிகழ்ச்சியின் ஒவ்வோர் அம்சத்தையும் மிகவும் குறிப்புடனும் திட்டமாகவும் சொன்னார்.

மாஜிஸ்டிரேட் கேட்கலானார்:

"குண்டுகளை உம்மீது ஏவியவனை உங்கள் 'டார்ச்' விளக்கின் உதவியால் பார்த்ததாகச் சொல்லுகிறீர்களே? அந்த மனிதனை உங்களிடம் கூட்டிக்கொண்டு வந்தால் அடையாளம் தெரிந்துகொள்வீர்கள் அல்லவா?"

"ஏன் முடியாது? நூறுபேர்கள் கூட்டமாக இருப்பினும் நான் அவனை மட்டும் அடையாளத்துடன் பொறுக்கி எடுப்பேன். அவன் மிகவும் அழகான ஒரு பட்டாணிய யுவன்."

இது உண்மைதானா என்னும் பாவனையுடன் மாஜிஸ்டிரேட் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் ஒயிட்பீல்டிடம் கேட்டார்: "அந்த யுவன் உண்மையிலேயே பட்டாணியனா, அல்லது பட்டாணிய வேஷம் தரித்த மற்றொருவனா?"

"அதை எப்படி நான் சொல்லமுடியும்?"

இத்தனை நேரமும் வேறு பக்கத்தில் உட்கார வைக்கப்பட்டிருந்த விலாசனை ஒயிட்பீல்டின் முன்பு கொண்டுவந்து நிறுத்திய பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் கேட்டார்:

"இந்த மனிதரைப் பட்டாணிய வேஷத்துடன் நீங்கள் பார்த்தீர்களானால், இவர்தாம் உங்களுக்குத் துன்பம் விளைவித்தவர் என்பதைச் சொல்லுவீர்களா?"

"ஒருகாலும் நடக்காத விஷயம். இந்த அப்பாவி மனிதரை நீங்கள் பிடித்து வைத்திருக்கிறீர்களா என்ன? ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத போலீஸ்காரர்களே!"

இன்ஸ்பெக்டர் சொன்னார்:

"குற்றம் நடந்த இடத்தில் காணப்பட்ட கைத்துப்பாக்கியும், குற்றவாளி தப்பி ஓடின மோட்டாருங்கூட இவருடையதே என்பதாகவும் இந்த மனிதர் ஒப்புக்கொண்டிருக்கிறாரே!"

"இதனால் ஒன்றும் பிரயோஜனமில்லை. இந்த மனிதர் என்னைச் சுடவில்லை என்பதை நான் பிரமாணமாகச் சொல்லுகிறேன்! இவருக்கு எள்ளளவும் துன்பம் விளைக்காதீர்கள்."

இப்படிப் பேசிக்கொண்டிருந்த போதே ஒயிட்பீல்ட் விலாசனை உற்று நோக்கியவண்ணம் கேட்டார்:

"உங்கள் பெயர்தான் விலாசனா? உங்கள் போட்டோவை நான் எல்ஸியின் வீட்டில் பார்த்திருக்கிறேன். உங்கள் டென்னிஸ் விளையாட்டைப்பற்றி அவள் எத்தனை தான் புகழுகிறாளோ அதைச் சொல்லவே முடியாது! நான் உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டதற்குச் சந்தோஷிக்கிறேன்" என்று சொல்லி ஒயிட்பீல்ட் தம் வலது கையை நீட்டினார். விலாசன் அதைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டே, "உங்கள் புஸ்தகங்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்றான்.

கை குலுக்கிக்கொண்டே அவ்விருவரும் உரக்கச் சிரித்தனர்.

போலீஸ் இன்ஸ்பெக்டரின் முகத்தில் ஈயாடவில்லை.

மாஜிஸ்டிரேட் பிரமை பிடித்தவர் போல் தோன்றினாலும் அவர் முகத்தில் அசடு வழியவில்லை.

# அத்தியாயம் 25

ஆசாவிற்கும் விலாசனுக்கும் ரிஜிஸ்டர் விவாகம் நடந்தது. இது விஷயமாகச் சுதேஷ்ணு பாயிக்குத் திருப்தியே கிடையாது. பழைய சம்பிரதாயப்படி விவாகம் நடந்தேறு விடினும் நாட்டுப் பெண்ணுக்குப் புக்ககத்துப் பெயர்கூட வைக்காமல் இருந்தது சற்றேனும் பிடிக்கவில்லை.

"அம்மா, நீங்கள் ஏன் எதையோ நினைத்துக்கொண்டு வருத்தப்படுகிறீர்கள்? ஆசாவிற்குப் புதிதாக ஏதாவது பெயர் வைக்க வேண்டுமா என்ன?" என்றான் விலாசன்.

சுதேஷ்ணு பாய் சிரித்துக்கொண்டே, "தெரியுமடா உன் வேடிக்கை எல்லாம்; இந்த விஷயத்தில் மட்டும் நான் உன்னை வேறு ஒன்றும் கேட்கப் போவதே இல்லை. நீ இதை மட்டும் சொல்லிவிடு போதும், என்ன பெயர் வைக்கலாம்?" என்றாள்.

"சகுந்தலா."

ஆசாவின் அசாதாரணமான கூந்தல் அழகு விலாசனின் மனத்தை விட்டு அகலவே இல்லை. ஆகையால் அப்படிச் சொன்னான்.

"சரி, சகுந்தலா என்றே வைப்போம்."

"ஆனால் அம்மா, நான் மட்டும் அவளை ஆசா என்றே அழைக்கப் போகிறேன்."

"உனக்கு எப்படி இஷ்டமோ அப்படிச் செய். இந்தக் காலத்துப் பிள்ளைகளின் மனப்போக்கே தனி என்பது எனக்குத் தெரியும்."

ஆசாவின் மறுபெயர் விஷயமாக விலாசன் அவன் தாயின் பேச்சைக் கேட்கவேண்டியதாக ஆனதுபோலவே மற்றொரு விஷயத்திலும் அவன் தன் நண்பர்கள், ஆசா இவர்களுடைய இஷ்டத்திற்கும் இணங்க வேண்டியதாயிற்று. பால் டைரியில் கூடும் அத்தனை மித்திரர்களும், ஆசாவும் விலாசனுமாகச் சேர்ந்து ஸ்தாபித்த கட்சியில் சேர்ந்த பல ஜனங்களும் கல்யாண விருந்துக்கு ஆசைப்பட்டார்கள். எனவே பால் கிடங்கிலேயே மேஜை நாற்காலிகள் அடுக்க ஏற்பாடு செய்து மேனாட்டு முறையில் ஒரு விருந்து கொடுத்தான் விலாசன்.

விருந்தின் சமயத்தில் விலாசனின் சிநேகிதர்கள் வேடிக்கையாகப் பேசியும் பாடியும் குஷியாக இருந்தனர். அந்தச் சமயத்தில் அவ்விடத்தில் நிலவிய ஹாஸ்யமும் சந்தோஷமும் அபாரமாக இருந்தன.

சிநேகிதர்களில் பலர் பேசிய பிறகு விலாசன் அவர்களுக்கெல்லாம் வந்தனம் தெரிவிப்பதற்காக ஒரு பதில் பிரசங்கம் செய்தான். அந்தப் பேச்சின் கடைசியில் அவன், "சாப்பாட்டிற்கு வந்த பிக்ஷுக்களைப்போல் நீங்கள் விருந்தை மூக்கைப் பிடிக்க இழுத்தீர்களோ என்னவோ நான் அறியேன். ஏனெனில் என் கவனம் முழுவதும் என் புதிய மனைவி ஆசாவிடமே இருந்தது. 'அத்தியந்தமாகக் காதல்கொண்ட இருவர் ஒருவரை ஒருவர் கவனித்து வரவேண்டும்' என்பது ஆரிய தர்மப்படி ஒரு கடமையே ஆகும். பிக்ஷுக்களைப்போல் பூர்ணமாகச் சாப்பிடாவிட்டாலும், ஏதோ சாப்பிட்டதற்குப் பதிலாக இந்த நவீன தம்பதிகளை மனமார வாழ்த்துவீர்கள் என்றே நான் நம்புகிறேன். இது விஷயமாக நான் ஆசாவின் சார்பிலும் உங்கள் எல்லோருக்கும் வந்தனம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்றான்.

விலாசன் உட்கார்ந்ததும் அந்த யுவர்களின் கூட்டத்தில் எல்லோரும் கைதட்டினார்கள். ஆசா விலாசனின் காதருகே, "நீங்கள் சுத்த மோசம் போங்கள்! இப்படி எல்லாம்......" என்று முனகினாள்.

விலாசன் அவளுக்கு மறுமொழி கூறுமுன்பே கூட்டத்தில் சிலர், "ஆசாவைப் பேசச் சொல்லுங்கள்" என்று கூவினர்.

"ஐயோ! நானா?" என்றாள் ஆசா.

இப்படிச் சொன்னவுடன் அவள் தன் கையால் இறுக வாயைப் பொத்திக்கொண்டாள்.

ஆனால் கூட்டத்தில் எல்லோரும் ஏகமாகக் கூவினர்: "ஆசா கட்டாயம் பேசித்தான் ஆகவேண்டும்" என்று.

வாயின்மேல் பொத்திய கையை எடுக்காமலே ஆசா முடியாது என்று தலையை அசைத்தாள்.

"கண்டிப்பாகப் பேசியே தீரவேண்டும். அதெல்லாம் இங்கே நடக்காது" என்று எல்லோரும் கூவினர்.

கடைசியில் ஆசா பேசுவதற்காக எழுந்து நிற்கவேண்டியதாயிற்று. அப்போது அந்த வாலிபர்களின் கைத்தட்டல் சொல்லி முடியாது.

"கண்யமுள்ள தோழர்களே—"

இது என்ன? ஆசாவிற்கு மேலே பேச நாவே எழவில்லை. அவள் வெறுமனே 'கம்' என்று இருந்து விட்டாள். ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்த கூட்டங்களில் லாகவமாகப் பேசும் அதே ஆசா தேவி அன்று அந்தச் சிறு கூட்டத்தில் பேச முடியாமல் திண்டாடுவதைக் கண்ட அனைவருக்கும் ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

அவள் பிறகு எதையோ பெயரளவில் பேசிவிட்டு ஒருவிதமாக முடித்தாள். அவளுக்கு ஏற்பட்ட கலக்கம் வர்ணிக்க முடியாததாக இருந்தது. அவள் நிமிஷத்திற்கு ஒருதரம் தன் வலதுகைப் பக்கமாக உட்கார்ந்திருந்த விலாசனைப் பார்த்தவண்ணம் இருந்தாள். தன்சேலைத் தலைப்பை இழுத்து விட்டுக்கொண்டே உட்கார்ந்தாள்.

விலாசனின் கவனம் முழுவதும் தன்னுடைய தலை மயிர்மீது இருப்பதைக் கண்ணுற்ற அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அவள் தன் சேலைத் தலைப்பினால் தலையை மறுபடியும் மூடிக் கொண்டாள்.

அவள் தலைமயிரின் முடிச்சு, கொஞ்சங் கொஞ்சமாக அவிழ்ந்து வந்து கடைசியில் கீழே சரிந்து தொங்கிற்று. அவள் தன் பேச்சின் கடைசியை முடிக்காமலே உட்கார்ந்து விட்டாள்.

அந்தச் சமயத்தில் கூட்டத்தில் பலர் 'ஹியர், ஹியர்' என்று சத்தம் போட்டனர்.

அவிழ்ந்துபோன தன் தலைமயிரைக் கட்டுவதற்காக இரண்டு கைகளையும் பின்னால் கொண்டு போனபோது, கண்களை அகல விழித்து ஆசா விலாசனைப் பார்த்து, "நான் இனிமேல் உங்களுடன் பேசப்போவதே இல்லை" என்றாள்.

கொண்டை ஊசிகளை எல்லாம் அவள் முன் வைத்துக் கொண்டே விலாசன் பதில் கூறினான்.

"பலே பேஷ்; நான் என்ன செய்தேனாம்?"

ஆசா தலையை அசைத்துக்கொண்டே, "போங்கள்; நீங்கள் என்னையே உற்றுப்பார்த்துக்கொண் டிருக்கிறீர்களே! ஏன்?" என்றாள்.

பிறகு அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, "வந்தேமாதர கீதம்" பாடினார்கள். கூட்டம் கலைந்தது. மித்திரர்கள் தம்பதிகளிடம் விடைபெற்றுக்கொண்டு அவ்விடம விட்டு அகன்றனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் விலாசன் ஆசாவைக் கூட்டிக் கொண்டு தன் மோட்டாரில் ஏறினான்.

ஆசா வழியில், ''இது என்ன? இந்தப் பக்கமாக வண்டியை விடுகிறீர்கள்?'' என்றாள்.

''இதற்குள்ளாக வீட்டிற்குப் போய் என்ன செய்ய வேண்டும்?''

''அப்படியென்றால்?''

''கடவுள் அருளால் இன்று சந்திரன் எத்தனை நிர்மலமாகக் காணப்படுகிறான், பார்த்தாயா?''

''பார்த்தேன், பார்த்தேன். ஆனால் எங்கே போகிறதாம் அதற்காக?''

''கடற்கரைக்குப் போகவேண்டும்; சமுத்திரத்தில் இன்று ஸ்நானம் செய்யவேண்டும்.''

''அடி அம்மாடி; இந்த நேரத்திலா?''

''ஏன், சமுத்திரத்தில் வேடிக்கையாகக் குளிக்க நேரம் காலம் வேறா?''

''ஐயோ, எனக்கு நீந்தத் தெரியாதே!

''நீ நீந்தவேண்டியது அநாவசியம்; நான் என் கையினால் உன்னைத் தாங்கிக்கொண்டு நீந்துகிறேன்.''

''இந்த அபாயகரமான விளையாட்டு எனக்குப் பிடிக்கவே இல்லை.''

''உன்னை யார் கேட்கப் போகிறார்கள்? நீ என்னை எப்படிப் பயமுறுத்தினாயோ, அதே மாதிரி உன்னை நான் பயமுறுத்தத் தான் போகிறேன். அபாயகரமான விளையாட்டையும் நீ கொஞ்சம் கற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.''

இப்படிப் பேசிக்கொண்டே விலாசன் தன் கையால் அவள் இடுப்பைச் சுற்றி வளைத்துக்கொண்டு மற்றொரு கையால் அவள் மோவாய்க்கட்டையைப் பிடித்து மேலே தூக்கினான். மறுகணம் அவன் உதடுகள் அவள் தலையை நோக்கிக் கீழேசென்றன!

அவன் மோட்டாரின் 'ஸ்டியரிங்' சக்கரத்தை விட்டு விட்டதைக் கண்டு பயப்பட்டாள் ஆசா.

ஆனால் அந்தக் கட்டுமஸ்தான யுவனின் உஷ்ணமான மூச்சு அவள் முகத்தில் வீசியபோது....இன்பமயமான ஆலிங்கனத்தில் இருந்தபோது....சரீரத்தின் ரோமங்கள் சிலிர்த்துநின்ற சமயத்தில்....விலாசனின் அணைப்புக்குள் இருந்தபோது பயம் என்பது எங்கேயோ பறந்துவிட்டது.

A PUBLIC L



தீபா
நல் வாழ்த்து
இந்தியன்
உங்கள் செல்வச் செழுமைக்
பவள விழா
நடை போ




# கதைகள்

18/-

## மூல ஆசிரியர்

பொது மக்களின் மனத்தைக் கவர்ந்த மராட்டி எழுத்தாளர்களில் முதல் வரிசையில் நிற்கிறார். நா. ஸி. பட்கே. பொருளாதாரமும் மனத்தத்துவமும் படித்துப் பட்டம் பெற்ற பேராசியர். அரசியலில் ஈடுபட்டு, திலகருடன் பழகி, அவருடைய பிரபலமான 'கேசரி'யில் உதவி ஆசிரியராகவும் பணி ஆற்றியவர். இதுவரையில் மராட்டியில் 63-க்கு மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார்.

இவருடைய எழுத்துக்களில் வேகமும் உணர்ச்சியும் போட்டியிடும். தெளிவும் கவர்ச்சியும் இவருடைய நடைக்கு அழகு தருகின்றன. வெவ்வேறு பாத்திரங்களின் மனப்போராட்டங்களைத் தத்ரூபமாகப் படம் எடுத்துக் காட்டுவதில் வல்லவர்.

# சில நாவல்கள்

**12-ஆம் நம்பர் பஸ் -**

நா. ஸீ. டட்கே: புணதாம் பேகர் 2 8 0

தாஸியை மணந்துகொண்ட ஒரு பிரபுவுக்கு ரத்தினமான பெண் பிறக்கிறாள். வறுமையில் வருந்திய அவள் ஒரு வாலிபனைச் சந்திக்கிறாள்; காதல் தோன்றுகிறது! கல்யாணமும் சட்ட பூர்வமாக நடக்கிறது. அதனால் எழுந்த பிரச்னையோ தீரவில்லை. கதை விறுவிறுப்பும் சுவாரஸ்யமும் நிறைந்து மலை அருவிபோலச் செல்லுகிறது.

**தேவி செளதுராணி -**

பங்கிம்: குகப்பிரியை 2 0 0

கொள்ளைக் கூட்டத்தின் துணையைக் கொண்டு, கணவனின் காதலைத் திரும்பவும் பெற்ற ஏழைப் பெண்ணின் வீரத்தைச் சித்திரிக்கும் இனிய நவீனம். மெய்சிலிர்க்கும் சம்பவங்களும் உணர்ச்சி நிறைந்த சம்பாஷணைகளும் நாவலின் சிறப்பான அம்சங்கள். சரளமான மொழிபெயர்ப்பு.

**லட்சியப் பெண் -**

செளரீந்திர மோகன்: த. நா. ஸேனாபதி 1 12 0

அவள் சினிமா நடிகை. எனினும் அவளுக்கும் மனித உள்ளம் உண்டு என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் சிறந்த நாவல். மனத்தைத் தொடும் உருக்கமான சம்பவங்கள், நாவலைப் பல முறை படிக்கத் தூண்டுகிறன.

**புதுக் குடித்தனம் -**

மாட்கோல்கர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ. 3 8 0

நாட்டின் சரித்திரம் மாறுவதுபோலவே குடும்ப வாழ்வின் சரித்திரமும் காலத்துக்குக் காலம் மாறி வருகிறது. பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட இன்றைக் குடும்ப வாழ்வின் உண்மைகளைப் புதிய நோக்கோடு ஆராயும் ரஸமான நாவல் இது.

**கலைமகள் காரியாலயம், சென்னை-4.**